தமிழில் அவையடக்கப் பாடல்கள்

அழகப்பா பல்கலைக் கழக முனைவர் (பிஎச். டி.)
பட்டத்திற்காக அளிக்கப்பெறும் ஆய்வேடு

இரா. மணிகண்டன்

தமிழ்த்துறை
அழகப்பா பல்கலைக் கழகம்
காரைக்குடி - 623 003.

செப்டம்பர் 1991

முனைவர் அ. விசுவநாதன், எம்.ஏ., எம்.லிட்.,
பிஎச்.டி.,
பேராசிரியர் & தலைவர்,
தமிழ்த்துறை,
அழகப்பா பல்கலைக் கழகம்,
காரைக்குடி - 623 003.

நாள்: 7.10.91.

ஆய்வு நெறியாளர் சான்றிதழ்

"தமிழில் அவையடக்கப் பாடல்கள்" என்னும் தலைப்பில் திரு. இரா. மணிகண்டன் அவர்கள் முனைவர் (பிஎச்.டி.) பட்டத்திற்காகச் செய்த இந்த ஆய்வு, அழகப்பா பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறையில் அவர் ஆய்வு செய்த காலத்தில் தன்னியலாகச் செய்யப்பட்டது என்றும், இந்த ஆய்விற்காக வேறு எந்தப் பட்டமும் ஆய்வாளருக்கு அளிக்கப்படவில்லை என்றும் உறுதி அளிக்கிறேன்.

அ. விசுவநாதன்
(அ. விசுவநாதன்)
நெறியாளர்.

தமிழ்த்துறைத் தலைவர்.
அழகப்பா பல்கலைக் கழகம்
காரைக்குடி-623 003.

இரா. மணிகண்டன், எம்.ஏ.,எம்.பில்.,
ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
அழகப்பா பல்கலைக் கழகம்,
காரைக்குடி - 623 003.

நாள்: 7.10.91

ஆய்வாளர் உறுதிமொழி

"தமிழில் அவையடக்கப் பாடல்கள்" என்ற தலைப்பில் முனைவர் (பிஎச்.டி.) பட்டத்திற்காக எழுதப்பெற்ற இவ்வாய்வு எனது சொந்த முயற்சியில் உருவானது என்றும், இதற்குமுன் வேறு எந்த ஆராய்ச்சிப் பட்டத்திற்கும் இவ்வாய்வேடு அளிக்கப்படவில்லை என்றும் உறுதி அளிக்கிறேன்.

ஆய்வாளர்.

உறுதிக் கையொப்பம்:

அ. விசுவநாதன்.

ஆய்வு நெறியாளர்:
முனைவர் அ. விசுவநாதன்,
பேராசிரியர் & தலைவர்,
தமிழ்த்துறை,
அழகப்பா பல்கலைக் கழகம்,
காரைக்குடி - 623 003.

நன்றியுரை

"தமிழில் அவையடக்கப் பாடல்கள்" என்ற தலைப்பில் முனைவர் பட்டத்திற்கு ஆய்வு மேற்கொள்ள, பல்கலைக் கழக உதவித் தொகையுடன் அனுமதி வழங்கிய அழகப்பா பல்கலைக் கழகத் துணைவேந்தர், ஆட்சிக்குழு உறுப்பினர்கள் ஆகியோருக்கு என் உள்ளம் நிறைந்த நன்றி.

ஆய்வு நெறியாளராக அமைந்த, ஆய்வுத் தொடக்கத்திலிருந்து இறுதிவரை எல்லா நிலைகளிலும் ஆய்வுமுறைகளை நெறிப்படுத்தி இவ்வாய்வு சிறப்புற அமைய, பல்லாற்றானும் உறுதுணைபயந்த நெறியாளரும் அழகப்பா பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவருமான பேராசிரியர் முனைவர் அ. விசுவநாதன் அவர்கட்கு இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாய்வுத் தொடங்கப்பெற்ற காலத்தில் ஆய்வுத் தொடர்பான கருத்துகள் வழங்கி உதவிய அழகப்பா பல்கலைக் கழக முன்னாள் தமிழ்த் துறைத் தலைவரும் பேராசிரியருமான முனைவர் சோ. சிவகுருநாதன் அவர்களுக்கு நன்றி.

பல நிலைகளில் இவ்வாய்விற்குத் துணைபுரிந்துள்ள அழகப்பா பல்கலைக் கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் முனைவர் தே. சொக்கலிங்கம், திரு. இராம. இராமநாதன், திரு. இரெ. பிச்சைக்கண்ணு, முனைவர் வெ.சு. அழகப்பன், முனைவர் இரா. பாலசுப்பிரமணியன், திரு. பாண்டி ஆகியோருக்கும் நன்றி.

பிறமொழி அவையடக்கப் பாடல்களைத் தமிழாக்கம் செய்யவும் கலந்துரையாடல்கள் வழி, கருத்துகள் வழங்கியும் உதவிய மதுரை காமராசர் பல்கலைக் கழகம், சமசுகிருதத் துறைத் தலைவர் பேராசிரியர் கோ. சுந்தரமூர்த்தி, முனைவர் எல். வீரராகவன், கன்னடத் துறை இணைப் பேராசிரியர் முனைவர் பி.வி. குல்கர்னி, தெலுங்குத் துறைப் பேராசிரியர் டி.எஸ். கிரிப்பிரகாஷ், மலையாளத் துறை இணைப் பேராசிரியர் முனைவர் சிவதாசன் ஆகியோருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதறிஞர் வ.சுப. மாணிக்கனாரின் நூற்றொகுப்பு, தமிழ்க்கடல் ராய.சொ.வின் நூற்றொகுப்பு ஆகியவற்றிலிருந்தும் பல்கலைக் கழக நூலகத்திலிருந்தும் ஆய்விற்கு வேண்டிய தரவுகளைச் சேகரிக்க அனுமதி வழங்கிய அழகப்பா பல்கலைக் கழக நூலகத்தாருக்கு நன்றி.

மேலும் சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவன நூலகம், உ.வே. சாமிநாதையர் நூலகம், மதுரை காமராசர் பல்கலைக் கழகத் தெ.பொ.மீ. மைய நூலகம் மற்றும் தமிழ்த்துறை நூலகம், மதுரை செந்தமிழ்க் கல்லூரி நூலகம், காரைக்குடி அழகப்பா அரசு கலைக் கல்லூரி நூலகம், இராமசாமி தமிழ்க் கல்லூரி நூலகம், தஞ்சை சரசுவதி மகால் நூலகம் ஆகியவற்றிலிருந்து ஆய்வுத் தரவுகள் திரட்ட அனுமதியளித்த அவற்றின் நூலகத்தார்களுக்கும் நன்றி.

ஆய்வுப் பணியில் ஊக்கமூட்டிய காந்திகிராமப் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் வீ. ரங்கராசன், முனைவர் அ. பிச்சை ஆகியோருக்கும் என் நன்றி.

இவ்வாய்வேடு செம்மையுற அமைய தட்டச்சுப் பணியை மேற்கொண்ட புதுவயல் திருமகள் தட்டச்சுப் பயிலகத்தார்க்கு நன்றி.

இறுதியாக, என் பெற்றோர்களுக்கும் என் இனிய நண்பர்களுக்கும் நன்றிகள் உரித்தாகுக.

- ஆய்வாளர்

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

அக.	-	அகநானூறு
அதி.	-	அதிகாரம்
அவை.	-	அவையடக்கம்
இ.ப.த.ம.	-	இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம்
இளம்.	-	இளம்பூரணர்
உ.ஆ.	-	உரையாசிரியர்
உரை.ஆ.	-	உரையாசிரியர்கள்
உவம.	-	உவமவியல்
எச்.	-	எச்சவியல்
எழு.	-	எழுத்ததிகாரம்
கலி.	-	கலித்தொகை
கழக வெளியீடு	-	சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்
கிளவி.	-	கிளவியாக்கம்
குறு.	-	குறுந்தொகை
சிற. பாயி.	-	சிறப்புப் பாயிரம்
செய்.	-	செய்யுளியல்
சொல்.	-	சொல்லதிகாரம்
த.சி.பாயி.	-	தற்சிறப்புப் பாயிரம்
தொகு.	-	தொகுப்பாசிரியர்
தொகு.ஆ.	-	தொகுப்பாசிரியர்கள்
தொல்.	-	தொல்காப்பியம்
நச்.	-	நச்சினார்க்கினியர்

நற்.	-	நற்றிணை
நூ.	-	நூற்பா
ப.	-	பக்கம்
பக்.	-	பக்கங்கள்
பதி.	-	பதிப்பாசிரியர்
பதி.ஆ.	-	பதிப்பு ஆசிரியர்கள்
பதிற்.	-	பதிற்றுப்பத்து
பரி.	-	பரிபாடல்
பாயி.	-	பாயிரம்
புற.	-	புறநானூறு
புறத்.	-	புறத்திணையியல்
பேரா.	-	பேராசிரியர்
பொரு.	-	பொருநராற்றுப்படை
பொருள்.	-	பொருளதிகாரம்
மது.	-	மதுரைக்காஞ்சி
மரபி.	-	மரபியல்
மலை.	-	மலைபடுகடாம்
மொ.ஆ.	-	மொழிபெயர்ப்பு ஆசிரியர்
மொழி.ஆ.	-	மொழிபெயர்ப்பு ஆசிரியர்கள்
Ed.	-	Editor
p.	-	page
pp.	-	pages
Tr.	-	Translator
Vol.	-	Volume

பொருளடக்கம்

இயல் ஒன்று

முன்னுரை

உள்ளடக்கம்

1. முன்னுரை

தமிழில் அவையடக்கம் பாடும் மரபு தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே தொடங்கிவிட்டது. அவர் அவையடக்கத்திற்கு இலக்கணம்[1] சுட்டியிருப்பது இதனை உணர்த்தும். மேலும் தமிழ் இலக்கிய உலகில் அவையடக்கம் நிலைபெற்றுவிட்ட ஒரு மரபு என்பதைக் காலந்தோறும் வழங்கிவரும் அவையடக்கப் பாடல்கள் தெளிவுறுத்துகின்றன. தமிழ் அவையடக்கப் பாடல்கள் குறித்த இவ்வாய்வில் தமிழ் நூல்களில் காணக்கிடக்கும் அவையடக்கப் பாடல்களின் தொடக்கமும் வளர்ச்சி நிலையும், அமைப்பும் பொருளும் ஆய்வு செய்யப்படுவதுடன் பிறமொழி அவையடக்க மரபுடன் ஒப்பீடும் காட்டப்படுகின்றன.

1.1. முன் ஆய்வுகள்:

இளம்பூரணர்[2], பேராசிரியர்[3], நச்சினார்க்கினியர்[4] போன்றோரின் உரைகள் அவையடக்க இலக்கணத்தை விளக்கி நிற்கின்றன. இவற்றையடுத்து இலக்கண விளக்கவுரை[5] அமைகின்றது. இவை அவையடக்கத்தின் இன்றியமையாமையை உணர்த்துவனவாகவுள்ளன.

சிவஞான சுவாமிகள்[6] சிவஞானபோதத்தின் அவையடக்கத்தைச் சமயநோக்கில் ஆராய்ந்துள்ளார். க. வச்சிரவேலு முதலியார், 'சிவஞானபோத அவையடக்க'[7]த்தின் சிறப்பை வானொலிப் பேச்சாக நிகழ்த்தியுள்ளார்.

வ.சுப. மாணிக்கம், 'இலக்கியபுத்திறன்'[8] என்ற கட்டுரையிலும் மயிலை சீனி. வேங்கடசாமி, 'அவையடக்கச் செய்யுட்கள்'[9] என்ற கட்டுரையிலும் அவையடக்கத்தை நூலரங்கேற்றத்தோடு தொடர்புறுத்திக் காணுகின்றனர்.

நெல்லை ந. சொக்கலிங்கம், 'அவையடக்கம்'[10] என்ற கட்டுரையிலும், மு. குருசாமி, 'சைவஎல்லப்ப நாவலர் புராணங்களில் அவையடக்கப் பாடல்கள்'[11] என்ற கட்டுரையிலும், வே. பால்ராஜ், 'அவையடக்கப் பாடல்கள்'[12] என்ற கட்டுரையிலும் அவையடக்கப் பாடல்களின் தன்மைகளையும் நயங்களையும் எடுத்தியம்பியுள்ளனர்.

இ.கி. இராமசாமி, 'தமிழில் பாயிரங்கள்'[13] எனும் முனைவர் பட்ட ஆய்வு நூலில் தற்சிறப்புப் பாயிரத்தின் வளர்ச்சியாக அவையடக்கத்தை ஆராய்ந்துள்ளார்.

எஸ். சௌந்தரபாண்டியன், 'தமிழில் அவையடக்கப் பாடல்கள்'[14] என்னும் தலைப்பில் பல அவையடக்கப் பாடல்களைத் தொகுத்து நூலாக வெளியிட்டுள்ளார். நூலின் தொடக்கத்தில் தோற்றமும் வளர்ச்சியும்[15], அமைப்புமுறை[16], திறனாய்வு[17] ஆகிய மூன்று தலைப்புகளில் சிறுசிறு கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. முதல் கட்டுரையில் காலந்தோறும் அவையடக்கப் பாடல்கள் இடம்பெற்று வந்துள்ள நூல்களும், இரண்டாம் கட்டுரையில் நூல்களில் பாடல்கள் வைக்கப்பெறும் இடமும் விளக்கப் பெற்றுள்ளன. 'திறனாய்வு' என்ற அடுத்தக் கட்டுரையில் சில பாடல்கள் மேலோட்டமாகத் திறனாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. தொகுப்பு நிலையில் அமைந்துள்ள இந்நூல் அவையடக்கப் பாடல்கள் குறித்த விரிவான ஆய்வாக அமையவில்லையென்பதால் இங்கு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

சா. அனிமேபின் கிரேசு, 'காப்பியங்களில் அவையடக்கம்'[18] என்னும் பெயரிய எம்.பில் பட்ட ஆய்வில் காப்பியங்களில் இடம்பெறும் அவையடக்கப் பாடல்களின் அமைப்பையும் பொருளையும் ஆராய்ந்துள்ளார்.

க.ப. அறவாணன்[19], அ.ச. ஞானசம்பந்தன்[20], எல். இராமகிருட்டிணன்[21], அ.அ. மணவாளன்[22] போன்றோர் அவையடக்கச் சிந்தனையை வளர்க்கும் வகையில் சில குறிப்புகளைத் தத்தம் நூல்களில் தந்துள்ளனர்.

இவர்களன்றி, தொல்காப்பிய அவையடக்க இலக்கண நூற்பாவை விளக்குபவர்களும், தமிழ்ப் பாயிரங்களை ஆராய்ந்தோரும், அவையடக்கப் பாடல்களுக்கு உரை எழுதியோரும் அவையடக்கம் தொடர்பான விளக்கங்களைத் திறனாய்வு நோக்கில் வழங்கியுள்ளனர்.

1.2. ஆய்வு நோக்கம்:

மேற்காட்டியுள்ள ஆய்வு நூல்களும் கட்டுரைகளும் பிறவும் தமிழ் அவையடக்கப் பாடல்களில் ஏதேனும் ஒரு பகுதியை மட்டும் எடுத்து ஆராய்ந்து உள்ளன. தமிழ் அவையடக்கப் பாடற்பரப்பு முழுவதையும் உள்ளடக்கிய விரிவான-ஆழமான ஆய்வு எதுவும் இதுவரை வெளிவரவில்லை. எனவே, அப்பொருள் பற்றி முழுமையாக ஆராய்ந்து முடிவுகாணுதல் இவ்வாய்வின் நோக்கமாகும்.

1.3. ஆய்வு எல்லை:

தமிழிலக்கியம் சுமார் 2500 ஆண்டு காலப் பரப்பையும் பல்வேறு இலக்கிய வகைகளையும் உள்ளடக்கியதாகும். இக்காலப்பகுதியில் இலக்கிய

நூல்களிற் பிறதுறை நூல்களிலும் அவையடக்கப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இவற்றில் இடம்பெறும் அத்தனை அவையடக்கப் பாடல்களையும் எடுத்துக்கொண்டு ஆய்வது இயலாதது. ஆகையால் அச்சில் வெளிவந்துள்ள நூல்களில் எல்லாக் காலகட்டங்களையும் பிரதிபலிக்கும் வகையில் வகைக்குச் சில முன்மாதிரிகளை விருப்பு வெறுப்பின்றி எடுத்துக்கொண்டு இவ்வாய்வு செய்யப்பட்டுள்ளது.

பல நூல்களின் காலம் இன்னும் அறுதியிட்டுக் கூற இயலாததாய் இருப்பதால் இலக்கிய வரலாற்று அறிஞர்களின் பொதுக் கருத்துகள் இவ்வாய்வில் எடுத்தாளப்பெற்றுள்ளன.

1.4. ஆய்வுமூலங்கள்:

தமிழில் இதுவரைத் தோன்றியுள்ள இலக்கண நூல்கள், காப்பியங்கள், புராணங்கள், சிற்றிலக்கியங்கள், சமய, தத்துவ நூல்கள், உரை நூல்கள், கதைப் பாடல்கள், சோதிடம், மருத்துவம் உள்ளிட்டப் பிறவகை நூல்கள் ஆகியவற்றில் இடம்பெறும் அவையடக்கப் பாடல்கள் இவ்வாய்வின் முதன்மை மூலங்களாகக் கொள்ளப்பட்டுள்ளன.

அவையடக்கத்திற்கு உரையாசிரியர்கள் தரும் விளக்கங்கள், பிற நூலாசிரியர்களின் அவையடக்க மேற்கோள் பாடல்கள், அவையடக்கம் தொடர்பான ஆய்வு நூல்கள், கட்டுரைகள் போன்றவையும் பிறவும் துணை மூலங்களாகக் கொள்ளப்பெறுகின்றன. மேலும் பிறமொழி அறிஞர்களின் துணையுடன் தமிழாக்கம் செய்யப்பெற்றப் பிறமொழி அவையடக்கப் பாடற் பொருள்களும், கலந்துரையாடல்கள் வழிப் பெறப்பட்ட செய்திகளும் துணை மூலங்களாகவே இவ்வாய்வில் கருதப்படுகின்றன.

1.5. ஆய்வு அணுகுமுறை:

இவ்வாய்வு அவையடக்கப் பாடல்களின் அமைப்பு, பொருள், வளர்ச்சி நிலை போன்றவற்றை ஆராயும் பகுப்பாய்வாகவும் விளக்கமுறை ஆய்வாகவும் அவைவதுடன் ஒப்பீட்டு ஆய்வாகவும் அமைந்துள்ளது. இவ்வணுகுமுறைகளில் வரலாற்று வழிச் சிந்தனை, அமைப்பியல் சிந்தனை, இலக்கியத் திறனாய்வு ஆகியனவும் கருத்திற் கொள்ளப்பெற்றுள்ளன.

1.6. ஆய்வுப் பகுப்புகள்:

இவ்வாய்வு கீழ்க்கண்ட எட்டு இயல்களாகப் பகுக்கப்பெற்றுள்ளது.

1. முன்னுரை
2. அவையடக்கப் பாடல்களின் தோற்றம்
3. காலந்தோறும் அவையடக்கப் பாடல்கள்
4. அவையடக்கப் பாடல்களின் அமைப்புமுறை
5. அவையடக்கப் பாடல்களின் இலக்கியத்திறன்
6. அவையடக்கப் பாடல்கள் காட்டும் செய்திகள்
7. அவையடக்கப் பாடல்கள்: தமிழிலும் பிறமொழிகளிலும்
8. முடிவுரை.

1.7. இயல் விளக்கங்கள்:

1. முன்னுரை: இவ்வியலில் அவையடக்கப் பாடல்கள் குறித்த முன் ஆய்வுகள், ஆய்வு நோக்கம், ஆய்வு எல்லை, ஆய்வு மூலங்கள், ஆய்வு அணுகுமுறை, ஆய்வுப் பகுப்புகள், இயல் விளக்கங்கள், பின்னிணைப்புகள் ஆகியன விளக்கம் பெறுகின்றன.

2. அவையடக்கப் பாடல்களின் தோற்றம்: இவ்வியலில் இலக்கணம் உள்ளிட்டத் தமிழ் நூல்களில் அவையடக்கம் என்ற சொல் வழங்கும் நிலை, விளக்கம், இலக்கணம், பயன், தொடக்கம் ஆகியன விளக்கப் பெற்றுள்ளன.

3. காலந்தோறும் அவையடக்கப் பாடல்கள்: தமிழ் நூல்களில் அவையடக்கப் பாடல்கள் காலந்தோறும் அடைந்துவந்திருக்கின்ற உள்ளார்ந்த வளர்ச்சி நிலைகளை இவ்வியல் ஆராய்கின்றது. வளர்ச்சி நிலைகளை நூற்றாண்டுகளில் வைத்துக் காணும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.[23]

4. அவையடக்கப் பாடல்களின் அமைப்புமுறை: அவையடக்கப் பாடல்களின் அக அமைப்பும் புற அமைப்பும் ஆராயப்படுவதுடன் நூல்களில் அவையடக்கப் பாடல்கள் பயின்றுவரும் வைப்புமுறையும் இவ்வியலில் விளக்கப் பெற்றுள்ளது. கருத்தை அடிப்படையாகக் கொண்டு அகஅமைப்பும், வடிவத்தை அடிப்படையாகக் கொண்டு புற அமைப்பும் வரையறை செய்யப் பட்டுள்ளன. வைப்புமுறையில் பயின்முறையும் அளவியலும் (எண்ணிக்கை) விளக்கம் பெறுகின்றன.

5. அவையடக்கப் பாடல்களின் இலக்கியத்திறன்: அவையடக்கப் பாடல்களில் சொல்லாட்சி, ஒலிநயம், யாப்பமைதி, கற்பனைத்திறன், அணிநலன், நடைத் திறன் ஆகியன இவ்வியலில் ஆராயப் பெற்றுள்ளன.

6. அவையடக்கப் பாடல்கள் காட்டும் செய்திகள்: அவையடக்கப் பாடல்களைப் பொதுநிலையில் வைத்து அவை உணர்த்தும் செய்திகளைத் தமிழின் பெருமை, நூல் வரலாறு, சமுதாயச் செய்திகள், சமயச் செய்திகள், புராணச் செய்திகள் ஆகிய பிரிவுகளின் கீழ் விளக்கப் பெற்றுள்ளன.

7. அவையடக்கப் பாடல்கள்: தமிழிலும் பிறமொழிகளிலும்:

இவ்வியலில் மேலைநாட்டு இலக்கியங்களில் அவையடக்க மரபின் நிலையையும், வடமொழி, கன்னடம், தெலுங்கு போன்ற இந்திய இலக்கியங்களில் அவையடக்கப் பாடல்களின் நிலையையும் தமிழ் அவையடக்கப் பாடல்களின் நிலையுடன் அறிமுக நிலையில் ஒப்பிட்டுக் காணும் முயற்சி மேற்கொள்ளப் பெற்றுள்ளது.

ஒப்பீடு செய்வதற்குப் பிறமொழி அவையடக்கப் பாடல்களுக்குத் தமிழாக்கம் தேவைப்படுகின்றது. பிறமொழி அவையடக்கப் பாடல்கள் இதுகாறும் தமிழில் மொழிபெயர்க்கப்படவில்லை.

தமிழாக்கம் செய்யப்பெற்றுள்ள வடமொழி நூல்கள் பலவற்றிலும், பி.எஸ். சுப்பிரமணிய சாஸ்திரியின் 'வடமொழிநூல் வரலாறு'[24] என்ற நூலிலும், வே. வேங்கடராஜுலு ரெட்டியாரின் 'தென்மொழிகள்'[25] என்ற நூலிலும் அவையடக்கப் பாடற்பொருள்கள் பரவலாகக் காணப் படுகின்றன. இவை இவ்வியலின் சில இடங்களில் எடுத்தாளப் பெற்றுள்ளன.

மேலும் சில சான்றுகள் தேவைப்பட்டதால் பிறமொழி அறிஞர்களின் துணையுடன் தமிழாக்கம் செய்யப்பெற்றுள்ளன[26]. பிறமொழி நூல்களை வேறுபடுத்திக்காட்ட ஆங்கில எழுத்துக்களில் நூற்பெயர் முதலான பதிப்பு விபரங்கள் சான்றென் விளக்கத்தில் தரப்பெற்றுள்ளன.

8. முடிவுரை: ஒவ்வொரு இயலின் இறுதியிலும் ஆய்வு முடிவுகள் தொகுத்துத் தரப்பெற்றுள்ளன எனினும் இன்றியமையாதன சில இங்குத் தரப்பெற்றுள்ளன. இவ்வியலின் இறுதியில் பின்வரும் ஆய்வுகளுக்கான பரிந்துரை இடம்பெற்றுள்ளது.

ஒவ்வொரு இயல்களுக்குப் பின்னும் சான்றெண் விளக்கங்கள் இடம்பெற்றுள்ளன[27].

அடுத்த, பின்னிணைப்புகள் இடம்பெற்றுள்ளன. பின்னிணைப்பு 1இல் 'அவையடக்க ஆய்வுகள்' தரப்பெற்றுள்ளன. பின்னிணைப்பு 2இல் 'உரைநடையில் அவையடக்க மரபு' ஆராயப்பட்டுள்ளது.

இறுதியில் துணைநூற்பட்டியல் இடம்பெற்றுள்ளது.

தமிழ் அவையடக்க மரபைப் பற்றி ஆராயும் நினைப்பும் ஆர்வமும் எழவேண்டும் என்ற குறிக்கோள் கொண்டு எழுந்ததே இவ்வாய்வு. இத் துறையில் ஆய்வதற்குரிய களம் வளம் நிறைந்தது என்பதை விளக்கிக் காட்டுவதே இங்கு மேற்கொண்ட முயற்சி.

சான்றெண் விளக்கங்கள்

1. தொல். பொருள். செய். (இளம்.) நூ.109.
2. மேலது, (கழக வெளியீடு, 1967, நான்காம் பதிப்பு), ப.478.
3. தொல். பொருள். பேரா. (கழக வெளியீடு, 1972, மறுபதிப்பு), ப.291.
4. தொல். பொருள். செய். நச். (கழக வெளியீடு, 1965), ப.136.
5. வைத்தியநாத தேசிகர், இலக்கண விளக்கம், பொருள், பாட்டியல், தி.வே. கோபாலையர் (பதி.), ப.287.
6. சிவஞான சுவாமிகள், சிவஞானபோத மாபாடியமும் சிற்றுரையும், சுவாமிநாத பண்டிதர் (பதி.), பக்.3-22.
7. க. வச்சிரவேலு முதலியார், சிவஞானபோத அவையடக்கம், வானொலிப் பேச்சு, மேற்கோள்: இ.சி. இராமசாமி, தமிழில் பாயிரங்கள், (பதிப்புத்துறை, மதுரை காமராசர் பல்கலைக் கழகம், 1988), ப.3.
8. வ.சுப. மாணிக்கம், 'இலக்கிய முத்திறன்', பேராசிரியர் டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை வெள்ளிவிழா மலர், 1961, பக்.349-354.
9. மயிலை சீனி. வேங்கடசாமி 'அவையடக்கச் செய்யுட்கள்' மன்னர் துரைசிங்கம் கலைக் கல்லூரி ஆண்டு மலர், 1972-'73.
10. நெல்லை ந. சொக்கலிங்கம், 'அவையடக்கம்', இ.ப.த.ம., நான்காவது கருத்தரங்க மலர், 1972, பக்.69-74.
11. மு. குருசாமி, 'சைவ எல்லப்ப நாவலர் புராணங்களில் அவையடக்கப் பாடல்கள்', இ.ப.த.ம., 21ஆவது கருத்தரங்க ஆய்வுக் கோவை, தொகுதி-1, 1988, பக்.342-347.
12. வே. பால்ராஜ், 'அவையடக்கப் பாடல்கள்', இ.ப.த.ம., 22ஆவது கருத்தரங்க ஆய்வுக் கோவை, தொகுதி-1, 1989, பக்.479-484.
13. இ.சி. இராமசாமி, முன்நூல், பக்.279-284.
14. எஸ். சௌந்தர பாண்டியன், தமிழில் அவையடக்கப் பாடல்கள், ஸ்டார் பிரசுரம், சென்னை, 1988, முதற்பதிப்பு.
15. மேலது, பக்.1-22.
16. மேலது, பக்.23-29.
17. மேலது, பக்.30-40.

18. சா. அனிமேரி கிரேசு, காப்பியங்களில் அவையடக்கம், மதுரைக் காமராசர் பல்கலைக் கழக எம்.பில். பட்ட ஆய்வேடு, தமிழ் ஆய்வு மையம், யாதவர் கல்லூரி, மதுரை, 1989.

19. க.ப. அறவாணன், கவிதையின் உயிர் உள்ளம் உடல், (பாரி நிலையம், சென்னை, 1976), பக்.154-155.

20. அ.ச. ஞானசம்பந்தன், கம்பன்-புதிய பார்வை, (கம்பன் கழகம், சென்னை, 1984), பக்.20-21, 88-91.

21. எஸ். இராமகிருஷ்ணன், கம்பனும் மில்டனும் - ஒரு புதிய பார்வை, (மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1978), பக்.95-102.

22. அ.அ. மணவாளன், 'காப்பிய மரபும் பாயிரப் பாங்கும்' ச.வே. சுப்பிரமணியன் (பதி.), திறனாய்வுக் கட்டுரைகள், பக்.128-131.

23. சில இயல்களில் நூற்பெயர்கள் அல்லது நூலாசிரியர் பெயர்கள் உட் தலைப்புகளாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

24. பி.எஸ். சுப்பிரமணிய சாஸ்திரி, வடமொழி நூல் வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர், 1946.

25. வே. வேங்கடராஜுலு ரெட்டியார், தென்மொழிகள் முதற்பகுதி, (கன்னடம், தெலுங்கு மலையாளம்), எஸ். வாஸன் கம்பெனி, மதராஸ்-4, 1960.

26. கலந்துரையாடல்கள் வழி பிறமொழி அவையடக்கப் பாடல்கள் தொடர்பான கருத்துகள் வழங்கி உதவியவர்கள்:

    1) முனைவர் கோ. சுந்தரமூர்த்தி, தலைவர் & பேராசிரியர், சமசுகிருதத் துறை, மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை.
    2) முனைவர் சிவதாசன், இணைப் பேராசிரியர், மலையாளத் துறை, மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை.

    பிறமொழி அவையடக்கப் பாடல்களை மொழிபெயர்க்க உதவியவர்கள்:

    1) முனைவர் எல். வீரராகவன், விரிவுரையாளர், சமசுகிருதத் துறை, மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை.
    2) முனைவர் பி.வி. குல்கர்னி, இணைப் பேராசிரியர், கன்னடத் துறை, மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை.
    3) முனைவர் டி.எஸ். கிரிப்பிரகாஷ், இணைப் பேராசிரியர், தெலுங்குத் துறை, மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை.

27. 1) சில நூல்களில் அவையடக்கப் பகுதிக்குப் பக்க எண்ணும் பாடல் எண்ணும் இடம்பெறவில்லை; ஆதலால் சான்றெண் விளக்கத்தில் குறிப்பிடும்போது அவையடக்கப் பகுதிக்கு இடம்பெற்றுள்ள பெயர் மட்டும் சுட்டப்பட்டுள்ளது.
    2) பிறமொழி நூல்கள், கட்டுரைகள் இடம்பெறும் நூல்கள் ஆகியன மட்டும் அடிக்கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

இயல் இரண்டு

அவையடக்கப் பாடல்களின் தோற்றம்

உள்ளடக்கம்

2. அவையடக்கப் பாடல்களின் தோற்றம்

அவையடக்கம் கூறும் மரபு பழங்காலந் தொட்டே தமிழ் இலக்கிய வழக்கில் உண்டு. தொல்காப்பியர் அவையடக்கத்திற்கு இலக்கணம் சுட்டியிருப்பது இதற்குச் சான்றாகும். இலக்கண இலக்கியம் உள்ளிட்டத் தமிழ் நூல்களில் 'அவையடக்கம்' என்ற சொல் வழங்கும் நிலை, விளக்கம், இலக்கணம், பின்னணி, தொடக்கம் ஆகியன இவ்வியலில் ஆராயப்படுகின்றன.

2.1. சொல் வழக்காறு:

'அவையடக்கம்' என்ற சொல் தமிழ் நூல்களில் பரவலாகக் காணப்படுகின்றது. தமிழ் உலகிற்குக் கிடைத்த முதல் நூலான தொல்காப்பியத்தில்,

"வாயுறை வாழ்த்தே அவையடக் கியலே
செவியறி வுறூஉ எனஅ அவையும் அன்ன"[1]

"அவையடக் கியலே அரில்தபத் தெரியின்
........................."[2]

ஆகிய இரு நூற்பாக்களில் 'அவையடக்கியல்' என்ற சொல் ஆளப்பட்டு உள்ளமையைக் காணலாம்.

நல்லாறனார் என்பவரின் நூற்பாக்கள் பல யாப்பருங்கல விருத்தியில் மேற்கோளாகக் காட்டப்பெற்றுள்ளன. அவற்றுள்,

"புறநிலை வாயுறை செவியறி வவையடக்கு
எனவிவை வஞ்சி கலியவற் றியலா"[3]

என்ற நூற்பாவில் 'அவையடக்கு' என்ற சொல்லாட்சிக் காணப்படுகின்றது. இதையடுத்து, 'அவையடக்கம்' என்ற சொல் ஆளப்பட்டுள்ளதை,

"வைத்த பெருங்காப்பிய நிலையும் வாழ்த்தியல்பார்
மெய்த்த வவையடக்கம் வீறுசான் - முத்திதருந்
தெய்வ வணக்கமுடன் செய்பொருளு முன்வரவாங்
கெய்த வுரைப்பது தானேய்ந்து"[4]

என வரும் மாறனலங்கார வெண்பாவால் அறியலாம்.

பிற்கால இலக்கண நூலான இலக்கண விளக்கத்தில் 'அவையடக்கியல்'[5] என்ற சொல் இடம்பெற்றுள்ளது.

தேரையர் வைத்திய நூல்கள் என்பதில்,

"அவையடக்கம் புன்மை யநீத மகந்தை
அவையடக்கம் பாம்போ யறஞ்சே - யவையடக்க
கத்திகையா மென்றுங் கவிபோல் தேரன்வெண்பாக்
கத்திகையா மோனையும் கம்"[6]

என்ற பாடல் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகின்றது. இதில் 'அவையடக்கம்' என்ற சொல் திரும்பத்திரும்ப வந்துள்ளதைக் காணலாம். வீரபாண்டியம்,[7] மனம் போல் வாழ்வு[8] போன்ற நூல்களிலும் இச்சொல் ஆளப்பட்டுள்ளது. இச்சான்றுகள் இலக்கண இலக்கிய நூல்களில் 'அவையடக்கம்' என்ற சொல் அகவழக்காறாய் வழங்கிய நிலையினைக் காட்டுகின்றன.

சீவகசிந்தாமணியின் நூன்முகத்து 'அவையடக்கம்' என்று தலைப்பிட்டு உள்ளதைப் புறவழக்காறாகக் கொள்ளலாம். அதுபோல் யாப்பருங்கலக் காரிகை, இலக்கணக்கொத்து, வீரசோழியம், நேமிநாதம், சுவாதரம் போன்ற இலக்கண நூல்களிலும் சூளாமணி, நீலகேசி, கம்பராமாயணம், பெரியபுராணம், வில்லிபாரதம், தேம்பாவணி, புறத்திரட்டு ஆகிய இலக்கிய நூன்முகங்களிலும் அவையடக்கம் என்ற சொல் புறவழக்காறாகப் பயன்படுத்தப்பெற்றுள்ளது.

தொல்காப்பியர் அவையடக்கம் என்பதை 'அவையடக்கியல்' என்கிறார். களவுத் தொடர்பான செய்திகளைக் 'களவியல்' என்றும், கற்புத் தொடர்பான செய்திகளைக் 'கற்பியல்' என்றும், செய்யுள் தொடர்பான செய்திகளைச் 'செய்யுளியல்' என்றும் பெயரிட்டுள்ளதுபோல் அவையடக்கம் தொடர்பான செய்திகளை 'அவையடக்கியல்' என்றார். அவர் 'இயல்' என்று சுட்டுவதிலிருந்து அக்கால வழக்கில் அவையடக்கத்தின் பெற்றி புலனாகும்.

2.2. அவையடக்கம் - இலக்கணமும் விளக்கமும்:

2.2.1. இலக்கண நூல்கள்: தொல்காப்பியத்தில் அவையடக்கத்திற்கு இலக்கணம் வரையப் பெற்றுள்ளது. இதனை.,

"அவையடக் கியலே அரில்தபத் தெரியின்
வல்லா கூறினும் வகுத்தனர் கொண்மினென்
றெல்லா மாந்தர்க்கும் வழிமொழிந் தன்றே"[9]

என வரும் நூற்பாவால் அறியலாம். இந்நூற்பாவிற்கு,

"என் - எனின் அவையடக்கியல் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

அவையடக்கியலைக் குற்றமற ஆராயின் அறியாதன சொல்லினும் பாகுபடுத்துக் கோடல் வேண்டும் என எல்லா மாந்தர்க்கும் தாழ்ந்து கூறல் என்றவாறு"[10]

என இளம்பூரணர் உரை எழுதுகிறார். 'எல்லா மாந்தர்க்கும் வழிமொழிந்தன்றே' என்ற பகுதிக்கு 'எல்லா மாந்தர்க்கும் தாழ்ந்து கூறல்' என்று இளம்பூரணர் பொருள் கொள்ளுதலால் 'அவையடக்கியல்' என்பதற்கு 'அவைக்கு அடங்கி இயல்வது' என்றே அவர் கருதுவதாய்த் தெரிகின்றது.

பேராசிரியர்,

"இது, முறையானே அவையடக்கிய லுணர்த்துகின்றது. வல்லாதன சொல்லினும் அவற்றை ஆராய்ந்து கொண்மின்என அவையகத் தாரெல்லார்க்கும் வழிபடுகிளவி சொல்லுதல் அவையடக்கு என்றவாறு.

'வல்லுத'லென்பது ஒன்று வல்லவாதல்; ஒருவன் வல்லனவற்றை 'வல்ல' வென்பவாகலான் வல்லாதனவற்றை 'வல்லா' வென்றாரென்பது"[11]

என உரை விளக்கம் தருவர்.

'அவையோரை வழிபட்டுப் பேசுதல்' என்பது பேராசிரியரின் கருத்தாக உள்ளது. ஆனால் தொல்காப்பியர் 'அவையடக்கியல்' என்று குறிப்பிட்டதை விளக்கும்போது,

"அவையடக்கியல் - அவையை வாழ்த்துதல்; அவையடக்குதலென்பது இரண்டாம் வேற்றுமைத்தொகை; அடக்கியலென்பது வினைத்தொகை;

> தானடங்குதலாயின் அடங்கியலெனல் வேண்டும். அஃதாவது அவையத்தாரடங்குமாற்றால் இனியவாகச் சொல்லி அவரைப் புகழ்தல்"[12]

என்று பேராசிரியர் உரைத்திருப்பதும் நோக்கத்தக்கது. இவர் அவையை அடக்குதல் என்று குறிப்பிடுவதை 'வன்மையாகப் பேசி அவையோரை அடக்குதல்' என்று பொருள் கொள்ளல் பொருந்தாது. இனியவாகச் சொல்லி அவரைப் புகழ்தல் வேண்டும். 'அவையத்தாரடங்குமாற்றால்' என்று குறிப்பிடுவதை 'அவையோரைக் கவரும் வகையில் அல்லது அவையோரை ஈர்க்கும் வகையில்' என்றே பொருள் கொள்ள வேண்டும். ஏறத்தாழ இளம்பூரணரின் கருத்திற்கு இவரும் உடன்படுகின்றார் என்பது இதனால் பெறப்படும்.

பேராசிரியரை அடியொற்றி நச்சினார்க்கினியரின் கருத்தும் அமைந்துள்ளது. அவையடக்கியல் என்பதற்கு நச்சினார்க்கினியரின் விளக்கம் இது:

> "அவையடக்கியலென்பது அவையடக்கிய இயலென விரியும்; அஃது அவர் அடங்குமாற்றால் தன்னை யிழித்துக்கூறி அவரைப் புகழ்தல். அவைக்கண் தானடங்குதலாயின், அவையடங்கியலென்பது பாடமாதல் வேண்டும்"[13]

இதில் 'கவிஞன் தன்னை இழித்துக்கூறி அவையோரைப் புகழ்ந்து பேசுதல் அவையடக்கம்' என்று பொருள் கொள்கின்றார். தொல்காப்பியரின் அவையடக்க இலக்கணத்திற்கு விளக்கம் தந்த பேராசிரியர், அதற்கு எடுத்துக்காட்டாக,

> "திரைத்த விரிக்கிற் றிரைப்பிளா வாய்போ
> வுரைத்த வுரைபோகக் கேட்டு - முரைத்த

பயன்றவா செய்வார் சிலரேதந் நெஞ்சத்
தியன்றவா செய்வார் பலர்" [14]

என்ற பாடலைத் தந்து, 'இது பூதத்தார் அவையடக்கு' என்கிறார். இப்பாடற் பொருளை நோக்கின், நீதியைப் புகட்டும் பாடலாகத் தோன்றுகின்றது. இதே பாடலை மேற்கோள் காட்டும் நச்சினார்க்கினியர்,

"கற்பா லுமிழ்ந்த மணியுங் கழுவாது விட்டால்
நற்பா லழியும் நகைவெண் மதிபோல் நிறைந்த
சொற்பா லுமிழ்ந்த மறுவும் மதியாற் கழுவிப்
பொற்பா விழைத்துக் கொளற்பாலர் புலமை மிக்கார்" [15]

என்ற சீவகசிந்தாமணியின் அவையடக்கப் பாடலையும் தந்துள்ளார். பேராசிரியர் குறிப்பிடும் பூதத்தார் தொடர்பான பிற செய்திகள் அறியுமாறில. மேலும் பூதத்தார் அவையடக்கு எனக் குறிப்பிடப்பெறும் இப்பாடல் பொய்கையார் பாடிய இன்னிலை என்ற நூலினுள் இடம்பெற்றுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது [16]. இத்தகைய தவற்றினை உரையாசிரியர்கள் செய்தனரா அல்லது ஏட்டில் எழுதியோர் செய்தனரா எனத் தெரியவில்லை.

அவையடக்கியல் என்பதற்கு இளம்பூரணர், 'அவையோர் முன் தாழ்ந்துகூறல்' என்றும், பேராசிரியர், 'இனியவாகச் சொல்லி அவரைப் புகழ்தல்' என்றும், நச்சினார்க்கினியர் 'தம்மை இழித்துக் கொண்டு அவையோரைப் புகழ்தல்' என்றும் குறிப்பிட்டுள்ளனர். அடக்கமாகப் பேசி அவையோரின் நன்மதிப்பைப் பெறுதல் என்பது இதன் உட்கிடை.

தொல்காப்பியர் அவையடக்கத்திற்கு இலக்கணமாகச் சுட்டிய நூற்பாவை இலக்கண விளக்கம் எடுத்தாண்டுள்ளது. எனினும் அதில் சிறிது மாற்றம் செய்யப் பெற்றுள்ளது.

"அவையடக் கியலே அரில்தபத் தெரியின்
வல்லோன் கூறினும் வகுத்தனர் கொண்மினென்று
எல்லா மாந்தர்க்கும் வழிமொழிந் தன்றே"[17]

என வரும் இலக்கண விளக்க நூற்பாவில், தொல்காப்பியர் 'வல்லா'
என்றதை 'வல்லோன்' என ஆக்கியுள்ளதைக் காணலாம்.

"இது செய்யுட் செய்யும் புலவர்க்கு வேண்டுவதாயதோர் ஒழிபு
அவையடக்கங் கூறுகின்றது.

அவையடக்கங்கூறும் இலக்கணத்தைக் குற்றமற ஆராய்ந்து
கூறிற் கற்றுவல்லோன் நாற்பொருளையும் அறிந்து கூறுமாயினும்
அவையிலுள்ளார்க்குத் தான் குறைபாடுடையனாக நீயிர் குற்றங்
களைந்து ஆக்கிக் கொள்வீரென்று வழிபடு சொல்லாற் கூறுவதாம்
எ-று"[18]

என்ற உரையில் 'நூலாசிரியன் வல்லவனாக இருந்தாலும் குறைபாடு
உடையவனாகக் காட்டிக் கொண்டு, இதிலுள்ள குற்றங்களைக் களைந்து
கொள்வீராக என வேண்டிக் கேட்டுக்கொள்வது அவையடக்கமாகும்' எனக்
கூறப்பெற்றுள்ளது.

தொல்காப்பிய உரையாசிரியர்கள் தாழ்ந்து கூறல், இழித்துக்
கொள்ளல் என்பதுபோல், இவ்வுரையாசிரியர் தன்னைக் குறைபாடுடையோனாகக்
காட்டிக் கொள்ளல் என்பதால் இவரது கருத்திலும் முரண் இல்லை.

எனவே, அவையடக்க இலக்கணத்திற்கு உரை வகுப்பதில் இலக்கண
உரையாசிரியர்களிடையே கருத்து வேறுபாடில்லை. இவர்களின் உரை
விளக்கங்களிலிருந்து, 'அறியாமல் சிறப்பில்லாதன கூறப்பெற்றாலும், அதனை
அறிஞர்கள் ஆராய்ந்துணர்ந்து கொள்ளல் வேண்டும் என அவையோரைத்
தாழ்மையுடன் வேண்டிக்கொள்ளல்' என்பதை அவையடக்க இலக்கணமாய்
வரையறுத்துக் கொள்ளலாம்.

உரையாசிரியர்களின் விளக்கங்களை அடிப்படையாகக் கொண்டே பிற்கால அகராதிகள், இலக்கிய நூலுரைகள், ஆராய்ச்சியாளர்களின் விளக்கங்கள் ஆகியன அவையடக்கத்திற்கு விளக்கம் தருகின்றன.

2.2.2. அகராதிகள்: அவையடக்கம் என்பதற்குத் தமிழ்ச் சொல்லகராதியின் விளக்கம் பின்வருமாறு:

"1. ஒருவர் தான்செய்த நூலிலே குற்றம் ஏற்றாதபடி கற்றோரை வழிபட்டடக்குதல்.
2. சபையோர் முன் அடங்கி நிற்றல்".[19]

"சபையோர்க்கு வழிபடுகிளவி கூறுகை"[20]

எனப் பொருள் கொள்கிறது தமிழகராதி.

'சபையோர்முன் தம்மைத் தாழ்த்திக் கூறுதல்' என்ற பொருளில் 'தற்காலத் தமிழ்ச் சொல்லகராதியும்'[21] 'தமிழ் இலக்கிய அகராதியும்'[22] சுட்டியுள்ளன.

பண்டைய இலக்கண உரையாசிரியர்களின் விளக்கங்களை அடியொற்றிக் கூறப்பெற்ற அகராதிகளின் விளக்கங்களிலிருந்து, அவையடக்கம் என்பது அவையோர் முன் அடக்கமாகப் பேசுதல்; அடக்கத்தை வெளிப்படுத்தத் தம்மைத் தாழ்த்திக் கொண்டு அவையோரை வழிபட்டுப் பேசுதல் என்பது அறியவருகின்றது.

2.2.3. இலக்கிய உரையாளர்கள்: இலக்கிய நூல்களில் உள்ள அவையடக்கப் பாடல்களுக்கு உரை எழுதும் முன் அவையடக்கம் என்பதற்குப் பலர் விளக்கம் தந்துள்ளனர்.

"அவையகத்தா ரெல்லார்க்கும் வழிபடுகிளவி
சொல்லுதல் அவையடக்கமெனப் பெறும்"[23]

என்பது மறைஞானதேசிகரின் விளக்கமாகும்.

"நூல் செய்யப்புகுவோர் கல்வியறிவொழுக்க முதலியவற்றால்
குறையின்றி நிறைந்தோர் கூடிய சபைக்குத் தாம் அடங்கி
ஒழுதலைக் கூறுதல்..."[24]

என்பர் கோ. ஸ்ரீராஜகோபாலப்பிள்ளை.

'கம்பராமாயணம் - சுருக்கம்' என்ற நூலில் வ.வே.
சுப்பிரமணிய ஐயர்,

"அவையடக்கம் என்பது கற்றோர் கூட்டத்தி னெதிரே
அடக்கமாயிருத்தல் - அதாவது, 'எடுத்த விஷயம்
பெரிதாயிருக்க, அறிவிலும் கல்வியிலும் சிறியவனாயிருக்கிற
நான் கல்விமான்களுக்கெதிரே அதைப்பற்றிப் பேச
முன்வந்தது தவறு' என்று சொல்லிக் கொள்வது"[25]

என்று விரிவாகச் சுட்டியுள்ளார்.

வில்லிபாரதத்திற்கு உரை எழுதிய வை.மு. கோபால
கிருஷ்ணமாசாரியார்,

"அவையடக்கமாவது - அவையோர்க்குத் தான் அடங்கியிருக்கை;
அவையத்தார்க்கு மனவெறுப்பு முதலியன தோன்றாமல் அன்னாரை
அடங்குமாறு செய்தலெனினுமாம். அங்ஙன் அவையடக்கத்தைத்
தெரிவிக்கும் பாடல் அவையடக்கம் எனப்படும்"[26]

என உரை செய்துள்ளார்.

"அவைஅடக்கம் கூறிக்கொள்ளுதல் தமிழ்நாட்டின் தொன்று தொட்ட வழக்கம் ஆகும். கற்றறிந்த பெருமக்கள் கூடியிருக்கும் அவையில் அடங்கிப் பேசுதல் அவைஅடக்கமாகும்"[27]

என்று பொருள் கொள்கிறார் சேக்கிழார் பிள்ளைத் தமிழ் உரையாசிரியர். தேம்பாவணி உரையில் வி. மரிய அந்தோனி,

"அவையடக்கம் என்பது புலவன் கற்றோர் அவைமுன் தன் அடக்கத்தைத் தெரிவித்து அன்பைப் பெறுவதோர் இலக்கியமரபு"[28]

என்று விளக்கியுள்ளதைக் காணலாம்.

மேற்காட்டிய உரை விளக்கங்கள் அவையடக்கம் என்பது 'அவையோர் முன் அடக்கமாய்ப் பேசி அவையோரை ஈர்த்தல்' என்பதை அடிப்படை விதியாகக் கொண்டுள்ளன என அறியமுடிகின்றது.

2.2.4. அறிஞர் தம் கருத்து: இலக்கண இலக்கிய நூல்களை ஆராய்ந்தோர் அவையடக்கத்திற்கு விளக்கம் தந்துள்ளனர்.

"தகுதியில்லாத சொல்லினும், அவற்றை ஆராய்ந்தாரை வழிபட்டுக் கூறும் உரை அவையடக்கமெனப்படும்"[29]

என்பது கா. சுப்பிரமணியபிள்ளையின் கருத்து.

"அவையோர்க்கு அடங்கிக் கூறும் வணக்கமொழி"[30]

என்பார் மு. வரதராசனார்.

க. வெள்ளைவாரணன்,

"அவையடக்கியல் என்பது விளங்க அறிவிக்குந் திறமில்லாதவைவற்றைச்

சொல்லினும் அவற்றை வகைப்படுத்து ஆராய்ந்து ஏற்றுக்
கொள்வீராக என இவ்வாறு எல்லா மாந்தர்க்கும்
தாழ்ந்து கூறல்" [31]

என்று விளக்கியுள்ளார்.

தொல்காப்பியத்தை ஆராய்ச்சி செய்த சி. இலக்குவனார் பின்வருமாறு விளக்கம் தருகின்றார்:

"புலவர் தம் அடக்கமுடைமையை அறிவித்துப் பிறரை அடக்கிவிடும்
ஆற்றல் பெற்றவர்கள். தாம் அடங்கினால் பிறரை அடக்கலாம்
என்ற பெருண்மை பொதிந்து கிடப்பதே இவ்வுலக இலக்கியம்" [32]

நெல்லை ந. சொக்கலிங்கம் [33], அ.அ. மணவாளன் [34] போன்றோர் அவையடக்கம் என்பது தம்மைத் தாழ்த்திக் கொண்டு அவையோரை உயர்த்திப் பேசுதல் என்ற நிலையிலேயே விளக்கிச் செல்கின்றனர்.

எடுத்துக்காட்டிய ஆய்வாளர்கள் அனைவரும் ஒரே கருத்தைக் கொண்டோராய் உள்ளனர். இவர்களில் சி. இலக்குவனார் 'தானடங்குவதன் மூலம் அவையோரை அடக்குதல்' என்ற பேராசிரியரின் உரையைப் பின்பற்றியுள்ளார். எனினும் முன்பே குறிப்பிட்டதுபோல் அவையோரை அடக்குதல் என்பது அவையோரை ஈர்த்தல் எனக் கொள்ளல் இயன் தகும்.

அவையடக்கம் என்பதற்குப் பல்வேறு நிலைகளிலிருந்து வந்த விளக்கங்களைக் கொண்டு பின்வரும் முடிவுக்கு வரலாம்:

'அவையடக்கம்' என்ற சொல்லை அவை + அடக்கம் எனப் பகுக்கலாம். அவை - அவையில் உள்ள மக்களை உணர்த்தும்; இடவாகு பெயர். அடக்கம் - அடக்கத்தைத் தெரிவிக்கும் பாடலைச் சுட்டும்; தொழிற்பெயர்.

அவையடக்கம் என்பது நான்காம் வேற்றுமைத்தொகை எனக் கொள்ளினும் பொருந்தும் (அவைக்கு அடக்கம் கூறல்). எனவே 'அவையடக்கம்' என்பது 'அவையோர் முன் அடக்கத்தைத் தெரிவித்தல்' என்பதை அடிப்படை விதியாகக் கொண்டு, அடக்கத்தை வெளிப்படுத்த 'அவையோரை உயர்த்தியும் தம்மைத் தாழ்த்தியும் கூறிக்கொள்ளுதல்' எனக் கொள்ளப்படுகின்றது. இவ்வடக்க வெளிப்பாட்டை உவமை வழியில் பிற்காலத்தார் காட்டத் தொடங்கினர்.

2.2.5. அவையை அடக்குதல்: பேராசிரியர், நச்சினார்க்கினியர் போன்றோர் 'தானடங்குதலாயின் அடங்கியல் எனப் பாடமாதல் வேண்டும்' என்றதைக் கொண்டு, பிற்காலத்தார் அவையடக்கம் என்பது அவைக்கு அடங்குதல், அவையை அடக்குதல் என்ற இருபொருள் தரும் எனக் கொண்டனர். இதனை,

> "அவை அடக்கம் என்னும் தொடர் அவைக்குத் தாம் அடங்குதல் என்னும் பொருளுடன், அவையைத் தம் திறனால் அடக்குதல் என்னும் பொருள் தருதலையும் ஈண்டு உணர்தல் வேண்டும். இங்ஙனம் இரு பொருள்களும் ஒன்றுசேர அவையடக்கம் செப்பிய பெருமை நந்தம் மெய்கண்டார் திருவாக்கால் நன்கு தெளியலாம். அப்பாடல்,
>
> தம்மை உணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்
> எம்மை உடைமை எமைஇகழார் - தம்மை
> உணரார் உணரார் உடங்கியந்து தம்மில்
> புணராமை கேளாம் புறன்"[35]

எனக் குறிப்பிடுவதிலிருந்து அறியலாம்.

இத்தகைய பாடல்கள் சமயநூல்களில் பெரிதும் காணப்பெறுவன. பொதுவாக, சமயநூற்புலவோர் தத்தம் சமயத்தை உயர்த்தியும் பிற

சமயத்தைத் தாழ்த்தியும் பாடுதல் இயல்பு. தமது நூல்களைத் தம் சமயத்தைச் சார்ந்தோர் கூடியுள்ள அவையிலேயே அரங்கேற்றுவர். அதனால் சமய அறிஞர்கள் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் தம் சமயப் பெருமை பேசுவர்.

அவ்வகையிலேயே மேற்கண்ட பாடற்பொருளும் அமைந்திருப்பதைக் காணலாம். இப்பாடலுக்கு உரைசெய்தோர்,

> "இஃது அவையடக்கங் கூறுமுகத்தானே ஈண்டெடுத்துக் கொண்ட சித்தாந்த சைவநிலையுயர்வும் ஏனைச் சமயத்தார்களதிழிபுங் கூறுகின்றது"[36]

எனக் குறிப்பிட்டுள்ளது மேற்கருத்திற்கு அரணாக அமைகின்றது.

2.3. அவையடக்கம் வடமொழித் திரிபன்று:

அவை அடக்கம் என்பதில் அவை என்ற சொல் வடசொல் திரிபு என எண்ணுவோர் உளர். தமிழகராதி (ப. v) '*' என்ற குறியிடப்பெற்ற சொற்கள் தமிழல்லாதவை எனக் குறிட்டு விளக்கத்தில் சுட்டியுள்ளது.

தொல்காப்பியர் அவையகத்தாலும்[37], அவையல் கிளவி[38], அவையடக்கியல்[39] எனக் கூறுவனவெல்லாம் அவர் காலத்திற்கு முன்பே தொன்னூல்களில் வழங்கிவந்த இலக்கணக் குறியீடுகளாகும். இவற்றில் உள்ள 'அவை' என்ற சொல் அறிஞர்கள் கூடிய கூட்டத்தைக் குறிப்பிடுகின்றது.

சங்க இலக்கியத்துள் வரும் அவை[40], அறங்கூறவையத்தார்[41], அவைக்களத்தாலும்[42], அவைபுகழ்அரங்கு[43], அவைபுகு பொருநர்[44], அவையகம்[45], அவையத்தார்[46], அவையத்து[47], அவையம்[48] என்பனவற்றுள்

வரும் 'அவை' என்பதற்கு 'அறிஞர்கள் ஆராயுமிடம்'[49] எனப் பொருள் கொள்ளப்பெறுகின்றது.

'கற்றறிந்த அறிவுடையோர் அவை' என்ற பொருளில் பல இடங்களில் 'அவை' என்ற சொல் பயின்று வந்துள்ளதைத் திருக்குறளிலும்[50] காணமுடிகின்றது.

"சபா என்னும் வடசொல் சபை, சவையெனத் திரிந்து வரும். அவை என்பது அச்சொல்லின் திரிபன்று. அது அவை என்னும் பலவின்பாற் சொற்போல 'அத்தகைமையுடைய மக்கட்குழு' என்ற பொருளில் வரும் தமிழ்ச்சொல் என்க"[51]

என்று அடிகளாசிரியன் குறிப்பிடுகின்றார். இதனை மேலும் விளக்குகையில் திவாகர நிகண்டு புலவர் பெயரைக் கூறும்போதும், திரண்டோர் பெயரைக் கூறும்போதும் 'அவை' என்ற சொல்லையும் 'சவை' என்ற சொல்லையும் வெவ்வேறாகக் காட்டியுள்ளதைக் குறிப்பிட்டு, 'அவை' என்ற சொல் வடமொழித் திரிபன்று என நிறுவுகின்றார்[52].

ஞா. தேவநேயன் தமது 'வடமொழி வரலாறு' என்ற நூலில் 'சபா' என்ற வடசொல் வடிவிற்கு 'அவை' என்ற தமிழ்மூலமே பொருத்தமாக உள்ளது எனச் சான்றுகள் காட்டியுள்ளார்[53].

திராவிட மொழிகளை ஆராய்ந்த பேராசிரியர் டி. பர்றோ வடமொழி எழுத்தான 'S' மறைந்த நிலையில் சில சொற்கள் திராவிட மொழிகளில் வழங்குகின்றன என்று பின்வரும் சான்றினைக் காட்டுகின்றார்.

"Tamil: avai assembly, assembly-Hall;
Sanscrit: Sabha"[54]

இதில் 'சபா' என்பதில் உள்ள 'S' என்ற ஒலி இழந்த நிலையில் 'அவை'

என வழங்குவதாகக் கருதுகின்றார். இதனை நிறுவும் வகையில் பிற நூல் வழிச் சான்றுகள் தந்தாரில்லை.

தொல்காப்பியம், சங்க இலக்கியம், திருக்குறள் போன்ற தொன்மையான தமிழ் நூல்களில் 'அவை' என்ற சொல் 'அறிஞர்கள் கூடுமிடம்' என்ற பொருளில் மிகுதியாக வழங்கப் பெறுவதால், 'அவை' தமிழ்ச்சொல் எனல் தகும். எனவே அவையடக்கம் வடமொழித் திரிபன்று என்பதே பொருத்தமாக அமையும்.

மேலும், அவையடக்கத்தைத் தமிழல்லாத சொல் எனக் கூறும் தமிழகராதி, அதன் கூற்றிற்கு அரணாக வடநூற்சான்று ஏதும் காட்டவில்லை என்பதும் இவண் குறிப்பிடத்தக்கதாகும்.

இனி 'அவையடக்கம்' என்ற சொல்லாட்சியும் அவையடக்க இலக்கணமும் வழங்கப்பெற்றுப் பின்பற்றப்பெறும் தமிழ் நூல்களில் எக்காலத்திலிருந்து அவையடக்கப் பாடல்கள் இடம்பெறுகின்றன என்பதை ஆராயுமுன் அவையடக்கம் பாடுவதற்கான சூழல்களை அறிந்துகொள்ளுதல் பொருத்தமாக அமையும்.

2.4. அவையடக்கம் பாடுவதற்கான பின்னணி:

கற்றறிந்தோர் நிறைந்த அவையைக் கூட்டி, அதில் நூல் அரங்கேற்றம் நடைபெறும்போது, நூலாசிரியனால் அவையடக்கம் பாடப்பெறுகின்றது.

தமிழகத்தில் அறிஞர்கள் ஒன்றுகூடி ஆராய்ந்த 'அவை' இருந்ததற்கான சான்றுகள் உள்ளன.

தொல்காப்பியர் புறத்திணையில் வாகைத்திணையினைக் கூறும்பொழுது, "எட்டுவகை நுதலிய அவையகத்தானும்"[55] என்றொரு துறை கூறியுள்ளார்.

இளம்பூரணர்,

> "எட்டுவகை நுதலிய அவையகமும் - எட்டுப் பாகுபாட்டைக் குறித்த அவையகமும்... எட்டுவகை குறித்த அவையகம் என்றமையான், ஏனைய அவையின் இவ்வகை மிகுதி உடைத்தென்றவாறு.
>
> அவையாவன: குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம், வாய்மை, தூய்மை, நடுவுநிலைமை, அழுக்காறாமை, அவாவின்மை என்பன"[56]

என விளக்கியுள்ளார். இதில் கல்வித் தொடர்பான அவையையும் காட்டியுள்ளது நோக்கத்தக்கது.

சொல்லதிகாரத்தில் 'அவையல்கிளவி மறைத்தனர் கிளத்தல்'[57] என்ற நூற்பாவில் அவையினைக் குறிப்பிட்டுள்ளார். கிளவியாக்கத்தில் 'குழுமவ... உயர்திணை மருங்கின் நிலையின வாயினும், அஃறிணை மருங்கிற் கிளந்தாங்கியலும்'[58] என்பர். இங்குக் குழு என்றது அவையினை.

எல்லாவற்றிற்கும் மேலாக, 'அவையடக்கியலே' எனத் தொடங்கும் நூற்பாவில் 'வல்லா கூறினும் வகுத்தனர் கொண்மின்' என்றமையான் அங்கு அறிஞர்கள் கூடி ஆராய்ந்துள்ளனர் என்பது தெளிவாகின்றது. எனவே தொல்காப்பியர் காலத்தில் அறிஞர்கள் கூடி ஆராய்ந்த அவை இருந்திருக்கிறது என்பதில் கருத்து முரண் அன்று.

சங்க இலக்கியங்களிலும் திருக்குறளிலும் "அறிஞர்கள் நிறைந்த அவை" உண்டு என்பது முன்னரே குறிப்பிடப்பெற்றுள்ளது (பார்க்க: 2.3).

களவியலுரை, பக்தி இலக்கிய நூல்கள், வெண்பாப் பாட்டியல், யாப்பருங்கல விருத்தியுரை, திரிகடுகம், பெருங்கதை போன்ற நூல்களில்

பல்வேறு வகையான 'அவை' இருந்ததற்கான சான்றுகள் இடம்பெற்றுள்ளன[59]. மேலும் தமிழ்நாட்டு முடிமன்னர்கள் அரசவை, வேத்தவை, அறங்கூறவை ஆகியனவற்றை அமைத்திருந்தனர் எனவும் அறிகிறோம்.

இவற்றுள் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கியோர் கூடிய அவையில் நூல் அரங்கேற்றம் நிகழ்ந்திருக்கும்.

நூல் அரங்கேற்றம் தொடர்பான இலக்கியவழிச் சான்றுகளை அறிஞர் பலர் தந்துள்ளனர். அவற்றின் சுருக்கம் கீழே தரப்பெற்றுள்ளன.

1. தொல்காப்பியம் நிலந்தரு திருவிற்பாண்டியன் அவையத்து அரங்கேறிற்று; நான்மறை முற்றிய அதங்கோட்டாசான் அரங்கின் தலைவராவார் (தொல். பனம்பாரனர் பாயிரம்).

2. திருக்குறள் அரங்கேற்றப்பெற்றது (திருவள்ளுவமாலை சிறப்புப் பாயிரம்).

3. சிலப்பதிகாரம் சாத்தனார் முன்னிலையிலும் மணிமேகலை இளங்கோவடிகள் முன்னிலையிலும் அரங்கேறின (இரு நூல்களிலுள்ள பதிகங்கள்).

4. சீவகசிந்தாமணி சங்கப் புலவர்கள் முன்னிலையில் அரங்கேறியதாகக் கூறப்பெறுகின்றது.

5. கம்பராமாயண அரங்கேற்றம் நாதமுனி தலைமையில் திருவரங்கத்தில் நிகழ்ந்தது ('கன்னிய அரங்கர் முன்னே கவியரங் கேற்றினானே' - ஒரு தனியன்).

6. ஒட்டக்கூத்தரின் உலாநூல்கள் அரங்கேறிய செய்தியைச் சங்கர சோழனுலா குறிப்பிடுகின்றது.

7. மகாவித்வான் ஸ்ரீராகவையங்கார் பாடிய பாரிகதையும் டாக்டர் சோமசந்தர பாரதியார் பாடிய மங்கலக் குறிச்சிப் பொங்கல் வாழ்த்தும் அண்ணாமலை நகரில் சில ஆண்டுகளுக்கு முன் புலவர்கள் முன்னிலையில் அரங்கேறின[60].

சுருக்கம் கருதிச் சில சான்றுகளே தரப்பெற்றன. எனவே தமிழகத்தில் கற்றறிந்த புலவர்கள் ஒன்றுகூடி நூல் அரங்கேற்றம் நிகழ்த்தியமை தொன்றுதொட்டு இந்நூற்றாண்டுவரை நிகழ்ந்துளது. நூல், அரங்கேற்றம் அடைந்தபின்னரே மக்கள் வழக்கிற்கு வரும். பழங்காலத்தில் இதனை ஒரு மரபாகக் கொண்டிருந்தனர். அதுசமயம் நூற்குறை கண்டு நூலைத் தடைசெய்யும் வாய்ப்பும் உண்டு. எனவே நூலாசிரியன் அவையோரின் நன்மதிப்பைப் பெறவேண்டியவனாகின்றான். அதன் விளைவாக அவையோர்முன் அடக்கமுடன் செயல்படுகின்றான். இத்தகு சூழ்நிலையில் அவன் அவையடக்கம் பாடுதலை ஒரு கருவியாகக் கொண்டு பாடத் தொடங்குகின்றான் எனக் கருத இடமுண்டு.

"புலவரின் அச்சவுணர்ச்சியும் தன்னடக்கமுமே அவையடக்கம் எழுவதற்குக் காரணமாயின"[61]

"பழங்காலப் புலவர்கள் புதிதாக நூல்களை எழுதுவார்களானால் அந்நூல்களைப் புலவர் அரங்கில் படித்துக்காட்டிப் புலவர்களின் நன்மதிப்பைப்பெற வேண்டியது அக்காலத்து வழக்கம். அதற்கு நூல் அரங்கேற்றம் என்று பெயர். அரங்கேற்றம் செய்யப்படாத நூல்களை அக்காலத்தில் மக்கள் ஏற்றுக்கொள்வதில்லை. அரங்கேற்ற அவையிலே நூலாசிரியர் தாமெழுதிய நூலைப்

படித்துக்காட்டுவார். அந்நூலில் ஏதேனும் குற்றங்குறைகள் இருக்குமானால் அவையிலுள்ள புலவர்கள் அக்குற்றங்குறைகளை எடுத்துக்காட்டுவார்கள். அவைப் புலவர் கூறுகிற குற்றங்களுக்கு நூலாசிரியர் தகுந்த விடை கூறி அவர்களுடைய ஐயங்களைப் போக்க வேண்டும். அரங்கேற்றத்தில் ஒப்புக்கொள்ளப்பட்ட பிறகுதான் அந்நூல் உலகத்தில் உலவத் தொடங்கும். எனவே அக்கால நூலாசிரியர்கள் அவையடக்கம் கூறிவந்தனர்"[62]

"அரங்கேற்றுகையில் அவையோர் எழுப்பும் தடைகளுக்கு ஆசிரியன் ஒப்பும் விடை சொல்வான், அல்லது தடைகளுக்குச் செவிசாய்த்து நூலகத்துத் திருத்தஞ் செய்துகொள்வான். சில சொற்களேனும் சில தொடர்களேனும் அவையோரால் செம்மைப்பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை... நேர் நின்று ஒப்புதல் பெறவேண்டுமாதலின், புலவன் மிகப் பணிவோடு அரங்கினோரை மதிக்க வேண்டியவனாகின்றான்"[63]

என்று அவையடக்கம் பாடுவதற்குரிய காரணங்களையும் அதனால் ஏற்படும் பயன்களையும் அறிஞர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறைகளைச் சுட்டிக்காட்டி நூலைத் தடைசெய்யும் அதிகாரம் அவையோர்க்கு உண்டு என்பதால் அவையோரை நூலாசிரியன் பணிந்து வேண்டுதல் முறைமை என்பது புலனாம். மேலும் தனது நூல் மக்கள் மத்தியில் பரவ வேண்டும்; மாணவர்களுக்குக் கற்பிக்கப்பெற வேண்டும்; பல படிகள் எடுக்கப்பெறவேண்டும் என்ற நூலாசிரியனின் நோக்கம் நூலை அவையோர் ஏற்றுக்கொண்ட பின்னரே நிறைவேறும் என்ற சூழல் உருவாகும் போது அவையடக்கம் பாடுதல் இன்றியமையாததாகின்றது. எனவே நூலாசிரியனின் நோக்கத்தை நிறைவேற்றுதல் என்பதையும் காரணமாகக் கருதலாம். நூலாசிரியன் இயல்பாகவே அவையடக்கம் உடையோனாய் விளங்குவான் என்பது ஒருதலை.

இத்தகைய காரணங்களுக்காகப் பாடப்பெற்ற அவையடக்கப் பாடல்களின் தோற்றத்தைக் கணக்கிட்டுக் கூற இயலவில்லை.

2.5. அவையடக்கப் பாடல்களின் தொடக்கம்:

2.5.1. தொல்காப்பியம்: தொல்காப்பியத்தின் காலம் கி.மு.3ஆம் நூற்றாண்டு என்பர்[64]. இந்நூலில் அவையடக்கம் என்ற சொல்லும், அவையடக்க இலக்கணமும் குறிப்பிடப் பெற்றுள்ளன என்பது முன்னரே கூறப்பெற்றதாகும். பாவகைகளில் பாடுபொருள் பயின்றுவரும் நிலையினைச் சுட்டும்போதுதான் அவையடக்கம் சுட்டப்பெற்றுள்ளது. ஆதலால் தொல்காப்பியர் காலத்தை ஒட்டியப் பகுதிகளில் அவையடக்கப் பாடல்கள் வழக்கில் இருந்திருக்கின்றன என்பது தேற்றம். ஆனால் தொல்காப்பியர் நூலுக்குக் கூறியதாக அவையடக்கம் இடம்பெறவில்லை. அவையடக்க இலக்கணம் சுட்டும் நூலில், அவையடக்கப் பாடல் இடம்பெறாதது, பாடல் கிடைக்கப் பெறாமல் ஆகியிருக்கக் கூடும். அல்லது நூலில் இடம்பெறச் செய்யும் வழக்கம் இல்லை எனக் கருதவும் இடமுண்டு.

2.5.2. சங்ககால நூல்கள்: சங்ககால நூல்கள் எனப்படும் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகியவற்றில் அவையடக்கப் பாடல்கள் இடம்பெறவில்லை. அவை பெரும்பாலும் தனித்தனிச் செய்யுட்களாகப் பாடப்பெற்றதாலும், பிற்காலத்தாரால் தொகுத்துப் பெயரிடப்பெற்றதாலும் அவையடக்கம் இடம்பெற வாய்ப்பில்லை.

சங்க இலக்கியத்தில் வரும் அடக்கம், அடியுறை ஆகிய சொற்களுக்கு முறையே 'மனமொழி மெய்கள் அடங்கியிருத்தலாகிய மக்கட்பண்பு'[65] எனப் பொருள் கொள்ளப்பெறுகின்றன. இவை மக்கட்கு வேண்டப் பெற்றதாதலால் புலவோர்க்கும் உரியதாகின்றன.

கி.மு.500 முதல் கி.பி.200 வரையுள்ள காலத்தைச் சங்ககாலம் என்பர்[67].

2.5.3. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்: பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் எவற்றுள்ளும் அவையடக்கப் பாடல்கள் இடம்பெறவில்லை. இதற்கு,

> "பதினெண் கீழ்க்கணக்கு நூல்களைப் பாடிய புலவர்கள் சமணம், வைணவம், சைவம் ஆகிய சமயங்களைச் சார்ந்தவராதலின் தத்தம் மதத் தெய்வங்களை நூன்முகத்தில் வாழ்த்திச் செய்யுள் செய்தனர்"[68]

என்று க. கைலாசபதி கருதுவதும் காரணமாக அமையலாம். இவற்றில் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய தன்னடக்கக் கருத்துகள் அறம் என்ற நிலையில் பேசப்பெற்றுள்ளன.

2.5.3.1. திருக்குறள்: திருவள்ளுவர் அடக்கமுடைமை[69], அவை அறிதல்[70], அவை அஞ்சாமை[71] போன்ற அதிகாரங்களில் கற்றோர்க்கு வேண்டிய அடக்கம், அவையறிந்து பேசுதல், அவையோர் ஏற்குமாறு பேசுதல் போன்றவற்றை வலியுறுத்தியுள்ளார். இவை அவையோர் முன் நூலைப் பாடிக்காட்டும் புலவனுக்கும் வேண்டற்பாலன.

> "நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய
> வாயின ராதல் அரிது"[72]

என்பதில் நுட்பமான கேள்வியுடையோர் பணிவுடையோராய் இருப்பர் என்பதும் நோக்கத்தக்கது. இக்கருத்துகள் திருவள்ளுவர் காலத்தில் அவையோர் முன் புலவன் நூல் கூறும் அமைப்பு இருந்தது என்பதைக் காட்டுகின்றன. 'வியன்புலம், ஏற்றுணர்வார் முன்னர் இழுக்கு'[73] என்றதால் அவையில் கற்றோர் முன் குறைபடப் பேசுவோர் இழுக்குடையோராய்க் கருதப்பட்டனர் என்பதும் தெளிவாகிறது.

திருவள்ளுவரின் காலத்தைப் பலவாறாகச் சுட்டுவர்; எனினும் கி.பி. முதலாம் நூற்றாண்டு என்பதை ஏற்போர் மிகப் பலராய் உளர்[74].

2.5.3.2. நான்மணிக்கடிகை: இந்நூலில்,

"எள்ளற்க என்றும் எளியரென்று; என்பெறினும்
கொள்ளற்க கொள்ளார்கை மேற்பட; உள்சுடினும்
சீறற்க சிற்றிற் பிறந்தாரை; கூறற்க
கூறல் லவற்றை விரைந்து"[75]

என வரும் பாடலில் 'தனக்குத் தகுதியில்லாத சொற்களை ஆராயாது விரைந்து கூறக்கூடாது' என்பதை நூலாசிரியனுக்கு வேண்டிய பண்பாகவும், 'எளியவர்கள் என்பதற்காக எள்ளுதல் கூடாது' என்பதை அவையோர்க்குரிய குணமாகவும் கொள்ளினும் பொருந்தும். இவைபோன்ற கருத்துகள் பிற நீதி நூல்களிலும் பரவலாகக் காணப்படுகின்றன.

2.5.4. இரட்டைக் காப்பியங்கள்: சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள் என அழைக்கப்படுவன. இவை கி.பி. 2ஆம் நூற்றாண்டில் எழுதப்பெற்றன எனக் கருதுவர். தமிழ் உலகிற்குக் கிடைத்த முதல் இரு காப்பியங்களான இவற்றின் நூன்முகத்தில் அவையடக்கம் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

2.5.5. தகடூர்யாத்திரை: சங்க காலத்தைச் சார்ந்து எழுந்த நூல்களுள் இதுவும் ஒன்று[76]. எஸ். வையாபுரிப்பிள்ளையின் பதிப்பில் வெளிவந்த புறத்திரட்டில் 'அவையடக்கம்' என்ற தலைப்பின் கீழ்,

"வியத்தக்க காணுங்கால் வெண்மையிற் றீர்ந்தார்
வியத்தக்க தாக வியப்ப(ர்) - வியத்தக்க

அல்ல வெனினும் அறியாதார் தாம்போல
எல்லாம் வியப்ப நினிது"[77]

என வரும் பாடல் தகடூர்யாத்திரை எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. பாடற் பொருளை நோக்கின் நான்மணிக்கடிகைப் பாடல் போன்ற இதுவும் நூலினுள் இடம்பெற்ற பாடலாக எண்ணத் தோன்றுகின்றது.

திருவாரூர்த் தமிழ்ச் சங்கம், 1918இல் வெளியிட்ட புறத்திரட்டில் இப்பாடல் பழமொழி நானூறின் பாடலாகக் குறிப்பிடப்பட்டுள்ளது[78]. பழமொழி நூலில் இப்பாடல் இடம்பெறவில்லை.

2.5.6. பெருங்கதை: இரட்டைக் காப்பியங்களுக்கு அடுத்தபடியாகப் பெருங்கதை போன்ற தழுவற் காப்பியங்கள் தமிழில் தோன்றின[79]. இவை முழுமையாகக் கிடைக்கப் பெறாத நிலையில் இந்நூல்களில் அவையடக்கம் இடம்பெற்றதை அறியமுடியவில்லை.

2.5.7. பக்தி இலக்கியங்கள்: பக்தி இலக்கியத்தின் காலத்தைக் கி.பி. 9ஆம் நூற்றாண்டு வரைக் கணக்கிடுகின்றனர்[80]. பக்திப் பாவலர்கள் தலங்கள்தோறும் சென்று இறைவனைப் பாடியும் சமயத்தைப் பரப்பியும் தனித்தனிப் பாடல்களாகப் பாடி வந்ததால் இவர்கள் அவையடக்கம் பாடவேண்டிய நிலை ஏற்படவில்லை.

2.5.7.1. திருமந்திரம்: இந்நூலினை எழுதிய திருமூலர் கி.பி.6ஆம் நூற்றாண்டிற்கு முன் வாழ்ந்தவர் என்ப[81]. இந்நூலின் இரண்டு பாடல்களை 'அவையடக்கம்' எனத் தலைப்பிட்டுப் பதிப்பித்துள்ளனர். அவை வருமாறு:

"ஆரறி வார்எங்கள் அண்ணல் பெருமையை
யாரறி வார்இந்த அகலமும் நீளமும்

பேரறி யாத பெருஞ்சுட ரொன்றதின்
வேரறி யாமை விளம்புகின் றேனே.

பாடவல் லார்நெறி பாட அறிகிலேன்
ஆடவல் லார்நெறி ஆட அறிகிலேன்
நாடவல் லார்நெறி நாட அறிகிலேன்
தேடவல் லார்நெறி தேடகில் லேனே"[82]

இப்பாடல்களின் பொருளை நோக்கின் இறைவன் முன் தன்னடக்கத்தோடு பாடியனவாகத் தோன்றுகின்றன. திருமூலர் பாடியதாக 3108 பாடல்கள் திருப்பனந்தாள் மடத்துப் பதிப்பில் இடம்பெற்றுள்ளன. திருமூலர் பாடியன 3000 பாடல்களேயாகும். இதனைத் 'தந்திரம் என்பது சார்வுமூ வாயிரம்'[83] என்ற அவரது வாக்காலும், 'முன்னியஅப் பொருள்மாலைத் தமிழ்மூவாயிரம்சாற்றி'[84] என்ற சேக்கிழாரின் கூற்றாலும் தெளியலாம். மீதியுள்ளவை இடைச்செருகல் எனக் கருத இடமுண்டு.

திருமூலர் பாடிய பாடல்களின் எண்ணிக்கை,

"பதிப்புக்குப் பதிப்பு வேறுபடுவதாக உள்ளது. திரு.வி.க. பதிப்பில் 3069 பாடல்களும், திருப்பனந்தாள் மடத்துப் பதிப்பில் 3108 பாடல்களும், சைவசித்தாந்தக் கழகப் பதிப்பிலும், சிதம்பரனார் பதிப்பிலும் 3000 பாடல்கள் காணப்படுகின்றன. இவற்றில் பாடல் அமைப்பிலும் ஓர் ஒழுங்கின்மை புலனாகிறது"[85]

என்ற கூற்று மேற்கூறியதற்கு அரணாக அமைகின்றது.

மேலும், வி.வி. ரமணசாஸ்திரி,

"112 பாடல்களடங்கிய இப்பாயிரப் பகுதி முழுதும் திருமூலர் வாக்கு இல்லை"[86]

எனக் கருதுகின்றார்.

இவரது கருத்துப்படி, பாயிரப்பகுதியில் உள்ள பாடல்கள் அனைத்தும் திருமூலர் பாடியதில்லை எனவும் கூறவியலாது. ஏனெனில் பாயிரப் பகுதியில் வரும் பல பாடல்கள் நூலினுள்ளும் பயின்று வந்துள்ளன; நூலுக்குள்ளேயே திரும்பத்திரும்ப வரும் பாடல்களும் உள (10 → 1165; 72 → 553; 106 → 990; 180 → 540).

திருமந்திர ஆராய்ச்சியில் ஈடுபட்ட இரா. மாணிக்கவாசகம் அவையடக்கமாகப் பதிப்பிக்கப்பெற்றுள்ள பாடல்கள் நூலின் முதல் தந்திரத்தில் இடம்பெறவேண்டியவை எனக் கருதுகின்றார்.

> "இரண்டு பாடல்கள் கொண்டுள்ள இப்பகுதி; 'எல்லையில்லாக் கடவுளின் பெருமையினை இயம்புகிறேன்; என்றன் அறியாமை' எனக் கூறும் கருத்தினைப் பார்க்கின் இப்பாடல் கடவுள் வாழ்த்திற்குப் பின் வைக்கத்தக்கதாக அமையலாம் என எண்ண வேண்டியுள்ளது. அல்லது, நூலின் முதல் தந்திரத்தின் முன் வைக்கத்தக்கது"[87]

என்று குறிப்பிட்டுள்ளார்.

எனவே எடுத்துக்காட்டப்பட்ட சான்றுகள் வழி திருமூலர், இறைவன் முன் தாழ்ந்து பாடியவைகளை நூலுக்குள் இருந்தெடுத்து, அவையடக்கம் என்று பிற்காலத்தார் பதிப்பித்துள்ளனர் எனக் கொள்ளல் பொருந்தும். ஆதலால் கி.பி. 6ஆம் நூற்றாண்டிற்கு முன்புவரை நூல்முன் அவையடக்கம் இடம்பெறவில்லை என்பது தெளிவாகின்றது.

<u>2.5.7.2. நாயன்மார்களும் ஆழ்வார்களும்:</u> இவர்களின் நூல்களில் அவையடக்கம் காணப்பெறவில்லை. எனினும் இறைவன் முன் தம்மை இழித்துக் கொண்டு பேசும் போக்கு இவர்களிடம் மிகுதி. பிற்கால நூலாசிரியர்கள்

அவையோர் முன் தம்மை இழிவாகப் பேசிக்கொள்ளுதல் இவர்களின் தாக்கமாகப்படுகின்றது.

> "நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனைப்
> பேயேன துள்ளப்பிழை பொறுக்கும் பெருமையனைச்
> சீயேதும் இல்லாதென் செய்பணிகள் கொண்டருளுந்
> தாயான ஈசற்கே சென்றூதாய் கோத்தும்பீ"[88]

என்று மாணிக்கவாசகர் தன்னை நாயேன், பேயேன் எனத் தற்சிறுமையாகப் பேசிக்கொள்ளுதலைக் காணலாம். இவைபோன்று ஆழ்வார்கள் நூல்களிலும் அடிமை, அடியேன், கடையேன், சிறியேன், புன்சொற்கள் முதலிய தற்சிறுமை மொழிகள் காணப்படுகின்றன. இவர்கள் இறைவன் முன் தற்சிறுமை பேசுதல் அன்புணர்வை வளர்க்கும் எனக் கருதினர்.

> "பக்தி இலக்கியம் பரவுதற்கு முன்வரை நூலில் அவையடக்கம் என்ற பகுதி இடம்பெறவில்லை. நூல் வரலாறு கூறும் பாயிரம் அல்லது பதிகம் இடம்பெறுதல் உண்டு. நூலாசிரியனே தன்னைத் தாழ்த்திக் கூறும் அவையடக்கம் அறிமுகமாகவில்லை... (பக்திப் பாவலர்களின்) தன்னடக்கம் பாடும் முறையே பிற்காலத்தில் அவையடக்கமாக மலர்ந்ததுபோலும்"[89]

என்று கூறப்படுகின்றது. எனவே பக்தி இலக்கியங்களின் காலத்தில் நூலில் அவையடக்கத்தை இடம்பெறச் செய்யும் வழக்கம் இல்லை என்பது அறியப் படுகின்றது.

2.5.8. இறையனார் அகப்பொருளுரை: இது தமிழுக்குக் கிடைத்த தொன்மையான உரைநூல் ஆகும். கி.பி. 8ஆம் நூற்றாண்டில் நக்கீரர் இவ்வுரை நூலைச் செய்தார் என்பர். இது ஒன்பது தலைமுறை வரை வாய்மொழியாக வழங்கப்பெற்று நீலகண்டனாரால் ஏட்டில் எழுதிவைக்கப் பட்டது எனக் கூறுவர்[90].

இந்நூலில் பாயிரச் செய்திகள் விரிவாகப் பேசப்பட்டுள்ளன. எனினும் அவையடக்கக் குறிப்புகள் காணப்படவில்லை. நூலுக்கும் அவையடக்கம் இடம்பெறவில்லை.

2.5.9. பஞ்சமரபு: அறிவனார் என்பவரால் எழுதப்பெற்ற இசைநூல். இந்நூலில் இடம்பெறும் யாழ்மரபின் முதல் வெண்பாவில் வரும் 'மன்ன திருமாற' என்ற தொடரைக் கொண்டு, இதில் கடைச்சங்க காலத்தவரான முடத்திருமாறனை விளிப்பதால் இதன் ஆசிரியரும் இக்காலத்தவர் ஆவார் எனப் பதிப்பாசிரியர் குறிப்பிட்டுள்ளார்[91]. இந்நூலை கி.பி.12ஆம் நூற்றாண்டினர் எனக் கருதப்படும் அடியார்க்கு நல்லார் மேற்கோளாகக் காட்டியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நூலில்,

"மால்பாடும் பாட்டினையும் வார்சடையோன் கூத்தினையும்
மேலாய நான்முகன்செய் பாணியையும் - சாலவென்
புன்கவியுஞ் சான்றோர்பாற் பொற்புடைத்தா மென்றுரைத்தேன்
மென்கொடியே மேதையான் மிக்கு"[92]

என்று அவையடக்கம் பாடப் பெற்றுள்ளது. இந்நூல் கடைச்சங்க காலத்தது எனக் கருதுவோர்க்கு இப்பாடலே தமிழுக்குக் கிடைத்த முதல் அவையடக்கப் பாடலாகும்.

ஆனால் இந்நூலில் இடம்பெற்றுள்ள நிருபதுங்க ராகம் முதலான பல காரணங்களைக் காட்டி கி.பி. 9ஆம் நூற்றாண்டின் இறுதியில் எழுதப்பட்டது என்று மு. அருணாசலம் நிறுவுகின்றார்[93]. மேலும் இந்நூலுக்கு நூலாசிரியரோ, அவரது மாணவரோதான் உரை எழுதியிருக்க வேண்டும் என்று சான்றுகள் காட்டுகின்றார்[94].

இந்நூலின் உரையில்,

"தாரபட்டங் கட்டியமனி மதனைத்தன் குடைநிழற்கீழ்
ஈரபட்டங் கட்டினன்கா விராச ராசன்..."[95]

என்ற மேற்கோள் பாடலில் இராசராசன் என்ற பெயர் குறிக்கப்பெற்றுள்ளது. இவனை முதலாம் இராசராசன் என்று கொண்டாலும் இவனது காலத்திலோ பின்னரோ தான் இந்த உரை எழுதப்பெற்றிருக்க வேண்டும். முதலாம் இராசராசன் கி.பி.985 முதல் கி.பி.1014 வரை ஆண்டதாக வரலாறுகள் சுட்டுகின்றன[96]. எனவே, மு. அருணாசலத்தின் கூற்றுப்படிப் பார்த்தாலும் அடியார்க்கு நல்லார் மேற்கோள் காட்டியிருப்பதால் கி.பி.12ஆம் நூற்றாண்டிற்கு முன்பும் முதலாம் இராசராசன் காலத்திற்குப் பின் உரை எழுதப் பெற்றுள்ளதால் கி.பி.10ஆம் நூற்றாண்டிக்குப் பின்னர் இந்நூல் தோன்றியிருக்க வேண்டும். எனவே இக்காலத்தைச் சேர்ந்தது இந்நூல் எனக் கருதினால் இதன் அவையடக்கம் முதற் பாடலாகாது.

2.5.10. கம்பராமாயணம்: கம்பர் எழுதிய இராமாயணம் ஆறு பாடல்களை அவையடக்கமாகக் கொண்டுள்ளது. இவரது காலம் பலவாறு சுட்டப்பெறுகின்றது.

சா.கணேசன்[97], அ.சா. ஞானசம்பந்தன்[98], மு. அருணாசலம்[99] போன்றோர் கம்பர் கி.பி.9ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஆதித்த சோழன் காலத்தவர் என்கின்றனர்.

தி.வை. சதாசிவபண்டாரத்தார்[100] கி.பி.985இல் ஆட்சி செய்த உத்தமசோழன் காலத்தில் கம்பர் வாழ்ந்தார் எனக் கூறுகின்றார். வி.கோ. சூரியநாராயண சாஸ்திரி[101] கி.பி.11ஆம் நூற்றாண்டிலிருந்த சோழனவையை அலங்கரித்தவர் கம்பர் எனக் கருதுகின்றார்.

சாசனத் தமிழ்க் கவிசரிதம் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தைக் குறிப்பிடும்போது,

> "கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பநாடர் விளங்கியதும் இவன் ஆட்சிக்காலமேயாகும். அப்புலவர் 12ஆம் நூற்றாண்டிறுதியில் தம் காப்பியத்தை இயற்றி முடித்தார்"[102]

என்று குறிப்பிடுவதைத் தமிழ்ப் புலவர் அகராதி ஏற்றுக்கொண்டுள்ளது.

கம்பரின் காலம்,

> "9ஆம் நூற்றாண்டின் இறுதியிலாண்ட முதலாமாதித்தன் காலம் என்பாருமுளர். அங்ஙனமாயின் அவர் திருமங்கை மன்னர் காலத்தவராகிடுவர். ஆழ்வார் காலத்தில் கம்பர் இருந்ததாகத் தோன்றவில்லை. மேலும் சிந்தாமணி முதலிய சமணக்காப்பியங்கள் விருத்தப்பாவில் முதலிலமைந்த காப்பியங்களாகும்...... 'சிந்தாமணிக் கடலில் சிறிது மொண்டுகொண்டேன்' என்று கம்பர் கூறியதாகச் சொல்வதுமுண்டு. அங்ஙனமாயின் சிந்தாமணிக்குப் பின்னரே கம்பராமாயணம் ஏற்பட்டிருக்க வேண்டும்"[103]

என்பது நோக்கத்தக்கது. கம்பராமாயணம் சீவகசிந்தாமணிக்குப் பின்னர்த் தோன்றியது என்பதை இக்கருத்து வலியுறுத்துகின்றது.

மேலும், கம்பரின் காலத்தை ஆராய்ந்த மா. இராசமாணிக்கனார்[104] கி.பி.12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மூன்றாம் குலோத்துங்கன் காலத்தவரே கம்பர் என முடிவுகூறுகின்றார். எனவே கம்பராமாயணத்தைச் சீவகசிந்தாமணிக்குப் பின்னர்த் தோன்றிய நூலாகக் கருதுதல் பொருத்தமாகத் தோன்றுகின்றது.

2.5.11. *சீவகசிந்தாமணி:* ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான இந்நூலைத் திருத்தக்கத் தேவர் எழுதினர். இதில்,

"கற்பா லுமிழ்ந்த மணியுங்கழு வாதுவிட்டா
லற்பால் அழியுந் நகைவெண்மதி போனிறைந்த
சொற்பா லுமிழ்ந்த மறுவும்மதி யாற்க ழூஇப்
பொற்பா விழைத்துக் கொளற்பாலர் புலமை மிக்கார்.

முந்நீர்ப் பிறந்த பவளத்தொடு சங்கும் முத்தும்
அந்நீ ருவர்க்கு மெனின்யாரவை நீக்கு கிற்பார்
இந்நீர என்சொற் பழுதாயினுங் கொள்ப வன்றே
பொய்ந்நீர வல்லாப் பொருளால்விளி புகுதுமென்பார்"[105]

ஆகிய இருபாடல்கள் அவையடக்கமாக இடம்பெற்றுள்ளன.

இந்நூல் கத்திய சிந்தாமணியின் வழிநூல் எனக் கொண்டு, கத்தியசிந்தாமணி 9ஆம் நூற்றாண்டையது எனக் கருதி இந்நூல் கி.பி.10ஆம் நூற்றாண்டில் எழுதப் பெற்றிருக்க வேண்டும் எனக் கருதுகின்றனர்[106]. இக் கருத்தினை மறுக்கும் வகையில்,

"சீவகசிந்தாமணியின் செய்யுளிற் சில கத்திய சிந்தாமணியின்
சுலோகத்தின் மொழிபெயர்ப்பாகத் தோன்றுவதையே இவர்கள்
கருத்திற்கு ஆதாரமாகக் கொள்வர். கத்திய சிந்தாமணியே
சீவகசிந்தாமணிச் செய்யுள் சிலவற்றை மொழிபெயர்த்துக்
கொண்டிருக்கலாம் என்று ஏன் கருதக் கூடாது?"[107]

என்று பொ.வே. சோமசுந்தரன் கேட்கிறார்.

திருத்தக்கத் தேவர் பாடிய நரிவிருத்தம் பற்றிய செய்தி கி.பி.6 அல்லது கி.பி.7ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த திருநாவுக்கரசர் தேவாரத்தில் உண்டு என்றும் சங்க யாப்பைபயொட்டிய நடை இந்நூலில் இடம்பெற்றுள்ளது

என்றும் கூறித் தேவரைத் திருநாவுக்கரசர் காலத்திற்குச் சற்று முன்பிருந்தவர் அல்லது சமகாலத்தவர் எனக் கருதுகின்றனர்[108].

ஆனால் மைசூர் சரவணபெலகோலாவிலுள்ள கல்வெட்டுச் செய்தியைச் சான்றுகாட்டி,

> "பல்லவர்களின் ஆதிக்கத்திற்கு முன்பும் பத்தாம் நூற்றாண்டிற்குப் பின்பும் அதாவது சோழர் காலத்தில் இந்நூல் படைக்கப்படவில்லை"[109]

என்று தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் குறிப்பிடுகின்றார்.

கி.பி.9ஆம் நூற்றாண்டில் பல்லவர்கள் காஞ்சிபுரத்தைக் கைப்பற்றிக் கொண்ட பின்புதான் சீவகசிந்தாமணி இயற்றியிருக்க வேண்டும் எனக் குறிப்புகள் தருகிறார் பி.தி. ஸ்ரீநிவாஸய்யங்கார்[110]. ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் பல்லவர் ஆட்சி முடிவுற்று, சோழர் ஆட்சித் தொடங்குவதாக வரலாறு சுட்டும்[111]. எனவே சீவகசிந்தாமணி பல்லவர்களின் ஆட்சி சிறப்புற்று விளங்கிய கி.பி.9ஆம் நூற்றாண்டின் மத்தியில் தோன்றியது எனல் பொருந்தும்.

சீவகசிந்தாமணியில் திருத்தக்கத்தேவர் கையாண்ட புது மரபுகளைப் பற்றிக் குறிப்பிடும்போது,

> "அவையோர் முன் தன்னடக்கப் பாடல் கூறும் முறையாகிய அவையடக்கம் நூன்முகத்தில் இடம்பெறுவது மற்றொரு புது மரபாகும்"[112]

என்பர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்.

மேலும் தமிழ்க் காப்பியங்களை ஆராய்ந்த அறிஞர்கள் பலரும் சீவகசிந்தாமணியே காப்பியங்களுள் அவையடக்கம் கூறும் முதல் நூல் எனக்

குறிப்பிட்டுள்ளனர்[113]. நச்சினார்க்கினியர் அவையடக்க இலக்கணத்திற்குச் சீவகசிந்தாமணிப் பாடலை மேற்கோள் காட்டியுள்ளதும் இவண் நினைவுகூரத் தக்கது.

எனவே, தமிழ் நூற்பரப்பில் கி.பி.9ஆம் நூற்றாண்டையொட்டி எழுதப்பட்ட சீவகசிந்தாமணி முதல், நூலில் அவையடக்கம் இடம்பெறச் செய்யும் வழக்கம் தொடங்கப் பெற்றது எனக் கொள்ளலாம்.

குண்டலகேசி என்ற காப்பியத்தின் பாடல் ஒன்று புறத்திரட்டின் அவையடக்கப் பகுதியில் இடம்பெற்றுள்ளது[114]. இந்நூலின் காலத்தைக் கி.பி.7ஆம் நூற்றாண்டு எனக் கருதி இதன் அவையடக்கமே தமிழின் முதல் அவையடக்கப் பாடல் எனக் கருதுவோரும் உளர்[115]. இதன் காலம் கி.பி.10ஆம் நூற்றாண்டு எனவும் சீவகசிந்தாமணிக்கு அடுத்துத் தோன்றியது எனவும் குறிப்பிடுவோர் எண்ணிக்கை மிகுதி. மேலும் இந்நூல் முழுமையாகக் கிடைக்கப் பெறவில்லை என்பதும் நோக்கத்தக்கது.

எனவே முழுமையாகக் கிடைக்கப்பெற்ற நூன்முகத்து அவையடக்கத்தை இடம்பெறச் செய்த முதல் நூல் சீவகசிந்தாமணி என்பது பொருந்தும்.

2.5.12. வடமொழித் தாக்கம்: தமிழில் தொல்காப்பியர் காலந்தொட்டு வடமொழிச் செல்வாக்கு உண்டு. சீவகசிந்தாமணி முதலான காப்பியங்களில் காளிதாசனின் செல்வாக்கினைக் காணமுடிகின்றது[116]. இதனால் திருத்தக்கத் தேவரின் அவையடக்கப் பாடல்களிலும் காளிதாசனின் தாக்கம் ஏற்பட்டிருக்கலாம் எனக் கருதுவோர் உளர். இதனைத் திருத்தக்கத் தேவரின் அவையடக்கத்தை விளக்க முற்படும்போது,

"தமிழ்க் காப்பியங்களில் உள்ள இந்தமுறை
ரகுவம்சத்தைப் பின்பற்றி அமைத்தார் போலும்"[117]

என இயம்புவதன் மூலம் அறியலாம்.

இக்கூற்றில் காளிதாசனின் அவையடக்க மரபினைத் தழுவினரா? அல்லது அவையடக்க அமைப்புமுறையான பாடுபொருள், உவமை, உத்தி ஆகியவற்றைத் தழுவினரா என்பதில் தெளிவில்லை. மரபினைத் தழுவினர் என்பதை மறுக்க இரண்டு காரணங்களைக் காட்டலாம். அவையாவன:

1. தொல்காப்பியர் அவையடக்க இலக்கணம் சுட்டியுள்ளதால், அவர் காலத்திற்கு முன்பே தமிழில் அவையடக்க மரபு வழக்கில் இருந்திருக்கிறது.

2. நாட்டுப்புறக் கதைப்பாடல்களில் அவையடக்கம் இடம் பெற்றுள்ளது. இவற்றின் தோற்றத்தை வரையறுத்துக் கூற இயலாததாக உள்ளதால் அவையடக்கத்தின் தொன்மை புலனாகிறது.

மேலும், 'வடமொழியில் கிடைக்கப்பெறும் தொன்மையான இலக்கண நூலான பாணினீயத்தில் அவையடக்கக் குறிப்பு இல்லை. கி.பி.4ஆம் நூற்றாண்டு காளிதாசனின் இரகுவம்சம் முதலே வடமொழியில் அவையடக்கப் பாடல்கள் காணக்கிடைக்கின்றன'[118] என்பனவும் நோக்கத்தக்கன.

தமிழில் நீண்ட காலமாக உரைநடை உண்டு. எனினும் மேலை இலக்கியத்தின் தாக்கத்தால்தான் அது நிறைவான வளர்ச்சியினைக் கண்டது. அதனால் தமிழில் உரைநடையே இல்லை என்று கூறுவதில்லை. அதுபோல, ஏற்கனவே தமிழில் இருந்த அவையடக்க மரபு வடமொழித் தொடர்பினால் மறுமலர்ச்சி அடைந்தது எனக் கருதலாம்.

2.6. தொகுப்புரை:

அவையடக்கம் கூறுதல் தமிழில் தொன்றுதொட்டு வழங்கிவரும் மரபாகும்.

தொல்காப்பியர் அவையடக்கத்திற்கு இலக்கணம் சுட்டியுள்ளார். எனினும் நூலுக்குரிய அவையடக்கம் கிடைக்கப்பெறவில்லை.

'அவையோர் முன் தம்மைத் தாழ்த்தியும் அவையோரை உயர்த்தியும் பாடுதல் அவையடக்கம்' என்ற விதி தொல்காப்பியரின் விளக்கம் மற்றும் உரையாசிரியர்களின் விளக்கம் வழிப் பெறப்பட்டது. உரையாசிரியர்கள் அவையை அடக்குதல் என்பதை அவையோரைக் கவர்தல் அல்லது ஈர்த்தல் என்ற பொருளில் உரைத்தனர் என்பதே பொருத்தமாகும்.

அவையடக்கம் என்பது வடமொழித் திரிபன்று.

தமிழகத்தில் அறிஞர்கள் கூடி ஆராய்ந்த அவை இருந்தது என்பதற்கும் அங்கு நூல் அரங்கேற்றம் நிகழ்ந்தது என்பதற்கும் இலக்கியவழிச் சான்றுகள் உண்டு. அப்போது நூலாசிரியனால் அவையடக்கம் பாடப்பெறும்.

சங்க கால நூல்களிலும் பக்தி இலக்கியங்களிலும் அவையடக்கம் இடம்பெறவில்லை.

கி.பி.9ஆம் நூற்றாண்டு நூலான சீவகசிந்தாமணி முதல் நூன்முகத்து அவையடக்கம் இடம்பெறச் செய்யும் முறையினைக் காணமுடிகின்றது.

குண்டலகேசி, பஞ்சமரபு, கம்பராமாயணம் ஆகியவை சீவகசிந்தாமணிக்குப் பின் தோன்றியவை எனக் கருதப்படுவதால் சீவகசிந்தாமணியின் அவையடக்கமே தமிழுக்குக் கிடைத்த முதல் அவையடக்கப் பாடல்களாகும். தமிழ் மரபான அவையடக்கம் வடமொழித் தொடர்பால் மறுமலர்ச்சி அடைந்தது.

சான்றெண் விளக்கங்கள்

1. தொல்., பொருள்., செய்., (இளம்.), நூ.107.
2. மேலது, நூ.109.
3. அமிர்தசாகரர், யாப்பருங்கலம் (பழைய விருத்தியுரையுடன்), மே.வீ. வேணுகோபாலப் பிள்ளை (பதி.), ப.170.
4. திருக்குருகைப் பெருமாள் கவிராயர், மாறனலங்காரம், வெண்பா 72.
5. வைத்தியநாத தேசிகர், இலக்கண விளக்கம், பொருள்., பாட்டியல், நூ.128.
6. மேற்கோள்: மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு, கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டு, (காந்தி வித்தியாலயம், திருச்சிற்றம்பலம், 1969, முதற்பதிப்பு), ப.369.
7. ஜெகவீரபாண்டியனார், வீரபாண்டியம், முதல்பாகம், பாடல் 23.
8. வ.உ. சிதம்பரம் பிள்ளை, மனம்போல் வாழ்வு, (இந்தியா பிரிண்டிங் வொர்க்ஸ், சென்னை, 1916, இரண்டாம் பதிப்பு), ப.16.
9. தொல்., பொருள்., செய்., (இளம்.), நூ.109.
10. மேலது, (கழக வெளியீடு, 1967, நான்காம் பதிப்பு), ப.478.
11. தொல்.,பொருள்., பேரா., (கழக வெளியீடு, 1972, மறுபதிப்பு), ப.291.
12. மேலது, ப.290.
13. தொல்., பொருள்., செய்., நச்., (கழக வெளியீடு, 1965, முதற் பதிப்பு), ப.136.
14. தொல்., பொருள்., பேரா., ப.292.
15. தொல்., பொருள்., செய்., நச்., ப.138.
16. பொய்கையார், இன்னிலை, அறத்துப்பால், பாடல் 5.
17. வைத்தியநாத தேசிகர், முன்னூல், நூ.128.
18. மேலது, தி.வே. கோபாலையர் (பதி.), ப.287.

19. நா. கதிரைவேற்பிள்ளை, தமிழ்ச் சொல்லகராதி, முதற்பாகம், (தமிழ்ச் சங்கம், மதுரை, 1910), பக்.297-298.

20. தமிழகராதி, தொகுதி 1, (சென்னைப் பல்கலைக் கழகம், 1924), ப.160.

21. ச. பவானந்தம் பிள்ளை, தற்காலத் தமிழ்ச் சொல்லகராதி, (மதராஸ் மாக்மில்லன் அண்டு கம்பெனி லிமிடெட், 1952, மறுபதிப்பு), ப.27.

22. பாலூர் கண்ணப்ப முதலியார், தமிழ் இலக்கிய அகராதி, (சென்னை செண்ட்ரல் புக் டிப்போ, 1957), ப.22.

23. அருணந்தி சிவாசாரியார், சிவஞான சித்தியார் பரபக்கம் சுபக்கம், சுபக்கப் பாயி. 4க்கு உரை.

24. புகழேந்தி நளவெண்பா, கோ. இராஜகோபாலப் பிள்ளை உரை, (கா.நா. கோவிந்தராஜ முதலியார் (பதி.), சென்னை, 1914), ப.7.

25. வ.வே. ஸுப்ரமண்ய ஐயர், கம்பராமாயணம் சுருக்கம் - பாலகாண்டம், (வ.வே.ஸு (பதி.), புதுவை, 1917), பக். 121-122.

26. வில்லிபுத்தூரார், மகாபாரதம் - ஆதிபருவம், வை.மு. கோபால கிருஷ்ணமாசாரியார் உரை, (வை.மு.கோ. பதிப்பு, சென்னை, 1963), ப.4.

27. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, சேக்கிழார் பிள்ளைத் தமிழ், பாலூர் கண்ணப்ப முதலியார் உரை, (திருப்போரூர், ஸ்ரீ கந்தப் பெருமான் தேவஸ்தான வெளியீடு, 1964), ப.11.

28. வீரமாமுனிவர், தேம்பாவணி, வி. மரிய அந்தோணி உரை, (பாளையங்கோட்டை வீரமாமுனிவர் ஆய்வுக் கழகம், 1982), ப.8.

29. கா. சுப்பிரமணிய பிள்ளை, பழந்தமிழர் நாகரிகம் அல்லது தொல்காப்பியப் பொருளதிகாரக் கருத்து, (தமிழ் நெறி விளக்கப் பதிப்பகம், சேலம், 1939), பக்.133-134.

30. மு. வரதராசன், இலக்கிய மரபு, (பாரி நிலையம், சென்னை, 1968, இரண்டாம் பதிப்பு), ப.188.

31. க. வெள்ளைவாரணன், தமிழ் இலக்கிய வரலாறு - தொல்காப்பியம், (அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1957), ப.234.

32. சி. இலக்குவனார், தொல்காப்பிய ஆராய்ச்சி, (வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை, 1971, இரண்டாம் பதிப்பு), ப.266.

33. நெல்லை ந. சொக்கலிங்கம், 'அலையடக்கம்', நான்காவது கருத்தரங்கு, இ.ப.த.ம., 1972, ப.69.

34. அ.அ. மணவாளன், 'காப்பிய மரபும் பாயிரப்பாங்கும்' திறனாய்வுக் கட்டுரைகள், ச.வே. சுப்பிரமணியன் (பதி.), (சென்னை, 1977, முதற்பதிப்பு), ப.128.

35. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, முன்நூல், ப.11.

36. மெய்கண்டார் சிவஞானபோதம், அவையடக்கம், (மெய்கண்ட சாத்திரம் என வழங்கும் சித்தாந்த சாத்திரம் பதினான்கு மூலமும் உரையும், சைவசித்தாந்த மகாசமாஜம், சென்னை, 1940, இரண்டாம் பதிப்பு), ப.7.

37. தொல்., பொருள்., புறத்., (இளம்.), நூ.17.

38. தொல்., சொல்., எச்., (இளம்.), நூ.46.

39. தொல்., பொருள்., செய்., (இளம்.), நூ.107, 109.

40. பொரு.,55, 108; மலை.39; கலி.3, 9, 19, 20, 126,144; குறு.146, 306, 349; அக.93, 331; புற.54, 83; நற்.60, 90, 169, 378; பதி.85:9.

41. மது.778.

42. புற.283.

43. கலி.79.

44. அக. 76.

45. மது.508.

46. கலி.94.

47. குறு. 276; அக. 256; புற. 37, 71, 157, 124, 239, 226; நற்.100; பரி.20:61.

48. மது.492.

49. இரா. சாரங்கபாணி (பதி.), சங்க இலக்கியப் பொருட் களஞ்சியம், தொகுதி-1, ப.102.

50. திருக்குறள், 711, 713, 719.

51. தொல்., பொருள்., செய்., இளம்., அடிகளாசிரியன் (பதி.), ப.191.

52. மேலது, ப.191.

53. ஞா. தேவநேயன், வடமொழி வரலாறு, (நேசமணி பதிப்பகம், காட்பாடி, விரிவு, 1967), ப.80.

54. T. Burrow, Collected Papers on Dravidian Linguistics, (Annamalai University, 1968, First Edition), pp.150-151.

55. தொல்., பொருள்., புறத்., (இளம்.), நூ.17.

56. தொல்., பொருள்., இளம்., (கழக வெளியீடு, 1967, நான்காம் பதிப்பு), ப.121.

57. தொல்., சொல்., எச்., (இளம்.), நூ.46.

58. மேலது, கிளவி., நூ.56.

59. சொ. முத்தையா, 'தமிழிலக்கியத்தில் 'அவை' - கி.பி.1200ஆம் நூற்றாண்டு வரை', பதினைந்தாவது கருத்தரங்கம், இ.ப.த.ம., 1983, ஆய்வுக்கோவை தொகுதி.1, பக்.614-615.

60. வ.சுப. மாணிக்கம், 'இலக்கிய முத்திறன்', பேராசிரியர் டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை வெள்ளிவிழா மலர், 1961, ப.352.

61. சொ. சிங்காரவேலன், 'தமிழில் பாயிரம்', தமிழ்ப்பொழில் துணர் 38, (கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை), ப.64.

62. மயிலை சீனி. வேங்கடசாமி, 'அவையடக்கச் செய்யுட்கள்' மன்னர் துரைசிங்கம் கலைக் கல்லூரி ஆண்டுமலர், 1972-73, ப.40.

63. வ.சுப. மாணிக்கம், முன்னூல், பக்.350-353.

64. மு. வரதராசன், தமிழ் இலக்கிய வரலாறு, (சாகித்ய அக்காதெமி, புதுடெல்லி, 1977, இரண்டாம் பதிப்பு), ப.5.

65. கலி. 32:8; 47:3.

66. புற.67:12-14; 198:26.

67. மு. வரதராசன், முன்னூல், ப.25.

68. க. கைலாசபதி, அடியும் முடியும், (பாரி நிலையம், சென்னை, 1970), ப.66.

69. திருக்குறள். 121, 122, 123, 125, 126, 127, 130.

70. மேலது, 711, 712, 713, 715, 716, 717, 718, 719, 720.

71. மேலது, 721, 722, 724, 728, 728, 730.

72. திருக்குறள். 419.

73. மேலது, 716.

74. மு. வரதராசன், முன்நூல், ப.25.

75. விளம்பி நாகனார், நான்மணிக்கடிகை, பாடல் 1.

76. மு. வரதராசன், முன்நூல், ப.84.

77. எஸ். வையாபுரிப் பிள்ளை (பதி.), புறத்திரட்டு, அறத்துப்பால், பாடல் 10. நூலில் இதனை அடிப்படையாகக் கொண்டு தகடூர் யாத்திரை என்ற அப்பாடல் அவையடக்கம் என்றே பதிப்பிக்கப்பட்டுள்ளது. இரா. இளங்குமரன் (உ.ஆ.), தகடூர் யாத்திரை, (கழகவெளியீடு, 1976), ப.1.

78. புறத்திரட்டு, (திருவாரூர்த் தமிழ்ச்சங்கம், 1918), அதிகாரம் 2, பாடல்.1. எஸ். வையாபுரிப்பிள்ளை பதிப்பில் (ப.3) இப்பாடல் பழமொழி 12 என அடிக்குறிப்பில் தரப் பெற்றுள்ளது.

79. பெருங்கதை, சிந்தாமணி, சூளாமணி, இராமாயணம், பாரதம் போன்றவை தழுவல் நூல்கள் என்றே சுட்டப்பெறுகின்றன. அ. விசுவநாதன், தமிழ்ச் சிந்தனைகள், (மங்கைப் பதிப்பகம், காரைக்குடி, 1989; முதற்பதிப்பு), பக்.2-3.

80. மு. வரதராசன், முன்நூல், ப.99.

81. ந.சி. கந்தையா பிள்ளை, தமிழ்ப் புலவர் அகராதி, (ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1952), பக்.224-226.

82. திருமூலர், திருமந்திரம், (திருப்பனந்தாள் மடவெளியீடு), பாயி.95,96.

83. மேலது, பாயி.101.

84. சேக்கிழார், திருத்தொண்டர் புராணம், திருமூலநாயனார் புராணம், பாடல் 27.

85. இரா. மாணிக்கவாசகம், திருமந்திர ஆராய்ச்சி, (அன்னை அபிராமி. அருள், சென்னை, 1982), ப.120.

86. திருமூலர், திருமந்திரம், மா.வே. விசுவநாதபிள்ளை (பதி.), 1912, வி.விரமணசாஸ்திரி முகவுரை.

87. இரா. மாணிக்க வாசகம், முன்நூல், ப.124.

88. மாணிக்கவாசகர் திருவாசகம், பாடல் 226.

89. க.ப. அறவாணன், கவிதையின் உயிர் உள்ளம் உடல், (பாரி நிலையம், சென்னை, 1976), பக்.154-155.

90. மு.வை. அரவிந்தன், உரையாசிரியர்கள், (மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1963), ப.75.

91. அறிவனார், பஞ்சமரபு, வே.ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் (பதி.), (சக்தி அறநிலையம், கோவை, 1975, இரண்டாம் பதிப்பு), முன்னுரை, பக். i-ii

92. மேலது, பாயி.2.

93. மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு, ஒன்பதாம் நூற்றாண்டு முதல் பாகம், (காந்தி வித்தியாலயம், திருச்சிற்றம்பலம், 1975), பக்.334-335.

94. மேலது, பக்.335-337.

95. அறிவனார், முன்நூல், ப.128.

96. கா. அப்பாத்துரை, தென்னாட்டுப் போர்க்களங்கள், (அலமேலு நிலையம், சென்னை, 1971, மூன்றாம் பதிப்பு), ப.193.

97. ச.வே. சுப்பிரமணியன், கம்பன் இலக்கிய உத்திகள், (மெய்யம்மை பதிப்பகம், காரைக்குடி, 1982), கம்பன் அடிப்பொடி சா. கணேசன் அணிந்துரை, ப. iii.

98. அ.சா.ஞானசம்பந்தன், கம்பன் - புதிய பார்வை, (கம்பன் கழகம், சென்னை, 1984, முதற்பதிப்பு), ப.20.

இந்நூலில் அவையடக்கத்தைத் தமிழுக்குக் கொண்டு வந்தவன் கம்பன் (பக். 20-21) என்றும், சீவகசிந்தாமணியில் காணப்படும் அவையடக்க மரபு எப்போதிருந்து தமிழில் பின்பற்றப்பட்டு வருகின்றது என்பதை அறிய முடியவில்லை (பக். 88-91) என்றும் முரண்பட்ட கருத்துகள் காணப்படுகின்றன.

99. மு. அருணாசலம், முன்நூல், பக். 150-151

100. தி.வை. சதாசிவ பண்டாரத்தார், பிற்காலச் சோழர் சரித்திரம் (பகுதி- II), (அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1957, இரண்டாம் பதிப்பு), பக்.101-102.

101. வி.கோ. சூரிய நாராயண சாஸ்திரி, தமிழ் மொழியின் வரலாறு, (தமிழ்ச் சங்கம் பிரஸ், மதுரை, 1922), ப.88.

102. ந.சி. கந்தையா பிள்ளை, முன்நூல், பக்.98-99.

103. கா. சுப்பிரமணிய பிள்ளை, தமிழ் இலக்கிய வரலாறு (இரண்டாம் பாகம்), (ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1973, ஏழாம் பதிப்பு), பக்.340-341.

104. மா. இராசமாணிக்கனார், தமிழ் இலக்கண இலக்கிய கால ஆராய்ச்சி, (ஔவை நூலகம், சென்னை, 1957), பக்.153, 158.

105. திருத்தக்கத் தேவர், சீவகசிந்தாமணி, கடவுள் வாழ்த்து, பாடல் 4, 5.

106. கா. சுப்பிரமணிய பிள்ளை, முன்நூல், ப.318-319.
ந.சி. கந்தையாபிள்ளை, முன்நூல், ப.22.
தமிழண்ணல் (இராம. பெரியகருப்பன்), புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு (சோலை நூலகம், மதுரை, 1980), ப.205.
மது.ச. விமலானந்தம், தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம், தொகுதி-1, (ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, 1987, முதற்பதிப்பு), ப.238.

107. திருத்தக்கத் தேவர், சீவகசிந்தாமணி (முதற்பாகம்), (கழக வெளியீடு, 1967, மறுபதிப்பு), பொ.வே. சோமசுந்தரனார் அணிந்துரை, பக்.15-16.

108. மேலது, ப.16.

109. T.P. Meenakshi Sundaran, A History of Tamil Literature, (Annamalai University, 1965), p.91.

110. பி.தி. ஸ்ரீநிவாஸய்யங்கார், பல்லவர் சரித்திரம் (தென்னிந்திய வரலாற்றின் இடைப்பகுதி), முதற்பாகம், (தி அரோரா பிரஸ், மெட்ராஸ், 1930, நான்காம் பதிப்பு), பக்.48-49.

111. 1) மேலது, பக்.78-79.

2) மு. வரதராசன், முன்நூல், ப.20.

112. T.P. Meenakshi Sundaran, Op.Cit., p.96.

113. [redacted]
நெல்லை ந. சொக்கலிங்கம், முன்நூல், பக்.69-71.
ச.வே. சுப்பிரமணியன், காப்பியப் புனைதிறன் (தமிழ்ப் பதிப்பகம், சென்னை, 1979), ப.56.
இ.கி. இராமசாமி, தமிழில் [illegible]ங்கள், (மதுரை காமராசர் பல்கலைக் கழகம், 1988), ப.97.

114. 1) எஸ். வையாபுரிப் பிள்ளை (பதி.), புறத்திரட்டு, அறத்துப்பால், பாடல் 13.

2) இரா. இளங்குமரன் (பதி.), புறத்திரட்டு, பாடல் 13.

115. எஸ். சௌந்தரபாண்டியன், தமிழில் அவையடக்கப் பாடல்கள், (ஸ்டார் பிரசுரம், சென்னை, 1988), ப.9.

116. தே. சொக்கலிங்கம், 'தமிழ்க் காப்பியங்களில் வடமொழிச் செல்வாக்கு' ஆய்வுக் கட்டுரைகள் (தட்டச்சு), (தமிழ்த் துறை, அழகப்பா கலைக் கல்லூரி, காரைக்குடி, 1979-80, ப.13.

117. தே. சொக்கலிங்கம், முன்னூல், ப.13.

118. சமசுகிருதப் பேராசிரியர் முனைவர் கோ. சுந்தரமூர்த்தி அவர்களுடன் வடமொழி அவையடக்கப் பாடல்கள் குறித்துக் கலந்துரையாடியபோது பெற்ற கருத்து (5.7.90). இது தொடர்பாக 'அவையடக்கப் பாடல்கள்: தமிழிலும் பிறமொழிகளிலும்' என்ற ஏழாம் இயலில் ஆராயப்பட்டுள்ளது.

இயல் மூன்று

காலந்தோறும் அவையடக்கப் பாடல்கள்

உள்ளடக்கம்

3. காலந்தோறும் அவையடக்கப் பாடல்கள்

அவையடக்கப் பாடல்களின் பொருளில் காலந்தோறும் ஏற்பட்டு வந்துள்ள உள்ளார்ந்த வளர்ச்சி நிலைகளைக் காணுதல் இவ்வியலின் நோக்கம் ஆகும். பண்டைய மரபினை அடியொற்றியே அவையடக்கப் பாடல்களில் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன என்பதை அவற்றின் போக்கில் காணமுடிந்தது. அவையடக்கப் பாடல்களின் வளர்ச்சியை நூற்றாண்டுகளில் வைத்துப் பார்க்கும் முறை இவண் பின்பற்றப்பட்டுள்ளது. இம்முறையே அவற்றின் வளர்ச்சிப் படிநிலைகளை உணர்த்தப் பயன்படும்.

3.1. நூல்களின் காலம்:

'தமிழ் நாவலர் சரிதை' தோன்றிய காலமான கி.பி.18ஆம் நூற்றாண்டு முதல் இன்றுவரை பல இலக்கிய வரலாற்று நூல்கள் எழுதப் பெற்றன. அவை பல்நோக்கில் ஆராய்ந்து எழுதப்பெற்றவை. எனினும் நூல்கள் தோன்றிய காலங்கள் சுட்டுவதில் அதிக முரண்பாடுகள் காணப்படுகின்றன. எனவே பொதுவான கருத்துகள் ஈண்டு எடுத்தாளப்படுகின்றன. மேலும்,

> "காலப்பகுதி என்னும்போது அதன் தொடக்கமும் முடிவும் மிக வரையறைப்பட்ட வரம்புடையன என நினைப்பதில்லை. மேலோங்கியதோர் உணர்வு, சுவை, வகைமை, படைப்பாக்கம் பற்றிய பெயரேயன்றிக் கோடிட்டு எல்லைவகுப்பன அல்ல அவை. நூற்றாண்டுகள் என்னும் போதும் அவ்வாறுதான் கொள்ள வேண்டும்.

ஒரு நூற்றாண்டின் வளர்ச்சி, முடிவு அடுத்ததிலும் தொடரலாம். பின்னதின் தொடக்கம் முன்னதிலும் இருக்கலாம்"[1]

என்ற கருத்தும் நினைவிற் கொள்ளத்தக்கது.

3.2. அவையடக்கப் பாடல்கள்:

3.2.1. கிறித்துவுக்கு முற்பட்ட காலம் முதல் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு வரை: தொல்காப்பியர் தமக்கு முற்பட்ட கால மரபைத் தழுவியே தொல்காப்பியத்தை எழுதினர் என்பதைப் பல்வேறு இடங்களில் தெளிவாகச் சுட்டியுள்ளார். ஆதலால் அதில் அவையடக்க இலக்கணம் சுட்டியிருப்பதும் அக்கால வழக்கில் உள்ள மரபைத் தழுவியே எனத் துணியலாம்.

ஆனால், தொல்காப்பியர் நூலுக்குப் பாடிய அவையடக்கம் காணக் கிடைக்கவில்லை. தொடர்ந்து சங்கத்தொகை நூல்கள், திருக்குறள் உள்ளிட்ட பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், இரட்டைக் காப்பியங்கள், பக்தி இலக்கிய நூல்கள் ஆகியவற்றிலும் அவையடக்கம் இடம்பெறவில்லை. கி.பி. 9ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சீவகசிந்தாமணி முதல், அவையடக்கப் பாடல்கள் நூல்களில் காணக்கிடைக்கின்றன[2]. சமண முனிவர் திருத்தக்க தேவர் எழுதிய இந்நூலில் இரு பாடல்கள் அவையடக்கமாக இடம்பெற்றன.

"கற்பா லுமிழ்ந்த மணியுங்கழு வாது விட்டால்
நற்பால் அழியுந் நகைவெண்மதி போனி றைந்த
சொற்பா லுமிழ்ந்த மறுவும்மதி யாற்க ழுவிப்
பொற்பா விழைத்துக் கொளற்பாலர் புலமை மிக்கார்.'
'முந்நீர்ப் பிறந்த பவழத்தொடு சங்கு முத்தும்
அந்நீருவர்க்கு மெனின்யாரவை நீக்கு கிற்பார்

இந்நீர வென்சொற் பழுதாயினுங் கொள்ப வன்றே
பொய்ந்நீர வல்லாப் பொருளால்வின் புகுது மென்பார்"[3]

இப்பாடல்கள் அவையோர்ழுக் நூலாசிரியன் அடக்கமாகக் கூறிக்கொண்ட மொழிகளாக அமைந்துள்ளன. 'மதி யாற்க முடிவிப் பொற்பா விழைத்துக் கொளற்பாலர் புலமை மிக்கார்' என்றதால் அவையோர் கடமை மற்றும் உயர்வும், 'என்சொற் பழுது' என்பதால் நூலாசிரியனின் அடக்கப் பண்பும் உணர்த்தப்பட்டன. 'கல்வின் பகுதிஈன்ற மணியைக் கழுவாது விட்டால் அதன் நன்மை கெடும்', 'உவர்ப்பான கடலில் பிறந்தன என்பதற்காகப் பவழம், சங்கு, முத்து ஆகியவற்றை வெறுப்பார் இல்லை' ஆகிய இரு உவமைகள் அவையடக்கத்தை உணர்த்தப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுடன் 'மெய்ப் பொருளால் வீடுபுகுதும் என என்றுவோர் நான் கூறும் பாடற்பொருளைக் கருதி ஏற்பர்' என்பதால் பாடுபொருள் சிறப்பும் உணர்த்தப்பட்டுள்ளதைக் காணலாம்.

அவையோர் உயர்வும் நூலாசிரியன் தாழ்வும் சுட்டுதல் அவையடக்கப் பாடல்களின் அடிப்படைப் பண்பாக விளங்குவதை இந்நூற் பாடல்கள் காட்டுகின்றன. அவையடக்கத்தை உவமையாற் புலப்படுத்தும் நெறி மேற் கொள்ளப்பட்டுள்ளது. ஒன்பதாம் நூற்றாண்டில் காணப்பெறும் இப்போக்கு ஏறத்தாழ இன்றுவரை எல்லா நூற்றாண்டிலும் (நூல்களிலும்) நின்று நிலவி வருகின்றது.

3.2.2. பத்து, பதினொன்றாம் நூற்றாண்டுகள்: இந்நூற்றாண்டுகள் சோழ மன்னர்கள் பேரரசை நிறுவி அரசோச்சிய பொற்காலங்களாகும். இக்காலங்களில் ஐம்பெருங் காப்பியங்களில் சிலவும் ஐஞ்சிறு காப்பியங்களும் இலக்கண நூல்களும் தோன்றின. இவற்றில் பெரும்பாலானவை அவையடக்கம் பேசுவன.

3.2.1. சூளாமணி: ஐஞ்சிறுகாப்பியங்களுள் ஒன்றான இந்நூல் தோலாமொழித் தேவரால் இயற்றப்பெற்றது. இந்நூல் சீவகசிந்தாமணியின் சமகாலத்தது என்பர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்[4]. எனினும் சீவகசிந்தாமணிக்கு அடுத்துத் தோன்றியது என்பதில் முரண் இல்லை. இந்நூலில்,

"கொற்றங்கோ னேமி நெடுமால்குணங் கூற லிப்பால்
உற்றிங்கோர் காதல் கிளரத்தமிழ் நூற்க லுற்றேன்
மற்றிங்கோர் குற்றம் வருமாயினு நங்கள் போல்வார்
அற்றங்கள் காப்பா ரறிவிற்பெரி யார்க ளன்றே"[5]

என்ற பாடல் அவையடக்கமாக உள்ளது.

இப்பாடலில் 'கொற்றங்கோ னேமி நெடுமால் குணங் கூற' என்றதால் பாடுபொருளும், 'இங்கோர் காதல் கிளரத்தமிழ் நூற்கலுற்றேன்' என்பதால் காரணமும் நூல் வந்த வழியும் அவையடக்கத்தின் பொதுப் பண்புடன் விளக்கம் பெற்றன. நூலாசிரியரே தம் நூலுக்குப் பாயிரம் எழுதும் புதுமையைச் செய்தவர் இந்நூலாசிரியர் என்பது இங்கு நினைத்தற்குரியது.

3.2.2.2. குண்டலகேசி: ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான இந்நூலின் ஆசிரியர் பெயரைத் தெளிவாக அறியமுடியவில்லை. நூல் முழுமையும் கிடைக்கப்பெறாத நிலையில், புறத்திரட்டின் அவையடக்கப் பகுதியில் இந்நூற் பாடலொன்று எடுத்தாளப் பட்டுள்ளது.

"நோய்க்குற்ற மாந்தர் மருந்தின்சுவை நோக்கில்லார்
தீக்குற்ற காத லுடையார்புகைத் தீமை யோரார்
போய்க்குற்ற மூன்று மறுத்தான்புகழ் கூற வேற்கென்
வாய்க்குற்ற சொல்லின் வழுவும்வழு வல்ல வன்றே"[6]

என்பது அப்பாடலாகும். இதில் இரண்டு உவமைகளால் அவையடக்கப் பண்பு

வெளிப்படுத்தப்பட்டுள்ளது. உவமைகளைப் பயன்படுத்துவதால் அவையடக்கப் பண்பு மிகுத்துக்காட்டும் என நூலாசிரியன் கருதியிருக்க வேண்டும். எனவே அவையடக்கத்தை உவமையால் புலப்படுத்தும் பொதுநெறி இந்நூற்றாண்டிலும் பின்பற்றப்பெற்றுள்ளதைக் காணமுடிகின்றது. இவற்றுடன் பாடுபொருள் சிறப்பும் உணர்த்தப்படுகின்றது.

பௌத்த நூலான இதன் காலத்தைக் கி.பி.7ஆம் நூற்றாண்டு என்றும் கி.பி.10ஆம் நூற்றாண்டையொட்டிய காலப்பகுதி என்றும் பலவாறாகச் சுட்டுவர்[7].

<u>3.2.2.3. நீலகேசி:</u> இது குண்டலகேசிக்கு எதிராக எழுந்த சமண நூல். இதன் ஆசிரியர் பெயர் அறியப்பெறவில்லை. இதில் ஐந்து பாடல்கள் அவையடக்கமாக வந்துள்ளன. இது பாடல் எண்ணிக்கை நிலையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியினைக் காட்டுகின்றது.

நூலாசிரியர் கதைப் பொருளைக் கனவில் கண்டுரைத்ததாகக் காரணம் சுட்டியுள்ளார்[8]. இதனையடுத்துவரும் பாடலில்,

> "கண்டோர் மனதை உண்ணும் கண்ணையுடைய, மிகையான செயல்கள் செய்யாநின்ற பேயாகிய நீலகேசி என்பவள் பெரியோனாகிய துறவியின் அறவுரை கேட்டு, உலகமாந்தர் தீவினையை மாற்றி அறம் வளர்த்த மாண்புடையவள்"[9]

என்ற பொருளில் கதைத் தலைவியின் வரலாற்றைச் சுருக்கமாகத் தந்துள்ளார்.

'நாவல்புலவ ரவைநாப் பண்ணி நாட்ட லுற்றேன், பாவின்ன வென்று பழிப்பாரிணி யில்லை யன்றே'[10] என்பதன்மூலம் இந்நூல் அரங்கேற்றம் பெற்ற செய்தி குறிப்பால் உணர்த்தப்பட்டது. அடுத்த இரு பாடல்களும் அவையடக்கத்தை உவமைவழி வெளிப்படுத்தியுள்ளன[11].

இந்நூலைத் தொடர்ந்து யசோதர காவியம், நாககுமார காவியம், உதயணகுமார காவியம் போன்ற சிறுகாப்பியங்கள் தோன்றியிருக்க வேண்டும். இவற்றின் அவையடக்கப் பாடல்கள் அமைப்பாலும் நடையாலும் பொருளாலும் ஒத்துள்ளன. 'பாடுபொருட் சிறப்பால் தம் நூல் கொள்ளத்தக்கது' என்ற பொருளில் உவமைவழி அவையடக்கப் பண்பை வெளிப்படுத்தும் பொதுநிலையைக் குண்டலகேசி[12], யசோதர காவியம்[13], நாககுமார காவியம்[14], உதயணகுமார காவியம்[15] ஆகியவற்றிலும் காணமுடிகின்றது. 'புகை உண்டென்பதால் விளக்கினை வெறுப்பாரில்லை' என்ற குண்டலகேசியின் உவமையை யசோதர காவியம், நாககுமார காவியம் ஆகியன எடுத்தாண்டுள்ளன. ஆதலால் இந்நூல்கள் ஒரிரு நூற்றாண்டுகளில் அடுத்தடுத்துத் தோன்றியிருக்க வாய்ப்புண்டு.

3.2.2.4. யாப்பருங்கலக்காரிகை: அமிர்தசாகரர் கி.பி.10ஆம் நூற்றாண்டில் யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை ஆகிய இரு இலக்கண நூல்களை எழுதினர்[16]. இவற்றுள் யாப்பருங்கலத்தில் அவையடக்கம் இல்லை. ஆனால் யாப்பருங்கலக்காரிகையில் அவையடக்கமாக இரண்டு பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இலக்கண நூற்பரப்பில் இந்நூல் முதலே அவையடக்கப் பாடல்கள் காணக்கிடைக்கின்றன. இந்நூலின் நூன்முகத்தில்,

"தேனார் கமழ்தொங்கல் மீனவன் கேட்பத்தென் னீரருவி
கானார் மலயத் தருந்தவன் சொன்னகன் னித்தமிழ்நூல்
யானா நடாத்துகின் றேனென் றெனக்கே நகைதருமால்
ஆனா அறிவின் அவர்கட்கென் னாங்கொலென் னாதரவே.

சுருக்கமில் கேள்வித் துகள்தீர் புலவர்முன் யான்மொழிந்த
பருப்பொருள் தானும் விழுப்பொரு ளாம்பனி மாலிமயப்
பொருப்பகஞ் சேர்ந்தபொல் லாக்கருங் காக்கையும் பொன்னிறமாய்
இருக்குமென் றிவ்வா றிசைக்கு மன்றோஇவ் விருநிலமே"[17]

எனப் பாடல்கள் அமைந்துள்ளன.

அவையடக்கத்தின் பொதுப்பண்புடன் 'மீனவன் கேட்ப' என நூற் காரணமும், 'காரார் மலயத் தருந்தவன் சொன்னகன் னித்தமிழ்நூல்' என்பதன் மூலம் நூல் வந்த வழியும் சுட்டப்பெற்றன. இதில் அகத்தியர் பொதியமலையில் தங்கியிருந்து இலக்கணம் செய்தார் என்ற குறிப்பும் தரப் பட்டுள்ளது. இதனால் முன்னோரைப் போற்றும் பண்பும் புலனாகும். 'பனியால் சூழப்பெற்ற இமயத்தைச் சென்றடையும் கருங்காகம் பொன்னிறம் அடைவதுபோல், உயர்ந்த புலவோர்முன் உரைக்கப்படும் என் நூலும் சிறக்கும்' என்பதால் சேரும் இடத்தைப் பொறுத்துப் பொருளின் தன்மையும் மாறும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது.

ஒரே ஆசிரியர் எழுதிய ஒரு நூலில் அவையடக்கம் இடம்பெறுவதும் மற்றொன்றில் அவையடக்கம் இடம்பெறாததும் இம்மரபு கட்டாயமாக்கப்படவில்லை என்பதைக் காட்டும்.

<u>3.2.2.5. வீரசோழியம்:</u> யாப்பருங்கலக்காரிகையை அடியொற்றி இந்நூலின் அவையடக்கம் அமைந்துள்ளது. இந்நூலைப் புத்தமித்திரனார் தமது மன்னன் வீரசோழன் (கி.பி.1063-1070) பெயரால் செய்தார் என்பர்[18]. இந்நூலில்,

"ஆயுங் குணத்தவ லோகிதன் பக்கலகத் தியன்கேட்
டேயும் புவனிக் கியம்பிய தண்டமி ழீங்குரைக்க
நீயும் முளையோ வெனிற்கரு டன்சென்ற நீள்விசும்பில்
ஈயும் பறக்கு மிதற்கென்கொலோ சொல்லு மேந்திழையே!"[19]

என்ற பாடல் அவையடக்கமாகும். அவையோர் முன்னிலையில் 'ஏந்திழையே!' என்ற பெண்ணை விளித்துப் பாடுவது நோக்கத்தக்கது. உவமைவழி அவையடக்கம் கூறி, முன்னூலாசிரியரும் சுட்டப்பட்டுள்ளதைக் காணலாம். அவையோரைக்

கருடனுக்கும் தன்னை ஈக்கும் ஒப்பிட்டுப் பாடியதைப் பிற்காலத்தோர் போற்றிப் பின்பற்றியுள்ளனர்.

இந்நூற்றாண்டின் இறுதியில் எழுதப்பெற்ற 'பஞ்சமரபு'[20] என்ற இசைநூலில் அவையடக்கப் பண்புடன் பாடுபொருட் சிறப்பும் உணர்த்தப் பட்டுள்ளது.

இந்நூற்றாண்டுகளையொட்டிய காலப்பகுதிகளில் உவமையால் அவையடக்கத்தை உணர்த்தும் பொதுநெறி காணப்படுகின்றது. அத்துடன் பாடுபொருள் சிறப்பு, காரணம், நூல்வந்த வழி, முதல் நூலாசிரியர் ஆகியவற்றுள் சிலவும் காட்டப்பட்டன.

3.2.3. கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு: முந்தைய நூற்றாண்டுகளைப் போலவே இந்நூற்றாண்டிலும் சோழப் பேரரசு சிறப்புடன் விளங்கியது. தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு இந்நூற்றாண்டு மன்னர்கள் பெரிதும் உதவியுள்ளனர். கம்பராமாயணம், பெரியபுராணம் போன்ற பெருங்காப்பியங்களும், தண்டியலங்காரம், நேமிநாதம் போன்ற இலக்கண நூல்களும் தோன்றின. சிற்றிலக்கியங்களுள் சிலவும் தோற்றம் கண்டன. இவற்றில் பெரும்பான்மை நூல்கள் அவையடக்கம் பேசுவனவாக உள்ளன.

3.2.3.1. கம்பராமாயணம்: கம்பர் இராமாயணத்தை இந்நூற்றாண்டில்தான் எழுதினர் என்போர் கருத்து வலுவுடையதாக உள்ளது[21]. கம்பர் ஆறு பாடல்களை அவையடக்கமாகத் தந்துள்ளார். இது அக்கால வழக்கில் நூலுக்கு அவையடக்கம் இன்றியமையாதது என்பதைப் புலப்படுத்தும்.

"ஓசை பெற்றுயர் பாற்கடல் உற்றொரு
பூசை முற்றவும் நக்குபு புக்கென

ஆசை பற்றி யறையலுற் றேன்மற்றிக்
காசில் கொற்றத் திராமன் கதையரோ"[22]

எனவரும் முதற்பாடலில் 'ஆசை பற்றி யறையலுற்றேன்' என்ற காரணமும், 'காசில் கொற்றத் திராமன் கதை' என்ற பாடுபொருளும் சுட்டப்பெற்றன. தாம் நூல் செய்யப் புகுந்தது பாற்கடலை நக்கிக் குடிக்க முயன்ற பூனையைப் போலாகும்' என்ற உவமையால் அவையடக்கம் வெளிப்படுத்தப் பட்டது.

அடுத்த பாடலில் 'இராமன் மராமரம் ஏழையும் தொளைத்த'[23]க் கதைக் குறிப்பு ஒன்று காட்டப்பெற்றுள்ளது. மூன்றாவது பாடல் நூல்வந்த வழியாக வால்மீகியின் சிறப்பைச் சுட்டும்[24]. இதில் 'தெய்வமாக்கவி' என்று கம்பர் குறிப்பிடுவது வால்மீகியேயாவர். இறுதி மூன்று பாடல்களும் உவமையால் அவையடக்கத்தைப் புலப்படுத்துகின்றன[25].

காண்டந்தோறும் கடவுள் வாழ்த்துக் கூறும் புதுமை செய்த கம்பர், நூலிடைவைத்த அவையடக்கம் கூறும் புதுநெறியையும் தந்துள்ளார். பாலகாண்டத்தின் நாட்டுப் படலத்தின் தொடக்கத்தில் ஒரு பாடலை அவையடக்கப் பொருண்மையாக அமைத்துள்ளார்[26]. வை.மு. கோபாலகிருஷ்ணமாசாரியர் உரையில் 'எறிகட லுலகந் தன்னு ளின்றமிழ்ப் புலவர்க் கெல்லாம்..."[27] எனத் தொடங்கும் பாடலும் அவையடக்கப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கம்பர் பண்டைய அவையடக்க மரபைப் பின்பற்றியே அவையடக்கம் பாடியுள்ளார் என்பதை அவரது பாடல்கள் காட்டுகின்றன.

3.2.3.2. பெரியபுராணம்: சைவப் பெரியார்களின் வரலாறு கூறும் இந்நூல் சேக்கிழாரால் எழுதப்பெற்றது. சீவகசிந்தாமணி,

கம்பராமாயணம் ஆகியவற்றின் அவையடக்கத்தை ஒட்டியே இந்நூலிலும் அவையடக்கப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. பாடுபொருள், காரணம் ஆகியவற்றை அவையடக்கப் பொதுநெறியுடன் விளக்குவதை இந்நூலில் இடம்பெறும் பாடல்களின்வழி அறியலாம்[29]. உவமையில் கம்பர் பூனையுடன் தம்மை ஒப்பிட்டதை, இவர் நாயுடன் ஒப்பிட்டுக் காட்டியுள்ளார்[30]. 'பாடப்படும் பொருளின் சிறப்பால் அந்நூலை ஏற்றுக்கொள்வர்'[31] என்ற நிலையினை இந்நூலிலும் காணமுடிகின்றது. எனவே இதனைக் காப்பிய அவையடக்கத்தின் சிறப்புத் தன்மையாகக் கொள்ளலாம்.

சேக்கிழார் கி.பி.12ஆம் நூற்றாண்டினர் எனக் கல்வெட்டுகள் வழி நிறுவுகின்றனர்[31].

3.2.3.3. கந்தபுராணம்: இந்நூல் தோன்றிய காலம் பல நூற்றாண்டுகளில் குறிக்கப்பட்டுள்ளது. எனினும் 12ஆம் நூற்றாண்டெனல் பொருந்தும் என்பர்[32]. இதனைக் கச்சியப்ப சிவாச்சாரியர் எழுதினர்.

தமிழ் நூற்பரப்பில் 20 பாடல்களை அவையடக்கமாகத் தந்த நூல் இது ஒன்றே. நூல் வந்த வழி, யாப்பு, காரணம், களம், கேட்டோர், நூற்பெயர், அரங்கேற்றம், கதைக்குறிப்பு ஆகியன இவற்றில் பேசப் பெற்றுள்ளன[33]. 'போற்று கந்த புராணம் தென்பதே'[34] என்று நூற்பெயர் சுட்டப்பெற்றது. 'செந்தமிழுக்கு வரம்பெனச் செப்பிய, முந்துகாஞ்சியின் முற்றுணர் மேலவர், கந்தவெந்தை கதையினை நூன்முறை, தந்திடென்னத் தமியன் இயம்புகேன்'[35] என்று களம், காரணம், கேட்டோர் விளக்கம் தரப்பெற்றன.

"முன்பு சூதன் மொழிவட நூற்கதை
பின்பி யான்றமிழ்ப் பெற்றியிற் செப்புகே
னென்ப பன்னெறி யின்றமிழ்த் தேசிகர்
நன்பு லத்தனை காட்டு நயப்பரோ'[36]

என்ற பாடல்மூலம் நூல் வந்தவழி, யாப்பு, பயன் ஆகியவையும் குறிக்கப் பெற்றன.

அவையடக்கப் பொதுநெறியுடன் பாயிரத்தில் இடம்பெறவேண்டிய உறுப்புகளும் சுட்டப்பெறுவதால் பிற்காலத்தார் அவையடக்கத்தையும் தற்சிறப்புப் பாயிரத்துள் அடக்கிப் பதிப்பித்தனர் போலும்.

'இறைவனின் குறைபாடுடைய தன்மைகளைக் காட்டி, இத்தன்மைபோன் தம் புன்கவிகளையும் ஏற்பான்' என்ற நிலையில் அவையடக்கம் கூறுதல் இக்கால நூல்களில் காணமுடிகின்றது. இதனை,

"சிந்து மென்பு சிரம்பிறை தாங்கினோன்
மைந்த னாதலின் மற்றவன் றானுமென்
சந்த மில்லுரை புந்தரிப் பான்..."[37]

என வரும் பாடலால் அறியலாம். இப்போக்கு புராண நூல்களின் அவையடக்கத்துள் பெரிதும் காணப்படுகின்றது.

மேலும், தம் நூலில் குறை காணுபவர்களைக் குறைகூறும் போக்கும் காணப்படுகின்றது. இதனை,

"வெற்றெ னத்தொடுத் தீர்த்து வெளிற்றுரை
முற்று மாக மொழிந்தவென் பாடலிற்
குற்ற நாடினர் கூறுப தொல்லைநூல்
கற்று ணர்ந்த கலைஞரல் லோர்களே"[38]

என்ற பாடல் காட்டும். இதனால் நூலாசிரியன் அவையோரைக் குறை கூறினான் எனப் பொருள் கொள்ளக் கூடாது. அவையோர் கற்றுணர்ந்த கலைஞர்கள் என்பது நினைத்தற்குரியது. 'கலைஞரல்லோர்களே தம் நூலில் குற்றம் ஆராய்பவர்' என்பது அவையோர் உயர்வினை நூலாசிரியர் குறிப்பால் உணர்த்திப் பயன்படுத்தும் எதிர்மறை உத்தியாகக் கொள்ளல் தகும்.

3.2.3.4. நம்பி திருவிளையாடற் புராணம்: பெரும்பற்றப் புலியூர் நம்பி கி.பி.12ஆம் நூற்றாண்டில் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் எழுதினர் எனக் கருதப்படுகின்றது[39]. இந்நூலில் நான்கு பாடல்கள் அவையடக்கமாகக் குறிக்கப்பெற்றுள்ளன. இதில் குறிப்பிடத் தக்க மாற்றம் எதுவும் இல்லை. இதில் நூலாசிரியர் குறிப்பு, நூல்வந்த வழி, நூற்பெயர் ஆகியன அறிவிக்கப்பட்டு, உவமையால் அவையடக்கம் கூறும் உத்தி மேற்கொள்ளப் பட்டுள்ளது[40]. சேக்கிழாரைப் போன்றே இவரும் 'காய் பசிக்குக் கடலைக் குடிக்குமோர், நாயை யொக்குந் தமியே னவிழ்தல்'[41] என்று நூலுரைக்கப் புகுந்ததைக் கூறுகின்றார்.

3.2.3.5. அம்பிகாபதிக் கோவை: ஏனைய இலக்கியங்களைப் போலவே சிற்றிலக்கியங்களும் தமிழில் காலந்தோறும் கிளைத்து வந்திருக்கின்றன. எனினும் இவ்வகை மேலோங்கிய காலம் கி.பி.12ஆம் நூற்றாண்டு முதல் தொடங்குகின்றது என்பர்[42].

இந்நூற்றாண்டிற்கு முன்னர்த் தோன்றியனவாகக் கருதப்பெறும் பாண்டிக் கோவை (கி.பி.7ஆம் நூற்றாண்டு) திருக்கோவையார் (கி.பி. 9ஆம் நூற்றாண்டு) உள்ளிட்ட பல சிற்றிலக்கிய வகைகளைச் சேர்ந்த நூல்களில் அவையடக்கம் இடம்பெறவில்லை.

"அருளம்பி காபதி பொன்னடித் தாமரை சூட்டியகப்
பொருளம்பி காபதி கம்புனைந் தேனிப் புனைந்தசெஞ்சொல்
தெருளம் புலவர்முன் செப்பிய போதன தப்புரையார்
மருளுங் குழலி மழலைக்கென் னோபொருள் மற்றங்கென்றே"[43]

என்ற அவையடக்கப் பொருண்மையுடைய பாடல் அம்பிகாபதிக் கோவை என்ற நூலில் காணப்பெறுவது. இந்த ஒரு பாடலை மட்டுமே இந்நூல் நூன்முகமாகக் கொண்டுள்ளது. கடவுள் வாழ்த்தையும், உவமையால் அவையடக்கம் கூறும் பொதுநெறியையும் ஒரே பாடலில் கூறும் புதுமையை இப்பாடல்வழி உணர முடிகின்றது. அருளம்பிகாபதி என்று சிவனையும், பொருளம்பிகாபதிகம் என்று நூலினையும் ஆசிரியர் சுட்டியுள்ளார். இதன் வளர்ச்சியாகப் பிற்காலச் சிற்றிலக்கிய நூல்களில் அவையடக்கம் வளம் கண்டுள்ளதைக் காணமுடிகின்றது.

இந்நூலின் ஆசிரியர் அம்பிகாபதி என அழைக்கப்படுவதுண்டு. இவர் கம்பரின் மகன் என்றும் தமிழில் அலங்கார நூல் செய்த தண்டியின் தந்தை என்றும் கம்பராமாயணத்திற்கு, 'சம்பநாள்' என்ற பாயிரம் தந்தவர் என்றும் பலவாறாகக் கூறப்படுவதுண்டு[44]. ஆதலால் இது கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் தோன்றிய நூலாகக் கொள்ளப்படும்.

3.2.3.6. நேமிநாதமும் வச்சணந்தி மாலையும்: இவ்விரு நூல்களையும் குணவீரபண்டிதர் கி.பி. 12ஆம் நூற்றாண்டின் இறுதியில் இயற்றி அரங்கேற்றினர்[45]. இவை முறையே சின்னூல், வெண்பாப் பாட்டியல் என அழைக்கப்பெறுவதுமுண்டு.

"கடல்நீர் வானத்தை அடைந்து மழையாகிக் குடிநீராவதுபோல் என்
புன்சொல்லும் நல்லோரைச் சென்று சேருவதால் நன்சொல்லாகும்"[46]

என்ற பொருளில் நேமிநாதத்தின் அவையடக்கம் அமைந்துள்ளது. அவையடக்கத்தின் பொதுநெறி மட்டும் இதில் காணப்படுகின்றது.

வச்சணந்திமாலை, நூலைப் பாடிமுடித்த பின்னர் அவையடக்கம் கூறும் முறையைத் தொடங்கியுள்ளது.

"எங்களங்கம் யாவையும் நீக்கி யினிதருளி
நன்களந்தை நூலோடு நாட்டுவராய் - தென்களந்தை
மன்பெயரான் வன்புகழான் வச்சணந்தி மாமுனிவன்
தன்பெயரால் நாட்டுந் தமிழ்"[47]

என்ற பாடல் நூல் இறுதியில் இடம்பெற்றுள்ளது. அவையடக்கப் பண்புடன் வச்சணந்தி என்ற முனிவன் பெயரால் நூல் செய்யப்பெற்ற செய்தியும் கூறப் பட்டுள்ளது. குணவீரபண்டிதரின் மற்றொரு பெயரே வச்சணந்தி என்ற பரவலாகப் பேசப்படும் கருத்தை மறுக்கும் வகையில் இப்பாடல் அமைந்துள்ளது.

இந்நூற்றாண்டினர் எனக் கருதப்பெறும் ஒட்டக்கூத்தர் செய்த நூல்களிலும், தண்டி செய்த அலங்காரம் என்ற நூலிலும் அவையடக்கம் இல்லை.

அவையடக்கப் பொதுநெறியுடன் பாயிர உறுப்புகள் சிலவற்றைக் காட்டும் போக்கு இந்நூற்றாண்டிலும் உண்டு. கம்பர் நூலிடையிலும், வச்சணந்தி ஆசிரியர் நூல் இறுதியிலும் அவையடக்கம் தந்துள்ளனர். இவை அவையடக்கத்தின் வளர்ச்சியைக் காட்டும். கடவுள் வாழ்த்தையும் அவையடக்கத்தை யும் ஒரே பாடலில் கூறும் போக்கு இந்நூற்றாண்டுச் சிற்றிலக்கிய நூலில் காணப்பெறுவது. இறைவனின் குறைத்தன்மைய உவமையாக்கும் போக்கும், நூலைக் குறை கூறுபவர்களைக் குறை கூறும் போக்கும் தொடங்கப்பெற்றுள்ளன. புலவர்களின் திறனுக்கேற்பப் பல்வேறு உவமைகள் கையாளப்பெற்றுள்ளன. 'பாடுபொருள் சிறப்புக் கருதி நூலை ஏற்க வேண்டுதல் நிலை' காப்பிய நூல் அவையடக்கத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

3.2.4. பதின்மூன்றாம் நூற்றாண்டு: சோழர்களின் ஆட்சி இந் நூற்றாண்டிலும் நீடித்தது. சமய இலக்கியங்கள் எழுச்சி பெற்றன. உரையாசிரியர்கள் சிலர் பண்டைய நூல்களுக்கு விளக்கம் தந்தனர். சிறு காப்பியங்கள் சிலவும் தோன்றலாயின. இவற்றின் அவையடக்கப் பொருளில் மாற்றங்கள் நிகழ்ந்தன.

3.2.4.1. நளவெண்பா: கி.பி.13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புகழேந்தி இந்நூலினை இயற்றினார்(48 அ). இதில் ஒரு பாடல் அவையடக்கமாக உள்ளது. 'போர் யானையைத் தாமரைத் தண்டால் கட்டிவைக்க என்னுவதைப் போன்றது நான் நளன் தன் தெய்வத் திருக்கதையைப் பாடுவது' என்ற பொருளில் அப்பாடல் அமைந்துள்ளது. உவமையில் அவையடக்கத்தைப் புலப்படுத்தும் பொதுநெறியும், பாடுபொருள் சிறப்பும் உணர்த்தப்பட்டன(48 ஆ).

3.2.4.2. சிவஞானபோதம்: அவையடக்கப் பாடல்களின் போக்கில் பெரும் திருப்பத்தை மெய்கண்டாரின் இந்நூல் உண்டாக்கியுள்ளது. சைவசித்தாந்த நூல்களில் முதலாவதாக அவையடக்கம் இடம்பெறுவது இந் நூலிலேயாகும். பன்னிரண்டே சூத்திரங்களைக் கொண்ட இந்நூலின் நூன்முகத்து,

"தம்மை உணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்
எம்மை உடைமை எமையிகழார் - தம்மை
உணரார் உணரார் உடங்கியைந்து தம்மிற்
புணராமை கேளாம் புறன்"[49]

என்ற பாடல் அவையடக்கமாக இடம்பெற்றுள்ளது.

கந்தபுராண ஆசிரியர் தம் நூலில் குற்றம் காணுவோரைக் குறை கூறினார். இந்நூலாசிரியர் தம்மையும் தம் சமயத்தையும் உணராதாரை

இழிவானவர்கள் எனக் கருதி அவர்களைப் பொருட்படுத்தல் கூடாது என வலியுறுத்துகின்றார். தம் சமயநூல் உணர்ந்தாரது உயர்வும் ஏனைய சமய நூல் உணர்ந்தாரது இழிவும் அவையடக்கத்தின் வழியாக உணர்த்துவது புதுப்போக்குடையதாக உள்ளது. இந்நூல் எச்சமயத்தைச் சார்ந்ததோ அச்சமய அறிஞர்கள் கூடிய அவையிலேயே அரங்கேற்றம் நிகழ்ந்திருக்கும். ஆதலால் அவையோர் உயர்வும் கூறப்பட்டதாகக் கொள்ள வேண்டும். இதனால் பண்டைய அவையடக்க மரபை அடியொற்றியே இம்மாற்றம் நிகழ்ந்துள்ளது என்பதை உணரமுடிகின்றது.

இந்நூலினை எழுதிய மெய்கண்டார் கி.பி. 13ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தவர்[50]. வெறும் அவையடக்கம், உவமையோடு அவையடக்கம், பாயிர உறுப்புகள் சிலவற்றுடன் அவையடக்கம் என்று வளர்ந்து வந்ததில் தத்துவக் கருத்துக்களோடு அவையடக்கத்தை வெளிப்படுத்தும் நிலைக்குக் கொண்டு சென்றவர் மெய்கண்டாராவர்.

3.2.4.3. சிவஞான சித்தியார்: மெய்கண்டாரின் மாணவரான அருணந்தி சிவாச்சாரியர் சிவஞான சித்தியார் பரபக்கம் சுபக்கம் என்ற நூலினை எழுதினார். இதில் பரபக்கம்[51] என்ற முதல் பகுதியில் இரண்டு பாடல்களும், சுபக்கம்[52] என்ற பின்பகுதியில் ஒரு பாடலும் அவையடக்கமாக வந்துள்ளன. இவற்றில் சிவன் சிறப்பு, மரபு வழிப்பட்ட உவமைகள் ஆகியவற்றுடன் அவையடக்கப் பண்பும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இது பண்டைய மரபை அடியொற்றியதாக உள்ளது. சிவஞானபோதத்தைப் பின்பற்றி எழுதப்பெற்ற சிவஞான சித்தியாரில் அவையடக்கம் சிவஞானபோதத்தைப் பின்பற்றி அமையவில்லை எனினும் சிவன் சிறப்புச் சுட்டியிருப்பதால் சமய உயர்வு தந்ததாகக் கொள்ளப்படும்.

3.2.4.4. ஞானாமிர்தம்: வாகீச முனிவரால் எழுதப்பெற்ற இந்நூல் நீண்ட பாடலை அவையடக்கமாகக் கொண்டது. இப்பாடல் கி.பி. 14ஆம் நூற்றாண்டின் இறுதி அல்லது 15ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தொகுக்கப்பட்ட பெருந்திரட்டில்[53] இடம்பெறுவதால் இந்நூல் கி.பி.13ஆம் நூற்றாண்டில் தோன்றியதாக இருக்க வேண்டும்.

பாடல் பண்டைய அவையடக்க மரபை அடியொற்றிச் சென்றாலும் சிவஞானபோதம் போல் தத்துவக் கருத்துக்களை வலியுறுத்துவதாக அமைந்துள்ளது.

3.2.4.5. அடியார்க்கு நல்லார் உரை: உரைநூல்களும் தனிநூல்களாகக் கருதிப் போற்றப்படுகின்றன. இதனை,

> "உமாபதி சிவாச்சாரியார் என்பவர் உயர்ந்த தமிழ் நூல்களின் பட்டியலைத் தரும்போது திருக்குறள் ஒன்றாகவும் பரிமேலழகர் உரை மற்றொன்றாகவும் சிறப்பித்துக் கூறியுள்ளார்"[54]

என்பதன் மூலம் அறியலாம். ஆதலால் உரை நூல்களும் அவையடக்கம் கூறுதலை மரபாகக் கொண்டுள்ளன. இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், பரிமேலழகர் போன்றோரின் உரைநூல்களில் அவையடக்கம் இடம்பெறவில்லை.

அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரையில்,

> "எழுத்தின் றிறனறிந்தோ ரின்சொற் பொருளின்
> அழுத்தந் தனிலொன் றறிந்தோ - முழுத்தும்
> பழுதற்ற முத்தமிழின் பாடற் குரையின்
> றெழுதத் துணிவதே யான்"[55]

என்று பேசுவது அவையடக்கப் பொருண்மையுடையதாக உள்ளது. மூலநூலின்

சிறப்பும் உணர்த்தப்பட்டது. அடியார்க்கு நல்லாரின் இப்போக்கு பிற்கால உரைநூல்களின் அவையடக்கத்திற்கு வித்தாக அமைந்தது. அவர் கி.பி. 13ஆம் நூற்றாண்டினர் என்ப[56].

அவையடக்கத்தில் தத்துவக் கருத்துகளைப் புகுத்தும் புதுநெறியினை இந்நூற்றாண்டின் சிறப்புக் கூறாகக் கூறலாம். உரைநூல்களுக்கும் அவையடக்கம் இன்றியமையாதது என்பதை நூல்கள்வழி அறியமுடிகின்றது.

3.2.5. பதினான்காம் நூற்றாண்டு: முகமதியப் படையெடுப்பால் சோழப் பேரரசு குன்றத் தொடங்கிய காலம். இந்நூற்றாண்டில் வில்லிபுத்தூரார், உமாபதிசிவம் போன்றோர் புகழுடன் விளங்கினர். இக்காலத்தில் எழுதப்பெற்ற சமய நூல்களும் தத்துவ நூல்களும் பெரும்பாலும் புராணங்களாகவே இருந்தன. இலக்கணம் தொடர்பான நூல்கள் சிலவும் தோன்றின. இவற்றின் அவையடக்கப் பாடல்கள் முன்னோர் மரபை அடியொற்றியே அமைந்துள்ளன.

3.2.5.1. வில்லிபாரதம்: கி.பி.14ஆம் நூற்றாண்டில் வில்லிபுத்தூரார் பாரதத்தை எழுதினர்[57]. இதில் இடம்பெறும் அவையடக்கப் பாடல்கள் மூன்றும் அவையடக்கப் பொது நெறியுடன் காணப்படுகின்றன. நூல்வந்த வழி, பாடுபொருள் ஆகியன விளக்கம் பெற்றன[58]. நூன்முகத்து இடம்பெறும் நூற்காரணத்தில் 'ஆசைபற்றிக் கூறியதாதலால் என் குற்றம் பொறுக்கத்தக்கது'[59] என்ற அவையடக்கமும் தோன்றுவதாக வை.மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார் குறிப்பிடுகின்றார்.

3.2.5.2. உமாபதி சிவத்தின் நூல்கள்: சைவசித்தாந்த நூல்கள் பதினான்கில் எட்டினை எழுதியவர். அவற்றுள் சிவப்பிரகாசம், சங்கற்ப நிராகரணம் ஆகிய இரு நூல்களில் மட்டுமே அவையடக்கம் இடம்பெற்றுள்ளது.

"தொன்மையவாம் எனும் எவையும் நன்றாகா இன்று
தோன்றியநூல் எனும்எவையும் தீதாகா துணிந்த
நன்மையினார் நலம்கொள்மணி பொதியும் அதன்க ளங்கம்
நவையாகா தெனஉண்மை நயந்திடுவர் நடுவாம்
தன்மையினார் பழமைஅழ காராய்ந்து தரிப்பர்
தவறுநலம் பொருளின்கண் சார்வாராய்ந் தறிதல்
இன்மையினார் பலர்புகழின் ஏத்துவார்ஏ திலார்உற்
றிகழ்ந்தனரேல் இகழ்ந்திடுவர் தமக்கென ஒன்றிலரே"[60]

என்பது சிவப்பிரகாசத்தின் அவையடக்கம். சிவஞானபோதம், சிவஞானசித்தி ஆகிய நூல்களைத் தழுவிச் சார்பு நூலாகச் சைவசித்தாந்த உண்மைகளை விளக்கும் இந்நூலின் அவையடக்கம் தத்துவக் கருத்துக்களை வலியுறுத்துவதாக அமைந்துள்ளது.

'எப்பொருண்மையையும் பழமை என்பதால் ஏற்பதோ, புதுமை என்பதால் ஒதுக்குவதோ அறிவுடைமையாகாது' என்பதும் 'நூல் மதிப்பிடுவோரை மூவகையினராகப் பகுத்து அவர்தம் அறிவின் தரத்தை எடுத்துரைப்பதும்' அவையடக்கப் பாடல்களின் பொருளில் மாறுபட்டதாகக் காணப்படுகின்றது. 'குற்றம் பொறுக்க வேண்டுதல்' என்ற நிலையிலிருந்து 'குற்றம் காணுவோர் எத்தன்மையினர்' என்று நூலாசிரியனே விளக்கும் நிலைக்கு அவையடக்கம் கொண்டு செல்லப்பட்டிருக்கின்றது.

இவரே சங்கற்ப நிராகரணத்தில், 'நற்கவி மாந்தர் நகநவிற் றுவனே'[61] என்று சற்றுவேகம் துணிந்தவராகக் காணப்படுவதும் நோக்கத்தக்கது. மேலும், 'கோயிற்புராணம்' என்ற இவரது மற்றொரு நூலில் வேறுவகையில் அவையடக்கம் பேசப்பட்டுள்ளது.

"சொல்லோடும் பொருளோடுந் துணிவுடையோர் சொற்றனரென்
றெல்லோருங் கொளவெட்டு மிரண்டுமறி யாதோமும்
வல்லார்போ லொருபனுவல் மதித்தோமா னவைபொறுக்க
நல்லோரை யிரந்தோமே னகையாமென் றுரையாமால்"[62]

'ஒன்றுமறியாத நான் எழுதிய நூலில் உள்ள குற்றத்தைப் பொறுக்குமாறு நல்லோரை வேண்டினால் அது அவர்க்குச் சிரிப்பினை உண்டாக்கும் என்பதால் வேண்டிக்கொண்டோமில்லை' என்று எதிர்மறைப் பொருளில் அவையடக்கம் கூறியிருப்பது புதுவகை உத்தியாகப் படுகின்றது. தமிழில் தோன்றியுள்ள மிகவும் முற்பட்ட தலபுராணங்களுள் இதுவும் ஒன்றாகும்.

இந்நூற்றாண்டில் வாழ்ந்த வாமன முனிவர் எழுதிய மேருமந்திர புராணம் அவையடக்கப் பொதுப் பண்புடன் பாடுபொருள் உணர்த்தும் பாடலைக் கொண்டு உள்ளது[63]. சமணர் செய்த காவியங்களுள் தமிழில் புராணங்கள் என்ற பெயரால் நிலவுபவற்றுள் இதுவே முதலாவதாகும்.

<u>3.2.5.3. நவநீதப்பாட்டியல்:</u> நவநீதநாடன் என்பவர் இந்நூலினை யாத்தனர். இது 44 சிறுபிரபந்தங்கள் பற்றிக் குறிப்பிடும் கலித்துறைப் பாட்டியல் நூலாகும். இதன் காலம் கி.பி.14ஆம் நூற்றாண்டு எனக் கூறப்படுகின்றது[64].

"சகத்தினின் முத்தமிழ் தம்மையுண் டாக்கியச் சங்கத்தினி
லகத்திய மாமுனி யாக்கிய பாட்டிய லானவெளவ
நிகழ்த்துகை மின்மினி யாதித்த னுக்குநிக ரொக்குமென்
றுகப்பது போலுமென் றோவுல வோர்முன் னுரைப்பதுவே"[65]

என்ற பாடலை அவையடக்கமாக இந்நூல் கொண்டுள்ளது. முன் நூலாசிரியர் குறிப்பிடப்பட்டு உவமைவழி அவையடக்கம் புலப்படுத்தப்பட்டது. இலக்கண

நூல்களில் முதல் நூலாசிரியராக அகத்தியர் சுட்டப்பெறுவது பொது நோக்காக உள்ளதைக் காணமுடிகின்றது.

சென்ற நூற்றாண்டைப்போலவே இந்நூற்றாண்டிலும் உவமையால் அவையடக்கம் புலப்படுத்துவதுடன் தத்துவக் கருத்துக்களும் உணர்த்தப்பட்டன. குறைகாணும் இயல்புடையோரின் தன்மைகள் வெளிப்படையாக உரைக்கப்பட்டன. அவையடக்கத்தை எதிர்மறை நிலையில் புலப்படுத்தும் உத்தி கையாளப்பட்டுள்ளது. இலக்கண நூல்கள் முதல் நூலாசிரியராக அகத்தியரைச் சுட்டுவதைப் பொது நோக்காகக் கொண்டுள்ளன.

3.2.6. பதினைந்தாம் நூற்றாண்டு: பதினான்காம் நூற்றாண்டின் இறுதியிலும் பதினைந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்த சொரூபானந்த தேசிகரும் அவரது மாணவர் தத்துவராயரும் அத்வைத வேதாந்தப் பாடல்களைத் திரட்டியெழுதிவைத்தனர். அவற்றுள் சொரூபானந்தர் திரட்டியதைப் 'பெருந்திரட்டு' என்றும் தத்துவராயர் திரட்டியதைக் 'குறுந்திரட்டு' என்றும் அழைக்கின்றனர்[66].

பெருந்திரட்டில் 'பாயிரப்பனுவல்' என்ற பகுதியில் ஞானாமிர்தம், அவிரோதபோதம், சொரூபானந்த சித்தி, குருகைமான்மியம் ஆகியவற்றின் பாடல்கள் 'அறிஞரைப் புகழ்ந்தவையடக்கம்[67] எனக் குறிக்கப்பட்டுள்ளன. இது அக்கால வழக்கில் தொகுப்பு நூல்களுக்கும் அவையடக்கம் இன்றியமையாததாகக் கருதப்பட்டதை உணர்த்தும்.

இந்நூற்றாண்டில் தத்துவராயர் எழுதிய 'அமிர்தசாரம்' என்ற நூலில் அவையடக்கம் உவமைவழி உணர்த்தப்பட்டுள்ளது. பாடுபொருள், புராணச் செய்திகள் ஆகியனவும் இடம்பெற்றுள்ளன[68].

3.2.6.1. கயாதரம்: தமிழ் நிகண்டு நூல் வரிசையில் குறிப்பிடத்தக்க நூல். இதனைக் கயாதரன் எழுதினர். இந்நூல் மாறனலங்கார உரையில் (16ஆம் நூற்றாண்டு) குறிக்கப் பெறுவதால் அதற்கு முந்தைய நூற்றாண்டில் தோன்றியதாகக் கருதுவர்.[69]

இந்நூலில் கம்பரின் அவையடக்கத்தைப் பின்பற்றி அமைக்கப்பட்ட பாடல் ஒன்று காணப்படுகின்றது. அப்பாடல் மேல்வருவது:

"பேதையர் பித்த ரறியாத பாலர்சொற் பேதங்கொள்ளார்
ஓதியங் குற்றந் தெரியார் பெரியவ ரோங்கிட
கேதவன் பற்று மறவாத தேவைக் கெயாதரன்றொல்
வேதியன் சொற்ற வுரிச்சொற் பனுவலு மேம்படுமே"[70]

இதில் ஆசிரியர் தம் சொற்களைப் பேதையர், பித்தர், பாலர் ஆகியோரின் பேச்சிற்கு ஒப்புமைக்காட்டி, 'கயாதரன்' என்ற தம் பெயரையும் வெளிப் படுத்தியுள்ளார். 'உரிச்சொற் பனுவல்' என்பதால் பாடுபொருளும் உணர்த்தப் பட்டது. அவர் கால வழக்கில் நிகண்டு நூல்கள் 'உரிச்சொல் பனுவல்' என அழைக்கப்பட்டிருப்பதை இப்பாடல் காட்டுகின்றது.

3.2.6.2. தேரையர் நூல்கள்: இவரது பெயரில் பல நூல்கள் வழங்கி வருகின்றன. தமிழ்நாட்டுச் சித்தர்களுள் ஒருவரான இவர் சாத்திரம் மற்றும் மருத்துவ நூல்கள் பலவும் இயற்றியதாகக் கூறுகின்றனர். இவை அனைத்தும் இவரே செய்தார் என்பதில் தெளிவில்லை. இவரது பெயர் வெளிப்படும் வகையில் சில அவையடக்கப் பாடல்கள் கிட்டியுள்ளன. அப் பாடல்கள் இடம்பெறும் நூல்களை இவர் எழுதினார் எனத் துணியலாம்.

"அவையடக்கம் புன்மை யந்த மகந்தை
அவையடக்கம் பாம்போ யறஜ்செ-யவையடக்க

கத்திகையா மென்னுங் கவிபோல் தேரன்வெண்பாக்
கத்திகையா மோனையும் கம்"[71]

என்ற பாடல் 'தேரையர் வைத்திய நூல்கள்' என்பதில் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகின்றது. 'தேரையர் மகாகரிசல்' என்ற நூலில்,

"செயுமுறை தெரிகிலாத் தேரன்நா யடியேன்
உயுமுறை வயித்திய வுரைத்தமிழ்க் கரிசல்"[72]

என்ற பாடல் இடம்பெற்றுள்ளது. அவற்றில் 'தேரன்' என்று ஆசிரியர் தம்மைக் குறிப்பிட்டுள்ளதைக் காணலாம்.

பிறநூல் அவையடக்கத்திற் போக்கிற்கும் இந்நூல்களின் போக்கிற்கும் வேறுபாடு உண்டு. வைத்திய நூல்களில் தவறு உண்டு எனக் கூறுதல் தகாது எனக் கருதி ஆசிரியர் தம்மை மட்டும் தாழ்த்திக் கொள்ளும் முறையினைக் காணமுடிகின்றது.

<u>3.2.6.3. கஞ்சனம்மானை:</u> இந்நூலின் ஆசிரியர் பெயர் அறியப் பெறவில்லை. 'இந்நூல் பன்னிரண்டாம் நூற்றாண்டிற்கு இரண்டொரு நூற்றாண்டுகளுக்குப் பின்னர்த் தோன்றிய கவிஞர் ஒருவரால் இயற்றப்பட்டிருக்க வேண்டும்' எனப் பதிப்பாசிரியர் கருதுகின்றார்[73]. இதில்,

"பாற்கடலில் துயிலும் திருமாலுக்கு ஒரு குடுவை நீர்ப்பாலைக்
காணிக்கையாகத் தருவதைப் போன்றுள்ளது நான் நூல்
எழுதப் புகுந்தது"[74]

என்ற பொருளில் அவையடக்கம் அமைந்துள்ளது. அவையடக்கப் பொது நெறியைக் கொண்டு பாடப்பட்ட இப்பாடல் பிற்கால அம்மானை இலக்கிய நூல்களுக்கு முன்னோடியாகத் திகழ்கின்றது.

தொகுப்பு நூல்கள், நிகண்டு நூல்கள், வைத்திய நூல்கள் ஆகியவற்றிற்கும் அவையடக்கம் இன்றியமையாததாக அமைவதை இந்நூற்றாண்டு நூல்கள் காட்டுகின்றன. குறிப்பிடத்தக்க மாற்றம் எதுவும் இல்லை என்னும் மருத்துவம் போன்ற நூல்களுக்கு நூலில் குறையிருப்பதாகக் காட்டாமல் அவையடக்கம் பாடப்பெற வேண்டும் என்ற நிலையை அறிந்துகொள்ளப் பாடல்கள் உதவின.

3.2.7. பதினாறாம் நூற்றாண்டு: இந்நூற்றாண்டில் சிற்றிலக்கியங்கள் பல்கிப் பெருகத் தொடங்கின. 16, 17, 18ஆம் நூற்றாண்டுகளைச் 'சிற்றிலக்கியக் காலம்' என்று குறிப்பிடுவர்[75]. இலக்கணம், புராணம் போன்ற பிற வகை நூல்களும் அதிகமாக இயற்றப்பட்டன. அவையோர் முன்னிலையில் இறைவனை முன்னிலைப்படுத்திப் பாடும் போக்கு இக்கால நூல்களின் அவையடக்கத்தில் காணப்படுகின்றது.

3.2.7.1. இலக்கண நூல்கள்: இந்நூற்றாண்டில் பரஞ்சோதி[76] எழுதிய சிதம்பரப் பாட்டியல், திருக்குருகைப் பெருமாள் கவிராயர்[77] எழுதிய மாறனலங்காரம், மாறன் பாப்பாவினம் போன்ற இலக்கண நூல்கள் தோன்றின.

"பாடு முறைமைக்குப் பன்னுதமிழ் தெளிந்து
 சூடும் புலவர்க்குச் சொற்பொரு - ளாடுதற்கும்
 என்னிலராய் நின்றாரு மின்னூல் விளைவிளரேற்
 கன்னிலான் காட்சியது காண்"[78]

என்ற பாடல் சிதம்பரப் பாட்டியலின் அவையடக்கமாகும். அவையடக்கப் பொதுநெறியுடன் அரங்கேற்றம் பெற்றச் செய்தியும் குறிப்பால் உணர்த்தப்பட்டது.

மாறனலங்காரம்[79] அவையடக்கத்துள் நூல் உரைக்கும் முறைமையையும், மாறன் பாப்பாவினம்[80] முதல் நூலாசிரியர், செயப்படுபொருள் ஆகியவற்றையும் சுட்டியுள்ளன.

3.2.7.2. புராண நூல்கள்: பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் என்ற நூலினை இந்நூற்றாண்டில் எழுதியதாகக் கூறப்படுகின்றது[81]. இதில் நான்கு பாடல்கள் அவையடக்கமாக வந்துள்ளன. அவற்றுள்,

"..... துளக்கமில் சான்றோர்
அவைக்க ளம்புகுந் தினியவா யாலவா யுடையார்
செவிக்க ளம்புகுந் தேறுவ சிறியனேன் பனுவல்"[82]

என்ற பாடலில் 'தம் நூல் அவையோரால் இனியதாக்கப்பெற்று இறைவன் செவியைச் சென்றடையும்' என்று கூறுவது இறைவனுக்காக நூல் எழுதியதைக் காட்டுகின்றது.

நிரம்ப அழகிய தேசிகர் சேதுபுராணத்தில்[83] பன்னிரண்டு பாடல்களையும், திருப்பரங்கிரிப் புராணத்தில்[84] மூன்று பாடல்களையும், அவையடக்கமாகத் தந்துள்ளார்.

"முருகுலாவு பூங்குழ லுமைமுலை முகடுழக்கிச்
செருகவே குழிசெய்திடு மேனியி லெறிந்த
வெருவு கல்லினை மலர்கள்போன் மிலைந்தவன்குமரன்
மருவு செந்தமிழ்க் கட்டியென்றமிழ் செவிமடுக்கும்"[85]

என்ற அவரின் அவையடக்கத்தில் இறைவனின் இருவேறு தன்மையை உவமையாக்கியுள்ளதைக் காணமுடிகின்றது. இது கந்தபுராண ஆசிரியர் குறைத்தன்மையை மட்டும் உவமையாக்கியதிலிருந்து வளர்ந்த நிலையாக உள்ளது. மேலும்

திருவிளையாடற் புராணத்தில் மேற்காட்டிய பாடலின்கண்ணும் வளர்ந்த அவையோர் முன்னிலையில் இறைவன் முதன்மைப் படுத்திய பெற்றியும் புலனாகிறது. இதில் சாக்கிய நாயனார் கல்லெறிந்த புராணச் செய்தி குறிப்பிடப்பட்டுள்ளதைப் போன்று கண்ணப்பர், நந்தனார் போன்றோரின் கதைகளை அவையடக்கத்தில் உவமையாக்கிக் காட்டும் புராணங்கள் தமிழில் மிகுதியாக உள்ளன.

அரிச்சந்திரபுராணம் இந்நூற்றாண்டில் எழுந்த மற்றொரு புராணமாகும்[86]. இதனை ஆசுகவீரன் என்பவர் இயற்றினர். இதில் ஒரே பாடலில் ஐந்து உவமைகளைப் பயன்படுத்தி அவையடக்கம் கூறும் போக்கினைக் காணமுடிகின்றது. இதனை,

> " பாலோடு சேர்ந்த நீர், நெல்லோடு சேர்ந்த பதர்,
> பூவோடு சேர்ந்த நார், வேரோடு சேர்ந்த நரை,
> செஞ்சொல்லோடு சேர்ந்த புன்சொல் ஆகியவற்றை ஏற்றுக்
> கொள்வது இயல்பே. ஆனால் எனது புன்சொல்லை மட்டும்
> தனியாக யார் ஏற்றுக் கொள்வர் என்பதறியாமல்
> நாவசைக்கின்றேனே!"[87]

என்ற பொருளில் அமைந்துள்ள பாடலால் அறியமுடிகின்றது. இந்நூலின் மற்றொரு பாடலில் இதுபோல் நான்கு உவமைகள் வழி அவையடக்கம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அவையடக்கப் பண்பை மிகுத்துக்காட்ட உவமைகள் பயன்படுத்தப்பெற்றன என்பது புலனாம்.

<u>3.2.7.3. மன்னர்கள் எழுதிய நூல்கள்:</u> அதிவீரராம பாண்டியன் (1564-1604) என்ற மன்னன்,

> "அரசர்க்குத் தங்குடிகண்மாட்டு என்றும் வழிபாடு பெறப்படாமையானும்,
> மூவகைப் படுத்திய தொல்காப்பியனாரே தம் நூற்கு அவையடக்கங்

கூறாமையாலும் யாம் புவியரசனா வதன்றிக் கவிரா சனாகவு
மிருத்தலாலும் நஞ்சமுகங்கண்டுழி யவையடக்கங்கூறலு
மாகலானுமெமக் கஃதொன் றானும் வேண்டப்படாது என்பதாம்"[88]

என்று கூறியதாக ஒரு செய்தி வழங்குகின்றது. இச்செய்திக்கு அரணாக நைடதம், கூர்மபுராணம் ஆகிய இவரது நூல்களில் அவையடக்கம் இடம் பெறாமலிருப்பதைக் காணலாம்.

ஆனால் இவரது உறவினர் எனக் கருதப்படும் வரதுங்கராம பாண்டியன் எழுதிய பிரமோத்ரகாண்டம் மூன்று பாடல்களை அவையடக்கமாகக் கொண்டுள்ளது. இதில் பாடுபொருள் சிறப்பால் தம் நூல் ஏற்கத்தக்கது என உரைக்கப்பட்டு, நூல் வந்தவழியும் சுட்டப்பட்டுள்ளது[89]. இதனால் மேற்கண்ட செய்தியில் மெய்மையில்லை எனினும் அவையடக்கம் தொடர்பான சர்ச்சை ஒன்று உருவாகியுள்ளது என்பதை அது காட்டுகின்றது.

3.2.7.4. சிற்றிலக்கிய நூல்கள்: இந்நூற்றாண்டில் தோன்றிய சிற்றிலக்கிய நூல்களில் பெரும்பான்மை அவையடக்கம் பேசுவன. பொதுவாக நூன்முகத்து அவையடக்கம் மட்டும் கூறப்படுவது தனிச்சிறப்பாக உள்ளது. புதுப்புது உத்திகளைக் கையாண்டு அவையடக்கம் கூறப்பட்டுள்ளன.

பாண்டிமண்டல சதகம்[90], அழகர் கலம்பகம்[91], ஆகியன இந் நூற்றாண்டில் எழுந்த அவையடக்கம் கூறும் சிற்றிலக்கிய நூல்களில் சிலவாகும்.

இந்நூற்றாண்டில் கவிராஜ பண்டாரத்தையாவின் திருமலை முருகன் பிள்ளைத் தமிழ், 'உயர்ந்த தமிழ்ப் புலவோரின் பாடல்களை மேம்படுத்துவதற்காகவே என் புன்மொழியைக் காட்டினேன்[92] என்ற பொருளில் பாடியிருப்பது புதிய உத்தியாக உள்ளது.

காப்புப் பாடலில் அவையடக்கத்தைப் புகுத்தும் நெறியை இக்கால நூல்களில் காணமுடிகின்றது. இதனை,

"முன்பாதி புன்சொல் முழுத்தமிழ்ப் பின்பாதி
பின்பாந் திவாகரனை பிங்கிதழ்செ-வெண்பாவில்
வள்ளுவர்வெண் பாக்குறளை வைப்பதனாற் குற்றமெல்லாந்
தள்ளுவரே யானைமுகர் தாம்"[93]

எனவரும் 'திவாகரமாலை' என்னும் திவாகர வெண்பாவின் காப்புப் பாடலால் அறியமுடிகின்றது. முன்னைய நூல்களில் பல பாடல்கள் இடம்பெற, அவற்றுள் ஒன்று இறைவனை முன்னிலைப்படுத்திப் பாடப்பெறும். இங்கு ஒரே பாடலில் கடவுள் வாழ்த்தும் அவையடக்கமும் அமையப் பாடப்பெற்றன.

இதனைத் தொடர்ந்து கமலைஞானப்பிரகாசர் 'தியாகராசர் பள்ளு' என்ற நூலின் இறுதியில்,

"ஆண்டபுகழ்த் தென்கமலை யத்தரே போர்விசயன்
பூண்டசிலை தாக்கப் பொறுத்தீரே-மீண்டு
வெறுப்பதுவே யானாலு மெய்யடியேன் புன்சொல்
பொறுப்பதுமக் கன்றோ புகழ்?"[94]

என்று கூறுவதும் இறைவனை முன்னிலைப் படுத்திப் பாடியதாக உள்ளது. அவையோரை வேண்டும் நிலையிலிருந்து இறைவனை நம்பும் நிலைக்கு முற்றிலுமாக வளர்ந்துவிட்டப் போக்கினை இப்பாடல்கள் காட்டுகின்றன.

<u>3.2.7.5. சமயத் தத்துவ நூல்கள்:</u> கமலை ஞானப்பிரகாசரின் மற்றொரு நூல் சிவானந்த போதமாகும். இதில் சிவனடியார்கள் தம் நூலைக் காக்க வேண்டுவதாக அவையடக்கப் பாடல் ஒன்று அமைந்துள்ளது[95].

மறைஞான சம்பந்த நாயனாரின் சைவ சமய நெறி[96], சிவதருமோத்தரம்[97] ஆகியவும், இரேவணசித்தரின் சிவஞானதீபமும்(97அ) அவையடக்கத்தில் தத்துவக் கருத்துகளைப் பேசுவன.

3.2.7.6. சிவஞான சித்தியார் பரபக்க உரை: அடியார்க்கு நல்லாரின் உரைநூலினைத் தொடர்ந்து எழுந்த உரைநூல்களில் அவையடக்கம் இல்லை. கி.பி.16ஆம் நூற்றாண்டினர் எனக் கருதப்பெறும் திருவொற்றியூர் ஞானப்பிரகாசரின் சிவஞான சித்தியார் பரபக்க உரையில் அவையடக்கமாக ஒரு பாடல் இடம்பெற்றுள்ளது[98]. அதில் கடவுள் வணக்கம், மூலநூல் தோன்றிய வரலாறு, மூலநூல் ஆசிரியர் பெயர், உரையாசிரியர் பெயர், ஆகியன அவையடக்கப் பண்புடன் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. உவமைவழி அவையடக்கம் உணர்த்தும் நெறியும் பின்பற்றப்பெற்றுள்ளது.

3.2.7.7. கதைப் பாடல்கள்: தமிழில் கதைப் பாடல்கள் எப்பொழுது எழுதப்பெற்றன எனத் திட்டவட்டமாகக் கூறப்போதுமான சான்றுகள் இல்லை. கிடைக்கப்பெறும் பவளக்கொடிமாலை உள்ளிட்ட பல கதைப் பாடல்கள் புகழேந்திப் புலவர் பெயரில் வழங்கிவருகின்றன. நளவெண்பா எழுதிய புகழேந்தியும் இவரும் ஒருவரா என்பது அறியப்பெறவில்லை. கி.பி. 16ஆம் நூற்றாண்டில் வழங்கப் பெற்றதாக உலகுடைய பெருமாள்கதை[99], உடையார் கதை[100] ஆகியன குறிக்கப்பட்டுள்ளன. இவற்றில் இடம்பெறும் அவையடக்கப் பாடலடிகளில் அவையடக்கப் பண்புடன் நூல் தொடர்பான செய்திகளும் பேசப்பட்டுள்ளன[101].

கதைப்பாடல்கள் காப்பு அல்லது கடவுள் துதியை அவையடக்கப் பொருண்மை பேசும் களனாகக் கொண்டுள்ளன. இந்நிலை சிற்றிலக்கிய நூல்களிலும் அமையக் காணலாம்.

3.2.7.8. புறத்திரட்டு: சென்ற நூற்றாண்டில் பெருந்திரட்டில் அவையடக்கப் பகுதி இடம்பெற்றதன் வளர்ச்சியாக இந்நூற்றாண்டில் புறத்திரட்டு அவையடக்கப் பகுதியைத் தந்துள்ளது[102]. இது தொகுப்பு நூல்களுக்கு அவையடக்கம் இன்றியமையாதது என்பதை வலியுறுத்தும்.

முன்னைய நூற்றாண்டுகளில் இறைவனை முதன்மைப் படுத்திப் பாடியதன் வளர்ச்சியாக இந்நூற்றாண்டு நூல்கள் இறைவனை முன்னிலைப் படுத்திப் பாடும் போக்கினைக் கொண்டன. இறைவனின் இருவேறு தன்மைகளை (இறைவனின் சிறப்புப் பண்பும் தாழ்வான பண்பும்) உவமையாக்கி அவையடக்கம் பாடுதல் புராண நூல்களில் காணப்படுகின்றது. சிற்றிலக்கிய நூல்கள் இறைவணக்கத்தையும் அவையடக்கத்தையும் ஒரே பாடலில் அமைத்துள்ளன. இது கதைப்பாடல்களின் அவையடக்கத் தாக்கமாகக் கருதப்படுகின்றது. சமயதத்துவ நூல்களின் அவையடக்கம் தத்துவக் கருத்துக்களுக்கு முதலிடம் தந்துள்ளன.

3.2.8. பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டுகள்: இந்நூற்றாண்டுகளில் தோன்றிய எண்ணற்ற நூல்களில் அவையடக்கம் இடம்பெற்றுள்ளது. பொதுவாகத் தலபுராணங்கள் அனைத்தும் அவையடக்கத்தை ஓர் உறுப்பாகக் கொண்டுள்ளன. சமயநூல்கள், சிற்றிலக்கியங்கள், கீர்த்தனை நூல்கள் என எல்லாவகை நூல்களிலும் அதன் ஆளுமையைக் காணமுடிகின்றது. காப்பியம் மற்றும் இலக்கண நூல்களிலும் பின்பற்றப்பட்டுள்ளது.

3.2.8.1. இலக்கணக் கொத்து: காலந்தோறும் மாற்றமடைந்து வரும் அவையடக்கப் பாடல்களுக்குப் புதிய திருப்பம் தந்தவருள் குறிப்பிடத்தக்கவர் சுவாமிநாத தேசிகராவர். இவர் எழுதிய 'இலக்கணக் கொத்து' என்னும் நூலில் மிக நீண்ட - பல புதிய செய்திகளை உள்ளடக்கிய -

அவையடக்கம் காணப்படுகின்றது. அவையடக்கப் பண்புடன் முந்துநூற்குறை, முந்துநூல்களின் உரைக்குறை, நூலாசிரியன், உரையாசிரியன், போதகாசிரியன் ஆகியோரது தன்மைகள், தாம் நூலுக்கு உரை எழுதக் காரணம் போன்ற நூலுக்குப் புறம்பான செய்திகள் பேசப்பட்டுள்ளன[103].

இப்பாடலின் இறுதியில் இடம்பெறும்,

"சிறிதினைச் சிறியேன் சிறிய சிறார்தமக்
குரைத்தன னன்றியீ தொருநூ லன்றே
யிவ்வழக் கறிந்தோ ரிகழுதல் வழக்கே
யிவ்வழக் கறியா ரிகழுதல் வழக்கே"[104]

என்ற அடிகளே அவையடக்கப் பொருண்மையுடையவை. நூலுக்குப் புறம்பான செய்திகளை அவையடக்கத்துள் வைத்த காரணத்தையும் ஆசிரியரே விளக்கியுள்ளார். இதனை,

"அவையடக்கமென்று பெயரிட்டு இங்ஙனம் பலவற்றையும் விரித்ததனாற் பயனென்னெனின், பலவற்றானும் புழுத்த நாயினுங் கடையேன தறியாமையை எல்லோர்க்கும் அறிவித்த லொன்றுமே பயனென்க"[105]

என்ற அவரது உரையால் அறியலாம்.

பிறர் குறையைத் தனியாகச் சுட்டின் அவையோர் ஏற்க மறுப்பர் என்பதால் அவையடக்கத்தைக் களனாகக் கொண்டு ஆசிரியர் இவ்வாறு பாடியிருக்க வேண்டும். கந்தபுராண ஆசிரியரைப் போன்றோர் நூல் தொடர்பான செய்திகளை அவையடக்கத்துள் பேசினர். இந்நூலாசிரியர் நூலுக்குப் புறம்பான செய்திகளையும் பேசியிருப்பது அவையடக்கத்தின் உள்ளார்ந்த வளர்ச்சியினைச் சுட்டும்.

இந்நூல் கி.பி.17ஆம் நூற்றாண்டில் எழுதப்பெற்றது என்ப[106].

3.2.8.2. சீறாப்புராணம்: கி.பி.17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த உமறுப் புலவர் என்ற முகமதியரால் இந்நூல் எழுதப்பெற்றது[107]. இதில் மூன்று பாடல்கள் அவையடக்கமாக வந்துள்ளன. இவற்றில் குறிப்பிடத் தக்க மாற்றம் ஏதுமின்றி, அவையடக்கப் பொதுநெறிப் பின்பற்றப்பட்டுள்ளது[108].

> 'கடவுள் வாழ்த்துப் பகுதியும் அதனைத் தொடர்ந்து அவையடக்கப் பகுதியும் ஏனைய தமிழ்க் காப்பிய வல்லார் தரும் செய்திகளை உமறு தரவில்லை'[109]

என்ற தொ. பரமசிவத்தின் கருத்து இவண் நோக்கத்தக்கது. அவையடக்கத்துள் பிற செய்திகளும் இடம்பெறுதல் வழக்கு என்பதை இக்கருத்து வலியுறுத்துகின்றது.

3.2.8.3. சைவ எல்லப்ப நாவலரின் புராணங்கள்: இவர் கி.பி. 17ஆம் நூற்றாண்டினர்[110].

திருவெண்காட்டுப் புராணம், தீர்த்தகிரிப் புராணம், திருவிரிஞ்சைப் புராணம், செவ்வந்திப் புராணம், திருச்செங் கோட்டங்குடிப் புராணம், அருணாசல புராணம் ஆகியன இவர் எழுதிய நூல்கள். இவற்றுள்,

> "உற்ற செய்யுளால் அருணைமா நகர்ச் சிறப்புரைத்தேன்..."[111]

எனத் தொடங்கும் அவையடக்கப் பாடல் முதல் மூன்று நூல்களிலும் இடம் பெற்றுள்ளது. 'செப்பு மியற்றமிழ்க வெல்லாம்.....'[112] எனத் தொடங்கும் மற்றொரு பாடல் முதல் இரண்டு நூல்களிலும் காணப்படுகின்றது. இந்நூல்களை ஆராய்ந்த மு. அருணாசலம், 'ஒருவர் தாம் செய்த பாடலைத் தம் நூல்களில் எடுத்துவைத்துக் கொள்வது உலக இயல்பு'[113] எனக் கருத்துத் தெரிவிக்கின்றார்.

இவர் எழுதிய மற்றொரு நூல் திருவாரூர்க்கோவை. இதில் தம் நூலில் குறைகாணுபவர்கள் 'மணற்சோற்றில் கல்லைத் தேடுபவர்களை ஒப்பர்'[114] என அவையடக்கம் தந்துள்ளார்.

ஃந்நூற்றாண்டில் வாழ்ந்தவரான நல்லாப்பிள்ளை தாம் எழுதிய மகாபாரதத்திற்கு வில்லிபுத்தூராரின் அவையடக்கத்தை அப்படியே தந்துள்ளார்[115] என்பது இவண் குறிப்பிடத்தக்கது.

கி.பி.17ஆம் நூற்றாண்டில் சிவப்பிரகாச சுவாமிகள் பிரபுலிங்க லீலையையும்[116], அரசகேசரி இரகுவம்சத்தையும் தமிழில் தந்தனர்[117]. இவற்றில் அவையடக்கத்தை உவமையாற் புலப்படுத்தும் பொதுநெறியும், பாடுபொருள் சிறப்பும் அமைய அவையடக்கப் பாடல்கள் விளங்குகின்றன[118].

3.2.8.4. தேம்பாவணி: தொடர்ந்து வீரமாமுனிவர் (1680-1746) இயற்றிய தேம்பாவணியில் இம்முறை பின்பற்றப்பட்டது. பாடுபொருள், காரணம் ஆகியன விளக்கம் பெறும் வகையில் அவையடக்கத்தை உவமையாற் புலப்படுத்தும் மூன்று பாடல்கள் இடம்பெற்றுள்ளன[119]. கம்பரின் செல்வாக்கு இப்பாடல்களில் மிகுதி. இப்போக்கு அவரது 'கித்தேரியம்மன் அம்மானை'[120] என்ற நூலிலும் காணப்படுகின்றது.

3.2.8.5. திரிகூட இராசப்பக் கவிராயரின் நூல்கள்: திருக்குற்றாலக் குறவஞ்சி, திருக்குற்றாலச் சிலேடை வெண்பா, திருக்குற்றாலத் தலபுராணம் ஆகியன திரிகூட இராசப்பக் கவிராயரால் கி.பி. 18ஆம் நூற்றாண்டில் எழுதப்பெற்றன[121].

'பாடுபொருள் சிறப்பால் தம் நூல் கொள்ளத்தக்கது' என்பதை இந்நூல்களின் அவையடக்கப் பாடல்களில் காணலாம். அவையடக்கப் பொதுநெறி

இவற்றில் பின்பற்றப்பட்டுள்ளது[122]. அவையோர் முன்னிலையில் 'ஏந்திழையே!' என்று வீரசோழியம் பெண்ணை விளித்துப் பேசியதுபோல் திருக்குற்றாலத் தலபுராணம்[123] 'நாணந் தோற்ற நாசையே வென்ற தம்மா' என்று பெண்ணை விளித்துள்ளது.

3.2.8.6. காஞ்சிப்புராணம்: இந்நூற்றாண்டில் சிவஞான முனிவரின் காஞ்சிப் புராணம் புகழுடன் விளங்கிற்று[124]. இதன் அவையடக்கப் பாடல்கள் அவையடக்கப் பொதுநெறியுடன் பாடுபொருள் சிறப்பும் சுட்டுவன[125]. கம்பர் படலத்தின் தொடக்கத்தில் அவையடக்கம் தந்தார். இவர் படலத்தின் இறுதியில் அவையடக்கமாக இரண்டு பாடல்களைத் தந்துள்ளார்[126].

கி.பி. 17ஆம் நூற்றாண்டுகளில் தோன்றிய சீகாளத்திப் புராணம், பழநித்தல புராணம், விருத்தாசல புராணம் உள்ளிட்ட எண்ணற்றத் தலபுராணங்களில் உவமைவழி அவையடக்கம் கூறும் நெறி பின்பற்றப்பட்டுள்ளது. அவை 'பாடு பொருள் சிறப்பால் தம் நூல் ஏற்கத் தக்கது'[127] என்பதைப் பொதுப் பண்பாகவும் கொண்டுள்ளன.

3.2.8.7. சமய தத்துவ நூல்கள்: மாதவச் சிவஞான சுவாமிகளின் சிவதத்துவவிவேகம்[128], குமாரதேவரின் மஹாராஜா துறவு[129], மேல்நாட்டு இலிங்கரின் சோதிட கேறாராசாத்திரம்[130] ஆகியவற்றில் தத்துவக் கருத்துகளும் பாடுபொருள் சிறப்பும் வெளிப்படுத்தும் விதத்தில் அவையடக்கப் பாடல்கள் அமைக்கப்பெற்றுள்ளன.

3.2.8.8. சிற்றிலக்கிய நூல்கள்: இந்நூற்றாண்டுகளில் அவையடக்கத்தை நூன்முகத்தில் கொண்டுள்ள சிற்றிலக்கிய நூல்கள் மிக அதிகமாக உள்ளன. அவற்றுள் ஆண்டாள் பிள்ளைத் தமிழ், தண்டலையார் சதகம், திருவேங்கட சதகம்,

கொங்குமண்டல சதகம், செயங்கொண்டார் சதகம், குருநாத சுவாமி கிள்ளைவிடுதூது, கனப்பநாயக்கன் காதல், திருமலை முருகன் பள்ளு, திருமாலிருஞ்சோலை மலை அழகர் பிள்ளைத் தமிழ், சிவ சிவ வெண்பா, இரங்கேச வெண்பா என்னும் நீதி சூடாமணி ஆகியன குறிப்பிடத்தக்கன. இவை உவமைவழி அவையடக்கம் கூறுதலுடன் பாடுபொருள் சிறப்பும் உரைப்பனவாக உள்ளன[131]. ஒரோவழி வெறும் அவையடக்கம் கூறும் நூல்களும் உள.

3.2.8.9. கதைப்பாடல்கள்: கட்டபொம்மன் கதை, கட்டபொம்மன் கும்மிப் பாடல், தேசிங்குராஜன் கதை, இராமப்பய்யன் அம்மானை ஆகிய கதைப் பாடல்கள் ஏறத்தாழப் பதினெட்டாம் நூற்றாண்டில் தோன்றியிருக்க வேண்டும். ஐரோப்பியரின் வருகைக்குப் பின்னர் நிகழ்ந்த கட்டபொம்மன் தொடர்பான செய்திகள் இதனை உறுதிசெய்கின்றன. இவற்றில் அவையடக்கம் நூலின் தொடக்கத்தில் அமைவதுண்டு.

"பென்னும் பெரியோர்கள் யானுரைத்த புன்சொல்லதனை
நன்றெனவே கேட்டருள்வீர் நானுரைத்த புன்சொல்லதனை"[132]

என்பது இராமப்பய்யன் அம்மானையின் பாடலடிகளாகும்.

இன்று கிடைக்கப்பெறும் கதைப்பாடல்களில் இடம்பெறும் அவையடக்கப் பொருண்மைகள் மூலநூலாசிரியனால் உரைக்கப்பட்டன எனத் துணியமுடியாது. ஏனெனில் கதைப்பாடல்கள் பல ஆண்டுகளாக வாய்மொழியாகப் பாடப்பட்டு வருவன. பாடல்களைப் பதிப்பிக்க அல்லது படியெடுக்க எந்தத் தகவலாளியிடம் இருந்து பெறப்பட்டதோ அவரது கருத்தாகவும் இருக்க வாய்ப்புண்டு.

3.2.8.10. இராமநாடகக் கீர்த்தனை: கி.பி.18ஆம் நூற்றாண்டில் குறிப்பிடப்படவேண்டிய நூல்[133]. இதனை அருணாசலக் கவிராயர் செய்தனர்.

அதன் அவையடக்கம் இரண்டு விருத்தத்திலும் ஒன்று கீர்த்தனை வடிவிலும் அமைக்கப்பட்டுள்ளது[134]. மேலும் 'அபசார க்ஷமை' எனத் தலைப்பிடப் பட்டுள்ள மற்றொரு பாடல் அவையடக்கப் பொருண்மையுடன் இறைவனை முன்னிலைப்படுத்திப் பாடும் நிலையில் அமைந்துள்ளது[135]. இதில்

"ஐயனே ரகுராமனே - எக்சொல்
அபசாரம் உபசாரம் ஆக்கிக் கொள்வாயே"[136அ]

எனப் பல்லவி அமைந்துள்ளதும், சரணங்களின் இறுதியில் 'பெரியோர் முன், புத்திப்பிழை கொண்டேன்'[136ஆ] என்ற கூறுவதும் அவையோர் முன்னிலையில்தான் இறைவனை முன்னிலைப்படுத்திப் பாடுவதாக அமைந்துள்ளதை ஐயமின்றி விளக்குகின்றது. இதனைக் கடவுள் வாழ்த்தியருள அவையடக்கம் பாடுதல் எனக் கொள்ளல் பொருந்தும்.

நூலுக்குப் புறம்பான செய்திகளையும் சேர்த்து அவையடக்கம் பாடுதல், கடவுளை வாழ்த்தியருள அவையடக்கம் பாடுதல், தாம் செய்த பாடல்களைத் தம்முடைய பிற நூல்களில் எடுத்தாளுதல், பிறர் செய்த பாடல்களைத் தம் நூலில் எடுத்துத் தருதல், பாடுபொருள் சிறப்புரைத்தலைப் பொதுப் பண்பாகக் கொள்ளுதல் ஆகியன இந்நூற்றாண்டு நூல்களின் அவையடக்கப் பாடல்களில் காணப்படுவன.

<u>3.2.9. பத்தொன்பதாம் நூற்றாண்டு:</u> ஆங்கிலேயர் மற்றும் பிரஞ்சுக்காரர்களின் ஆதிக்கத்தின் கீழ்த் தமிழகம் பிடியுண்ட காலமிது. அச்சு எந்திரங்களின்வழி நூல்கள் வெளியிடப்பட்டன. அரங்கேற்றம் செய்யப் பெறாத நூல்களும் பதிப்பிக்கப்பட்டன. அதனால் இதுவரை இருந்த, 'அவையோரால் தடைபடக் கூடும் என்ற அச்சம்' நூலாசிரியனை விட்டுப்

போயிருக்கக் கூடும். இச்சூழலிலும் பண்டைய மரபினைப் போற்றிக் காக்கும் வண்ணம் எண்ணற்ற நூல்களில் அவையடக்கம் பாடப்பட்டன. அவற்றின் போக்கில் மாற்றங்களும் நிகழ்ந்துள்ளன. அவை பண்டைய அவையடக்க மரபினையொட்டியே நிகழ்ந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

3.2.9.1. மீனாட்சிசுந்தரம் பிள்ளை: (1815-1875): தமிழில் அதிகமான பாடல்களை அவையடக்கமாகத் தந்தவர்களில் முதலிடம் பெறுபவர் இவரே. இவர் எழுதிய தலபுராணங்களில் அவையடக்கம் தவறாது இடம் பெற்றுள்ளது[137]. திருக்குடந்தைத் திரிபந்தாதி, சேக்கிழார் பிள்ளைத் தமிழ் உள்ளிட்ட சிற்றிலக்கிய நூல்கள் பலவற்றிலும் அவையடக்கம் உண்டு[138].

இவரது பாடல்கள் அனைத்தும் ஒரே தன்மைத்தனவாய் உள்ளன. அவை பண்டைய அவையடக்க மரபின் வெளிப்படையாய் விளங்குகின்றன.

"குடம்படு செருத்த லான்செய் பூசையைக் குறியாகக் கொண்டோன்
மடம்படு சுனங்கன் செய்யும் பூசையு மதித்த வாற்றா
லிடம்படு பெரியோர் செய்த வின்சுவைப் பாட்டொடுஞ்சங்
கடம்படு சிறியேன் செய்யும் பாட்டுங் கைக்கொள் வானால்"[139].

இப்போக்கினை இவரது தலபுராணங்களில் பெரிதும் காணமுடிகின்றது. இவரது பாடல்களிலும் அவையோர் முன் இறைவன் முதன்மைப் படுத்தப்படுவது மிகுதி. சேக்கிழார் பிள்ளைத் தமிழில் குரு பரம்பரை வரலாறு, நூல் வந்த வழி ஆகியன சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன[140].

வல்லூர் தேவராஜ பிள்ளையின் பெயரில் வழங்கும் குசேலோ பாக்கியானம்[141], சூதசங்கிதை[142] ஆகியவற்றின் அவையடக்கப் பாடல்கள் தம் ஆசிரியரான மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் அவையடக்கப் போக்கையே கொண்டுள்ளன.

3.2.9.2. கோபாலகிருஷ்ண பாரதியார்: அருணாசலக் கவிராயரின் இராமநாடகக் கீர்த்தனைக்கு அடுத்ததாக, இவர் எழுதிய 'திருநாளைப் போவரென்னும் நந்தனார் சரித்திரக் கீர்த்தனை (1830)' குறிப்பிடத்தக்கது. இதில் ஒரு பாடல் அவையடக்கமாக உள்ளது. உவமை வழி அவையடக்கம் புலப்படுத்தப்படும் பொதுநெறியைப் பின்பற்றியுள்ளார் ஆசிரியர்[143]. இவரைப் பின்பற்றி, சிதம்பரபாரதிகளென்ற சின்னபாரதி, 'பெரியபுராணக் கீர்த்தனை'[144]யில் அவையடக்கம் பாடியுள்ளார்.

3.2.9.3. வேதநாயகம்பிள்ளை: (1824-1889): இவர் எழுதிய 'நீதிநூல்' ஆறு பாடல்களை அவையடக்கமாகக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பாடல்களிலும் உவமைகளை அடுக்கிக் கூறும் உத்தி பின்பற்றப் பெற்றுள்ளது[145]. குறிப்பிடத்தக்க மாற்றம் ஏதும் இல்லை.

3.2.9.4. தண்டபாணி சுவாமிகள்: (1839-1898): வண்ணச்சரபம் அருள்மிகு தண்டபாணி சுவாமிகள் 'அறுவகை இலக்கணம்' என்ற நூலினைத் தந்துள்ளார். அச்சிட்டு வெளியிடும் முறை வந்த பின்னர்ப் புலவர்கள் பாடிய அவையடக்கத்தில் ஏற்பட்டுள்ள மாற்றத்திற்கு அவரது பாடலைச் சான்றாகக் காட்டலாம்.

"வேற்றுமையும் அல்வழியும் பொருந்தாது, தன்மையும்
விளங்கும் செஞ்சொல்
சாற்றும்ஒளி வழியுமல்கும் அறுவகை யிலக்கணத்தைத்
தாழ்வென் போர்கள்
கூற்றுவன்தன் புலத்தேகிக் கொடியநரகிடை அமிழ்ந்து
குலைவார், அன்றி
மாற்றுரைத்தற்(கு) அரியசெம்பொன் வரையனைய
குகனருட்சீர் மருவினாரே"[146]

என்ற பாடலில் தமது நூலினைத் தாழ்வாக எண்ணுவோர் நரகத்தில் அமிழ்வர் என்று ஆசிரியர் பழித்துரைப்பதைக் காணலாம். நூலில் குறை கண்டோரைத் தாழ்ந்த பொருளுடன் ஒப்புமைப்படுத்திக் கூறும் சான்றோர்களின் போக்கினின்றும் ஒருபடி மேலே சென்று, பழிக்கின்ற அளவிற்கு இவர் வந்துள்ளார். அதற்கு அறிவியல் உலகமும் நூலைப் பரப்பப் பிறர் தயவு தேவையில்லை என்ற தன்னம்பிக்கையும் காரணங்களாக அமைந்திருக்கக் கூடும். அதனால்தான் இப்பாடலுக்கு 'ஆக்கியோன் துதிபு' எனத் தலைப்பிட்டுள்ளார் ஆசிரியர். இக்காலத்தில் அவையோர் என்ற இடத்தை நூல் கற்போர் அல்லது வாசகர்கள் பெறுகின்றனர் என்பதும் நினைவிற்கொள்ளத்தக்கது.

பிறர்துணை தேவைப்படாத இக்காலத்தும் பண்டைய அவையடக்க மரபைப் பின்பற்றி அவையடக்கம் கூறும் நூல்கள் எண்ணிக்கையில் அடங்காதுள்ளன. தி. வீரபத்திர முதலியார் (1855-1910) எழுதிய விருத்தப்பாவியல் என்ற நூலினை இதற்குச் சான்றாகக் காட்டலாம். தமிழ் இலக்கண நூற்பரப்பில் அவையடக்கத்தை மட்டும் நூன்முகத்துக் கொண்டிலங்கும் ஒரே இலக்கணநூல் இதுவேயாகும். இதில் ஏழு பாடல்கள் அவையடக்கமாக இடம்பெற்றுள்ளன. அவையடக்கத்தை உவமையில் புலப்படுத்தும் பண்டையப் பொதுநெறியை இப்பாடல்கள் பின்பற்றியுள்ளன[147].

3.2.9.5. பேராசிரியர் சுந்தரம்பிள்ளை: (1855-1897):

மாற்றமடைந்து வரும் அவையடக்கப் பாடல்களுக்குப் புதிய திருப்பத்தைத் தந்தவருள் தலைமையானவர். தமிழ் நாடக உலகிற்குப் புத்தாக்கம் தந்தவர். தமிழைத் தெய்வமாக்கிப் புதுமுறையில் வாழ்த்துப் பாடிய இவர் அவையடக்கத்தில் நெஞ்சை முன்னிலைப்படுத்திப் பாடும் புதுமையையும் செய்துள்ளார்.

இவர் எழுதிய மனோன்மணீயம் என்ற நாடக நூலில்,

"அமைய அருளனைத்தும் ஆட்டுமேல் நெஞ்சே!
சுமைநீ பொறுப்பதென் சொல்லாய்? - நமையுமிந்த
நாடகமே செய்ய நயந்தால், அதற்கிசைய
ஆடுவம்வா! நாணம் அவம்"[148]

என்ற பாடலை அவையடக்கமாகத் தந்துள்ளார். இதற்கு 'அவையஞ்சின நெஞ்சொடு கிளத்தல்' எனத் தலைப்பிட்டார். நேரடியாக அவையோரை வேண்டிக்கொண்டாரில்லை. பழைய முறையில் அவையடக்கம் பாடத் தயங்கியுள்ளார். எனினும் பண்டைய மரபினை முற்றிலுமாக ஒதுக்கவும் அவருக்கு மனமில்லை. இதனால் அவைக்கு அஞ்சிய தம் நெஞ்சுக்கு ஊக்கம் தருவதாகப் பாடுகின்றார்.

தனியொரு குழுவினரை முன்னிலைப்படுத்தாது பாடியிருப்பதும் நோக்கத் தக்கது. இக்கால நூல்கள் அச்சிடப்பட்டு அனைத்துத் தரப்பினரையும் சென்றடையக் கூடும் என்ற எண்ணமும் இதற்குக் காரணமாக அமையலாம். அவையோர் முன்னிலையில் உலகோரையும் தெய்வத்தையும் பெண்ணையும் முன்னிலைப் படுத்திப் பாடியதன் பரிணாம வளர்ச்சியாக இதனைக் கொள்ளல் தகும். இதற்கு அக்கால அறிவியல் வளர்ச்சியையே அடிப்படைப் பின்புலமாகக் கொள்ள வேண்டும்.

இப்போக்கினை வி.கோ. சூரியநாராயண சாஸ்திரி (1870-1903) நாடகவியல்[149], மானவிஜயம்[150] ஆகிய நூல்களிலும் மு.க. காந்திதாசன் 'வேள்பாரி'[151]யிலும் பின்பற்றியுள்ளனர்.

<u>3.2.9.6. சிற்றிலக்கிய நூல்கள்:</u> அண்ணாமலைச் சதகம்[152], கச்சிக்கலம்பகம்[153], நெல்லைச் சிலேடை வெண்பா[154],

அழகர் குறவஞ்சி[155], மனுநீதி சதகம்[156], தேவைப் பிள்ளைத்தமிழ்[157] போன்ற எண்ணற்றச் சிற்றிலக்கிய நூல்கள் பண்டைய முறையினைப் பின்பற்றி அவையடக்கம் கூறியுள்ளன. மனுநீத் சதகம்[158] நூல் வந்த வழியை விரிவாகப் பேசும் போக்கினைக் கொண்டுள்ளது. அண்ணாமலைச் சதகம்[159] நூல் இறுதியில் அவையடக்கம் தந்துள்ளது.

3.2.9.7. உரைநூல்கள்: சு. கிருஷ்ணசாமி முதலியார் எழுதிய கம்பராமாயண உரையில் அவையடக்கம் ஆசிரியப் பாவால் ஆனது. தமிழ் உரைநூல்களின் அவையடக்கத்துள் இதுவே மிக நீண்டதாகும். ஆசிரியரின் பெயர், முன் உரையாசிரியர், கம்பர் நூல் செய்தது, அகத்தியர், தொல்காப்பியரின் சிறப்பு, கற்போர் பயன், கற்காதோர் இயல்பு ஆகியன குறிப்பிடப்பட்டு உவமைவழி அவையடக்கப் பாங்கினைப் புலப்படுத்தியுள்ளது[160].

இதனைத் தொடர்ந்து காஞ்சிப்புராண உரையில்[161], மூன்று பாடல்களும், கொங்குமண்டல சதக உரையில்[162] ஒரு பாடலும் அவையடக்கமாகக் காணப்படுகின்றன.

இந்நூற்றாண்டின் இறுதியில் சோழவந்தான் அரசஞ் சண்முகனார்,

"கல்லான் வரையினுந் தெய்வந்தனைக் காதலில்லார்
நல்லார் பணிவார் பணியார்பொரு ளாடல் செய்யார்
வல்லார் மதியின் மொழியாயினும் வைபவேமான்
சொல்லா றிசையாற் றலைக்கொள்ப வெஞ்சொல்லு மேலார்"[163]

என்ற பாடலைத் 'திருக்குறட் சண்முகவிருத்தியுள் முதற்குறள் விருத்தி' என்ற நூலில் தந்துள்ளார். திருவள்ளுவரின் கருத்துகளைப் பிரதிபலிக்கும் வகையில் இப்பாடலை அமைத்திருப்பது புலனாகிறது.

3.2.9.8. கதைப்பாடல்கள்: இந்நூற்றாண்டில் பல கதைப் பாடல்கள் அச்சில் வெளிவரத் தொடங்கின. இவை எக்காலத்தன என்பதில் தெளிவில்லை. இவற்றில் பெரும்பாலும் அவையடக்கம் இடம்பெற்றுள்ளதைக் காணமுடிகின்றது.

கதைப்பாடலின் வளர்ச்சியாக வில்லுப்பாட்டு, தெருக் கூத்து ஆகியவற்றைக் குறிப்பிடுவர். வள்ளியம்மைக் கதை[164] முதலிய வில்லுப்பாட்டு நூல்களிலும், அர்ச்சுனன் அல்லியை மாலையிட்ட அல்லி நாடகம்[165] முதலிய தெருக்கூத்துகளிலும் அவையடக்கம் பாடப்படுதல் வழக்கமாக உள்ளது.

கதைப்பாடலிலிருந்து அம்மானை என்ற வகை தனித்து வளரத் தொடங்கியது. மறிகருதாள் அம்மானை[166], மீனாட்சி அம்மானை[167], ஐவர் அம்மானை[168] போன்ற பல அம்மானை நூல்கள் அவையடக்கத்தை நூன்முகத்துத் தந்துள்ளன. இவை அனைத்தும் பண்டைய அவையடக்கப் பொது நெறியையே பின்பற்றியுள்ளன.

3.2.10. இருபதாம் நூற்றாண்டு: முழுக்க முழுக்கப் பொறிமயம் ஆக்கப்பெற்ற இக்காலத்தில் அரங்கேற்றம் செய்யப்பெறவேண்டும் என்ற கட்டாயம் இல்லாதிருந்தும் எண்ணற்ற நூல்களில் அவையடக்கம் இடம்பெற்றுள்ளது. இது பண்டைய மரபின் தொடர்ச்சி. இன்றும் விட்டுப்போகவில்லை என்பதைக் காட்டுகிறது.

இலக்கணம், காப்பியம், புராணம், சிற்றிலக்கியம், நாடகம் ஆகிய அனைத்து வகை நூல்களிலும் அவையடக்கம் இடம்பெற்றுள்ளது. அவையடக்கத்தின் போக்கில் இக்காலத்திற்குரிய சிறப்புமட்டும் சுட்டுதல் இவண் நன்மைபயக்கும்.

3.2.10.1. பாரதி, பாரதிதாசன்: இருபதாம் நூற்றாண்டின் தனிப்பெரும் கவிஞர்களான இவர்களின் நூல்களில் அவையடக்கப் பாடல்கள் காணப்பெறவில்லை. எனினும் உரைநடை வடிவில் அவையடக்கப் பொருண்மை பேசியுள்ளனர்[169]. உரைநடைச் செல்வாக்கால் அவையடக்கப் பாடல்களின் வடிவத்திலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

3.2.10.2. தேசிகவிநாயகம்பிள்ளை: 'மருமக்கள் வழி மான்மியம்' என்ற நூலில் 32 அடிகளில் அவையடக்கம் பாடியுள்ளார். கதைச் சுருக்கம், நூற்பொருள், அவையோர் சிறப்பு ஆகியன சுட்டப்பெற்று அவையடக்கத்தை உவமையாற் புலப்படுத்தும் பொதுநெறியைப் பின்பற்றியுள்ளார்[170].

3.2.10.3. நாமக்கல் இராமலிங்கம்பிள்ளை: 'சங்கொலி' என்ற கவிதைத் தொகுப்பில் தலைப்பு ஏதும் இடாமல் பின்வரும் பாடலைத் தந்துள்ளார்.

"நாரத கீத மென்ன
　　நயந்திகழ் பாட லாலே
பாரத நாட்டை யென்றும்
　　பணிந்திடும் சுப்ர மண்ய
பாரதி பாட்டைக் கண்ட
　　பழைய இத் தமிழர் நாட்டில்
யாரது?' என்று கேட்க
　　யானுமிக் கவிகள் சொன்னேன்"[171]

என்ற பாடலில் சமகாலக் கவிஞரான பாரதியின் சிறப்பினைக் கூறி அவையடக்கப் பொருண்மை பேசியுள்ளது நோக்கத்தக்கது. சுயமரியாதையை இழக்க விரும்பாது பெருமிதம் தோன்றும் வகையில் பாடல் அமைந்துள்ளது. இப் போக்கு பல நூல்களில் காணப்படுவதாக உள்ளது.

3.2.1.4. வ.உ. சிதம்பரம்பிள்ளை: கோயிற்புராணத்தில் உமாபதி சிவம் அவையடக்கமாகத் தந்த கருத்தை அடிப்படையாகக் கொண்டு இவரும் அவையடக்கம் பாடியுள்ளார். எனினும் அதற்கு 'அடக்கம்' என்று மட்டுமே தலைப்பிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது

"அடக்க மமரு ளுய்க்குமெய் ஞாசான்
நடக்கும் நெறியை நவில - அடக்கம்
அளாவிநிற் கின்றேன் அதுசிறிது மில்லேன்
தவாவள முற்ற தலத்து"[172]

என்ற பாடல் 'அகமே புறம்' என்ற நூலில் இடம்பெறுவது. இதே போன்று 'மனம் போல் வாழ்வு'[173] என்ற மற்றொரு நூலிலும் அவையடக்கம் பாடியுள்ளார்.

3.2.10.5. சுத்தானந்த பாரதியார்: 'பாரதசக்தி மகாகாவியத்' தில் மங்கலவாழ்த்துப் படலத்தில்,

"வித்து வான்கள் விரும்பியுள் வன்பினை
முத்து முத்தெனச் சூட்டினர் முத்தமிழ்;
புத்த லார்தொகுத் தேதுவைப் பூசிக்கப்
பித்த னேன்சிறு பிள்ளைத் துணிவினால்"[174]

என்று பாடியுள்ளது குறிப்பிடத்தக்கது.

தமிழைத் தெய்வமாக்கி நான்முகத்தில் அதற்கு வாழ்த்துப் பாடியதும், நெஞ்சை முன்னிலைப்படுத்தி அவையடக்கம் பாடியதும் சுந்தரம்பிள்ளை நிகழ்த்திய புதுமையாகும். இதனை அடிப்படையாகக் கொண்டு சுத்தானந்த பாரதியார் பாரதமாதாவை முன்னிலைப் படுத்தினார்.

3.2.10.6. ச. சோமசுந்தரபாரதியார்:

தமிழை முன்னிலைப்படுத்தி அவையடக்கம் கூறும் போக்கு இக்காலத்தில் பெரிதும் போற்றப்பட்டுள்ளது.

"என்று மிளமை வெழிலார் தமிழுக்கு
நின்றுவளர் நாவலர்தம் நேர்மையினால் - நன்றுணரா
நெஞ்சக் கயவர்தம் நீர்மைமிகு நூலியற்ற
அஞ்சாமை என்பதால் அறம்"[175]

என்று ச. சோமசுந்தர பாரதியார் தமிழை வளர்க்க அதனை உணராத கயவர்களுக்கு அஞ்சாமல் நூல் இயற்ற வேண்டும் என்பது அறமாதலால் தாம் நூல் இயற்றுவதாகக் கூறுவது புதுமையான உத்தியாகும்.

தமிழை முன்னிலைப்படுத்திப் பாடும்போது பண்டைய முறையான தெய்வம் வாழ்த்தியருள வேண்டிய நிலை தழுவப்பெற்றுள்ளதைக் காணமுடிகின்றது. இதனை,

"சான்றோர் கவியியற்றித் தந்த இலக்கியங்கள்
அகன்ற அணிகலங்க ளென்றறிந்தாய் - வான்றோப்
புகழ்பரந்த செந்தமிழ்தா யென்கவியின் புன்மை
இகழாம லேற்றருள்க இன்று"[176]

என வரும் 'சகுந்தலை வெண்பா' பாடலால் அறியலாம். இதனைப் பாடிய சு. நடேசபிள்ளை 'சமர்ப்பணம்' எனத் தலைப்பிட்டுள்ளார். இதனைத் தொடர்ந்து தமிழாதிக் கதை[177], அன்னை நீ ஆடவேண்டும்[178] ஆகிய நூல்களிலும் இப்போக்கினைக் காணமுடிகின்றது.

3.2.10.7. கலைவாணன்: அவையடக்கப் பாடல்களின் வளர்ச்சியில் கலைவாணனின் 'உதயம்' என்ற நூலுக்குத் தனி இடமுண்டு. முன்னர்க் கண்ட முறைகளிலிருந்தும் மாறுபட்டு நாட்டின் சமகாலப் போக்கை நன்கு விளக்கி

வியமாகக் கண்டிக்கும் திறன் காணப்படுகின்றது. இதில் மொத்தம் 12 பாடல்கள் அவையடக்கமாக இடம்பெற்றுள்ளன.

உண்மைக் கவிதைக்குத் தக்க இடம் இல்லாமற் போவதை இவரது பாடல்கள் மையம் கொண்டுள்ளன. தன் நூலை நல்ல மணமுள்ள மலர்களாக உருவகப்படுத்தி அதனைத் தெருத்தெருவாகச் சென்று காட்டியும் அதனை நல்ல மலர்களல்ல என ஒதுக்கிவிட்டதாகவும், வாசமற்ற மலர்களையே நாடிச் செல்வதாகவும் பாடற்பொருளை அமைத்துள்ளார்[179]. இறுதியில்,

"ஏங்கிப் புழுங்கும்மனம்
 ஏமாற, ஊரவர்கள்
நீங்கியதால், வீணாக
 நெடுநேரம் நின்றபின்னர்,
'வாங்குபவர் இல்லை' என
 வழிநடுவில் எறிந்துவிட்டு
நீங்குகிறேன். வாசகனே!
 நீதரும் புதிதுவே!"[180]

என்று பாடலை முடிக்கிறார்.

இன்றைய சமுதாயத்தின் போக்கை வெளிப்படையாக விமர்சிக்காமல் குறிப்புப் பொருளில் அமைத்திருக்கிறார் ஆசிரியர். 'இன்று நல்ல கவிதைகட்கு மதிப்பு இல்லை. அற்பக் கவிதைகள் அரியணையில் வீற்றிருக்கின்றன. கவிஞர் இதைப் பன்முறை பார்த்துப் பார்த்துச் சலித்துப் போனார். சலிப்பின் கூட்டுறவால் விளைந்த சிறந்த கனவில் இருந்து அற்புதமாகக் கவிதை உருவெடுக்கிறது'[181] என்ற கூற்றும் கருதத்தக்கது.

பிறநூல்களில் இம்முறை அப்படியே பின்பற்றப் பெறவில்லை எனினும் சமகாலப் பிரச்சினைகளையும் ஒரு இயக்கத்தைச் சேர்ந்தோர் மற்றொரு

இயக்கத்தினரைச் சாடுவதையும் 'இராவண காவியம்'[182] உள்ளிட்ட பல நூல்களின் அவையடக்கப் பாடல்களில் காணமுடிகின்றன.

மு. இராகவய்யங்கார் முன்னுரையுடன் பட்டிவாயிற் பதிப்பகம் வெளியிட்ட 'உதயம்' நூலில் அவையடக்கப் பகுதி இடம்பெறாது கடவுள் வாழ்த்துப் பகுதியில் அவையடக்கப் பொருண்மையுடன் ஒரு பாடல் மட்டுமே இடம்பெற்றுள்ளது[183] என்பது குறிப்பிடத்தக்கது. 1969இல் அரங்க சீனிவாசன் பதிப்பில் இடம்பெற்ற பாடல்களே ஆய்வில் காட்டப்பெற்றவை.

3.2.10.8. சில்லையூர் செல்வராசன்: ஈழத்துக் கவிஞரான சில்லையூர் செல்வராசன் கடவுள் வாழ்த்தை அவையடக்கத்தின் பகுதியாக வைத்துப் பாடுகின்றார். விதி, தன்னம்பிக்கை என்பன பற்றிப் புதிய சிந்தனைகள் கவிஞர்கள் மத்தியில் நடமாடத் தொடங்கியுள்ளதை இவரது பாடல் காட்டுகின்றது.

"காளி மகமாயி கடைவாய்க் கழிநீரை
ஊழி நட்டுவக்கே ஒருபாதி யானாளின்
தாம்பூலச் சாற்றை, தமிழிற் கவி எழுத
ஆம்பொருளாய்க் கற்பிதஞ்செய் தடுக்கின் நுனியளவும்
தன்மதிப்போ நம்பிக்கைத் தருக்கோ இலராகிக்
குன்மம் படித்த குழறுபடிப் பாட்டிசைத்த
அந்நாட் புலவர்களின் அவ்வழியிற் செல்லாத
செந்நாப் புலவன்யான்; சிறுபுலமை என்னதெனச்
சொன்னாலும் அப்புலமை சொந்தச் சரக்கதனால்
என்னை மதிக்கும் இயல்புடையேன்; என்கவிதை
கொள்ளத் தருவதெனிற் கொள்ளும்; தகாதெனில்
தள்ளும் - எனக்குத் தமிழ் என்ன சீதனமா?"[184]

முன்னரே குறிப்பிட்டதுபோல் அச்சு எந்திரங்களின் வருகையே அவர்களின் தன்னம்பிக்கைக்கு அடிப்படைக் காரணமாக அமைந்தது என்றால் அது மிகையாகாது. இக்காலத்தில் இத்தகைய பாடல்கள் வியப்பூட்டுவனவாகவும் இருப்பதில்லை.

3.2.10.9. கண்ணதாசன்: தன்னம்பிக்கை பற்றிய புதிய சிந்தனைகள் தோன்றியுள்ள இக்காலத்திலும் தன்னடக்கம் மிக்கோராய் நூல் இயற்றுவோரும் உளர். அதற்குச் சான்றாகக் கண்ணதாசனைக் குறிப்பிடலாம்.

இயேசு காவியம் என்ற நூலில்,

"பொங்குமாங் கடலில் புகுந்தள வெடுக்கப்
 போயினேன் வெற்றிபெற் றேனா?
 பூமியின் தருக்கள் செடிகொடி யோடும்
 புல்லினைத் தொகையெடுத் தேனா?
 தங்கமொன் றெடுத்து பலவகை நகைகள்
 தட்டயான் நல்லதட் டானா?
 தாய்த்தமிழ் ஆசை வாய்த்தது ற் பற்றத்
 தந்ததால் துணிந்தவிட் டேனா?
 எங்குமே பரவி எங்ஙணும் விளங்கும்
 இயேசுவின் வாழ்க்கையைத் தொகுத்து
 இவ்வணம் தமிழில் தந்தவைத் தேன்யான்
 என்செயல் தவறெனில் பொறுத்து
 சங்கமர் தேவன் மைந்தனின் பெருமை
 தாங்குவீர் கைகளில் நீரே
 தந்தையின் மைந்தன் அருள்செய வருவார்
 சத்தியம் தனையறி வீரே!" [185]

என்ற பாடலைத் தந்துள்ளார். நூலாசிரியனே நூலுக்குப் பாயிரம் பாடும் வழக்கு, பண்டைய நூல்களிலும் உண்டு என்பதால் இதற்குப் 'பாயிரம்'

எனத் தலைப்பிட்டுள்ளார். தான் நூல் எழுதப் புகுந்த முயற்சி வெற்றி பெற்றதா என்பதைக் கேள்வி நிலையில் அமைத்து, அதில் தவறிருந்தால் பொறுக்குமாறு வேண்டுகின்றார். பாடுபொருள், நூற்பயன் ஆகியனவும் சுட்டுகின்றார். பண்டைய அவையடக்கப் பொதுநெறியினைப் புது உத்தியில் ஆசிரியர் விளக்கியுள்ளார்.

3.2.10.10. புதுக்கவிதை: புதுக்கவிதை நூல்கள் புற்றீசல்கள் போல் வெளிவந்துகொண்டிருக்கின்றன. அவற்றில் இடம்பெறும் நூன்முகப் பகுதிகளில் அவையடக்கப் பொருண்மையுடன் சில செய்திகள் அமைந்துள்ளதைக் காணமுடிகின்றது.

கே. அறிவுமதியின் 'என் பிரிய வசந்தமே' என்ற புதுக்கவிதை நூல் 'காணிக்கை' என நூன்முகப் பகுதியை அமைத்துள்ளது. அதில் வரும்,

"மாணிக்கத் தமிழனே!
'தமிழ்க் காதலும்'
'வள்ளுவமும்'
உனக்கு நீயே...
உருவாக்கிக் கொண்ட
புத்தகச் சிலைகள்!
உனக்காக...
இந்தத் தமிழ்ச் சிறுவனால் முடிந்தது...
இந்தப்
'புத்தக மரப்பாச்சிதான்!'"[186]

என்ற கவிதையில் தன்னைத் தமிழ்ச் சிறுவன் என்றும், தன்நூலைப் புத்தக மரப்பாச்சி என்றும் தாழ்த்திக் கொண்டு, நூல் காணிக்கைக்கு உரியவரான

வ.சுப. மாணிக்கனாரின் உயர்வும் சுட்டப்பெற்றுள்ளதை அவையடக்கப் பொருண்மையாகக் கொள்ளவேண்டும். 'சிவப்பு மேகங்கள்'[187] என்ற நூலிலும் இப்போக்குக் காணப்படுகின்றது.

3.2.10.11. கவியரங்கம் முதலியன: கவியரங்கம், பட்டிமண்டபம், வழக்காடு மண்டபம் போன்றவற்றில் செய்யுள் நடையிலும் உரைநடையிலும் அவையடக்க கூறுதல் பெருவழக்காகவுள்ளது.

மதுரைத் திருவள்ளுவர் கழகத்தில் நிகழ்ந்த கலைமகள் விழாவில் ச.சாம்பசிவ அவையடக்கம் கூறிக் கவிதையைத் தொடங்குகின்றார். அதில் களம், காரணம், அவையோர் உயர்வு, கவிஞரின் தாழ்வு போன்றன சுட்டப்பெற்றுள்ளன[188].

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பிறந்தநாள் விழா கவியரங்கில் 'தமிழியக்கத் தளபதி'[189] என்ற தலைப்பில் பாடிய பன்னீரசன் அவையோர் உயர்வு கூறி, தம் பாடலைச் சிறிதமர்ந்து கேட்குமாறு வேண்டுகிறார்.

வாசகர்களை அவையோராகக் கொண்டு வெளிவரும் அச்சுநூல்களில் பல்வேறு கோணங்களில் அவையடக்கம் பேசப்பட்டுள்ளது. உரைநடை வளர்ச்சியால் 19ஆம் நூற்றாண்டிலிருந்தே உரைநடை வடிவில் அவையடக்கம் கூறும் நிலையைக் 'கொலை மறுத்தல்'[190] என்ற நூலின்வழி அறியமுடிகின்றது. பாரதி, பாரதிதாசன் போன்றோர் இதனைப் பின்பற்றியுள்ளமை முன்னர்க் குறிப்பிடப்பட்டுள்ளது.

குற்றங்கள் முரண்பாடுகள் மறந்து என் உள்ளத்தை இதில் கண்டுபிடிப்பது உங்கள் பொறுப்பு[191] என்றும், 'இந்நூலில் உள்ள குற்றங்களை நீக்கிக் குணங்களைக் கொள்ளும்படி பெரியோரை வேண்டுகிறேன்'[192] என்றும் இக்கால உரைநடை நூல் முகங்களில் உரைக்கப்பட்டுள்ளன. இவை செய்யுள் வடிவில் கூறப்பெற்ற அவையடக்கக் கூறுகள் உரைநடையிலும் படிந்துள்ளன என்பதைக் காட்டுகின்றன (காண்க: பின்னிணைப்பு-2

3.3. தொகுப்புரை: தமிழில் காலந்தோறும் எழுதப்பெற்ற நூல்களில் அவையடக்கப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. காலத்திற்கேற்ப அவற்றின் பொருளில்

மாற்றம் நிகழ்ந்துள்ளது. நூலாசிரியன் தன்னைத் தாழ்த்தியும் அவையோரை உயர்த்தியும் பேசுவதைப் பொதுப்பண்பாக நூல்கள் கொண்டிருக்கின்றன. அவையடக்கத்தை உவமையால் புலப்படுத்துவதைப் பொதுநெறியாகப் பின்பற்றியுள்ளன.

பாடுபொருள், காரணம், நூல்வந்த வழி, முதல் நூலாசிரியர் ஆகியவற்றை அவையடக்கப் பாடல்களில் சுட்டிச் செல்லும் போக்கினை, கி.பி.11ஆம் நூற்றாண்டு வரையுள்ள நூல்களில் காணமுடிகின்றது. இலக்கண நூற்பரப்பில் யாப்பருங்கலக்காரிகை முதல், அவையடக்கப் பாடல்கள் கிடைக்கின்றன.

நூல் இடைவைத்து அவையடக்கம் பாடும் முறையைக் கம்பரும், நூல் இறுதியில் பாடும் முறையைக் குணவீரபண்டிதரும் தொடங்கி வைத்துள்ளனர். கதை நிகழ்ச்சியை அவையடக்கத்துள் பேசும் போக்குக் கம்பரிடம் உண்டு. கடவுள் வாழ்த்தியருள அவையடக்கம் பாடும் போக்கினைக் கி.பி.12ஆம் நூற்றாண்டு முதல் காணமுடிகின்றது. பாயிர உறுப்புகள் பெரும்பாலானவற்றை அவையடக்கத்துள் பேசும் நிலையைக் கந்தபுராணத்தில் காணலாம். இறைவனின் குறைத் தன்மைகளைத் தம் தகுதிக் குறைபாட்டிற்கு ஒப்புமைப் படுத்துதல், குற்றம் காணுவோரைக் குறைகூறுதல் ஆகியனவும் தொடங்கப் பெற்றுள்ளன. 'பாடுபொருள் சிறப்புக் கருதி நூலை ஏற்க வேண்டுதல்' நிலையை இக்கால நூல்கள் வலியுறுத்துகின்றன.

அவையடக்கத்தில் தத்துவக் கருத்துகளைப் புகுத்தும் நெறியை கி.பி.13ஆம் நூற்றாண்டு சிவஞானபோதம் என்ற நூல்வழி உணரமுடிகின்றது. உரைநூல்களுக்கும் அவையடக்கம் கூறும் வழக்கு இக்காலத்திலிருந்து காணப் படுகின்றது.

குற்றம் காண்போரின் தன்மைகளை வெளிப்படையாகச் சுட்டும் நிலையை கி.பி.14ஆம் நூற்றாண்டில் சிவப்பிரகாசம் நூல் தருகின்றது. அவையடக்கத்தை எதிர்மறை நிலையில் உணர்த்தும் போக்கும் இந்நூற்றாண்டில் உண்டு.

தொகுப்புநூல்கள், வைத்திய நூல்கள் போன்றவற்றிலும் அவையடக்கம் தேவை என்பதை கி.பி.15ஆம் நூற்றாண்டில் காணக்கிடைக்கின்றன.

கி.பி.16ஆம் நூற்றாண்டில் இறைவனை முன்னிலைப்படுத்திப் பாடும் போக்குப் பெரிதும் காணப்படுவது. இறைவனின் இருவேறு தன்மைகளை உவமைகளாக்கும் உத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அவையடக்கத்துள் நூலுக்குப் புறம்பான செய்திகளையும் பேசும் நிலையை இலக்கணக் கொத்துத் தந்துள்ளது. ஒரு நூலுக்குப் பாடிய அவையடக்கப் பாடலை மற்றொரு நூலில் எடுத்தாளுதலைக் காணமுடிகின்றது.

முகமதியர், கிறித்தவர் போன்றோரும் அவையடக்க மரபைப் பின்பற்றியுள்ளதைக் கி.பி.17, 18ஆம் நூற்றாண்டுகளில் அறியப்பெற்றன.

தமிழில் அதிகமான பாடல்களை அவையடக்கமாகத் தந்தவரில் மீனாட்சி சுந்தரம் பிள்ளை முதன்மை இடத்தைப் பெறுகிறார். நூலினைத் தாழ்வாக எண்ணுவோரைப் பழித்துக் கூறும் போக்கினைத் தண்டபாணி சுவாமிகளின் அறுவகை இலக்கணம் கொண்டுள்ளது. இது அறிவியல் யுகத்தின் விளைவு எனக் கொள்ளப்படுகின்றது. அவையோரையும் தெய்வத்தையும் முன்னிலைப்படுத்திய நிலையிலிருந்து நெஞ்சை முன்னிலைப் படுத்திப் புதுமை செய்தவர் பேராசிரியர் சுந்தரம்பிள்ளையாவர்.

கீர்த்தனை, வில்லுப்பாட்டு, தெருக்கூத்து, அம்மானை போன்ற பிற்காலத்து வளர்ந்த இலக்கிய வகை நூல்களும் அவையடக்கம் பேசியுள்ளன.

சுத்தானந்த பாரதியார் பாரத மாதாவையும் தமிழையும் முன்னிலைப் படுத்திப் பாடும் போக்கு இருபதாம் நூற்றாண்டு அவையடக்கப் பாடல்களின் தனிச் சிறப்பாகும். சமகாலச் சமுதாயப் போக்குகளை அவையடக்கத்துள் பேசுவதும், தன்னம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு பிறர் துணை வேண்டாத போக்கும் இக்கால நூல்களில் பெரிதும் பேசப் பட்டுள்ளன. புதுக்கவிதை நூல்களும் அவையடக்கப் பொருண்மை பேசுவதைக் காணமுடிகின்றது. உரைநடை செல்வாக்கால் செய்யுள் வடிவம் மாறி உரைநடையிலேயே அவையடக்கம் பேசும் நிலை உரைநடை நூல்களில் உண்டு.

மேலை இலக்கியத் தாக்கம் ஏற்படும் அவையடக்க மரபு இன்றும் போற்றிப் பின்பற்றப்பட்டு வருவது அதன் அருமையைக் காட்டுவதாம்.

சான்றெண் விளக்கங்கள்

1. தமிழண்ணல் (இராம. பெரியகருப்பன்), புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, (1980), ப.80.
2. 'அவையடக்கப் பாடல்களின் தோற்றம்' என்ற முன் இயலில் இவை (2.5.11.) விளக்கப்பட்டுள்ளன.
3. திருத்தக்கத் தேவர், சீவகசிந்தாமணி, கடவுள் வாழ்த்து, 4, 5 (அவை. 1-2).
4. T.P. Meenakshi Sundaran, <u>A History of Tamil Literature</u>, pp.90-91.
5. தோலாமொழித் தேவர், சூளாமணி, பாயி.3.
6. எஸ். வையாபுரிப்பிள்ளை (பதி.), புறத்திரட்டு, அறத்துப்பால், பாடல் 13 (சென்னை சர்வகலாசாலை, சென்னை, 1938), ப.3.
7. தமிழண்ணல் முன்னூல், ப.247 (சீவகசிந்தாமணிக்குப் பின்னர்த் தோன்றியது என முன் இயலில் (2.5.11.) பெறப்பட்டது).
8. நீலகேசி, அவை.1.
9. மேலது, 2.
10. மேலது, 3.
11. மேலது, 4, 5.
12. எஸ். வையாபுரிப்பிள்ளை (பதி.), முன்னூல், பாடல் 13.
13. ஔவை சு. துரைசாமிப் பிள்ளை (உ.ஆ.), யசோதர காவியம், பாடல் 3.
14. மு. சண்முகம் பிள்ளை (பதி.), நாககுமாரகாவியம், முதற்சருக்கம், பாடல் 4.
15. பொ.வே. சோமசுந்தரனார் (உ.ஆ.), உதயணகுமார காவியம், முதற் காண்டம், பாடல் 3.
16. T.P. Meenakshi Sundaran, Op.Cit., p.30.
17. அமிர்தசாகரர், யாப்பருங்கலக்காரிகை, த.சி. பாயி.2, 3 (அவை.1-2).
18. ந.சி. கந்தையாபிள்ளை, தமிழ்ப் புலவர் அகராதி, (ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், சென்னை 1952), ப.292.

19. புத்தமித்திரனார், வீரசோழியம், பாயி.2.

20. வே.ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் (பதி.), அறிவனார் இயற்றிய பஞ்சமரபு, பாயி.2.

21. 'அவையடக்கத்தின் தோற்றம்' என்ற முன் இயலில் விளக்கப்பட்டுள்ளது [1.5.10].

22. கம்பராமாயணம் அவை.1 (த.சி.பாயி.4).

23. மேலது, 2 (த.சி.பாயி.5).

24. மேலது, 3 (த.சி.பாயி.6).

25. மேலது, 4-6 (த.சி.பாயி.7-9).

26. மேலது, பாலகாண்டம், நாட்டுப்படலம், பாடல் 1. இது தொடர்பாக 'அவையடக்கப் பாடல்களின் அமைப்புமுறை' என்ற இயலில் விரிவாகப் பேசப்பட்டுள்ளது.[4.2.3.1.2.]

27. வை.மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார் (உ.ஆ.), கம்பராமாயணம், பாலகாண்டம், (முவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, 1916), ப.25.

28. சேக்கிழார், பெரியபுராணம், அவை.1 (பாயி.5).

29. மேலது, 2 (பாயி.6).

30. மேலது, 3 (பாயி.7).

31. S. Govindarajan, 'The age of Sekkilar, Based on Sculptures and Inscriptions', இ.ப.த.ம., பதினைந்தாவது கருத்தரங்க ஆய்வுக் கோவை, தொகுதி-3, 1983, ப.105.

32. தமிழண்ணல், முன்னூல், ப.261.

33. கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள், கந்தபுராணம், அவை.1-20. (முதற்பகுதி, தி. பட்டுச்சாமி ஓதுவார் (பதி.), திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து வெளியீடு, 1952), பக்.5-7.

34. மேலது, அவை.17.

35. மேலது, அவை.19.

36. மேலது, அவை.16.

37. மேலது, அவை.4.

38. மேலது, அவை.5.

39. தமிழண்ணல், முன்நூல், ப.266.

40. நம்பி திருவிளையாடற்புராணம், அவை.1-4 (உ.வே. சாமிநாதையர் (பதி.), கபீர் அச்சுக் கூடம், சென்னை, 1972, மூன்றாம் பதிப்பு), ப.8.

41. மேலது, அவை.3.

42. தமிழண்ணல், முன்நூல், ப.314.

43. அம்பிகாபதிக் கோவை, அவையடக்கம், (மு. அருணாசலம் (பதி.), தமிழ் நூலகம், 1944), நூல்பகுதி, ப.1.

44. ந.சி. கந்தையாபிள்ளை, முன்நூல், ப.17.

45. தமிழண்ணல், முன்நூல், ப.341.

46. குணவீரபண்டிதர், நேமிநாதம், பாயி.2.

47. குணவீரபண்டிதர், வச்சணந்திமாலை, (கழக வெளியீடு, 1964), ப.70.

48. அ) தமிழண்ணல், முன்நூல், ப.263.

48. ஆ) புகழேந்தி, நளவெண்பா, த.சி.பா.4.

49. மெய்கண்ட சாத்திரம் என வழங்கும் சித்தாந்த சாத்திரம் பதினான்கு மூலமும் உரையும், (சைவசித்தாந்த மகா சமாஜம், மயிலாப்பூர், சென்னை, 1940, இரண்டாம் பதிப்பு, ப.7.

50. T.P. Meenakshi Sundaram, Cp.Cit., p.165.

51. மெய்கண்ட சாத்திரம் என வழங்கும் சித்தாந்த சாத்திரம் பதினான்கு மூலமும் உரையும், பக்.221-222.

52. மேலது, ப.378.

53. வடிவேலு செட்டியார் முதலியோர் (பதி.), சிவப்பிரகாசப் பெருந்திரட்டு (குறுந்திரட்டுடன்), பாயிரப்பணை, அறிஞரைப் புகழ்ந்தவையடக்கம், பாடல் 4 (சச்சிதாநந்த அச்சியந்திரசாலை, சென்னை, 1912), ப.22.

54. மு. வரதராசன், தமிழ் இலக்கிய வரலாறு, (சாகித்திய அகாதெமி, புதுதில்லி, 1977, இரண்டாம் பதிப்பு), ப.185.

55. இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், அடியார்க்கு நல்லார் உரை, (உ.வே. சாமிநாதையர் (பதி.), கபீர் அச்சுக் கூடம், சென்னை, 1955, ஆறாம் பதிப்பு), ப.11.

56. தமிழண்ணல், முன்னூல், ப.355.

57. T.P. Meenakshi Sunderam, Cp.Cit.p.158.

58. வில்லிபாரதம், அவை 1-3 (பாயி.5, 6, 7).

59. மேலது, பாயி.8க்கு உரை.

60. உமாபதி சிவாசாரியர், சிவப்பிரகாசம், பாயி.12.

61. மேலது, சங்கற்ப நிராகரணம், பாயிர அடி 49.

62. மேலது, கோயிற்புராணம், பாயி.27.

63. வாமனமுனிவர், மேருமந்திர புராணம்.

64. தமிழண்ணல், முன்னூல், ப.344.

65. நவநீதநாடன், கலித்துறைப் பாட்டியல் என்னும் நவநீதப்பாட்டியல், த.சி.பாயி.2.

66. கே.ஏ. நீலகண்டசாஸ்திரி, தென்னிந்திய வரலாறு (இரண்டாம் பகுதி), (மு.ரா. பெருமாள் முதலியார் (தமிழாக்கம்), தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1973), ப.117.

67. சிவப்பிரகாசப் பெருந்திரட்டு, முன்னூல், பக்.22-24.

68. தத்துவராய சுவாமிகள், அமிர்தசாரம், கடவுள் வாழ்த்து, 7. ஸ்ரீ தத்வராயஸ்வாமிகள் இயற்றியுள்ள அடங்கன்முறைப் பிரபந்தம், (சிதம்பரம் ஸ்ரீ பொன்னம்பலம் மடம் வெளியீடு, அக்ஷய வருடம்), ப.564.

69. மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு, பதினைந்தாம் நூற்றாண்டு, ப.89.

70. கயாதரர், கயாதரம், பாயி.2.

71. மேற்கோள்: மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு, பதினைந்தாம் நூற்றாண்டு (காந்தி வித்தியாலயம், மாயூரம், 1969), ப.371.

72. தேவரையர் மகாகரிசல், கரிசல் பாயிரம், அடி.21-22. செந்தமிழ்ச் செல்வி, இரண்டாஞ்சிலம்பு, (கழக வெளியீடு, ருத்ரோத்காரி), ப.68.

73. கஞ்சனம்மானை, கி. கோதண்டபாணி (பதி.), (தஞ்சை சரசுவதி மகால் நூல்நிலைய வெளியீடு, 1976), முகவுரை, ப.xv.

74. மேலது, காப்பு.2.

75. மு. சண்முகம்பிள்ளை, சிற்றிலக்கிய வளர்ச்சி (மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1981), ப.3.

76. தமிழண்ணல், முந்நூல், ப.345.

77. மேலது, ப.93.

78. மு. இராகவையங்கார் (பதி.), பரஞ்சோதியார், சிதம்பரப் பாட்டியல், காப்பு.

79. திருக்குருகைப் பெருமாள் கவிராயர், மாறனலங்காரம், கடவுள் வாழ்த்து 4.

80. ச.வே. சுப்பிரமணியன் (பதி.), இலக்கணத்தொகை-யாப்பு-பாட்டியல், (தமிழ்ப் பதிப்பகம், சென்னை, 1978), ப.8.

81. தமிழண்ணல், முந்நூல், ப.266.

82. பரஞ்சோதி, திருவிளையாடற்புராணம், அவை.2 (பாயி.22).

83. நிரம்பவழகிய தேசிகர், சேதுபுராணம், அவை.1-12.

84. மேலது, திருப்பரங்கிரிப்புராணம், (பாயி.19, 20, 21).

85. மேலது, 19.

86. T.P. Meenakshi Sundaran, Op.Cit., P.157.

87. நெல்லூர் வீரவெங்கும் ஜசுகவிராஜர், அரிச்சந்திர புராணம், பாயி.11.

88. அதிவீரராமபாண்டியன், நைடதம், நா. கதிரைவேற்பிள்ளை உரை, (வித்தியாரத்நாகர அச்சுக் கூடம், சென்னை, 1914), நூலாசிரியர் வரலாறு, ப.16.

89. வரதுங்கராமபாண்டியன், பிரமோத்ரகாண்டம், அவை.1-3, (பாயி.10, 11, 12).

90. ஐயம்பெருமாள்பிள்ளை, பாண்டிமண்டல சதகம், அவையடக்கம் (செந்தமிழ்ச் செல்வி, தொகுதி-19, பகுதி-8, ஜூன்-ஜூலை, 1921), ப.257.

91. வேப்பத்தூர்ச் சங்கப் புலவர், திருமாலிருஞ்சோலைக் கலம்பகம் என்கிற அழகர் கலம்பகம், அவையடக்கம் (வை.மு.கோ. கம்பெனி, சென்னை, ஆண்டு இல்லை), ப.6.

92. செங்கோட்டை கவிராஜ பண்டாரத்தையா, திருமலை முருகன் பிள்ளைத் தமிழ், பாடல் 2 (பிள்ளைத் தமிழ்க் கொத்து, கழக வெளியீடு, சென்னை, 1957), ப.1.

93. திவாகரமாலை என்னும் திவாகரவெண்பா, காப்பு (குறள் வெண்பா நூற்கோவை, கழக வெளியீடு, 1967), ப.5.

94. A Descriptive Catalogue of the Tamil Manuscripts, Vol.I, (Saraswathi Mahal Library, Tanjavoor, 1964), p.231.

95. சிவானந்தபோதம், கமலைஞானப்பிரகாசர் காப்பு 5, பெரியஞானக்கோவை, மூன்று பாகங்கள் (பி. ரத்தினநாயகர் ஸன்ஸ், சென்னை, 1949, சுத்தப் பதிப்பு), ப.419.

96. மறைஞானசம்பந்தநாயனார், சைவசமய நெறி, பாயி.24.

97. சிவதருமோத்தரம், பாயி.6.

97. அ) இரேவணசித்தர், சிவஞானதீபம், அவையடக்கம்.

98. மேற்கோள்: மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு, கி.பி. பதினாறாம் நூற்றாண்டு, ப.79.

99. தி. நடராசன் (பதி.), உலகுடையபெருமான் கதை, (மதுரை தமிழ்நாவலர் பப்ளிஷர்ஸ், மதுரை 1981), நூன்முகம்.

100. தி. நடராசன் (பதி.), உடையார் கதை, (கூடல் பப்ளிஷர்ஸ், மதுரை, 1980), நூன்முகம், ப.ii.

101. உலகுடையபெருமான் கதை, அடி.34-54; உடையார் கதை, அடி.1-21.

102. எஸ். வையாபுரிப்பிள்ளை (பதி.), மு[illegible]ல், ப.3.

103. சுவாமிநாததேசிகர், இலக்கணக்கொத்து, பாயி.6.

104. மேலது, அடி.6:29-32.

105. மேலது, உரை.

106. கா. சுப்பிரமணிய பிள்ளை, இலக்கிய வரலாறு, இரண்டாம் பாகம் (ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1973, ஏழாம் பதிப்பு), ப.424.

107. T.P. Meenakshi Sundaran, Op.Cit., P.161.

108. சீறாப்புராணம், விலாதத்துக்காண்டம், கடவுள் வாழ்த்துப் படலம், 18, 19, 20, (அவை-1-3).

109. தொ. பரமசிவம், 'சீறாவின் கடவுள் வாழ்த்துப் பகுதி ஓர் ஆய்வு' சீறா ஆய்வுத்திரட்டு, (டாக்டர் சாகிர் உசேன் கல்லூரி, இளையான்குடி, 1975, திருத்திய பதிப்பு), பக்.59-64.

110. T.P. Meenakshi Sundaran, Op.Cit., pp.160-161.

111. மேற்கோள்: மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு, கி.பி. 16ஆம் நூற்றாண்டு, முதற்பாகம், (மாயூரம் காந்தி வித்தியாலயம், 1977), ப.221.

112. மேலது, ப.221.

113. மேலது, ப.221-222.

114. சைவ எல்லப்ப நாவலர், திருவாரூர்க்கோவை, அவை.1.

115. நல்லாப்பிள்ளை, மகாபாரதம், அவை.1-3. (முத்துராமலிங்கத் தேவர் (பதி.), வித்யாரத் நாகர அச்சுக்கூடம், சென்னை, 1911), ப.3.

116. தமிழண்ணல், முன்நூல், ப.95.

117. கா. சுப்பிரமணியபிள்ளை, முன்நூல், ப.420.

118. 1) சிவப்பிரகாச சுவாமிகள், பிரபுலிங்கலீலை, துதிகதி.12.

2) அரசகேசரி இரகுவம்சம், பாயி.4-7, (அவை 1-4).

119. வீரமாமுனிவர், தேம்பாவணி, பாயி.4-6 (அவை.1-3).

120. வீரமாமுனிவர், கித்தேரியம்மாள் அம்மானை, பாயிர அம்மானைத் தொடை 12-17.

121. T.P. Meenakshi Sundaran, Op.Cit. PP.160-161.

122. திரிகூடராசப்பக் கவிராயர், த.சி., திருக்குற்றாலக்குறவஞ்சி, பாயி.9.

மேலது, திருக்குற்றாலச் சிலேடை வெண்பா, காப்பு.5.

மேலது, திருக்குற்றாலத் தலபுராணம், அவை.1-5.

123. மேலது, திருக்குற்றாலத் தலபுராணம், அவை.1.

124. கா. சுப்பிரமணிய பிள்ளை, முன்நூல், பக்.435-437.

125. சிவஞான சுவாமிகள், காஞ்சிப்புராணம், பாயி.23-26.

126. மேலது, திருநகரப்படலம், 125, 126.

127. கருணைப்பிரகாச சுவாமிகள் முதலியோர், சீகாளத்திப் புராணம், அவை.1-2.

பாலசுப்பிரமணியக் கவிராயர், பழநித் தலபுராணம், அவை.1-4 (பி.நா. சிதம்பரநாத முதலியார் (பதி.), சென்னை, 1914, மூன்றாம் பதிப்பு), பக்.38-39.

ஞானக்கூத்தர், விருத்தாசல புராணம், பாயி.13, 14(அவை.1-2).

128. மாதவச் சிவஞான சுவாமிகள், சிவதத்துவவிவேகம், பாயி.7.

129. பி. ஆறுமுக முதலியார் (பதி.), குமாரதேவர் சாஸ்திரக்கோவை, பூமகள் விலாச வெளியீடு, சென்னை, 1927), ப.38.

130. மேல்நாட்டு விங்கர், சோதிடஹோரா சாத்திரம், அவையடக்கம்.

131. நா. வரதராஜுலு நாயுடு (பதி.), ஸ்ரீ ஆண்டாள் பிள்ளைத் தமிழ், பாடல் 2, 3 (அவை.1-2).

படிக்காசுப் புலவர், தண்டலையார் சதகம், அவையடக்கம் (கழக வெளியீடு, 1966), ப.4.

வெண்மணி நாராயணபாரதி, திருவேங்கட சதகம், பாடல் 102.

கார்மேகக் கவிஞர், கொங்குமண்டல சதகம், அவையடக்கம்.

முத்தப்பசெட்டியார், செயங்கொண்டார் சதகம், பாயி.4.

வரதபண்டிதர், குருநாதசுவாமி கிள்ளைவிடு தூது, வ.மு. இரத்நேசுவரையர் முதலியோர் (பதி.ஆ.) சோதிட பிரகாசயந்திரசாலை கொக்குவில், 1921, இரண்டாம் பதிப்பு), ப.1.

சுப்பிரதீபக் கவிராயர், கூளப்பநாயக்கன் காதல், கண்ணி 6-9.

பெரியவன் கவிராயர், திருமலை முருகன் பள்ளு, அவையடக்கம் (மு. அருணாசலம் (பதி.), சக்திகாரியாலயம், சென்னை, 1944), ப.7.

நாராயணயங்கார் (பதி.), திருமால் இருஞ்சோலைமலை, அழகர்பிள்ளைத் தமிழ், அவை.1-4 (தமிழ்ச் சங்கமுத்திராசாலை, மதுரை, 1919), பக்.1-3.

சிதம்பரம் சென்னமல்லையர், சிவசிவ வெண்பா, குறள்வெண்பா நூற்கோவை, முதற்பகுதி, (கழக வெளியீடு, 1967), ப.7.

பிறைசைச் சாந்தக் கவிராயர், இரங்கேச வெண்பா என்னும் நீதிசூடாமணி, (கழக வெளியீடு, 1966), ப.3.

132. இராமய்யன் அம்மானை (இராமப்பையன்), (சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார் (பதி.), சரசுவதி மகால் நூல் நிலையம், தஞ்சை, 1978, இரண்டாம் பதிப்பு), ப.2.

133. தமிழ்க்கூவல், முன்னூல், ப.95.

134. அருணாசலக் கவிராயர், இராம நாடக கீர்த்தனை, பாயி.7, 8; தரு.6.

135. மேலது, அபசார சூசனை, பாயி.5; தரு.4.

136. அ) மேலது, பல்லவி. தரு 4.

ஆ) மேலது, சரணம் 3.

137. மீனாட்சிசுந்தரம்பிள்ளை, பட்டீச்சுரப்புராணம், அவை.1-7. (உ.வே.சா. (பதி.), ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத் திரட்டு, கமர்சியல் அச்சுக்கூடம், சென்னை, 1926), ப.631.

,, திருவான்குளப்புராணம், அவை.1-3. (உ.வே.சா. (பதி.) மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத்திரட்டு), ப.637.

,, சிவஞானயோகிகள் சரித்திரம், அவை.1-4, (உ.வே.சா. (பதி.) மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத்திரட்டு), பக்.681-682.

,, வீரவனப்புராணம், அவை.1-4 (உ.வே.சா. (பதி.) வைஜயந்தி அச்சுக்கூடம், சென்னை, 1903), பாடல் 18-21.

,, குறைமாநகர்ப் புராணம், அவை.1-2, (உ.வே.சா. (பதி.), பிரஸிடென்ஸி அச்சுக்கூடம், சென்னை, 1904), ப.5.

,, திருவாரூர்த்தியாகராசர் லீலை, அவை.1-7 (உ.வே.சா. (பதி.), பிரஸிடென்ஸி அச்சுக்கூடம், சென்னை, 1905), பக்.8-9.

,, மண்ணிப்படிக்கரைப் புராணம், அவை.1-2 (உ.வே.சா.(பதி.), பிரஸிடென்ஸி அச்சுக்கூடம், சென்னை, 1907), ப.5.

,, தனியூர்ப் புராணம், அவை.1-2 (உ.வே.சா. (பதி.), பிரஸிடென்ஸி அச்சுக் கூடம், சென்னை, 1907), ப.4.

138. மீனாட்சி சுந்தரம்பிள்ளை, திருவானைக்கா அகிலாண்டநாயகி பிள்ளைத் தமிழ், பாயி.13 (உ.வே.சா.(பதி.) ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத் திரட்டு), 36.

,, சேக்கிழார் பிள்ளைத் தமிழ், பாயி.2 (உ.வே.சா. (பதி.), ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத் திரட்டு), ப.169.

,, சீகாழிக்கோவை, காப்பு-3 (உ.வே.சா. (பதி.), ஸ்ரீமீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத்திரட்டு), ப.271.

,, திருச்சிராமலையமகவந்தாதி, கடவுள் வாழ்த்து,12 (உ.வே.சா. (பதி.), ஸ்ரீமீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத்திரட்டு), ப.414.

,, திருக்குடந்தைத் திரிபந்தாதி, அவையடக்கம் (உ.வே.சா. (பதி.), ஸ்ரீமீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத்திரட்டு), ப.451.

139. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, பட்டீச்சுரப்புராணம், அவை.2.

140. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, சேக்கிழார் பிள்ளைத் தமிழ், பாயி.2.

141. வல்லூர் தேவராஜபிள்ளை, குசேலோபாக்கியானம், பாயி.16.

142. வல்லூர் தேவராஜபிள்ளை, சூதசங்கிதை, அவை.1-7, பாயி.44-50.

143. கோபால கிருஷ்ண பாரதியார், திருநாளைப் போவாரென்னும் நந்தனார் சரித்திரக் கீர்த்தனை, (ஆர்.ஜி.பதி கம்பெனி, சென்னை, 1967), ப.2.

144. சிதம்பர பாரதிகளென்ற சின்னபாரதி, பெரியபுராணக் கீர்த்தனை, (சுப்ராமய்யர் (பதி.), ஷ்ரியன் அச்சுக் கூடம், காரைக்குடி 1929), ப.7.

145. வேதநாயகம்பிள்ளை, நீதிநூல், அவை.1-6 (கழக வெளியீடு, 1950), பக்.10-11.

146. வண்ணச் சரபம் அருள்மிகு தண்டபாணி சுவாமிகள், அறுவகை இலக்கணம், ஆக்கியோன் துணிபு, ச.வே. சுப்பிரமணியன் (பதி.), இலக்கணத்தொகை, யாப்பு-பாட்டியல், (தமிழ்ப் பதிப்பகம், 1978), பக்,528-529.

147. தி. வீரபத்திர முதலியார், விருத்தப்பாவியல், அவை.1-7, ச.வே. சுப்பிரமணியன், (பதி.), இலக்கணத் தொகை-யாப்பு-பாட்டியல், (தமிழ்ப் பதிப்பகம் 1978), பக்.6-7, (கழக வெளியீடு, 1984), ப.6.

148. பெ. சுந்தரம்பிள்ளை, மனோன்மணீயம், ஜெ. ஸ்ரீசந்திரன் (பதி.), (வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 1965), ப.19.

149. வி.கோ. சூரியநாராயண சாஸ்திரி, நாடகவியல், பாயி.7.

150. மேலது, மானவிஜயம், பாயி.8-10.

151. மு.க. காந்திதாசன், வேள்பாரி (நவீன கதா அச்சுக்கூடம், இரங்கூன், 1932) முகவுரை.

152. திருச்சிற்றம்பலநாவலர், அஞ்ஞாமலைச் சதகம், பாடல் 102.

153. பூண்டி அரங்கநாத முதலியார், கச்சிக் கலம்பகம், நாவலர் துதி, (கழக வெளியீடு, 1964), பக்.3-4.

154. வெள்ளக்கால் பழனியப்ப சுப்பிரமணிய முதலியார், நெல்லைச் சிலேடை வெண்பா, சிலேடை வெண்பா நூற்கொத்து, (கழக வெளியீடு, 1964, இரண்டாம் பதிப்பு), ப.2.

155. கவிக்குஞ்சரபாரதி, அழகர் குறவஞ்சி, பாயி.11.

156. இராசப்ப உபாத்தியாயர், மநுநீதிசதகம், நூல் வரலாறும் அவையடக்கமும், அ. மஹாதேவசெட்டியார் (பதி.), ஸ்ரீசாதுஇரத்தின சற்குரு புத்தகசாலை, சென்னை 1928), பக்கம் இல்லை.

157. சுப்பிரமணிய ஐயர், தேவைப்பிள்ளைத் தமிழ் அவையடக்கம், (கந்தர் சஷ்டி விழாக்கழக வெளியீடு, தேவகோட்டை, குரோதி ஆண்டு), ப.4.

158. இராசப்ப உபாத்தியாயர், முன்னூல், நூல் வரலாறும் அவையடக்கமும்.

159. திருச்சிற்றம்பல நாவலர், முன்னூல், பாடல் 102.

160. சு. கிருஷ்ணசாமி முதலியார் (உ.ஆ.), கம்பராமாயண உரை, (முத்தமிழ் விளக்க அச்சுக்கூடம், சேலம், 1861) உரையாசிரியர் அவையடக்கம்.

161. சிவஞானசுவாமிகள், காஞ்சிப்புராணம், பொன் சண்முகனார் உரை, முத்தமிழ் அச்சகம், காஞ்சிபுரம், (1964), உரையாசிரியர் அவையடக்கம்.

162. கொங்குமண்டல சதக உரை, உரையாசிரியர் அவையடக்கம்.

163. அரசஞ்சண்முகனார், திருக்குறட் சண்முக விருத்தியுள் முதற்குறட்விருத்தி, அவையடக்கம், (மீனலோசனி அச்சியந்திரசாலை, மதுரை, 1921), பக்கம் இல்லை.

164. கு. ஆறுமுகப் பெருமாள் நாடார் (பதி.), வள்ளியம்மை கதை வில்லுப்பாட்டு, ப.1.

165. அர்ச்சுனன் அல்லியை மாலையிட்ட அல்லி நாடகம் (பி. இரத்தினநாயகர் அன் ஸன்ஸ், சென்னை-1, ஆண்டு இல்லை), ப.1.

166. மேற்கோள்: எஸ். சௌந்தரபாண்டியன், முன்நூல், ப.139.

167. மேலது, ப.116.

168. தென்கரையம்பதியார், பூலர் அம்மானை, வரி.56-82.

169. சி. சுப்பிரமணிய பாரதி, பாரதி நூல்கள் (வசனங்கள்), (பாரதி பிரசுராலயம், சென்னை, 1932, இரண்டாம் பதிப்பு), முகவுரை. பாரதிதாசன், குறிஞ்சித்திட்டு, (பாரி நிலையம், சென்னை, 1959), ஆசிரியர் முன்னுரை.

170. தேசிக விநாயகம்பிள்ளை, மருமக்கள் வழி மான்மியம், அவையடக்கம் (பாரி நிலையம், சென்னை மூன்றாம் பதிப்பு, 1965), பக்.39-40.

171. நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை, சங்கொலி, (தமிழ்ப் பண்ணை, சென்னை, 1945, இரண்டாம் பதிப்பு) பக்க எண் இல்லை.

172. வ.உ. சிதம்பரம்பிள்ளை, அகமே புறம். அடக்கம் (புரோகிரஸிவ் பிரஸ், சென்னை, 1916, இரண்டாம் பதிப்பு) ப.16.

173. மேலது, மனம்போல் வாழ்வு, அடக்கம் (இந்தியா பிரிண்டிங் வொர்க்ஸ், சென்னை, 1916, இரண்டாம் பதிப்பு), ப.16.

174. சுத்தானந்த பாரதியார், பாரத சக்தி மகாகாவியம், மங்கலவாழ்த்துப் படலம், 15.

175. மேற்கோள்: நெல்லை. ந. சொக்கலிங்கம், அவையடக்கம், நான்காவது கருத்தரங்க மலர், (இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம், 1972), ப.72.

176. சு. நடேசபிள்ளை, சகுந்தலை வெண்பா, சமர்ப்பணம் (இராமநாதன் கழகம், சுன்னாகம், இலங்கை, 1963, முதற்பதிப்பு), பக்க எண் இல்லை.

177. கோ. அண்ணாமலை கல்வித் தேவர், தமிழாதிக் கதை, (கல்வித் தேவர் புத்தகசாலை, இரங்கூன், 1954), வரி.1-25.

178. சாலை இளந்திரையன், அன்னை நீ ஆட வேண்டும் (பாரி நிலையம், சென்னை, 1964, முதற்பதிப்பு) பக்கம் இல்லை.

179. கலைவாணன், உதயம், அவை.1-12 (அரங்க. சீனிவாசன், (பதி.) (கலைவாணன் பதிப்பக வெளியீடு, திருச்சி, 1969), பக்.21-24.

180. மேலது, அவை.12.

181. மேலது, வித்வான் எஸ்.கே. இராமராசன் முன்னுரை, பக்கம் இல்லை.

182. புலவர் குழந்தை, இராவண காவியம், அவை.1-9, (பாபி.40-48) (வேலா பதிப்பகம், ஈரோடு, 1946), பக்.6-7.

183. கலைவாணன், உதயம், (பட்டணாவிஜ் பதிப்பகம், திருச்சிராப்பள்ளி, ஆண்டு இல்லை), ப. iii.

184. மேற்கோள்: க. கைலாசபதி, அடியும் முடியும், (பாரி நிலையம், சென்னை, 1970, முதற்பதிப்பு), பக்.111-112.

185. கண்ணதாசன், இயேசு காவியம், பாயிரம் (கலைக்காவிரி, திருச்சிராப்பள்ளி, 1985, இரண்டாம் பதிப்பு), ப.1.

186. கே. அறிவுமதி, என் பிரிய வசந்தமே!, காணிக்கை.

187. மதுக்கூர் கண்ணன், சிவப்பு மேகங்கள், சூரியன் தூங்கும் சொப்பனப் பொழுதுகள்!

188. ச. சாம்பசிவன், 'பொருள்' (மதுரைத் திருவள்ளுவர் கழகத்தில் 18-10-1961 புதன்று நிகழ்ந்த கலைமகள் விழா கவியரங்கம்), செந்தமிழ், தொகுதி-58, பகுதி (2) 3, ப.73.

189. பஞ்சாரசன், 'தமிழியக்கத் தளபதி' (புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பிறந்த நாள் விழா கவியரங்கம், நாள்: 18-5-1975), <u>பாவலர் பார்வையில் பாவேந்தர்,</u> (செய்தி, விளம்பரம் மற்றும் சுற்றுலா இயக்கம், புதுவை அரசு, 1975), ப.31.

190. மௌனசுவாமிகள், கொலைமறுத்தல், அவையடக்கம் (பெ.குப. குப்பையா வெளியீடு, சிவகங்கை ஜமீன், 1929), ப.2.

191. கண்ணதாசன் கவிதைகள் - மூன்றாம் தொகுதி (வானதி பதிப்பகம், சென்னை, 1973), ப. vii.

192. மயிலை. சீனி. வேங்கடசாமி, கிறிஸ்தவமும் தமிழும் (கே.ஏ. வள்ளிநாதன் பதிப்பு, சென்னை, 1958), ப. ii.

இயல் நான்கு

அவையடக்கப் பாடல்களின் அமைப்புமுறை

உள்ளடக்கம்

4. அவையடக்கப் பாடல்களின் அமைப்புமுறை

பல உறுப்புகளின் சேர்க்கை வடிவமே கவிதை. தொல்காப்பியர் செய்யுளியலில் செய்யுள் உறுப்புகளை வகைப்படுத்தியிருப்பதும் இதனையே உணர்த்துகின்றது. இவ்வியல் பல உறுப்புகளின் சேர்க்கையால் உருவான அவையடக்கப் பாடல்களின் அக அமைப்பு, புற அமைப்பு, வைப்புமுறை போன்றவற்றை விளக்குகின்றது.

4.1. கருத்தும் வடிவமும்:

ஜார்ஜ் கில்லன் கவிதையைக் 'கட்டப்பெற்ற மொழி'[1] என்று குறிப்பிடுகின்றார். கவிதைகளின் அமைப்பினைக் கணிப்பதற்கென விதிகள் இதுவரை முழுமையாக வரையறுக்கப்பெறவில்லை. 'ஸ்ட்ரக்சர்' என்ற ஆங்கிலச் சொல்லிற்கு'இலக்கியப் பகுதிகள் ஒவ்வொன்றுக்குமுள்ள உறவு முறைகளின் தொகுப்பு'[2] என்று இலக்கிய அகராதி பொருள் கொள்கின்றது. மொழியியல் அறிஞரான சசூர்,

> "மொழியின் அமைப்பு என்பது கருத்து, வடிவம், அவற்றின் தொடர்பு ஆகியவற்றை உள்ளடக்கியது. .... மொழி பல அலகுகளால் ஆனது; ஒவ்வொரு அலகும் ஒவ்வொரு விதத்தில் இன்னொன்றுடன் தொடர்பு கொண்டுள்ளது"[3]

என விளக்குகின்றார். இது கவிதைக்கும் பொருத்திப் பார்க்க ஏற்றது. கவிஞனின் எண்ணங்கள் கவிதை என்ற வடிவத்தில் வெளிப்படுகின்றன. எண்ணங்களுக்கும் வடிவத்திற்கும் உள்ள தொடர்பு கவிதையின் அமைப்பினைப்

புலப்படுத்தும். ஆதலால் கவிதையின் அலகுகளை ஆராய்தல் அதன் அமைப்பினைக் காண உதவும்.

சிறந்த அமைப்பினையுடைய கவிதைகளே மக்கள் மனதில் நிலைத்து நிற்கும். 'கவிதையில் சொல்லப்பட்டிருக்கும் கருத்தும் வடிவமுமே கவிதை நிலைத்து நிற்கக் காரணங்களாக அமையும்'[4] என்ற ஏ.ஜி. உறாப்பரின் கூற்று ஈண்டு நினைக்கத்தக்கது.

கருத்து மற்றும் வடிவத்தால் அமைக்கப்படும் கவிதைகள் ஒரே கருத்தை வலியுறுத்தினாலும் அவற்றிலும் வேறுபாடுகளைக் காணமுடிகின்றது. 'நிலவு' என்பதைப் பொருளாகக் கொண்டு பல கவிஞர்கள் கவிதை இயற்றியுள்ளனர். எனினும் ஒரு கவிதைக்கும்மற்றொரு கவிதைக்கும் வேறுபாடு இருப்பதை உணரமுடிகின்றது. வடிவங்கள் வேறுபடும்போது கருத்துகள் சில குறிப்பிட்ட வகைகளில் அடங்கிவிடுவதைக் காணமுடிகின்றது.

அவையோர்க்குத் தம் அடக்கப் பண்பைப் புலப்படுத்த வேண்டும் என்ற ஒரே நோக்கத்தைக் கருத்தாகக் கொண்டு புலவர்கள் பலர் தத்தம் பாடல்களை விரித்துச் செல்கின்றனர். ஒரே கருத்துத் திரும்பத்திரும்ப வெவ்வேறு முறைகளில் கவிஞர்களால் கையாளப்படுகின்றது. தமிழில் அவையடக்கப் பாடல்கள் பரந்துபட்ட அளவில் அமைந்திருப்பினும் அவற்றில் அமையும் கருத்துகள் ஒருநிகரன. அக்கருத்தினின்று புலப்படும் கருத்தலகுகள் பாடலமைப்பினை வெளிப்படுத்தும்.

டோனல்ட் பிட்டர்ஸன் பல ஆங்கிலக் கவிதைகளை வரிசைப்படுத்தி, கவிதையின் கருத்து மற்றும் வடிவம் பற்றிய வினாக்களைத் தந்து, அவற்றின் விடைகள் ஒரு கவிதைக்கும் மற்றொரு கவிதைக்கும் உள்ள அமைப்பு வேறுபாட்டையும்,

கவிதை எவ்வாறு கட்டப்பட்டுள்ளது என்பதையும் புலப்படுத்துவதாகக் கூறுகின்றார்[5].

கவிதையின் அமைப்பில் கருத்தும் வடிவமும் முதன்மைப்படுத்திப் பேசப் படுகின்றன. கவிதை அமைப்பினைக் காண,பேசப்படும் கருத்து இன்றியமையாதது ஆகிறது. கருத்தினை அறிய உள்ளடக்கம் துணைநிற்கிறது. இதனையே 'இலக்கியத்தின் அமைப்பினைக் காண உள்ளடக்கம் தொடக்க அலகாக அமையும்'[6] என்ற புபோமிர் டெலிஸெலின் கருத்தும் வலியுறுத்துகின்றது. எனவே கருத்து பாடலின் அக அமைப்பாகவும் வடிவம் பாடலின் புற அமைப்பாகவும் அமைவன எனல் பொருந்தும்.

இவ்விளக்கங்களை அடிப்படையாகக் கொண்டு வெவ்வேறு காலகட்டங்களில் எழுதப்பெற்ற நூல்களில் இடம்பெறும் அவையடக்கப் பாடல்களின் அமைப்புமுறை ஆராயப்பெறுகின்றது.

4.2. அவையடக்கப் பாடல்களின் அமைப்புகள்:

அவையடக்கப் பாடல்களின் அமைப்பினை அகஅமைப்பு என்றும் புற அமைப்பு என்றும் பிரித்துக் கொள்ளலாம். கருத்தை அடிப்படையாகக் கொண்டு அக அமைப்பும், வடிவத்தை அடிப்படையாகக் கொண்டு புற அமைப்பும் விளக்கம் பெறுகின்றன.

4.2.1. அக அமைப்பு:

அக அமைப்பு என்பது பேசப்படும் கருத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். நூலாசிரியன் தன்னையும், தன் நூலையும் தாழ்த்துதல், அவையோர் உயர்வு, முன்னோடிகளின் உயர்வு, பாடுபொருள் சிறப்பு போன்ற கருத்தலகுகள் இணைந்து அவையடக்கப் பாடல்களை உருவாக்குகின்றன. இக்கருத்தலகுகள் பாடல்களில் தனித்தும்

உவமைகள் வழியும் புலப்படுத்தப் பெறுகின்றன. இவை கூட்டியும் குறைத்தும் முன்பின் மாறியும் அமையும்.

இவற்றில் நூலாசிரியன் தன்னையும், தன் நூலையும் தாழ்த்துதல், அவையோர் உயர்வு ஆகியன அடிப்படை அலகுகளாக விளங்குகின்றன. பாடலில் இவற்றை நீக்கிவிட்டுப் பார்த்தால் பாடலின் நோக்கம் பொருளற்றதாக அமைந்துவிடும். ஆதலால், அவையடக்கப் பாடல்களில் கருத்துக் குவிந்துள்ள அலகுகளாக இவை கருதப்படுகின்றன. பிற அலகுகள் இவற்றிற்குத் துணையாக நின்று, பாடல் அமைப்பினை உருவாக்க உதவுவனவாகக் கொள்ளப்பெறும். ஈண்டு கருத்தலகுகள் தனித்தனியாக விளக்கப்பெறினும், அவற்றுடன் பிற அலகுகள் இணைந்துவரும் முறைகளும் காட்டப்பெறும்.

4.2.1.1. நூலாசிரியன் தன்னைத் தாழ்த்திக் கொள்ளுதல்:

அவையடக்கப் பாடல்களின் அக அமைப்பில் கருவாக விளங்குவது நூலாசிரியன் தன்னைத் தாழ்த்திக் கொள்வதும், தன் நூலைத் தாழ்த்திக் கொள்வதும் என்ற கருத்தலகுகளே. அவையடக்கப் பண்பை வெளிக்காட்ட இவ்வலகுகளைக் கவிஞன் பாடல்களில் அமைத்துக் கொள்வது இன்றியமையாதனவாக உள்ளது.

"கன்னபா கமெய்களிப்ப தோரளப் பிறொல்கதைமுன்
சொன்னபா வலன்முகனறு சுகன்றி ருத்தாதை
அன்பா ரதந்தன்னை யோரறிவி லேனுரைப்பது
என்னபா வமற்றென்னை யின்றென்சொ லாதுலகே"[7]

என்ற பாடலில் புலவன் தன்னை 'அறிவிலேன்' என்று தாழ்த்திக் கொள்கிறான். இத்துடன் 'வியாசன் சொன்ன பாரதம்' என்று முதனூல் சிறப்பு உரைக்கப் பட்டது. இந்த இரு அலகுகளையும் இணைத்து 'மகாகவிஞனான வியாசன் சொன்ன பாரதத்தை அறிவற்ற நானும் கூறுதலைக் கேட்டு இவ்வுலகம் என்னை

என்ன சொல்லும்' என்று அவையடக்கமாக அமைத்துள்ளார் ஆசிரியர். ஈண்டு 'உலகு' என்றது அவையோரைக் குறிக்கும்.

கம்பர் 'பித்தர், பேதையர், பத்தர்'[8] என்றும், வீரமாமுனிவர் 'துணிவிலான்'[9] என்றும், தேசிகவிநாயகம்பிள்ளை, 'பதவியும் பணமும் படிப்பும் இலாதேன், நாயேன்'[10] என்றும் தம்மைத் தாழ்த்திக் கொள்வர்.

மேலும், ஒரு சுணங்கனை ஒக்குந் தகைமையேன்[11], சிறியதோ ரறிவேன்[12], பேதையேன்[13], எட்டுமிரண்டும் அறியாதவன்[14], செயுமுறை தெரிகிலாத் தேரன்நா யடியேன்[15], தூயதமி ழறியாத சிறியேன்[16], கல்வியில்லாத் தொண்டனேன்[17], புத்தியில்லான்[18], கொத்தடியேன்[19], ஒன்றும் அறியாத புலமையேன்[20], தானந் தவயோக தத்துவமில்லான்[21], விதிவிலக் கறியேன்[22], புழுத்த நாயினேன்[23], தமிழ்வாணருக்கு உற்றதொரு அடிமை[24], ஆயகுற்றம் நூற்பிழை செய்யும்-அடிமை[25], அறிவிலிநாயேன்[26], கல்வியுங் கலையைத்தேரா மடமையேன்[27], அடக்கம் அளாவிநிற் கின்றேன் அறசிறிது மில்லேன்[28], பொருளிற் புல்லாப் புல்லேன்[29], பல்லோ ரவையடற்சீ ரறியேன்[30] எனப் புலவர்கள் தங்களைப் பலவாறு தாழ்த்தி உரைத்துள்ளனர். இக்கருத்தலகு பாடல்களில் தனித்தும் உவமையாகவும் காட்டப்பெற்றதாகும்.

தாழ்ந்த பொருளுடனும் அஃறிணைப் பொருளுடனும் ஒப்பிட்டுக் காட்டுவதால் புலவரின் அவையடக்கப் பண்பு மிகுத்துக் காட்டப்பெறும், அதன் வழி அவையோரின் நன்மதிப்பைப் பெறமுடியும் என்ற புலவனின் எண்ணம் புலனாகிறது.

<u>4.2.1.2. நூலைத் தாழ்த்துதல்:</u> தன்னடக்கத்தை வெளிப்படுத்தத் தன்னைத் தாழ்த்திப் பேசிய கவிஞன் தன் நூலைத் தாழ்த்திப் பேசும் போக்கினையும்

பின்பற்றியுள்ளார். இவ்விரு அலகுகளும் நெருங்கிய உறவுடையனவாகப் பாடல்களில் அமைக்கப் பெற்றுள்ளன.

நூலில் காணப்பெறும் குறைகளைப் பொருட்டாகக் கருதாத அவையோர் ஏற்றுக்கொள்ளச் செய்யும் உத்திகளுள் ஒன்றாக இவ்வலகு செயல்படுகின்றது. ஈண்டு நூலை நேரடியாகத் தாழ்த்துவதும் நூல் செய்யப் புகுந்த செயலைத் தாழ்த்துவதும் ஒன்றாகக் கருதப்பெறுகின்றது.

"கற்பா லமிழ்ந்த மணியுங் கழுவாது விட்டால்
நற்பா லழியும் நகைவெண் மதியோ மறைந்த
சொற்பா லமிழ்ந்த மறையும் பதியாற் கழுவிப்
பொற்பா விழைத்துக் கொளற்பாலர் புலமைமிக்கார்"[31]

இப்பாடலில் நூற்குறை உணர்த்தப் பெற்றுள்ளது. அதனை நீக்கிக் கொள்வது புலமைமிக்க அவையோர் கடமையாகும் என்பதை உவமையாற் புலப்படுத்தியுள்ளார் ஆசிரியர். ஈண்டு நூலின் குறை என்ற கருத்தலகு இடம்பெற்றுள்ளது.

தம் நூல் குறையுடையது என்று உணர்த்துவதோடு நூலைத் தாழ்த்திப் பேசும் போக்கு மிகுதி. தமது நூலை 'மென்சொல், வெளிற்புரை, புன்சொல்'[32] என்று கச்சியப்ப சிவாசாரியரும், 'வெள்ளறிவுரை'[33] என்று பரஞ்சோதியாரும், 'போலிச் செய்யுள்'[34] என்று கருணைப் பிரகாசரும், 'புன்சொல், கொடிய என்சொல்'[35] என்று அரங்க சீனிவாசனும் நேரடியாகத் தாழ்த்திக் கொள்கின்றனர்.

மேலும், புள்ளினுரை[36] (புல்லினுரை), புன்சொல்[37], என் பாடுகவிக் குற்றங்கள்[38], புன்மொழி[39], வெள்ளைத் தமிழ்[40], புற்பா[41], பிதற்றுரை[42], எளியதமியேன் கவி[43], இழிகவி[44], பிள்ளைக்கவி[45], ஏழைக்கவி[46], வெள்ளைச் சொல்[47], கழ்போன்ற என்படைப்பு[48] என்றெல்லாம் கவிஞர்கள் தங்கள்

நூலைத் தாழ்த்திக் கொள்வதுண்டு. தாழ்வுடைய அஃறிணைப் பொருட்களுடன் தம் நூல்களை ஒப்பிடுதல் மிகுதி. இதனை உவமைவழிக் காட்டியுள்ளனர். மிகுதிபற்றி ஒரு சான்றுமட்டும் காட்டி விளக்கப்படுகின்றது:

"சுருக்கமில் கேள்வித் துகள்தீர் புலவர்முன் யான்மொழிந்த
பருப்பொருள் தானும் விழுப்பொரு ளாம்பனி மாலிமயப்
பொருப்பகஞ் சேர்ந்தபொல் லாக்கருங் காக்கையும் பொன்னிறமாய்
இருக்குமென் றிவ்வா றுரைக்குமன் றோஇவ் விருநிலமே"[49]

இப்பாடலில் ஆசிரியர் தம்முடைய நூலைப் பொல்லாக் கருங்காக்கைக்கு ஒப்பிட்டுக் காட்டியுள்ளார். 'காக்கை இமயத்தை அடைந்து பொன்னிறமாய் மாறுவதுபோல் குறையுள்ள என் நூலும் கல்விகேள்வியில் சிறந்தோர் முன் நிறையுள்ள நூலாகக் கொள்ளப்பெறும்' என்று தம்முடைய அவையடக்கத்தைப் புலப்படுத்தியுள்ளார். இதில் அவையோர் உயர்வும் குறிப்பிடப்பட்டுள்ளது. உயர்ந்த நூல்கள் என்று மக்களால் போற்றப்படும் நூல்கள் கூட நூலாசிரியராலேயே தாழ்த்திப் பேசப்படுவது வியப்பிற்குரியதாகவுளது.

கல்லாச் சிறியோனால் யாக்கப்பெற்ற வழுக்கவியை எந்த அவையோரும் ஏற்றுக் கொள்ளார். இது நூலாசிரியனும் அறிந்ததே. எனினும் தன்னையும் தன் நூலையும் வழுவுடையதாகக் காட்டிக் கொள்கிறான். நூலை அவையோர் ஏற்றுக்கொள்ளச் செய்யும் ஓர் உத்தியாக இதனைக் கருதவேண்டும். எனினும் புலவன் செயற்கைப் புனைவுக்குள் தன்னை மறைத்துக் கொண்டு, குறையிலிருந்து தன்னைக் காத்துக்கொள்ள முயற்சிக்கும் நழுவல் தன்மையையே இக்கருத்தலகுகள் காட்டுகின்றன.

4.2.1.3. அவையோர் உயர்வு: அவையடக்கப் பாடல்களின் அக அமைப்பில் இக்கருத்தலகு, முன்னர்க் குறிப்பிட்ட கருத்தலகுகளுக்கு அடுத்த நிலையைப் பெறுகின்றது. அவையோரை உயர்த்திப் பேசுவதால் நூலாசிரியனின்

அடக்கம் மிகுத்துக் காட்டப்பெறுவதாகக் கருதப்படுகின்றது. இக்கருத்தலகின் வழி அவையோர் பண்பு, புலமை, கடமை ஆகியன வெளிப்படுத்தப்படுகின்றன.

"படித்த வத்தெறு கடல்புல சிறிநிலை பதற
வெடுத்து வீசிய சண்டமா ருதத்திற் கெதிரே
பிடித்து நொந்தசிற் றெறும்பொரு மூச்சுவிட் டதுபோல்
வடித்த செந்தமிழ்ப் புலவர்மு னியான்சொலு மாறே"[50]

இதில் அவையோரை 'நன்கு கற்ற செந்தமிழ்ப் புலவர்' என்று சிறப்பித்துள்ளார் ஆசிரியர். இத்தகைய அவையோர் முன் தாம் நூலுரைத்தல் 'பெரும் சூறைக்காற்று முன் சிற்றெறும்பு ஒன்று மூச்சுவிட்டதை ஒக்கும்' என்று உவமை வழியும் அவையோர் உயர்வு சுட்டப்பெறுதல் நோக்கத்தகுந்தது.

அவையோரைக் கம்பர், 'முத்தமிழ்த் துறையின் முறைபோகிய உத்தமக் கவிகள்'[51] என்று சிறப்பிப்பார். 'சுருக்கமில் கேள்வித்துகள்தீர் புலவர்'[52] என்று அமிர்தசாகரரும், 'முழுநூலுணர்ந்தவர்'[53] என்று வல்லூர் தேவராசப் பிள்ளையும், 'தொல்காப்பிய முதல் பல்காப்பியங்களும் கற்றுத் தெளிந்த கவிவல்லோர்'[54] என்று தேசிகவிநாயகம் பிள்ளையும் குறிப்பிட்டிருப்பது காலந்தோறும் அவையோர் உயர்வு அவையடக்க அமைப்பின் இன்றியமையாத கருத்தலகாக விளங்கி வந்துள்ளதைக் காட்டுகின்றது.

ஒரே பாடலில், 'கற்றோர், தக்க பெரியோர், சார்ஞானத்தில் வல்லோர், சரித்திரம் கற்றோர், தயவில் மிகுந்தோர்'[55] என்று அவையோர் உயர்வு பேசப்படுவதிலிருந்து அவையடக்கப் பாடல் அமைப்பிற்கு இக்கருத்தலகின் இன்றியமையாமை புலனாகும். அவையோர் சிறப்பால் 'அவை'யின் உயர்வும் உணர்த்தப்படுகின்றது. 'இந்நூல் நாவல் புலவரவையில் நாட்டப்படுவதாக'[56] நீலகேசி ஆசிரியர் சுட்டுவார்.

எனவே அவையோர் கல்விகேள்விகளில் சிறந்தோர், ஒழுக்கம் மிக்கோர், பல்துறைப் பயிற்சியுடையோர், கடவுளுணர்வுடையோர், பன்மொழிப் புலமையர், நடுநிலைத் தன்மையினர் என்பனவற்றைக் கருத்தலகு வெளிப்படுத்துகின்றது. இக்கருத்தலகுடன் நூலாசிரியன் தாழ்வு என்ற கருத்தலகும் இணையும்போது அவையடக்கம் என்ற முழு அமைப்பைப் பெற இயலுகின்றது.

தன் குறையைக் கூறித் தன்னைத் தாழ்த்துவதுடன் அவையோரை உயர்த்திக் கூறுவதும் அவையடக்கப் பண்பை வெளிப்படுத்தக் கையாளப்பெறும் ஓர் உத்தியாகும். அத்துடன் இது அவையோர் மனதில் நூலாசிரியனைப் பற்றிய நல்லெண்ணத்தை ஏற்படுத்தும் சூழலையும் உருவாக்கித் தரும்.

4.2.1.4. முன்னோடிகளின் உயர்வு: கவிஞன் தன் தகுதியைக் குறைத்துக் காட்ட முன்னோர் சிறப்பினைப் பாடலில் அமைத்துக் காட்டுவதும் உண்டு. முன்னோர் குறித்த கருத்தலகு அவையோர் உயர்வு என்ற கருத்தலகு செய்யும் பணியை மேற்கொள்ளும்போது இத்தகுதியைப் பெறுகின்றது.

"அழகர் பதின்ம ரருந்தமிழ்கொண் டார்யான்
குழறிய சொற்றமிழுங் கொண்டார் - முழுதுங்
கருத்திருத்தி வைத்தவென்மர் காந்தருமாய்க் கூனி
யுருத்திருத்திக் கொண்டது போலும்"[57]

என்ற பாடலில் ஆழ்வார்கள் பதின்மரின் சிறப்புரைக்கப்பட்டுள்ளதைக் காணலாம். 'குழறிய சொற்றமிழ்' என்று நூற்குறை சுட்டப்பெற்றது. இதனை விளக்கக் கூனியின் கூனலைத் திருத்தி இறைவன் ஆட்கொண்ட புராணச் செய்தி உவமையாகக் காட்டப்பட்டுள்ளது. இங்கு முன்னோடிகளின் உயர்வும் நூலின் தாழ்வும் இணைந்து அவையடக்கத்தை உருவாக்கியுள்ளன. இவ்விரு அலகுகளும் இணைய வேண்டியதற்கான காரணத்தைத் தக்க உவமையைக் கொண்டு விளக்குவதும் நோக்கத்தக்கது.

"சேனா வரைய ரிளம்பூ ரணர்நச் சினார்க்கினியர்
வானார் பரிமே லழகர் நிரம்பையர் மன்பதும
ரானா குரைகண்டுள் ளென்னுரை நிற்ப தலங்குதிரைக்
கானா ருததிநீற் கவலொன் றன்றுள காட்சியதே"[58]

இதில் சேனாவரையர் உள்ளிட்ட இலக்கண உரையாசிரியர்களின் உரைமுன் தன்னுரை 'அலைமிகுந்த கடல் முன் சிறுபுனலைப் போன்றது' என்று முன்னோடிகளின் உயர்வும், நூலாசிரியனின் தாழ்வும் அமைக்கப்பட்டுள்ளன.

கம்பராமாயணம்[59], வில்லிபாரதம்[60], கந்தபுராணம்[61], திருக்காளத்திப் புராணம்[62], சகுந்தலை வெண்பா[63] போன்ற பல நூல்களின் அவையடக்கத்தில் முன்னோடிகளின் உயர்வு காட்டப்பெறுகின்றது.

<u>4.2.1.5. பாடுபொருள் சிறப்பு:</u> தன் நூற்குறையைப் பேசும் கவிஞன் தான் பாடும் பொருள் சிறப்புடையது என்பதை அவையோர்க்குக் காட்ட முற்படுவதை இவ்வலகு காட்டுகின்றது. இவ்வமைப்பு பெரும்பான்மை நூல்களில் காணப்படுவதாகும். இதில் பெரும்பாலும் இறைவன் மற்றும் சமயச் சிறப்பு உணர்த்தப் பெறும்.

"அத்தனையும் புன்சொல்லே யானாலும் பாவேந்த
ரெத்தனையும் கண்டுமகிழ்ந் தெய்துவார்-முத்தி
புரக்குமரன் றந்தகந்தன் புகழ்கூறு நான்கு
கரக்குமரன் பிள்ளைக் கவி"[64]

இதில் 'இந்நூல் முருகப் பெருமானைப் பற்றியது என்பதால் என் பாடல் முழுதும் புன்சொல் என்றாலும் பாவேந்தர்கள் அத்தனையையும் ஏற்றுக் கொள்வர்' என்ற புலவனின் அவையடக்கத்திற்குப் பாடுபொருள் துணைநிற்பதைக் காணமுடிகின்றது. இங்கு நூலாசிரியனின் புலமைத் தாழ்வு, அவையோர் உயர்வு, பாடுபொருட் சிறப்பு ஆகிய மூன்று அலகுகள் இணைந்து அவையடக்கப் பாடலை உருவாக்கியுள்ளன.

4.2.1.6. மாறுபட்ட அமைப்பு: சமய நூல்களில் இடம்பெறும் அவையடக்கப் பாடல்கள் பிற பாடல்களின் அமைப்பு முறையினின்று வேறுபாடு உடையனவாகக் காணப்படுகின்றன. எனினும் மேற்குறிப்பிட்ட கருத்தலகுகள் இடம்பெறுவனவற்றைக் கற்போர் உய்த்துணர்ந்துகொள்ளும் வண்ணம் அமைக்கப் பட்டிருக்கின்றன.

சிவஞானபோதத்தின் அவையடக்கம் நூலாசிரியன் தாழ்வையோ நூலின் குறையையோ காட்டாது, பிற சமயத்தாரின் இழிவை முதன்மைப்படுத்தி அமைக்கப் பெற்றுள்ளது என்பது முன் இயலில் குறிப்பிடப்பட்டது. இதன் செல்வாக்கைப் பிற்காலச் சமய நூல்களிலும், இக்காலப் பிற நூல்களிலும் காணமுடிகின்றது.

"தொன்மையவாம் எனும்எவையும் நன்றாகா இன்று
தோன்றியநூல் எனும்எவையும் தீதாகா துணிந்த
நன்மையினார் நலம்கொள்மணி பொதியும்அதன் களங்கம்
நவையாகா தெனஉண்மை நயந்திடுவர் நடுவாம்
தன்மையினார் பழமைஅழ காராய்ந்து தெரிப்பர்
தவறுநலம் பொருளின்கண் சார்வாராய்ந் தறிதல்
இன்மையினார் பலர்புகழின் ஏத்துவர்ஏ திலார்உற்
றிகழ்ந்தனரேல் இகழ்ந்திடுவர் தமக்கென ஒன்றிலரே"[65]

இப்பாடலில் நூலாசிரியன் தன்னைத் தாழ்த்துதல், தன் நூலைத் தாழ்த்துதல் ஆகிய கருத்தலகுகள் நேரடியாக இடம்பெறவில்லை. மேலும் நூலை மதிப்பிடும் அவையோரை மூவகையினராகப் பகுத்து அவர்தம் அறிவின் தரத்தையும் ஆசிரியர் விமர்சிக்கின்றான். இதனால் நூலாசிரியன் அச்சத்துடன் பேசுகிறான் எனக் கருதக் கூடாது. 'என் நூல் புதுமையுடையது; அதில் தவறும் உண்டு. எனினும் மணி வைக்கப் பெற்றுள்ள துகிலில் களங்கம் இருந்தாலும் மணியை இகழாதது போல் என் நூலையும் கொள்ள வேண்டும்' என்று தான் பாடும் பொருள்

சிறப்புடையது என்பதைப் பெருமிதம் தோன்றுமாறு ஆசிரியன் பாடுவதாகக் கொள்ள வேண்டும். மேலும் அவையோர் நடுவாம் தன்மையுடையோராய் இருக்க வேண்டும் என்ற அறிவுரையும் சுட்டப்பெறுகின்றது. எனவே அவையோரைத் தாழ்த்தியோ, தன் நூலை உயர்வாகவோ குறிப்பிடாத நிலையில் இப்பாடலை அவையடக்கமாகக் கொள்ளல் தகும்.

பிறர் துணை வேண்டாத நூல் வெளியிட முடியும் என்ற நிலையுள்ள இக்கால நூல்களில், இவ்வமைப்புப் பெரிதும் போற்றப்பட்டிருக்கின்றது.

"ஏசு வார்சிலர் ஈதுண்மை யேயெனப்
பேசு வார்சிலர் பேச வெதிர்மனங்
கூசு வார்சிலர் கூக்குர லார்சிலர்
மாசி லாத்தமிழ் மாக்கதை கேட்கவே"[66]

என்பது இராவண காவியம் என்ற நூலின் அவையடக்கமாகும். சமய நூல்கள் குறிப்பிட்ட சமய அறிஞர்கள் மத்தியில் ஏற்றுக் கொள்ளப் பெறுவதைப் போன்று, இத்தகைய நூல்கள் குறிப்பிட்ட கொள்கையுடையோரால் ஏற்றுக்கொள்ளப்பெறும் என்ற காரணமும் இவ்வாறு அவையடக்கம் பாடவேண்டிய நிலையை உருவாக்குகின்றது.

<u>4.2.1.7. கூறுவோர், கேட்போர்:</u> கூறுவோர், கேட்போர் என்ற அலகுகளும் கவிதையின் அக அமைப்பினை வேறுபடுத்திக் காட்டுவதை உணரமுடிகின்றது.

அவையடக்கப் பாடல்களில் கூறுவோர் நூலாசிரியனாகவும் கேட்போர் அவையோராகவும் விளங்குகின்றனர். கூறுவோர் என்ற நிலையில் மாற்றம் இருக்க முடியாது. ஆனால் கேட்போர் யார் யார் என்பதில் வரையறை இல்லை. கற்றறிந்த புலவர்கள், உலகோர் அல்லது பொதுமக்கள், இறைவன், நெஞ்சு, வாசகர்கள் என்று அதன் வளர்ச்சியைக் காணமுடிகின்றது. இக்கேட்போரின் மாற்றத்தால் பாடல்களின் அமைப்பில் வேறுபாடும் தென்படுகின்றது.

"கொற்றங்கோ ளேமி நெடுமால்குணங் கூற விப்பால்
உற்றிங்கோர் காதல் கிளரத்தமிழ் நூற்க லுற்றேன்
மற்றிங்கோர் குற்றம் வருமாயினு நங்கள் போல்வார்
அற்றங்கள் காப்பா ரறிவிற்பெரி யார்க ளன்றே"[67]

இதில் கேட்போர் அறிவிற் பெரியார்களாக உள்ளனர். 'நூலில் குற்றம் காணினும் அதனைப் பொறுத்துக் காப்பது பெரியோர்களின் கடமையாகும் என்ற அமைப்பில் கற்ற அறிஞர்களைக் கேட்போராகக் கொண்டு பாடல்கள் அமைந்துள்ளன. மேலும் நன்கு கற்ற புலவர்கள் நூலில் குறைகள் இருந்தாலும் ஏற்றுக்கொள்வர் - பொறுத்துக் கொள்வர் - தள்ளார் - ஏற்றுக்கொள்ள வேண்டும் - பொறுத்தருள வேண்டும் - குறையை நீக்கிக் கொள்ள வேண்டும் - பொறுத்துக்கொள்ளல் கடமை - என்பதால் தணிந்த பாடினேன் என்ற நிலையில் சில பாடல்கள் அமைந்துள்ளன.

"செப்ப லுற்ற பொருளின் சிறப்பினால்
அப்பொ ருட்குரை யாவருங் கொள்வரால்
இப்பொ ருட்கென் னுரைசிறி தாயினும்
மெய்ப்பொ ருட்குரி யார்கொள்வர் மேன்மையால்"[68]

இப்பாடலில் கேட்போர் மெய்ப்பொருட்குரியாராவர். சமயம் தொடர்பான நூல்களில் அந்தந்தச் சமய அறிஞர்களே கேட்போராக விளங்குவர். அதனால் பிற சமய அறிஞர்களைப் பற்றிக் கவலைகொள்ளாது தம் சமய அறிஞர்கள் தம் நூலை ஏற்றுக்கொள்ளும் வண்ணம் அவையடக்கப் பாடல்கள் அமைக்கப்படுதல் இயல்பாக உள்ளது. இதன் தாக்கமே சிவஞானபோதம் உள்ளிட்ட சமய நூல்கள் 'தம்மை உணர்ந்து தமையுடைய தன்னுணர்வாரைக்'[69] கேட்போராகக் கொண்டுள்ளன.

"ஆரிய மொழியால் முன்ன ரந்தண ரெடுத்து ரைத்த
சூரிய கணித நூலைக் குவலயர் தன்னில் யாவுஞ்

சூரியன் றனக்கு வேரே தோன்று மின்மினிப் புழுப்போல்
சீரிய தமிழோர் சொல்வேன் சிறந்த வரிகழா ரம்மா"[70]

இப்பாடலில் ஆசிரியர் குவலயத்தில் நூலை உரைப்பதாகவும், சிறந்தோர் இகழார் என்பதாகவும், 'சிறந்தவரிகழாரம்மா' என்று ஒரு பெண்ணிடம் கூறுவதாகவும் பாடலை அமைத்துள்ளார். உலகோர், நல்லோர் என்று பொதுப்படக் கேட்போரை அமைக்கும் பாடல்களில் இத்தகைய அமைப்பினைக் காணலாம்.

"ஒருமலை யெடுத்துமழை காத்தவா மனதேவ
ரும்பத சேவைதனையே
யுளங்கொண்டு வெண்மணியில் வாழுத் தாரைய
முதவுநா ரணபாரதி
பொருமலை பெருங்கங்கை யுங்காளி யாழும்
பொருந்தகடல் போற்புலவர்கள்
புகழ்சபையி லெனதுவேங் கடசதக நீதிநெறி
புகலுவரு நூ ¿கவியும்
பரிவுட னனைவருங் கேட்டெனது தமிழின்மேற்
பகூநம்வைத் தாளவருவாய்
பாலகன் புன்சொலைக் கேட்டுமே மகிழுமவள்
பார்மீதி லன்னையலவோ
வருபவர் களிக்க வரமுதவு நேயனே
மனவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலுமங் கைமண வாளனே
வரவேங் கடராயனே!"[71]

புலவர்கள் நிறைந்த அவையில் தன் நூலை அவையோர் ஏற்றுக்கொள்ள இறைவனை அருள்தர வருமாறு ஆசிரியர் அழைக்கின்றார். அவையோர் முன்னிலையில் இப்பாடல் பாடப்பட்டாலும் இறைவனிடம் கேட்பதாக

அமைக்கப்பட்டுள்ள மாறுபட்ட திறம் நோக்கத்தக்கது. இறைவணக்கத்தையும் அவையடக்கத்தையும் ஒருசேர அமைக்க விரும்பும் கவிஞர்கள் இத்தகைய முறையினைக் கையாள்வதுண்டு. இதனைத் தியாகராசர் பள்ளு[72], சுப்பிரமணியர் பேரில் சிந்து[73], நல்லதங்காள் கதை[74] முதலான கதைப்பாடல்கள் ஆகியவற்றின் அவையடக்கப் பாடல்களில் காணமுடிகின்றது.

மனோன்மணீயத்தில் ஆசிரியர் தம் நெஞ்சைக் கேட்போராகக் கொண்டுள்ளார். அவரது நெஞ்சு நூல் எழுத அஞ்சுவதாகவும், அந்நெஞ்சிற்கு ஆசிரியர் தன்னம்பிக்கை ஊட்டுவதாகவும் நெஞ்சிடம் கூறுவதாகவே பாடலை அமைத்துள்ளார்[75]. இதனைப் பின்பற்றி,

"ஆதலா லஞ்சலை
நீதியார் நெஞ்சமே
போதுவாய் புந்திகொண்
டோதுவா மோர்ந்தரோ!"[76]

என்று வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார் அமைத்துள்ளார்.

சு. நடேசபிள்ளை 'சகுந்தலை வெண்பா'[77] என்ற நூலில் தமிழ்த் தாயைக் கேட்போராகக் கருதிப் பாடலை அமைத்துள்ளார். அதுபோல் சுத்தானந்த பாரதியார் பாரதசக்தி மகாகாவியத்துள்[78] பாரதமாதாவைக் கேட்போராகக் கொண்டுள்ளார்.

இக்கால நூல்கள் பெரும்பான்மையும் நூலாசிரியன் அல்லது பதிப்பகத்தாரால் தன்னிச்சையாக வெளியிடப்படுவன. ஆதலால் இந்நூல்களில் இடம்பெறும் அவையடக்கப் பாடல்களில் கேட்போர் வாசகர்களாகவே இருப்பர். ஐயன்மீர்[79], முழுதுணர்ந்த முதுக்குறைவாளர்[80], செந்தமிழ்ச் சான்றோர்[81],

நெடுங்கவிவாணர்[82], கற்புணர்ந்த பல்பெரிய கவிவாணர்[83] என்றெல்லாம் வாசகர்கள் குறிப்பிடப்படுகின்றனர்.

கல்வி கேள்வியிற் சிறந்த புலவோர், இறைவன், பொதுமக்கள் அல்லது உலகோர், அடியவர்கள், தமிழ்த்தாய், நெஞ்சு, இக்கால வாசகர்கள் போன்ற பல்நிலைகளில் உள்ளோரையும் உள்ளடக்கிய பொதுத் தலைப்பாக 'அவையோர்' குறிப்பிடப்பட்டுள்ளதைக் காணலாம். அவற்றுள் இறைவன், அடியவர்கள், தமிழ்த்தாய், நெஞ்சு போன்றன பெரிதும் போற்றப்பெறவில்லை. கவிஞர்கள் தங்கள் சமயப் பற்றையும் புலமைத் திறனையும் தமிழ்ப்பற்றையும் காட்ட இவ்வாறு அமைத்துப் பாடினர். ஆனால் நெடுங்காலந்தொட்டு கல்வி கற்ற அறிஞர்களையே அவையோராகக் கொண்டு அவையடக்கப் பாடல்கள் இயற்றப்பட்டு வந்துள்ளன. இதனை, இக்கால வாசகர்களைப் புலவர்கள் குறிப்பிடுவதிலிருந்தும் தெளியலாம்.

நூலாசிரியன் தாழ்வு உள்ளிட்ட பல கருத்தலகுகள் இணைந்து அவையடக்கப் பாடல்களை உருவாக்குகின்றன என்பது பெறப்பட்டது. இக்கருத்தலகுகள் பாடல்களை ஒட்டுமொத்தமாக வைத்து, பெரும்பான்மைப் பாடல்களில் இடம் பெற்றதைக் கொண்டு தெரிவு செய்யப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. இது வரையறைக்கு உட்பட்டதன்று. எனினும் அவையடக்கப் பாடல்களின் அக அமைப்பைப் பொறுத்தமட்டில் நூலாசிரியன் தன்னையும், தன் நூலையும் தாழ்த்திக் கொள்ளுதல், அவையோர் உயர்வைக் காட்டுதல் ஆகிய கருத்தலகுகளே அடிப்படைகளாக விளங்குவன. பிற கருத்தலகுகள் எல்லாம் மேற்குறிப்பிட்டவைகளுக்குத் துணைபுரிவன. இக்கருத்தலகுகளை விளக்கிக் காட்டி, அவையடக்கப் பண்பை மிகுவித்துக் காட்ட உவமைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதைப் பாடலின் அமைப்பில் காணமுடிகின்றது. எனவே,

நூலாசிரியன் தாழ்வு + அவையோர் உயர்வு = அவையடக்கம்

என்ற கோட்பாட்டை அவையடக்கப் பாடல்களின் பொது அமைப்பாகக் கொள்ளலாம்.

மேற்கண்ட விளக்கங்கள் அவையடக்கப் பாடல்களின் அக அமைப்பில் கருத்தலகுகளின் பிரியமையாமையைத் தெளிவுபடுத்தின. இக்கருத்தலகுகள் கட்டப்பெற்ற அவையடக்கப் பாடலின் புறவடிவத்தை அமைக்கும் முறையை அடுத்ததாகக் காணலாம்.

4.2.2. புற அமைப்பு: பாடல்களின் புற அமைப்பு என்பது வடிவத்தை அடிப்படையாகக் கொண்டது. ஈண்டு வடிவம் யாப்புகளால் அமைக்கப்பெறும் பாவடிவத்தைக் குறிக்கும். குறிப்பாக, அவையடக்கப் பாடல்கள் பயின்றுவரும் பாவகைகளும் பாவினங்களும் சுட்டிக்காட்டப் பெறுகின்றன.

காலந்தோறும் பாடல்களின் வடிவம் மாறிக்கொண்டே வந்துள்ளது.

"ஆசிரியம் வஞ்சி வெண்பாக் கலியென
நாலியற் றென்ப பாவகை விரியே"[84]

என நான்கு வகையான பாக்களைக் குறிப்பிடுகின்றார் தொல்காப்பியர். எனினும் ஆசிரியப்பாவின் செல்வாக்கே சங்க இலக்கியத்தில் மிகுதி. சங்கம் மருவிய காலத்தில் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் பெரும்பாலானவை வெண்பா வடிவில் யாக்கப்பெற்றன. காப்பிய இலக்கிய காலத்தில் விருத்தம் என்னும் பாவினம் செல்வாக்குப் பெறத் தொடங்கியது. திருத்தக்கதேவர் தம் சிந்தாமணிக் காப்பியம் முழுவதையும் விருத்தப்பாவில் தந்தார். அவரைப் பின்பற்றிக் கம்பர் விருத்தப்பாவில் பல புதுமைகள் செய்தார். பின்வந்த பெரியபுராணம், வில்லிபாரதம் போன்ற நூல்களும் விருத்தப்பாவிலேயே வடிக்கப்பெற்றன.

இடைக்காலத்தில் சிற்றிலக்கிய நூல்கள் பல்வேறு புதிய யாப்பு வகைகளை மேற்கொண்டன. உலா இலக்கியம் கலிவெண்பா யாப்பைப் பரவலாக்கியது. மாணிக்கவாசகர் கட்டளைக் கலித்துறை யாப்பை கோவைப் பிரபந்தத்தில் வளர்த்துக் காட்டினார். கலம்பகம் பல்வகைப் பாக்களையும் பாவினங்களையும் கொண்டு விளங்கியது. பரணி இலக்கியம் தாழிசை அமைப்பைப் படைத்தது. தூது இலக்கியம் கலிவெண்பா யாப்பினைப் பின்பற்றியது. பிள்ளைத்தமிழ் கழிநெடில் ஆசிரிய விருத்தத்தைப் போற்றியது.

பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டுகளில் சந்தவிருத்தம், சிந்து, கீர்த்தனை போன்ற இசைப்பா வடிவங்கள் அறிமுகப்படுத்தப் பெற்றன. இவ்வாறு காலந்தோறும் கவிதையின் வடிவம் மாறிக்கொண்டே வந்துள்ளது.

கிடைக்கப்பெறும் அவையடக்கப் பாடல்கள் இடைக்காலத்தவை. ஆதலால் அக்காலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த விருத்தம் முதலான பல்வகை யாப்புகளில் பாடல்கள் வடிக்கப்பெற்றுள்ளன. காலத்தால் யாப்பில் ஏற்பட்ட மாற்றம் அவையடக்கப் பாடல்களையும் பாதித்துள்ளன என்பதைப் பாடல்கள் காட்டுகின்றன.

4.2.2.1. பாவகை: தொல்காப்பியர் அவையடக்கம் இயற்றப்பெறும் பாவடிவத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இதனை,

"வழிபடு தெய்வ நிற்புறங் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே
கலிநிலை வகையும் வஞ்சியும் பெறாஅ"[85]

"வாயுறை வாழ்த்தே யவையடக் கியலே
செவியறி வுறூஉவென வவையு மன்ன"[86]

என வரும் நூற்பாக்களால் தெளியலாம். அதாவது, கலிப்பாவும் வஞ்சிப் பாவும் அவையடக்கம் யாக்கப்பெறாது ஆசிரியப்பா, வெண்பா ஆகியவற்றால் இயற்றப்பெறுதல் தொல்காப்பியர் கால மரபு. எனினும் இடைக்காலத்தில் யாப்பில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு ஏற்ப இந்நான்கு வகைப் பாக்களின் பாவினங்களிலும் அவையடக்கம் இயற்றப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

4.2.2.1.1. ஆசிரியப்பா: ஆசிரியப்பா எனினும் அகவற்பா எனினும் ஒன்றே. ஆசிரியப்பா குறிப்பிடத்தக்க பாடல்களில் பயன்படுத்தப்பெற்றுள்ளது.

ஞானாமிர்தம்[87], சிவஞான சித்தியார் பரபக்க உரை[88], இலக்கணக்கொத்து[89], சு. கிருஷ்ணசாமி முதலியாரின் கம்பராமாயண உரை[90], ஏகநாதர் பிள்ளைத் தமிழ்[91] போன்றவற்றை ஆசிரியப்பாவாலான அவையடக்கம் கொண்ட நூல்களுக்குச் சான்றாகக் காட்டலாம். இவற்றின் அவையடக்கம் நிலைமண்டில ஆசிரியப்பாவாலானது.

பொதுவாக நூலாசிரியன் அவையடக்கச் செய்திகளுடன் தான் விரும்பிய பிற செய்திகளையும் அவையடக்கத்துள் கூற என்னும்போது ஆசிரியப்பாவைப் பயன்படுத்துவதுண்டு.

சிவஞான சித்தியார் பரபக்க உரை 22 அடி நிலைமண்டில ஆசிரியப் பாவால் அவையடக்கத்தைப் பெற்றுள்ளது. இதில்,

"நன்னூ லுணர்ந்த ஞானிகள் முன்னே
இந்நூல் தன்னிற் பரமதந் தனக்கு
உரைதனை யெழுத உன்னிய வதுதான்
குரைகட லேழும் நீந்தி யேற
விரைபவ னொக்க விளங்குவன் றன்றே"[92]

எனவரும் இறுதி அடிகளில் அவையடக்கப் பொருண்மையினை அமைத்துப் பிற செய்திகளைப் பாடலின் முன்னுள்ள அடிகளில் பேசியிருப்பது நோக்கத்தக்கது.

நேரிசை ஆசிரியப்பாவில் அவையடக்கம் கூறப்பெற்ற நூல்களும் உண்டு. சாங்கிய காரிகை[93] என்ற நூலை இதற்குச் சான்று காட்டலாம்.

<u>4.2.2.1.2. வெண்பா:</u> வெண்பா அவையடக்கப் பாடல்களில் விருத்தப்பாவிற்கு அடுத்ததாக மிகுதியாகப் பயன்படுத்தப்பெற்றுள்ளது. அம்பிகாபதிக் கோவை[94], சிவஞானபோதம்[95], நளவெண்பா[96], மாறனலங்காரம்[97], அழகர் கலம்பகம்[98], மகாத்மா காந்தி அடிகளின் மீது நெஞ்சுவிடு தூது[99], பன்னிரு பாட்டியலுரை[100] ஆகியன வெண்பா யாப்பில் அவையடக்கம் பெற்றவை.

> "வேத மொழிப்பொருளை விண்ணவர்கள் மூவரும்
> போத வுணரா வுலகறிய - வோதுகேன்
> வானின்ற வல்லிருளை மாற்றா நின் றொழிப்பன்
> யானென்ற மின்மினியே யான்"[101]

என்பது அமிர்தசாரம் என்ற நூலின் வெண்பாவாலான அவையடக்கமாகும். வெண்பாவின் வகைகள் பலவற்றுள்ளும் பாடல்கள் அமைக்கப்பெற்றுள்ளன.

சங்கற்ப நிராகரணம்[102], சைவசமயநெறி[103], அட்டாங்கயோகக் குறள்[104] போன்றன குறள்வெண்பாவில் அவையடக்கம் பெற்றுள்ளன.

> "தேசிகனோக் காற்றியிரந் தீருமுயிர்க் கிந்நூலி
> னாசமுஞ்சொல் லாய்ந்தவர்நோக் கால்"

என வரும் 'சைவசமயநெறி'யின் அவையடக்கம் குறள் வெண்பாவாலானது. 'செட்டிநாட்டரசர் மெய்க்கீர்த்திமாலை'[105] என்ற நூலில் ஆறடி பஃறொடை வெண்பாவில் அவையடக்கம் பாடப்பெற்றுள்ளது.

புராண நூல்களில் அவையடக்கம் வெண்பாவில் யாக்கப் பெறவில்லை. அவை நீண்ட கதைகளைக் கூற விருத்தப்பா வகைகளைப் பெரிதும் விரும்பியேற்பதும் இதற்குக் காரணமாகும்.

4.2.2.2. பாவினம்:

4.2.2.2.1. விருத்தப்பா: பா வகைகளின் இனமான விருத்தம் அவையடக்கப் பாடற்பரப்பில் முதலிடம் பெறுகிறது. சீவகசிந்தாமணி உள்ளிட்ட பல நூல்கள் விருத்தத்தில் அவையடக்கம் கூறுதலைக் காணலாம்.

"முத்த மிழ்த்துறை யின்முறை போகிய
வுத்த மக்கவி கட்கொன்று ணர்த்துவன்
பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும்
பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ"[106]

என்ற கம்பரின் அவையடக்கம் நான்கு சீர் அடியுடைய கலிவிருத்தமாகும். பெரியபுராணம்[107], கந்தபுராணம்[108], இரகுவம்சம்[109], விருத்தப்பாவியல்[110], பெரியார் காவியம்[111], இராவணகாவியம்[112] போன்ற பல நூல்களில் கலிவிருத்தம் அவையடக்கத்திற்குப் பயன்படுத்தப் பெற்றுள்ளது.

விருத்தப்பாவின் வகைகளுள் அறுசீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தமே மிகுதியான அவையடக்கப் பாடல்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. திருவிளையாடற் புராணம்[113] உள்ளிட்ட பல நூல்கள் இதனைப் பெற்றுள்ளன. இதனையடுத்து, எழுசீர் ஆசிரிய விருத்தம், எண்சீர் ஆசிரிய விருத்தம் ஆகியன குறிப்பிடத்தக்கப் பாடல்களில் இடம்பெற்றுள்ளன.

சேக்கிழார் பிள்ளைத் தமிழ்[114], மநுநீதி சதகம்[115], அண்ணாமலை சதகம்[116], கச்சிக் குமரக் கோட்டக் கடவுள் பிள்ளைத் தமிழ்[117] போன்றவை பன்னிரு சீர் விருத்தத்தாலும், தமிழகத்தின் கலைமணிகள்[118] என்ற நூல்

பதினான்கு சீர் விருத்தத்தாலும், திருவிளங்குவர் பிள்ளைத் தமிழ்[119] பதினாறு சீர் விருத்தத்தாலும் அவையடக்கம் பெற்ற சில நூல்களாகும்.

"என்னோ வொருவா றிதுபுனைந்தேம்
பொன்னேர் புலவோர் புரைபலவுண்
டென்னே யிதுவென் றிகழ்வரல
நன்னோர் மகப்பே றடைந்தவரால்"[120]

என்பது 'தசரதன் தவம்' என்ற நூலில் இடம்பெற்றுள்ள வஞ்சிவிருத்தத்தாலான அவையடக்கப் பாடலாகும்.

ஆசிரிய விருத்தமும் கலிவிருத்தமும் பெருவழக்காக உள்ளன. இசையோடு பாடல்களைப் படிக்க மக்கள் விரும்புவர் என்ற காரணத்தால் இந்தப் பாவடிவங்கள் பெரிதும் பயன்படுத்தப்பெற்றன. வஞ்சி விருத்தம் அருகிய நிலையில் உள்ளது. வெளிவிருத்தத்தாலான பாடல்கள் கிடைக்கப்பெறவில்லை.

4.2.2.2.2. கலித்துறை: கலிப்பாவின் இனமான கலித்துறையில் பல பாடல்கள் இயற்றப்பெற்றுள்ளன. சிற்றிலக்கிய நூல்களில் இப்பாவினத்தைக் காணமுடிகின்றது.

நவநீதப் பாட்டியல்[121], முத்துக்குமார ஞானியர் சதகம்[122], பிலிக்கா ஸ்ரீஅங்காள ஈசுவரியம்மன் அந்தாதி[123], ஆனந்தரங்கன் பிள்ளைத் தமிழ்[124] ஆகியவற்றின் அவையடக்கம் கலித்துறையில் யாக்கப்பெற்றது.

"சகத்தினில் முத்தமிழ் தன்னையுண் டாக்கிமுச் சங்கத்திலும்
அகத்திய மாமுனி யாக்கிய பாட்டியல் ஆனபௌவம்
நிகழ்த்துகை மின்மினி யாதித் தனுக்கு நிகரொக்குமென்
றகப்பது போலுமன் றேபுல வோர்முன் உரைப்பதுவே"[125]

என்பது கலித்துறைப் பாவடிவைப் பெற்ற அவையடக்கப் பாடல்களுள் ஒன்றாகும்.

4.2.2.3. வஞ்சித்துறை: வஞ்சிப்பாவின் இனமான வஞ்சித்துறையில் சில அவையடக்கப் பாடல்கள் கிட்டியுள்ளன.

"சூழியர் மழலைபோல்
வழுவென விகடரார்
அழகென அறிவினால்
விழுமியர் மகிழ்வரே"[126]

என்ற வஞ்சித்துறையாலான பாடல் முத்துவிநாயகரந்தாதியில் அவையடக்கமாக இடம்பெற்றுள்ளது. மானவிஜயம்[127] என்ற நூலிலும் இப்பாவினம் அவையடக்கமாக வந்துள்ளது.

வஞ்சிப்பாவில் அவையடக்கம் வாரா என்பது இலக்கண மரபு. ஆனால் கருணாநிதி நாமமாலை[128] என்ற நூலில் அவையடக்கம் பலவகை அடிமயக்கம் அமைந்த வஞ்சிப்பா எனப் பதிப்பிடப் பெற்றுள்ளது.

4.2.2.3. பிற இசைப் பாவடிவங்கள்: கீர்த்தனை, சிந்து போன்ற இசைப் பாடல்களில் அவையடக்கம் பாடுதல் பிற்கால வழக்கில் உண்டு.

4.2.2.3.1. கீர்த்தனை: கீர்த்தனை நூல்களின் அவையடக்கம் கீர்த்தனை வடிவில் அமைவதுண்டு.

இராமநாடகக் கீர்த்தனையில் உள்ள அவையடக்கம் பின்வருமாறு அமைந்துள்ளது:

1. விருத்தம்

"கனமான வால்மீகர் சுலோகஞ் செய்தார்
கம்பரும் ராமாயணத்தைக் கவியாகச் செய்தார்
உனதாசை யாலே நாடகமாகச் செய்தேன்
உளறினால் என்னபலன் உண்டாம் என்றால்

முனிமார் சொல்லிய ராம மந்திரத்தை
 மூவரும் ஓதிய ராம மந்திரத்தை
வனவேடன் மராமரா வென்ற முந்தி
 வழிகண்டான் அதுகொண்டே மொழிகின்றேனே.

2. உரு

சாவேரி அடதாளச் சாப்பு

பல்லவி

ஐயனே ரகு ராமனே-என்சொல்
அபசாரம் உபசாரம் ஆக்கிக் கொள்வாயே

அநுபல்லவி

கையில் ஆகாத்நான் ஏதேது சொன்னாலும்
காக்கக்கடன் என்பிழையை நீக்கக்கடன் உடன்பாரம் (ஐயனே)

சரணங்கள்

1) எள்ளத்தனையுங் குற்றம்
 இல்லாதசுப சத்தம்
தெள்ளத்தெளிந்தேன் மொத்தம்
 செய்தேன்இதோ சுத்தம்
 வெள்ளைக்கவி என்றும் - இது சின்னப்
 பிள்ளைக்கவி என்றும் - சொல்வதல்லால்
விள்ளத் தகுமோ பழுதுகள்
உள்ளத்தகுமோ சாமிநீ
தள்ளத்தகுமோ திருவுளம்
கொள்ளத்தகுமோ அறிகிலேன் (ஐயனே)

2) நற்பொருள் நீதமும்
நவரச பேதமும்
வைப்புள்ள கீதமும்
வண்ணனை நாதமும்

ஒப்புத் தெரிவேனோ - அதிலுள்ள
தப்புத் தெரிவேனோ - இலக்கணச்
சொற்பிக்கறியேன் உன்புகழ்
கற்பிக்கறியேன் சொல்லி
மெய்ப்பிக்கறியேன் சாமி
ஒப்பிக்கறியேன் எங்கள் (பூபனே)

3) உத்தமமுனி முன்னம்
உரைக்கக்கம்பர் சொன்ன
நற்றமிழ்தன்னைச் சின்ன
நாடகமா தென்ன
வைத்திப்படி கண்டேன் - பெரியோர்முன்
புத்திப்பிழை கொண்டேன் - என்சாமி
பித்துச்சொல வைப்போலே
சத்திக்கஉ ருக்காலே
நத்திச்சொலும் என்மேலே
சித்தத்தில்இ தத்தாலே"[129]

இப்பாடலுக்கு 'அபசாரக்ஷமை' என்று தலைப்பிடப்பட்டுள்ளது. இதுபோல் பெரியபுராணக் கீர்த்தனை[130] திருமெய்யம் பெருமாள் கோவில் ஸ்தல புராணக் கீர்த்தனை[131] போன்றனவும் கீர்த்தனை வடிவில் அவையடக்கம் பெற்றுள்ளன.

4.2.2.3.2. சிந்து: சுப்பிரமணியர் பேரில் சிந்து முதலியன சிந்துப் பாவடிவில் அவையடக்கத்தைக் கொண்டுள்ளன. இதில்,

"பத்தனைக் காக்கும் குறவள்ளி - ஏழையேன்
பாடுதற் கருள்தல் நீங்கடன் தாயே
ஆயகுற்றம் நா பபிழை செய்யும் - அடிமை
யறியாக் குழந்தைமேல் அன்புசெய் தருள்வாயே"[132]

என வரும் பாடல் சிந்து வடிவினதாகும்.

4.2.2.4. வெவ்வேறு பாவடிவங்களில் அவையடக்கம்: ஒரே நூலில் இடம்பெறும் அவையடக்கப் பாக்கள் வெவ்வேறு பாவடிவத்தில் பயின்றுவருதலும் உண்டு.

திருவாரூர்த் தியாகராசர் லீலையின் அவையடக்கப் பகுதி கலிவிருத்தம்[133], எண்சீர் விருத்தம்[134], அறுசீர் விருத்தம்[135] என்ற வரிசையில் பாடல்களைப் பெற்றுள்ளது. திருப்பெருந்துறைப் புராணத்தில் கலிவிருத்தம்[136] மற்றும் அறுசீர் விருத்தம்[137] அவையடக்கமாக உள்ளன. மாணவிஜயம் கலிவிருத்தத்தையும்[138] வஞ்சித்துறையையும்[139] அவையடக்க யாப்பாகக் கொண்டுள்ளது. புதுவைத் தலபுராணம்[140], திருப்பத்தூர்ப் புராணம்[141], அண்ணா வளப்பியம் என்னும் அண்ணா காவியம்[142] போன்றவையும் வெவ்வேறு யாப்பில் அவையடக்கம் பேசுவன.

4.2.2.5. நூலின் பாவடிவமும் அவையடக்கத்தின் பாவடிவமும்: பொதுவாக நூல் எந்தப் பாவில் யாக்கப் பெறுகின்றதோ அதே பாவில் அவையடக்கமும் அமையும். ஆனால் சில நூல்களில் வெவ்வேறு பாவடிவம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

திருநாளைப் போவாரென்னும் நந்தனார் சரித்திரக் கீர்த்தனை[143] ஒரே ஒரு விருத்தத்தாலான பாடலை மட்டும் அவையடக்கமாகப் பெற்றுள்ளது. இராமலிங்க சுவாமிகள் திவ்விய சரித்திரக் கீர்த்தனையின்[144] அவையடக்கம் வெண்பாவால் ஆனது. குருநாத சுவாமி கிள்ளைவிடுதூது[145] என்ற நூல் விருத்தத்தால் பாடப்பெற, அதன் அவையடக்கம் கலிவெண்பாவில் அமைந்துள்ளது.

விருத்தப்பா, வெண்பா, ஆசிரியப்பா, கலித்துறை, வஞ்சித்துறை, கீர்த்தனை, சிந்து போன்ற பல்வகைப் பாவடிவங்களை அவையடக்கப் பாடல்கள் பெற்றிருந்தாலும், விருத்தம், வெண்பா ஆகியன மட்டுமே அதிகளவு பயன்படுத்தப் பட்டுவருகின்றன என்பதைச் சான்றுகள் காட்டுகின்றன. நூலில் பயின்றுவரும்

பாவிலே அவையடக்கம் பாடுதல் என்பது பொதுமரபாகக் கொள்ளப்பட்டுள்ளது. வெவ்வேறு பாவில் அவையடக்கம் பாடுதல் அருகிய நிலையாகும். மேலும் 'மருட்பா'[146] எனும் பா ஒன்றைத் தொல்காப்பியர் சுட்டுவர். இது வழக்கொழிந்த நிலையில் உள்ளதால் இதில் அவையடக்கப் பாடல்கள் கிட்டில.

கருத்தலகுகள் இணைந்த அவையடக்கத்தை உருவாக்குவதும், அக் கருத்தலகுகள் யாப்புகளைக் கொண்டு கட்டப்பெறுவதால் முறையான வடிவத்தைப் பெறுகின்றன என்பதும் அறியப்பட்டன. இவ்வாறு பாடல் வடிவினைப் பெற்ற அவையடக்கப் பாடல்கள் நூல்களில் வைக்கப்பெறும் முறையினை அறிந்துகொள்வதும் இங்குப் பொருத்தமாக அமையும்.

4.2.3. அவையடக்கப் பாடல்களின் வைப்புமுறை: நூல்களில் அவையடக்கப் பாடல்களின் வைப்புமுறை என்பதைப் பயில்முறை, அளவியல் எனப் பிரித்துக் கொள்ளலாம்.

பயில்முறை என்பது நூலில் பாடல்கள் பயின்றுவரும் இடத்தைக் குறிக்கும். அளவியல் என்பது நூலில் இடம்பெறும் பாடல்களின் அளவைக் (எண்ணிக்கையைக்) குறிக்கும்.

4.2.3.1. பயில்முறை: அவையடக்கத்தை நூலின் எப்பகுதியில் வைக்க வேண்டும் என்பதைத் தொல்காப்பியம் குறிப்பிடவில்லை. எனினும் செய்யுளியலில் வழிபடுதெய்வம்[147] முதலான வாழ்த்துக்களில் பயின்று வரவேண்டிய யாப்பு வகைகளைப் பற்றிக் குறிப்பிடும்போதே அவையடக்கத்தைப் பற்றியும் சுட்டியுள்ளார். எனவே நூலில் வாழ்த்துப் பகுதிகள் இடம்பெறவேண்டிய இடத்தில் அவையடக்கமும் வைக்கப்பெறல் வேண்டும் என்று தொல்காப்பியர் கருதியிருக்க வேண்டும்.

இதனையடுத்து, மாறனலங்காரம் அவையடக்கத்தில் வருவதனைத் தெளிவாகச் சுட்டியுள்ளது.

"வைத்த பெருங்காப்பிய நிலையும் வாழ்த்தியல்பார்
மெய்த்த வவையடக்கம் வீறுசான் - முத்திறமுந்
தெய்வ வணக்கமுடன் செப்பொருளு முன்வரவாஞ்
செய்த வுரைப்பது தாமேற்று"[148]

என்ற வெண்பா அவையடக்கம் நூன்முகத்தில் இடம்பெறும் உறுப்புகளில் ஒன்று என்பதைத் தெளிவுபடுத்துகின்றது. இவ்வமைப்புமுறையை வேறு நூல்கள் சுட்டவில்லை.

கிடைக்கப்பெறும் அவையடக்கப் பாடல்களைக் கொண்டு அவை நூல் முன், நூல் இடை, நூல் இறுதி ஆகிய மூன்று நிலைகளில் பயின்றுவருவதைக் காணமுடிகின்றன.

4.2.3.1.1. நூல்முன்: அவையடக்கப் பாடல்கள் பெரிதும் நூன்முகத்து இடம்பெறுவன. கடவுள் வாழ்த்தை அடுத்து அவையடக்கத்தை இடம்பெறச் செய்யும் பொதுவமைப்பு முறையைப் பெரும்பான்மை நூல்களில் காணமுடிகின்றது.

சீவகசிந்தாமணி[149], நீலகேசி[150], யசோதர காவியம்[151] போன்றன நூன்முகத்து கடவுள் வாழ்த்தை அடுத்து அவையடக்கத்தைப் பெற்றுள்ளன. இவ்வமைப்புமுறை இன்றுவரைப் பின்பற்றப்பட்டு வருகின்றது. சான்றாக மருமக்கள் வழி மான்மியம்[152], உதயம்[153], பூங்கொடி[154] போன்றவற்றைக் காட்டலாம். இவற்றில் அவையடக்கம் பாயிரத்தின் ஓர் உறுப்பாகக் கொள்ளப்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சூளாமணி[155], கம்பராமாயணம்[156], வில்லிபாரதம்[157], நளவெண்பா[158], தேம்பாவணி[159] ஆகியவற்றில் பாயிரத்தின் ஒரு கூறாக அவையடக்கம் வைக்கப்பெற்றுள்ளது. இம்முறை இக்கால நூல்களான இராவண காவியம்[160], திருவள்ளுவர் காவியம்[161] போன்றவைகளிலும் காணப்படுகின்றது. இயேசு காவியம்[162] 'பாயிரம்' எனத் தலைப்பிட்டு அவையடக்கப் பொருண்மை பேசுவதாக உள்ளது.

உதயணகுமார காவியம்[163], நாககுமார காவியம்[164] ஆகியவற்றில் முதற்காண்டத்தின் தொடக்கத்தில் அவையடக்கம் வந்துள்ளது. இவ்வைப்பு முறையைப் பாரத சக்தி மகாகாவியம்[165], மகாத்மா காந்தி காவியம்[166], மனித தெய்வம் காந்தி காதை[167] போன்ற இக்கால நூல்களும் பின்பற்றியுள்ளன.

இலக்கண நூல்கள் பொதுவைப்பு நெறியைப் பின்பற்றி, அவையடக்கத்தைப் பாயிரத்தின் உறுப்புகளுள் ஒன்றாகக் கொண்டுள்ளன. யாப்பருங்கலக்காரிகை[168], வீரசோழியம்[169], நேமிநாதம்[170], நவநீதப் பாட்டியல்[171], வண்ணத்தியல்பு[172] ஆகிய குறிப்பிடத்தக்க இலக்கண நூல்களில் இதனைக் காணமுடிந்தது. விருத்தப்பாவியல்[173] என்ற நூலில் அவையடக்கம் மட்டுமே நான்முகப் பகுதியாக அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

காப்பிய நூல்கள், இலக்கண நூல்கள் ஆகியவற்றைப் பின்பற்றியே புராண நூல்களில் அவையடக்கம் வைக்கப்பெற்றுள்ளது.

நம்பி திருவிளையாடற் புராணம்[174], பெரியபுராணம்[175], கந்தபுராணம்[176], காஞ்சி புராணம்[177] போன்ற பெரும்பான்மை நூல்களில் அவையடக்கப் பொதுவைப்பு நெறி பின்பற்றப்பட்டு, அவையடக்கம் பாயிரத்தின் உறுப்பாகவும் நான்முகத்தின் தனி உறுப்பாகவும் விளங்குகின்றது.

பரஞ்சோதி திருவிளையாடற் புராணம்[178], சீறாப்புராணம்[179] போன்றன முதற்காண்டத்தின் தொடக்கத்தில் அவையடக்கம் பெற்றவை.

'தமிழில் தல புராண இலக்கியம்'[180] என்ற நூல் புராணங்களின் பொதுக் கூறுகளைக் குறிப்பிடும்போது, நூன்முகத்தில் கடவுள் வாழ்த்தை அடுத்து அவையடக்கம் வைக்கப்பெறுவதலைச் சுட்டிக்காட்டியுள்ளதையும் இவண் நினைவுகொள்ளல் வேண்டும்.

பெரும்பான்மையான சிற்றிலக்கிய நூல்கள் காப்பு, அவையடக்கம் ஆகியவற்றை மட்டும் நூன்முகப் பகுதியாகப் பெற்றுள்ளன. ஈண்டு கடவுள் வாழ்த்துப் பொருண்மை 'காப்பு' எனக் கொள்ளப்பட்டுள்ளது.

பாண்டி மண்டல சதகம்[181], அழகர் கலம்பகம்[182], திருமால் இருஞ்சோலைமலை அழகர் பிள்ளைத் தமிழ்[183], குருநாத சுவாமி கிள்ளைவிடு தூது[184], சீகாழிக் கோவை[185] ஆகியவற்றின் அவையடக்கம் காப்புப் பாடலை அடுத்து அமைந்துள்ளது. ஞானக்கூர் அமுதாம்பிகை பிள்ளைத் தமிழில்[186] அவையடக்கத்தை அடுத்து விநாயக வணக்கம் இடம்பெற்றுள்ளது.

குற்றாலக் குறவஞ்சி[187], திருக்கச்சிக் குமரக் கோட்டத்து முருகப் பெருமான் பிள்ளைத் தமிழ்[188], அருள்மிகு புன்னாறி மாரியம்மை பிள்ளைத் தமிழ்[189] போன்றவற்றில் பாயிரத்தின் கீழ் அவையடக்கம் உள்ளது.

அம்பிகாபதிக் கோவை[190], அண்ணாமலை வெண்பா[191], தினகரமாலை என்னும் தினகரவெண்பா[192] போன்றன காப்புப் பாடலில் அவையடக்கப் பொருண்மையைப் பெற்றுள்ளன.

"முன்பாதி புன்சொல் முழுத்தமிழ் பின்பாதி
யின்பாந் தினகரனை யின்சிறஞ்செ-யெண்பாவில்

வள்ளுவர்வெண் பாக்குறளை வைப்பதனாற் குற்றமெல்லாந்
தள்ளுவரே யானைமுகர் தாம்"[193]

என்பது திவாகரமாலை என்னும் திவாகரவெண்பாவின் காப்புப் பாடலாகும். இதில் 'முன்பாதி புன்சொல்லானாலும் பின்பாதியில் திவாகரனைப் பாட வள்ளுவர் வெண்பாக் குறளை வைப்பதனால் என்குற்றம் பொறுக்கத்தக்கது' என்ற பொருளில் பாடியிருப்பதால் இதனை அவையடக்கமாகவும் கொள்ளலாம்.

சிவஞானபோதம்[194], சிவஞான சித்தி[195], சைவசமயநெறி[196], சிவாலய தரிசன விதி[197], சிவதத்துவ விவேகம்[198] போன்ற சமயசாத்திர நூல்களும் அவையடக்கப் பொதுவைப்பு முறையைப் பின்பற்றியுள்ளன. இவற்றில் அவையடக்கம் பாயிரத்தின் ஒரு கூறாக இடம்பெறுதலை மிகுதியாகக் காண முடிகின்றது.

பிற இலக்கிய வகைகளுக்கும் நாட்டுப்புறக் கதைப்பாடல்களுக்கும் அவையடக்க வைப்புமுறையில் மாற்றம் உண்டு. காப்பு அல்லது கடவுள் வாழ்த்து வரிகளில் அவையடக்கப் பொருண்மையைக் காட்டுதல் கதைப்பாடல்களின் சிறப்பாகும்.

பவளக்கொடி மாலை என்ற கதைப்பாடலில் இடம்பெறும் துரோபதை துதியில்,

"பவளக்கொடிமாலை பாடத்துணிந்தேன்யான்
கற்றோர்குற்றங்கள் காதலுடநேர்ந்தாலும்
உற்றபிழைகளெல்லாம் உயர்ந்தோர்மனம்பொறுத்து
இப்புவியோரெல்லோரும் ஒப்பிமனமகிழ
அப்பால் நடந்தகதை அடியேனுரைத்திடுவேன்"[199]

என வரும் அடிகள் அவையடக்கப் பொருண்மையுடையன. இதுபோல்,

பொன்னுருவி மசக்கை[200], எனிவேற்றம்[201] உள்ளிட்ட பல்வேறு கதைப் பாடல்களில் அவையடக்கம் பயின்றுவந்துள்ளது.

கீர்த்தனை நாடகங்கள்[202], நொண்டி நாடகங்கள்[203], வில்லுப் பாட்டு[204], தெருக்கூத்து[205] ஆகியவற்றை ஆராய்ந்தோர், அவற்றின் கட்டமைப்பில் கடவுள் வாழ்த்தையடுத்து அவையடக்கம் இடம்பெறுதலைக் காட்டியுள்ளனர்.

பிற்காலத்தில் தமிழ்த்தாய் வாழ்த்து[206], குருவணக்கம்[207], சிவனடியார் வணக்கம்[208] ஆகியவற்றை அடுத்தும் அவையடக்கம் இடம்பெறச் செய்யப்பட்டது. படைத்தோன் எண்ணம்[209], சமர்ப்பணம்[210], முகவுரை[211] போன்றவற்றினும் அவையடக்கம் பாடும் வழக்கைக் காணமுடிகின்றது.

நூன்முகத்தில் கடவுள் வாழ்த்தை அடுத்து அவையடக்கம் கூறுதல் அவையடக்க வைப்புமுறையின் பொதுநெறியாக உள்ளது. தமது குறிக்கோள் இனிதே நிறைவேற முதலில் இறைவனையும் அடுத்த நிலையில் அவையோரையும் நூலாசிரியர்கள் நம்பியிருந்தனர் என்பது புலனாகிறது.

பாயிரம் என்பதைப் பொதுத் தலைப்பாகக் கொண்டு, பிற உறுப்புகளை அதனுள் அடக்கிக் கூறுதல் பிற்கால வழக்காக உள்ளது. அவ்வகையில் அவையடக்கத்தையும் சேர்த்து, அதனைத் தற்சிறப்புப் பாயிரம் எனத் தலைப்பிடத் தொடங்கினர். தன்னைத் தாழ்த்தியும் அவையோரைச் சிறப்பித்தும் பாடப்படும் அவையடக்கத்தைத் 'தற்சிறப்பு' எனக் கொள்ளுதல் பொருத்தம் அற்றதாகும். நூன்முகத்து இடம்பெறும் தனி உறுப்பாகவே இதனைக் கொள்ள வேண்டும். பாயிரம் பாடுதல் நன்கு வளர்ந்த (சீவகசிந்தாமணி எழுதப்பெற்ற) காலம் முதல் இன்றுவரை பல்வேறு நூல்களில் அவையடக்கம் தனி உறுப்பாக

விளங்குவது நோக்கத்தக்கது. எனவே அவையடக்கத்தைத் தனி உறுப்பாகக் கொள்ளுதலே ஆய்வுலகிற்கு நன்மை தரும்.

4.2.3.1.2. நூல் இடை: நூலின் இடையில் அவையடக்கம் கூறும் முறை சில நூல்களில் உண்டு. இத்தகைய அமைப்புடைய நூல்களில் நூன்முகத்தும் அவையடக்கம் இடம்பெற்றிருக்கும். நூல் இடையில் மட்டும் அவையடக்கம் தனித்து இடம்பெறுவதில்லை.

கம்பராமாயணம் நூன்முகத்து அவையடக்கத்தைப் பெற்றிருப்பதுடன், நாட்டுப் படலத்தின் தொடக்கத்தில்,

"வாங்கரும் பாதம் நான்கும் வகுத்த வான்மீகி என்பான்
தீம்கவி செவிகள் ஆரத் தேவரும் பருகச் செய்தான்
ஆங்கவன் புகழ்ந்த நாட்டை அன்புஎனும் நறவம் மாந்தி
மூங்கையான் பேசல் உற்றான் என்ன யான்மொழியல் உற்றேன்"[212]

என்ற அவையடக்கப் பாடலையும் பெற்றுள்ளது.

கம்பராமாயணத்தை ஆராய்ந்த அ.ச. ஞானசம்பந்தன், இத்தகைய பாடல் இடைச்செருகலாக இருக்குமோ என ஐயுறுகின்றார்.

"வான்மீகத்திலிருந்து பலவிடங்களிலும் கம்பன் மாறிச் செல்வதனால் இவன் வான்மீகிக்குக் கடன்படவில்லை என்று யாரேனும் கூறி விடுவார்களோ என்று அஞ்சிய பிற்காலப் புலவர் ஒருவர் இதனை இயற்றிச் சேர்த்திருக்கலாமோ என்று எண்ணத் தோன்றுகின்றது"[213]

என்பது அவரது கூற்று. கம்பரின் அவையடக்கப் பகுதி இடைச்செருகலா இல்லையா என்று ஆய்வது இவ்வாய்வின் நோக்கமன்று. எனினும் கம்பர் செய்த இப்புதுமையைப் பிற்காலப் புலவர்கள் சிலர் பின்பற்றியுள்ளதால், இப்பாடலைக் கம்பரின் பாடல் எனக் கொள்வதே நலன்.

கம்பராமாயணத்தையடுத்து, அருணந்தி சிவாசாரியாரின் சிவஞான சித்தியாரில் இம்முறை பின்பற்றப்பட்டுள்ளது. பரபக்கம், சுபக்கம் என்ற இரு பிரிவுடைய இந்நூலில் பரபக்கத்திற்கு[214] இரு பாடல்களும் சுபக்கத்திற்கு[215] ஒரு பாடலும் அவையடக்கமாக வந்துள்ளன. இவ்விரு பகுதிகளையும் வெவ்வேறு நூல்களாகக் கருதிவிடக் கூடாது என்பதற்காக இரு பகுதிக்கும் ஒரே பாடலைக் காப்புப் பகுதியில் நூலாசிரியர் தந்துள்ளார்.

காஞ்சிப் புராணம்[216] என்ற நூலின் நூன்முகத்தில் அவையடக்கம் இடம்பெறுவதுடன், திருநகரப் படலத்தின் இறுதியில் 125 மற்றும் 126ஆம் எண்ணுடைய பாடல்களும் அவையடக்கப் பொருண்மையுடையனவாக உள்ளன.

நூலின் இடையில் வரும் ஒரு பகுதியின் தொடக்கத்திலோ இறுதியிலோ இடம்பெறும் இவ்வழக்கு அருகிய நிலையாக உள்ளது.

4.2.3.1.3. நூல் இறுதி: ஒரு நூல் முடிந்த பின்னர்த் தனியாகவும், நூலின் இறுதிப் பாடலாகவும் அவையடக்கத்தை வைக்கும் முறை சில நூல்களில் காணப்பெறுவதாகும்.

நூல் இறுதியில் அவையடக்கம் தரும் முறை முதன்முதலில் வச்சணந்தி மாலை[217] என்ற நூலில் காணப்படுகின்றது. இதில் நூல் முற்றுப்பெற்றப் பின்னர்த் தனியாக அவையடக்கம் அமைந்துள்ளது.

அண்ணாமலை சதகம்[218], திருவேங்கட சதகம்[219], யாப்பொளி[219அ] ஆகியவற்றின் இறுதிப் பாடல்கள் அவையடக்கமாக வந்துள்ளன.

பார்த்தனை வளர்த்த பட்டன்[220] என்ற நூலின் இறுதியில் 'முடிப்புரை' என்ற தலைப்பின்கீழ் சில அடிகளில் அவையடக்கப் பொருண்மை பேசப்பட்டுள்ளது.

வள்ளியம்மை நாடகம்[221] என்ற நூலின் பதிப்பாசிரியர் அவையடக்கம் பாடி அதை நூலின் இறுதியில் பதிப்பித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

உபதேச உண்மை[222] என்ற நூலின் நூன்முகத்தும் நூல் இறுதியிலும் அவையடக்கம் இடம்பெற்றுள்ளது. இவ்வைப்புமுறை பிற நூல்களில் காணக் கிடைக்கவில்லை.

நூலைப் பாடிமுடித்தப் பின்னர் அவையடக்கம் கூறுவதால் அவையோர் மனதில் நிலைத்து நிற்கும் என்று நூலாசிரியன் கருதியிருக்க வேண்டும்.

4.2.3.2. அளவியல்: அளவியல் என்பது எண்ணிக்கையைக் குறிக்கும். ஒரிரு பாடல்களில் அவையடக்கம் கூறுதல் பெருவழக்காய் உள்ளது. எனினும் இதில் வரையறை இல்லை.

புராண நூல்களில் அதிக எண்ணிக்கையுள்ள பாடல்கள் அவையடக்கமாகப் பயின்றுவந்துள்ளன. கந்தபுராணத்தில்[223] 20 பாடல்கள் அவையடக்கமாக இடம்பெற்றுள்ளன. தமிழ் நூற்பரப்பில் இதுவே அதிக எண்ணிக்கையாகும்.

திருமயிலைத் தலபுராணம்[224] 16 பாடல்களைப் பெற்றுள்ளது. சேதுபுராணம்[225], உதயம்[226] போன்ற நூல்கள் முறையே பன்னிரண்டு பாடல்களையும், வள்ளியர் புராணம்[227] 11 பாடல்களையும் அவையடக்கமாகக் கொண்டுள்ளன. இராவண காவியம்[228], மனித தெய்வம் காந்திகாதை[229] ஆகியனவற்றில் 9 பாடல்கள் வந்துள்ளன.

கம்பராமாயணத்திலும்[230] விருத்தப்பாவியலிலும்[231] தலா 7 பாடல்கள் அவையடக்கமாக வைக்கப்பெற்றுள்ளன.

தலபுராணங்களில் பெரும்பாலும் 5 பாடல்களுக்கும் குறையாமல் அவையடக்கம் பாடப்பட்டுள்ளது. குடாதகைப் பிராட்டியார் திருமணவெண்பா[232] என்ற நூலில் அவையடக்கம் என்ற தலைப்பின் கீழ் 10 பாடல்கள் உள்ளன. ஆனால் அவற்றில் முதல் 4 பாடல்கள் மட்டுமே அவையடக்கப் பொருண்மை உடையன. ஏனைப் பாடல்கள் ஆசிரியர் சிறப்பு முதலியன உரைப்பனவாகவுள்ளன.

அதிக அடிகளை உடையனவாகவும் அவையடக்கப் பாடல்கள் நூல்களில் பயின்று வந்துள்ளன. வைசிய குல விளக்கம்[233] 56 அடிகளிலும், மானிட ரகசியம்[234] 54 அடிகளிலும், ச. கிருஷ்ணசாமி முதலியாரின் கம்பராமாயண உரை[235] 52 அடிகளிலும், ஐவர் ராசாக்கள் கதை 51 அடிகளிலும்[235அ], மருமக்கள் வழி மான்மியம்[236] 32 அடிகளிலும், நளவீமபாக சாத்திரம்[237] 31 அடிகளிலும், ஐவர் அம்மானை[238] 30 அடிகளிலும் அவையடக்கத்தைப் பெற்றுள்ளன.

சிற்றிலக்கியங்கள் பெரிதும் ஒரு பாடலில் அவையடக்கம் பேசுவன.

அவையடக்கப் பாடல்களின் எண்ணிக்கையைக் கொண்டு புலவரின் அவையடக்கப் பண்பை மதிப்பிட இயலாது. ஏனெனில் புராண நூலில் ஒன்பது பாடல்களை அவையடக்கமாகப் பாடிய மீனாட்சி சுந்தரம் பிள்ளை, சீகாழிக் கோவையில் ஒரு பாடலை மட்டும் அவையடக்கமாகத் தந்துள்ளார். நூன்முகத்தின் அளவைப் பொறுத்தும் அவையடக்கப் பாடல்களின் எண்ணிக்கை அமைவதுண்டு. நீண்ட நூன்முகத்தைக் கொண்ட கந்தபுராணம் மிகுதியான எண்ணிக்கையுள்ள பாடல்களை அவையடக்கமாகத் தந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

4.3. தொகுப்புரை:

இவ்வியலில் அவையடக்கப் பாடல்களில் அக அமைப்பும் புற அமைப்பும், நூல்களில் பாடல்களின் வைப்புமுறையும் விளக்கப்பெற்றன.

அவையடக்கப் பாடல்களின் அமைப்பில் கருத்தும் வடிவமும் இன்றியமையா தனவாகக் கருதப்பெற்றன.

கருத்தை அடிப்படையாகக் கொண்டு அக அமைப்பும், வடிவத்தை அடிப்படையாகக் கொண்டு புற அமைப்பும் தோற்றுவிக்கப் பெற்றன. பாவடிவங்கள் புறவடிவத்தை உருவாக்கித் தருவனவாக உள்ளன.

நூலாசிரியர் தன்னையும், தன் நூலையும் தாழ்த்துதல், அவையோர் உயர்வு, முன்னோடிகளின் உயர்வு, பாடுபொருள் சிறப்புப் போன்ற கருத்தலகுகள் இணைந்து அவையடக்கப் பாடல்களின் அக அமைப்பைத் தோற்றுவித்தன.

கருத்தலகுகள் உவமைகளால் விளக்கப்பெறுதலைப் பெரிதும் காணமுடிகின்றது. அவையடக்கப் பண்பை மிகுத்துக் காட்டும் கருவியாகவும் உவமைகள் பயன்படுத்தப் பெற்றன.

தன்னையும், தன் நூலையும் தாழ்த்துதல், அவையோர் உயர்வு ஆகிய கருத்தலகுகள் அக அமைப்பில் அடிப்படையாகக் கருதப்பெற்றன. பிற அலகுகள் இவற்றிற்குத் துணையாக அமைந்தன.

கூறுவோர், கேட்போர் என்பதில் கேட்போர் நிலையில் மாற்றம் நிகழும்போது, பாடலின் அமைப்பிலும் வேறுபாடு தோன்றுகின்றது.

சமயம் சார்ந்த நூல்களின் அவையடக்கப் பாடல்கள் பெருமிதம் தோன்றும் வண்ணம் கருத்தலகுகளைக் காட்டியுள்ளன. இதனை இக்கால நூல்களிலும் காணமுடிகின்றது.

பாவகைகளும் பாவினங்களும் அவையடக்கப் பாடல்களின் புற அமைப்பினை உருவாக்கத் துணைபுரிந்துள்ளன. வெண்பா, ஆசிரியப்பா ஆகிய பாவகைகளிலும் விருத்தப்பா முதலான பாவினங்களிலும் அவையடக்கம் யாக்கப்பெற்றது.

'கலிப்பா, வஞ்சிப்பா ஆகியவற்றில் அவையடக்கம் பயிலா' என்பது தொல்காப்பிய மரபு. எனினும் இடைக்காலத்திற்குப் பின்னர் இவற்றின் பாவினங்களிலும் அவையடக்கம் பயின்றுவருதல் யாப்பில் ஏற்பட்ட வளர்ச்சியைக் காட்டுகின்றது.

அவையடக்கப் பாடற்பரப்பில் விருத்தப்பா வகைகள் முதலிடம் பெறுகின்றன. அதனையடுத்து வெண்பா யாப்புப் பயன்படுத்தப் பெற்றுள்ளது. வஞ்சித்துறை, கலித்துறை, கீர்த்தனை, சிந்து போன்றன சில பாடல்களில் அமைந்துள்ளன.

நூலில் அமைந்துவரும் யாப்பிலேயே அவையடக்கமும் யாக்கப் பெறுதல் பொதுநெறியாகவுள்ளது. ஒரோவழி இதில் வேறுபாடும் உண்டு.

நூல்முன், நூல்இடை, நூல் இறுதி ஆகிய மூன்று நிலைகளில் அவையடக்கப் பாடல்களின் வைப்புமுறை அமைந்துள்ளது. நூல்முன் கடவுள் வாழ்த்தையடுத்து அவையடக்கம் வைக்கப் பெறுதல் மரபாகவுள்ளது.

காப்பு அல்லது கடவுள் வாழ்த்து வரிகளில் அவையடக்கம் பேசுதல் கதைப்பாடல்களின் சிறப்பாகும். சில சிற்றிலக்கிய நூல்களின் அவையடக்கப் பாடல்கள் இதனைப் பின்பற்றியுள்ளன.

பாடல்களின் எண்ணிக்கையில் வரையறையில்லை. கந்தபுராணம் முதலான நூல்களில் மிகுந்தளவு இடம்பெறும் ஒரு பாடல்களில் அவையடக்கம் பாடுதல் பெரு வழக்காயுள்ளது. நீண்ட நூன்முகத்தைப் பெற்றுள்ள நூல்கள் மிகுதியான பாடல்களை அவையடக்கமாகக் கொண்டுள்ளன. எனவே பாடல் அளவுகள் புலவனின் அவையடக்கப் பண்பை மதிப்பிடுவதில்லை.

நூலாசிரியனால் - தன்னையும் தன் நூலையும் தாழ்த்திப் - பாடப் பெறும் அவையடக்கப் பகுதியைத் தற்சிறப்புப் பாயிரத்தின் ஒரு கூறாகக் கொள்ளுதல் பொருத்தமற்றதாக உள்ளது. நூன்முகத்தில் இடம்பெறும் தனிக் கூறாகவே மதிப்பிடுதல் வேண்டும்.

சான்றெண் விளக்கங்கள்

1. George Guillen, Language and Poetry, (Hardward University Press, Cambridge, Massacha etts, 1961) pp 33-34.

2. Alex Preminger (Ed.), Princeton Encyclopedia of Poetry and Poetics, Princeton University Press, New Jerse y, 1974) p.812.

3. மேற்கோள்: Jonathan Culler, Structuralist Poetics, (Routledge and Kegan Paul Ltd., London, 1975), p.10.

4. A.G. Hooper, An Introduction to the study of Language and Literature, Longmans Green and Co. Ltd., London, 1961) p.335.

5. R. Stanly Peterson, Designs in Poetry, The Macmillen Company, Newyork, 1962), p.88.

6. Lubomir Dolezel, Toward a Structural Theory of Content in Prose Fiction, Literary Style: A. Symposium, Seymour Chatman (Ed.), Oxford University Press, London and New York, 1971), p.96.

7. வில்லிபாரதம், அவை.1.

8. கம்பராமாயணம், அவை.5.

9. வீரமாமுனிவர், தேம்பாவணி, அவை.2.

10. சி. தேசிகவிநாயகம் பிள்ளை, மருமக்கள் வழி மான்மியம், அவை. அடி.20.

11. சேக்கிழார், பெரியபுராணம், அவை.2.

12. கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள், கந்தபுராணம், அவை.1.

13. பெரும்பற்றப் புலியூர் நம்பி, திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம், அவை.4.

14. உமாபதி சிவாசாரியர், கோயிற்புராணம், பாயி.27.

15. தேவநேயர் மகாகவிசல், செந்தமிழ்ச் செல்வி, இரண்டாஞ் சிலம்பு, கழக வெளியீடு, ருத்ரோத்காரி - இரத்தாட்சி, ப.68.

16. ஆனந்தக் கூத்தர், திருக்காளத்திப் புராணம், அவை.4.

17. ஸ்ரீசம்பந்த சரணாலய சுவாமிகள், கந்தபுராணச் சுருக்கம், அவை.1.

18. தி. நடராசன் (பதி.), உடையார்கதை, அவை.அடி.2.

19. திருகூடராசப்ப கவிராஜ மூர்த்தி, திருக்குற்றாலச் சிலேடை வெண்பா, காப்பு.5.

20. நா. வரதராஜுலு நாயுடு (பதி.), ஸ்ரீ ஆண்டாள் பிள்ளைத் தமிழ், அவை.1.

21. சுப்ரதீபக் கவிராயர், கூளப்ப நாயக்கன் காதல், அவை. கண்ணி-2.

22. உமறுப்புலவர், சீறாப்புராணம், அவை.3.

23. சிவஞான சுவாமிகள், காஞ்சிப்புராணம், அவை.3.

24. வீரபத்திரனார், மாகபுராண அம்மானை, பாயி. அடி.180-181.

25. சுப்பிரமணியர் பேரில் சிந்து, ஆனந்தக்களிப்புக் கண்ணி.11, (பழ. முத்தப்பன் (பதி.), சிந்து நூல் [illegible] 1981), ப.67

26. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, மாயூரப் படிக்கரைப் புராணம், அவை.1.

27. வேதநாயகம் பிள்ளை, நீதிநூல், அவை.3.

28. வ.உ. சிதம்பரம் பிள்ளை, அகமேபுறம், ப.16.

29. வி. நடராச கவிராயர், வயிரவன் கோயிற் புராணம், அவை.1.

30. ராம.சொ. சொக்கலிங்க செட்டியார், பெருந்தோட்டத்து அத்தீச்சுர புராணம், அவை.1.

31. திருத்தக்கத் தேவர், சீவகசிந்தாமணி, அவை.1.

32. கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள், கந்தபுராணம், அவை.3.

33. பரஞ்சோதி, திருவிளையாடற் புராணம், அவை.1.

34. கருணைப் பிரகாச சுவாமிகள் முதலியோர், சீகாளத்திப் புராணம், அவை.1.

35. அரங்க சீனிவாசன், மகாத்மா தெய்வம் காந்தி காதை, அவை.5, 6.

36. நீலகேசி, அவை.5.

37. அறிவனார், பஞ்சமரபு, பாயி.2.

38. அருணந்தி சிவாசாரியார், சிவஞான சித்தியார் பரபக்கம், அவை.2.

39. திருக்குருகைப் பெருமாள் கவிராயர், மாறனலங்காரம், கடவுள் வாழ்த்து 4.

40. கவிராஜ பண்டாரத்தையா, திருமலை முருகன் பிள்ளைத் தமிழ், பிள்ளைத் தமிழ்க் கொத்து, (கழக வெளியீடு, 1963), ப.1.

41. வீரமாமுனிவர், தேம்பாவணி, அவை.3.

42. ஸ்ரீமாதவச் சிவஞான சுவாமிகள், சிவதத்துவவிவேகம், பாயி.7.

43. ஞானக்கூத்த சிவப்பிரகாச தேசிகர், விருத்தாசல புராணம், பாயி.13.

44. மீனாட்சி சுந்தரம்பிள்ளை, வீரவனப் புராணம், அவை.3.

45. மீனாட்சி சுந்தரம்பிள்ளை, திருவானைக்கா அகிலாண்டநாயகி பிள்ளைத்தமிழ், பாயி.13.

46. தி. வீரபத்திர முதலியார், விருத்தப்பாவியல், அவை.6.

47. தவத்திரு முருகதாச சுவாமிகள், வண்ணச்சரபம் அருள்மிகு தண்டபாணி சுவாமிகள் பிள்ளைத் தமிழ், பாயி.5.

48. கவிஞர் மு. இளங்கண்ணன், தேன்மலர், அவையடக்கம்.

49. அமிர்தசாகரர், யாப்பருங்கலக்காரிகை, அவை.2.

50. உமறுப்புலவர், சீறாப்புராணம், கடவுள் வாழ்த்து, 19.

51. கம்பராமாயணம், அவை.5.

52. அமிர்தசாகரர், மு[illegible]ல், அவை.2

53. வல்லூர் தேவராஜபிள்ளை, குசேலோபாக்கியானம், பாயி.16.

54. சி. தேசிகவிநாயகம் பிள்ளை, மு[illegible]ல், அவை. அடி.13-14.

55. கோ. அய்யாமலை கல்வித் தேவர், தமிழாதிக்கதை, அம்மானை வரி.1-25.

56. நீலகேசி, அவை.3.

57. வேப்பத்தூர் சங்கப்புலவர், திருமாலிருஞ்சோலைக் கலம்பகம் என்ற அழகர்கலம்பகம், அவையடக்கம் (வை.மு.கோ. கம்பெனி வெளியீடு) ப.6.

58. அ. சிவசம்புப்புலவர் (உ.ஆ.), மறைசையந்தாதி, உரையாசிரியர் அவையடக்கம் (வித்யாநுபாலன யந்திரசாலை, 1883), ப.2.

59. கம்பராமாயணம், அவை.3.

60. வில்லிபாரதம், அவை.2.

61. காரிநாயனார், கணக்கதிகாரம், பாயி.7.

62. ஆனந்தக் கூத்தர், திருக்காளத்திப் புராணம், அவை.1.

63. சு. நடேசபிள்ளை, சகுந்தலை வெண்பா, சமர்ப்பணம்.

64. பகழிக் கூத்தர், திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ், சிற. பாயி.2.

65. உமாபதி சிவாசாரியார், சிவப்பிரகாசம், பாயி.12.

66. புலவர் குழந்தை, இராவண காவியம், அவை.1.

67. தோலாமொழித் தேவர், சூளாமணி, பாயி.3.

68. சேக்கிழார், பெரியபுராணம், அவை.3.

69. மெய்கண்டதேவர், சிவஞானபோதம், அவையடக்கம் (மெய்கண்டசாத்திரம் பதினான்கு), ப.7.

70. காரிநாயனார், கணக்கதிகாரம், பாயி.7.

71. நாராயண பாரதியார், திருவேங்கடசதகம், பாடல் 102.

72. கமலை ஞானப்பிரகாசர், தியாகராஜர் பள்ளு. A Descriptive Catalogue of the Tamil Manuscripts, Vol.I, (Saraswathi Mahal Library, Thanjavoor, 1964), ப.231.

73. சுப்பிரமணியர் பேரில் சிந்து, ஆனந்தக் களிப்பு, கண்ணி. 9-11.

74. புகழேந்திப் புலவர், நல்லதங்காள் கதை, விநாயகர்துதி, அடி.6-8.

75. பி. சுந்தரம்பிள்ளை, மனோன்மணீயம்; ஜெ. ஸ்ரீசந்திரன் (பதி.), 1965, ப.19. இச்செய்தி 'காலந்தோறும் அவையடக்கப் பாடல்கள்' என்ற இயலிலும் விளக்கப்பெற்றுள்ளது.

76. வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார், மானவிஜயம், பாயி.10.

77. சு. நடேசபிள்ளை, புனல், சமர்ப்பணம்.

78. சுத்தானந்த பாரதியார், பாரதசக்தி மகாகாவியம், மங்கல வாழ்த்துப் படலம், பாடல் 15.

79. சருக்கை-வரதாசாரியர், ஜோதிமாலை, அவையடக்கம்.

80. பண்டிதை அசலாம்பிகை அம்மாள், சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் சரிதம், பாயி.25.

81. புலவர் அ. நக்கீரன், அன்னை அம்பது, (நக்கீரன் நிலையம், சென்னை, 1968), ப.7.

82. இரா. பாண்டியன், பூங்கொடி (காவியம்), அலைபஞ்சல் (செந்தமிழ்க் கலா நிலையம், பினாங்கு, மலேசியா, 1978), ப.2.

83. ராய. சொக்கலிங்கம், காந்தி பிள்ளைத் தமிழ், அவை.1.

84. பேரா. தொல். பொருள். செய். நூ.105.

85. மேலது, நூ.110.

86. மேலது, நூ.111.

87. வாகீசமுனிவர், ஞானாமிர்தம், பாடல் 5.

88. மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு (கி.பி. பதினாறாம் நூற்றாண்டு, மூன்றாம் பாகம், காந்தி வித்தியாலயம், 1976), ப.79.

89. சுவாமிநாத தேசிகர், இலக்கணக் கொத்து, பாயி.6.

90. சு. கிருஷ்ணசாமி முதலியார், கம்பராமாயண உரை, உரையாசிரியர் அவையடக்கம், அடி.1-52.

91. கவிஞர் இ. குற்றாலம், சேநாதர் பிள்ளைத்தமிழ், அவையடக்கம்.

92. மேற்கோள்: மு. அருணாசலம், முன்நூல், ப.79.

93. நெல்லை சு. சுப்பிரமணியன், சாங்கிய காரிகை, (உமா நூலகம், திருநெல்வேலி-6, 1980), ப.28.

94. அம்பிகாபதி, அம்பிகாபதிக் கோவை, காப்பு.

95. மெய்கண்ட தேவர், சிவஞான போதம் (மெய்கண்ட சாத்திரம் பதினான்கு), ப.7.

96. புகழேந்தி, நளவெண்பா, த.சி.பாயி.4.

97. திருக்குருகைப் பெருமாள் கவிராயர், முன்நூல், கடவுள் வாழ்த்து, 4.

98. வேப்பத்தூர்ச் சங்கப் புலவர், முன்நூல், ப.6.

99. கி. வேங்கடசாமி ரெட்டியார், மகாத்மா காந்தி அடிகளின் மீது நெஞ்சுவிடுதூது, பாடல் 2.

100. கா.ர. கோவிந்தராச முதலியார் (உ.ஆ.), பன்னிருபாட்டியலுரை, (கழக வெளியீடு, சென்னை, 1970) முன்னுரை, ப.13.

101. தத்துவராய சுவாமிகள், அமிர்தசாரம், கடவுள் வாழ்த்து, 7.

102. மறைஞான சம்பந்தர், சங்கற்ப நிராகரணம், பாடல், 29.

103. மறைஞான சம்பந்த நாயனார், சைவசமய நெறி, பாயி.24.

104. அட்டாங்க யோகக் குறள், பாயி.6 மேற்கோள்: எஸ். சௌந்தரபாண்டியன், தமிழில் அவையடக்கப் பாடல்கள் (ஸ்டார் பிரசுரம், சென்னை, 1988), ப.270.

105. சுப. இளங்கோவன், செட்டிநாட்டரசர் மெய்க்கீர்த்திமாலை, (வானதி பதிப்பகம், சென்னை, 1980, முதற்பதிப்பு), ப.2.

106. கம்பராமாயணம், அவை.5.

107. சேக்கிழார், பெரியபுராணம், அவை.1-3.

108. கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள், கந்தபுராணம், அவை.1-20.

109. அரசகேசரி, இரகுவம்சம், பாயி.4-7.

110. தி. வீரபத்திர முதலியார், விருத்தப்பாவியல், அவை.1-7.

111. புலவர் பா. நாராயணன், பெரியார் காவியம் (இளமைக் காண்டம்), வாழ்த்துப் படலம், 10-12.

112. புலவர் குழந்தை, இராவண காவியம், அவை.1-9 (பாயி.40-48).

113. பரஞ்சோதி முனிவர், திருவிளையாடற் புராணம், அவை.1-4 (பாயி.22-25).

114. மீனாட்சி சுந்தரம்பிள்ளை, சேக்கிழார் பிள்ளைத் தமிழ், பாயி.2 (ஸ்ரீகந்தப்பெருமான் தேவத்தானம் வெளியீடு, திருப்பேரூர், 1964, முதற்பதிப்பு), ப.10.

115. திருவெண்ணெய்நல்லூர் இராசப்ப உபாத்தியாயர், மனுநீதிச் சதகம், நூல் வரலாறும் அவையடக்கமும், பக்க எண் இல்லை.

116. திருச்சிற்றம்பல நாவலர், அண்ணாமலை சதகம், பாடல் 102.

117. வேங்கட சுப்புப்பிள்ளை, கச்சிக்குமரக்கோட்டக் கடவுள் பிள்ளைத் தமிழ், அவையடக்கம்.

118. க.அ. ஆறுமுகனார், தமிழகத்தின் கலைமணிகள், அவையடக்கம்.

119. நா. கனகராஜையர், திருவள்ளுவர் பிள்ளைத் தமிழ், குருவணக்கமும் அவையடக்கமும்.

120. ந. பலராமையர், தசரதன் குறை, பாயி.4.

121. நவநீத நாடனார், கவித்துறைப் பாட்டியல் என்னும் நவநீதப்பாட்டியல், த.சி. பாயி.2.

122. முனியப் புலவர் எஸ். ஆதிமூலப் பெருமாள் ஆசிரியர், முத்துக்குமார ஞானியர் சதகம், பாடல் 4.

123. பழ. சண்முகனார், பிலக்கா ஸ்ரீ அங்காளேஸ்வரியம்மன் அந்தாதி, அவையடக்கம்.

124. புலவர் அரிமதி தென்னகன், சுந்தரங்கன் பிள்ளைத் தமிழ், மொழி வாழ்த்து, பாயி.1.

125. நவநீத நாடனார் முன்னால், த.சி. பாயி.2.

126. த. குமாரசாமிபிள்ளை, முத்துவிநாயகரந்தாதி, அவையடக்கம்.

127. வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார், மானவிஜயம், பாயி.10.

128. கொ.சி. சாமிநாதன், கருணாநிதி நாமமாலை, (கொ.சி. சாமிநாதன் (பதி.), கோழிகுத்தி, சோழன்பேட்டை அஞ்சல், மாயூரம் வட்டம், 1972),ப.1

129. அருணாசலக் கவிராயர், இராமநாடகம், பாயி.5 ; தரு.4.

130. சிதம்பர பாரதிகளென்ற சின்னபாரதி, பெரியபுராணக் கீர்த்தனை, அவை. கண்ணி. 1-4 (சுப்ராமய்யர் (பதி.) ஊழியன் அச்சுக்கூடம், காரைக்குடி, 1929), ப.7.

131. திருவிளையாடற் கீர்த்தனை செய்த சுப்பிரமணிய பாரதியார், திருமெய்யம் பெருமாள் கோவில் ஸ்தலபுராணக் கீர்த்தனை, அவையடக்கம்.

132. சுப்பிரமணியர் பேரில் சிந்து, ஆனந்தக் களிப்பு, கண்ணி.10.11.

133. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, திருவாரூர்த் தியாகராசர் லீலை, அவை.1.

134. மேலது, அவை.2.

135. மேலது, அவை.3-7.

136. சுந்தரலிங்க முனிவர், திருப்பெருந்துறைப் புராணம், அவை.1-3.

137. மேலது, அவை.4-5.

138. வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார், மானவிஜயம், பாயி.8, 9.

139. வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார், மானவிஜயம், பாயி.10.

140. பெருமாள்பட்டி வைத்தியலிங்கம் பிள்ளை, புதுவைத்தல புராணம், அவை. 1, 2, 5; 3, 4.

141. இராம.சொ. சொக்கலிங்கஞ் செட்டியார், திருப்பத்தூர்ப் புராணம், அவை.1-6; 7-10.

142. பாவலர் செந்தமிழ்ச் செல்வன், அய்யா வைப்பியம் என்னும் அய்யா காவியம், பாயி.24; 25-26.

143. கோபால கிருஷ்ண பாரதியார், திருநாளைப் போவாரென்னும் நந்தனார் சரித்திரக் கீர்த்தனை, (இட்டா-பார்த்தசாரதி நாயுடு & சன்ஸ், சக்கரவர்த்தி அச்சுக் கூடம், சென்னை, 1930), ப.6.

144. ச.மு. கந்தசாமி பிள்ளை, இராமலிங்க சுவாமிகள் திவ்விய சரித்திரக் கீர்த்தனை, அவை.1-2.

145. யாழ்ப்பாணம் வரதபண்டிதர், குருநாதசுவாமி கிள்ளை விடுதூது, அவையடக்கம்.

146. பேரா. தொல். பொருள். செய். நூ.85.

147. மேலது, நூ.110, 111.

148. திருக்குருகைப் பெருமாள் கவிராயர், மாறனலங்காரம், வெண்பா, 72.

149. திருத்தக்கத் தேவர், சீவகசிந்தாமணி, கடவுள் வாழ்த்து, 4, 5. (உ.வே.சா. (பதி.), கபீர் அச்சுக் கூடம், சென்னை, 1957, ஆறாம் பதிப்பு), பக்.7-8.

150. நீலகேசி, கடவுள் வாழ்த்து, 3-7 (கழக வெளியீடு, 1964), பக்.15-18.

151. யசோதர காவியம், பாடல், 3.

152. சி. தேசிகவிநாயகம்பிள்ளை, மருமக்கள் வழி மான்மியம், அவையடக்கம், (பாரி நிலையம், சென்னை, 1965, மூன்றாம் பதிப்பு), பக்.39-40.

153. கலைவாணன், உதயம் (அரங்க சீனிவாசன் (பதி.), கலைவாணன் பதிப்பக வெளியீடு, திருச்சி, 1969) பக்.21-24.

154. இரா. பாண்டியன், முன்னூல், ப.2.

155. தோலாமொழித் தேவர், சூளாமணி, பாயி.3.

156. கம்பராமாயணம், த.சி. பாயி.4-9.

157. வில்லிபுத்தூரார், மகாபாரதம், பாயி.5-8.

158. புகழேந்தி, நளவெண்பா, த.சி.பாயி.4.

159. வீரமாமுனிவர், தேம்பாவணி, பாயி.4-6.

160. புலவர் குழந்தை, இராவண காவியம், பாயி.40-48.

161. அ. கிருஷ்ணசாமி நாயுடு, திருவள்ளுவர் காவியம், பாயி.17-18.

162. கண்ணதாசன், இயேசு காவியம், பாயிரம் (கலைக்காவிரி, 1985, இரண்டாம் பதிப்பு), ப.1.

163. திரு. பொ.வே. சோமசுந்தரனார் (உ.ஆ.), உதயணகுமார காவியம், உஞ்சைக்காண்டம், பாடல், 3.

164. மு. சண்முகம்பிள்ளை (பதி.), நாககுமார காவியம், முதற்சருக்கம், பாடல் 4.

165. சுத்தானந்த பாரதியார், பாரதசக்தி மகாகாவியம், மங்கல வாழ்த்துப் படலம், 15 (அன்பு நிலையம், இராமச்சந்திரபுரம், திருச்சி ஜில்லா, 1945, முதற்பதிப்பு), ப.37.

166. இராமானுச கவிராயர், மகாத்மா காந்தி காவியம் அல்லது மகாகாவியம், கடவுள் வாழ்த்து, பாடல், 44-47.

167. அரங்க சீனிவாசன், மனித தெய்வம் காந்தி காதை, பாயி.23-31.

168. அமிர்தசாகரர், யாப்பருங்கலக்காரிகை, பாயி.2-3.

169. புத்தமித்திரனார், வீரசோழியம், பாயி.2.

170. குணவீரபண்டிதர், நேமிநாதன், பாயி.2.

171. நவநீதநாடனார், முன்னூல், த.சி.பாயி.2.

172. அருள்மிகு தண்டபாணி சுவாமிகள், வண்ணத்தியல்பு, பாயி.5.

173. தி. வீரபத்திர முதலியார், விருத்தப்பாவியல், அவை.1-7 (கழக வெளியீடு, 1984), ப.6.

174. பெரும்பற்றப்புலியூர் நம்பி, திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம், அவை.1-4 (உ.வே. சாமிநாதையர் (பதி.), 1972, மூன்றாம் பதிப்பு), ப.8.

175. சேக்கிழார், பெரியபுராணம், த.சி. பாயி.5-7.

176. கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள், கந்தபுராணம் - முதற்பகுதி, அவை. 1-20 (திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து வெளியீடு, 1952), பக்.5-7.

177. சிவஞான முனிவர், காஞ்சிப் புராணம், பாயி.23-26.

178. பரஞ்சோதி, திருவிளையாடற்புராணம், பாயி.22-25, இரத்தினவேலு முதலியார் (உரை.ஆ.), (முருகவேள் புத்தகசாலை, சென்னை, 193, திருத்திய பதிப்பு), பக்.27-30.

179. உமறுப்புலவர், சீறாப்புராணம், விலாதத்துக் காண்டம், கடவுள் வாழ்த்துப் படலம், 18-20.

180. வே. கிருஷ்ணசாமி, தமிழில் தலபுராண இலக்கியம் (அ. வேலுக் கோனார் வெளியீடு, 1974), பக்.31-32.

181. ஐயம்பெருமாள் பிள்ளை, பாண்டி மண்டல சதகம், செந்தமிழ்ச் செல்வி, (1921-ஜூன்-ஜூலை, தொகுதி-19, பகுதி-8), ப.257.

182. வெப்பத்தூர்ச் சங்கப் புலவர், திருமாலிருஞ்சோலைமலை அழகர் பிள்ளைத் தமிழ், (தமிழ்ச் சங்க முத்திராசாலை, மதுரை, 1919), பக்.1-3.

184. யாழ்ப்பாணம் வரதபண்டிதர், குருநாதசுவாமி கிள்ளைவிடு தூது, ச.இ. சிவராமலிங்கையர் (பதி.), சோதிடப்பிரகாசயந்திரசாலை, கொக்குவில், 1921, இரண்டாம் பதிப்பு), ப.1.

185. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, சீகாழிக்கோவை, காப்பு 3.

186. மாதவச் சிவஞான சுவாமிகள், குளத்தூர் அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ், பாடல் 2,(கழக வெளியீடு, 1939, இரண்டாம் பதிப்பு), ப.6.

187. திரிகூடராசப்பக் கவிராயர், திருக்குற்றாலக் குறவஞ்சி, பாயி.9.

188. த. வைத்யநாதபிள்ளை திருக்கச்சிக் குமர கோட்டத்து முருகப்பெருமான் பிள்ளைத் தமிழ், பாயி.6-10.

189. திரு. குமார. ஞானசம்பந்தன், அருள்மிகு பண்ணாரி மாரியம்மை பிள்ளைத் தமிழ், பாயி.7.

190. அம்பிகாபதி, அம்பிகாபதிக் கோவை, அவையடக்கம் (மு. அருணாசலம் (பதி.) 1944), ப.1.

191. குருநமச்சிவாய சுவாமிகள், அண்ணாமலை வெண்பா காப்பு. (ஏ.கே. ரங்கசாமி நாயகர் (பதி.), சென்னை, 1948), ப.1.

192. திவாகரமாலை என்னும் திவாகர வெண்பா, காப்பு (குறள் வெண்பா நூற்கோவை, கழக வெளியீடு, 1967), ப.5.

193. மேலது, காப்பு.

194. மெய்கண்ட தேவர், சிவஞானபோதம், (மெய்கண்டசாத்திரம் பதினான்கு), ப.7.

195. அருணந்தி சிவாசாரியார், சிவஞான சித்தியார், மெய்கண்ட சாத்திரம் பதினான்கு, பக்.221-222, 378.

196. மறைஞான சம்பந்த நாயனார், சைவசமய நெறி, பாயி.24.

197. இராமசுவாமிப் பிள்ளை சிவாலய தரிசன விதி, பாயி.14.

198. மாதவச் சிவஞான சுவாமிகள், சிவதத்துவ விவேகம், பாயி.7.

199. புகழேந்திப் புலவர், பவளக்கொடிமாலை, துரோபதை துதி, அடி. 7-11.

200. புகழேந்திப் புலவர், பொன்னுருவி மசக்கை, விநாயகர் தோத்திரம், காப்பு அடி.19-20.

201. புகழேந்திப் புலவர், ஏணிபேற்றம், சுப்பிரமணியன் துதி, அடி.9-10.

202. செல்வி பி. புஷ்பா, தமிழில் கீர்த்தனை நாடகங்கள், (முத்துப் பதிப்பகம், மதுரை, 1980, முதற்பதிப்பு), பக்.42-43.

203. முத்துச் சண்முகன், வி. அசோகன், நொண்டி நாடகங்கள், (முத்துப் பதிப்பகம், மதுரை, 1981, முதற்பதிப்பு), ப.31-33.

204. தி.சி. கோமதி நாயகம், தமிழ் வில்லுப் பாட்டுகள், (தமிழ்ப் பதிப்பகம், 1979, முதற்பதிப்பு), ப.23.

205. அ. அறிவுநம்பி, தமிழகத்தில் தெருக்கூத்து, (அமுதன் நூலகம், காரைக்குடி, 1986, முதற்பதிப்பு), பக்.168-177.

206. 1) பி. சுந்தரம்பிள்ளை, மனோன்மணீயம், (ஜெ. ஸ்ரீசந்திரன் (பதி.), வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 1965, முதற்பதிப்பு), ப.19.

2) ஏ.எஸ். பெருமாள், பால்மதி (கவிதை நாடகம்), (1975, முதற்பதிப்பு), பக்.1-2.

207. 1) ஓவியப்புலவன் எஸ். ஆதிமூலப் பெருமாள் ஆசிரியர், முத்துக்குமார ஞானியர் சதகம், பாடல் 4.

2) த. வேங்கடகிருஷ்ணையங்கார், இராகவ காவியம், த.சி. பாயி.7-11.

208. நா. கனகராஜையர், பெரியநாயகி பிள்ளைத் தமிழ், பாயி.6, (கமலா பதிப்பகம், புதுக்கோட்டை, 1942), பக்.3-5.

209. கவிஞர் 'கோ', சோழமாகாவியம், (தை நூலகம் வெளியீடு, நாச்சியார்கோவில், தஞ்சை மாவட்டம், 1975, முதற்பதிப்பு), ப.16.

210. சு. நடேசபிள்ளை, சகுந்தலைவெண்பா, சமர்ப்பணம். (இராமநாதன் கழகம், 1963, முதற்பதிப்பு), பக்கம் இல்லை.

211. 1) ஆ. சிங்காரவேலு முதலியார், அபிதான சிந்தாமணி, (ஸ்ரீ குமாரசாமி நாயுடு சன்ஸ், சென்னை, 1934, இரண்டாம் பதிப்பு), முதற்பதிப்பின் முகவுரை, ப.1.

2) பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார், (மொ.ஆ), சுக்கிரநீதி, (சன்மார்க்கசபை, மேலைச்சிவபுரி, 1982, இரண்டாம் பதிப்பு), முகவுரை, ப.11.

212. கம்பராமாயணம், பாலகாண்டம், நாட்டுப் படலம், 1.

213. அ.ச. ஞானசம்பந்தன், கம்பன்-புதிய பார்வை, (கம்பன் கழகம், சென்னை, 1984, முதற்பதிப்பு), ப.

214. அருணந்தி சிவாசாரியார், சிவஞான சித்தியார் பரபக்கம், பாடல் 7, மெய்கண்ட சாத்திரம் பதினான்கு, பக்.221-222.

215. அருணந்தி சிவாசாரியார், சிவஞான சித்தியார் சுபக்கம், பாடல் 4, ப.378.

216. சிவஞான முனிவர், காஞ்சிப்புராணம், பாயி.23-26; திருநகரப்படலம், 125, 126.

217. குணவீர பண்டிதர், வச்சணந்தி மாலை என்னும் வெண்பாப் பாட்டியல், (கழக வெளியீடு, 1964), ப.76.

218. திருச்சிற்றம்பல நாவலர், அண்ணாமலை சதகம், பாடல் 102.

219. வெண்மணி நாராயண பாரதி, திருவேங்கட சதகம், பாடல் 102.

219. அ) ஆர். ஸ்ரீனிவாஸராகவாசார்ய சிரோமணி, யாப்பொளி, திருவேங்கடவன் கீழ்த்திசைக் கலை ஆராய்ச்சிக் கழகம், திருப்பதி, 1957), ப.153.

220. புரிசை சு. முருகேசன், பார்த்தனை வளர்த்த பாட்டன், முடிப்புரை, அடி.3375-3384.

221. முனிசாமிபிள்ளை (பதி.), முத்துவீரக்கவிஞர் இயற்றிய வள்ளியம்மை நாடகம், நூல் இறுதியில் பதிப்பாசிரியரின் அவையடக்கம் (பக்க எண் இல்லை)

222. மேற்கோள்: எஸ். சௌந்தரபாண்டியன், முன்னுரை, பக்.23-24.

223. கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள், கந்தபுராணம் முதற்பகுதி, அவை. 1-20 (ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள், 1952), பக்.5-7.

224. அமிர்தலிங்கத் தம்பிரான், திருமயிலைத் தல புராணம், (தி நோபில் பிரஸ், சென்னை, 1924), அவை.1-16.

225. நிரம்பவழகிய தேசிகர், சேதுபுராணம், சதாசிவப்பிள்ளை (பதி.) (வித்யாநுபாலன யந்திரசாலை, சென்ன பட்டணம், ஏவிளம்பி ஆண்டு, இரண்டாம் பதிப்பு), அவை.1-12.

226. கலைவாணன், உதயம், அவை.1-12.

227. கி. வீரப்பபிள்ளை, வள்ளியர் புராணம், அவை.1-11.

228. புலவர் குழந்தை, இராவண காவியம், அவை.1-9.

229. அரங்க சீனிவாசன், மனித தெய்வம் காந்தி காதை, அவை.1-9.

230. கம்பராமாயணம், பாயி.4-9, பாலகாண்டம், நாட்டுப்படலம்,1.

231. தி. வீரபத்திரமுதலியார், விருத்தப்பாவியல், அவை.1-7 (கழக வெளியீடு, 1984), ப.6.

232. திருப்பூர் ச.வே. சன்மா, தடாதகை பிராட்டியார் திருமண வெண்பா மாலை, பாயி.8-17.

233. ம.மு. சுந்தரம் செட்டியார், வைசிய குலவிளக்கம், அவையடக்கம், மேற்கோள்: எஸ். சௌந்தரபாண்டியன், முன்னூல், பக்.279-280.

234. சிறுமணவூர் முனிசாமி முதலியார், மானிட ரகசியம் எனும் சரீர சாஸ்திரம், அவையடக்கம், மேற்கோள்: எஸ். சௌந்தரபாண்டியன், முன்னூல், பக்.241-242.

235. சு. கிருஷ்ணசாமி முதலியார் (உ.ஆ.), கம்பராமாயணம், உரையாசிரியர் அவையடக்கம்.

235. அ) நா. வானமாமலை (பதி.), ஐவர் ராசாக்கள் கதை, அடி. 20-71.

236. சி. தேசிக விநாயகம்பிள்ளை, முன்னூல், பக்.39-40.

237. வே. கந்தசாமி முதலியார் முதலியோர் (பதி.), பதார்த்தருசிகர சிந்தாமணி என்னும் நளவீமபாக சாஸ்திரம், புலனூற்படலம், த.சி. பாயி.2.

238. தென்னீரையம்பதியார், ஐவர் அம்மானை, அம்மானை வரி.52-82.

இயல் ஐந்து

அவையடக்கப் பாடல்களின் இலக்கியத்திறன்

உள்ளடக்கம்

5. அவையடக்கப் பாடல்களின் இலக்கியத்திறன்

அவையடக்கம் என்பது அவையோர்க்கு நூலாசிரியன் தன் பணிவைத் தெரிவிக்கும் நோக்கில் பாடுவதாகும். அதில் இலக்கியநயம் காட்டப்பெற வேண்டும் என்பது அடிப்படை நோக்கமன்று. எனினும் நூல் இயற்றியோர் தம் புலமைத்திறத்தால் பாடிய அவையடக்கப் பாடல்களில் இலக்கியச் சுவையும் இலக்கிய நயமும் இயல்பாய் அமைந்து விடுகின்றன. எனவே அவையடக்கப் பாடல்களின் இலக்கியத்திறனை ஆராய்தல் தேவையானதாகும்.

5.1. இலக்கிய உத்திகள்:

கவிஞர்களின் அகமனத்தைப் பிரதிபலிக்கும் கவிதைகள் உணர்ச்சியும் உயிரோட்டமும் மிக்கதாய் அமைதல் வேண்டும். அப்போதுதான் அவை காலங்கடந்து நின்று கற்போர்க்கு இன்பம் பயக்கும் திறனைப் பெறும். கவிஞர்களின் உணர்த்துமுறைக்கு ஏற்ப இத்திறன் வேறுபட்டு நிற்கும் எனக் கருதப்படுகின்றது.

'கவிதை உணர்த்தப்பட்ட முறைதான், ஒரு கவிதையை வாழவைக்கும் முதல்கூறு"[1] என்பர். மேலும் 'உணர்த்தும் திறனில் ஏற்படும் குறையால், சில நேரங்களில் கலையும் சிறப்பற்றதாக அமைந்துவிடுகிறது'[2] என்றும் கூறப்படுகின்றது. எனவே கவிதையின் உயிராக உணர்த்தும் திறன் அமைதல் புலனாம். இது ஓர் உத்தியைப் போன்றதாகும்.

"கவிஞன் தான் பெற்ற உணர்ச்சிகளைத் தன் கவிதைகளைப் படிப்போரும் பெறவேண்டும் என்று எண்ணிச் சில யுத்தி முறைகளைக் கையாண்டு கவிதையைப் படைக்கிறான். அந்த யுத்தி முறைகளால் உணர்ச்சியை அதில் பொதிய வைக்கிறான். கற்பனை, சொற்களின் அமைப்புமுறை, ஒலிநயம், யாப்புமுறை, அணிநலன், தொடைநயம், குறிப்புப்பொருள், சுவைகள் போன்ற சில முறைகளை மேற்கொண்டு கவிதையைப் படைக்கிறான்"[3].

அலையடக்கப் பாடல்களில் மேற்கண்ட உத்திமுறைகளுள் சில கையாளப் பெற்றுள்ளன. அவற்றை ஆய்வு வசதி கருதிப் பின்வரும் பிரிவுகளில் அடக்கலாம்:

1. சொல்லாட்சி
2. ஒலிநயம்
3. யாப்பமைதி
4. கற்பனைத் திறன்
5. அணிநலன்
6. நடைத்திறன்

5.1.1. சொல்லாட்சி: உரைநடையில் கையாளப் பெறும் சொற்களுக்கும் கவிதையில் பயன்படுத்தப் பெறும் சொற்களுக்கும் வேறுபாடில்லை எனக் கூறப்படுகின்றது. ஆனால் கவிஞன் கையாளும் முறையால் அச்சொற்கள் வேறுபட்டு நிற்கின்றன.

"பாட்டில் சொற்கள் அமையும்போது, வன்மையான உணர்ச்சிக்கு வேண்டிய இடத்தில் வன்மையான சொற்களும், மென்மையான உணர்ச்சிக்கு உரிய இடத்தில் மென்மையான சொற்களும், உணர்ச்சி மிக்க இடங்களில் உணர்ச்சி மிக்க சொற்களும், இனிமையும் அழகும் மிக்க இடங்களில் நயமான சொற்களும் வந்து அமைகின்றன"[4]

எனவே கவிஞனின் உணர்ச்சியைப் பிரதிபலிக்க, இடத்திற்கேற்பப் பொருளிலும் கருத்திலும் சொற்கள் வேறுபட்டு அமையும் என்பது பெறப்படும்.

நூலாசிரியன் மீது அவையோர்க்கு நல்லெண்ணம் தோன்றும் வகையில் அவையடக்கம் பாடப்பெற வேண்டும். ஆதலால் அப் பண்பை வெளிப்படுத்தும் சில சொற்களை நூலாசிரியன் கையாளுகின்றான்.

"கன்னபா கமெய்கனிப்ப தோரளப் பிறொல்கதையுள்
சொன்னபா வலன்றுகளறு சுகன்றி ருத்தாதை
அன்னபா ரதந்தன்னை யோரறிவி லேனுரைப்பது
என்னபா வமற்றென்னை யின்றென்சொ லாதலகே"[5]

இப்பாடலில் ஆசிரியன் தன்னைத் தாழ்த்திக்கொள்ள 'அறிவிலேன்' என்ற சொல்லையும், தான் மேற்கொண்டுள்ளது தகாத செயல் என்பதைக் காட்ட 'பாவம்' என்ற சொல்லையும் பயன்படுத்தி, அவற்றின்வழி அவையடக்கப் பண்பை வெளிப்படுத்துகின்றான். முன்னோடிகளைச் சிறப்பிக்கத் 'தகளறு', 'திரு' என்ற சொற்கள் பயன்படுத்தப்பெற்றன. இதனால் முன்னோடிகள் மீது நூலாசிரியனுக்கு இருக்கின்ற மதிப்பு வெளிப்படும். எனவே நூலாசிரியனின் தன்னடக்கத்தை வெளிப்படுத்தும் இச்சொற்கள் அவையோர்க்கு நூலாசிரியனின்பால் நல்லெண்ணமும், இரக்கமும் ஏற்பட வகைசெய்கின்றன.

"சாதாரண சொற்கள்கூடக் கவிதை வடிவு பெறுங்கால் ஒரு தனிப்பட்ட மதிப்பினைப் பெற்றுவிடுகின்றன. இம்மதிப்புடைய சொற்கள் உள்ளவைதாம் கவிதைகள்; இல்லாதவை செய்யுட்கள்"[6]

என்பர்.

"எழுத்துப் போலியும் எழுத்தென ஆளுவர் அதுபோல்
புழுத்த நாயினேன் பிதற்றிய செய்யுட்போ லியையும்

பழுத்த கேள்வியோர் கைக்கொள்வர் என்பது பற்றி
விழுத்த நாயினேன் சிலகதை விளம்புதற் கிசைந்தேன்" [7]

என்ற பாடலில் கையாளப்பெற்றுள்ள சொற்கள் அனைத்தும் சாதாரண சொற்களே. ஆனால் ஆசிரியர் அச்சொற்களைக் கையாண்டுள்ள முறையால் அவை மதிப்புடைச் சொற்களாக விளங்குகின்றன. தனிச்சொற்களின் ஆட்சியால் மட்டும் சொல்வளம் நிரம்பிவிடுவதில்லை. சொற்கள் ஒன்றோடொன்று கலந்து வருவதும் சொல் வளத்தில் அடங்கும். இதனைப் பாடலில் இடம்பெறும் சொல்லாட்சி தெளிவு படுத்துகின்றது. புழுத்த நாயினேன், செய்யுட்போலி, விழுத்த நாயினேன் போன்ற சொற்றொடர்கள் ஆசிரியனின் தாழ்மையையும், பழுத்த கேள்வியோர் என்ற சொற்றொடர் அவையோரின் சிறப்பையும் உணர்த்தி நிற்கின்றன. சொற்களின் இணைப்பால் சொற்களுக்குப் புதியவேகம் பிறப்பதனைப் 'புழுத்த நாயினேன் பிதற்றிய செய்யுட்போலி' என்ற சொற்றொடர் உணர்த்தும்.

கவிதைகளில் இடம்பெறும் சொற்களைத் தனித்தனியாக எடுத்துப் பார்க்கும் பொழுது அவை தரும் பொருள் வேறாகவும், ஏனைய சொற்களுடன் உறவுகொண்டு மனத்தில் படும்பொழுது தரும் பொருள் வேறாகவும் உள்ளன.

"தம்மை உணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்
எம்மை உடைமை எமையிகழார் – தம்மை
உணரார் உணரார் உடங்கியைந்து தம்மிற்
புணராமை கேளாம் புறன்" [8]

இப்பாடலில் வரும் தனித்தனிச் சொற்களுக்கு அகராதிகள் தரும் பொருள்வேறு; கவிஞன் கையாண்டுள்ள பொருள் வேறு. சைவசமயத்தாரின் உயர்வும் ஏனைய சமயத்தார்களதிழிவும் அவையடக்கத்துள் கூறும் வகையில் இப்பாடல் அமைக்கப் பெற்றுள்ளது. பாடலில் இடம்பெறும் சொற்கள் புலவனின் சமய உணர்வினை வெளிக்காட்டப் பயன்படுத்தப்பட்டன.

அடக்கத்தை வெளிப்படுத்தும் பாடலில் கவிஞரின் அச்சவுணர்வு கலந்திருப்பதைச் சில சொற்கள் காட்டுகின்றன. அவையோர் முன் நேர் நின்று நூல் ஒப்பப்பெறுவதும் இதற்கோர் காரணமாக அமைகின்றது.

"........ புன்சொல்
யார்கொள்வா ரென்பதசற் றறியாமற்
சிறியேனா வசைக்கின் றேனே!"[9]

என்ற பாடலடிகளில் இடம்பெறும் சொற்கள் புலவரின் அச்சவுணர்வினை வெளிப்படுத்துவதை உணரமுடிகின்றது. பிறர் துணை வேண்டாது நூல் வெளியிட முடியும் என்ற நிலையுள்ள இக்காலத்து நூல்களிலும் அச்சவுணர்ச்சி மேலோங்கி நிற்பதைப் பாடல்கள் காட்டுகின்றன. சான்றாக,

"கடுகினில் அகப்பை செய்து கடலினை யள்ளல் போல
நெடுந்தமிழ்க் கடலோர் சொட்டு நீரினில் நனைந்தேன் நெஞ்சைத்
தொடுங்கவி வடித்தே னென்று சொல்லிடக் கூசி னான
நெடுங்கவி வாணர் முன்னே நிற்குமென் பிழைபொ றுப்பீர்"[10]

என்ற 'பூங்கொடி'க் காப்பியத்தின் அவையடக்கத்தைக் காட்டலாம். உவமைவழி அவையடக்கத்தை வெளிப்படுத்தும் கவிஞர் 'கூசி', 'என் பிழைபொறுப்பீர்' என்ற சொற்களின் மூலம் அச்சவுணர்வினைக் காட்டியுள்ளார்.

அவையடக்கவுணர்வுடன் பெருமிதம் தோன்றும் வண்ணம் சில சொற்கள் கையாளப் பெற்றுள்ளன.

"முன்சொல் கின்ற முனிவட நூ னெறிஇத்
தென்சொ லாற்சிறி யேனுரை செய்தலால்
மென்சொ லேனும் வெளிற்றுரை யேனும்வீண்
புன்சொ லேனு மிகழார் புலமையோர்"[11]

இப்பாடலில் சிறியேன், மென்சொல், வெளிற்புரை, வின்புன்சொல் ஆகிய சொற்றொடர்களால் நூலாசிரியன் தன்னடக்கத்தை வெளிப்படுத்துகின்றான். எனினும் 'வடமொழியில் சொல்லப்பெற்ற கதையை நான் தமிழ்மொழியில் செய்வதால் என் நூல் குறையுடையது எனினும் புலமைமிக்கோர் இகழார்; புலமையற்றோரே இகழ்வர்' என்று பெருமிதம் தோன்றப் பாடியிருப்பதும் நோக்கத்தக்கது. தென்சொலாற்... செய்தலான், இகழார் புலமையோர் ஆகிய சொற்றொடர்கள் பெருமிதத்தையுணர்த்தப் பயன்பட்டன.

அடக்கவுணர்ச்சி, அச்சவுணர்ச்சி, பெருமிதம் ஆகியவற்றை வெளிப்படுத்தும் சொற்களும் சொற்றொடர்களும் அவையடக்கப் பாடல்களில் பரவலாகக் காணப்படுகின்றன. சான்றுக்குச் சில சொற்றொடர்கள் கீழே இடம்பெறுகின்றன:

"வானின்ற வல்லிருளை மாற்றாநின் றேனொழிப்பன்
யானென்ற மின்மினியே யான்"[12]

"தானா காதி யாவையுமாந் தன்மைத் தாய வொருபொருளை
யூனா மென்றன் வாக்கதனா லுண்மை யறிய வுரைத்திடுதன்"[13]

"பேதையர் பித்த ரறியாத பாலர்சொற் பேதங் கொள்ளார்
ஓதினுங் குற்றந் தெரியார் பெரியவர்"[14]

"....... துளக்கமில் சான்றோர்
அவைக்க ணம்புகுந் தினியவா யாலவா யுடையார்
செவிக்க ணம்புகுந் தேறுவ சிறியனேன் பனுவல்"[15]

"வாய்க்கசப்பு என்றாலும் மருந்துகொள்வர் என்னிளஞ்சொல்
காய்க்கசப்பு என்றாலும் கதையினிதென்று உண்ணாரோ?"[16]

"பித்தனேன் றனது பாட்டிற் பிழைகள் வந்திடினுந் தீர்த்திட்
டுத்தமர் கொள்வ ரென்று முரத்தினாலுரைக்க லுற்றேன்"[17]

> "மத்தகயந் தனக்குடனே சிற்றெறும்பு
> நடந்ததென வசனித்தேனே"[18]

இவைபோன்ற பல சொற்றொடர்களைக் கவிஞர்கள் தந்துள்ளனர். இவை கவிஞனின் உணர்ச்சியையும், சொற்களின் தன்மையையும் வெளிப்படுத்திக் கற்போர்க்கு இன்பம் பயன்பனவாய் விளங்குகின்றன. நூலாசிரியனின் அடக்கவுணர்வினையும் அச்சவுணர்ச்சியையும் வெளிப்படுத்தும் அதே சொற்கள் அவையோர்க்கு இரக்கவுணர்வினை ஏற்படுத்தும் செயலையும் மேற்கொள்கின்றன. எளிய சொற்களும் தாழ்வான பண்பை வெளிப்படுத்தும் சொற்களும் கவிதையில் இடம்பெறும்போது மதிப்புமிக்கச் சொற்களாக உயர்கின்றன என்பதற்கு அவையடக்கப் பாடல்களில் இடம்பெறும் சொற்கள் சான்றாக அமைகின்றன.

<u>5.1.2. ஒலிநயம்:</u> சொற்களால் வடிக்கப்பெற்ற கவிதையை வாய்விட்டுப் படிக்கும்பொழுது கிட்டும் ஒரு முறையான ஒலி அமைப்பை ஒலிநயம் எனக் கூறலாம்.

> "பாட்டில் உள்ள ஒலிகள் ஒலிக்கப்படும்போது இயங்குகின்றன. அவற்றின் இயக்கத்தில் ஒருவகை ஒழுங்கு அமைந்தால் அதுவே ஒலிநயம் எனப்படும்"[19]

என மு. வரதராசன் குறிப்பிடுகின்றார்.

பேராசிரியர் ஓசை அமைதியையே பா என்ற சொல்லால் குறிக்கின்றார். இதனை,

> "பாவென்பது, சேட்புலத்திருந்த காலத்தும் ஒருவன் எழுத்துஞ் சொல்லுந் தெரியாமற் பாடமோ ஓதுங்கால், அவன் சொல்லுகின்ற செய்யுளை விகற்பித்து இன்ன செய்யுள் என்று உணர்வதற் கேதுவாகிப் பரந்துபட்டுச் செல்வதோர் ஓசை"[20]

என்ற அவரது உரை தெளிவுபடுத்துகின்றது.

ஒலியின் கால அளவு, ஒலியின் தன்மை, ஒலிக்கும் முறை ஆகியவற்றால் வேறுபடும் ஒலிகளை வெவ்வேறு வகையாக அமைத்து, அந்த அமைப்பே திரும்பத்திரும்ப வருமாறு செய்தலால் பிறக்கும் இனிய ஒழுங்கே 'ஒலிநயம்'[21] என விளக்கப்படுகின்றது. எனவே ஒலிநயத்தைச் சொற்களால் விளக்க இயலாது என்பதும் அது புலன்களால் உணரக் கூடியது என்பதும் புலனாம்.

ஒலிநயம் மிக்க அவையடக்கப் பாடல்கள் தமிழில் மிகுதியாக உள்ளன. அவற்றில் ஒலிநயம் இயற்கையாய் அமைந்திருப்பதையும் காணமுடிகின்றது.

"ஓசை பெற்றுயர் பாற்கட லுற்றொரு
பூசை முற்றவு நக்குபு புக்கென
ஆசை பற்றி யறையலுற் றேன்மற்றிக்
காசில் கொற்றத் திராமன் கதையரோ!"[22]

என்ற கம்பரின் பாடலில் ஒலிநயம் சிறந்து விளங்குவதைக் காணலாம். இதில் ஒவ்வோர் அடியும் 'தேமா' என்ற அமைப்பில் தொடங்குகின்றது. மேலும் பாடலுள் வந்த ஒலியமைப்பே திரும்பத்திரும்ப வந்துள்ளது. அதனால் ஓர் ஒழுங்கான ஒலியமைப்பை உணரமுடிகின்றது.

"கொண்டலன கண்டனருள் கொண்டுதமிழ் பாடித்
தொண்டுபடு மன்பர்செயல் சொன்னநெறி தன்னால்
வண்டமிழ் தெரிந்தவர்கண் மற்றெனுரை குற்றம்
உண்டெனினு நன்கிதென வுள்ளுவர்க ளென்னார்"[23]

இப்பாடலில் பெரும்பான்மைச் சீர்கள் 'கூவிளங்காய்' என்ற அமைப்பினைப் பெற்றுள்ளன. அத்துடன் ஒவ்வோர் அடியின் முதற்சீர்கள் கூவிளங்காயாகவும், இறுதிச் சீர்கள் தேமாவாகவும் வந்து ஓர் இனிய ஓசை இன்பத்தைக் கற்போர்க்கு அளிக்கின்றன.

"பாடு முறைமைக்கும் பன்னுதமிழ் தெளிந்து
கூடும் புலவர்க்குச் சொற்பொருள்க-ளாடுதற்கும்
எல்லைராய் நின்றொரு மிந்நூல் விளைவிளரேற்
கல்லிலான் காட்சியது காண்"[24]

இருவிகற்ப நேரிசை வெண்பாவாலான இப்பாடல் மற்றொரு வகை ஒலியமைப்பிற்குச் சான்றாகும்.

ஆசிரிய விருத்தப் பாடல்களில் ஒலிநயம் சிறந்து விளங்குகின்றது. இசை இன்பம் மிக்க கலிப்பாவில் அலையடக்கம் பாடப்பெறாது என்பது தொல்காப்பிய விதி. இடைக்காலத்தில் அதன் இனமான கலித்துறை, கலிவிருத்தம் ஆகியவற்றில் அலையடக்கம் மிகுதியாகப் பாடப்பெற்றதும் அதன் ஒலிநயம் கருதியேயாகும். கீர்த்தனை, சிந்து போன்ற இசைப்பாடல்களில் அமைந்த அலையடக்கப் பாடல்களில் இயல்பாய் ஒலிநயம் அமைந்துள்ளது. இத்தகைய ஒலிநயமே 'யாப்பு' முறையை உருவாக்குவதில் பெரும்பங்கு வகிக்கின்றது.

5.1.3. யாப்பமைதி: ஒலிநயத்திலிருந்து கவிதையின் யாப்பு முறை உருவாக்கப்பெறுகின்றது. இயல்பாய் அமைந்துவரும் ஒலி அமைப்பிற்கு வாய்பாடுகளை உருவாக்கி, அவை அமையும் முறையை 'யாப்பு' என அழைத்தனர்.

"சீர், தளை, தொடை முதலான வரையறுக்கப்பட்ட உறுப்புகளினால் ஆயது யாப்பு, சொற்களை ஒவ்வோர் ஓசை ஒழுங்கில் வைத்துக் கட்டுவதையே, யாப்பு என்கிறோம்"[25]

என்ற கருத்தும் ஒலிநயமே யாப்பிற்கு அடிப்படை என்பதை வலியுறுத்துகின்றது. இக்கருத்து மேலைநாட்டு இலக்கியங்களிலும் நிலவுகின்றது.

"ஒரு மொழியினுடைய அடிப்படை ஒலிநயம், ஐரோப்பிய மொழிகள் சம்பந்தப்பட்ட வரையில் எந்த மொழியின் ஒலிப்படிமமும் சொல்

> அழுத்தத்திற்குக் கட்டுப்பட்டது. இந்த ஒலிப்படிமத்தை, ஒரே அளவுள்ள கூறுகளாகப் பிரிக்கும் பொழுது அது சீர் எனப்படும். சீர் உள்ள கவிதைகளே செய்யுள்களாகும்"[26]

என மேலை இலக்கியச் சொல்லகராதி விளக்குகின்றது. இவண் மீட்டர் (**Metre**) என்ற ஆங்கிலச் சொல் சீர் என மொழிபெயர்க்கப் பெற்றுள்ளது. இதனையே தமிழில் 'யாப்பு' என அழைக்கிறோம். இத்தகைய, 'ஒலிநயமும் யாப்பும் வந்த அமைப்பே மீண்டும் வரும் என எதிர்பார்க்கச் செய்து நயம் விளைவிக்கும்'[27] என ஐ.ஏ. ரிச்சர்ட்ஸ் குறிப்பிடுவர். அதேசமயம் 'ஒலிநயம் இயற்கையாக அமைவது; யாப்பு செயற்கையாக அமைத்துக் கொள்வது'[28] என்ற கருத்தும் நினைவிற்கொள்ளத்தக்கது.

அவையடக்கப் பாடல்கள் பயின்றுவரும் யாப்பு வடிவங்கள் முன் இயலில் விளக்கப்பெற்றுள்ளன. ஆதலால் ஈண்டு கருதிய பொருளை வெளிக்காட்டும் கவிஞனின் உணர்ச்சிக்கும் யாப்புக்கும் உள்ள தொடர்பு ஆராயப்படுகின்றது. தொல்காப்பியரும்,

> "எழுத்து முதலா ஈண்டிய அடியிற்
> குறித்த பொருளை முடிய நாட்டல்
> யாப்பென மொழிப யாப்பறி புலவர்"[29]

என்றே யாப்புக்கு விளக்கம் தருகின்றார். எனவே கவிஞனின் உணர்ச்சியநுபவத்தைப் பெறுவதற்கு ஒலிநயம் துணைசெய்வதைப் போன்று யாப்பும் துணைசெய்யும் என்பதால் பொருள் உணர்ச்சிக்கு ஏற்ப யாப்பு அமையும் முறையை ஆராய்தல் தேவையாகின்றது.

<u>5.1.3.1. பாவகைகள்:</u> குறள் வெண்பாவில் பாடப்பெறும் அவையடக்கம் சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் திறனைக் கொண்டதாக உள்ளது.

"ஆய்ந்தாக மத்தனைவா மட்டாங்க யோகமதை
யாய்ந்தார்தீர்ப் பாரிந்நூற் காக"[30]

'அட்டாங்க யோகத்தை ஆராய்பவர்கள் இந்நூலில் உள்ள குற்றத்தைத் தீர்க்க வல்லவர்களாவர்' என்பது அதன் பொருள். தெளிவும் சுருக்கமும் கொண்ட இக்கருத்திற்குக் குறள் வெண்பா ஏற்றதாக உள்ளது. மேலும் இந்நூல் குறள் வெண்பாவால் ஆனது. அதனால் அவையடக்கத்தையும் குறட்பாவில் தருதலே சிறப்பாக அமையும் என்றும் ஆசிரியன் கருதியிருக்கக் கூடும்.

அவையடக்கத்துடன் பாடுபொருட் சிறப்பு, நூற்பெயர், நூலாசிரியன் பெயர் போன்றவற்றுள் சிலவற்றை மட்டும் சுருக்கமாகக் கூறவேண்டும் என்று புலவன் கருதியபோது அவனுக்கு நேரிசைவெண்பா பயன்படுவதைக் காணமுடிகின்றது.

"வந்தடங்கும் வேழத்தை வேரிக் கமலத்தின்
தந்துவினாற் கட்டச் சமைவதொக்கும்-பைந்தொடையில்
தேன்பாடுந் தார்நளன் தெய்வத் திருக்கதையை
யான்பாட லுற்ற விது"[31]

இப்பாடலில் 'தேன்சொரியும் மாலையை அணிந்துள்ள நளனின் தெய்வத்தன்மை பொருந்திய சிறப்புமிக்கக் கதையை நான் கூறுவது மதம் கொண்ட யானையைத் தாமரைத் தண்டினால் கட்டிவைக்க முயல்வதைப் போன்றதாகும்' என்று பாடுபொருள் சிறப்புக் கூறி, அவையடக்கத்தை உவமைவழிப் புலப்படுத்தும் நெறி பின்பற்றப்பட்டுள்ளது. தான் உணர்த்த விரும்பிய கருத்திற்கு முதன்மை தந்து யாப்பைத் தேர்ந்தெடுத்துள்ளது நோக்கத்தக்கது.

நூலுக்குப் புறம்பான செய்திகளையும் நூல் தொடர்பான செய்திகளையும் அதிகமாக வெளிப்படுத்த எண்ணும்போது ஆசிரியப்பாவின் துணையை அவையடக்கம் பாடியோர் நாடியுள்ளனர். ஞானாமிர்தம்[32], இலக்கணக் கொத்து[33] முதலிய நூல்களின் அவையடக்கப் பாடல்களை இதற்குச் சான்றுகாட்டலாம்.

இக்கால நூல்களிலும் ஆசிரியப்பாவிலான அவையடக்கப் பாடல்களில் இம்முறையைக் காணமுடிகின்றது. ஏசுநாதர் பிள்ளைத் தமிழ் நூல் நிலைமண்டில ஆசிரியப்பாவில் அவையடக்கம் பெற்றுள்ளது. இதில் தமிழ் மொழியின் சிறப்பு, முன்னோர் புலமை நலன், பாடுபொருட் சிறப்பு, ஆசிரியரின் இறைப்பற்று போன்றவற்றை அவையடக்கப் பண்புடன் வெளிப்படுத்தியுள்ளதைக் காணமுடிகின்றது[34]. எளிய சொற்கள், மோனை நயம், கருத்துக்கு முதன்மை ஆகிய இலக்கியத் திறனைப் பெற்று இப்பாடல் இன்பம் பயப்பதாய் உள்ளது.

<u>5.1.3.2. பாவினங்கள்:</u> இடைக்காலத்தில் வளர்ந்த பாவினங்களுள் விருத்தப்பா அவையடக்கத்தில் பெரும் செல்வாக்குடன் விளங்குகின்றது. நூலாசிரியன் தான் கொண்ட கருத்தை எளிமையாக விளக்கவும், இசை இன்பத்துடன் வெளிப்படுத்தவும் இந்த யாப்புப் பெரிதும் பயன்பட்டுள்ளது.

"துறைய டுத்த விருத்தத் தொகைக்கவிக்கு
உறைய டுத்த செவிகளுக் கோதில்யாழ்
நறைய டுத்த வசுணநன் மாச்செவிப்
பறைய டுத்தது போலுமென் பாவரோ"[35]

என்று கம்பர் உவமைவழி அவையடக்கத்தை வெளிப்படுத்தியுள்ளார். வெண்பாவைப் போன்றே கலிவிருத்தமும் கவிஞன் உணர்ச்சியைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் வெளிப்படுத்தப் பயன்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது. இதில் ஆசிரியர் அவையடக்கப் பண்புடன் அவையோர் சிறப்பினையும் உணர்த்தியுள்ளார்.

கழிநெடிலடியாசிரிய விருத்தம் அவையடக்கப் பாடல்களில் சிறப்பிடம் பெறுகின்றது.

"மணிபொதி கிழிபு மிக்க
மணியுட னிருந்த போழ்தில்
மணிபொதி கிழிய தன்னை
மணியுட னென்று வைப்பார்
துணிவிற் புன்சொ வேதந்
தூயநற் பொருள்பொ திந்தால்
அணியெனக் கொள்வார் நாமு
மகத்தினி லிரங்கல் செல்லாம்" [36]

என்பது அறுசீர் கழிநெடிலடி ஆசிரியவிருத்தத்தில் பாடப்பெற்ற அவையடக்கமாகும். இதில் வரும் யாப்புமுறை பாட்டைப் படிப்பவர்களை அப்பாட்டுடன் ஒன்றிவிடுமாறு செய்வதை உணரமுடிகின்றது.

கருவிளம் புளிமா தேமா
கருவிளம் புளிமா தேமா
கருவிளம் புளிமா தேமா
கருவிளம் தேமா தேமா
கருவிளம் தேமா தேமா
புளிமா புளிமா தேமா
கருவிளம் தேமா தேமா
கருவிளம் புளிமா தேமா

என்ற யாப்பமைதி இதற்குப் பெருந்துணை செய்கின்றது. பாடலில் சிறுசிறு சீர்கள் விளச்சீரும் மாச்சீருமாய் அடுக்கி அடக்கத்தால் வெளிப்படும் சொற்களின் பணிவை விளக்குமாறு யாப்பு அமைந்திருப்பதைக் காணமுடிகின்றது. வந்த ஒலியமைப்பே திருப்பத்திரும்ப அமைந்து வருதலால் அவையடக்க உணர்ச்சி நிலைபெற்றுப் பதிந்துவிடுகின்றது. பாடுபொருட் சிறப்புக் கருதித் தனது புன்சொல்லும் ஏற்றுக்கொள்ளத் தக்கது என்பதை உவமைவழி ஆசிரியர் உணர்த்தும் பாங்கு யாப்பால் வெற்றியடைந்துள்ளது.

அடிசீர் விருத்தத்தில் பல விகற்பங்களில் அவையடக்கப் பாடல்கள் அமைந்துள்ளன.

"அஞ்சன மீட்டற்றி நாயற்றின்
நிலைமற் றமணிக் டனிச்
சொற்சொ லின்வழுத் தொணாதேல்
விதியும் வாய்திறக் கொணாதாம்
விஞ்சை பறைவ ருந்தத்
தமதியி லின்விபு லங்காறும்
வஞ்சமற் றுரைக்க லாமே
லடியறும் விருத்த லாமால்"[37]

என்பது அடிசீர் விருத்தத்தின் ஒருவகை.

"நீர்கொள்வார் பாலோடு நேருற்றால்
பதர்கொள்வார் நெல்லோ டுற்றால்
நார்கொள்வார் பூவுற்றால் வேர்கொள்வா
ரதிற்சிறிது நறையுண் டாயின்
சீர்கொள்வார் புன்சொல்லுஞ் செஞ்சொல்லுஞ்
சேர்ந்தொன்றிச் சேரப் புன்சொல்
யார்கொள்வா ரென்பதசற் றறியாமற்
சிறியேனா வசைக்கின் றேனே"[38]

என வருவது மற்றொரு வகை.

ஆசிரியப் பாவைப் போன்று அதிகமான செய்திகளை அவையடக்கத்துள் கூற விரும்பியோர் பன்னிருசீர் முதலான அதிக சீர்களைக் கொண்ட கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தைப் பயன்படுத்தியுள்ளனர்.

பெரும்பான்மையான பாடல்களில் அமைந்துவந்துள்ள பொது அமைப்பினையே மேற்கண்ட சான்றுகள் விளக்குகின்றன. இவற்றில் ஒரோவழி மாறுபாடும் உண்டு.

5.1.3.3. புதியவகைப் பாடல்கள்: பல்வேறு உணர்ச்சி வேறுபாடுகளைப் புலப்படுத்துவதற்குப் பண்டைய பாவகைகள் போதுமானவையல்ல என்பதால் தாழிசை, துறை, விருத்தம் என்ற பாவினங்கள் தோன்றின என்பது பொதுக் கருத்தாகும். கொச்சகக் கலிப்பாவின் இலக்கணம் கூறும் தொல்காப்பியர்,

"யாப்பினும் பொருளினும் வேற்றுமை புடையது"[39]

எனக் குறிப்பிட்டுள்ளார். இவ்வடியின் புறனடையாக அமைந்தவையே கும்மி, சிந்து முதலிய பாடல்கள்[39அ].

பிற்கால அவையடக்கப் பாடல்கள் கும்மி, சிந்து, கீர்த்தனை, அம்மானை ஆகியவற்றில் அமைந்துள்ளன. இவை பெரும்பாலும் பாமர மக்களிடம் செல்வாக்குப் பெற்ற இலக்கியங்களாகவும் உள்ளன.

"பாடறியேன் படிப்பறியேன்
பாட்டின் வகைதகை நானறியேன்
பாட்டிலிருக்கும் சரஸ்பதியே
எந்த னாவிலிருக்க வேணுமம்மா
யேடறியேன் எழுத்தறியேன்
யேட்டின் வகைதகை நானறியேன்
. . . ."[40]

என்பது 'கட்டபொம்மு கும்மிப் பாடல்' என்ற நூலில் இடம்பெறும் பாடல் அடிகளாகும்.

சுப்பிரமணியர் பேரில் சிந்து[41] என்ற நூல் சிந்து என்ற இசைப்பாவில் அவையடக்கத்தைப் பெற்றுள்ளது. கீர்த்தனைப் பாடல்களில் விருத்தம் பல்லவி அநுபல்லவி சரணங்கள் என்ற அமைப்புமுறையில் அவையடக்கம் பாடப்பெற்றுள்ளது. கீர்த்தனை நூல்களில் மட்டுமே இத்தகைய அமைப்புக் காணக்கிடக்கின்றது.

இராம நாடகம்[42], திருமெய்யம் பெருமாள் கோவில் ஸ்தல புராணக் கீர்த்தனை[43] போன்றன இவ்வகைக்குச் சான்றுகளாகும். அம்மானை வகையைச் சேர்ந்த நூல்கள்[44] அம்மானை வரிகளில் அலையடக்கம் கூறுதலை மரபாகக் கொண்டுள்ளன.

5.1.3.4. எதுகையும் மோனையும்: ஒலிநயமும் யாப்பும் சிறந்து விளங்க எதுகையும் மோனையும் பெரிதும் பயன்படுகின்றன. இவற்றை அலையடக்கக் கவிஞர்கள் திறனுடன் கையாண்டுள்ளனர்.

> "எதுகை நன்கு அமைந்துவிட்டால் ஒலிநயம் இயற்கையாகவே மேலும் சிறந்து விளங்குவதை நம்மால் உணரமுடிகின்றது"[45]

என்பர் சி.டி. வின்செண்ட்.

> "எனக்கு மிகவும் முக்கியமானதாகத் தோன்றும் ஒரு சொல்லைக் கவிதையில் கொண்டுவர நினைக்கும்போது அதன் மூலமாக இன்னும் கூடுதலான சக்தியினை அது பெறுவதாக அமையும் விதத்தில் நான் எதுகை மோனைகளைத் தஞ்சம் அடைகிறேன்"[46]

என்று குறிப்பிடுகின்றார் உருசியக் கவிஞர் விளாதிமிர் மாயகோவ்ஸ்கி. எனவே ஒலிநயம் சிறக்கவும் யாப்பில் வெற்றி பெறவும் எதுகைமோனை இன்றியமையா தனவாக உள்ளன.

> "ஒலிநயம் (rhythm) வேறு; எதுகை மோனை முதலியன வேறு. உணர்ச்சி மிகும்போதெல்லாம், அதற்கேற்றவாறு ஒலிநயம் அமையும். அது தானாகவே வந்தமையும்; எதுகை மோனை முதலியன தாமே வந்தமைதல் குறைவு; செய்யுள் இயற்றுவோர் விரும்பி அமைத்தலே மிகுதி"[47]

என்ற மு. வரதராசனின் கருத்தும் இவண் மனங்கொள்ளத்தக்கது.

கவிதை எழுதுவோர் எதுகை மோனை முதலியவற்றை விரும்பி அமைத்தல் மிகுதி எனினும் அவையடக்கப் பாடல்களில் அவை வலிந்து அமைக்கப் படாது இயல்பாய் அமைந்திருப்பதுபோல் காணப்படுகின்றன.

<u>5.1.3.4.1. எதுகை:</u> எதுகையைத் தலையாகு எதுகை, இடையாகு எதுகை, கடையாகு எதுகை எனப் பிரிப்பர். இவற்றுள் இடையாகு எதுகை மிகுதியான பாடல்களில் இடம்பெற்றுள்ளது.

"<u>மிழுணர்வில்</u> உத்தமர்கள் இந்நூல் கண்டால்
மிகைகளைந்து குறைநிரப்பிப் பாராட்டி விடுவர்
<u>நலுணர்வின்</u> மத்திமர்கள் எழுத்துச்சொல் பொருள்கோள்
நற்செய்யுள் அலங்காரச் சொற்கொப்புக் கொள்வர்
<u>தொழுணர்வு</u> சொற்பாடொன்ற அற்றாலும் கொள்ளார்
தொடர்ந்திவர்போல் ஒப்புமைகொள் எவும்அறியா அதமர்
<u>பழுணர்வின்</u> பாவினராய் ஒத்தபொழுது ஒத்துப்
பழித்தபொழுது உடன்பழிப்பர் வழக்கிதுஎம் இலரே"[48]

இப்பாடலில் ஒவ்வொரு அடியின் முதற் சொல்லிலும் இரண்டாம் எழுத்தும் அடுத்தடுத்த எழுத்துக்களும் ஒன்றிவருதலைக் காண்க. இவ்வாறு வருவது தலையாகு எதுகை எனப்படும். இதில் நான்கு அடிகளிலும் எதுகை அமைந்து வந்ததால் இதனை அடி எதுகை எனவும் அழைப்பர்.

பெரியபுராணம்[49], வில்லிபாரதம்[50], பிரயோகவிவேகம்[51], குத்பு புராணம் என்னும் முகியத்தீன் புராணம்[52], அன்னா வளப்பியம் என்னும் அன்னா காவியம்[53] போன்றவை தலையாகு எதுகையை அவையடக்கத்துள் பெற்ற சில நூல்களாகும்.

வெண்பா முதலியவற்றில் இரண்டடியில் மட்டும் தலையாகு எதுகை அமைந்துவந்துள்ளது.

"கோடியுலா வேங்கடத்திற் கொண்டலெனக் கொண்டாற்குத்
தேடியுலா வொன்றடியேன் செப்புதலே - நாடி
யொலியூட்டு மண்டமெலா முண்டவபி ரானைப்
பொலியூட்டுக் காட்டுவார் போகம்"[54]

என்ற பாடலில் 'டியுலா' 'லியூட்டு' எனப் பல மெய்களும் உயிர்களும் ஒன்றிவரக் காண்கிறோம். இதனை இருவிகற்ப நேரிசை வெண்பா என்பர்.

இரண்டாம் எழுத்து மட்டும் முழுவதுமாக ஒன்றிவருதல் இடையாகு எதுகையாகும். சான்றாக,

"உள்வி ரிந்த புகைக்கொடி யுண்டென
எள்ளு கின்றன ரில்லை விளக்கினை
உள்ளு கின்ற பொருள்திறம் ஓர்பவர்
கொள்வர் எம்முரை கூறுதற் பாலதே"[55]

இப்பாடலில் 'ள்' என்ற மெய்மட்டும் நான்கு அடிகளிலும் இரண்டாம் எழுத்தாக ஒன்றிவந்துள்ளதால் இது இடையாகு எதுகை எனப்பட்டது. இவ் எதுகை அவையடக்கப் பாடல்களில் பெரிதும் போற்றிப் பின்பற்றப் பெற்றுள்ளது.

இரண்டாம் எழுத்து ஒன்றிவராமல் அதன் இனம் ஒன்றிவருதல் கடையாகு எதுகையாகும். இது மிக அருகிய நிலையாகக் காணப்படுகின்றது.

"அருந்தமிழ் அகத்தியன் ஆராய்ந் திடவும்
கேள்வியிற் பெரியநக் கீரன் கேட்கவும்
கல்வியிற் பெரியனாம் கம்பன் காணவும்
இயற்றிய நூலிதென் றெண்ணவும் படுமோ?"[56]

என்பதில் முதல் சொல்லின் இரண்டாம் எழுத்தில் அவற்றின் இனமான எழுத்துக்கள் ஒன்றிவருதலைக் காணலாம்.

5.1.3.4.2. மோனை: மோனை என்ற சொல்லிற்கு முதல் என்று பொருள். பல அடிகளிலோ ஓரடியின் பல சீர்களிலோ முதலெழுத்து ஒன்றிவருவது மோனை.

"அடிதொறுந் தலையெழுத் தொப்பது மோனை"[57]

என்பர்.

"துளவி லாத பெருமைய ராகிய
துளவி லாஅடி யார்புகழ் கூறுகேன்
துளவு கூட உரைப்பறி தாயினும்
துளவி லாசை துரப்ப அறைகுவென்"[58]

என வரும் பாடலில் அடிதோறும் முதற்சீரின் முதல் எழுத்து ஒன்றிவந்துள்ளது. இது அடிமோனையாகும்.

"தமிழர் தாழ்வு தனையெடுத் தோதியே
தமிழர் வாழ்வு தனைநிலை நாட்டலால்
தமிழ ரென்று முணர்வு தலைப்படும்
தமிழர் யாருந் தலைக்கொது வாரரோ"[59]

என்ற பாடலில் அடிமோனை சிறப்பாக அமைந்துள்ளது. மேலும், முதல் அடியின் முதல் மூன்று சீரிலும் மோனை அமைந்துள்ளதால், அது கூழை மோனை எனப்பட்டது. இரண்டு மற்றும் நான்காம் அடியில் முதற்சீர்க்கும் மூன்றாம் சீர்க்கும் மோனை வந்துள்ளதால், அவை பொழிப்பு மோனையாகின. மூன்றாம் அடியின் முதற்சீரிலும் இறுதிச் சீரிலும் மோனை வந்தது ஒரூஉ மோனையானது. இவைபோன்று மோனையின் பிறவகைகளும் அவையடக்கப் பாடல்களில் இடம்பெற்று உள்ளன. சான்றுக்குச் சில மட்டுமே இங்குக் காட்டப் பெற்றன.

பல்வேறு யாப்புக்களில் அவையடக்கம் பாடப் பெற்றிருப்பினும் விருத்தப் பாவும் வெண்பாவும் பெரிதும் போற்றிப் பின்பற்றப்பட்டுள்ளன. பொருள் உணர்ச்சிக்கு ஏற்ப, பல்வேறு நடையில் அவற்றை அமைத்துள்ளனர். கருத்திற்கு முதன்மை தரப்பெற்று, அதற்கேற்ப யாப்பை அமைத்திருக்கும் திறன் காணப் படுகின்றது.

ஒலிநயத்திலிருந்து யாப்புமுறையைப் பெற்ற கவிஞன் தன்னுடைய அநுபவத்தையும் கருத்தையும் தனக்கிருக்கும் கற்பனையாற்றல், உவமைத்திறன் முதலியவற்றின் வழி வெளிக்கொணர முற்படுகின்றான். தான் பெற்ற அநுபவத்தைக் கற்போரையும் அடையச் செய்கின்றான். அதனால் அவன் படைக்கும் இலக்கியம் இன்பம் பயப்பதாய் அமைகின்றது.

<u>5.1.4. கற்பனைத் திறன்:</u> கவிஞன் தன் உணர்ச்சியைக் கவிதை வடிவில் உணர்த்தப் பயன்படுத்தும் உத்திகளில் முதன்மையானதும் மற்ற உத்திகளுக்கு அடிப்படையாக விளங்குவதும் கற்பனையேயாகும்.

கற்பனை என்ற சொல்லிற்குத் தெளிவான விளக்கம் வரையறுக்கப் பெறவில்லை. சி.டி. வின்செண்டும்,

> "கற்பனை என்ற சொல்லைத் தெளிவாக விளக்குதல்
> கடினம் என்றும், அது மனத்தின் பல் போக்குகளைக்
> குறிக்கப் பயன்படுத்தும் ஒரு சொல்"[60]

என்று குறிப்பிட்டுள்ளார்.

ஐ.ஏ. ரிச்சர்ட்ஸ் என்பவர் கற்பனை என்ற ஆங்கிலச் சொல்லிற்கு ஆறு நிலைகளில் பொருள் தந்துள்ளார்[61]. அவற்றுள் இரண்டாவதாக உள்ளதில்,

"மக்கள் இயல்பாகப் பயன்படுத்தும் உருவகம், உவமை
முதலியவற்றில் அரிதான நிலையில் கற்பனை பெறப்படும்"[62]

என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

அவையடக்கப் பாடல்களிலும் உவமை முதலியவற்றின் வழியே கற்பனைத் திறனைக் காணமுடிகின்றது. சங்க இலக்கியம் போன்றவற்றில் வருவதுபோல் தொடர்நிகழ்ச்சிக் கற்பனைகள் அவையடக்கத்தில் இடம்பெறவில்லை.

மண்ணில் விரல்கொண்டு கிறுக்கி விளையாடும் சிறுவனை எப்பொழுதோ பார்த்திருந்த ஆசிரியர் தாம் நூல் எழுத முயல்வதற்கு அதனை உவமையாக்கிக் காட்டும்போது அவரது கற்பனைத்திறன் வெளிப்படுகின்றது.

"மண்ணில் விரல் கொண்டு எழுதத் தெரியாத சிறுவன் ஒரு நூல்
எழுதுவேன் என்று முயல்வதை ஒத்துள்ளது நான் ஆறுமுகன்
கதையைப் பாடுவது"[63]

என்ற பொருளில் ஆசிரியர் பாடும்போது உவமையில் கற்பனையைக் கலந்து தருவதைக் காணமுடிகின்றது.

"கொல்லையிற்புற் கறித்தறியாச் சிறியமுயற்
குட்டிதுள்ளிக் குதித்து வானில்
செல்லுமதிக் குள்ளிருக்கும் முயற்பாலுண்
டிடத்தாவும் செய்கை யொக்கும்"[64]

என்று மற்றொரு கவிஞர் பாடுகின்றார். இதில் முயற்குட்டி துள்ளிக் குதித்து விளையாடுவதைக் கண்ட கவிஞருக்கு, அது நிலவுக்குள் இருக்கும் முயலிடம் பாலருந்தக் குதிப்பதாகப்பட்டுள்ளது. நிலவுக்குள் இருக்கும் களங்கமான பகுதியை முயலாக ஆசிரியர் உருவகித்துள்ளதும் நோக்கத்தக்கது. இத்தகைய கற்பனையைக் கவிஞன் உள்ளம் விரும்பியவாறு அமைத்துக் கொள்கிறான்.

"மன்னு பாற்கடல் வறிதுவி லமரு
மாயனைத் தவளையொன் றணுகித்
துன்னு நம்மிருவோ ரிடங்கட னாமந்
துறிசமு மறிநிறம் பசுமை
உன்னு மிவ்வாற்றா லிருவருஞ் சமமென்
றுரைத்தகங் கரித்தவா றெளியேன்
பன்னு மிந்நலைப் பரமரோ வியற்றும்
பரிவினோ டுரைசெயும் பரிசே!"[65]

என்ற பாடலில் தவளை ஒன்று திருமாலிடம், 'நாம் இருக்கும் இடமும் நமது நிறமும் ஒன்றாக உள்ளதால் நாம் இருவரும் சமம்' என்று கூறியதாகக் கற்பனை செய்யப்பட்டுள்ளது.

பேசாத அஃறிணைப் பொருட்கள் பேசுவன போலக் கற்பனை செய்து பாடுவதைத் தொல்காப்பியர் சுட்டியுள்ளார்[66]. மேற்கண்ட கற்பனை இதனுடன் ஒப்பிடும் வகையில் அமைந்துள்ளது.

மேலை நாட்டு அறிஞர்கள் கற்பனையைக் கற்பனை (imagination) என்றும் மனப்படைப்பு (fancy) என்றும் வகைப்படுத்தியுள்ளனர்[67]. அவற்றுள்,

> "கவிஞன் தன் அனுபவத்தினால் பெற்ற கூறுகளைக் கொண்டு மனம்போன போக்கில் இணைத்துப் படைப்பதை மனப்படைப்பு என்று அழைக்கலாம்"[68]

என்று விளக்கியுள்ளனர். அவையடக்கப் பாடல்களில் இடம்பெறும் கற்பனைகள் பெரிதும் இத்தகைய மனப்படைப்புக் கற்பனையாகவே உள்ளன. எனினும் கவிஞன் மேற்கொண்டுள்ள செயலுக்கு அவை பொருந்தி அமைவனவாக உள்ளன.

இனி, கற்பனையிலிருந்து விரிவடைந்த உவமை முதலான அணிகளைக் காணுதல் வேண்டும்.

<u>5.1.5. அணிநலன்:</u> கவிஞர்களுக்குப் படைப்புகளின் பொருட்சிறப்பை அழகுற எடுத்துரைக்க அணிகள் பயன்படுகின்றன. உவமவியலுக்கு விளக்கம் தந்த பேராசிரியர், இது,

> "மேற்பொருள் புலப்பாடு கூறிய மெய்ப்பாட்டியலோடு இயைபுடைத்து; என்னை? உவமத்தானும் பொருட் புலப்பாடே கூறுகின்றானாகலின். அங்ஙனமோவெனின், 'ஆபோலும் ஆமா' என்றக்கால் ஆமா கண்டறியாதான் காட்டுட் சென்றவழி அதனைக் கண்டால் ஆபோலும் என்னும் உவமையேபற்றி ஆமா இதுவென்று அறியுமாகலானென்பது"[69]

என்று அணியால் அடையும் பயனாகப் பொருட் புலப்பாட்டைச் சுட்டியுள்ளார்.

பொருட்புலப்பாட்டுடன் இன்ப உணர்வினையும் அணிகள் ஊட்டுகின்றன. காட்டாக, 'மதியன்ன முகம்' என்னுமிடத்து பொருட்புலப்பாட்டை விட இன்ப உணர்வே மேலோங்கி நிற்கின்றது.

> "பொருளைத் தெளிவுபடுத்தவும் அழகு படுத்தவுமே அணிநலன் தேவைப்படுகிறது"[70]

என்பது தமிழண்ணலின் கருத்து. எனவே பொருட் புலப்பாட்டோடு இன்பம் அல்லது அழகினையும் அணிகள் வழங்குகின்றன என்பது உறுதியாகின்றது.

மேலை இலக்கியங்களில் ரிட்டாரிக் (Rhetoric) எனப்படும் அணியிலக்கணம் தெளிவான பொருட்புலப்பாட்டை மட்டுமே அளிப்பதாகக் கூறப்படுகின்றது. ரிட்டாரிக் என்பது கவிதைப் பொருளின் வெளிப்பாட்டுக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டது என்பது பீட்டர் டிக்ஸன் எழுதிய 'ரிட்டாரிக்'[71] என்ற நூலின் திரண்ட கருத்தாக உள்ளது. எனவே பொருட் புலப்பாட்டுடன் இன்பவுணர்வினையும் அளிப்பது தமிழ் மொழியின் தனிச்சிறப்பாக உள்ளது.

அணிகளின் செல்வாக்கு தொல்காப்பியர் காலத்திலிருந்த உண்டெனினும் காப்பிய காலங்களில்தான் மேலோங்கியது. வடமொழி இலக்கணங்கள் தமிழில் செல்வாக்குப் பெற்றபின்னர்த் தண்டியலங்காரம் தமிழுக்குப் பல அணிகளை வழங்கியுள்ளது. அவற்றுள் சில அவைபடக்கப் பாடல்களில் பயன் படுத்தப் பெற்றுள்ளன. குறிப்பாக உவமையின் செல்வாக்கு மிகுதி.

5.1.5.1. உவமை அணி: உவமம் என்பது ஒரு பொருளோடு ஒரு பொருளினை ஒப்புமை கூறுதல் என்பர் பேராசிரியர். அது கவிதைப் பொருளை விளக்கிக் காட்டி, கவிதைக்கு அழகும் ஊட்டுகின்றது.

தொல்காப்பியர் கருத்துப்படி உவமை என்பது பொருட்தன்மையைப் புலப்படுத்துவதாகும். இதனை,

"வினைபயன் மெய்யுரு வென்ற நான்கே
வகைபெற வந்த வுவமத் தோற்றம்"[72]

எனவரும் நூற்பாவால் அறியலாம்.

ஒப்புமையாக வரும் பொருளை 'உவமை' என்றும் உவமிக்கப்படும் பொருளைப் 'பொருள்' என்றும் கூறுவர். இதனைத் தண்டியலங்காரம்[73] உவமானம், உவமேயம் என்று குறிப்பிடுகின்றது. உவமை பற்றித் தொல்காப்பியமும் தண்டியலங்காரமும் தரும் விளக்கங்கள் சிறப்பானவை.

உவமை, பொருளைவிடச் சிறந்ததாக - உயர்ந்ததாக அமையவேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்படுகின்றது.

"பொதுவாகப் பொருளின் சிறப்பை வற்புறுத்தவே உவமை அமைக்கப்படுகிறது. அதன் உயர்வைக் காட்ட அதனினும் உயர்ந்த பொருளையே வரையறையாக அமைக்கவேண்டியுள்ளது.

> எனவே உவமை பொருளைவிட உயர்ந்ததாக இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது"[74].

இது தொல்காப்பியர் குறிப்பிட்ட, 'உயர்ந்ததன் மேற்றே யுள்ளுங் காலை'[75] என்ற நூற்பாவிற்கு விளக்கமாக உரைக்கப்பட்டதாகும். பொருளைவிட உவமை உயர்ந்ததாக இருக்கவேண்டும் என்று கூறுவதில் விளக்கம் தேவைப் படுகின்றது. ஏனெனில் நூலாசிரியன் என்ற உயர்திணைப் பொருட்கு நாய், பூனை, எறும்பு போன்ற அஃறிணைப் பொருட்கள் உவமையாக அமைவதை அவையடக்கப் பாடல்களில் காணமுடிகின்றது. ஆதலால் ஒரு பொருள் எத்தன்மைக்காக உவமிக்கப்படுகின்றதோ அத்தன்மையில் உவமைப் பொருள் உயர்ந்ததாக இருக்க வேண்டும் என்று பொருள் கொள்ள வேண்டும்.

எனவே உவமை என்பது பொருளை விளக்கம் பெறச்செய்து புலவனின் உணர்வினை வெளிக்கொணர உதவுவதாக அமைவது என்றும், அது கற்போர்க்கு இன்பமும் கவிதைக்கு அழகும் ஊட்டக் கூடியது என்றும், அது பொருள்களிடையே காணப்படும் பொதுத்தன்மையிலிருந்து உருவாவது என்றும் புலனாகிறது.

அடுத்ததாக, எல்லா அணிகளும், உவமையிலிருந்து தோன்றியவை என்று கூறப்படுகின்றது. அதனால் அது அணிகளுக்கெல்லாம் தாயணியாக விளங்குகின்றது. இதனை,

> "எல்லாவித அலங்காரங்களும் உவமையணியின் விஸ்தார சாஸ்திரத்தின் பிராணன் என்று பழைய இலக்கணக்காரர் சொல்லுகிறார்கள்"[76]

என்ற பாரதியாரின் கூற்று வலியுறுத்தும். உவமையின் இத்தகைய சிறப்புகளை உணர்ந்து உரியமுறையில் அதனைப் பயன்படுத்திப் புலவர்கள் அவையடக்கம் பாடியுள்ளனர்.

அவையடக்கப் பாடல்களை 'உவமைக் கருவூலம்' அல்லது 'உவமைக் களஞ்சியம்' எனச் சுட்டலாம். அந்தளவிற்கு அவற்றில் உவமைகள் இடம் பெற்றுள்ளன. இயற்கைப் பொருட்கள், பல்துறை நூலறிவு, சமூகப் பழக்க வழக்கங்கள், மக்கள் வழக்கில் உள்ள புராணக் கதைகள், சூழல்கள் ஆகியவற்றில் இருந்து உவமைப் பொருட்கள் எடுத்தாளப் பெற்றுள்ளன. தனியோர் ஆய்வாய் மேற்கொள்ளும் அளவிற்கு அதன் களம் பரந்துவிரிந்து கிடக்கின்றது. எனவே அவையடக்கப் பாடல்களில் காணப்படும் உவமை நயங்கள் பின்வரும் பிரிவுகளில் அடக்கி விளக்கப்படுகின்றன.

1. இணைப்பு உவமைகள்
2. சமயத் தத்துவ உவமைகள்
3. புராண உவமைகள்
4. நடப்பியல் உவமைகள்
5. இயற்கை நிகழ்ச்சி உவமைகள்
6. அரியகாட்சி உவமைகள்
7. நடைபெறாத நிகழ்ச்சி உவமைகள்
8. அடுக்கு உவமைகள்
9. பழமொழி உவமைகள்
10. இலக்கண உவமைகள்
11. இலக்கிய உவமைகள்
12. நகைச்சுவை உவமைகள்
13. மூரன் உவமைகள்
14. உவமைக்கு உவமை
15. புத்தாக்க உவமைகள்

அவையடக்கப் பாடல்களில் இடம்பெறும் உவமைகளின் சிறப்புத் தன்மையை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்தப்பட்ட இப்பிரிவில் ஒன்றில் ஒன்று விரவிவருதலும் உண்டு.

5.1.5.1.1. இணைப்பு உவமைகள்: அணிநூல்கள் இதனை எடுத்துக் காட்டவில்லை. இரண்டு பொருள்களை ஒரே சமயத்தில்ஒப்பிட்டுக்காட்ட, சில குறிப்பிட்ட தன்மையுள்ள பொருள்களை இணைத்து ஓர் உவமையாகக் காட்டுதலை இணைப்பு உவமை எனப் பலர் குறிப்பிட்டுள்ளனர்.

சங்க இலக்கியத்தில் மகளிரைப் பாவைக்கும், அவர்கள் வாழும் இல்லத்தினை ஓவியத்திற்கும் உவமைப் படுத்தி இணைத்துக் கூறப்பட்டுள்ளதை நோக்கலாம்.

"ஓவத் தன்ன இடனுடை வரைப்பிற்
பாவை யன்ன குற்றொடி மகளிர்"[77]

இவ்வமைப்பிலிருந்து சற்று மாறுபட்டதாக அவையடக்கத்தில் இணைப்பு உவமைகள் அமைந்துள்ளன.

அவையோர் முதலியவற்றிற்கு உயர்ந்த பொருள் ஒன்றினையும் நூலாசிரியருக்குத் தாழ்ந்த பொருள் ஒன்றினையும் உவமையாக்கி, அவ்விரண்டையும் ஒரே உவமையில் இணைத்துத் தரும் அமைப்பைக் காணமுடிகின்றது.

"மாரிக்கு நிகர்என்று பனிசொரிதல் போலவும்"[78]

எனவரும் அவையடக்கப் பாடலடியில் அவையோரை மழைக்கும் நூலாசிரியனைப் பனிக்கும் உவமைப்படுத்தி, இவ்விரண்டையும் ஒரே உவமைப் பொருளாக்கி, அவையோர் முன் தாம் நூல் கூறும் செயலுக்கு உவமையாகக் காட்டியுள்ளார்

ஆசிரியர். இத்தகைய இணைப்பு உவமைகள் அவையடக்கப் பாடல்களில் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. காட்டாகச் சில கீழே கொடுக்கப் பட்டுள்ளன.

பாற்கடல்-புனை[79]; விளக்கு-புகைக்கொடி[80]; மாநாகம்-புநாகம்[81]; கடல்நீர்-குளப்படி நீர்[82]; சூரியன்-மின்மினி[83]; குயில்-காகம்[86]; ஆற்றநீர்-நாற்றநீர்[87]; குயில்-வண்டு[88].

உவமையில் இரண்டு பொருள்களையும் பொருளில் இரண்டு பொருள்களையும் இணைத்துத் தரும் அவ்வமைப்பை இணைப்பு உவமைகள் என்ற பிரிவில் அடக்குதல் பொருத்தமாக உள்ளதைச் சான்றுகள் காட்டுகின்றன. இணைப்பு உவமைகளில் இதனை ஒருமாறுபட்ட அமைப்பாகக் கொள்ள வேண்டும்.

5.1.5.1.2. சமயத் தத்துவ உவமைகள்: அவையடக்கம் பாடிய கவிஞர்கள் தத்தம் சமயக் கடவுளர்களின் சிறப்பையும் சமயக் கருத்துகளையும் உவமையாக வழங்கியுள்ளனர்.

தாம் நூல் எழுதும் செயல் எத்தகையது என்பதைக் காட்ட,

"..... பாவைபங்கர்
தாண்டவமாடுவார் முன்பே யாடித் தடுப்பதேபோல்"[89]

என்று உவமை காட்டியுள்ளார் பாண்டிமண்டல சதக ஆசிரியர்.

தன் நூலில் உள்ள குற்றங்களை அவையோர் போக்கிக் கொள்வர் என்பதை உவமைவழிப் புலப்படுத்தும் ஆசிரியர் ஒருவர்,

"விரவிய வன்பா லீட்டும் விருப்புறு பொருளை யெல்லாம்
திரவிய சுத்தி செய்து சிவனடிச் செலுத்து வார்போல்"[90]

என்ற சிவனடியார்களின் செயலை உவமித்துள்ளார்.

"நீதமி புடலின் குற்றநிலைவுரை செயலின் குற்றம்
பூதசுத் திகளாற் போக்கிப் புனிதனை யருச்சிப்பார்போல்"[91]

தம் நூலில் உள்ள குறைகளை நீக்கிக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிடுவதில் சைவசமயக் கருத்துகள் உவமையாக அமைந்துள்ளன.

"தானந் தவயோக தத்துவமில் லாவொருவன்
ஞானந் தெளிந்தவர்க்கு நல்லறிவு சொல்வதொக்கும்"[92]

என்ற உவமையில் தத்துவ அறிவு இல்லாத ஒருவனின் செயல் உவமையாக்கப் பட்டுள்ளது.

இதுபோல், சைவசமயநெறி[93], சிவதருமோத்தரம்[94], ஆண்டாள் பிள்ளைத் தமிழ்[95], அழகர் பிள்ளைத் தமிழ்[96], காஞ்சிப்புராணம்[97] ஆகியவற்றிலும் சமய, தத்துவ உவமைகள் உண்டு.

5.1.5.1.3. புராண உவமைகள்: அவையடக்கத்தில் புராண நிகழ்ச்சிகளை உவமைகளாகத் தரும் வழக்கம் பெரிதும் போற்றப்பட்டுள்ளது. அதன்வழி சமயக் கடவுளரின் சிறப்பும், பாடுபொருட் சிறப்பும் வெளிப்படுத்தப் படுகின்றன.

"நெறிவ ழாஉமை பூசனை போல்நெறி பிறழ்ந்தோன்
எறித ருங்கலுங் கைக்கொளுங் கச்சியெம் பெருமான்"[98]

என்பது காஞ்சிப்புராணம் என்ற நூலின் அவையடக்க உவமையாகும். இதில் 'கல்வியிற் சிறந்தவர்கள் பாடிய நூலை ஏற்ற இறைவன் எனது புன்சொல் நூலையும் ஏற்பான். ஏனெனில் உமையின் பூசனையைக் கொண்ட பெருமான்

சாக்கிய நாயனார் கல்லால் எறிந்து செய்த பூசனையையும் அன்போடு ஏற்றுக் கொண்டவனாவன்' என்று சாக்கியநாயனாரின் கதையை உவமையாக்கி உள்ளார் ஆசிரியர்.

இதுபோல் கண்ணப்பர் கதை[99], அடிமுடித் தேடியது[100] போன்ற பல புராணக் கதைகள் உவமைகளாக வந்துள்ளன. இவை மேலும் விரிவாக அடுத்த இயலில் புராணச் செய்திகள் என்ற தலைப்பின்கீழ் விளக்கப்பட்டுள்ளன.

5.1.5.1.4. நடப்பியல் உவமைகள்: உலக வாழ்க்கையில் யதார்த்தமாக நடைபெறும் நிகழ்ச்சிகள், செய்திகள், உண்மைகள் ஆகியவற்றை உவமையாக அமைக்கும் போக்கை நடப்பியல் உவமைகள் என அழைக்கலாம்.

குழந்தைகளைப் பெற்றவர்கள் அவர்கள் தவறு செய்தாலும், புரியாமல் பேசினாலும் அதனைக் கண்டு சினம்கொள்ளாது அவர்களை ஆதரித்து வாழ்வது நடைமுறையில் உண்டு. இதனை உவமையாகத் தந்துள்ளனர் அவையடக்கம் பாடிய புலவர்கள்.

"நீடுபுகழ் உலகுதனில் மைந்தர் மாதர் நேயமொடு
தாம்பயந்த புதல்வர் வாயில்
கூடுமொழி மழலையொடு குழறி ஒன்றும் குறிப்பறிதா
விடினுமிகக் குலவிப் போற்றி
மாடுநமக் கிதுவென்று கொண்டு வாழ்வர் அதுபோல"[101]

எனவரும் உவமையை நடப்பியல் உவமைக்குச் சான்றுகாட்டலாம்.

'உலகம் முழுவதையும் நடுநிலையோடு ஆட்சி செய்யும் மன்னன் முன் உழைத்து உண்ணமுடியாத ஒருவன் சமமாகப் பேசுவதைப் போன்றுள்ளது நான் நூல் செய்யப் புகுந்தது' என்று கூறுவதில் நடப்பியல் உண்மை உவமையாக வந்துள்ளது. இதனை,

"திக்க னைத்தினும் பாரினுந் தீவினுஞ் செங்கோல்
புக்க நன்னெறித் திகிரிமன் னவர்களுள் பொருந்தத்
தக்க கவியுஞ் செய்துண வறிகிலாச் சரியோர்"[102]

என்ற பாடலடிகளால் அறியலாம்.

5.1.5.1.5. இயற்கை நிகழ்ச்சி உவமைகள்: இயற்கை நிகழ்ச்சிகள் சிலவற்றை அவையடக்க உவமையாகத் தரும் போக்கும் உண்டு. அது பொருட் சிறப்பும், அவையோர் தன்மையும் வெளிப்படுத்தும் வகையில் அமையும்.

"உண்ண முடியாத ஓதநீர் வான்வாய்ப்பட்
டெண்ண அமுதான தில்லையோ"[103]

உண்ண முடியாத கடல் நீர் ஆவியாகி வானத்தை அடைந்து உண்ணும் மழை நீராகப் பொழிவது இயற்கையாக நடக்கும் நிகழ்ச்சி. இதனை உவமையாக்கி அதுபோல் 'எதற்கும் உதவாத என் நூல் சிறந்த அறிவுடைய அவையோரைச் சென்று சேர்வதால் பயனுள்ள நூலாக ஆக்கப்பெறும்' என்ற பொருளில் பாடப்பட்டுள்ளது.

வெண்ணிலவு தேய்வதும் வளர்வதும், ஞாயிற்றிடமிருந்து ஒளியைப் பெற்று உலகுக்கு அந்த ஒளியை வழங்குவதும் இயற்கை நிகழ்ச்சி. இதனைத் தம் நூற்பாடும் செயலுக்கு உவமையாகத் தந்துள்ளனர்.

"..... சுடரோனால் வெண்பிறைதான்,
உற்றமதி யாவதனை யோர்ந்து"[104]

சுடரோனாகிய சிவன் வெண்பிறையைக் காத்தருளி, முழுநிலவாக வளர உதவிய புராணக் கதையாகவும் கொள்ளுமாறு சிலேடை நயத்தில் அமைந்துள்ளது.

5.1.5.1.6. அரியகாட்சி உவமைகள்: கவிஞர்கள் எங்கோ அரிதாகக் கண்ட காட்சிகளையும் எப்போதோ கேட்டுத் தெரிந்துகொண்ட செய்திகளையும் உவமைகளாகப் படைத்துள்ளனர். இவற்றை அரியகாட்சி உவமைகள் எனலாம்.

நிலாவை விளையாடப் பிடித்துத் தருமாறு குழந்தை அழுவதும்[105], சிறுவர்கள் மணம் செய்துகொண்டு சிறு பெண்ணின் கையைப் பற்றிச் சுற்றிவருவதும்[106], சொத்தைகளை அகற்றிவிட்டுச் செம்மண்ணை மெத்தையாக்கிக் கொண்டு உறங்கும் முயலின் செயலும்[107] புலவன் எங்கோ எப்போதோ கண்ட நிகழ்ச்சிகளாகும். பாலை மட்டும் உண்டுவிட்டு நீரை ஒதுக்கிவிடும் அன்னப் பறவையின்[108] செயல், கவிஞன் யாரிடமாவது கேட்டுப்பெற்ற அநுபவமாக இருக்கக்கூடும். இத்தகைய அரிய நிகழ்ச்சிகள் அவையடக்கப் பாடல்களில் உவமைகளாக வந்துள்ளன.

5.1.5.1.7. நடைபெறாத நிகழ்ச்சி உவமைகள்: உலகில் நடைபெறுவதற்கு வாய்ப்பேயில்லாத சில நிகழ்ச்சிகள் உவமைகளாகத் தரப் பெற்றுள்ளன.

"கற்பு ணைக்கொடு கார்க்கட லீந்துவான்
அற்பு தத்தி னமைந்தவ னாசைபோல்"[109]

என்பதில் கல்லைத் தோணியாகக் கொண்டு கடலைக் கடப்பது என்பது நடைபெற முடியாத நிகழ்ச்சியாகும். அதுபோல்,

"மகத்து வம்பெறு மேருவை வலித்துத்தன் வளையுள்
புகுத்து வேனென முயன்றசிற் றெறும்பினைப் போலும்"[110]

என்ற உவமையில் வரும் நிகழ்ச்சியும் நடைபெறாத நிகழ்ச்சியாகும்.

"வீறுகொண் டெலியொரு மலையினைத் தலைதனில்
சுமந்திடத் துணிந்து முயன்றதைப் போன்றென்"[111]

என்பதும் நடைபெறாத நிகழ்ச்சி உவமையே.

இவைபோலில்லாமல், நடைபெறுவது மிகவும் கடினம் என்று எண்ணக் கூடிய நிகழ்ச்சிகளையும் உவமைகளாகத் தந்துள்ளனர்.

"கலைமுழுது முணர்ந்தவர்க்கு வாய்பேசா மூங்கையுரை
கற்பித்தாற் போல்"[112]

"ஊமையர்கள் மொழிந்திடவும் வாமனர்கள் தமதை
யுயர்த்தித் தாரு
மீமிசைவாழ் பலம்பறிக்க விரும்பியுமே *(மு)
எனமடையும் விதமே போலாம்"[113]

"...... ஈங்கோர்,
ஆற்றினுள் மணலை யோர்சேய்
அளப்பதற் கெழுத வேய்க்கும்"[114]

"நட்ட, மயிலைக் குணர்த்துங் காளவா ரணமெனவும்"[115]

என்பன போன்ற உவமைகளில் வரும் நிகழ்ச்சிகள் நடைபெறுவது கடினமான செயல்களாகும். இவை இல்பொருள் உவமைகளுடன் ஒப்பிடத்தக்கன.

5.1.5.1.8. அடுக்கு உவமைகள்: ஒரு பொருளுக்குப் பல உவமைகளை அடுக்கிக் கூறுவது அடுக்கு உவமைகள் எனப்படும். இவை அவையடக்கப் பாடல்களில் பரவலாக இடம்பெற்றுள்ளன. எடுத்துக்காட்டு உவமைகளில் இவ்வாறு உவமைகள் அடுக்கிவருதல் பெருவழக்காய் உள்ளன.

"நோய்க்குற்ற மாந்தர் மருந்திக்கலை நோக்க கில்லார்
தீக்குற்ற காத லுடையார்புகைத் தீமை யோரார்"[116]

என்பது குண்டலகேசியின் அவையடக்கப் பாடலடியாகும். நோய் வந்தவர்கள் மருந்தின் தன்மையைக் கருதி அது கசப்பானது என்று கூடப் பார்க்காமல் அருந்திவிடுவார்கள், விளக்கின் ஒளியை விரும்புபவர்கள் அதில் வரும் புகைக்காக அதனை வெறுக்கமாட்டார்கள். இவ்விரு உவமைகள் அடுக்கிக் கூறப்பட்டு, அது போல 'தொல்வினைகளைப் போக்கும் இறைவன் புகழைக் கூறும் என் சொல்லில் வழுவிருந்தாலும், இறைவன் சிறப்புக் கருதி வழுவாக எண்ணாது ஏற்றுக்கொள்வர்' என்று அவையடக்கம் கூறப்பட்டுள்ளது.

இதுபோல் பல உவமைகள் அடுக்கி வரும் அவையடக்கப் பாடல்களும் உண்டு.

அரிச்சந்திரபுராணம்[117] நான்கு உவமைகளையும், கருப்பண்ணசாமி சதகம்[118] ஏழு உவமைகளையும், குமரேசசதகம்[119] எட்டு உவமைகளையும் அவையடக்கத்துள் பெற்றுள்ளன. ஐவர் ராசாக்கள் கதை[120] பத்து உவமைகளைக் கொண்ட அவையடக்கப் பகுதியைக் கொண்டுள்ளது.

வலங்கை மாலை[120அ] என்ற தட்டச்சு நிலையில் உள்ள நூலில் பன்னிரண்டு உவமைகள் அடுக்கி வந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

5.1.5.1.9. பழமொழி உவமைகள்: மக்கள் வழக்கில் உள்ள பழமொழிகள் அவையடக்கப் பண்பை வெளிப்படுத்த உவமைகளாகக் கையாளப் பெற்றுள்ளன. பழமொழிகளை அப்படியே தராமல் பொருளை அடியொற்றி உவமையாக்கும் நிலையைக் காணமுடிகின்றது.

'முடவன் மலை உச்சியில் உள்ள கொம்புத்தேனை எடுத்துப் பருக எண்ணியது போல் உள்ளது, நான் சிவனின் திருவிளையாடல்களை நூலாகக் கூறுவது'[121] என்ற பொருளில் பெரும்பற்றப்புலியூர் நம்பி அவையடக்கம் பாடுகின்றார். இதில் 'முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டானாம்' என்ற பழமொழி இடம்பெற்றுள்ளதைக் காணலாம். இப்பழமொழி திருக்கச்சிக் குமரக்கோட்டத்து முருகப்பெருமான் பிள்ளைத் தமிழ்[122], இராமலிங்க சுவாமிகள் திவ்விய சரித்திரக் கீர்த்தனை[123] போன்ற நூல்களிலும் எடுத்தாளப் பெற்றுள்ளது.

"கொல்லன் தெருவில் ஊசி விற்பது போல"

என்ற பழமொழியை,

"வெள்ளைமதி யினன்கொல்லத் தெருவதனி
லூசிவிற்கும் வினைய தாமே"[124]

எனத் தண்டலையார் சதகம் என்ற நூலின் அவையடக்கத்தில் தரப்பெற்றுள்ளது. திருநல்லூர்ப் புராணத்தின்[125] அவையடக்கமும் இப்பழமொழியைத் தந்துள்ளது.

இவைபோன்று 'பூவோடு சேர்ந்த நாரும் மணக்கும்'[126], 'குரங்கு கையில் அகப்பட்ட மாலையைப் போல'[127], 'நெல்லோடு சேர்ந்த பதரும் விலையாகும்'[128] போன்ற பழமொழிகளையும் உவமைகளில் பயன்படுத்தியிருக்கும் திறனைக் காணமுடிகின்றது. இது பழமொழித் தாக்கத்தால் ஓர் ஆசிரியனின் நடை வேறுபட்டு அமைவதைக் காட்டும்.

"இரவி முன்னர் மின்மினிபோல்"[129]

"ஊசிநுழை வழியின், மென்னூல் செல்லுஞ் செயல்போல"[130]

"கூடார்க் குப்பறை கற்பிப்ப தென"[131]

"கண்ணுள் ளார்க்குக் குருடார் வழிகாட்ட லென"[132]

"குருடன்முன் மசகமது பறந்துபோனவாம்"[133]

"மண்சோற்றில் கல்லைத் தேடுபவர்களை ஒப்பர்"[134]

"முடிசுட் சேவகத்தை யானைக்குச் செய்திடலே யாம்"[135]

"அன்னநடை போற்காகம் அன்றநடை கற்றதுதான்"[136]

இவைபோன்று வரும் உவமைத் தொடர்களைப் பழமொழி போன்ற சாயலை உடையனவாகக் கொள்ளலாம். வழக்கில் தாழ்ந்த தன்மையுடையோர் செயல்களைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் பழமொழிகளுடன் இவற்றை ஒப்பிட முடியும்.

5.1.5.1.10. இலக்கண உவமைகள்: இலக்கணக் கருத்துகளை உவமையாகத் தரும் திறனும் அவையடக்கப் பாடல்களில் காணப்படுகின்றது.

இலக்கணத்தில் எழுத்துப் போலியையும் எழுத்தாகக் கொள்ள வேண்டும் என்று கூறப்படுகின்றது. இதனை உவமையாக்கி, 'அதுபோல் புன்சொல்லாலான எனது செய்யுட்போலியையும் செய்யுளாகவே அவையோர் கொள்வர்' என்ற பொருளில் சிவஞான முனிவர் அவையடக்கம் பாடியுள்ளார்.

"எழுத்துப் போலியும் எழுத்தென ஆளுவர் அதுபோல்"[137]

என்பது அவரது அவையடக்க உவமையாகும்.

மீனாட்சி சுந்தரம் பிள்ளை தமது அவையடக்கப் பண்பை வெளிப்படுத்தும்போது,

"தொகையிலக் கணச்சி தைந்த தொழின்முத லாமோர் மூன்றந்
தொகையிலக் கணங்கே டெய்தாப் பலவொடுந் தொகுத்தக் கொள்வர்"[138]

என்று இலக்கணக் கருத்தை உவமையாகத் தந்துள்ளார்.

மருமக்கள் வழி மாம்மியம்[139] என்ற நூலின் அவையடக்கத்தில் இம் மரபு சிறப்பாகக் கையாளப்பெற்றுள்ளது.

5.1.5.1.11. இலக்கிய உவமைகள்: அவையடக்கப் பாடல்களில் பிற இலக்கிய நூல்களின் உவமைகளையே உவமையாகத் தரும் வழக்கம் சில பாடல்களில் உண்டு. இதனை இலக்கிய உவமைகளாகச் சுட்டலாம்.

"கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானு மதுவாகப் பாவித்துத் - தானுந்தன்
பொல்லாச் சிறகைவிரித் தாடினாற் போலுமே
கல்லா தான்பெற்ற கவி"[140]

என்ற ஔவையாரின் மூதுரைப் பாடல்ல் வரும் உவமையை,

"பச்சைமயில் ஆடுதற்(கு) இணையென்று வான்கோழி
பாரில்ஆ டுதல்போலவும் . . . ."[141]

என்று குமரேச சதகம் அவையடக்கத்துள் தந்துள்ளது. இவ்வுமை பாரத அம்மானையிலும்[141அ] இடம்பெற்றுள்ளது.

திருவள்ளுவர் பல்துறை நூலறிவு இல்லாதவனைச் சுட்ட,

"அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டிக் கொளல்"[142]

என்று கூறிய உவமையையே 'நான் அதிக நூல் அறிவு இல்லாமல் இந்நூலைப் பாடுவது என்பது அரங்கமின்றி வட்டாடுபவர்களின் செய்கையை ஒத்ததாகவுள்ளது'[143]

என்ற பொருளில் திருத்தொண்டர் வெண்பா என்ற நூலின் அவையடக்கமாகத் தந்துள்ளனர். இதனைத் திருத்தொண்டர் மாலை[144] என்ற நூலும் உவமையாக அவையடக்கத்தில் அமைத்துள்ளது.

பிற இலக்கிய நூலாசிரியர்களின் உவமைகள் ஈண்டு அவையடக்க உவமைகளாகப் பயன்படுத்தப் பெற்றுள்ளத் திறன் நோக்கத்தகுந்தது.

5.1.5.1.12. நகைச்சுவை உவமைகள்: பெரும்பாலும் நடைபெற முடியாத நிகழ்ச்சிகளை உவமைகளாகத் தரும்போது அவற்றில் நகைச்சுவை காணப்படும்.

> "விண்ணிலா தவள்விளங்கு நீடெல்லலையை யூமன்
> கண்ணிலா தவள்கேட்டலுங் காண்டலுங் கடுக்கும்"[145]

என்ற வில்லிபுத்தூராரின் அவையடக்க உவமை நகைச்சுவை உடையதாக உள்ளது.

நீதிநூல் என்ற நூலில் இடம்பெறும் அவையடக்க உவமையில் நகைச்சுவை சிறப்புடன் அமைந்துள்ளதைப் பின்வரும் பாடலடிகள் காட்டுகின்றன.

> "முடவரே யாடவந்தார் மூன்னின்று பார்த்து வக்கத்
> திடமொடு மூகர்பாடச் செவிடர் கேட்டிசை யிக்கக்
> கடவுல கினிற்கண் டென்ன..."[146]

இதில் ஊமையர் பாடுவதற்கு முடவர் நடனமாட, அதைக் கேட்டிசையிக்கச் செவிடர் முன்வந்ததாகக் கூறுவது சிறந்த நகைச்சுவையினை அளிப்பதாக உள்ளது.

பூனை[147], நாய்[148], எறும்பு[149] போன்ற அஃறிணை உயிர்கள் செய்யமுடியாத செயலைச் செய்ய முயல்வதாக அமையும் உவமைகளிலும் இச் சுவையைக் காணமுடிகின்றது.

"மகத்து வம்பெறு மேரு வை வலித்துத்தன் வளையுள்
புகுத்து வேனென முயன்றசிற் றெறும்பினைப் போலும்"[150]

என்பதில் சிற்றெறும்பு மேருமலையை வலித்தெடுத்துவந்து தன் வளைக்குள் புகுத்த முயல்வதை உவமையாகக் காட்டுவது இச்சுவைக்குச் சிறந்த சான்றாகும்.

5.1.5.1.13. முரண் உவமைகள்:

"மொழியினும் பொருளினும் முரணுதல் முரணே"[151]

என்பர் தொல்காப்பியர். இதை அடிப்படையாகக் கொண்டு முரண் உவமைகள் தோன்றியுள்ளன. சொல்லிலும் பொருளிலும் முரண் அமையப் பாடுதலை முரண் தொடை என்பர்.

சங்க இலக்கியத்தில் தலைவன் ஒருவனிடம் முரண்பட்ட இருபண்புகள் இருப்பதை,

"அன்னை போல் இனிய கூறியும்
கள்வர்போலக் கொடியன் மாதோ"[152]

எனவரும் உவமைகளால் அறியலாம். இதில் முரணுள்ள இரு உவமைகள் தனித் தனியாகக் காட்டப்பெற்றுள்ளன.

ஆனால், அவையடக்கப் பாடல்களில் முரண் உவமை வேறு வகையாக அமைந்துள்ளது. முரண்கொண்ட இரு பொருள் அல்லது நிகழ்ச்சிகளை உவமையாக்கி, பொருளிலுள்ள முரணுக்கு உவமிக்கப்படும் அமைப்புக் காணப் படுகின்றது.

"நெறிய மாஉமை பூசனை போல்நெறி பிறழ்ந்தேன்
எறித ருங்கூழுங் கைக்கொளுங் கச்சியெம் பெருமாற்
கறிவின் மேலவர் காப்பியப் பனுவல்போல் அறிவின்
குறியி லேன்கவிப் புன்சொலுங் கொள்வது வழக்கால்"[153]

இப்பாடலில் ஆகமமுறைப்படி உமை செய்யும் பூசையை இறைவன் ஏற்றுக் கொள்கிறான். அதே இறைவன் சாக்கிய நாயனார் கல்லால் எறிந்துசெய்த பூசனையையும் ஏற்றுக் கொண்டார். இவ்விரு முரண்பட்ட செய்திகளை, 'அறிவின் மேலவர் தந்த காப்பியங்களைப் போல் அறிவற்றவனாகிய என் புன்சொல்கவியையும் ஏற்பது இறைவனுக்கு வழக்கேயாகும்' என்ற பொருளில் உள்ள முரணுக்கு உவமைகளாக ஆசிரியர் தந்துள்ளார்.

"ஆற்றுநீர் ஏற்கும் அருங்கடல் புன்கழித்தீ
நாற்றநீர் தன்னையும் நக்கேற்கும்"[154]

என்று மற்றொருவர் உவமையில் முரண் காட்டியுள்ளார். பொதுவாக இணைப்பு உவமைகளாக வருவனவற்றில் பெரிதும் முரண் அமைந்துள்ளதைக் காணமுடிகின்றது. சங்க இலக்கியத்தில் அமைந்ததுபோல் இவற்றில் முரண் அமையவில்லை எனினும் முரண் உவமைகளின் பிறிதொரு வகையாக இவற்றைக் கருதவேண்டும்.

<u>5.1.5.1.14. உவமைக்கு உவமை:</u> ஒரு பொருளைச் சிறப்பிக்க மற்றொரு பொருளை உவமையாகக் காட்டுவது மரபு. உவமையாக வரும் பொருளுக்கு வேறொரு பொருளை உவமையாகக் காட்டும் போக்குச் சில அவையடக்கப் பாடல்களில் காணக்கிடைத்தது.

'காஞ்சி மன்னனைப் பற்றி நான் பாடுவது என்பது சிற்றெறும்பு ஒன்று கடலைக் குடிப்பதை ஒத்ததாகும்' என்ற பொருளில் ஒரு பாடல் அமைந்துள்ளது. இதில் உவமையாக வந்த சிற்றெறும்பை அதனினும் சிறிய மற்றொரு பொருளுடன் உவமித்துள்ளார் ஆசிரியர்.

"கொற்ற விழுதாலின் கனியின் விதைபோன்ற
சிற்றெறும்பு வெள்ளத் திரைகடலை யுண்டதொக்கும்"[155]

என்று ஆல மரத்தின் விதை எறும்புக்கு உவமையாகக் காட்டப்பெற்றது. உவமைக்கு உவமை காட்டும் இந்நிலை மிக அருகிக் காணப்படுவது.

5.1.5.1.15. புத்தாக்க உவமைகள்: முன்னோர் பயன்படுத்தியிராத புதிய உவமைகளையும் அவையடக்கப் புலவர்கள் தந்துள்ளனர். இவை அவையடக்கம் பாடியோரின் தனித்திறனைக் காட்டவல்லன.

"வாழுலாங் கொண்டல்பெய்யு மழையினைத் தழையிற் றாங்கித்
தாழும்பெய் தருவைப் போலுந்"[156]

என்பதில் 'மரம் உதிர்க்கும் சிறுதுளி' என்ற உவமை புதிய உவமையாக உள்ளது. இதுபோல்,

"வழிந டத்து வயப்பரி வீரர்கள்
கழிந டத்து சிறுவரைக் காய்வரோ"[157]

"சகதியில் அகப்பை செய்து கடவினை யள்ளல் போல"[158]

"செத்ததை யகற்றியே செம்மண்ணில் தன் வயிற்றை
மெத்து தலாய்வைத் துறங்கும் மென்முயல்போல்"[159]

என வரும் உவமைகளும் தமிழுக்குப் புது உவமைகளாக உள்ளன.

உவமைகளைப் பல்வேறு நிலைகளில் கையாண்டுள்ளது, கவிஞர்களின் தனித் திறனைக் காட்டுகின்றது. பல்வேறு பொருள்களுக்குப் பல உவமைகளைக் காட்டுவது இயல்பு. ஆனால் அவையடக்கம் என்ற ஒரே நோக்கத்திற்காகப் பல்வேறு உவமைகளைப் புலவர்கள் படைத்துத் தந்துள்ளனர். அவை எடுத்துக் கொண்ட பொருளைத் தெளிவுபடுத்தி, இலக்கிய இன்பம் ஊட்டுவனவாகவும் அமைந்தன.

அவையடக்கப் பாடல்களில் உருவகம் முதலான பிற அணிகள் அருகிய நிலையில் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவை பெரும்பாலும் உவமைகளிலிருந்து பிரிந்து தனித்த நிலையில் அமையவில்லை.

5.1.5.2. உருவகம்: உவமையையும் பொருளையும் தனித்துக் காட்டாது உவமானத்தின் தன்மையை உவமேயத்தில் ஏற்றி ஒன்றெனக் காட்டுதல் உருவகம் எனப்படும். இதனை,

"உவமையும் பொருளும் வேற்றுமை யொழிவித்து
ஒன்றென மாட்டின் அஃதுருவக மாகும்"[160]

என்பர் தண்டியலங்காரர்.

பிற்கால அவையடக்கப் பாடல்கள் சிலவற்றில் உருவகம் காணக் கிடைத்தது.

"கலைஞர் நிரம்பிய கற்பகச் சோலைபுக்
கலைவது மெவனோ வளிய நெஞ்சமே
கருணை மலர்ந்தெமைக் காத்த லவர்கடன்"[161]

'திறன்மிக்கக் கலைஞர்கள் கூடிய அவையில் புகுந்துவிட்டபின், எளிய நெஞ்சமே நீ பயந்தால் தடுமாறி அலைவது ஏன்? நூலில் குறையிருந்தாலும் அதனை நீக்கி நம்மைப் போன்றவர்களைக் காப்பது அவையோர்களின் கடமையேயாகும்' என்று பொருள்பட அவையடக்கம் கூறப்பட்டுள்ளது. இதில் கற்றோர் நிறைந்த அவையைக் 'கற்பகச்சோலை' என ஆசிரியர் உருவகித்துள்ளது நோக்கத்தக்கது. கலைவாணன் எழுதிய 'உதயம்' என்ற நூலில் அமைந்துள்ள அவையடக்கப் பாடல்களில் உருவகம் அமைந்துள்ளது. அதில் 'தம் நூலை மணமுள்ள மலராக உருவகித்து அதனை வாங்காமல் மணமற்ற மலர்களையே மக்கள் விரும்பி வாங்கிச் செல்வதாக'[162] உருவகம் இடம்பெற்றுள்ளது.

5.1.5.3. பிற அணிகள்:

5.1.5.3.1. பிறிதுமொழிதல்: உவமை மட்டும் சுட்டிப் பொருள் புணர்த்தப்படாது விடுதல் பிறிதுமொழிதலாகும்.

"முத்த மிழ்த்துறை யின்முறை போகிய
உத்த மக்கவி கட்கொன் றுரைத்துவென்
பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும்
பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ"[163]

என்பதில் 'பித்தர் முதலானோர் சொல்வதில் குற்றம் காணா முத்தமிழ்த்துறைக் கவிஞர்கள் முயலலாமா? என்று மட்டும் கூறிவிட்டு ஆசிரியர் தாம் கூறவந்ததைக் கற்போர் உணர்ந்துகொள்ளுமாறு விட்டுவிட்டதால் இது பிறிது மொழிதலாயிற்று.

5.1.5.3.2. பின்வருநிலை:

"முன்வருஞ் சொல்லும் பொருளும் பலவயிற்
பின்வரு மென்னிற் பின்வரு நிலையே"[164]

என்றார் தண்டியாசிரியர். இதற்குத் தக்க சான்றாய் அமைகிறது பின்வரும் பாடல்:

"மதியுலாஞ் சிகரைபத்தி மருவுமா சிறுவென்
மதிபுனை நவநீதர் மாபுகழ்க் குறவஞ்சி.
மதியிலென் மறைமகிழ்ந் ததன்கோள் கணைப்பொழுத்து
மதியுளார் இகழாத நேர்ந்துள்ளவர் மாநிலத்தே"[165]

இப்பாடலில் முன்னிரண்டடியில் வரும் 'மதி' என்ற சொல் 'நிலவு' என்னும் பொருளிலும், பின்னிரண்டடியில் வந்த 'மதி' என்னும் சொல் 'அறிவு' என்னும் பொருளிலும் வந்துள்ளன. எனவே இது சொற்பொருள் பின்வருநிலை எனப்பட்டது.

5.1.5.3.3. முன்னவிலக்கணி: கவிஞர் தன்செயலுக்குத் தக்க உவமைகூறி விளக்குதல் மரபு. அவ்வாறு கூறாது உவமைப் பொருளை விலக்கி விட்டுத் தன் செயலுக்குக் காரணங்கூறி அமைதலும் உண்டு. இதனை முன்னவிலக்கணி எனலாம்.

"முறையடுத்தறு நூலோருஞ் சூழ்ந்த அவைப்பிலன்ன
துறையடுத்தள்ளி புன்னுந் துணிவிலா வென்னை நோக்கிற்
குறையெடுத்தனை யென்றன்னார் கொடுஞ்சினத் துருக்கனன்றே
பறையெடுத்துலகங் கேட்பப் பழித்தெனை நகைக்கலன்றே"[166]

என்ற பாடலில் 'முறைதெரிந்த இலக்கியக் கடலில் மூழ்கிய புலவர் பெருமக்கள், அக்கடலின் கரையைச் சேர்ந்த அள்ளியுண்ணும் துணிவில்லாத என்னை நோக்கிக் குறைகண்டு சினப்பதோ பறையெடுத்துப் பழிப்பதோ செய்யார்' என்று உவமை விலக்கப்பட்டுள்ளதால் இதனை விலக்கணியின்பாற் கொள்ளலாம்.

5.1.5.3.3. ஆர்வமொழியணி:

"ஆர்வத்தால் உரைப்பது ஆர்வமொழியணியாகும்.
புலவர் பாடல்கள் அனைத்தும் அவர்தம் உள்ளத்
தார்வத்தைப் புலப்படுத்துவனவே"[167]

என்பர். ஆர்வம் காரணமாக நூல் எழுத முயன்றதைப் பாடல்களில் உணர்த்தும் வழக்கு அவையடக்கப் பாடல்களில் பரவலாகக் காணப்படுகின்றது.

"கொற்றங்கோ ளேமி நெடுமால்புகழ் கூற விப்பால்
உற்றிங்கோர் காதல் கிளரத்தமிழ் நூற்க லுற்றேன்"[168]

என்பதில் நெடுமாலின் புகழைக் கூற ஆசிரியருக்கு ஏற்பட்ட ஆர்வத்தைக் காண முடிகின்றது. இதுபோல் 'ஆசை பற்றி யறையலுற் றேன்' என்றும்,

'நாணற்றோற்க ஆனையே வென்றதம்மா' என்றும், 'புகழினால் உரைக்கலுற்றேன்' என்றும், 'உரத்தினால்' என்றும் தமக்கிருந்த கர்வத்தைப் புலவர்கள் புலப்படுத்தி உள்ளனர்.

5.1.5.3.4. சிலேடை: ஒரு சொல் அல்லது சொற்றொடர் இருபொருள் தருமாறு அமைப்பது சிலேடை என்பது பொதுக்கருத்து.

"பொருகோட்டுக் காப்புக விக்கோவை பாடப் புகுந்தனுக்
கொருகோட்டு மாவையுள் ஒன்றின் மேற்படர்ந் தோங்கிடுமே!"[169]

என்ற சீகாழிக்கோவையின் அவையடக்கப் பாடலடிகளில் சிலேடை அமைந்துள்ளது. 'கோவைக்கொடி மாமரம் மீது படர்ந்து வளரும்' என்பது ஒருபொருள். 'கோட்டுமாவாகிய விநாயகன் அருளால் கோவை பாடுகிறேன்' என்பது மற்றொரு பொருள்.

சிலேடை வெண்பா நூல்களில் இடம்பெற்றுள்ள அவையடக்கப் பாடல்களில் சிலேடை அமையவில்லை.

5.1.5.3.5. சொல்லணி: யமகம் திரிபு முதலியவற்றைச் சொல்லணிகள் என அழைப்பதுண்டு. இவற்றில் முதற்சீர் மட்டுமல்லாமல், இரண்டாம் சீரும் ஒன்றிவருமாறு பாடல்கள் அமையும்.

"குடந்தை யந்தா திதிரி பாவொரு சதங்கூ றிடவ
வடந்தை யந்தா திகழு மாவலி யென்றநா தனிற
மடந்தை யந்தா தவினை செயவாழ் மங்கனை மகிழ்ந
விடந்தை யந்தா திவருந் தாடரு மெதுமென் னங்கொண்டே"[170]

இதில் வந்த சொல்லே திரும்பத்திரும்ப வரினும் சொல் வித்தையோ விளையாட்டோ யிராமல் ஆசிரியரின் அவையடக்க உணர்ச்சி சிறந்து விளங்குவதைக் காணமுடிகின்றது.

இவ்வாறின்றிச் சில யமகப் பாடல்கள் மிக முயன்று பிரித்துப் பாட்டின் பொருளை உணருமாறு அமைந்துள்ளன.

"அலையடக்கும் புன்மை யறிந்த மகந்தை
அலையடக்கும் பாம்போ பறஞ்செ-யலையடக்க
கத்திகையா மெய்நுங் கயிபோல் தேரன்பவன்பாக்
கத்திகையா மோனையும் கம்"[171]

இது யமகவெண்பாவாகும்.

இத்தகைய சொல்லணிகள் பெரிதும் விரும்பிப் போற்றப்படவில்லை. எனினும் அலையடக்கும் பாடுவதிலும் இத்தகையத் திறனை வெளிப்படுத்தியுள்ளனர் என்பதற்கு இவை சான்றுகளாக அமைகின்றன.

<u>5.1.6. நடைத்திறன்:</u> ஓர் ஆசிரியனின் தனித்தன்மையை அறிய அவரது நடையே அடிப்படையாக அமைகின்றது.

"ஒவ்வோர் இலக்கிய ஆசிரியன் நடையும் அவரவர் தன்மைக்கேற்ப அமைகிறது. அவர் பயன்படுத்தும் சொற்கள், சொற்றொடர்களை மாற்றியமைக்குந்திறம், வாக்கிய அமைப்பு, அவர் மேற்கொள்ளும் தனி ஒலிநயம் இவைபோன்றவை எழுத்தாளரின் தனித்தன்மையை ஒட்டியவையாகும்"[172]

என்பர். மேலும் படைப்பாளியின் நடையிற் கூறுகளை இனங்காண 'ஒலிநிலை, சொல்நிலை, தொடர்நிலை'[173] ஆகிய மூன்றும் உதவும் என்ற உல்மானின் கருத்தை அறிஞர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர்.

இவ்வியலில் இடம்பெற்றுள்ள சொல்லாட்சி, ஒலிநயம், எதுகையும் மோனையும் ஆகிய உட்தலைப்புகளில் இவை தொடர்பான சில கருத்துக்கள்

விளக்கப்பெற்றுள்ளன. அவற்றில் இடம்பெறாத செய்திகள் பின்வரும் பிரிவுகளில் விளக்கப்படும்.

1. ஒலிக்குறிப்புச் சொற்கள்
2. அடுக்குச் சொற்கள்
3. எளிய சொற்கள்
4. ஒரு சொல் பலபொருள்
5. பிறமொழிச் சொற்கள்
6. அடைத் தொடர்கள்
7. உவம உருபுகளைப் பயன்படுத்துதல்
8. வினைத் தொடர்கள்
9. வினாத் தொடர்கள்
10. முன்னோர் மொழியும் மொழிப்பொருளும் போற்றுதல்

5.1.6.1. ஒலிக்குறிப்புச் சொற்கள்: ஒலிக்குறிப்புச் சொற்களைக் கையாள்வதும் ஒருவகை நடைத்திறனைக் காட்டும். பொதுவாக, இவை கற்போரை நிகழ்ச்சி நடந்த இடத்திற்கே அழைத்துச் செல்லும் திறன்கொண்டன.

"முத்தமிழ் வல்லார்சிறிதும் இகழ்வரோ
சிறியோர்தம் முழந்தா ளுன்றித்
தித்தியென நடித்தாலும் வெறுப்பரோ
நாடகியார் தீதீ தென்ன?"[174]

இதில் தித்தியென, தீதீதென்ன போன்றவை ஒலிக்குறிப்புச் சொற்களாக உள்ளன. இவை இயல்பாகவே கவிதையில் வந்தமைவன எனினும் ஏதோ ஓர் ஒலி அதே போன்ற ஒலியால் குறிக்கப்படுவதை உணரமுடிகின்றது.

5.1.6.2. அடுக்குச் சொற்கள்: அவையடக்கப் பாடல்களில் ஒரே சொல் அடுத்தடுத்து வருதல் பெருவழக்காயுள்ளது. இவை சிறந்த ஒலிநயத்திற்கும் எதுகை மோனை அமைப்பிற்கும் துணைசெய்கின்றன.

"அடிய டைத்தொறும் வருவலால் விதியிலக் கறியேன்
படிய டைத்தசெஞ் சொற்புல வோர்குலம் பகர்ந்த
விடியி டைத்திரு மாறவா ரத்தியக் கெதிரோர்
நொடி நொடிப்பது போலுமொத் திருந்தெனு மவே"[175]

இதில் அடிஅடி, இடிஇடி, நொடிநொடி என்ற சொற்கள் அடுக்கி வந்துள்ளதைக் காணலாம்.

இதுபோல், தொண்டர்தொண்டர்[176], தவழ்ந்துதவழ்ந்து[177], குழறிக்குழறி[178], சிலசில[179], சிலசில[180] எனவும் சொற்கள் அடுக்கி வந்துள்ளன.

5.1.6.3. எளிய சொற்கள்: அவையடக்கம் பாடியோர் புலமைத் திறம் மிக்கோராய் இருப்பினும் அவையடக்கத்தில் எளிய சொற்களையே பெரிதும் விரும்பிப் பயன்படுத்தியுள்ளனர். தாம் கூறவந்த கருத்தை அவையோர் முதலானோர் விரைவில் புரிந்துகொள்ள வேண்டும் என்பது இதற்குக் காரணமாக அமைகிறது.

"வைய மென்னை யிகழவு மாசெனக்
கெய்த வும்மி தியம்புவ தியாதெனில்
பொய்யில் கேள்விப் புலமையி னோன்புகல்
தெய்வ மாக்கவி மாட்சி தெரிவிக்கவே"[181]

என்ற கம்பரின் அவையடக்கத்தில் பெரும்பான்மையும் எளிய சொற்களே பயின்றுவந்துள்ளன.

இலக்கண நூல்களுக்குப் பாடப்பெற்ற அவையடக்கத்தில் கூட மிக எளிய சொற்களே இடம்பெற்றுள்ளதைக் காணமுடிகின்றது.

"உலக முடியாத புதநீர் வாக்வாய்ப்பட்
டொரு அதான தில்லையோ - மங்கைமேல்
நல்லாரைச் சேர்தலால் நாக்சொன்ன புன்சொல்லும்
எல்லாரும் கைக்கொள்வர் ஈங்கு"[182]

இதில் கடினமான சொற்கள் என்று சொல்வதற்கே இடமின்றி எளிய சொற்கள் கையாளப் பெற்றுள்ளதைக் காணலாம்.

கீர்த்தனை நூல்கள், இக்கால நூல்கள் ஆகியவற்றில் வரும் அவையடக்கப் பாடல்களிலும் வெளிப்படையான சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காணலாம். யமகம் திரிபு போன்றவற்றைப் பயன்படுத்திப் பாடப்பெற்ற பாடல்கள் இதற்கு விதிவிலக்காய் அமைகின்றன.

5.1.6.4. ஒருசொல் பலபொருள்: ஒரே பாடலின் பல இடங்களில் ஒரு சொல்லைப் பல பொருள் தருமாறு அமைக்கும் வழக்கம் அவையடக்கத்தில் உண்டு. இது கவிஞனின் நடையைப் பிரித்துக் காண உதவும்.

"அருளம்பி காபதி பொன்னடித் தாமரை சூட்டியகப்
பொருளம்பி காபதி கம்புனைந் தேன்..."[183]

என்பதில் முதலில் வரும் அம்பிகாபதி எனும் சொல் அருள் என்ற அடையுடன் சேர்ந்து சிவனையும், இரண்டாவது அடியில் வரும் அம்பிகாபதி என்னும் சொல் பொருள் என்ற அடையுடன் சேர்ந்து அம்பிகாபதிக் கோவை எனும் நூலையும் குறித்தது.

"வியலா றொளிர்மணிக் கோவையுங் காவின் மிகப்படருஞ்
செயலாருங் கோவையுங் கோவையென் றேபுவி செப்புதல்போல்
மயலான தின்றிப் பலனுயுங் கற்றவர் வாய்மொழியால்
இயல்கோவை தானுமென்கோவையுங் கோவை யெனத்தகுமே" [184]

இப்பாடலில் வரும் கோவை என்ற சொல் முறையே மணிகளால் செய்யப்பெற்ற வடம், வேலியில் படர்கின்ற கோவைக்கொடி, கோவை என்னும் வகையைச் சேர்ந்த நூல் ஆகிய மூன்று பொருட்களைத் தந்தது. அவற்றை ஆசிரியரே விளக்கியுள்ள பாங்கும் நோக்கத்தக்கது.

"பாரு மொன்றறியாத புலமையச் சொற்றிருப்
பாவையைப் பாடியருளும்
பாவையைப் புகழ்பாடல்...." [185]

என்ற பாடலடியில் வரும் 'பாவை' என்ற சொல்லையும் இருபொருள்பட அமைத்துள்ளதாகக் கொள்ளலாம். அது திருப்பாவை என்ற நூலையும், அதனைப் பாடிய ஆண்டாளையும் விளக்கி நிற்கின்றது.

பலசொற்கள் ஒரு பொருள் தருமாறு அமைக்கும் வழக்கு அவையடக்கப் பாடல்களில் காணக்கிடைக்கவில்லை.

5.1.6.5. பிறமொழிச் சொற்கள்: அவையடக்கப் பாடல்களில் பிறமொழிச் சொற்கள் விரவிவருதல் பிற்காலப் பாடல்களில் பெரிதும் காணப்படுவதாகும்.

'சூரி, வசனித்தேனே' [186], 'புகழ்சபை, பக்ஷம்வைத்தாள' [187] 'உதயசூரியன், ஜ்ஞானத் தியானம்' [188], 'இராசலிங்கேசன்' [189], 'சலதாரைநீர்' [190] போன்றவை அவையடக்கப் பாடல்களில் இடம்பெற்ற

பிறமொழிச் சொற்களில் சிலவாகும். இவை கவிஞர்களுக்குப் பிற மொழிகளிலுள்ள ஈடுபாட்டினைக் காட்டுகின்றன.

5.1.6.6. அடைத்தொடர்கள்: பெயர்ச் சொற்களோடு அடைகளைச் சேர்த்துத்தருதல் ஒருவகை நடைத்திறனைக் காட்டும். இம்மரபு கவிதை நடையில் பெரிதும் காணப்படும். இதனால் கூறவரும் பொருளின் தன்மையை உயர்த்திக்காட்ட முடியும்.

" - தென்குன்ற
சேல்பாயும் காவிரியும் சின்னஞ் சிறுச்சிறிய
கால்வாயும் புண்டமை போல்"[191]

இதில் 'கால்வாய்' என்ற பெயர்ச்சொல்லின் தன்மையை மிகச் சிறியதாகக் காட்டச் சின்னம், சிறு, சிறிய என்ற மூன்று அடைகள் அடுக்கிச் 'சின்னஞ் சிறுச்சிறிய கால்வாய்' என்று நீண்ட அடைத்தொடர் கொடுக்கப்பட்டுள்ளது.

பன்னிருபாட்டியலுரையின் அவையடக்கத்தில் நீரின் தன்மையைத் தாழ்த்திக் காட்ட 'புன்கழித்தீராற்றநீர்'[192] என்ற அடைத்தொடர் பயன்படுத்தப்பட்டுள்ளது. நீண்ட அடைத்தொடரின்றி ஓர் அடை மட்டும் சேர்ந்த 'புழுத்தநாயினேன்'[193] என்பன போன்ற சொற்கள் மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. கொத்தடியேன், புன்சொல், பிதற்றுரை, வீண்புன்சொல், புன்புநுவல், மோனைப்புலவர் போன்றன அடைத்தொடர்களாக அவையடக்கத்தில் வந்துள்ள சில தொடர்களாகும்.

5.1.6.7. உவமஉருபுகளைப் பயன்படுத்துதல்: பொருளோடு மற்றொரு பொருளை ஒப்புமைக்காட்டும் தொடர்களைப் பலர் ஒரே கால கட்டத்தில் கையாண்டுள்ளனர். எனினும் அவர்கள் உவம உருபுகளைக் கையாளுகின்ற முறையில் ஒருவர் நடை மற்றொருவரிடமிருந்து வேறுபடுவதை அவையடக்கப் பாடல்களில் காணமுடிகின்றது.

அசை, சீர், தளை இவற்றுக்கு ஏற்றாற்போல் உவமஉருபுகளைப் பயன்படுத்தும் போக்கினைக் காணமுடிகின்றது.

"உம்பரின் மீதே சுட்டி புனர்வழு முதலைச் சொல்லால்
அம்புலி வேண்டி நின்றே மழலைத் தன்மை போலும்"[194]

இதில் நிரையசைச் சீர்களே அடி முழுதும் வந்துள்ளன. இங்கு 'போல்' என்ற உவமஉருபைப் பயன்படுத்தினால் அது நேரசைச் சீராகிவிடும். அதனால் ஆசிரியர் 'போலும்' என்ற உவமஉருபைப் பயன்படுத்தினர். அதுபோல்,

"வாமதே வன்கங்கை வேரியன் கூற்றினை
மயக்கிட வுதைத்தபாதன்
மலைமாது கேள்வன்றன் விடையிக் கொட்டகம்
வயிறுடை காட்டியதுபோல்"[195]

என்பது ஆசிரிய நிகண்டு என்ற நூலின் பன்னிருசீர் ஆசிரிய விருத்தத்தாலான தலையடக்கப் பாடலடியாகும். இதில் ஒவ்வோர் அடியின் ஆறாவது சீரும் பன்னிரண்டாவது சீரும் நிரையசைச் சீராய் அமைந்துள்ளன. எனவே இதில் போல, போலும் என்ற உவமஉருபுகளைப் பயன்படுத்தினால் சீரமைப்பில் மாற்றம் ஏற்படும் என்பதால் 'போல்' என்ற உவமஉருபு பயன்படுத்தப்பட்டுள்ளது நோக்கத்தக்கது.

இதுபோல் ஒக்கும், ஒன்றும், ஒத்து, போலாம், என, வகையாக, நிகர்ப்ப, ஏதாமே, போலவாம், கடுக்கும், ஒப்ப, ஒப்பாம், பான்மையாம், போலவே என்பன போன்ற உவம உருபுகளை ஆசிரியர்கள் விருப்பத்திற்கேற்பப் பயன்படுத்தியுள்ளனர்.

5.1.6.8. விரித் தொடர்கள்: பொதுவாகக் கருத்துகள் நேரடியாகச் சுட்டப்படாதபோது உவமைத் தொடர்கள் பின்பற்றப்படுவதைக் காணமுடிந்தது.

அதேபோல் ஒரு கருத்தினை நேரடியாகச் சொல்ல விரும்பும்போது விளித் தொடர்கள் அதிகம் பயன்படுத்தப்படுவதுண்டு. இதனால் கேட்போரது கவனம் ஈர்க்கப்படும்.

"ஏதுகா வஞ்சலை
நீதியார் நெஞ்சமே!
போதுவாய் புந்துகொண்
டோதுவா மோர்ந்தரோ!" [196]

"அமைய அருளனைத்தும் கூட்டுமேல் நெஞ்சே!
சுமைநீ பொறுப்பதெவன் சொல்வாய்? - நமையுமிந்த
நாடகமே செய்ய நயந்தால் அதற்கிசைய
ஆடுவம்வா! நாணம் ஏவம்!" [197]

இப்பாடல்களில் நெஞ்சை விளித்துப் பாடப்பட்டுள்ளன. இந்நிலை மிக அரிய நிலையாகவுள்ளது.

<u>5.1.6.9. வினாத்தொடர்கள்:</u> பாடலில் வினாக்களை அமைத்துப் பாடும் நடையும் காணப்படுகின்றது. ஒரே பாடலில் ஒன்றுக்கு மேற்பட்ட வினாக்களை அடுக்கிக் காட்டுவதும் உண்டு.

"தாரினை விருப்ப மாகத் தலைதனில் முடிக்குந் தோறும்
நாரினைப் பொல்லா தென்றே ஞாலத்தோர் தள்ளு வாரோ
சீரிய தமிழ்மா லைக்குட் செல்வர்குற் றாலத் தீசர்
பேரினா லெனது சொல்லைப் பெரியவர் தள்ளார் தாமே!" [198]

இப்பாடலில் இரண்டாம் அடியின் முடிவில் கேள்வி ஒன்று அமைந்துள்ளது. 'மாலையுடன் கூடிய நாரினை உலகோர் தள்ளுவார்களா? தள்ளமாட்டார்கள். அதுபோல் குற்றாலத்தீசர் பெயருள்ள என் நூலையும் தள்ளமாட்டார்கள்' என்ற பொருளில் பாடல் அமைந்துள்ளது. இதனை வினாவிடைப் பாங்கில்

அமைந்த நடை எனவும் குறிக்கலாம். மேலும் உவமஉருபு நோக்கிவரும் நிலையில் இத்தகைய வினா நிலைத் தொடர்களைக் கையாள்வதும் பொருத்தமாக அமையும்.

"நீடுபே ரறிஞர் தம்பா னிரம்பிய செவியி லோர்ந்து
பாடுபா வுடமோ வெய்ய படிக்கரை நாதர் கேட்பின்
நாடுவான் கங்கை தங்கு நல்லறிஞ் ருடமேல் மன்னோர்
ஆடுநீ ருமை தெள்ளை யெம்பம்மற் றவரென் சொல்வார்"[199]

என்ற பாடலில் வினா ஒன்று கேட்கப்பட்டு அதற்கு விடையும் வினா நிலையிலேயே அமைந்துள்ளது.

"விகாரம் புரிந்தும் விரவி வருமால்
பொருட்சுவை சொற்சுவை பொருந்திவந் திடுமோ?
எதுகை மோனை இசைந்துவந் திடுமோ?
அணிகள் பற்பல அடுக்கிவந் திடுமோ?"[200]

என்ற பாடலடிகள் ஒரே பாடலில் பல கேள்விகள் அடுக்கி வந்துற்றதைக் காட்டுகின்றன.

"பொங்குமாங் கடலில் புகுந்தன வெடுக்கப்
போயினேன் வெற்றிபெற் றேனா?
பூமியின் தருக்கள் செடிகொடி யோடும்
புல்லினைத் தொகைபெடுத் தேனா?
தங்கமொன் றெடுத்து பலவகை நகைகள்
தட்டயான் நல்லதட் டானா?
தாய்த்தமிழ் நூசை வாய்த்தனு ம் பற்றுத்
தந்ததால் துவிந்துவிட் டேனா?"[201]

என்று 'இயேசுகாவியம்' என்ற நூலின் அவையடக்கப் பாடலில் வினா அடுக்கு அமைந்திருப்பதைக் காணலாம்.

இத்தகைய வினாநடையில் பாடல்களை அமைப்பது உவமவுருபுகள் பயன்படுத்துவதைத் தவிர்க்கும் ஓர் உத்தியாகும்.

5.1.6.10. முன்னோர் மொழியும் மொழிப் பொருளும் போற்றுதல்:

முன்னோர் மொழியை எடுத்தாளுவதும் முன்னோர் மொழிப் பொருளை அடியொற்றி எழுதுவதும் அவையடக்கக் கவிதைகளிடைக் காணப்படுகின்றன. இவற்றில் பிற நூற்கருத்துகளை எடுத்தாளுதல் என்ற நிலையும், தமக்குமுன் அவையடக்கம் பாடியோரின் அவையடக்கக் கருத்துக்களைப் பின்பற்றுதல் என்ற நிலையும் உண்டு.

"பித்தனெனப் பேதையெனப் பத்தனெனப் பேசுகின்ற
மெத்த அவையடக்கம் வேண்டுவதோ? - நித்தம்
அரியகற் றாசற்றார் கண்ணும் தெரியுங்கால்
இன்மை அரிதே வெளிறு"[202]

என்ற பாடல் திருவள்ளுவர் காவியம் என்ற நூலில் இடம்பெற்றுள்ள அவை அடக்கமாகும். இதில் பின்னிரண்டடிகள் திருவள்ளுவரின் 'தெரிந்து தெளிதல்' எனும் அதிகாரத்தின் மூன்றாவது குறளாகும். இந்நூலின் அடுத்த பாடலில் 'அவை அஞ்சாமை' என்ற அதிகாரத்தில் வரும் 'கற்றார் கற்ற..." எனத் தொடங்கும் குறள் எடுத்தாளப் பெற்றுள்ளது.

திருத்தொண்டர் மாலை என்ற நூல் அவையடக்க உவமையாக,

"அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல்"

என்ற 'கல்லாமை' எனும் அதிகாரத்தில் வரும் முதற்குறளை அப்படியே தந்துள்ளது.

தமக்குள் அவையடக்கம் பாடியோரின் முறைப் பாடலையும் தம் நூலுக்கு அவையடக்கமாகத் தரும் வழக்கைச் சிலர் பின்பற்றியுள்ளனர்.

நல்லாப்பிள்ளை[203] வில்லிபுத்தூரரின் முதல் அவையடக்கப் பாடலையும் தாம் பாடிய மகாபாரத நூலுக்குத் தந்துள்ளார். அதுபோல் கலிங்கத்துப் பரணிக்கு உரை எழுதிய அ.வி. கன்னைய நாயுடு[204] தம் உரைநூலுக்கு அடியார்க்குநல்லாரின் அவையடக்கப் பாடலையும், வீரசோழியம் என்ற இலக்கண நூலுக்கு உள்ள அவையடக்கப் பாடலையும் அவையடக்கமாக அமைத்துள்ளார். இப்போக்கு இக்கால நூலாசிரியர்கள் சிலரிடம் காணப்படுவதாகும்.

முன்னோர் மொழிப்பொருளை அடியொற்றி எழுதும் வழக்குப் பல நூலாசிரியர்களால் பின்பற்றப்பெற்றுள்ளது. அவற்றில் பிற நூற்கருத்துக்களை அடியொற்றிப் பாடுதல் கவிஞர்களிடைப் பரவலாகக் காணப்படுவதாகும்.

நீருடன் கலந்த பாலைப் பிரித்தெடுத்துப் பாலை மட்டும் உண்ணும் சிறப்புப் பண்பு அன்னம் என்ற பறவைக்கு உண்டு என்பர். இதனை நன்னூலார்[205] தலைமாணாக்கருக்கு, இருக்கவேண்டிய பண்பாகச் சுட்டியுள்ளார். இக்கருத்தினைப் பின்பற்றித் தலைமாணாக்கருக்குப் பதிலாக அவையோர்க்கு இருக்கவேண்டிய பண்பாக அவையடக்கக் கவிஞர்கள் சுட்டியுள்ளனர்.

> ". . . . . நீர் பிரித் தன்ன முன்னூந்
> நூ யதீம் பால்போற் கொள்க"[206]

என்று அவையோரை நூலாசிரியர் கேட்டுக்கொள்வதுண்டு.

> "பால்தனை யுண்ண பறவை, ஏகமாய் நீர்தனை
> நீக்கியே வருந்திடும் நிர்மய மதனைபோலே"[207]

இத்தகைய கருத்து அவையடக்கச் செய்யுட்களிடைச் செல்வாக்குப் பெற்றுள்ளதைப் பாடல்கள் காட்டுகின்றன.

ஔவையாரின் உவமைகளைப் பின்பற்றி அவையடக்கப் பாடல்கள் அமைந்ததை 'இலக்கிய உவமைகள்' என்ற தலைப்பில் சுட்டப்பெற்றுள்ளன. அவரின் கருத்தை அடியொற்றி வேறுபொருட்களை உவமைப்பொருளாக்கிச் சிலர் பாடியுள்ளனர். 'மயில் ஆடுவதைக் கண்டு வான்கோழி ஆடுவதுபோல்' என்ற அவரது கருத்தை அடியொற்றியே,

"அன்ன மிசைக்கும் அற்புதத் தொனியை
தன்னிழுக் குரலாற் றாடவச் செய்யுங்
காக்கை நிகர்ப்ப"[208]

"அன்னநடை போற்காகம் அன்றுநடை கற்றதுதான்"[209]

"காகம், குயிலிசைப் பிசையுணர்த்துங் கொள்கையே போலும்"[210]

"கானிற் குயில்களைக் கண்டே மதர்ப்பிலையாய்க்
கவிக் குழுமந்தக் கலைகொக்கு மம்மானை"[211]

போன்ற உவமைகள் பாடப்பட்டன எனக் கருத இடமுண்டு.

அவையடக்கம் பாடியுள்ள முன்னோடிகளின் கருத்தை அடியொற்றி அவையடக்கம் பாடுதல் பெரிதும் போற்றிப் பின்பற்றப்பட்டுள்ளது. சான்றாகச் சில காட்டுவம்.

கம்பர் தாம் நூல் எழுதுவது 'பாற்கடல் முழுவதையும் நக்கிக் குடிக்க முயன்ற பூனையின் செயலை ஒத்தது' என்று அவையடக்கம் பாடியுள்ளார். இதனை அடியொற்றிப் பல புலவர்கள் அவையடக்கம் பாடியுள்ளனர்.

"ஓசை யுற்ற வரம்பெட் டும்கடல் கடக்க வில்லா
லோசை யுற்றொ ருகமிர்த முடைகட லென்ன நம்பிப்
பூசை யுற்ற தனைநக்கப் புக்கென வுளத்தைக் ஊண்டு
மாசை யுற்றா மனமே மருங்கதை யறைய வுற்றேன்"[212]

என்று வீரமாமுனிவர் பாடுவது கம்பரின் அடிச்சுவட்டைப் பின்பற்றியதாகும். கம்பர் பூனை என்று உவமித்ததை நாய், எறும்பு என்று உவமித்தும் பலர் பாடியுள்ளனர்.

'உயர்ந்த பாடல்களையே கேட்டுவந்த அவையோர்க்கு என் கவியைக் கேட்பதென்பது, யாழிசையையே கேட்டு இன்புறும் அசுணப் பறவையின் காதில் பறை ஒலிப்பதைப் போன்றிருக்கும்' என்ற கம்பரின் பாடற்கருத்தை,

"யாழ்பயில் தீஞ்சொ லசுணப் பறவைமுன்
வீழ்சும்மைத் தாய பறையன்ன - தாழ்வதா
மென்பாவி னோசைதா னின்றுரைதோய்ந்தவர்க்
கென்னன்மைத் தென்பே னிது"[213]

என்று வேறுநடையில் இக்கால ஆசிரியர் ஒருவர் தந்துள்ளார். இப்பாடல் இடம்பெறும் அதே நூலில் அடுத்ததாக இடம்பெறும் இரு பாடல்களிலும் சீவகசிந்தாமணியின் அவையடக்கக் கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

புகழேந்திப்புலவர் நளவெண்பாவிற்குப் பாடிய அவையடக்கத்தைச் சுப்ரமண்ய ஐயர் தமது 'இராமாயண வெண்பா'[214]வின் அவையடக்கமாக வேறு நடையில் தந்துள்ளார்.

ஒரே கருத்தைப் பலரும் எடுத்தாள்வது அவர்களிடையேயுள்ள நடை வேறுபாட்டினைக் காண உதவுகின்றது. பழமையைப் போற்றும் உள்ளம் அவையடக்கம் பாடுவோர்க்கு மிகுதி என்பதை மேற்சுட்டிய சான்றுகள்வழி உணரமுடிகின்றது.

5.2. தொகுப்புரை:

அவையோர்க் நன்மதிப்பினையும் அனுதாபத்தினையும் பெறும் வகையில் அவையடக்கப் பாடல்களில் சொற்கள் கையாளப்பெற்றுள்ளன.

அவையடக்கப் பண்புடன் அச்சம், பெருமிதம் போன்ற உணர்ச்சிகளைச் சொற்களின்வழி உணர்த்தும் போக்கும் காணப்படுகின்றது.

அவையடக்கப் பாடல்கள் பெரிதும் ஒலிநயம் மிக்கவையாக உள்ளன. அவற்றில் திரும்பத்திரும்பப் பெறும் ஓர் ஒழுங்கான ஒலியமைப்பினைக் காணமுடிகின்றது.

யாப்பிற்கு அடிப்படையாக ஒலிநயம் விளங்குவதை அவையடக்கப் பாடல்கள் காட்டுகின்றன. அவையடக்கத்தைச் சுருக்கமாக வெளிப்படுத்தக் குறள்வெண்பா பயன்பட்டது. பாடுபொருள் சிறப்பு முதலியவற்றைச் சுட்டி, அவையடக்கப் பண்பை உவமைவழிப் புலப்படுத்த வெண்பா, கலிவிருத்தம், அறுசீர் விருத்தம் ஆகியன உதவின.

நூலுக்குத் தொடர்பான செய்திகளையும் நூலுக்குப் புறம்பான செய்திகளையும் அவையடக்கத்தில் வெளிப்படுத்த விரும்பிய கவிஞர்கள் ஆசிரியப்பா, அதிக சீர்களையுடைய கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் போன்ற யாப்புகளைத் தலையாகக் கொண்டனர்.

கருத்திற்கு முதன்மை தந்து, புலவனின் உணர்ச்சிக்கு ஏற்ப யாப்புத் தேர்ந்தெடுக்கப்பெற்றப் பெற்றிப்புலனாகிறது. சிந்து முதலிய இசைப் பாடல்களிலும் கருத்திற்கு முதன்மை தந்து அவையடக்கம் பாடப்பட்டுள்ளன.

யாப்பமைப்பிற்கும் தொடையமைப்பிற்கும் எதுகையும் மோனையும் துணைபுரிவதை அவையடக்கப் பாடல்கள் வழி உணரமுடிகின்றது.

நீண்ட தொடர் நிகழ்ச்சிக் கற்பனைகளும், தனித்தக் கற்பனைகளும் அவையடக்கப் பாடல்களில் இடம்பெறவில்லை. உவமைவழிக் கற்பனைத் திறனைக் காட்டும் போக்குக் கடைபிடிக்கப்பட்டுள்ளது.

'உவமைக்களஞ்சியம்' என்று அழைக்கும் அளவிற்கு அவையடக்கப் பாடல்களில் உவமைகளின் ஆட்சி மிகுதியாகக் காணப்படுகின்றது. இணைப்பு உவமை முதலான பல்வேறு உவமைநயங்களைக்-கற்போரின் திறனுக்கேற்ப-காணமுடிகின்றன.

பல புதிய உவமைகளை அவையடக்கக் கவிஞர்கள் தமிழுலகிற்குப் படைத்துத் தந்துள்ளதைச் சான்றுகள் காட்டுகின்றன.

உருவகம் முதலான பிற அணிகள் அருகிய நிலையிலேயே காணப் படுகின்றன. சொற்களைக் கொண்டு சொற்சிலம்பமாடும் சொல்லணிகள் போற்றிப் பின்பற்றப்பெறவில்லை.

அவையடக்கம் பாடியோரின் நடைத்திறனை ஒலிக்குறிப்புச் சொற்கள், சொற்றொடர்கள் முதலியன வெளிப்படுத்திக் காட்டின.

நீண்ட அடைத்தொடர்கள் அவையடக்கத்தின் தனித்திறனைக் காட்டுவனவாகவுள்ளன. உவமைத் தொடர்களில் துணையினை அடிப்படையில் உவமஉருபுகள் பயன்படுத்தும் போக்குக் காணப்படுகின்றது.

பழமையைப் போற்றும் திறன் அவையடக்கக் கவிஞர்களிடை மிகுதியாக உள்ளது.

ஒரே கருத்தைப் பலர் பின்பற்றியிருப்பது புலவர்களின் நடை வேறுபாட்டைக் கணிக்க உதவும்.

சொல்லாட்சி, ஒலிநயம், யாப்பமைதி, கற்பனை, அணிகள், நடை போன்ற இலக்கிய உத்திகளைக் கொண்டு பாடப்பெற்ற அவையடக்கப் பாடல்களில், கவிஞர்களின் திறனுக்கேற்ப அவற்றின் இலக்கியத் திறன் அமைந்துள்ளதைச் சான்றுகள் காட்டுகின்றன.

சான்றெண் விளக்கங்கள்

1. க.ப. அறவாணன், கவிதையின் உயிர் உள்ளம் உடல், (தமிழ்க் கோட்டம், சென்னை, 1976, முதற்பதிப்பு), ப.261.
2. I.A. Richards, <u>Principles of Literary Criticism,</u> (Routledge & Kegan Paul Ltd., London, 1963, Reprinted), p.199.
3. ந. சுப்புரெட்டியார், பாட்டுத்திறன், (ஸ்டார் பிரசுரம், சென்னை, 1988, முதற்பதிப்பு), ப.153.
4. மு. வரதராசன், இலக்கியத்திறன், (பாரிநிலையம், சென்னை, 1965, இரண்டாம் பதிப்பு), ப.221.
5. வில்லிபாரதம், அவை.1.
6. ந. சுப்புரெட்டியார், முன்னூல், ப.197.
7. சிவஞான சுவாமிகள், காஞ்சிப் புராணம், அவை.3.
8. மெய்கண்டார், சிவஞானபோதம், (மெய்கண்ட சாத்திரம் பதினான்கு, சைவசித்தாந்த மகாசமாஜம், 1940, சென்னை), ப.7.
9. நெல்லூர் வீராணம் ஆசுகவிராசன், அரிச்சந்திரபுராணம், அவை.1.
10. இரா. பாண்டியன், பூங்கொடி (காவியம்)(செந்தமிழ்க் கலா நிலையம், மலேசியா, 1978), (அவையஞ்சல்), ப.2.
11. கச்சியப்ப சிவாசாரியார், கந்தபுராணம், அவை.3.
12. தத்துவராய சுவாமிகள், அமிர்தசாரம், கடவுள்வாழ்த்து, 7.
13. சொரூபானந்த சித்தி, சிவப்பிரகாசப் பெருந்திரட்டு (குறுந்திரட்டுடன்), பாயிரப்பனை, அறிஞரைப் புகழ்ந்தவையடக்கம், 5.
14. கயாதரர், கயாதரம், பாயி.2.
15. பரஞ்சோதி முனிவர், திருவிளையாடற் புராணம், அவை.2.
16. வீரமாமுனிவர், கித்தேரியம்மாள் அம்மானை, பாயிரம், அம்மானைத் தொடை, 14.
17. சம்பந்த சரணாலய சுவாமிகள், கந்தபுராணச் சுருக்கம், பாயி.12.

18. முத்தப்ப செட்டியார், ஜெயங்கொண்டார் சதகம், பாயி.4.

19. மு. வரதராசன், முன்னூல், ப.193.

20. பேராசிரியர் உரை, தொல். செய்.நூ.1 (கழக வெளியீடு, 1972), பக்.114-115.

21. மு. வரதராசன், முன்னூல், ப.193.

22. கம்பராமாயணம், அவை.1.

23. கடவுள் மாமுனிவர், திருவாதவூரர் புராணம், கடவுள் வாழ்த்து, 7.

24. பரஞ்சோதியார், சிதம்பரப் பாட்டியல், காப்பு.

25. க. கைலாசபதி, இ. முருகையன், கவிதைநயம், (பாட்டாளிகள் வெளியீடு, சென்னை-21, 1976, இரண்டாம் பதிப்பு), ப.59.

26. வை. சச்சிதானந்தன், மேலை இலக்கியச் சொல்லகராதி, (மெக்மில்லன் இந்தியா லிமிடெட், மெட்ராஸ், 1983, முதற்பதிப்பு), ப.118.

27. I.A. Richards, Op.Cit., 134.

28. மு. வரதராசன், முன்னூல், ப.194.

29. பேராசிரியர் உரை, தொல். செய்.நூ.78.

30. அட்டாங்க யோகக் குறள், பாயி.6, மேற்கோள்: எஸ். சௌந்தர பாண்டியன், தமிழில் அவையடக்கப் பாடல்கள், ப.270.

31. புகழேந்தி, நளவெண்பா, த.சி. பாயி.4.

32. வாகீசமுனிவர், ஞானமிர்தம், பாடல் 5.

33. சுவாமிநாத தேசிகர், இலக்கணக் கொத்து, பாயி.6.

34. இ. குற்றாலம், ரகுநாதர் பிள்ளைத்தமிழ், (கவிமணி இல்லம் வெளியீடு, நாகர்கோவில், 1967, இரண்டாம் பதிப்பு), பக்க எண் இல்லை.

35. கம்பராமாயணம், அவை.4.

36. உதயணகுமார காவியம், உஞ்சைக்காண்டம், பாடல் 3.

37. வரதுங்கராம பாண்டியர், பிரமோத்ர காண்டம், அவை.1.

38. நெல்லூர் வீரனென்னும் ஆசுகவிராயர், அரிச்சந்திர புராணம், பாயி.11.

39. பேராசிரியர் உரை, தொல். செய். நூ.149.

39. அ) என். சுப்புரெட்டியார், முன்நூல், ப.231.

40. தி. நடராசன் (பதி.), கட்டபொம்மு கும்மிப் பாடல், காப்பு அடி. 9-15.

41. சுப்பிரமணியர் பேரில் சிந்து, ஆனந்தக் களிப்பு, கண்ணி.9-11.

42. அருணாசலக் கவிராயர், இராம நாடகம், தரு.4, 6.

43. திருவிளையாடல் கீர்த்தனை செய்த சுப்பிரமணிய பாரதியார், திருமெய்யம் பெருமாள் ஸ்தலபுராணக் கீர்த்தனை, அவையடக்கம்.

44. 1) வீரமாமுனிவர், சித்தேரியம்மாள் அம்மானை, அம்மானைத்தொடை, 12-17.
    2) ஞானசவுந்தரி அம்மானை, அம்மானை வரி.56-64.
    3) தென்னீரையாம் பதியார், மூவர் அம்மானை, அம்மானை வரி.49-82.

45. C.T. Winchester, <u>Some Principles of Literacy Criticism,</u> The Macmillan Company, New York, 1950, Fourth Printing), p.265.

46. விளாதிமிர் மயாகோவ்ஸ்கி, கவிதை இயற்றுவது எப்படி? டாக்டர் டி.எஸ். நடராசன் (மொ.ஆ.), (நியுசெஞ்சுரி புக் உறவுஸ், சென்னை-98, 1980, முதற்பதிப்பு), ப.72.

47. மு. வரதராசன், முன்நூல், ப.206.

48. சீகாழி-தத்துவப் பிரகாச சுவாமிகள், தத்துவப்பிரகாசம், பாயி.7.

49. சேக்கிழார், பெரியபுராணம், அவை.1.

50. வில்லிபாரதம், அவை.1.

51. குருகூர்ச் சுப்பிரமணிய தீக்ஷிதர், பிரயோக விவேகம், பாடல் 50.

52. வண்ணக் களஞ்சியப் புலவர், குத்பு புராணம் என்னும் முகியத்தீன் புராணம், கடவுள் வாழ்த்துப் படலம், 35.

53. பாவலர் செந்தமிழ்ச் செல்வன், அண்ணா வைப்பியம் என்னும் அண்ணாகாவியம், பாயி.24.

54. திருவேங்கட உலா, அவையடக்கம்.

55. யசோதர காவியம், பாடல், 3.

56. சி. தேசிகவிநாயகம் பிள்ளை, மருமக்கள் வழி மான்மியம், அவை. அடி. 1-4.

57. பேராசிரியர் உரை, தொல்.செய்.நூ.92.

58. சேக்கிழார், முக்கா ய், அவை.1.

59. புலவர் குழந்தை, இராவணகாவியம், அவை.6.

60. C.T. Winchester, Op.Cit., p.119.

61. I.A. Richards, Op.Cit., pp.239-242.

62. Ibid., p.239.

63. கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள், கந்தபுராணம், அவை.1.

64. சுந்தரலிங்க முனிவர், திருப்பெருந்துறைப் புராணம், அவை.4.

65. ஸ்ரீ ஸம்பத்கிரி அச்சுதானந்த சுவாமிகள், அத்வைத கீர்த்தானந்த லகரி, மேற்கோள்: எஸ். சௌந்தரபாண்டியன், முன்னூல், ப.72.

66. "சொல்லுந போலவுங் கேட்குந போலவுஞ்
சொல்லியாங் கமையு மென்மனார் புலவர்"
பேரா. தொல். செய்.201.

67. தா.ஏ. ஞானமூர்த்தி, இலக்கியத் திறனாய்வியல் (ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, 1986, இரண்டாம் பதிப்பு), பக்.112-132.

68. C.T. Winchestor, Op.Cit., pp.123-124.

69. பேராசிரியர் உரை, தொல். செய்., நூ.1க்கு உரை.

70. தமிழண்ணல், சங்க இலக்கிய ஒப்பீடு - இலக்கியக் கொள்கைகள், (மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1975, முதற்பதிப்பு), ப.246.

71. Peter Dixon, Rhetoric, The Critical Idiom, John D. Jump (Founder Editor), Methuen, London and New York, 1984, Reprinted.

72. பேராசிரியர் உரை, தொல். உவம.நூ.1.

73. தண்டியலங்காரம், ப.38.

74. ரா. சீனிவாசன், சங்க இலக்கியத்தில் உவமைகள், (அணியகம், சென்னை-30, 1973, முதற்பதிப்பு), ப.2.

75. பேராசிரியர் உரை, தொல். உவம. நூ.3.

76. பாரதியார், பாரதியார் கட்டுரைகள், ப.251.

77. புறம்.251/1-2.

78. குருபாததாசர், குமரேச சதகம், அவையடக்கம், (ஆர்.ஜி.பதி கம்பெனி, 1972), ப.3.

79. கம்பராமாயணம், அவை.1.

80. யசோதர காவியம், பாடல், 3.

81. அருணந்தி சிவாசாரியார், சிவஞான சித்தியார் பரபக்கம், அவை.1.

82. சொரூபானந்த சித்தி, முன்னூல், பாடல் 5.

83. நம்பி திருவிளையாடற் புராணம், அவை.1.

84. ஆராவமுதாசாரியார், திருச்சுழியல் புராணம், பாயி.2.

85. பெருமாள்பட்டி வைத்தியலிங்கம் பிள்ளை, புதுவைத் தலபுராணம், அவை.2.

86. வேதநாயகம்பிள்ளை, நீதிநூல், அவை.1.

87. கா.ரா. கோவிந்தராச முதலியார், பன்னிருபாட்டியலுரை, முன்னுரை, ப.13.

88. அன்புநிலவன், கலைநிலவு, முன்னுரை (பக்கம் இல்லை).

89. ஐயம்பெருமாள் பிள்ளை, பாண்டி மண்டல சதகம், அவையடக்கம் (செந்தமிழ்ச் செல்வி, தொகுதி-19, பகுதி-8, 1921), ப.257.

90. பெருமாள்பட்டி வைத்தியலிங்கம்பிள்ளை, முன்னூல், அவை.4.

91. மேலது, அவை.3.

92. சுப்பிரதீபக் கவிராயர், கூளப்பநாயக்கன் காதல், பாடல் 7.

93. மறைஞானசம்பந்தர், சைவ சமய நெறி, பாயி.24.

94. மறைஞான சம்பந்தர், சிவதருமோத்தரம், பாயி.6.

95. ஸ்ரீ ஆண்டாள் பிள்ளைத் தமிழ், அவை.1.

96. திருமாலிருஞ்சோலைமலை, அழகர் பிள்ளைத் தமிழ், அவை.3.

97. சிவஞான சுவாமிகள், காஞ்சிப் புராணம், அவை.1.

98. மேலது, அவை.3.

99. திரிகூட ராசப்பக் கவிராயர், திருக்குற்றாலத்தல புராணம், அவை.5.

100. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, சிவஞானயோகிகள் சரித்திரம், அவை.4.

101. அருணந்தி சிவாசாரியார், சிவஞானசித்தியார் பரபக்கம், அவை.2.

102. உமறுப்புலவர், சீறாப்புராணம், அவை.1.

103. குணவீரபண்டிதர், நேமிநாதம், பாயி.2.

104. பிறையைச் சாந்தக் கவிராயர், அரங்கேச வெண்பா என்னும் நீதிசூடாமணி, அவையடக்கம் (கழக வெளியீடு, 1966), ப.3.

105. இராம. கோவிந்தசாமி பிள்ளை (பதி.), ஞானசாரம், பாடல் 7; சாகந்த கவேசர் புராணம், அவை.1.

106. காளியண்ணப் புலவர், பூந்துறைப் புராணம், அவை.2.

107. ரே. முத்துகணேசனார், நல்லுரை வெண்பா, நல்லைகொள்ளல்.

108. நம்பி திருவிளையாடற் புராணம், அவை.1.

109. அரசகேசரி, இரகுவம்சம், அவை.1.

110. கச்சாலையர், மகாபாரதச் சருக்கம், அவை.1.

111. எல்.என். பெருமாள், துறைப்புயல், அவை.1.

112. கவிக்குஞ்சரபாரதி, அழகர் குறவஞ்சி, பாயி.11.

113. பொ. நல்லதம்பிப்பிள்ளை, தேவிமான்மியம், பாயி.18.

114. தேவராச பாரதி, சடகோப திவ்விய சரித்திரம், அவை.1.

115. வேதநாயகம்பிள்ளை, நீதிநூல், அவை.1.

116. குண்டலகேசி, எஸ். வையாபுரிப்பிள்ளை (பதி.), புறத்திரட்டு, அறத்துப்பால், அதிகாரம்-2, பாடல் 13, (ப.3.).

117. நெல்லூர் வீரவெங்கும் ஆசுகவிராசன், அரிச்சந்திரபுராணம், அவை.2.

118. வரகவி இராமசாமிப் புலவர், வேலாபுரி கருப்பண்ணசாமி சதகம், அவையடக்கம்.

119. குருபாததாசர், குமரேச சதகம், மேலது, ப.3.

120. நா. வானமாமலை (பதி.), ஐவர் ராசாக்கள் கதை, அடி.20-71.

120. அ) வலங்கை மாலை, காப்பு அடி.144-182 (தட்டச்சில் பதிப்பித்தவர் டாக்டர் தசரதன், விரிவுரையாளர், ஆசிய சுவடியியல் நிறுவனம், திருவான்மியூர், சென்னை, 1989).

121. நம்பி திருவிளையாடற்புராணம், அவை.2.

122. த. வைத்தியநாத பிள்ளை, திருக்கச்சிக்குமரக்கோட்டத்து முருகப் பெருமாள் பிள்ளைத் தமிழ், அவை.1.

123. ச.மு. கந்தசாமிப்பிள்ளை, இராமலிங்க சுவாமிகள் திவ்விய சரித்திரக் கீர்த்தனை, அவை.1.

124. படிக்காசுப் புலவர், தண்டலையார் சதகம், அவையடக்கம் (கழக வெளியீடு, 1966), ப.4.

125. கமலை வைத்தியநாத தேசிகர், திருநல்லூர்ப் புராணம், பாடல்,16.

126. சுந்தரலிங்க முனிவர், திருப்பெருந்துறைப் புராணம், பாடல், 16.

127. தி. வீரபத்திர முதலியார், விருத்தப்பாவியல், அவை.6.

128. பெரியவன் கவிராயர், திருமலை முருகன் பள்ளு, அவையடக்கம், அருணாசலம் (பதி.), (1944, முதற்பதிப்பு), ப.7.

129. அநந்தகவிராயர், உத்தர ராமாயண நாடகம், அவை.2.

130. போசராச பண்டிதர், சரசோதிமாலை, அவையடக்கம்.

131. நெல்லூர் வீரனென்னும் ஆசுகவிராயர், அரிச்சந்திரபுராணம், அவை.2.

132. மேலது, அவை.2.

133. புலானந்தக் கவிராயர், சின்னமனூர் எனும் அரிகேசரி நல்லூர் புராணம், அவை.2.

134. எல்லப்பநாயனார், திருவாரூர்க்கோவை, அவையடக்கம்.

135. எஸ். பெருமாள் சுவாமிகள், ஸ்ரீபாரதசார வெண்பா, அவையடக்கம்.

136. விராலிமலை வேலவர் காதல், வரி.21.

137. சிவஞான சுவாமிகள், காஞ்சிப்புராணம், அவை.3.

138. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, பட்டீச்சுரப் புராணம், அவை.3.

139. சி. தேசிகவிநாயகம் பிள்ளை, மருமக்கள் வழி மான்மியம், அவை. அடி.27-32.

140. ஔவையார், வாக்குண்டாம் என்னும் மூதுரை, பாடல் 14.

141. குருபாததாசர், முன்நூல், ப.3.

141. அ) காரைக்குடி கிருட்டிணன், பாரத அம்மானை, அவை.அடி.

142. திருக்குறள், 401.

143. குமரபாரதியார், திருத்தொண்டர் வெண்பா, பாடல் 2.

144. குமரபாரதி, திருத்தொண்டர் மாலை (பெரியபுராணச் சரித்திர வெண்பாமாலை), பாயி.3.

145. வில்லிபாரதம், அவை.2.

146. வேதநாயகம்பிள்ளை, நீதிநூல், அவை.3.

147. கம்பராமாயணம், அவை.1.

148. சேக்கிழார், பெரியபுராணம், அவை.2.

149. வடமலையப்பபிள்ளை, மச்சபுராணம், அவையடக்கம்.

150. நச்சாலையர், மகாபாரதச் சுருக்கம், அவை.1.

151. பேராசிரியர் உரை, தொல். செய். நூ.95.

152. நற்றிணை, 28/3-4.

153. சிவஞானசுவாமிகள், காஞ்சிப்புராணம், அவை.3.

154. கா.ர. கோவிந்தராச முதலியார், பன்னிருபாட்டியலுரை, முன்னுரை, ப.13.

155. ம. சீராளன் (பதி.), காஞ்சிமன்னனம்மானை, (தஞ்சை சரசுவதி மகால் நூலகம், 1970), பக்.1-2.

156. வேதநாயகம்பிள்ளை, நீதிநூல், அவை.2.

157. வண்ணக்களஞ்சியப் புலவர், புத்புராணம் என்னும் முகியத்தீன் புராணம், அவை.3.

158. இரா. பாண்டியன், முன்நூல், ப.2.

159. ரெ. முத்தகணேசனார், நல்லுரை வெண்பா, நல்லன கொள்ளல்.

160. தண்டியலங்காரம், நூ.36.

161. வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார், நாடகவியல், பாடல், 7.

162. கலைவாணன், உதயம், அவை.1-12.

163. கம்பராமாயணம், அவை.5.

164. தண்டியலங்காரம், நூ.42.

165. சொக்கலிங்கம் பிள்ளை, சிக்கல் நவநீதேசுவரசுவாமி குறவஞ்சி, பாடல் 5.,

166. வீரமாமுனிவர், தேம்பாவணி, அவை.2.

167. அ.ர. சிங்கார வடிவேலன், சங்க இலக்கிய உவமைகள், ப.120.

168. தோலாமொழித்தேவர், சூளாமணி, பாயி.3.

169. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, சீகாழிக்கோவை, காப்பு.3.

170. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, திருக்குடந்தைத் திரிபந்தாதி, உ.வே. சாமிநாத ஐயர், (பதி.), மீனாட்சி சுந்தரம் பிள்ளை பிரபந்தத் திரட்டு, பாடல், 2130.

171. மேற்கோள்: மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு, 15ஆம் நூற்றாண்டு, ப.371.

172. தா.ஏ. ஞானமூர்த்தி, இலக்கியத் திறனாய்வியல், ப.183.

173. ஜெ. நீதிவாணன், நடையியல், (மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1983, முதற்பதிப்பு), ப.28.

174. பண்டிதராசர், தட்சிண கைலாசபுராணம், அவை.1.

175. உமறுப்புலவர், சீறாப்புராணம், அவை.3.

176. வடிவழகிய நம்பிதாசர், குலசேகரப் பெருமாள் ஆழ்வார் பிரபந்தம், அவையடக்கம், ஆழ்வார்கள் வைபவம், ப.249,

177. திருக்குருகூர் மகிழ்மாறன் பவனிக்குறம், அவையடக்கம்.

178. அண்ணாமலை கல்வித் தேவர், தமிழாதிக்கதை, அவையடக்கம்.

179. சிதம்பரம் சென்னமல்லையர், சிவசிவ வெண்பா, (குறள் வெண்பா நூற்கோவை, கழக வெளியீடு, 1967), ப.7.

180. வேங்கடாசலம் பிள்ளை, திருவேட்டீசுவரர் புராணம், அவையடக்கம்.

181. கம்பராமாயணம், அவை.3.

182. குணவீரபண்டிதர், நேமிநாதம், பாயி.2.

183. அம்பிகாபதி, அம்பிகாபதிக் கோவை, காப்பு.

184. அம்பலவாணக் கவிராயர், திருமயிலைக் கோவை, அவையடக்கம் (டி. சந்திரசேகரன் (பதி.), திருமயிலைப் பிரபந்தங்கள், சென்னை அரசு சுவடிகள் நூலகம், 1953), ப.47.

185. ஸ்ரீ ஆண்டாள் பிள்ளைத்தமிழ், அவையடக்கம்.

186. முத்தப்பச் செட்டியார், ஜெயங்கொண்டார் சதகம், பாயி.4.

187. வெண்மணி நாராயண பாரதியார், திருவேங்கட சதகம், பாடல், 102.

188. ஸ்ரீமகாபாரத நாடகம், அவையடக்கம், மேற்கோள்: எஸ். சௌந்தர பாண்டியன், முன்னூல், ப.54.

189. கச்சி மலைக்கொழுந்து நாவலர், திருத்தொண்டர் சதகம், (திருவாவடுதுறை ஆதீன வெளியீடு, 1968), பக்.1-2.

190. திருவெவ்வெய் நல்லூர் இராசப்பன், ஸ்ரீகோவிந்தக் குறவஞ்சி, அவையடக்கம் (Bulletin of the Government Manuscripts Library, Madras) Vol.XVII, Pt.

191. அரங்க சீனிவாசன், அரங்கச் சிலேடை வெண்பா, காப்பு.7.

192. கா.ர. கோவிந்தராஜ முதலியார், முன்னூல், ப.13.

193. சிவஞானசுவாமிகள், காஞ்சிப்புராணம், அவை.3.

194. ஞானசாரம், பாடல் 7.

195. ஆண்டிப்புலவர், ஆசிரிய நிகண்டு, பாயி.3.

196. வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார், மானவிஜயம், பாயி.10.

197. பி. சுந்தரம்பிள்ளை, மனோன்மணீயம், அவையஞ்சின நெஞ்சொடு கிளத்தல். (ஜெ ஸ்ரீ சந்திரன் (பதி.), ப.19.

198. திரிகூட ராசப்பக் கவிராயர், குற்றாலக் குறவஞ்சி, பாயி.9.

199. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, மண்ணிப்படிக்கரைப் புராணம், அவை.2.

200. சி. தேசிகவிநாயகம் பிள்ளை, மருமக்கள் வழி மான்மியம், அவை., அடி.

201. கண்ணதாசன், இயேசுகாவியம், பாயிரம் (1985, இரண்டாம் பதிப்பு), ப.1.

202. அ. கிருஷ்ணசாமி நாயுடு, திருவள்ளுவர் காவியம், அவை.1.

203. நல்லாப்பிள்ளை, மகாபாரதம், அவை.1-3 (முத்துராமலிங்கத் தேவர் (பதி.), 1911) ப.3.

204. ஆ.வி. கன்னையா நாயுடு, செயங்கொண்டாரின் கலிங்கத்துப் பரணி உரை, முகவுரை, ப.5.

205. நன்னூல், நூ.38.

206. பரஞ்சோதி, திருவிளையாடற்புராணம், அவை.1.

207. வி.ஏ. தியாகராஜ செட்டியார், காமதகனமென்னும் போட்டாபோட்டி இறந்த கட்சி சவால்லாவணி, சபை வணக்கம்.

208. சிறுமணவூர் முனிசாமி முதலியார், மானிட ரகசியம், அவை. அடி. 21-23. மேற்கோள் எஸ். சௌந்தரபாண்டியன், முன்னூல், ப.242.

209. விராலிமலை வேலவர் காதல், வரி.21.

210. வேதநாயகம்பிள்ளை, நீதிநூல், அவை.1.

211. தென்வீரையர்ம்பதியார், ஐவர் அம்மானை, வரி.69-70.

212. வீரமாமுனிவர், தேம்பாவணி, அவை.1.

213. ச.வே. சர்மா, தடாதகை பிராட்டியார் திருமண வெண்பாமாலை, அவை.1.

214. சுப்ரமண்ய ஐயர், இராமாயண வெண்பா, பாயி.13.

இயல் ஆறு

அவையடக்கப் பாடல்கள் காட்டும் செய்திகள்

உள்ளடக்கம்

6. அலைபடக்கப் பாடல்கள் காட்டும் செய்திகள்

ஒரு நாட்டின் நிலையை அந்நாட்டின் இலக்கியவளம் கொண்டு அறிய முற்படுவதுண்டு. காலமாற்றமும் இலக்கிய மாற்றமும் ஒருசேர நிகழ்வன என்பதால் இலக்கியத்தை ஆராய அது தோன்றிய சமுதாயத்தில் தரவுகளைத் தேடுவதும், சமுதாயத்தை அறிந்துகொள்ள இலக்கியத்துள் சான்றுகளைக் காண முயலுதலும் தேவையாகின்றன. பண்டைத்தமிழரின் சமுதாயம், அரசியல், பொருளாதாரம் ஆகியவற்றைச் சங்க இலக்கியம் முதலியன வெளிப்படுத்தியுள்ளதை அறிவோம்.

காலந்தோறும் எழுதப்பெற்றுவந்துள்ள அலைபடக்கப் பாடல்கள் அவை தோன்றிய காலச்சூழல்களை முழுமையாகப் பிரதிபலிக்கவில்லை. எனினும் கற்போர் உய்த்துணரும் வகையில் சில குறிப்புகள் பரவலாகக் காணக்கிடக்கின்றன. அவற்றைப் பொதுநிலையில் வைத்து ஆராய்தல் இவ்வியலின் நோக்கமாகும்.

6.1. காலப்பின்னணி:

அலைபடக்க மரபு ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் உரியதன்று. அது நீண்ட காலப் பின்னணியைக் கொண்டது. தமிழகத்தின் கால வரலாற்றினைப் பல நிலைகளில் அறிஞர்கள் கணக்கிட்டுள்ளனர். அவர்களுள் கா. அப்பாத்துரை,

"1. முத்தமிழ் மூவேந்தர் காலம் (கி.மு.3000-கி.பி.300)
2. பாண்டிய பல்லவப் பேரரசர் காலம் (கி.பி.300-900)
3. சோழப் பேரரசுக் காலம் (900-1279)

4. பிற்காலப் பாண்டியப் பேரரசுக்காலம் (1190-1310)
5. நாயக்க மன்னர் காலம் (1358-1736)
6. பிரிட்டிஷ் ஆட்சிக் காலம் (1600-1947)
7. இன்றைய புதுமலர்ச்சிக் காலம் (1947-...)"[1]

எனப் பகுத்துக் காட்டியுள்ளார்.

இக்காலக் கூறுகளுள் அவையடக்கப் பாடல்கள் பாண்டிய பல்லவப் பேரரசர் காலத்தின் இறுதிப் பகுதியிலிருந்து இன்றைய புதுமலர்ச்சிக் காலம் வரையான காலக் கூறுகளைக் கொண்டவை (கி.பி.9ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் எழுதப்பெற்ற சீவகசிந்தாமணியிலிருந்துதான் அவையடக்கப் பாடல்கள் தமிழில் கிட்டியுள்ளன என்று முன்னர்க் கூறப்பெற்ற செய்தி இவண் நினைவுகூறத்தக்கது).

6.2. அவையடக்கப் பாடல்கள் காட்டும் செய்திகள்:

அவையடக்கப் பாடல்களைப் பொறுத்தமட்டிலும் பாடல்கள் பல; பாடப்பெற்ற காலமும் பல நூற்றாண்டுப் பரப்பின. எனவே ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தின் அடையாளங்களை அவற்றில் காணவியலாது. ஆதலால் அவையடக்கப் பாடல்களை ஒட்டுமொத்தமாக வைத்து, அவை காட்டும் செய்திகள் பின்வரும் பிரிவுகளில் அடக்கிக் காட்டப்பெறும்.

1. தமிழின் பெருமை
2. நூல் வரலாறு
3. சமுதாயச் செய்திகள்
4. சமயச் செய்திகள்
5. புராணச் செய்திகள்

6.2.1. தமிழின் பெருமை: இடைக்காலத்திற்குப் பின்னர்த் தமிழில் வடமொழியின் செல்வாக்கு மிகுந்தது. அதனால் தமிழின் அருமை குன்றத் தொடங்கியது என்பது பொதுக்கருத்து.

> "சங்ககால மக்கட்குத் தமிழ்மொழி இயல்பானது. ஆதலின் அதன் அருமையை அறியும் வாய்ப்பில்லை. இடைக்கால மக்கட்குத் தமிழ் அருந்தமிழ், தீந்தமிழ், ஒண்டமிழ், வண்டமிழ், ஏன்? நிழற்பெருமை வெயிலில் நின்றபின் என்றாங்கு, பிறமொழித் தாக்கம் தமிழருமையை உணர்த்திற்று. 'இனிமையும் நீர்மையும் தமிழெனலாகும்' எனவும், 'தமிழ் தழீஇய சாயலவர்' எனவும், 'என்றுமுள தென்றமிழ் இயம்பி' எனவும், 'பார்படுப முத்தம் பதிபடுவ முத்தமிழ்' எனவும் யாண்டும் தமிழுணர்ச்சியை ஊட்டிக்கொண்டே இருந்தனர்"[2]

என்பர் வ.சுப. மாணிக்கம்.

அவ்வகையில் வடமொழி முதலான பிறமொழிகளில் நன்கு புலமை பெற்றிருந்த தமிழ்ப் புலவர்கள் அவையடக்கப் பாடல்கள்வழி தமிழின் பெருமையை உலகுக்கு உணர்த்தியுள்ளனர். அவையோர் உயர்வு, நூற்சிறப்பு முதலியவற்றை எடுத்துரைக்கும்போது தமிழின் பெருமையைச் சுட்டும் போக்குக் காணப்படுகின்றது.

'கானார் மலயத் தருந்தவன் சொன்னகன்னித்தமிழ்நூல்'[3], 'முத்தமிழ்த்துறை யின்முறை போகிய வுத்த மக்கவிகள்'[4], 'நற்றமிழ்'[5], 'செந்தமிழ்'[6], 'வண்டமிழ்'[7], 'அருந்தமிழ்'[8], 'குறையா நிறைமொழிச் சொற்றமிழோர்'[9], 'பெரியபசுஞ் செந்தமிழ்'[10], 'தண்டமிழ்வாணர்'[11], 'இயற்றமிழ் நூற்புலவர்'[12], 'மாசிலாத் தமிழ்மாக்கதை'[13], 'தனித்தமிழ் வல்லநீரார்'[14], 'தூய்தமிழ், இன்தமிழ்'[15], 'தெய்வதச் செந்தமிழ்ப் புலவர்'[16] எனக் காலந்தோறும் தமிழின் பெருமையை அவையடக்கக் கவிஞர்கள் எடுத்துரைத்துள்ளனர். நாட்டுப்புறக் கதைப் பாடல்களிலும்

அருந்தமிழ்[17], முத்தமிழ்[18], நற்றமிழ்[19] என்று தமிழ்ச் சிறப்புரைக்கப் பட்டிருத்தலைக் காணமுடிகின்றன.

பிறமொழி அறிந்தோர்க்கே தமிழ்ச் சிறப்பு நன்கு புலப்படும் என்பதற்கு அவையடக்கக் கவிதைகள் சான்றாகத் திகழ்கின்றனர். பிறமொழி அறியாத தமிழ்மொழி மட்டுமே அறிந்தவர்கள் தமிழை மதிப்பிடுவதைவிட, இவர்களின் மதிப்பீடு தமிழுக்குப் பெருமை சேர்ப்பதாக அமையும். இத்தனை யளவிற்கு வடமொழி முதலானவற்றை அவையடக்கம் பாடியோர் சிறப்பித்துக் கூறவில்லையெனினும் யாண்டும் குறைத்துக் கூறினரில்லை. பொதுவாக மொழிக் காழ்ப்பின்மையைப் போற்றி வளர்த்துள்ளமையை அவையடக்கப் பாடல்களின் போக்கில் காணமுடிகின்றது.

6.2.2. நூல் வரலாறு:

எழுதப்படும் நூலின் ஆசிரியர் பெயர் முதலான செய்திகளைத் திரட்டித் தருதல் இலக்கிய வரலாற்றிற்குப் பயன்படும். அவ்வகையில் நூலாசிரியர் பெயர், நூற்பெயர், வழி, யாப்பு, கேட்போர், காரணம், காலம், களம் போன்ற செய்திகள் அவையடக்கப் பாடல்களில் சுட்டப்பெற்றுள்ளன. இவை வெளிப்படை யாகவும் கற்போர் உணர்ந்துகொள்ளும் வகையிலும் அமைந்துள்ளன.

6.2.2.1. நூலாசிரியர்: சுயாதரம் என்ற நூலின் ஆசிரியரான கயாதரர் தம் பெயரை அவையடக்கப் பாடலில் சுட்டியுள்ளார்.

"பேதையர் பித்த ரறியாத பாலர்சொற் பேதங்கொள்ளார்
ஏதிலுங் குற்றந் தெரியார் பெரியவ ரோங்கிடப
கேதனன் பற்று மறவாத தேவைக் கயாதரன்தொல்
வேதியன் சொற்ற வுரிச்சொற் பனுவலு மேம்படுமே"[20]

இதில் ஆசிரியர் தம் பெயரைக் 'சுபாகரன்' எனக் குறிப்பிட்டுள்ளதைக் காணலாம். மேலும் தாம் 'உரிச்சொல் பனுவல்' எழுதுவதாகவும் விளக்குகின்றார்.

இடைக்காலத்து மருத்துவ நூல்கள் பல தேரையர் பெயரில் வழங்குகின்றன. அவை அனைத்தையும் தேரையர் எழுதினாரா என்பது கேள்விக்குறியாகவுள்ளது. சில நூல்களில் இடம்பெறும் அவையடக்கப் பாடல்களில் 'தேரன்' என்ற பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

"செயுமுறை தெரிகிலாத் தேரன்நா யாடியேன்
உயுமுறை வயித்திய வுரைத்தமிழ்க் கரிசல்"[21]

"-யவையடக்க
கத்திகையா மென்னுங் கவிபோல் தேரன்வெண்பாக்
கத்திகையா மோனையும் கம்"[22]

"தேரனிவ னென்பார் சிரித்து"[23]

என்ற அவையடக்கப் பாடலடிகளில் தேரையர் தம் பெயரைத் 'தேரன்' என்று சுட்டியிருப்பது நோக்கத்தக்கது. எனவே இவை இடம்பெறும் நூல்களைத் 'தேரையர்' எழுதினார் எனக் கருத இடமுண்டு.

அதுபோல் ஜெயங்கொண்டார் வழக்கம் (சதகம்) என்ற நூலின் அவையடக்கத்தில் 'முத்தப்பன்' என்ற ஆசிரியர் பெயர் சுட்டப்பெற்றுள்ளது[24].

ஆசிரியர் பெயருடன் தந்தை, ஊர், குலம், குரு ஆகியனவும் சுட்டப் பெறுதலுண்டு. ஆசிரியர் பெயரில்லாது இவை தனித்தும் குறிப்பிடப்பட்டுள்ளன.

"என்களங்கம் யாவையு நீக்கி யினிதருளி
நன்களந்தை நூலோடு நாட்டுவரால்-தென்களந்தை

மன்பெயரா வம்புகழான் வச்சணந்தி யாழுவன்
தன்பெயரா னாட்டுந் தமிழ்"[25]

என்ற பாடல் வச்சணந்திமாலையின் அவையடக்கமாகும். இதில் குருவின் பெயர் வச்சணந்தி என்றும் அவர் தெக்கணந்தை என்ற ஊரினர் என்றும் ஆசிரியர் உரைத்துள்ளார். வச்சணந்தி என்பது ஆசிரியர் பெயரன்று என முன் இயலில் விளக்கப்பெற்றுள்ளது.

திருவரச நாடகம் என்ற நூலின் அவையடக்கத்தில்,

"முன்னமே மொழிந்தோர் பாதம் முடிதனில் அடியேன் சூடி
கன்னலின் கழுகு மேடை சூழ்ந்த சூழக்கா நல்லூர்
வன்னிய குலத்தோன் தாண்டவ ராயன்றான் கவிதை கூற
என்னதான் பிழைசெய் தாலும் என்பிழை பொறுத்தி டீரே"[26]

என்று ஆசிரியர் தம்பெயரைத் தாண்டவராயன் என்றும், தாம் சூழக்கா நல்லூரினர் என்றும் வன்னிய குலத்தவர் என்றும் வெளிப்படையாகச் சுட்டியுள்ளார்.

இதுபோல் மாகபுராண அம்மானையின் ஆசிரியர் வீரபத்திரன் என்ற தம்பெயரையும் முத்துவீரப்பன் என்ற தம் தந்தையார் பெயரையும் அவை அடக்கத்தில் தந்துள்ளார்[27]. வேதாளக்கதை என்ற நூலின் அவையடக்கம் நூலாசிரியர் 'கவிக்கஞ்சியன்' என்ற விருதுப் பெயர் பெற்றதையும் அமையப் பாடப்பட்டுள்ளது[28].

உலகுடைய பெருமாள் கதை என்ற கதைப் பாடலின் ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை. அதன் அவையடக்கப் பகுதியில் வரும்,

"சிறந்த மாத்தூருடைய வென்ன குருநாதன்
... ...
எப்புவியும் புகழும் குளிந்தையும் (ழ) (ழ)
இரவி கோளிலிக் கதை செப்பிவேன்"[29அ]

என்ற அடிகளைக் கொண்டு இதன் ஆசிரியர் 'ஸ்ரீரவிகோளன்' என்றும், அவர் மாத்தூரைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவரின் மாணாக்கர் என்றும் முடிவுக்கு வருகின்றார் இதன் பதிப்பாசிரியர்[29ஆ].

இருபதாம் நூற்றாண்டுக் அவையடக்கப் பாடல்களிலும் ஆசிரியர் பெயர் சுட்டும் போக்குப் பரவலாகக் காணப்படுகின்றது.

"புன் கவிதரு நெல்லை ஸ்ரீராமானுசன்"[30]

என்று மகாத்மா காந்தி காவியத்தின் ஆசிரியர் தம் பெயரையும் ஊரையும் விளக்க அறிவித்துள்ளார்.

அண்ணா அறுபது என்ற நூலின் ஆசிரியரான நக்கீரன்,

"-செந்தமிழ்ச்
சான்றோர் பொறுப்பரென் தன்மையால் நக்கீரன்
தோன்றிய வண்ணஞ் சொல்வேன்"[31]

என்று அவையடக்கத்தில் தம் பெயரைச் சுட்டியுள்ளார்.

6.2.2.2. <u>நூற்பெயர்:</u> நூற்பெயரை அவையடக்கத்தில் குறிப்பிடும் போக்குப் பெரிதும் போற்றப்பட்டுள்ளது. கற்போர் உணர்ந்து கொள்ளுதல், நேரடியாகச் சுட்டுதல் ஆகிய இரு நிலை காணப்படுகின்றன.

கம்பர் தம் நூற்பெயரான ஸ்ரீராமாயணத்தை,

"ஆசை பற்றி யறையலுற் றேன்மற்றிக்
காசில் கொற்றத் திராமன் கதையரோ"[32]

என்று உணர்த்தியுள்ளார். அதுபோல் புகழேந்தி,

" -பைந்தொடையில்
தேன்பாடுந் தார்நளன்றன் தெய்வத் திருக்கதையை
யான்பாட லுற்ற விது"[33]

என்று நளவெண்பா நூலிலும், சேக்கிழார்,

"அளவி லாத பெருமை யராகிய
அளவி லாவடி யார்புகழ் கூறுகேன்"[34]

என்று பெரியபுராணத்திலும், பெரும்பற்றப் புலியூர் நம்பி,

"ஏய பத்தி முனிவ ரியம்பிய
சேய சொக்கன் திருவிளை யாடலை"[35]

என்று திருவிளையாடற் புராணத்திலும் கற்போர் நூற்பெயரை உய்த்துணரும் வண்ணம் உரைத்துள்ளனர்.

கச்சியப்பச் சிவாசாரியர் தம் நூற்பெயரை, 'மேலையோர், போற்று கந்த புராணம தென்பதே'[36] என்று நேரடியாகச் சுட்டும் போக்கைப் பின்பற்றியுள்ளார். 'அன்ன பாரதந் தன்னை யோரறிவிலே யுரைப்பது'[37] என்பதன்வழி வில்லிபுத்தூரார் நூற்பெயரைச் சுட்டுவார்.

இதுபோல் மலைக்கொழுந்து நாவலர் 'திருத்தொண்டர் சதகம்'[38] என்ற தம் நூற்பெயரையும் மாம்பழக் கவிச்சிங்க நாவலர், 'சிங்கார ரசமஞ்சரி'[39] என்று நூற்பெயரையும் அவையடக்கத்தில் சுட்டியுள்ளனர். மேலும் குருபாததாசர் குமரேச சதகத்திலும்[40], வரகவி இராமசாமிப் புலவர் வேலாபுரி கருப்பண்ணசாமி சதகத்திலும்[41], புலவர் குழந்தை இராவணகாவியத்திலும்[42] நூற்பெயரை அவையடக்கத்தில் நேரடியாகச் சுட்டியுள்ளனர்.

பவளக்கொடிமாலை என்ற கதைப்பாடலின் அவையடக்கப் பகுதியில் 'பவளக்கொடி மாலை பாடத்துணிந்தேன் யான்'[43] எனவரும் அடியால் நாட்டுப்புறக் கதைப் பாடல்களிலும் இப்போக்குக் காணப்படுவதை அறிய முடிகின்றது.

6.2.2.3. நூல்வந்த வழி: தொல்காப்பியச் சிறப்புப் பாயிரம் நூல் வந்த வழியை 'முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணி'[44] என்று குறிப்பிடுகின்றது. இதனைப் பிற்காலத்தில் அவையடக்கத்துள் உரைக்கும் நிலைக்குக் கவிஞர்கள் உயர்த்தியுள்ளனர். முன்னூல், முன்னூலாசிரியர், முன்னூல்மொழி ஆகியன அதில் விளக்கப்படுதலுண்டு.

கம்பர் முன்னூலாசிரியரான வால்மீகியை,

"பொய்யில் கேள்விப் புலமையி னோன்புகல்
தெய்வ மாக்கவி மாட்சி தெரிக்கவே"[45]

என்று சிறப்பித்துள்ளார். வில்லிபுத்தூரார்,

"மன்னி லாரண நிகரென வியாதனார் வகுத்த
எண்ணி லாநெடுங் கதையை யானறிந் தியம்பல்"[46]

என்பதன் மூலம் தம் முன்னூலாசிரியர் வியாசர் என்பதைக் குறிப்பிடுவார்.

கந்தபுராணம்[47], மாறனலங்காரம்[48], கணக்கதிகாரம்[49], சேதுபுராணம்[50], மாயூர புராணம்[51], பூந்துறைப் புராணம்[52], கன்னகி வெண்பா[53], இராவண காவியம்[54] போன்றவை அவையடக்கத்தில் நூல்வந்த வழியைச் சுட்டியுள்ளன.

தமக்குமுன் நூல் செய்தோரின் பட்டியலை அவையடக்கத்துள் தரும் போக்குச் சில நூல்களில் காணப்படுகின்றது.

"உம்பர்மொழி யதனாலே வால்மீகிக்
காவியமா புறதி செய்தார்
சம்புரா மாயணமாய்க் காளிதா சனுதலோர்
சமத்தாய்ச் செய்தார்
கம்பர்தமிழ்க் கவிசெய்தார் அருணா
சலம்நாட கமதாய்ச் செய்தார்
அம்புவியி லவர்களுடன் விரவிடுவர்
மின்மினிபோல் யான்சொல் வேனே!"[55]

என்ற அவையடக்கப் பாடலில் வடமொழியில் வால்மீகி எழுதியதைப் பின்பற்றிக் காளிதாசர், கம்பர், அருணாசலக் கவிராயர் ஆகியோர் நூல் செய்த வரலாறு சுட்டப்பட்டுள்ளது.

"பண்டு வியாதமுனி - லக்ஷங் கிரந்தமாகப்
பாரில் விளங்கும்படிச் செப்பினார்-பின்
அன்பும் வில்லிபுத்தூ ரார்-நல்லாப் பிள்ளைபதினா
றாயிரங் கவியால் நிரப்பினார்
தொண்டரவர் சொன்னகதை-நாடகமாகக் கோத்து
சொல்லுகிறே னட்பு-தோற்றாச் சொற்களைச் சேர்த்துக்
கண்டவென் குற்றத்தைக்-கட்டறவே தீர்த்து
கல்லாப் பிள்ளை யொன்றுங்கள்-கடைக்கண்ணினாலே பார்த்து"[56]

இப்பாடலில் வியாசர் இலட்சம் கிரந்தத்தில் பாரதம் பாடியதை வில்லிபுத்தூரார், நல்லாப்பிள்ளை ஆகியோர் பதினாறாயிரம் பாடலாகப் பாடினர் என்ற வரலாறு சுட்டப்பெற்றுள்ளது.

மதுரீசதகம்[57], திருத்தொண்டர் சதகம்[58], குடிக்குத்துறை குமரன் பிள்ளைத் தமிழ்[59] போன்ற நூல்களின் அவையடக்கப் பாடல்களிலும் இப் போக்குக் காணப்படுவதாகும்.

முன்னூல், முன்னூலாசிரியர், முன்னூல்மொழி, முன்னூற் பாடல் எண்ணிக்கை, இலக்கியவகை ஆகியனவும் அவையடக்கத்தில் விளக்கப்படுதல், கற்போர் நூலைக் கற்குமுன் நூல் எழுந்த வரலாற்றினை ஓரளவு அறிந்து கொள்ள உதவும்.

6.2.2.4. யாப்பு: நூல் இன்னமுறையில் யாப்பெற்றது என்பதைத் தெரிவிக்கும் வகையில் பல அவையடக்கப் பாடல்கள் அமைந்துள்ளன.

இறையனார் அகப்பொருளுரையில்,

> "யாப்பு என்பது நூல் யாப்பு; நூல் யாக்குமிடத்து நான்கு
> வகையில் யாக்கப்படும். தொகுத்தும் விரித்தும் தொகை
> விரியாகவும் மொழிபெயர்த்துமென"

என்று உரைக்கப்பெற்று அதற்குத்,

> "தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்த்
> ததர்ப்பட யாத்தலோ டனைமர பினவே"

என்ற தொல்காப்பிய நூற்பா மேற்கோளாகக் காட்டப்பெற்றுள்ளது[60].

இதனடிப்படையில் வியாசபாரதத்தை,

> "முன்சொ லாகிய சொல்லெலா முழுதுணர் முனிவன்
> றன்சொ லாகிய மாப்பெருங் காப்பியந் தன்னைத்
> தென்சொ லாலுரை செய்தனிற்"[61]

என்று வில்லிபாரதம் தமிழில் மொழிபெயர்த்ததைக் குறிக்கின்றது.

> "தனக்கிணை தானே யான சம்பந்தன் கமலை வேந்தன்
> கனக்கவே யென்பா லன்பாற் கருணையைத் திருத லாலே

புணர்க்கரும் காந்தந் தன்னைப் புரைத்தனன் சுருக்கி யல்லா
லெனக்குமிக் கனைக்கு நாடி லெத்தனை தூர மாமால்" 62

என்று கந்தபுராணச் சுருக்கமும்,

"அரியபல முனிவர்கள் தங்கள்தங் கட்பெயரி *(ன்)
னாற்செய்த தருமநூலில்
இனிமைதரும் ஆசார விவகார ப்ராய்ச்சித்தம்
என்று(ம்)முக் காண்டத்தில்
எழிலான விவகார காண்டத்தி லேசில
எடுத்(து)இயற் றமிழினாலே
மனுநீதி சதகம்என்(று) ...." 63

என்று மநுநீதிச் சதகமும்,

"வள்ளுவனா ரன்னமுதல் வகுத்த மனுநீதி
தெள்ளு தமிழ்க்கடலில் சிற்றகப்பை முகந்தாப்போல்
மாலை சதக மனுநீதி சாரமென்று
ஞாலமதிற் கவிஞர் நவின்றார் பலநூலால்
பன்னும் பலநூலில் பாடும் பொருளதனை
எண்ணியெந்தன் சிந்தைக் கிசைந்தே யறிந்தமட்டும்" 64

என்று மநுநீதிக் காதலும்,

"அகத்தி யர்க்குநேர் வில்லிபுத் தூரனல் லையன்
தொகுத்த வைந்தாஞ் சுருதியைத் தொண்டனேன் சுருக்கல்" 65

என்று மகாபாரதச் சுருக்கமும்,

"வடமொழி யிருந்த தெய்வ
மாயூர மான்மி யத்தைத்
திடமொழி பெயர்த்தெ டுத்துச்
செந்தமிழ் மொழியா லின்பம்
படமொழி யென்ன ...." 66

என்று மாயூரப் புராணமும் தொகுத்தல் மொழிபெயர்த்தல் ஆகிய நூல் யாப்பைச் சுட்டுகின்றன. புராணங்கள் பெரிதும் மொழிபெயர்ப்பின்பாற்படும் என்பதை அவையடக்கப் பாடல்கள் வழி உணரமுடிகின்றது.

நூல் யாப்புச் சுட்டப் பெறுவதால் ஆசிரியனின் முயற்சி அவையோர்க்குப் புலப்படும் என்பது காரணமாக அமைகின்றது.

6.2.2.5. நுதலிய பொருள்: நூல் நுதலிய பொருளை அவையடக்கத்தில் குறிப்பிடும் வழக்குக் காணப்படுகின்றது.

நீலகேசியின் அவையடக்கம் நூல் நுதலிய பொருளைச் சுட்டும் பாங்கில் உரைக்கப்பட்டுள்ளது.

"ஆய்நீல வுண்க ணவளா யடங்காமை செய்யும்
பேய்நீல கேசி பெரியோனறங் கொண்ட பின்னைத்
தீநீல வுள்ளந் திரிந்தே மதிரு வத்தளாய்
மாஞால மெல்லா மறமாற் றியமாட்சியளா"[67]

எனவருவது நீலகேசியின் நுதலிய பொருளாகும்.

நூற்பொருட்கள் சிலவற்றைச் சுட்டும் வகையிலும் சில பாடல்கள் அமைந்துள்ளன.

"..... மராமர மேழ் தொளை
எய்த வெய்தவற் கெய்திய மாக்கதை"[68]

என்று கம்பராமாயணமும்,

"தொகுதி கொண்டிடு சூர்கிளை சாய்த்தவன்
றகுதி கொண்ட தனிக்கதை சாற்றுகேன்"[69]

என்று கந்தபுராணமும்,

"இளம்பருவ விளையாட்டை நோக்குறித் திருவுரு
  உடத்தாசை மிகுதியுண்டாம்
என்பதால் வித்தார கவிக்கெலா முன்னுற
  இயன்றபின் னைக்கவிதைக்
குளந்தையிற் சோமேசர் மார்பிலைக் கொங்கையாற்
  குழைவித்த அமுதவல்லி
கோமளப் பருவத்தில் அருகொன்று தாதியர்சொல்
  கூற்றெனப் புகழ்தலுற்றேன்"[70]

என்று குளத்தூர் அமுதாம்பிகை பிள்ளைத் தமிழும் நூற்பொருள் குறிப்புகளை அவையடக்கத்தில் பெற்றுள்ளன.

இக்கால அவையடக்கப் பாடல்களிலும் நூற்பொருட் குறிப்புகள் சுட்டப்பெறுதலுண்டு.

"ஆசறு காட்சி ஈசுர கிருட்டினன்
பரமத மறுப்பும் உருவகக் கதைகளும்
விரவா தொரீஇ வித்தகர் வியக்கும்
சட்டிதந் திரத்தின் சாரம் ஈதென"[71]

என்று சாங்கிய காரிகையும்,

"மருமக் கள்வழி யென்னும் வனத்தில்
புலிகள் குழுமோர் புல்வாய் போல
வலையிற் படுமோர் மணிப்புறாப் போல
கொள்கொம் பற்றுத் தவள்கொடி போல,
ஒருத்தி ஏழை ஒருதுணை யில்லாள்
தானும் மக்களும் தமிய ராகிப்
பொறியும் கலங்கிப் போதலும் கெட்டுப்
புலம்பும் பொழுது, புண்ணிய சீலரே!"[72]

என்று மருமக்கள் வழி மான்மியமும் அவையடக்கத்தின்வழி நூல் நுதலிய பொருள் சுட்டுகின்றன.

6.2.2.6. கேட்போர்: நூல் அரங்கேற்றம் செய்யும் காலத்து அவைக்கண் இருந்து கேட்போர், நூலைச் செய்து தருமாறு கேட்டோர், நூலைக் கேட்டதற்குத் தகுதியுடையோர் என்ற மூன்று பொருள் முடிபுகளைக் 'கேட்போர்' என்னும் சொல் தருவதாகச் சுட்டுவர்[73]. இவர்களுள் முன்னிருவர் வெளிப்படையாக அவையடக்கத்தில் சுட்டப்பெற்றுள்ளனர். மூன்றாமவர் நேரடியாகக் குறிப்பிடப்படவில்லை. இவன் நூலைக் கற்கும் மாந்தரை நூலைக் கேட்டற்குத் தகுதியுடையோராகக் கொள்ளவேண்டும்.

யாப்பருங்கலக் காரிகையின் அவையடக்கத்தில், 'தேனார் கமழ்தொங்கல் மீனவன் கேட்ப...'[74] என்று உரைக்கப்பட்டிருப்பதன்வழி பாண்டிய மன்னன் ஒருவன் கேட்டதற்கு இணங்க இந்நூல் யாக்கப்பட்டிருக்கின்றது எனத் தெளியலாம். இப்பாண்டிய மன்னன் யார் என்பது அறியப்படவில்லை.

கச்சியப்ப சிவாசாரியர் காஞ்சிப் பெரியோர்கள் கந்தன் கதையை நூல்முறை ஆக்கித் தருமாறு கேட்டதால் தாம் கந்தபுராணம் பாடுவதாக அவையடக்கத்துள் சுட்டுவார்[75].

"அன்னமுனி வரன்களிற் சிவஞான யோகிவர லாறு முற்று
நன்னவர்வள முறப்பாடித் தருகவெனச் சொற்றமொழி
நலத்தை யோர்ந்தே"[76]

என்று மீனாட்சி சுந்தரம் பிள்ளை சிவஞான யோகிகள் வரலாற்றைச் சிலர் கேட்பதற்கு இணங்கப் பாடுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பகவத்கீதா என்ற நூலில், 'மன்னருள் விஜயன் கேட்ப'[77] என்றும், பாண்டியகேளிவிலாச நாடகத்தில்,

"எந்நாளும் விஜயம் எய்திடும் தீரன்
செந்திரு மார்பன் சிவாஜீந்த்ர பூபதி
ஐந்தரல் விலாசம் இயம்புவீர் என்ன..."[78]

என்றும் கேட்போர் சுட்டப்பட்டுள்ளனர். இதில் பாண்டியகேளிவிலாச நாடகம் 'தஞ்சையை சென்ற நூற்றாண்டில் ஆண்ட மகாராஷ்டிர மன்னனான சிவாஜியின் விருப்பப்படி இயற்றப்பட்டது' எனப் பதிப்பாசிரியர் குறிப்பிட்டுள்ளார்[79].

அவையிலிருந்து கேட்போர் அவையோராவர். அவையோர் பெயர் வெளிப்படையாகச் சுட்டப்படுவதில்லை. முத்தமிழ்த் துறையின் முறைபோகிய உத்தமக்கவிகள், புலமைமிக்கோர், செந்தமிழ்ப் புலவர்கள், கற்றுணர்ந்த கவிசர் என்ற அவையோரின் சிறப்புகள் மட்டும் தருதலைப் பெரிதும் காண முடிகின்றன.

6.2.2.7. காரணம்: நூல் செய்து தருமாறு கேட்பதும் நூல் செய்யக் காரணமாக அமையும். இதனைக் 'கேட்போர்' என்ற மேற்கண்ட தலைப்பில் கண்டு தெளியலாம். இவையன்றி, அன்பு, ஆசை, ஆர்வம், காதல், துணிவு ஆகிய காரணங்களாலும் நூல் யாக்கப்பெற்ற முறையைச் சில பாடல்கள் விளக்கியுள்ளன.

கம்பர் 'ஆசைபற்றி அறையலுற்றேன்'[80] என்று கூறுவதும், தோலாமொழித் தேவர் சூளாமணியில் 'காதல் கிளரத் தமிழ் நூற்கலுற்றேன்'[81] என்பதும் நூல்செய்யக் காரணமாகக் கொள்ளப்படும். இதுபோல், பெரியபுராணம்[82], வில்லிபாரதம்[83], தேம்பாவணி[84], பழநித்தலபுராணம்[85], திருவெவ்வுளூரந்தாதி[86], வண்ணச்சரபம் அருள்மிகு தண்டபாணி சுவாமிகள்

பிள்ளைத் தமிழ்[87] போன்றவைபற்றின் ஆசிரியர்கள் ஆசை, ஆர்வம், துணிவு ஆகியவற்றின் காரணங்களால் நூல் பாடப்புகுவதாக அவையடக்கத்தில் சுட்டியுள்ளனர்.

6.2.2.8. காலம், களம்: நூல் இயற்றிய காலம் அவையடக்கப் பாடல்களில் தெளிவாகக் குறிப்பிடப்பெறவில்லை. பாடல்களில் இடம்பெறும் மன்னர்களின் பெயர்கள், முன்னூல், முன்னூலாசிரியர் ஆகிய செய்திகளைக் கொண்டு நூல்களின் காலத்தைக் குறிப்பாக உணரமுடிகின்றது.

யாப்பருங்கலக்காரிகை, பகவத்கீதா, பாண்டியகேளிவிலாச நாடகம் ஆகியவற்றின் அவையடக்கத்தில் சுட்டப்படும் மன்னர்களின் பெயர்கள் நூலின் காலத்தைக் குறிப்பாக உணர்த்துகின்றன.

உத்தரராமாயண நாடகம் அருணாசலக் கவிராயர் இராமநாடகம் செய்ததை அவையடக்கத்தில் பெற்றுள்ளதால், இந்நூல் இராமநாடகம் எழுதப்பெற்றதற்குப் பின்னர் இயற்றியிருத்தல் வேண்டும் என்பது புலனாம்.

அவையடக்கப் பாடல்களில் காலம், களம் ஆகியன மிக அருகிய நிலையில் சுட்டப்பெற்றுள்ளன.

"உம்பர் போற்ற வுமையுடன் மேவிய
கம்பர் காஞ்சியிற் கட்டுரைத் தேனியான்"[88]

என்று கச்சியப்ப சிவாசாரியார் கந்தபுராணத்தைக் காஞ்சியில் இயற்றியதாகக் குறிப்பிடுவதுபோல் வெளிப்படையாகப் பிற நூல்களின் அவையடக்கப் பாடல்களில் களம் சுட்டப்பெறவில்லை.

நூலாசிரியர் பெயர் முதலான செய்திகளை அவையடக்கத்தில் சுட்டப் பெறுவது இலக்கிய வரலாறு எழுதுவோர்க்குப் பேருதவியாக அமைகின்றது.

மேலும் இச்செய்திகளை நூலாசிரியரே தருவதால் அதில் உண்மைத் தன்மை வெளிப்படும். இதனைத் தற்சிறப்பாகக் கொள்ளக் கூடாது. பல நூல்களின் பாயிரங்கள் பல ஆண்டுகள் கழித்து எழுதிச் சேர்க்கப்படுவதுமுண்டு. இதனால் சில செய்திகள் சர்ச்சைக்குரியனவாக அமைகின்றன. அதிக அறிமுகமற்ற நிலையில் அரங்கேறும் கவிஞர்கள் தம்மையும் தம் நூற்பொருளையும் அடக்கத்துடன் அறிமுகப்படுத்திக் கொள்ளுதல் இயல்பே. இதனைத் தற்சிறப்பு எனல் பொருத்தமாக அமையாது. எனவே நூலாசிரியனால் அவையடக்கத்துடன் வெளிப்படுத்தும் இச்செய்திகளில் உண்மைத் தன்மையுள்ளதால் நூல் வரலாற்றிலும் உண்மைத்தன்மை வெளிப்படும்.

6.2.3. சமுதாயச் செய்திகள்: இலக்கியம் என்பது அது தோன்றிய காலத்துச் சமுதாயத்தைப் பிரதிபலிக்கும் அறிவுச் சாதனமாகக் கருதப்படுகின்றது. சமுதாயத்தின் ஓர் உறுப்பாகக் கருதப்படும் கவிஞன் தன்னைச் சுற்றியுள்ள உலகத்திலிருந்தே தனது படைப்பிற்குரிய கருப்பொருட்களைப் பெறுகின்றான்.

காலந்தோறும் எழுதப்பெற்ற அவையடக்கப் பாக்களில் அவை தோன்றிய காலத்துச் சமுதாய அமைப்பு மற்றும் வாழ்க்கைமுறைகள் தெளிவாகச் சுட்டப் பெறவில்லை என முன்னர்க் கூறப்பட்டது. எனினும் சில குறிப்புகள் காணக் கிடக்கின்றன. அவற்றைக்கொண்டு தமிழ்ச் சமுதாயத்தின் சில கூறுகளை வெளிக்காட்ட இயலும்.

6.2.3.1. சாதிமுறையும் தொழில்களும்: தொல்காப்பியத்தில் அந்தணர், அரசர், வைசிகர், வேளாண் என்ற நால்வகை மக்கள் கூறப் படுகிறார்கள்[89]. காலந்தோறும் தோன்றிவந்த பல்வகை இலக்கியங்கள் இந்நால்வகை மக்களைப் பற்றிய குறிப்புகளை விளக்கமாகத் தந்துள்ளன.

அவையடக்கப் பாடல்களில் அரசர், வணிகர், வேளாளர், தச்சர், பொற்கொல்லர், கொல்லர், வைத்தியர், குயவர் எனப் பல்வேறு வகையான மக்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இவை பெரிதும் உவமைவழி உணர்த்தப்படுவன.

கம்பர் தாம் பாடிய அவையடக்கப் பாடலில் தச்சர் என்ற ஒரு வகையினரைக் காட்டியுள்ளார்.

"அறைபு மாடரங் கும்படப் பிள்ளைகள்
தரையிற் கீறிடிற் றச்சருங் காய்வரோ"[90]

என்பதில் வரும் 'தச்சர்' என்பதற்குச் 'சிற்பி' எனப் பொருள் கொள்ளப் படுகின்றது.

'கொல்லுலை வயிரவூசி'[91], 'வெள்ளை மதியினன் கொல்லத் தெருவதனில் ஊசிவிற்கும் வினைய தாமே'[92] என்பன 'கொல்லர்' என்ற ஒருவகையினர் ஊசி முதலான கூர்மையான பொருட்களைச் செய்தனர் என்ற குறிப்பைத் தருகின்றன.

'திருவெண்காட்டடிகள் புராணம் என்னும் பட்டணத்துப் பிள்ளையார் புராணம்' என்ற நூலில் சிவபெருமான் வைசியர் உருவில் வந்த செய்தி காணப்படுகின்றது[93]. வைசியர் எனப்படும் வணிகர் பற்றிய குறிப்புகள் பல அவையடக்கப் பாடல்களில் காணப்படுகின்றன. சான்றாக, 'குபேரன் செல்வத்தில் சிறந்தவன்; எனினும் அவனிடம் சென்று வணிகர்கள் தங்கள் பொருட்களை விற்பதில்லையா?'[94] என்ற பொருளில் திருவான்மியூர்ப் புராணத்தின் அவையடக்க உவமை அமைந்துள்ளது. இதில் வணிகர் என்போர் பொருட்களை எடுத்துச்சென்று பிறரிடம் விற்பனை செய்பவர்கள் என்ற குறிப்புப் பெறப்படுகின்றது.

"ஏரெழு பதச்சேழ மயிடக்க மும்போத்தி
  விருளும் பெறிஞம்பு
மெழில்கெழு வைபந்து கிளைணர்ந்பின் பின்சென்ற
  தேம்க்முறை முதவின்ற
பார்மிசை . . . ."[95]

என்ற பாடலடியில் 'இறைவன் ஒரு வேளாளன் பாடலைக் கேட்க விரும்பி அவனது ஏர்ப்பின் சென்றதால் நடையில் சேறுபடிந்தது' என்ற செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. வேளாண்மைத் தொடர்பான செய்திகள் பிற பாடல்களில் காணக்கிடைக்கவில்லை.

'குயவர் மண்வினைக் கண்டகோடி யளபல குயிற்றும்'[96] என்பதில் மண்ணைக் கொண்டு பல பொருட்களை உருவாக்கும் குயவர் அறிவிக்கப்பட்டது.

"திக்க னைத்தினும் பார்நந் தீவிடுஞ் செங்கோல்
புக்க நன்னெறித் திகரிமன் னவர்களும் பொருந்தத்
தக்க கவியுஞ் செய்துண வறிகிலான் சரிபோன்
மிக்க செந்தமிழ்ப் புலவர்மு வியான்வினம் புவதே"[97]

என்ற சீறாப்புராணத்தின் அவையடக்கம் மன்னர்கள் பற்றிய குறிப்பையும் அவர்களின் பண்பையும் சுட்டுகின்றது. மேலும் 'உழைத்து உண்ணாதவன் அக்காலத்தில் மிகவும் தாழ்வாகக் கருதப்பட்டிருக்கிறான்' என்ற செய்தியும் பெறப்படுகின்றது.

மருத்துவர்கள் 'வாகடப் பனுவலைக் கற்றவர்கள்' என்றும் அணிகள் செய்வோர் 'வேடகம் செய்பவர்கள்' என்றும் ஆண்டாள்பிள்ளைத் தமிழின் அவையடக்கத்தில் குறிக்கப்பட்டுள்ளன[98]. குறவர், பரதவர், முத்துக்குளிப்போர் போன்றோரும் அவையடக்கப் பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அவையடக்கப் பாடல்களில் காணப்படும் மேற்கண்ட குறிப்புகள் அவ்வக்காலத்துச் சமுதாயத்தில் இருந்த சாதிமுறையையும் அவர்களின் தொழில்களையும் குறிப்பால் உணர்த்துகின்றன. ஒரு குறிப்பிட்ட காலத்தின் சாதிப் பிரிவுகள், சமுதாய அமைப்புகள் முழுமையாகக் காணக்கிடைக்கவில்லை.

6.2.3.2. குடும்பம்:

"பண்டை இந்தியாவில் ஒரு குடும்பமானது, பெற்றோர்கள், குழந்தைகள், பேரக் குழந்தைகள், சித்தப்பா, பெரியப்பா, தாய்மாமன், தாயுடன் பிறந்தவர்களின் கணவன்மார்கள், அவர்களின் மரபில் வந்தவர்கள், தத்து எடுக்கப்பெற்ற குழந்தைகள் ஆகியவர்களைக் கொண்டதாக இருந்தது"[99]

என்று பண்டைய இந்தியாவில் கூட்டுக்குடும்ப முறை நிலவி வந்ததாகக் கூறப்படுகின்றது. இதில் பெற்றோர், குழந்தை, கணவன்-மனைவி ஆகியோர் பற்றிய குறிப்புகள் மட்டும் அவையடக்கப் பாடல்களில் சுட்டப்பட்டுள்ளன.

'பெற்றோர் தாம் பெற்றெடுத்த குழந்தைகள் தவறு செய்தாலும், மழலை மொழியில் ஏதேனும் உளறினாலும் அதனைக் குற்றமாகக் கருதாது மனம்மகிழ்ந்து ஏற்றுக்கொள்வர்'[100] என்ற குறிப்பு காலந்தோறும் பாடப் பெற்ற அவையடக்கப் பாடல்களில் காணக்கிடைப்பதாகும்.

கணவன், மனைவி உறவில் மனைவியர் கணவன்மார்களுக்குப் புத்தி கூறுதல் ஏற்றுக்கொள்ளப் பெறாததாக இருந்திருக்கின்றது. இந்நிலை அரிச்சந்திரபுராணம் தோன்றிய காலத்துச் சமுதாயத்தில் காணப்படுவதாகும். அதில்,

"புருடனார்க்கு ஏந்திழையார் பொருளுரைப்பது போலுள்ளது, பெரியோர்முன் சிறியோனாகிய நான் நூல் கூறுவது"[101]

என்ற பொருளில் அவையடக்கம் பாடப்பெற்றுள்ளது. அக்காலச் சமுதாயத்தில் பெண்கள் ஆண்களோடு சமமாக மதிக்கப்பெறவில்லை என்பதை இச்சான்று காட்டுகின்றது.

இவைபற்றிக் குடும்பம் தொடர்பான பிற செய்திகள் காணப்படவில்லை.

6.2.3.3. ஊனமுற்றோர்: முடவர், குருடர், செவிடர், ஊமையர் ஆகிய ஊனமுற்றோரின் செயல்கள் காலந்தோறும் அவையடக்கப் பாடல்களில் காட்டப்பட்டு வருகின்றன. இவர்களின் நிலை சமுதாயத்தில் இரங்கத்தக்கதாகவும் நகைப்பிற்குரியதாகவும் எண்ணப்பட்டு வருவதைப் பாடல்கள் காட்டுகின்றன.

"புவிமிசை விசும்பி னீடும் பொருப்பிடை முடவ னேறிச்
சுவைதரு தேனை யுண்ண வெண்ணுவான் றனிதல் போலும்"[102]

என்பு பெரும்பற்றப் புலியூர்நம்பி முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படும் நிலையைச் சுட்டுவார்.

"கண்ணுள் ளார்க்குக், குருடனார் வழிகாட்ட லென"[103]

என்று அரிச்சந்திர புராணமும்,

"கலைமுழு துணர்ந்தவர்க்கு வாய்பேசா மூங்கையுரை
கற்பித்தாற்போல்"[104]

என்று அழகர் குறவஞ்சியும்,

"முடவரே யாடவந்தார் முன்னின்று பார்த்து வக்கத்
திடமொடு மூகர்பாடச் செவிடர் கேட்டதிச யிக்கக்
கடலுல கினிற்கண் டென்ன"[105]

என்று நீதிநூலும் திருடர், வம்பர், செவிடர், மூடர் ஆகியோரின் நிலையை அவையடக்கத்துள் தந்துள்ளன.

மேலும், இரகுவம்சம்[106], கந்தபுராணச் சருக்கம்[107], உடையார் கதை[108], திருக்கச்சிக்குமரகோட்டத்து முருகப்பெருமான் பிள்ளைத் தமிழ்[109], சிங்காரரசமஞ்சரி[110], தேவிமான்மியம்[111], மகாத்மாகாந்தி அடிகளின்மீது நெஞ்சவிடுதூது[112] போன்ற நூல்களின் அவையடக்கத்திலும் ஊழுற்றோர் நிலைகள் பேசப்பெற்றுள்ளன.

6.2.3.4. திருடர்: பண்டைக் காலத்தில் 'எயினர்' என்றழைக்கப் படும் 'பாலை' நிலத்தினர் ஆநிரைகளைக் கவர்ந்து வாழ்ந்தனர் என்பதற்குச் சான்றுகள் உள்ளன[113]. பிற்காலத்தில் இவர்கள் கள்வர் என்று அழைக்கப் பட்டிருக்க வேண்டும். எயினர்களுக்கும் இவர்களுக்கும் வேறுபாடு உண்டு. இவர்கள் எல்லா நிலத்திலும் இத்தொழிலை மேற்கொள்வோராய் இருப்பர்.

> ".....பிறர்தம் பொருளே வௌவுந்
> திருடனார் மேலவருக் கறுவுரைப்ப
> தென....."[144]

என்று நெல்லூர் வீரவெண்பும் ஆசுகவிராசன் அவையடக்கம் பாடும்போது குறிப்பிட்டுள்ளார். இது அவர் காலச் சமுதாயத்தில் திருடர்கள் உலவி வந்திருப்பதைக் காட்டுகின்றது. மேலும் அவர்கள் சமுதாயத்தில் மதிக்கப் படாமல் இருந்தவர் என்பதையும் சுட்டுகின்றது.

திருடர் பற்றிய குறிப்பு எட்டெட்டந்தாதி என்ற நூலில் அவையடக்கத்தில் 'திருடன் மெய்போல் தப்புரை பேசுங் கொடியேன்"[115] என்று சுட்டப் பெற்றுள்ளதும் எல்லாக் காலத்தும் திருடர்கள் சமுதாயத்தில் ஊடுருவியிருந்ததைக் காட்டும்.

6.2.3.5. கணிகையர்: கணிகையர் பற்றிய செய்திகள் அவையடக்கப் பாடல்களில் யாண்டும் காணப்பெறவில்லை. எனினும் திருவெண்காட்டடிகள் புராணத்தில்[116] சிவன் ஆனந்தை எனும் கணிகைக்கு மணிக்கடகம் அளித்த செய்தி இடம்பெறுவதால் அக்கால வழக்கில் பரத்தமை இருந்திருக்கின்றது என்பதைப் புலப்படுத்துகின்றது.

6.2.3.6. விளையாட்டுகள்: நாளும் ஓடியாடி உழைக்கின்ற மக்களுக்கு அதில் ஏற்படும் சலிப்பிலிருந்து விடுதலை கிட்ட விளையாட்டுகள் முதலியன இன்றியமையாதனவாக அமைகின்றன. உடற்பாதுகாப்பு, மனவமைதி, மகிழ்ச்சி ஆகியவற்றிற்கு விளையாட்டுகள் துணைபுரிகின்றன. வயதிற்கேற்பவும் மக்கள் வாழும் புவியியல் அமைப்பிற்கேற்பவும் விளையாட்டுகள் அமையும்.

6.2.3.6.1.பெரியோர் விளையாட்டு: 'வட்டாடுதல்' என்ற விளையாட்டு சங்க இலக்கியம்[117], திருக்குறள்[118] ஆகியவற்றில் இடம்பெற்றுள்ளது. இவ்விளையாட்டைப் பற்றிய குறிப்பு, பிற்கால அவையடக்கப் பாடல்கள் இரண்டில் காணமுடிந்தது.

'பல்துறை அறிவின்றித் தாம் நூல் எழுதப் புகுதல் அரங்கின்றி வட்டாடுதலைப் போன்றுள்ளது'[119] என்று திருத்தொண்டர் மாலையின் அவையடக்கத்தில் ஆசிரியர் குறிப்பிடுகின்றார். திருத்தொண்டர் வெண்பா[120] என்ற நூலின் அவையடக்கப் பாடலிலும் இவ்விளையாட்டுக் குறிக்கப்பெற்றுள்ளது.

6.2.3.6.2.சிறுவர் விளையாட்டுகள்: சிறுவர் சிறுமியர் தெருவில் விளையாடும் விளையாட்டுகள் பெரிதும் பேசப்படுகின்றன. இவை பெரியோர் வாழ்க்கை நிகழ்ச்சிகளின் பிரதிபலிப்பாக உள்ளன. பெற்றோர் செயல் குழந்தைகளைப் பாதிக்கின்றது என்பதைச்சிறுவர்களின் விளையாட்டுகள் காட்டுகின்றன.

'சிற்பிகள் சிற்பத்தை வடிக்க விதிப்படிக் கோடுகள் வரைந்து செய்வர். இதனைக் கண்ட சிறுவர் தரையில் கீறிவிளையாடுவதைக் கண்டு சிற்பிகள் (தச்சர்) கோபம் கொள்வதில்லை'[121] என்ற பொருளில் கம்பர் சிறுவர் செயலைக் காட்டுவார்.

"தெருவில் சிறுபிள்ளை மணல்குவித்து
சிறப்பாய்க் கோலம் இடுவது"[122]

என்றும்,

"மனைக்குநிகர் என்று சிறுபெண் மணல்வீடு கட்டுவது"[123]

என்றும்,

"திருந்தாத மொழிச்சிறுவர் சிறுவீட்டில்
மணற்சோறு செய்து வைத்தே
விருந்தாக வச்சோறு மட்கறியும்
படைத்துண்ண விரும்பி வாழும்
வருந்தாமல் மகிழ்ந்துதந்தை தாயர்நன்றே
உவப்பெய்தும் வழக்கால்"[124]

என்றும்,

"சிறுபாலர் மணற்குவித்து வீடுகட்டுந் திறமைதா னென்கவிதை"[125]

என்றும் சிறுவர் விளையாட்டுகள் குறிக்கப்பெறுகின்றன.

மணற்கோவிலுக்கு விழா எடுத்தலும், தாழைமடலில் தோணி செய்து மழைநீரில் மிதக்கவிட்டு விளையாடுதலும் இக்கால அவையடக்கப் பாடல்களில் காட்டப்பெறுவன.

சிறுவர், சிறுமியர் தாம் வாழும் சூழலில் நடக்கும் செயல்களைத் தம் விளையாட்டுகள் வழிப் பிரதிபலிக்கின்றனர் என்பதைச் சான்றுகள் காட்டுகின்றன.

6.2.3. பிறகுறிப்புகள்: படிக்கத் தொடங்கும் இறைவன் திருநாமத்தை மணலில் எழுதச் சொல்லிப் பழக்குதல் என்பது கந்தபுராணம் தோன்றிய காலத்தின் வழக்கமாக உள்ளது. இதனை ஆசிரியர் 'இறைநிலமெழுதல்'[126] எனக் குறிப்பிட்டுள்ளார்.

கல்வியில்லாதவர்கள் சமுதாயத்தில் மிகத் தாழ்வாகக் கருதப்பட்டு இருக்கின்றனர் என்பதைக் 'கற்றுணர்செந் தமிழ்ப்புலவர் கல்வியென்ப தோர்சிறிதுங் கல்லா நாயேன்'[127] என்று புலவர்கள் தங்களைத் தாழ்த்திக் கொள்வதன் மூலம் உணரமுடிகின்றது.

கிளிகளுக்குப் பேசக் கற்றுத்தரும் வழக்கம் இருந்ததைப் பாடல்கள் காட்டுகின்றன[128].

மணி, பவளம், சங்கு, தங்கம், செம்பு, வெள்ளி போன்ற விலை உயர்ந்த பொருட்களையும், நெல், பால், வாழை, நெய், கற்கண்டு, சக்கரை போன்ற உணவுப் பொருட்களையும் காலந்தோறும் பயன்படுத்தி வந்துள்ளனர் என்ற செய்திகளும் பரவலாகக் காணக்கிடக்கின்றன.

'முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டது போல', 'கொல்லன் தெருவில் ஊசி விற்பதைப் போல' போன்ற பழமொழிகள் பரவலாகப் பேசப்படுவன. (பழமொழித் தொடர்பான செய்திகள் இலக்கியத்திறன் என்ற இயலில் பழமொழி உவமைகள் என்ற உள்தலைப்பில் விளக்கப்பெற்றுள்ளன).

6.2.4. சமயச் செய்திகள்:

> "சமயம் என்பது மனிதன், தன்னுடைய ஆழ்ந்த அனுபவங்களால் அடைந்த மிக உயர்ந்த நிலை; பல்வேறுபட்ட நிலைகளை எதிரொலிக்கும் மிக ஆழமான ஒரு பிரிவு; கோடிக்கணக்கான மனங்களின் எண்ணங்களும் கனவுகளும் மிளிரும் ஓர் இடம்"[129]

எனக் கூறப்படுகின்றது.

இதிகாசம், புராணம், சிற்றிலக்கியம் ஆகியவற்றில் இடம்பெறும் அவையடக்கப் பாடல்களில் சமயம் தொடர்பான குறிப்புகள் காணப்படுகின்றன. கடவுளர்கள், திருத்தலங்கள், கோயில்கள், சமய மடங்கள் ஆகியவற்றின்மீது கவிஞர்களுக்கு இருந்த ஈடுபாடு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

சமணம், பௌத்தம், சைவம், வைணவம் ஆகிய மதங்களைச் சார்ந்த புலவர்களன்றிக் கிறித்தவம், இசுலாம் ஆகிய மதப் புலவர்களும் அவையடக்க மரபைப் பின்பற்றியுள்ளனர். இச்சமயங்கள் தொடர்பான நூல்களில் இடம் பெறும் அவையடக்கப் பாடல்களில் சமயக் குறிப்புகள் காணப்படுதல் இயல்பாகும்.

சமயக் கொள்கைகள், தத்துவங்கள் ஆகியன விரிவாகப் பேசும் நிலையில் அவையடக்கப் பாடல்கள் அமையவில்லை. சமய உயர்வு, சமயக் கடவுளரின் சிறப்புகள் ஆகியவையே பெரிதும் பேசப்பட்டுள்ளன. அவை பின்வரும் பிரிவுகளில் விளக்கப்படும்.

1. கடவுளர்கள்
2. சமயக் காழ்ப்புகள்
3. திருத்தலப் பெருமை
4. குருபரம்பரை

6.2.4.1. கடவுளர்கள்: கடவுளர் தொடர்பான நூல்களில் இடம்பெறும் அவையடக்கப் பாடல்களில் கடவுளர் பற்றிய குறிப்புகள் காணப் படுகின்றன. அவை பெரும்பான்மையும் பண்டைய நூல்களில் காணக்கிடக்கும் செய்திகளே.

6.2.4.1.1. சிவன்: சிவன் தோற்றம் பற்றி அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு மிகுதி. எனினும் சிவனும் காளியும் ஆரியரல்லாதாரின் கடவுளர் என்று கூறப்படுவர். இதற்கு 'இருக்கு' வேதமும், சிந்துவெளி நாகரிகமும் ஆதாரமாக அமைவதை அறிஞர்கள் காட்டியுள்ளனர்[130].

அளவிலாத பெருமையர்[131], பிறையணி சடாமுடிப் பிரான்[132], மங்கையோர் பங்குடையான நாயகர்[133], ஏகம்பர்[134], சொக்கன்[135], வார்சடையோன்[136], ஆலவாயுடையார்[137], செஞ்சுடர் மாணிக்கம் உண்டவர்[138], பாடியாடும் படம்பக்கநாதன்[139], பாவைபங்கர்[140], சிற்பரன்[141], கருங்களத்தனார்[142], செல்வர் குற்றாலத்தீசர்[143], வள்ளைக் குழைபாகர்[144], மறைக்கு மேலோன்[145], ஆத்மநாயகர்[146], சுடரோன்[147], கண்டன்[148], நகப்படிவமாய் வளர்ந்தசோதி[149], மங்கையொரு பாகத்தான்[150] எனச் சிவனின் திருப்பெயர்கள், தோற்றம், சிறப்பு, திருத்தலச் சிறப்பு ஆகியன அவையடக்கப் பாடல்களில் சுட்டப் பெற்றுள்ளன.

6.2.4.1.2. திருமால்: டி. இராகவையங்கார் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே திருமால் வழிபாடு தமிழகத்தில் வேரூன்றியிருந்தமைக்குக் காரணம் காட்டியுள்ளார்[151]. தொல்காப்பியர் முல்லை நிலத் தெய்வமாகக் காட்டும் மாயோன் திருமால் ஆவன்[152].

நெடுமால்[153], அலர்மேலு மங்கை மணவாளன்[154], வரதவேங்கட ராயன்[155], அரிநாரணன்[156], சோலைமலையழகர்[157], தாசரதி[158], சீரார்குறுங்குடியன்[159], அறத்துருவன்[160], மாயன்[161] என்பன திருமாலின் சிறப்பினை எடுத்தியம்பும் சில குறிப்புகளாகும்.

6.2.4.1.3. முருகன்: முருகன் தமிழ்க் கடவுள் என்பதும் முருக வணக்கம் மிகப் பழங்காலத்திலிருந்தே தமிழரிடமுண்டு என்பதும் பெரும்பான்மையோர் ஏற்றுக்கொண்ட கருத்துகளாகும்.

ஆறுமுகமுடைய ஒர் அமலன்[162], எஃகவேள்[163], புதுமயில் ஊர்பரன்[164], வேற்படைநம்பி[165], கந்தவேள்[166], கந்தன்[167], முந்நான்கு கரக்குமரன்[168], கூர்வெயிற் படைவேள்[169], சிவகிரியில் வளரும் புலவன்[170], குறக்கொடி கணவன்[171], மயிலேறிய சமர்த்தன்[172], அயனோடு சிவனார் பணி குருக்கள்[173], உயர்திருமலை வேலன்[174], குகேசன்[175] என்று அவையடக்கத்தில் முருகன் சிறப்பு உரைக்கப்பட்டுள்ளது.

6.2.4.1.4. பிறகடவுளர்கள்: குண்டலகேசியில் பௌத்த கடவுள் 'மூன்றுமறுத்தான்'[176] என்று சிறப்பிக்கப்பட்டுள்ளார். அதுபோல் சமணக் கடவுள் சூளாமணியில் 'நெடுமால்'[177] எனவும் நீலகேசியில் 'தண்டாமரை மேனடந்தான்'[178] எனவும் சுட்டப்படுவர்.

உமை[179], யானைமுகர்[180], பாரதி[181] போன்ற தெய்வங்கள் பற்றிய குறிப்புகளும் சுட்டப்பட்டுள்ளன. பிறமதத்தைச்சேர்ந்த நூல்களில் அணிபூங்கைச்சிரத்தாள்[182], உலகொருங்காள்வாள்[183] என மரியாளும், 'கர்த்தர்'[184] என்று இயேசுவும், 'அல்லாஉற்'[185] என்று முகமது நபிகளும் அழைக்கப்படுவதைக் காணமுடிகின்றன.

6.2.4.2. சமயக் காழ்ப்பு: ஒரு சமயத்தைச் சேர்ந்த புலவர் மற்றொரு சமயத்தின்மீது கொண்டிருக்கும் காழ்ப்பினை வெளிக்காட்டி அவையடக்கம் பாடும் நிலையினைச் சில நூல்களில் காணமுடிந்தது.

சிவஞான போதத்தின் அவையடக்கத்தை இதற்குத் தக்க சான்றாக்கலாம்.

"தம்மை உணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்
எம்மை உடைமை எமையிகழார் - தம்மை
உணரார் உணரார் உடங்கியைந்து தம்மிற்
புணராமை கேளாம் புறன்"[186]

இதற்கு உரை எழுதிய சுப்பிரமணிய தேசிகர்,

"இஃது அவையடக்கம் கூறுமுகத்தானே ஈண்டெடுத்துக் கொண்ட சித்தாந்த வைதிகசைவர்வும் ஏனைச் சமயத்தார்களதிழிபுங் கூறுகின்றது. உடைப்பொருளாகிய தம்மியல்பினை உணர்ந்து தம்மையுடையானாகிய தலைவனை யுணருஞ் சித்தாந்த சைவர் தமக்குப் பொருளாகிய எம்மையுடையராகலின் எம்மைக் குற்றங்கள் நீக்கிக் குணங்கொண்டு கோதாட்டுவதன்றி இகழ்தல் செய்யார்; ஆகலான் எம்மாற் செய்யப்படு நூலையும் அவ்வாறு கைக்கொள்வர். அங்ஙனந் தம்மையுணராதார் தம்மை யுடையானாகிய தலைவனையு முணரார் ஆகலான் அவர் ஒருங்கே குழீஇக் கொண்டு தம்மிற்றாமே சேராது முரணுதலால் அவர் எம்மையும் செய்யப்படு நூலையும் இகழ்ந்துரைக்கும் புறமொழியை யாம் பொருளாகக் கொள்ளாம்"[187]

என்று உரைசெய்துள்ளார். இவ்வுரையே சமயக் கவிஞர்கள் அவையடக்கம் வழி சமயக் காழ்ப்பினை வெளிப்படுத்தியதற்கு விளக்கமாக அமைகின்றது.

'சிவயோகசாரம்'[188] என்ற நூலின் அவையடக்கமும் இப்போக்கினைக் கொண்டுள்ளது. சிவஞான சித்தியார் பரபக்கம் சுபக்கம் முதலிய நூல்கள்

மாலயன் போன்றோரைவிடச் சிவனை உயர்ந்தோனாக அவையடக்கத்தில் காட்டியிருப்பதும் பிறசமயத்தின் தாழ்வைச் சுட்டுவதாகக் கருத இடமுண்டு. ஈண்டு தம் சமயத்தை உயர்த்திப் பிறசமயத்தைத் தாழ்த்துதல் என்பது குறிப்பால் உணர்த்தப்படுவதாகும்.

6.2.4.3. திருத்தலப் பெருமை: இறைவன் எழுந்தருளியிருக்கும் தலத்தின் பெயரில் வழங்கும் தலபுராணங்கள், சிற்றிலக்கியங்கள் போன்றவற்றின் அவையடக்கத்தில் திருத்தலப் பெருமை குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் நூற்கருப்பொருள் பாடப்பெற்ற தலத்தின் சிறப்பு இன்னதென்று உணரமுடியும். திருத்தலத்தில் வீற்றிருக்கும் இறைவனை வணங்குவதால் ஏற்படும் பலன், திருத்தலத்தைப் பாடுவோர் அடையும் பயன் ஆகியனவும் அவற்றில் சுட்டப்பெற்றுள்ளன. இத்தகைய தன்மையுடைய அவையடக்கப் பாக்கள் மிகுதி என்பதால் சான்றாக ஒன்றுமட்டும் கீழே தரப்பட்டுள்ளது.

"வேதமுனி குறுமுனி மெய்ஞ்ஞான சம்பந்தர்
காதலினா வுக்கரையர் கண்ணான வாரூரர்
வாதவூர் மாணிக்க வாசகனார் நக்கீர
ராதியசான் றோர்புகழ்ந்த வத்தலத்தை யென்சொல்கேன்"[189]

என்பது திருக்காளத்திப் புராணத்தின் அவையடக்கமாகும். இதில் திருக்காளத்தி என்ற தலத்தின் பெருமை வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

6.2.4.4. குருபரம்பரை: சைவ வைணவ குருமார்களின் பரம்பரையைச் சுட்டும்வண்ணம் சில அவையடக்கப் பாடல்கள் அமைந்துள்ளன.

நந்திகேசுவரர், மெய்கண்டதேவர், அருள்நந்தி சிவாசாரியார் போன்ற குருக்களின் பரம்பரையில் தாம் வந்ததாகத் திருவொற்றியூர்

ஞானப்பிரகாசர் அவையடக்கம் பாடியுள்ளார். இதில் குருக்களின் சிறப்பு, செயல் ஆகியவையும் சுட்டப்பெற்றுள்ளன[190].

வடிவழகிய நம்பிதாசர் வைணவ குருமார்களின் பரம்பரையைக் குறிப்பிட்டுள்ளார்.

> "திருமாலை முதன்மையாகக் கொண்டு இராமானுசர் வரையில் உள்ள வைணவ குருமார்களின் வரலாறு கூறும் இந்நூலைக் 'குருபரம்பரை' என்றே குறிப்பிடுவர்"[191]

என்ற பொருளில் அவரது பாடல் அமைந்துள்ளது. இந்நூலில் இடம்பெறும் பிற அவையடக்கப் பாடல்களில் ஆழ்வார்கள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

சேக்கிழார் பிள்ளைத்தமிழ் பாடிய மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவையடக்கம் கூறுமுகத்தான் கயிலாய பரம்பரையைத் தெளிவாகச் சுட்டியுள்ளார்.

"ஓங்குகயி லாயபரம் பரைநந்தி அடிகட்
குமரபெட் டாவதுபின் தோன்றலாய் எங்கள்
உயர்திருவா வடுதுறைச்சுப் பிரமணிய குரவற்
குற்றபத்தொன் பதாவதுமுன் தோன்றலாய் பொலிந்த

தேங்குசிவப் பிரகாச முதலியவாய் மலர்ந்த
திகழ்உமா பதிசிவனே குன்றைஉற மேவித்
திருந்தும்ஏர் வளம்கொண்டு பெருமையின்மேல் ஆகிச்
சிறத்தலால் செம்மேனிக் குமரவேள் ஒத்தும்

பாங்குபெறத் துதிக்கையொடோர் கொட்டத்தன் ஆய
பயிற்சியின்அக் குமரவேள் திருத்தமையன் ஒத்தும்
பரவுசேக் கிழான்எனும்பேர் பரித்தலின்அக் கணேசப்
பன்னவனை இனிதுயிர்த்த திருத்தாதை ஒத்தும்

விங்குபுகழ் படைத்தஅருள் மொழித்தேவன் புராணம்
விரித்துரைத்தான் அவனடி தாழ்ந்தென் அறிவிற்கேற்ப
மெயப்பிள்ளைத் தமிழ்எனஒன் புரைப்பர்அஃ தறிவால்
மிக்கவர்தம் ஞூரத்திற்கு மிக்கநகை தருமே"[192]

என வரும் பாடலில் கயிலாய பரம்பரையினர் வசித்துவந்த பதவிநிறையும், அவர்கள் இயற்றிய நூல்கள் பற்றியும், இறைவன் மற்றும் குருமார்களின் சிறப்பும் அறிவிக்கப்பெற்றன. குருபரம்பரையை அவையடக்கத்துள் அமைத்துப் பாடியதால் இதனைக் 'குருவணக்கமும் அவையடக்கமும்' எனப் பதிப்பித்துள்ளனர்.

குருவணக்கம் தனியாகக் கூறப்பட்டும் அவையடக்கத்தில் ஒரு தொடர்பான செய்திகள் இடம்பெறும் வண்ணமும் பல நூல்கள் உள்ளன. ஒரு முதலியோரின் சிறப்புக் கருதி நூலில் உள்ள குறையை அவையோர் பொறுத்துக்கொள்வர் என்று கவிஞர் எண்ணியிருக்கக்கூடும்.

சமயம் தொடர்பான செய்திகள் அவையடக்கப் பாடல்களில் இடம்பெறும் புராணச் செய்திகளும் காணப்படுகின்றன.

<u>6.2.4.5. புராணச் செய்திகள்:</u> தொல்காப்பியர்,

"தொன்மை தானே, உரையொடு புணர்ந்த பழமை மேற்றே"[193]

என்பர். தொல்காப்பியர் காலத்தில் 'தொன்மை' என்பது புராணத்தைக் குறித்தது. இது மனிதனால் புதிதாய்ப் படைக்கப் பெற்றதன்று. காலத்தால் இயற்கையாய்க் கருக்கொண்டு வளர்ந்து வரலாற்றிற்கும் முற்பட்டதாய் விளங்குகின்றது. இதனைப் பழமைக்கும் பழமையுடையதாய், புதுமைக்கும் புதுமை நல்குவதாய்க் கருதுதல் பொருந்தும்.

புராணம் என்பதற்கு இணையாக 'மித்' (Myth) என்ற ஆங்கிலச் சொல் கையாளப்பெறுகின்றது. இதனைத் 'தொன்மம்' என்ற சொல்லால் இக்கால அறிஞர்கள் குறிக்கின்றனர்[194].

"தொன்மம் அல்லது புராணம் என்பது நெடுநாளாக வழங்கிவரும், எல்லோருக்கும் தெரிந்த பழங்கதையைக் குறிக்கும். ஆங்கிலத்தில் 'மித்' (Myth) எனப்படுவது கதையமைப்பை (Plot) முன்பு குறித்தது. இச்சொல் இலக்கியத்திற்கும் சமயத்திற்கும் பொதுவானதாகும். 'வரன்முறையான அறிவிற்கு எதிரானது' என்றும், 'உள்ளுணர்வால் உருவாவது' என்றும் இதனை விளக்குவர்"[195]

எனவே பழங்கதை நிகழ்ச்சிகளைப் பற்றிய குறிப்புகளைப் 'புராணம்' என்று கொண்டு இவண் பயன்படுத்தப்படுகின்றது. ஏனெனில் தொன்மை நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டே நார்த்ராப் ஃப்ரை இலக்கியத்தில் தொல்படிவங்களை விளக்குகின்றார்[196].

தமிழ் அவையடக்கப் பாடல்களில் சிவன், திருமால், முருகன் ஆகியோர் தொடர்பான புராண நிகழ்ச்சிகள் பெரிதும் பேசப்பெறுகின்றன. உமை, அகத்தியர், ஆதிசேடன் போன்றோரின் புராணங்கள் ஒரோவழிப் பேசப்படுவன.

6.2.4.5.1. சிவன்: பொதுவாக அவையடக்கப் பாடல்களில் இடம்பெறும் புராணச் செய்திகள் இலக்கிய விளக்க உத்தியாகவும் சமயப்படிமக் கருத்துக்களை விளக்குவனவாகவும் அமைந்துள்ளன.

'சிவன் தனது அடிமுடியைத் திருமாலும் பிரம்மாவும் காணமுடியாதவாறு பேருருவமெடுத்து, அவர்களின் செருக்கினையடக்கினார்' என்ற புராணச் செய்தி பரவலாகப் பேசப்படுவதாகும்.

இப்புராணச் செய்தியை அருணந்தி சிவாசாரியார் அவையடக்கத்தில் பயன்படுத்தியுள்ளார். 'மாலயன்மா மறைஅறியா ஆதிமார்க்கமாய் விளங்கும் இறைவன் பெருமையைக் கூறுவது என்பது என்னால் இயலாததாகும்'[197] என்ற பொருளில் அவரின் பாடல் அமைந்துள்ளது. சைவசமயத்தின் பெருமையினை அவையடக்கத்தில் காட்டவேண்டும் என்றெண்ணிய கவிஞருக்கு அடிமுடி தேடிய புராண நிகழ்ச்சி துணைசெய்துள்ளது. இங்கு அவரது சமயப் படிமக் கருத்தைப் பரப்பவும் இது பயன்படுத்தப்பெற்றது.

இதனை மீனாட்சி சுந்தரம்பிள்ளை, 'முன மிருவர்தேறா, நகப்படிவ மாய்வளர்ந்த சோதி'[198] எனச் சுட்டியுள்ளார்.

'முனிவர் ஒருவரின் சாபத்தால் தேய்ந்து கொண்டே வந்த சந்திரனைத் தம் முடியில் சுமந்து இறைவன் காத்தருளினார்' என்ற புராணம் இந்திய மக்கள் அறிந்ததாகும். இச்செய்தியைப் பயன்படுத்தி அவையடக்கம் பாடப் பெற்றுள்ளதை,

"பிறைசேரு சாந்தப் பெயரவன்சொல் வெண்பா
குறையுளது நீக்கிக் குறையா-நிறைமொழிச்
சொற்றமிழோர் கொள்வர் சுடரோனால் வெண்பிறைதான்
உற்றமதி யாவதனை யோர்ந்து"[199]

எனவரும் பாடலால் அறியலாம்.

சூரியனிடமிருந்து ஒளியைப்பெற்று, அதைப் பூமிக்குச் சந்திரன் வழங்குவது இயற்கை நிகழ்ச்சியாகும். இதனைப் புராணமாகக் கவிஞர்கள் வழங்குவது இயற்கையே புராணக்கதையாக வளர்ந்த நிலையைக் காட்டும். இறைவன் பிறைசுமந்த நிகழ்ச்சியை அவையடக்கப் பண்பை மிகுவித்துக் காட்டப் பயன்படுத்தும் உத்தியை திருவானைக்கா அகிலாண்டநாயகி பிள்ளைத் தமிழிலும்[200] காணமுடிகின்றது.

'இலிங்கவுருவில் அடியார்க்கு அருள் வழங்கிய இறைவன், வணிகர் உருவில் வந்து ஆவர்த்தை எனும் கன்னிகை அணிந்துகொள்ள மணிக்கடகம் அளித்தான்'[201] என்ற புராண நிகழ்ச்சி திருவெண்காட்டடிகள் புராணத்தின் அவையடக்கத்தில் இடம்பெறுவதாகும். 'தேவர்கள் தொழுதேத்தும் சக்தியை மணந்த சிவன் சேறிவாழ் பரதவர்குலப் பெண்ணையும் மணந்தான் என்ற புராணக்கதையை உவமையாக்கி, அதனால் எனது குறையுள்ள பாட்டையும் குற்றமாகக் கருதாது இறைவன் ஏற்பான்"[202] என்று பட்டீச்சுரப் புராணத்தின் அவையடக்கம் பேசப்பட்டுள்ளது. இவை தமிழுக்குரிய புராணக் கதைகளல்ல; வடக்கிருந்து வந்ததாதல் வேண்டும்.

தமிழுக்கே உரிய சிவன் தொடர்பான புராணக் கதைகளும் அவையடக்கப் பாடல்களில் காட்டப்பெற்றுள்ளன.

"நெறிவழாஉமை பூசனை போல்நெறி பிறழ்ந்தோன்
உறித ருங்கலுங் கைக்கொளுங் கச்சியம் பெருமான்"[203]

என்ற சிவஞானமுனிவர் சாக்கியநாயனார் விதிவழி எறிந்த கல்லினை மலர்களாக ஏற்று அருளிய செய்தியை அவையடக்கத்துள் காட்டுவார். இதுபோல் கண்ணப்பருக்கு அருளியது[204], நந்தனாரை ஆட்கொண்டது[205] போன்ற நிகழ்ச்சிகளும் அவையடக்கப் பாடல்களில் இடம்பெற்றுள்ளன. இவை தமிழுக்குரிய புராணக் கதைகளாகக் கருதப்படுகின்றன.

அவையன்றி, சூரன் பூசனையை ஏற்றுக்கொண்டது[206], கங்கையைத் தலையில் தாங்கிக் கொண்டது[207], திருமுடித் தழும்பேற்றது[208], மன்மதனை எரித்தது[209] போன்ற புராணக் கதைகளும் அவையடக்க விளக்க உத்திகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

6.2.4.5.2. திருமால்: திருமால் தொடர்பான புராணக் கதைகள் அவையடக்கப் பாடல்கள் வழி உணர்த்தப்பட்டுள்ளன.

அனுமன் இராமன் திறனை அறிய வேண்டியபோது, மராமரம் ஏழையும் அம்பெய்துத் தொளைத்துக் காட்டுவான். இக்கதை இந்தியமக்கள் அனைவரும் அறிந்ததே. இதனைக் கம்பர் தம் அவையடக்கப் பாடலில் சுட்டிச் செல்கின்றார்.

"நொய்தி னொய்யசொ னூற்கலுற் றெனெனை
வைத வைவின் மராமர மேழ்தொளை
எய்த வெய்தவற் கெய்திய மாக்கதை
செய்த செய்தவன் சொல்நின்ற தேயத்தே"[210]

இப்பாடலில் இராமாயணக்கதை நிகழ்ச்சி ஒன்றைக் கம்பர் புகுத்தியிருப்பது நூற்பொருளைக் கற்போர்க்கு அறிவிக்கும் நுதலிப்புகுதல் உத்தியாகக் கொள்ள வேண்டும்.

'இராமன் சிறுபிள்ளையாக இருந்தபோது கூனியின் முதுகில் மண் உருண்டையை எறிந்து அவளின் கூனை நிமிர்த்தினான்' என்ற இராமாயணக் கதை நிகழ்ச்சி அவையடக்கத்தில் உவமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனை,

"அழகர் பதிகம ரருந்த மிழ்கொண் டார்பால்
குழறியபுன் சொற்றமிழுங் கொண்டார்-முழுதுங்
கருத்திருத்தி வைத்தவெம்மர் காந்தருமாய்க் கூனி
யுருத்திருத்திக் கொண்டதுபோ லும்"[211]

எனவரும் பாடலால் அறியலாம்.

இராமன் கடல்மீது பாலமமைத்து, இலங்கை மன்னன் இராவணனுடன் போரிட்டு, அவனைக் கொன்று ஆட்சியை வீடணனுக்குக் கொடுத்த இராமாயண நிகழ்ச்சியும் அவையடக்கத்தில் சுட்டப்பெற்றுள்ளது[212].

மேலும், கண்ணன் கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்து ஆயர்பாடி மக்களைக் காத்தது[213], பக்தர் ஒருவரின் வீட்டில் திருமால் உப்பில்லா மோர்க் கூழ் உண்டது[214] போன்ற திருமால் தொடர்பான புராணக் கதை நிகழ்ச்சிகளும் பேசப்பட்டுள்ளன.

அவையடக்கப் பாடல்களில் இடம்பெறும் திருமால் தொடர்பான புராணங்கள் பெரிதும் இந்தியா முழுமையும் பரவியவையாம். இவை அவையடக்கப் பண்பை விளக்கி நற்பொருளைச் சுட்டிக்காட்டுவனவாகவும் பயன்படுத்தப்பெற்றுள்ளன.

<u>6.2.4.5.3. முருகன்:</u> சிவன், திருமால் ஆகியோருக்கு இணையாக முருகன் தொடர்பான புராணக் கதைகள் அவையடக்கப் பாக்களில் இடம் பெற்றுள்ளன.

> "பகுதி கொண்டு பாக்க வினைத்திறன்
> மிகுதி கொண்ட விருத்தத் தொகைகளாற்
> றொகுதி கொண்டு சூர்கிளை சாய்த்தவன்
> றகுதி கொண்ட தனிக்கதை சாற்றுகேன்"[215]

என்று கச்சியப்பச் சிவாசாரியர் அவையடக்கம் பாடும்போது சூரனையும் சுற்றத்தாரையும் முருகன் அழித்த செய்தியைக் குறிப்பிட்டுள்ளார்.

> "சிவன், திருமால், பிரம்மன் ஆகியோருக்கு உபதேசம்
> செய்த சிறப்புடைய முருகனைப் பாடும் என்கவியை
> அறிஞர் ஏற்றுக்கொள்வர்"[216]

என்ற பொருளில் ஓர் அவையடக்கப் பாடல் அமைந்துள்ளது. இவ்விரு கதைகளிலும் வடமொழிக் கலப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிகின்றது.

"தமிழுக்கே ஒரு தனித்தன்மை வாய்ந்த
தொன்மம் என்று குறிப்பிட்டுச் சொல்ல முருகனே
முன் வருகிறான். அதிலும் வடமொழிக்கலப்பு
காலப்போக்கில் ஏற்பட்டு விட்டது"[217]

என்பர். என்றும் முருகன் வழிபாடு தமிழ்நாட்டு இயற்கையுடன் கலந்த வழிபாடு என்பதையும் இயற்கை வளப்புத் தோன்றும் அனைத்து இடங்களிலும் அவன் விரும்பும் இடங்களே என்பதையும் சங்க இலக்கியம் வலியுறுத்தியுள்ளது. இதனை அறிஞர்களும் எடுத்துக்காட்டியுள்ளனர்[218].

"அயிலேறிய கரத்தனை எனையவன்
அடியானென வளர்த்திடும் ஒருவனை
அழகாயுயர் குறக்கொடி கணவனை
- அமர்மீதே"[219]

என்ற பாடலில் குறமகளை மணந்த புராணக்கதை சுட்டப்பெற்றது. முருகன்-வள்ளி திருமணக் கதை தமிழ் அகத்திணை மரபில் அடிப்படையில் தோன்றி வளர்ந்தது என்பர்[220].

"பணியாரு மூவுலகுந் தொழுஞ்சோதி
யுருவோடு வேங்கைமர மாகியுற்றார்
கனியாரும் புலவர் பொன்மொழி
யுடனென் புன்மொழியும் மேற்பாரன்றே"[221]

என்று மூவுலகத்தாரும் தொழும் சோதியாகக் காட்சி தந்ததும் வேங்கை மரமாகக் காட்சி தந்ததும் காட்டப்பெற்றன. மேலும் மயிலையும் ஆட்டினையும் வாகனமாகப்பெற்ற புராணச் செய்திகளும் பேசப்படுகின்றன. இதனால் முருகன் இயற்கை வளப்புத் தோன்றும் அனைத்து உருவும் விரும்பி ஏற்றுக் கொண்டது புலனாம்.

வடநாட்டில் ஒரு காலத்தில் தேவேந்திரன் வீரத்தின் தலைவனாக விளங்கினான். அதுபோல் முருகன் வீரக்கடவுளாகத் தமிழ்நாட்டில் சங்க காலத்திருந்தே மதிக்கப்பெறுகின்றான். இதனை,

"வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ"[222]

என்று நக்கீரர் அழைப்பதிலிருந்து அறியலாம்.

அவையடக்கப் பாடல்களில் பேசப்படும் முருகன் கதைகளில் சூர்கிளை சாய்த்தது முருகனின் வீரத்தையும், சிவன் முதலியோர்க்கு உபதேசம் செய்தது அவனது சிறப்பையும், வேங்கை மரமாய் காட்சிதந்தது இயற்கைக் கடவுளர் நிலைக்கு உயர்ந்த நிலையையும் புலப்படுத்திநின்றன.

6.2.4.5.4. உமை முதலியோர்: சிவன் தொடர்பான செய்திகள் சிலவற்றில் உமை பேசப்படுவதுண்டு. 'உமையொரு பாகனாகக் காட்சித் தந்தது'[223], 'கிரிக்கிறைவன் மகளாகவும், சேரிப் பெண்ணாகவும்'[224] அவதரித்தது போன்றன அவையடக்கத்தில் இடம்பெறும் உமை தொடர்பான புராணச் செய்திகளாகும்.

ஆதிசேடன் என்ற பாம்பு இப்புவுலகைத் தாங்கிக் கொண்டிருக்கிறது என்ற செய்தி இந்தியா முழுமைக்கும் வழங்கிவருவதாகும். இதனை,

"மாநா கந்தான் மலர்தலையில்
வையந் தரிப்ப மற்றதுபோற்
பூநா கந்தான் பொறுப்பவென்னும்
புன்சொற் போலும்"[225]

என்று சொரூபானந்த சித்தியின் அவையடக்கம் குறிக்கும். இச்செய்தி நவநீதசாரம்[226], திருக்கழுக்குன்றப் புராணம்[227] ஆகியவற்றிலும் பேசப் பெற்றுள்ளது.

அகத்தியர் கங்கையைக் கமண்டலத்தில் அடக்கிவைத்திருந்தார் என்ற புராணக்கதை இன்றும் இந்திய மக்கள் வழக்கில் உண்டு. இதனை,

"குறு பர்த்திரு மகத்தியன் குடங்கை யிற்கொண்ட
கடலை யானைக் கையடக் குவனே யெப்போதும்"[228]

என்று நிரம்பவழகிய தேசிகர் அவையடக்கத்தில் உவமையாகப் பயன்படுத்தினர்.

இவையன்றி, அனுமன் சஞ்சீவி மலையை அகழ்ந்தெடுத்தது[229], தேவர்கள் பாற்கடலைக் கடைந்து அமுதமெடுத்தது[230] போன்றவையும் அவையடக்கப் பண்பை மிகுத்துக் காட்ட உவமைகளாகப் பயன்பெற்றன. இவை பெரிதும் இந்தியா முழுமையும் அறிந்த புராணச் செய்திகளாக உள்ளன.

அவையடக்கப் பாடல்களில் இடம்பெறும் புராணச் செய்திகள் இலக்கிய விளக்க உத்திகளாக அமைந்து நூற்பொருள் விளக்கம் முதலியவற்றுடன் அவை அடக்கப் பண்பை மிகுவித்துக் காட்டப் பயன்படுத்தப்பட்டுள்ளதைச் சான்றுகள் புலப்படுத்தின.

6.3. தொகுப்புரை:

அவையடக்கப் பாடல்கள் பொதுநிலையில் சுட்டிச்சென்ற செய்திகள் இவ்வியலில் ஆராயப்பட்டன.

பன்மொழிப் புலமைபெற்ற தமிழ்ப்புலவர்களின் நன்மதிப்பீடாகத் தமிழின்பெருமை அவையடக்கவழி உணர்த்தப்பட்டது.

நூலாசிரியர் தொடர்பான செய்திகள், நூற்பெயர், வழி, யாப்பு, கேட்போர், காரணம், காலம், களம் போன்ற குறிப்புகள் சில அவையடக்கப்

பாடல்களில் காணப்பெறுகின்றன. இவை வெளிப்படையாகவும் கற்போர் உய்த்துணரும் வகையிலும் அமைந்துள்ளன.

இலக்கிய வரலாறு எழுதுவோர்க்குத் துணைபுரியும் இச்செய்திகள் ஆசிரியரால் நேரடியாகத் தரப்பெறுவதால் அதில் வரலாற்று உண்மைத் தன்மை வெளிப்படும்.

பாடல்கள் தோன்றிய காலச் சமுதாயம் முழுமையாகப் பிரதிபலிக்கப் படவில்லை. எனினும் காலந்தோறும் நிலவிவரும் சாதிப்பிரிவுகள், குடும்ப அமைப்பு, பழக்க வழக்கங்கள், விளையாட்டுகள் ஆகியவற்றிலிருந்து சமுதாயம் தொடர்பான சில குறிப்புகள் காணப்படுகின்றன.

பெண்கள் ஆண்களோடு சமமாக மதிக்கப்படும் நிலை இல்லை. கற்றோர் அனைவராலும் போற்றப்பெற்றனர். கல்லாதவர்கள், திருடர்கள் ஆகியோர் சமுதாயத்தில் தாழ்வாக மதிக்கப்பெற்றனர்.

வறுமுற்றோரின் நிலை இரங்கத்தக்கதாகவும் நகைப்பிற்குரியதாகவும் காலந்தோறும் வரும் அவையடக்கப் பாடல்களில் காட்டப்பெற்றுள்ளன.

பெரியவர்களின் செயலைப் பிரதிபலிப்பதாகச் சிறியோர் விளையாட்டுகள் அமைந்துள்ளன. அவை மகிழ்வோடும் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

கடவுளர்கள், திருத்தலங்கள், குருபரம்பரை ஆகியவற்றின் வழி சமயச் செய்திகள் விளக்கப்பட்டுள்ளன.

தமிழ் அவையடக்கப் பாடல்களில் புராணச் செய்திகள் பரவலாகக் காணப்படுகின்றன. இந்தியா முழுமைக்கும் அறிந்தது, தமிழுக்கே உரியது என்ற நிலைகளில் அவை இடம்பெற்றுள்ளன.

இயற்கை புராணமாய் வளர்ந்த நிலை, சமயப் படிமக் கருத்தைப் பரப்ப உதவும் நிலை, இலக்கிய நோக்க உவமை உத்தியாய்ப் பயன்படுத்தப் பெறும் நிலை ஆகிய மூன்று நிலைகளிலும் புராணங்கள் அவையடக்கப் பாடல்களில் பயன்படுத்தப் பெற்றுள்ளன.

சிவன், திருமால், முருகன் ஆகியோர் தொடர்பான புராணச் செய்திகள் பெரிதும் பேசப்பட்டுள்ளன. ஒரோவழிப் பிற கடவுள் தொடர்பான புராணங்கள் இடம்பெறுவதுண்டு.

தங்கள் உள்மனத்தில் உள்ள அடக்கப்பண்பை அவையோர்க்கு விளக்கும் வகையில் புராணக் கதைகள் பயன்படுத்தப் பெற்றுள்ளன. இதனை நூலாசிரியனின் அகமனம் அவையோர் முதலானவர்களின் புறமனங்களுக்குத் தரும் செய்தியாகக் கொள்ளவேண்டும்.

புராணங்கள் முழுக்க முழுக்கக் கற்பனையானவை என்று ஒதுக்கக் கூடாது. அவற்றிலும் மெய்ம்மைகள் இல்லாமலில்லை. நூலாசிரியனின் உள்மனத்தை அறிதல் முதலிய பல உண்மைகள் அவற்றின்வழி பெறப்படுதலை அவையடக்கப் பாடல்கள் காட்டுகின்றன.

சான்றெண் விளக்கங்கள்

1. கா. அப்பாத்துரை, தமிழக வரலாறு - முன்னுரை, (கழக வெளியீடு, சென்னை, 1962), ப.65.

2. வ.சுப. மாணிக்கம், இலக்கிய விளக்கம், (மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1978, மூன்றாம் பதிப்பு), பக்.82-83.

3. அமிர்தசாகரர், யாப்பருங்கலக்காரிகை, அவை.1.

4. கம்பராமாயணம், அவை.5.

   அடியார்க்கு நல்லார், சிலப்பதிகார உரை, உரைப்பாயிரம், (உ.வே.சா. (பதி.), கபீர் அச்சுக்கூடம், சென்னை, 1955, ஆறாம் பதிப்பு), ப.11.

   சிவஞானமுனிவர், காஞ்சிப்புராணம், திருநகரப்படலம், பாடல் 126.

   நவநீதநாடன், கவித்துறைப் பாட்டியல் என்னும் நவநீதப் பாட்டியல், த.சி. பாயி.2.

5. கச்சியப்ப சிவாசாரியார், கந்தபுராணம், அவை.20.

6. திருவொற்றியூர் ஞானப்பிரகாசர், சிவஞானசித்தியார் பரபக்க உரை,

   மேற்கோள்: மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு, கி.பி.16ஆம் நூற்றாண்டு, மூன்றாம் பாகம், ப.79.

   நாராயணயங்கார் (பதி.), திருமாலிருஞ்சோலைமலை அழகர் பிள்ளைத் தமிழ், அவை.2.

   உமறுப்புலவர், சீறாப்புராணம், அவை.1, 2.

   சின்னத்தம்பி நாவலர், ஓதாளர் குறவஞ்சி எனும் அலகுமலைக் குறவஞ்சி, த.சி. பாயி.12.

7. கடவுண்மாமுனிவர், திருவாதவூரர் புராணம், கடவுள்வாழ்த்து, 7.

   கமலை வைத்தியநாத தேசிகர், திருநல்லூர்ப் புராணம், பாடல் 16.

   வீரமாமுனிவர், தேம்பாவணி, அவை.3.

8. இரேவணசித்தர், சிவஞானதீபம், அவையடக்கம்.

   வேதநாயக சாஸ்திரியார், பெத்தலேம் குறவஞ்சி, பாயி.9.

   சி. தேசிகவிநாயகம்பிள்ளை, மருமக்கள் வழி மான்மியம், அவை.அடி.1.

   வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார், மானவிஜயம், பாயி.8.

9. பிறைசைச் சாந்தக் கவிராயர், இரங்கேச வெண்பா என்னும் நீதிசூடாமணி, (கழக வெளியீடு, 1966, முதற்பதிப்பு), ப.3.

10. பண்டாரத்தையா, திருமலை முருகன் பிள்ளைத்தமிழ், பிள்ளைத் தமிழ்க் கொத்து (கழக வெளியீடு, 1963), ப.1.

11. அசலாம்பிகை அம்மாள், இராமலிங்க சுவாமிகள் சரிதம், பாயி.25.

12. இராம.சொ. சொக்கலிங்கச் செட்டியார், திருப்புத்தூர்ப் புராணம், அவை.9.

13. புலவர் குழந்தை, இராவண காவியம், அவை.1.

14. ச. பவானந்தம்பிள்ளை, அரிச்சந்திரன், அவையடக்கம்.

15. கு.சு. அரங்கநாதனார், சேலம் பேர்லாண்ட்ஸ் (அழகாபுரி) ஞானசுப்பிரமணிய சுவாமி பிள்ளைத்தமிழ், அவையடக்கம் (1977, முதற்பதிப்பு) பக்கம் இல்லை.

16. வ. அழகிய சொக்கநாதபிள்ளை, காந்திமதியம்மை பிள்ளைத்தமிழ், நூற்காப்பு.3.

17. புகழேந்திப் புலவர், ஆரவல்லி சூரவல்லி, அடி.44.

18. புகழேந்திப் புலவர், காத்தவராய சுவாமிக் கதைப்பாடல், அவையடக்கம்.

19. மா. சீராளன் (பதி.), காஞ்சிமன்னனம்மானை, அவை.அடி.2.

20. கயாதரர், கயாதரம், பாயி.2.

21. தேரையர் மகாகரிசல், கரிசல்பாயிரம், அடி.21-22.

22. மேற்கோள்: மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு, 15ஆம் நூற்றாண்டு, ப.371.

23. தேரையர், தைலவருக்கச் சுருக்கம், அவையடக்கம்,
மேற்கோள்: எஸ். சௌந்தரபாண்டியன், தமிழில் அவையடக்கப் பாடல்கள், ப.238.

24. முத்தப்பச் செட்டியார், ஜெயங்கொண்டார்சதகம், பாயி.4.

25. குணவீரபண்டிதர், வச்சணந்திமாலை, (கழக வெளியீடு, 1964), ப.76.

26. தாண்டவசேகரராயர், திருவரசநாடகம், அவை.2.

27. வீரபத்திரன், மாசபுராண அம்மானை, பாயி.அடி.179-182.

28. எம். இராஜமாணிக்கம், (பதி.), வேதாளக்கதை, (அரசு சுவடியியல் நூலகம், சென்னை, 1961), ப.1.

29. அ) தி. நடராசன் (பதி.), உலகுடைய பெருமாள் கதை, அடி.35, 39-40.

29. ஆ) மேலது, அங்கம், ப.1.

30. டி.கே. இராமானுச கவிராயர், மகாத்மா காந்தி காவியம், அவை.4.

31. நக்கீரன், அண்ணா அடிபது, (நக்கீரன் நிலையம், 1968), ப.1.

32. கம்பராமாயணம், அவை.1.

33. புகழேந்தி, நளவெண்பா, த.சி. பாயி.4.

34. சேக்கிழார், பெரியபுராணம், அவை.1.

35. பெரும்பற்றப்புலியூர் நம்பி, திருவிளையாடற் புராணம், அவை.3.

36. கச்சியப்ப சிவாசாரியார், கந்தபுராணம், அவை.17.

37. வில்லிபாரதம், பாயி.5.

38. மலைக்கொழுந்து நாவலர், திருத்தொண்டர் சதகம் அவையடக்கம் (திருவாவடுதுறை ஆதீன வெளியீடு, 1968), பக்.1-2.

39. மாம்பழக் கவிச் சிங்க நாவலர், சிங்கார ரசமஞ்சரி, பாயி.10.

40. குருபாததாசர், குமரேச சதகம், (ஆர்.ஜி. பதி. கம்பெனி, சென்னை, 1972), ப.3.

41. வரகவி இராமசாமிப் புலவர், வேலாபுரி கருப்பண்ணசாமி சதகம், அவையடக்கம்.

42. புலவர் குழந்தை, இராவண காவியம், அவை.9.

43. புகழேந்திப் புலவர், பவளக்கொடி மாலை, அடி.7.

44. தொல்., சி. பாயி., அடி.7.

45. கம்பராமாயணம், அவை.3.

46. வில்லிபாரதம், அவை.2.

47. கச்சியப்ப சிவாசாரியார், கந்தபுராணம்.

48. திருக்குருகைப் பெருமாள் கவிராயர், மாறனலங்காரம், கடவுள் வாழ்த்து, 4.

49. காரிநாயனார், கணக்கதிகாரம், பாயி.7.

50. நிரம்பவழகிய தேசிகர், சேதுபுராணம், அவை.4.

51. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, மாயூரப்புராணம், அவை.2.

52. காளியண்ணப் புலவர், பூந்துறைப் புராணம், பாயி.29.

53. மு.ரா. கந்தசாமிக் கவிராயர், சுப்பிகி வெண்பா பாயிரத் திறம் 9.

54. புலவர் குழந்தை, இராவண காவியம், அவை.3.

55. அநந்தர், உத்தர ராமாயண நாடகம், அவை.2.
மேற்கோள்: எஸ். சௌந்தரபாண்டியன், முன்னூல், ப.94.

56. வேலூர் சுப்பராய முதலியார் & கோ, முத்திராமக் கவிராயர் ஸ்ரீ மகாபாரத நாடகம், அவை, சரணம்-1, மேற்கோள்: எஸ். சௌந்தரபாண்டியன், முன்னூல், ப.55.

57. இராசப்ப உபாத்தியாயர், மநுநீதி சதகம், நூல் வரலாறும் அவையடக்கமும் (அ. மகாதேவ செட்டியார் (பதி.), 1928), பக்கம் இல்லை.

58. மலைக்கொழுந்து நாவலர், திருத்தொண்டர் சதகம், அவையடக்கம்.

59. தி.சு. ஆறுமுகம் (சிவதாசன்), குமக்குருத்துறை குமரன் பிள்ளைத் தமிழ், பாடல் 5.

60. இறையனார் களவியலுரை (கழக வெளியீடு, 1964), ப.4.

61. வில்லிபாரதம், அவை.3.

62. சம்பந்த சரணாலய சுவாமிகள், கந்தபுராணச் சுருக்கம், அவை.3.

63. இராசப்ப உபாத்தியாயர், மநுநீதி சதகம், நூல் வரலாறும் அவையடக்கமும்.

64. தெய்வச் சிலையான், மநுநீதிக் காதல், மேற்கோள்: எஸ். சௌந்தர பாண்டியன், முன்னூல், ப.118.

65. கச்சாலையர், மகாபாரதச் சுருக்கம், அவை.1.

66. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, மாயூரப் புராணம், அவை.2.

67. நீலகேசி, அவை.2.

68. கம்பராமாயணம், அவை.2.

69. கச்சியப்ப சிவாசாரியார், [illegible], அவை.18.

70. மாதவச் சிவஞான சுவாமிகள், குளத்தூர் அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ், பாடல் 2.

71. நெல்லை க. சுப்பிரமணியக், சாங்கியகாரிகை (உமா நூலகம், திருநெல்வேலி, 1980), ப.28.

72. சி. தேசிகவிநாயகம் பிள்ளை, மருமக்கள் வழி மான்மியம், அவை. அடி.5-12.

73. [illegible].சி. இராமசாமி, தமிழில் பாயிரங்கள், ப.29.

74. அமிர்தசாகரர், யாப்பருங்கலக்காரிகை, அவை.1.

75. கச்சியப்பசிவாசாரியார், [illegible], அவை.19.

76. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, சிவஞானயோகிகள் சரித்திரம், அவை.1.

77. பகவத்கீதா மூலம், பாயி.2.

78. நாராயணகவி, பாண்டிய கேளிவிலாச நாடகம், கதாசங்கிரகம், அகவல் அடி.52-54.

79. மேலது, சி.வா. செகந்நாதன் (பதி.), முகவுரை, ப.5.

80. கம்பராமாயணம், அவை.1.

81. தோலாமொழித் தேவர், சூளாமணி, பாயி.3.

82. பெரியபுராணம், அவை.1.

83. வில்லிபாரதம், பாயி.8.

84. வீரமாமுனிவர், தேம்பாவணி, அவை.1.

85. பாலசுப்பிரமணியக் கவிராயர், பழநித்தலபுராணம், அவை.4.

86. நாராயணதாசர், திருவெவ்வுளூரந்தாதி, அவையடக்கம்.

87. தவத்திரு முருகதாச சுவாமிகள், வஞ்சச்சாபம், அருள்மிகு தண்டபாணி சுவாமிகள் பிள்ளைத் தமிழ், பாயி.5.

88. கந்தபுராணம், அவை.20.

89. தொல். மரபு நூற். 625-637.

90. கம்பராமாயணம், அவை.6.

91. வரதுங்கராமபாண்டியன், பிரமோத்ரகாண்டம், அவை.2.

92. படிக்காசுப் புலவர், தண்டலையார் சதகம், (கழக வெளியீடு, 1964), ப.4.

93. திருவெண்காட்டடிகள் புராணமென்னும் பட்டினத்துப் பிள்ளையார் புராணம், பாயி.21.

94. புலவர் கல்யாணசுந்தர முதலியார், திருவான்மியூர்ப் புராணம், அவையடக்கம், மேற்கோள்: எஸ். சௌந்தரபாண்டியன், முன்நூல், ப.162.

95. வே.ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர்(பதி.), செங்கோட்டு வேலவர் பிள்ளைத் தமிழ், அவையடக்கம். மேற்கோள்: எஸ். சௌந்தரபாண்டியன், முன்நூல், ப.

96. களந்தைக் குமரன், திருவாஞ்சியத் தலபுராணம், அவை.3.

97. உமறுப்புலவர், சீறாப்புராணம், அவை.1.

98. ஆண்டாள் பிள்ளைத்தமிழ், அவை.1.

99. A.L. Basham, The Wonder that was India, p.156. மேற்கோள்: பொ. அழகு கிருஷ்ணன், சிலப்பதிகாரம் காட்டும் பண்பாடும் சமுதாய வரலாறும், (ஐந்திணைப் பதிப்பகம், சென்னை-5, 1988, முதற்பதிப்பு), பக்.40-41.

100. அம்பிகாபதி, அம்பிகாபதிக்கோவை, காப்பு.

நம்பி திருவிளையாடற் புராணம், அவை.4.

அருணந்தி சிவாசாரியார், சிவஞானசித்தியார் பரபக்கம், அவை.2.

நிரம்பவழகிய தேசிகர், சேதுபுராணம், அவை.2.

கருணைப்பிரகாச சுவாமிகள் முதலியோர், சீகாளத்திப் புராணம், அவை.1.

திரிகூடராசப்பக் கவிராயர், திருக்குற்றாலச் சிலேடை வெண்பா, காப்பு.5.

மீனாட்சி சுந்தரம் பிள்ளை திருவானைக்கா அகிலாண்டநாயகி பிள்ளைத் தமிழ், பாயி.13.

வேங்கடசுப்புப்பிள்ளை, கச்சிக்குமரக்கோட்டக் கடவுள் பிள்ளைத்தமிழ், அவையடக்கம்.

த. குமாரசாமிப்பிள்ளை, முத்துவிநாயகரந்தாதி, அவை வணக்கம்.

தி. முத்துசுவாமிப் பிள்ளை, வள்ளியம்மை சரித்திரம், வெண்பா, 4.

புலவர் குழந்தை, இராவண காவியம், அவை.7.

101. நெல்லூர் வீரவெண்ணும் ஆசுகவிராசன், அரிச்சந்திர புராணம், அவை.2.

102. நம்பி திருவிளையாடற் புராணம், அவை.2.

103. நெல்லூர் வீரவெண்ணும் ஆசுகவிராசன், முன்னூல், அவை.2.

104. கவிக்குஞ்சரபாரதி, அழகர் குறவஞ்சி, பாயி.11.

105. வேதநாயகம் பிள்ளை, நீதிநூல், அவை.3.

106. அரசகேசரி, இரகுவம்சம், அவை.2.

107. சம்பந்தசரணாலய சுவாமிகள், முன்னூல், அவை.1.

108. தி. நடராசன் (பதி.), உடையார் கதை, அடி.6.

109. த. வைத்தியநாத பிள்ளை, திருக்கச்சிக்குமரகோட்ட முருகப்பெருமான் பிள்ளைத் தமிழ், அவை.1.

110. மாம்பழக் கவிச் சிங்க நாவலர், முன்னூல், பாயி.10.

111. பொ. நல்லதம்பிப்பிள்ளை, தேவிமான்மியம், பாயி.18.

112. சி. வேங்கடசாமி ரெட்டியார், மகாத்மா காந்தி அடிகளின் மீது நெஞ்சவிடு தூது (ந. சுப்புரெட்டியார் (பதி.), 1934), ப.15.

113. பொ. அழகு கிருஷ்ணன், முன்னூல், ப.27.

114. நெல்லூர் வீரவெண்ணும் ஆசுகவிராசன், முன்னூல், அவை.2.

115. மு. பசுபதி (பதி.), எட்டெட்டந்தாதி, காப்பு.4.

116. திருவெண்காட்டடிகள் புராணம் என்னும் பட்டணத்துப் பிள்ளையார் புராணம், பாயி.21.

117. புற.43.

118. குறள் 401.

119. குமரபாரதியார், திருத்தொண்டர்மாலை, பாயி.3.

120. குமரபாரதியார் திருத்தொண்டர் வெண்பா, பாடல் 2.

121. கம்பராமாயணம், அவை.6.

122. அயோத்தி கதை, அடி.39-40.

123. குருபாததாசர், குமரேசசதகம், (ஆர்.வி.பதி. கம்பெனி, சென்னை, 1972), ப.3.

124. மு.ரா. கந்தசாமிக் கவிராயர், அரிமழுத்தலபுராணம், அவையடக்கம்.
மேற்கோள்: எஸ். சௌந்தரபாண்டியன், முன்னூல், ப.181.

125. உத்தரராமாயண நாடகம், அவை.3. மேற்கோள்: எஸ். சௌந்தர பாண்டியன், முன்னூல், ப.95.

126. கந்தபுராணம், அவை.1.

127. இராமசாமி செட்டியார், திருக்கழுக்குன்றக் கலம்பகம், அவை.1.

128. வீமநாத பண்டிதர், கடம்பவன புராணம், அவையடக்கம்.

129. Dr. S. Radhakrishnan, Eastoro Religions and Western Thought, p.116.
மேற்கோள்: பொ. அழகு கிருஷ்ணன், முன்னூல், ப.253.

130. பொ. அழகு கிருஷ்ணன், முன்னூல், ப.266.

131. சேக்கிழார், முன்னூல், அவை.1.

132. கச்சியப்ப சிவாசாரியார், முன்னூல், அவை.10.

133. மேலது, அவை.12.

134. மேலது, அவை.20.

135. நம்பி திருவிளையாடற் புராணம், அவை.3.

136. அறிவனார், பஞ்சமரபு, பாயி.2.

137. பரஞ்சோதி முனிவர், திருவிளையாடற் புராணம், அவை.2.

138. ஆனந்தக் கூத்தர், திருக்காளத்திப் புராணம், அவை.4.

139. திருவொற்றியூர் ஞானப்பிரகாசர், சிவஞான சித்தியார் பரபக்க உரை, அவையடக்கம், மேற்கோள்: மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு, 16ஆம் நூற்றாண்டு (மூன்றாம் பாகம், ப.79.

140. ஐயம்பெருமாள் பிள்ளை, பாண்டிமண்டல சதகம், செந்தமிழ்ச் செல்வி, தொகுதி 19, பகுதி 8, ஜூன்-ஜூலை 1921, ப.257.

141. நிரம்பவழகிய தேசிகர், சேதுபுராணம், அவை.4.

142. நிரம்பவழகிய தேசிகர், திருப்பரங்கிரிப்புராணம், அவை.2.

143. திரிகூட இராசப்பக் கவிராயர், திருக்குற்றாலக் குறவஞ்சி, பாயி.9.

144. திரிகூட இராசப்பக் கவிராயர், திருக்குற்றாலச் சிலேடை வெண்பா, காப்பு 5.

145. திரிகூட இராசப்பக் கவிராயர், திருக்குற்றாலத் தலபுராணம், அவை.2.

146. சுந்தரலிங்க முனிவர், திருப்பெருந்துறைப் புராணம், அவை.4.

147. பிறைசை சாந்தக்கவிராயர், இரங்கேச வெண்பா என்னும் நீதிசூடாமணி, (கழக வெளியீடு, 1966), ப.3.

148. கடவுண்மாமுனிவர், திருவாதவூரர் புராணம், கடவுள் வாழ்த்து, 7.

149. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, சிவஞானயோகிகள் சரிதம், அவை.4.

150. சுப. இளங்கோவன், செட்டிநாட்டரசர் மெய்க்கீர்த்திமாலை, அவை.2.

151. மு. இராகவையங்கார், ஆராய்ச்சித் தொகுதி, (பாரி நிலையம், சென்னை, 1964), ப.54.

152. தொல். அகத். நூ.4.

153. நாராயணய்யங்கார் (பதி.), திருமாலிருஞ்சோலைமலை அழகர் பிள்ளைத் தமிழ், அவை.1.

154. நாராயணபாரதி, திருவேங்கட சதகம், பாடல் 102.

155. மேலது, 102.

156. நமச்சிவாய நாவலர், திருவரங்க சந்நிதிமுறை, அவையடக்கம், (சிதம்பர முதலியார் (பதி.), 1913), ப.2.

157. கவிக்குஞ்சரபாரதி, அழகர் குறவஞ்சி, பாயி.11.

158. சா.சி. அரங்கநாதச் செட்டியார், ஸ்ரீவான்மீகி இராமாயண சருக்கார்த்த சங்கிரகம், பாயி.10.

159. நாராயணதாசர், திருவெவ்வுளூரந்தாதி, ப.87.

160. கா.அ. சண்முக முதலியார், இராகவன் புகழ்மாலை, தற்சிறப்புப் பாயிரம் (அவையடக்கம்).

161. சே. சுப்பராய ஐயர், திருக்கோட்டியூர்ச் சௌமிய நாராயண மூர்த்திப் பிள்ளைத் தமிழ், அவையடக்கம் (மீ. சுப்பையர் (பதி.), 1904), ப.4.

162. கச்சியப்பசிவாசாரியார், முன்னூல், அவை.1.

163. மேலது, அவை.13.

164. மேலது, அவை.13.

165. மேலது, அவை.20.

166. மேலது, அவை.14.

167. மேலது, அவை.19.

168. பகழிக் கூத்தர், திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ், சி.பாயி.2.

169. பாலசுப்பிரமணியக் கவிராயர், பழநித்தலபுராணம், அவை.2.

170. மேலது, அவை.3.

171. பெரியவன் கவிராயர், திருமலை முருகன் பள்ளு, மு. அருணாசலம் (பதி.), ப.7.

172. மேலது, ப.7.

173. மேலது, ப.7.

174. மேலது, ப.7.

175. தவத்திரு முருகதாச சுவாமிகள், முன்னூல், பாயி.5.

176. எஸ். வையாபுரிப்பிள்ளை (பதி.), புறத்திரட்டு, அறத்துப்பால், பாடல் 13.

177. தோலாமொழித் தேவர், சூளாமணி, பாயி.3.

178. நீலகேசி, அவை.1.

179. மாதவச் சிவஞானமுனிவர், குளத்தூர் அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ், பாடல் 2.

180. திவாகரமாலை என்னும் திவாகரவெண்பா, காப்பு (குறள் வெண்பா நூற்கோவை, கழக வெளியீடு, 1967), ப.5.

181. பஞ்சபாண்டவர் வனவாசம், சரஸ்வதி தோத்திரம்.

182. வீரமாமுனிவர், கித்தேரியம்மாள் அம்மானை, பாயி.17.

183. வீரமாமுனிவர், தேம்பாவணி, அவை.3.

184. தி. நடராசன் (பதி.), ஞான சவுந்தரி அம்மானை, வரி.54.

185. மகுது முகமது உவைஸ், நம்பிக்கையும் நடைமுறையும், அஜ்மல்கான் (பதி.), ப.3.

186. மெய்கண்டார், சிவஞானபோதம், மெய்கண்டசாத்திரம் பதினான்கு, ப.7.

187. மேலது, சுப்பிரமணிய தேசிகர் உரை, ப.7.

188. பூரணதாசன், சிவயோகசாரம், அவை.1-2 (பெரியஞானக் கோவை, மூன்று பாகங்கள், 1949), பக்.267-268.

189. ஆனந்தக் கூத்தர், முன்னூல், அவை.2.

190. திருவொற்றியூர் ஞானப்பிரகாசர், சிவஞானசித்தியார் பரபக்க உரை, மேற்கோள்: மு. அருணாசலம், 16ஆம் நூற்றாண்டு மூன்றாம் பாகம், ப.79.

191. வடிவழகிய நம்பிதாசர், குருபரம்பரை, அவை.4.

192. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, சேக்கிழார் பிள்ளைத் தமிழ் (திருப்போரூர் ஸ்கந்தப் பெருமான் தேவஸ்தானம் வெளியீடு, 1964), ப.10.

193. நச். தொல். பொருள். செய். நூ.237.

194. கதிர். மகாதேவன், தொன்மம், நவல்பொருள் அறிமுகம், ப.

195. தமிழண்ணல், சங்க இலக்கிய ஒப்பீடு - இலக்கியக் கொள்கைகள் - ப.232.

196. நார்த்ராப் ஃப்ரை, இலக்கியத்தில் தொல்படிவங்கள், க. பஞ்சாங்கம் (பஞ்சு) (மொ.பெ.), பக்.42-80.

197. அருணந்தி சிவாசாரியார், சிவஞானசித்தியார் பரபக்கம், அவை.1.

198. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, சிவஞானயோகிகள் சரித்திரம், அவை.4.

199. பிறைசைச் சாந்தக் கவிராயர், இரங்கேச வெண்பா என்னும் நீதிசூடாமணி, (கழக வெளியீடு, 1966), ப.3.

200. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, திருவானைக்கா அகிலாண்ட நாயகி பிள்ளைத் தமிழ், பாயி.13.

201. திருவெண்காட்டடிகள் புராணம் என்னும் பட்டினத்தப் பிள்ளையார் புராணம், பாயி.21.

202. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, பட்டீச்சுரப் புராணம், அவை.1.

203. சிவஞான சுவாமிகள், காஞ்சிப் புராணம், அவை.4.

204. ஆனந்தக் கூத்தர், முன்னூல், அவை.2, 3.
திரிகூடராசப்பக் கவிராயர், திருக்குற்றாலத்தலபுராணம், அவை.5.

205. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, வீரவனப் புராணம், அவை.3.

206. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, சூரைமாநகர்ப் புராணம், அவை.1.

207. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, மண்ணிப்படிக்கரைப் புராணம், அவை.2.

208. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, வீரவனப் புராணம், அவை.2.

209. வி.ஏ. தியாகராஜ செட்டியார், காமதகனமெனும்போட்டா போட்டி இறந்தகட்சி சவால் லாவணி, சபைவணக்கம் (கே.ஏ. மதுரை முதலியார் (பதி.), ப.7.

210. கம்பராமாயணம், அவை.2.

211. வேப்பத்தூர்ச் சங்கப் புலவர், அழகர் கலம்பகம், (வை.மு.கோ. கம்பெனி பதிப்பு, சென்னை), ப.6.

212. கவிகுஞ்சரபாரதி, முன்னூல், பாயி.11.

213. வெண்மணி நாராயணபாரதி, திருவேங்கட சதகம், பாடல், 102.

214. ஆண்டாள் பிள்ளைத் தமிழ், அவை.2.

215. கச்சியப்பசிவாசாரியார், முன்னூல், அவை.18.

216. பாலசுப்பிரமணியக் கவிராயர், முன்னூல், பழநித்தல புராணம், அவை.3.

217. கதிர். மகாதேவன், முன்னூல், ப.53.

218. மேலது, ப.53-56.

219. பெரியவன் கவிராயர், திருமலை முருகன் பள்ளு, அவையடக்கம் (மு. அருணாசலம் (பதி.), சக்தி காரியாலயம், சென்னை, 1944), ப.7.

220. கதிர். மகாதேவன், முன்னூல், ப.56.

221. சி. குழந்தைவேல் பிள்ளை, வெண்ணெய்மலைத் தலபுராணம், அவை.1.

222. நக்கீரர், திருமுருகாற்றுப்படை, அடி.258.

223. ஐயம்பெருமாள் பிள்ளை, பாண்டிமண்டல சதகம், அவையடக்கம், செந்தமிழ்ச் செல்வி, (தொகுதி-19, பகுதி-8, ஜூன்-ஜூலை, 1921), ப.257.

224. மாதவச் சிவஞானசுவாமிகள், குளத்தூர் அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ், பாடல் 2.

225. சொரூபானந்த சித்தி, சிவப்பிரகாசப் பெருந்திரட்டு, பாயிரப்பனை, அறிஞரைப் புகழ்ந்தவையடக்கம், பாடல் 5.

226. கோ. வடிவேலு செட்டியார் (பதி.), நவநீதசாரம், அவையடக்கம்.

227. அந்தககவி வீரராகவ முதலியார், திருக்கழுக்குன்ற புராணம், பாயி.17.

228. நிரம்பவழகிய தேசிகர், திருப்பரங்கிரிப் புராணம், அவை.3.

229. தணிகைராயன், ஆத்மபோத வெண்பா, அவையடக்கம்.

230. ஸ்ரீரேவணசித்தர், சிவஞானதீபம், அவையடக்கம்.

****

இயல் ஏழு

****

****

அவையடக்கப் பாடல்கள்: தமிழிலும் பிற மொழிகளிலும்

****

உள்ளடக்கம்

7. அவையடக்கப் பாடல்கள் - தமிழிலும் பிறமொழிகளிலும்

மேலைநாட்டு இலக்கியங்களிலும் இந்திய இலக்கியங்களிலும் அவையடக்கப் பாடல்களின் நிலையைக் காணுதல் இவ்வியலின் நோக்கமாகும். மேலைநாட்டு இலக்கியங்களில் நூலின் முன்பகுதிகளில் அவையோர் அல்லது அறிஞர்களைப் பற்றிய சிந்தனைகள் வெளிப்படுத்தப் பட்டுள்ளன. எனினும் அவற்றில் முறையான அவையடக்க மரபு காணப்பெறவில்லை. ஆனால் இம்மரபு தமிழ் மற்றும் பிற இந்திய மொழி இலக்கியங்களில் பின்பற்றப்பெற்று, அது இந்திய இலக்கியங்களின் தனிச்சிறப்பாக விளங்குகின்றது.

7.1. மேலை இலக்கியங்களில் அவையடக்க மரபு:

நூலுக்கு அவையடக்கம் பாடுதல் வேண்டும் என்ற மரபு மேலை இலக்கியங்களில் காணப்பெறவில்லை. தம் தகுதிகுறித்த ஐயுற்றுப் பாடுதலும் தம் நிலையை இரக்கத்தோடு கூறிக்கொள்ளுதலும் சில கவிஞர்களிடம் உண்டு[1]. எனினும் தமிழில் பின்பற்றப்பட்டு வரும் அவையடக்கம் போன்று இவை அமையவில்லை. வாழ்த்துக் கடவுளின் பெருமை மற்றும் நூற்பொருளின் சிறப்பைக் குறிப்பிட்டுத் 'தாம் உயர்வாகப் பாடவேண்டும்' என்று வேண்டிக் கொள்ளுதலைப் பல ஐரோப்பியக் கவிஞர்களிடம் காணமுடிகின்றது. இவையாவும் கலைக்கடவுள் அல்லது பொருட்கடவுளை நோக்கியனவாகவேயுள்ளன. மாண்டக் கவிஞர்கள் அல்லது அறிஞர்களை நோக்கியதாக அமையவில்லை[2]. எனவே இவர்களின் வேண்டுதல்களை அவையடக்கம் கூறுவதாகக் கொள்ளல் இயலாது.

எனினும் மில்டன், அரிஸ்டாட்டில் போன்றோர் அறிஞர்களை அல்லது அவையோரைக் கருத்திற்கொண்டு பாடுதல் பயனுடையது எனக் கருதியுள்ளனர். அறிஞர்களின் நன்மதிப்பைப் பெற்று அவர்களைத் தம்பால் ஈர்க்கும்வகையில் பாடவேண்டும் என்ற எண்ணம் மில்டனுக்கு இருந்தது என்பதை அ.அ. மணவாளன் சில சான்றுகளைக் காட்டி விளக்கியுள்ளார். அவைவருமாறு:

"1. எண்ணிக்கையில் சிலரேயாயினும் சிறந்த அவையோரையே தாம் விரும்புவதாக மில்டன் யூரேனியாவை வேண்டுகிறார்.

2. அவையோர் அல்லது வாசகரின் எண்ணிக்கையைவிடத் தகுதியும் பெருமையுமே மிகவும் மதிக்கத்தக்கன என்னும் கருத்தை மில்டன் பிறிதோரிடத்தும் கூறுகிறார்.

3. தாம் கண்ணொளி இழந்து வருந்தினும் இறையருளால் கருத்தொளி பெற்றுப் பாடுவதாகவும், 'தீநாட் பட்டுக் கொடுவாய் வீழ்ந்தும் புறவிருளில் உழந்தும் தன்புறினும், நள்ளிருள் யாமத்தும் நனிமலர்க் காலையும் நின்னருள் என்னுள் அரும்புதலின் பாடாநின்ற' எனக்குப் பண்பட்ட அவையோரைத் தருக' எனவும் மில்டன் தம் பாயிரப் பகுதியில் கூறுவது மேலைக் காப்பியமரபிற் காணாத தன்மையாகும்.

4. தாம் செய்யும் புதுமையை மில்டனும் உணர்ந்திருந்தமையால்தான், 'பாயிரம் அவையோரின் நன்மதிப்பைப் பெறுமாறு அமைய வேண்டும்; இல்லையெனில் அவையோர் உள்ளத்தைத் தம்பால் ஈர்க்க இயலாது; தாம் விரும்பியவாறும் (கவிஞர்கள்) மேம்பட இயலாது' என்றும் கூறுகிறார்"[3].

இம்மேற்கோள்கள் அவையோரையோ அறிஞர்களையோ கருத்திற்கொண்டு மில்டன் பேசியுள்ளார் என்பதைக் காட்டுகின்றன. தம் நூலை ஏற்றுக் கொள்ளுமாறு அவையோரைப் பணிவோடு வேண்டிக் கொள்ளுதல் அவையடக்கப்

பண்பாகும். மில்டன், 'எனக்குப் பண்பட்ட அவையோரைத் தருக' எனக் கடவுளிடம் வேண்டுவது புதுமையாகவுள்ளது. இங்கு அவையோரை வேண்டுவதாக அமையாது எனினும் அவையோரின் நன்மதிப்பைப் பெறவேண்டும் என்ற எண்ணம் அவருக்கு இருந்ததைப் புலப்படுத்துகிறது. மேலும் இது அவையடக்கம் பாடும் நூலாசிரியன் சிந்திக்க வேண்டியதாகவும் உள்ளது.

அரிஸ்டாட்டிலின் நூலினை ஆராய்ந்த அ.அ. மணவாளன்,

> "அரிஸ்டாட்டில் தம்முடைய 'பேச்சுக்கலை' என்ற நூலில் 'இதனால் பேசுவோனுடைய (ஆசிரியனுடைய) உள்ளப்பாங்கு நமக்கு விளங்குகின்றது. உள்ளத்தூய்மையும் நன்னெறி நோக்கும் அமைந்த உயர் பண்பாளர் கூற்றினை நாம் விரைந்து ஏற்றுக் கொள்கிறோம்' எனக் கூறுவதால் கவிஞன் அவையோரை நோக்கிக் கூறும் பாயிரப்பகுதி ஒருவகையில் சிறந்த பயனுடையது என்பதை அரிஸ்டாட்டிலும் உணர்ந்திருந்ததாகத் தெரிகிறது"[4]

எனக் குறிப்பிட்டுள்ளார். அரிஸ்டாட்டிலின் கூற்றால் அவையோர் தன்மையும் பாயிரப் பகுதியின் இன்றியமையாமையும் புலப்படுத்தப்பெற்றன. உள்ளத் தூய்மையும் நன்னோக்கும் கொண்ட உயர்பண்பாளர்கள் அவையடக்கம் மிக்கோராய் இருப்பர். எனவே இத்தகையோர் கூற்றினை அவையோர் விரைந்து ஏற்றுக்கொள்ளுதல் இயல்பு.

எத்தகைய அவையோர் கிட்டவேண்டும் என்ற கருத்தை மில்டனும், எத்தகைய கவிஞர்களின் கூற்றினை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற சிந்தனையை அரிஸ்டாட்டிலும் முன்வைத்துள்ளனர். இவையன்றி அவையோர் முன் நூலாசிரியன் கூறவேண்டியது யாது என்பது பற்றிய குறிப்புகள் இடம்பெறவில்லை.

மில்டனுக்கு முன் தோன்றிய ஹோமரின் 'இலியத்'திலும் தாந்தேயின் 'காமடி'யிலும் கடவுளை நோக்கிப் பாடியதாகப் பாயிரப் பகுதிகள் அமைந்துள்ளனவாகக் கூறப்படுகின்றது[6]. மேலும், 'பாயிரம்' என்ற பகுதிக்கு,

> "கவி எழுதி அகத்தூண்டுதல் பெறுவதற்காகக் காப்பிய தேவதையான கலியோப்பினை (Calliope) வேண்டி எழுதப்படும் பாடல். இது ஒரு காப்பியத்தின் அல்லது நீண்ட கவிதையின் ஆரம்பத்தில் அமையும். சில சமயங்களில் இது புரவலருக்கு அல்லது காதலிக்கு வேண்டப் பட்டதாக அமையும். கவிதைத் தேவதைகள் (Muses) மீது நம்பிக்கை மறைந்தபின்னரும் பாயிரம் ஒரு வழக்காகப் பின்பற்றப்படுகிறது"[7]

என்று மேலை இலக்கியச் சொல்லகராதி விளக்கம் தந்துள்ளது. இக்கருத்துகள் யாவும் தமிழில் உள்ளதுபோல் முறையான அவையடக்கம் மேலை இலக்கியங்களில் பின்பற்றப்பெறவில்லை என்பதைத் தெளிவுபடுத்துகின்றன. இதனை அறிஞர்களும் வலியுறுத்தியுள்ளனர்[8]. எனினும் அவையோர் பற்றிய சிந்தனையும் அவைமுன் தன்னடக்கத்துடன் பேசுதல் பயன்விளைவிக்கும் என்ற எண்ணமும் மேலைநாட்டுக் கவிஞர்கள் சிலரிடம் இருந்திருக்கின்றன என்பதையும் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

7.2. இந்திய இலக்கியங்களில் அவையடக்கப் பாடல்கள்:

அவையடக்கம் இந்திய இலக்கியத்தின் பொதுக் கூறுகளுள் ஒன்றாக விளங்குகின்றது. தொன்மைமிக்க மொழிகளான வடமொழி மற்றும் தமிழ் மொழிகளில் உள்ள நூல்களில் இம்மரபு நெடுங்காலமாகப் பின்பற்றப்பெற்று வருகின்றது. ஆய்வுவசதி கருதி வடமொழி, தமிழ் மற்றும் தமிழோடு தொடர்புடைய கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளில் உள்ள நூல்களின் அவையடக்கப் பாடல்கள் மட்டும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. மேலும்

தமிழ் அவையடக்கப் பாடல்கள் முன் இயல்களில் ஆராயப்பட்டுள்ளதால் இங்கு தேவையான இடங்களில் ஒப்பீட்டுமட்டும் காட்டப்படும்.

7.2.1. வடமொழி: வடமொழி இலக்கியத்தை வேதகால இலக்கியம் செம்மொழிக்கால (சமசுகிருதம்) இலக்கியம் என இருபெரும் பிரிவாகப் பிரித்துள்ளனர். வேதம், பிராமணம், ஆரணியகம், உபநிடதம் ஆகியன வேதகால இலக்கியங்கள். இதிகாசம், காவியம், புராணம், தருமசாத்திரம், நாடகம், சமயசாத்திரம், தோத்திரம் போன்றன சமசுகிருதகால இலக்கியங்கள் என்பர்[9].

இவற்றுள், வேதகால இலக்கியங்கள் தோற்றமும் முடிவும் இல்லாதன. அவற்றில் அவையடக்கம் காணப்பெறவில்லை. இவை ஒருவரால் எழுதப்பெற்று அரங்கேற்றம் கண்டவையல்ல என்பதும் இதற்குக் காரணமாக அமைகின்றது. வேதகால இலக்கியங்கள் எழுதப்பெற்ற வைதிக மொழியிலிருந்து தோன்றிக் காலப்போக்கில் மாற்றமடைந்து வேறாகத் தோன்றும் சமசுகிருத மொழியில் தோன்றிய சில இலக்கியவகை நூல்களில் அவையடக்கப் பொருண்மை பேசப் பட்டுள்ளன. இனி, சமசுகிருதம் என்பது வடமொழி என்ற தொடரால் குறிக்கப்பெறும்.

செம்மொழிக்கால இலக்கியங்களுள் இதிகாசம், புராணம் ஆகியவற்றில் அவையடக்கப் பாடல்கள் காணக்கிடைக்கவில்லை. இப்போது கிட்டும் வால்மீகி இராமாயணம், வியாசபாரதம் ஆகியவற்றின் முன்முகப் பகுதிகள் மூலாசிரியர்களால் எழுதப்பெற்றவைவா என்பதும் ஐயத்திற்கிடமாக உள்ளன எனக் கருதப்படுகின்றது[10].

வேதங்களுக்கு அடுத்தபடியாகப் புராணங்கள் ஐந்தாவது வேதங்களாகக் கொண்டாடப்படுகின்றன. இவை வேதகாலந்தொட்டுச் செவிவழியாக வழங்கப்

பெற்ற செம்மொழிக் காலத்தில் ஏட்டில் எழுதப்பெற்றன எனவும், இவற்றைச் சூதர்கள் எழுதினர் எனவும் கூறப்படுவதுண்டு[11]. ஆதலால் இவற்றிலும் அவையடக்கப் பொருண்மை பேச வாய்ப்பில்லை எனத் தெளியலாம்.

<u>7.2.1.1. இலக்கண நூல்கள்:</u> இன்று வழக்கிலுள்ள மிகத் தொன்மையான வடமொழி இலக்கண நூல் பாணினியால் எழுதப்பெற்ற பாணினீயம் என்பதாகும். இதில் அவையடக்கத்திற்குரிய இலக்கணமோ குறிப்போ இல்லை; நூலுக்கும் அவையடக்கம் காணப்பெறவில்லை[12]. பாணினியின் காலம் கி.மு. நான்கு அல்லது கி.மு. ஐந்தாம் நூற்றாண்டு எனக் குறிப்பிடப்படுகின்றது[13].

ஏறத்தாழ, இக்கால கட்டத்தையொட்டி வாழ்ந்தவராகக் கருதப்படும் தொல்காப்பியர் தம் நூலில் அவையடக்க இலக்கணம்[14] சுட்டியிருப்பது நோக்கத்தக்கது. செய்யுளியலில் யாப்பு பயின்றுவரவேண்டிய இடங்களைப் பற்றிக் குறிப்பிடும்போதுதான் அவையடக்கத்தைத் தொல்காப்பியர் குறிக்கின்றார். பிற இடங்களில் சுட்டினாரில்லை. எனவே பாணினி செய்தது சொல்லிலக்கண நூல் என்பதால் அவையடக்கம் தொடர்பாகப் பேசாது விட்டார் எனக் கருத இடமுண்டு. எங்ஙனமாயினும், இந்தியமொழி நூல்களில் முதன்முதலாகத் தொல்காப்பியத்தில் மட்டுமே அவையடக்கத்திற்கு இலக்கணம் காணப்பெறுகின்றது.

தொல்காப்பியர் என்ப, என்மனார் புலவர் என்று குறிப்பிடுவதுபோல் பாணினியும் தமக்கு முன் இலக்கணஞ்செய்த புலவர்களைக் குறிப்பிட்டுள்ளார். இது பாணினியின் தன்னடக்கத்தை வெளிப்படுத்துவதாகவுள்ளது எனக் கூறப்படுகின்றது[15].

கி.பி. 650-700இல் வாழ்ந்த தண்டி என்பவர் 'காவ்யதர்சம்' என்ற வடமொழி இலக்கண நூலினை எழுதினார்[16]. இதில் காப்பியங்களில்

இடம்பெற வேண்டிய உறுப்புகள் தெளிவாகச் சுட்டப்பெற்றுள்ளன. கடவுள் வாழ்த்து முதலான நூன்முகத்து இடம்பெறும் உறுப்புகள் சுட்டப்பெற்றும் அவையடக்கம் குறிக்கப்பெறவில்லை. நூலுக்கும் அவையடக்கம் பாடப் பெறவில்லை[17].

"இந்த நூலிற் கூறப்பட்ட இலக்கணங்களெல்லாம் தமிழ்மொழி தண்டியலங்காரத்தில் மொழிபெயர்க்கப்பட்டன. பல உதாஉறரணச்லோகங்களும் அங்குள்ளவற்றை ஒத்திருக்கின்றன. இவரே தமிழிலும் எழுதினரோ என்ற ஐயம் உண்டாகிறது"[18]

எனக் கூறுகின்றார் பி.எஸ். சுப்பிரமணிய சாஸ்திரி. தமிழாக்கம் செய்யப் பெற்ற தண்டியலங்காரத்தில் அவையடக்கக் குறிப்புகள் இல்லாததும் மேற்கூறப் பெற்ற கருத்தை உறுதிசெய்கின்றது.

மேலும், தமிழ்த் தண்டியலங்காரத்திற்கு உரை எழுதிய சுப்பிரமணிய தேசிகர்,

"நூல்முன் வரும் உறுப்பாக வடநூலாரால் கூறிய ஆசி, நமஸ்கிரியை, வஸ்து, நிர்த்தேசம் ஆகியவற்றை முறையே வாழ்த்து வணக்கம் உரைக்கும் பொருள் உணர்த்தல் என்று தண்டியலங்காரர் குறிப்பிடுகின்றார்"[19]

என விளக்கியுள்ளார். இதிலிருந்து வடநூலார் வாழ்த்து வணக்கம் வருபொருள் ஆகியவற்றை மட்டும் குறிப்பிட்டுவிட்டு, அவையடக்கம் சுட்டாதுவிட்டனர் என்பது அறியப்படும். எனவே வடமொழி காவ்யாதர்சத்திலும் தமிழ்த் தண்டியலங்காரத்திலும் நூலுக்கு அவையடக்கமும் நூலில் அதுதொடர்பான செய்திகளும் இடம்பெறவில்லை என்பது தெளிவாகின்றது.

தொல்காப்பியத்தையடுத்து யாப்பருங்கல விருத்தியுரை[20]யில் காட்டப் பெற்ற மேற்கோள் பாடலொன்றிலும் மாறலங்காரத்திலும்[21] இலக்கண விளக்கத்திலும்[22] அவையடக்கக் குறிப்புகள் காணப்படுகின்றன. இவை தமிழில் காலந்தோறும் அவையடக்கச் சிந்தனை உண்டு என்பதைக் காட்டுகின்றன.

7.2.1.2. நாடகங்களும் காப்பியங்களும்: நாடகம் நாட்டிய வேதமெனவும் கருதப்பட்டது. இந்தியாவில் கி.பி.100இல் ஏற்பட்ட கிரேக்க நாகரிகத்தின் செல்வாக்கும் பல நாடுகளின் இராஜசபைகளில் கிரேக்க நாடகங்கள் காட்டப்பெற்றதும் இந்திய நாடக மறுமலர்ச்சிக்கு உதவின[23].

இம்மறுமலர்ச்சிக் காலத்தை ஒட்டிவாழ்ந்த பரதமுனி, பாசமகாகவி ஆகியோரின் சாத்திரம் மற்றும் நாடகநூல்களில் அவையடக்கம் கிட்டில[24].

7.2.1.3. காளிதாசரின் நூல்கள்: காளிதாசரின் காலம் தொடர்பாகப் பல கருத்துகள் நிலவுகின்றன. எனினும் கி.பி.4ஆம் நூற்றாண்டையொட்டிய பகுதிகளில் வாழ்ந்தவர் என்பது பலரின் கருத்தாக வுள்ளது[25]. தமது இளமைக்காலத்தில் குமாரசம்பவம், மாளவிகாக்னிமித்திரம் ஆகிய இரு நூல்களை இயற்றினார். இவற்றுள் குமாரசம்பவம் என்ற காப்பியத்தில் அவையடக்கம் இல்லை.

7.2.1.3.1. மாளவிகாக்னிமித்திரம்: மாளவிகாக்னிமித்திரம் என்பது நாடகநூல். இதன் முன்பகுதியில் சூத்திரதாரன் கூற்றாகப் பின்வரும் பகுதி இடம்பெற்றுள்ளது.

> "பழமை என்பதினால் எல்லாம் உயர்ந்ததல்ல; புதுமை என்பதால் எதுவும் ஒதுக்கப்படத்தக்கதல்ல. அறிஞர்கள் சிறந்தவற்றை ஏற்றுக் கொள்வார்கள். ஆனால் முட்டாள் மற்றவர்களைக் குறைகூறுவதிலேயே பெருமை கொள்வான்"[26]

இதில் நாடகம் நடைபெறும் அவையிலுள்ள அறிஞர்களின் உயர்வு பேசப் பட்டுள்ளதைக் காணலாம். அத்துடன் நூலாசிரியனின் பெருமிதமும் வெளிப் படுத்தப்பட்டுள்ளது.

தமிழில் அவையடக்கம் பாடிய உமாபதி சிவாசாரியார் காளிதாசனின் கூற்றை அடியொற்றிச் செல்வதைக் காணமுடிகின்றது.

> "தொன்மையவாம் எனும்எவையும் நன்றாகா இன்று
> தோன்றியநூல் எனும்எவையும் தீதாகா...."[27]

என்று உமாபதி சிவாசாரியார் அவையடக்கப் பகுதியில் குறிப்பிட்டுச் செல்கின்றார். காளிதாசன் தம் நூலினை ஏற்றுக் கொள்வோரை அறிஞர்கள் என்றும் ஏற்றுக் கொள்ளாதாரை முட்டாள்கள் என்றும் குறிப்பிடும் போக்கு, தமிழ் அவையடக்கப் பாடல்கள் பலவற்றில் காணப்பெறுவதாகும். கந்தபுராணம்[28], சிவஞான போதம்[29], பட்டீச்சரபுராணம்[30], இராவண காவியம்[31] ஆகியன இதற்குச் சில சான்றுகளாக அமைகின்றன.

எனவே காளிதாசன் பெருமிதம் தோன்றும் வகையில் ஆணவத்துடன் பேசினாரெனினும் அவையோரைக் கருத்தில் கொண்டு பாடியுள்ளார் எனக் கருதவேண்டும். மேலும்,

> "வடமொழி நாடகங்களின் தொடக்கத்தில் கடவுள் வாழ்த்தும் அவையோர் மனநிறைவு கொள்ளும் வகையில் சில பாடல்களும் பாடப்படுவதுண்டு. இவ் அறிமுகப்பகுதி 'நாந்தி' என அழைக்கப்படும். இதில் ஆசிரியர் பணி, நடிகர்கள், நாடகத்தில் சில தேவையான நிகழ்ச்சிகள் ஆகியனவும் இடம்பெறும். இந்நாந்தி ஆசிரியரால் பாடப்பெறுவது; எனினும் மற்றொருவர் (சூத்திரதாரன்) கூற்றாக அமையும்"[32]

எனக் குறிப்பிடப்படுவதால், அவையோரை மனநிறைவுப்படுத்தும் வழக்கம் வடமொழி நாடகங்களுக்கு எப்பழ பழனிவாகின்றது. கடவுள் வாழ்த்து முதலான உறுப்புகளைக் கொண்ட பாயிரம் வடமொழியில் 'நாந்தி' என அழைக்கப்பெற்றதும், அது ஆசிரியனின் கூற்று என்பதும் பெறப்பட்டன.

இந்நாந்தியில் அவையோரை மனநிறைவுப் படுத்தும் பகுதியை அவையடக்கப் பொருண்மையுடையதாகக் கருதலாம். இக்கூறு காளிதாசனின் 'மாளவிகாக்னிமித்திரம்' என்ற நாடகநூலில் இடம்பெற்றுள்ளது மனங்கொள்ளத் தக்கது.

7.2.1.3.2. சாகுந்தலம்: காளிதாசனின் மற்றொரு நாடகநூல் சாகுந்தலம். இதில் சூத்திரதாரன், பிரஸ்தாவனை ஆகிய நாடகமாந்தர்களின் வழி அவையடக்கப் பொருண்மை பேசப்பட்டுள்ளது.

> "சூத்திரதாரன்: மாதராய்! நான் உண்மையைச் சொல்லிவிடுகிறேன். இங்குள்ள அறிவுடையோர் நமது நடிப்பின் திறமையைக் கண்டு மகிழும் அளவும், நம்முடைய திறமையினைச் சிறந்ததென நான் மதியேன். நன்கு தேர்ச்சியடைந்த அறிவுடையோர் உள்ளமும் தன்னளவில் நம்பிக்கை இல்லாததாய் இருக்கின்றது"[33]

என்ற கூற்று இடம்பெற்றுள்ளது. இதில் அவையோரை மனநிறைவடையச் செய்து அவையோரின் நன்மதிப்பைப் பெறவேண்டும் என்ற நூலாசிரியனின் எண்ணம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. தம் நூலை மறைமுகமாகச் சிறப்பித்துக் கூறும் போக்கும் புலப்படுகின்றது. மாளவிகாக்னிமித்திரத்தில் ஆசிரியனுக்கு இருந்த வேகம் தணிந்து தன்னடக்கம் வளர்ந்துள்ள நிலையினை இக்கூற்றில் காணமுடிகின்றது.

7.2.1.3.3. இரகுவம்சம்: காளிதாசன் தம் இறுதிக் காலத்தில் சாகுந்தல நாடகத்தையும் இரகுவம்சம் என்ற காப்பியத்தையும் எழுதினார் எனக் கூறப்படுகின்றது[34].

இரகுவம்சம் நூலின் முறையான அவையடக்க அமைப்பினைக் கொண்டிருக்கிறது. நூலின் கடவுள் வாழ்த்தையடுத்து அவையடக்கம் பாடப் பெற்றுள்ளது.

"கதிரோன் கால்வழி எத்துணை! காட்சியிற்
றுதிரா என்மதி எத்துணை! தாண்டிட
எதிர்க டப்பரு மாகடல் ஏற்றனன்
மதிகு றைந்திடத் தாம்பட கொன்றினால்"[35]

"மந்தன்! சீர்புல வோன்புகழ் வேண்டினேன்
றுந்து நெட்டையன் கொள்பழம் பெற்றிட
வந்தொர் குள்ளனுங் கையுயர்த் திட்டென
எந்த மக்களும் எள்ளிந கைத்திட"[36]

"கதிரோன் கால்வழி யாமனி முன்கவி
பொதுத்த உட்டொளை மூலமென் போக்கொரு
கதிரி ரத்தினம் வச்சிரஞ் செய்தொளை
யதுசெ லுத்திடும் நூல்நுழை வொப்பதே"[37]

ஆகிய பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இதனையடுத்துச் சில பாடல்களில் இரகுமரபினரின் சிறப்புகள் கூறப்பெற்றுள்ளன. தொடர்ந்துவரும்,

"இரகு கால்வழி நற்குணம் என்செவி
நிரம்பப் பின்மை னுண்டிடச் சொல்வளம்
நிரம்பப் பெற்றில னாயினுஞ் சின்மதி
துரத்த வேயவை வேன்வர லாற்றினை"[38]

"பெரியோர் நன்மையுந் தின்மையுங் காணுதற்
குரியோர் கேட்பதற்கு குற்றதென் காவியங்
கரிநெ ருப்புச்சு டச்சுடக் காட்டுறு
தெரியத் தூயதா பொன்கலப் பானதா"[39]

என்ற பாடல்களும் அவையடக்கமாக அமைந்துள்ளன.

காளிதாசன் தன்னுடைய அறிவையும், நூல் செய்யப்புகுந்த தம் செய்கையையும் தாழ்த்திக் கூறியுள்ளார். அவையோர் உயர்வு, நூற்சிறப்பு, பாடுபொருட் சிறப்பு ஆகியவும் சுட்டிச்செல்கின்றார். அவையடக்கப் பண்பை மிகுத்துக்காட்ட உவமைகளைக் கையாளும் போக்குக் காணப்படுகின்றது. இவை நூலாசிரியன் தாழ்வும் அவையோர் உயர்வும் சுட்டும் அவையடக்கப் பொதுப் பண்பினைக் காட்டுவன; தமிழில் வழக்கப்பெறுவதுபோல் முறையான அவையடக்க அமைப்பினைக் கொண்டன.

காளிதாசனின் அவையடக்கப் பாடல்களுடன் ஒப்பிடத்தக்கப் பாடல்கள் தமிழில் காணப்படுகின்றன. அவர் சிற்றறிவு, குறைமதி என்று குறிப்பிடுவதைத் தமிழ்ப் பாடல்களில் பரவலாகக் காணலாம். 'தாண்டமுடியாத கடலை ஒரு சிறிய பரிசல் அல்லது படகுகொண்டு கடக்க எண்ணுவதைப் போன்றது என் செயல்' என்று குறிப்பிடுவதைப், 'பாற்கடல் முழுவதையும் நக்கிக் குடிக்கப் பூனை முயலுவதைப் போன்றது'[40] என்ற கம்பரின் உவமையுடன் ஒப்பிடலாம். மேலும் பெரும்பற்றப்புலியூர் நம்பி[41], சேக்கிழார்[42], வீரமாமுனிவர்[43] ஆகியோரும் ஒத்த உவமைகளைத் தந்துள்ளனர்.

'நெட்டையன் அடையும் கனியை எட்டக் கை உயர்த்தும் குட்டையன் போல நகைப்பிற்கிடமாகிறேன்' என்று காளிதாசன் குறிப்பிடும் உவமைக்கு, 'உயர்ந்த மலைமீது ஏறி அங்குள்ள தேனைப்பருக எண்ணும் முடவனைப் போல'[44] என்ற தமிழ் அவையடக்க உவமையை ஒப்பிடலாம். இதுபோன்று வழமுற்றோர் செயலாகப் பல உவமைகள் தமிழ் அவையடக்கப் பாடல்களில் பயின்று வந்துள்ளன.

'துளையிடப்பெற்ற வச்சிரமணிக்குள் நூல் கோற்பது போலாகும் நான் இரகுவம்சம் கூறுவது' என்ற காளிதாசனின் அவையடக்கத்தை,

"கொல்லுலை வயிரவூசி குருமணி குழித்தவாயின்
மெல்லியபஞ்சி நூல்போம் விழுத்தக வுடையதம்மா"[45]

என்ற வரதுங்கராம பாண்டியனின் அவையடக்கத்துடன் ஒப்புநோக்க முடிகின்றது.

காளிதாசனின் இரகுவம்சத்தைத் தமிழில் தந்த அரசகேசரி நான்கு பாடல்களை அவையடக்கமாகத் தந்துள்ளார். 'கடக்கமுடியாத கடலை ஒரு சிறிய பரிசிலைக் கொண்டு கடப்பதைப் போன்றது' என்ற காளிதாசனின் உவமையைச் சற்று மிகைப்படுத்தி, 'கல்லைத் தோணியாக்கிக் கடலைக் கடப்பது போன்றது'[46] எனத் தந்துள்ளார். 'நெட்டையன் அடையும் கனியை எட்டக் கை உயர்த்தும் குட்டையன் போல' என்ற உவமையைத் தழுவி,

"உட்டு ளக்கறு சொற்பொரு ளுக்குமுன்
விட்டு ளத்தமிழ் சொல்வனென் புயான்மடக்
கட்டு ளத்தெனல் கையலி கற்குழி
தொட்டு ளப்புனல் சுட்டுத லொக்குமே"[47]

என்று 'கையில்லாதவன் கல்லைக் குழிதோண்டி நீர் குடிப்பேன் என்று சொல்வதை ஒத்துள்ளது நான் தமிழில் கூறுவது' எனத் தந்துள்ளார். காளிதாசனின் அவையடக்கத்தை அப்படியே மொழிபெயர்க்காது, அதனை அடிப்படையாகக் கொண்டு அரசகேசரி அவையடக்கம் பாடுவது நூலுக்குத் தாம் அவையடக்கம் பாடவேண்டும் என்ற கருதியேயாகும்.

<u>7.2.1.4. பாரவி:</u> கி.பி.6ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வடமொழிக் கவிஞர் பாரவி. கிராதார் ஜுனீயம் இவரால் எழுதப்பெற்றது[48]. இந்நூலின் முன்பகுதியில்,

> "கவி மறைமுகமாய்த் தன் நூலின் சிறப்பை அடிக்கடிக் கூறுதலாலும், பாரவியின் வாக்கு அர்த்த கௌரவத்தாற் சிறந்தது என்ற வழக்கு அவருடைய வாயிலிருந்தே வந்தது என்பதாலும் தன்னுடைய வ்யாகரணப் புலமையைக் காட்ட உவமைகளைக் கூறுவதாலும், இதனை இயற்றும்போது இவர் பரிபக்குவ நிலையை அடையவில்லை என்பது திண்ணம்"[49]

என்று குறிப்பிடுகின்றார் பி.எஸ். சுப்பிரமணியசாஸ்திரி. இக்கருத்தால் நூலாசிரியனிடம் தற்பெருமை பேசும் போக்குக் காணப்படுவதை உணர முடிகின்றது. தம்மையும் தம் நூலையும் புகழ்ந்துபேசும் வழக்கு வடமொழிக் கவிஞர்களிடம் பெரிதும் போற்றப்படுவது என்பதை இச்சான்று காட்டும்.

<u>7.2.1.5. பர்த்ருஹரி:</u> கி.பி.6ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மற்றொரு வடமொழிக் கவிஞர். 'நீதிசதகம்' என்ற புகழ்மிக்க நூல் இவரால் இயற்றப்பெற்றதாகும்[50]. இவர்தம் நூலின் முற்பகுதியில்,

> "அறிஞர்கள் பொறாமை பிடித்தவர்கள். செல்வந்தர்கள் கர்வம் பிடித்தவர்கள். அறிவற்றவர்களோ அறியாமையால் பீடிக்கப் பெற்றவர்கள். இவர்கள் இந்நூலினைப் படிக்கத் தகுதியற்றவர் களாவர். அதனால் இந்த ஸுபாஷிதம் (நன்கு சொல்லப் பெற்றது) என்னிடத்திலேயே ஜீரணமாகிவிட்டது.
>
> ஒன்றும் தெரியாதவனைச் சுலபமாக சந்தோசப்படுத்தமுடியும். நன்கு கற்றவனை இன்னும் எளிமையாகத் திருப்திப்படுத்தமுடியும். ஆனால் சிற்றறிவு படைத்திருப்பவனைப் பிரும்மாவினாலும் திருப்திப்படுத்தவியலாது"[51]

என்ற பொருளில் பாடியுள்ளார். இதில் கவிஞன் தன்னையும் தன் நூலையும் மறைமுகமாகச் சிறப்பித்துக் கூறும் போக்குப் புலனாகிறது. எனினும் அவையோரைக் கருத்தில் கொண்டே இவ்வளவும் பேசியுள்ளார் என்பது தெளிவு.

7.2.1.6. பிரவரசேனன்: 'தசமுகவதம்' என்ற நூலினை எழுதியவர் பிரவரசேனன் ஆவர். இந்நூலில்,

> "இந்நூலை எனது முயற்சியால் எழுதினேன். புதிய பொருளைக் காவியத்திற் கூறுதல் என்பது எளிதன்று"[52]

என்ற பொருளில் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. தம் புலமையை அவையோர்க்கு உணர்த்தும் பாங்கில் கவிஞன் கூற்று அமைந்துள்ளது. இவரின் காலம் கி.பி.6ஆம் நூற்றாண்டென்ப[53].

7.2.1.7. பட்டி: 'பட்டி காவியம்' எழுதிய வடமொழிப் பிராமணரிவர். இதற்குப் பட்டி இட்டபெயர் 'இராவணவதம்' என்பதாகும். இவரது காலம் 6ஆம் நூற்றாண்டையொட்டியது என்பர்[54].

> "இந்நூலைப் படித்த வ்யாகரணர்களும் வித்வான்களும் ஆனந்தம் அடைவர்"[55]

என்று ஆசிரியர் குறிப்பிடுவதன்வழி, அவையோரை மனநிறைவுபடுத்த வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு இருந்ததை உணரமுடிகின்றது.

7.2.1.8. மாகன்: இவரது காலம் தொடர்பாகக் கருத்து வேறுபாடு உண்டு; எனினும் கி.பி.7ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அவர் இருந்தார் எனக் கொள்ளல் தகும் என்பர்[56].

தம்மையும் தம் புலமைத்திறனையும் சிறப்பித்துக் கூறும் தன்மை இவரிடம் காணப்படுகின்றது. இவர் எழுதிய 'சிசுபாலவதம்' என்ற நூலில்,

> "நான் வ்யாகரண சாஸ்திரத்தில் புலமைவாய்ந்தவன். காமசாஸ்திரம், சோதிடம் ஆகியன நன்கு அறிந்தவன்"[57]

என்று கூறிக்கொள்வது தற்புகழ்ச்சியாகப்படும். அவையோரும் தம்மைத் தாழ்த்திக் கொள்வதனைப் பெருமைக்குரியதாகக் கருதியிருக்க வேண்டும். வடமொழிக் கவிஞர்கள் பலரிடம் இப்போக்குக் காணப்படுவது இதனை உறுதிசெய்கின்றது.

7.2.1.9. பவபூதி: காளிதாசனுக்கு அடுத்த நிலையில் வைத்துப் போற்றப்பெறும் வடமொழிக் கவிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர். மாலதீமாதவம், மஹாவீரசரிதம், உத்தரராம சரிதம் ஆகியன இவர் எழுதிய நூல்கள். கி.பி.8ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர் என்ப[58].

மாலதீமாதவம் இவர் இளமைக் காலத்தில் எழுதியது. காளிதாசன் இளமைக் காலத்தில் பாடியதுபோல ஆணவமும் பெருமிதமும் தோன்ற இவரும் பாடியுள்ளார். இதனை,

> "நானே அறிஞன். என் நூலைப் பலர் போற்றாது இகழ்கின்றனர். அவர்கள் அறியாதார். என் நூலைப் போற்ற யாரேனும் ஒருவன் எங்கேயாவது எக்காலத்தாவது பிறப்பான்"[59]

என்ற பொருளில் பவபூதியின் பாடல் அமைந்துள்ளதைக் கொண்டு உணரமுடிகின்றது. மேலும்,

> "வேதம், உபநிஷதம், யோகம், ஸாங்க்யம் இவற்றின் அறிவு நாடகம் இயற்றுவதற்குச் சிறந்த ஸாதனமாகுமா? இழிவின்றிச் சிறந்த சொல்வழக்கு, பொருட்செறிவுள்ள சொல் இவையல்லவோ சிறந்த ஸாதனமாகும். என்னுடைய நூலில் சுவைகள் செறிந்தும், நாயகன் நாயகி செயல்கள் மனோஹரமாயும் கதைகள் சித்திரமாயும், சொல் வழக்குச் சிறந்தும் விளங்குகின்றன"[60]

என்று கூறுவதால் தம் திறனை உயர்த்திப் பேசும் போக்கு இவரிடமும் உண்டு என்பது புலனாம்.

மஹாவீர சரிதமும் உத்தரராமசரிதமும் இவரது முதுமைக் காலத்தில் எழுதப்பெற்றவை. இவற்றில் அவையடக்கப் பண்பை வெளிக்காட்டும் வகையில் ஆசிரியர் பேசியுள்ளார்.

"நானும் அறிந்தவன்; கதையும் ராமாயண கதை; சபையோரும் ரஸிகர்கள். நல்ல அம்சத்தில் பிறந்த வித்வானாகவும் இருந்து சிறிது தவறினால், அவற்றினையே நினைந்து இகழாது அவனிடம் இருக்கும் குணங்களைக் கொண்டு அவரைப் போற்ற வேண்டும்"[61] *(னை)

என்ற பொருளில் மஹாவீர சரிதத்தில் பாடியிருப்பது அவையடக்கப் பொருண்மையுடையதாகவுள்ளது. இதுபோல் உத்தரராம சரிதத்தில், 'பெருமைதங்கிய பெரியோர்கள் அறியத்தக்கது'[62] என்று அவையோரை உயர்வாகக் குறிப்பிட்டுள்ளார்.

"உண்மையில் இலக்கியக் கலைக்கு வேண்டப்படும் தன்னடக்கம் பவபூதியிடம் இல்லை....பவபூதி தன் படைப்பில் குறுக்கிட்டுத் தற்புகழ்ச்சியுடன் பேசுவது அவரது சுவைப் போக்கைக் காட்டும். மாலதீமாதவத்தில் நல்ல நாடகத்தின் இலக்கணங்களைக் கூறுவதன் உட்பொருள் அவை தம் நூலில் காணக்கிடப்பவை என்பதாகும்"[63]

என்று ஜி.கே. பட் பவபூதியைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். இளமைக் காலத்தில் வடமொழிக் கவிஞர்களிடம் காணக்கிடக்கும் பண்பையே பவபூதியிடமும் காண்கின்றோம். அடுத்தடுத்த நூல்களில் சுவையின்மை தோன்றப் பாடியுள்ளதையும் அறியமுடிகின்றது.

'குறையிருந்தாலும் குணத்தை நோக்கிப் போற்ற வேண்டும்' என்ற பவபூதியின் கருத்தை,

"கற்றி லாவென் கவிவழு வாயினு
முற்று நாடிவல் லோருய்த் துரைக்கவே"[64]

என்ற கந்தபுராணத்தின் அவையடக்கத்துடன் ஒப்பத்து நோக்கலாம். மண்ணிப்படிக்கரைப் புராணம்[65], திருக்கூடலையாற்றூர்ப் புராணம்[66] ஆகியவற்றிலும் இக்கருத்துடைய அவையடக்கப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

7.2.1.10. விசாகதத்தர்: இவர் 'முத்ரா ராக்ஷஸம்' என்ற சிறந்த நாடக நூலை இயற்றியவராவர். தன்னைத் தாழ்த்திக் கொண்டு அவையோரை உயர்த்திப் பேசவேண்டும் என்ற அவையடக்கப் பொதுப்பண்பு இவரிடம் உண்டு.

> "மிகுதியாகப் பேசப்போவதில்லை. சாமந்தவடேசுவரதத்தரின் பேரனும், மகாராஜ பாஸ்கரதத்தரின் புதல்வனும், மஹாகவியுமான விசாகதத்தன் இயற்றிய 'முத்ரா ராக்ஷஸம்' என்னும் புதிய நாடகத்தை நடிக்க வேண்டும் என்று எனக்குச் சபையோர் கட்டளையிட்டுள்ளனர். இச்சபையிலுள்ளோர் பலர் இனிய காவியங்களைக் கற்றுணர்ந்தவர்கள் ஆதலின், இவர்கள் முன் நடிப்பது எனக்குப் பெருமகிழ்ச்சியே தரும்.
>
> எவ்வாறெனில், வயதிலே சிறியவனே ஆயினும் அவன் சாரமுள்ள நிலத்தில் தானியத்தை விதைப்பானாயின் பயிர்கள் நன்கு வளர்ந்து சிறந்த பயனளிக்கும்"[67]

என்ற சூத்திரதாரன் வழி விசாகதத்தர் பேசுகின்றார். இதில் தம் குடும்பச் சிறப்பும் நூலுயர்வும் சுட்டியுள்ளார். அதேசமயம் நூலாசிரியன் தாழ்வும் அவையோர் உயர்வும் சுட்டப்பெற்றன. அவையடக்கப் பண்பை மிகுவித்துக் காட்ட 'நல்லநிலத்தில் சிறியோன் விதைக்கும் தானியமும் பயன்தரும்' என்ற உவமையைக் கையாண்டார்.

'பலகாவியங்கள் கற்ற அவையோர் முன் பாடுவது சிறப்புடையது' என்ற விசாகதத்தரின் அவையடக்கப் பொருளைப் பல தமிழ் அவையடக்கப் பாடல்கள் கொண்டுள்ளன.

"சுருக்கமில் கேள்வித் துகள்தீர் புலவர்முன் யான்மொழிந்த
பருப்பொருள் தானும் விருப்பொரு ளாம்"[68]

என்று அமிர்தசாகரரும்,

"-மன்னின் மேல்
நல்லாரைச் சேர்தலால் நான்சொன்ன புன்சொல்
எல்லாருங் கைக்கொள்வர் ஈங்கு"[69]

என்று குணவீரபண்டிதரும் அவையடக்கம் கூறுவது நோக்கத்தக்கது. இப்பொருளில் திருப்பெருந்துறைப் புராணம்[70], அப்பாண்டை நாதர் உலா[71], ஜானகி பரிணய நாடகம்[72] போன்ற பல நூல்களிலும் அவையடக்கம் அமைந்துள்ளது.

காளிதாசன் காலத்தில் தொடங்கிய அவையடக்க மரபு பவபூதி காலத்திலும் பின்பற்றப்பட்டுவந்துள்ளது; எனினும் விசாகதத்தரின் காலத்தில்தான் நன்கு வளர்ச்சியடைந்துள்ளதைக் காணமுடிகின்றது. இவரின் காலம் தொடர்பாகப் பலவாறு கருத்துத் தெரிவிக்கப்படுகின்றன. எனினும் கி.பி.7ஆம் நூற்றாண்டிற்கும் கி.பி.10ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டவர் என்பர்[73].

7.2.1.11. வாமனபட்ட பாணன்: வாமனபட்ட பாணன் சிரவ்யகத்ய காவ்யங்களுள் ஒன்றான 'வேமபூபால சரிதம்' என்ற காப்பியத்தை எழுதியுள்ளார்[74].

"பட்ட பாணனுடைய கத்ய காவ்யம்போல் காவ்யம் எழுதுவோர் வேறொருவரும் இல்லை என்ற வழக்கைப் போக்கச் சிறந்த நாயகனாகிய வேமபூபனின் சரிதத்தை அற்புதமான காவ்யத்தில் அபினவ பாணனாகிய நான் எழுதுகிறேன். இது பண்டிதர்களின் மனத்தைக் கவரும்"[75]

என்பது இவரது கூற்றாக இடம்பெறும் பாடற்பொருளாகும். இதில் தன்னையும் அறிஞர்களையும் உயர்த்தும் பண்பு வெளிப்படுவதைக் காணமுடிகின்றது. தம்

முன்னோடியான பட்டபாணன் சிறப்பு, வேமபூபனின் புகழ், அபினவபாணன் என்ற நூலாசிரியனின் விருதுப்பெயர் ஆகியனவும் சுட்டப்பெற்றன. அவையோரை மனநிறைவுப்படுத்தும் வகையில் பாடும் போக்கு இவரிடமும் உண்டு என்பதை 'இந்த பண்டிதர்களின் மனத்தைக் கவரும்' என்பதன்மூலம் அறியப்படும்.

பாடுபொருள் சிறப்பால் அவையோர் மனநிறைவு கொள்வர் என்பது பாடலின் திரண்ட கருத்தாக உள்ளது. இத்தகைய தன்மையுடைய அவையடக்கப் பாடல்கள் தமிழில் மிகுதியாகவுள. இதனை,

"கற்றுணர் மாந்தர் கொள்வர் கடவுடன் சரித மென்றே"[76]

என்று குறிப்பிடுவதன்வழி உணரமுடிகின்றது.

7.2.1.12. வேதாந்த தேசிகர்: இவர் வேங்கடநாதர் எனவும் அறியவருகின்றார். இவரது காலம் கி.பி.1268-1369 என்ப[77]. இவர் எழுதியது 'யாதவாப்யுதயம்' என்ற நூலாகும்.

அவையடக்கம் சிறப்பான முறையில் இவரது நூலின் முதற்பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது.

> "நான் அரைவேக்காடு. ஆதிகவிகளான வால்மீகி, வியாசர் போன்றோர்முன் தம்மைக் கவிகள் என்போர் வெட்கமற்றவர்கள். எனினும் பகீரதன் கொண்டுவந்த கங்கையில் நாம் குளிப்பதில்லையா? அதுபோல என் நூலையும் கொள்ளவேண்டும்"[78]

என்ற பொருளில் பாடப்பெற்றுள்ளது. தமிழ்ப் புலவர்கள் நாயேன், பேயேன், அடிமை என்றெல்லாம் தம்மைத் தாழ்த்திக் கொள்ளுதல் பரவலாகக் காணப் படுவன. அதுபோல் இவரும் தம்மை அரைவேக்காடு என்று தாழ்த்திக் கொள்கிறார்.

மேலும் அவையடக்கப் பண்பை மிகுத்துக் காட்ட உவமையைக் கையாளும் போக்கும் காணப்படுகின்றது.

இவரது காலத்திற்குப் பின்னர் வந்தோர் பலரும் அவையடக்க மரபைப் பின்பற்றியுள்ளனர் எனக் கூறப்படுகின்றது. எனினும் தமிழில் காணப்படும் அவையடக்க வளம் அவற்றில் காணமுடியாது என்றும் கருத்துக் கூறப்படுகின்றது.

மேலே சுட்டப்பெற்ற பாடற்பொருள்கள் வடமொழிக் கவிஞர்கள் அவையோர் முன் அல்லது அவையோரைக் கருத்திற்கொண்டு கூறப்பெற்றவை. இவர்கள் அவையோர்முன் மூன்று நிலைகளில் பேசியுள்ளனர். அவை:

1. தம்மையும் தம் நூலையும் குறைகூறுபவர்கள் அறிஞரல்லாதவர்கள் என்ற ஆணவப் போக்கு.

2. தம்மையும் அவையோரையும் உயர்த்திப் பேசும் பெருமிதப் போக்கு.

3. தம்மைத் தாழ்த்திச் சொல்லும் போக்கு.

காளிதாசன் வாழ்ந்த காலத்தையொட்டிய பகுதிகளில் கவிஞர்களிடையே இருந்த காழ்ப்புத் தன்மையை அவர்களின் கூற்றுவழி அறியமுடிகின்றது. ஒரே கவிஞர் இளமைக் காலத்தில் ஆணவத்துடனும் முதுமைக் காலத்தில் அவையடக்கத்துடனும் பேசும் நிலை பெரும்பான்மையோரிடம் காணப்படுகின்றது.

வடமொழிக் கவிஞர்கள் அவையடக்கம் கூறுதலை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை என்பதைச் சான்றுகள் காட்டுகின்றன. அவையடக்கத்திற்கு இலக்கணமோ கட்டாயம் பாடவேண்டும் என்ற நிலையோ இல்லாததும் இதற்குக் காரணமாக அமைகின்றது. தமிழ்க் கவிஞர்கள் பாடிய அவையடக்கத்துடன் ஒப்பிடும்போது இலக்கியச் சுவையும் தன்னடக்கப் பண்பும் குறைவாக உள்ளது.

> "தமிழ் மக்களில் இருந்த அவையடக்கம் பாடும் மரபையே காளிதாசன் தெரிந்துகொண்டு, தனது நூலில் பாடியுள்ளான் எனலாம்"[78அ]

என்ற கருத்துக் கூறப்படுகிறது. இதற்குப் போதிய சான்றுகள் தரப்பெறவில்லை. மேலும் காளிதாசன் காலத்தில் தோன்றிய தமிழ் நூல்களில் அவையடக்கம் காணக்கிடைக்கவில்லை என்பதும் நோக்கத்தக்கது.

தொல்காப்பியத்தில் அவையடக்க இலக்கணம் கூறப்பெற்றிருப்பதைக் கொண்டு, தமிழிலுள்ள அவையடக்க மரபை வடமொழி நூலார் தழுவிக் கொண்டனர் என்றோ, காளிதாசனின் இரகுவம்சத்தில் அவையடக்கம் காணக் கிடைப்பதால் வடமொழியிலிருந்து தமிழுக்கு வந்தது என்றோ உறுதியாகக் கூற இயலாது.

எனினும் வடமொழியில் அவையடக்கத்திற்கு இலக்கணம் சுட்டப்பெறாததும், 'அவையடக்கம்' என்ற தமிழ்ச் சொல்லிற்கு இணையான சொல் வடமொழியில் பயன்படுத்தப் பெறாததும், வடமொழியில் முறையான அவையடக்கம் பாடியோர் அருகிக் காணப்படுவதும் 'அவையடக்க மரபு' தமிழுக்குரிய மரபாகக் கருத இடம் தருகின்றன. காளிதாசனின் இரகுவம்சத்திற்கு முன் அவையடக்கம் இடம்பெறும் நூல் கிட்டாததும், அவையடக்கத்தைப் பொருட்டாகக் கருதாததும் வெளிப்படையாக அறிஞர்களைக் குறைகூறும் இவைப் போக்கு வடமொழிக் கவிஞர்களிடம் மிகுதியாகக் காணப்படுவதும் இதற்கு அரணாக அமைகின்றன.

எனவே தமிழில் ஏற்கனவே இருந்த அவையடக்க மரபு காளிதாசனுக்குப் பின்னர் நூலில் இடம்பெறச் செய்யும் நிலைக்கு வளர்ந்தது எனக் கருதவேண்டும். அவ்வகையில் தமிழ் அவையடக்க வளர்ச்சிக்கு வடமொழிக் கவிஞர்கள் உதவியுள்ளனர்.

7.2.2. கன்னடம்: தமிழுடன் மிக நெருங்கிய உறவுடைய மொழி கன்னடமாகும். 'தமிழ் மொழியை அடுத்த இலக்கணவிலக்கியம் படைத்த மொழி கன்னடமே'[79] என்பர்.

7.2.2.1. கவிராஜமார்க்கம்: கன்னடத்தில் கிட்டும் முதல் நூல் 'கவிராஜமார்க்கம்' என்பதாகும். இதனை இயற்றியதாகக் கருதப்பெறும் நிருபதுங்கன் கி.பி.9ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு மன்னனாவன்[80]. இலக்கண நூலான இதில் அவையடக்கத்திற்கு இலக்கணம் சுட்டப்பெறவில்லை. நூலுக்குத் தனியாக அவையடக்கமும் இடம்பெறவில்லை. அதில்,

> "கவிராஜமார்க்கத்தின் ஆசிரியர், தமக்கு முற்பட்ட உரை நூற்கவிகளையும் செய்யுட் கவிகளையும் தெரிவித்து, அவர்களின் நூல்களை ஆதாரமாகக் கொண்டு தாம் நூலை இயற்றுவதாகக் கூறியிருக்கின்றார்"[81]

என்பதால் ஆசிரியர் தன்னடக்கம் மிக்கவர் என்பது மட்டும் புலனாகிறது.

7.2.2.2. பம்பா: கன்னட இலக்கிய உலகின் முதன்மை வாய்ந்தக் கவிஞராகப் பம்பா விளங்குகின்றார். கி.பி.10ஆம் நூற்றாண்டினரான பம்பா பம்பபாரதம், ஆதிபுராணம் ஆகிய இருநூல்களை இயற்றியுள்ளார்[82].

பம்பபாரதத்திற்கு 'விக்ரமார்ஜுன விஜயம்' என்ற பெயருமுண்டு. இதன் நூன்முகத்தில் அவையடக்கமாகச் சில பாடல்களைப் பம்பா இடம்பெறச் செய்துள்ளார்.

> "வியாசர் சொன்ன அமிர்தக் கடலில் சிறிதளவு எடுத்து நானும் எழுதுகிறேன்; அக்கடலில் நீந்துகிறேன் எனினும் வியாசர் என்ற கர்வம் எனக்கு இல்லை"[83]

என்பது பாடற்பொருள். இதில் 'வியாசர் என்ற கர்வம் தமக்கு இல்லை' என்பதன்மூலம் அவையடக்கப் பண்பை ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார். அத்துடன் நூல்வந்த வழியும் சுட்டப்பெற்றது.

வியாசர் பாரதத்தைத் தமிழில் தந்த வில்லிபுத்தூரார்,

"மன்னி லாரண நிகரென வியாதனார் வகுத்த
எண்ணி லாநெடுங் கதையை யானறிந் தியம்பல்"[84]

என்று அவையடக்கம் பாடியுள்ளார். இது பம்பாவின் அவையடக்கத்துடன் ஒப்புநோக்கத்தக்கது. பம்பா, வில்லிபுத்தூரார் ஆகியோர் அவையடக்கம் கூறுவதில் ஒரே கொள்கையைப் பின்பற்றியுள்ளனர்.

பம்பாவின் மற்றொரு நூலான ஆதிபுராணத்திலும் அவையடக்கப் பொருண்மை இடம்பெறும் பாடல்கள் உள்ளன[85].

7.2.2.3. பொன்னா: பம்பாவின் சமகாலத்துக் கவிஞரான இவர் இராமகதை, சாந்திப் புராணம் ஆகிய நூல்களைத் தந்துள்ளார். அவற்றுள் இராமகதை முழுமையாகக் கிட்டவில்லை[86].

சாந்திப் புராணத்தின் முற்பகுதியில் இடம்பெறும் சில பாடல்களில் இவர் தற்புகழ்ச்சியுடனும் பெருமிதம் தோன்றும் வகையிலும் பாடியுள்ளார்.

"கன்னட சமஸ்கிருதப் புலவர்கள் தோற்ற பின்னரே கிருஷ்ணன் (மன்னன்) எனக்கு 'உபயகவிச் சக்கரவர்த்தி' என்ற பட்டம் கொடுத்தான்.

நான் நூறு சதம் அசகா என்ற கவிஞனைவிடவும் நான்கு மடங்கு காளிதாசனைப் போன்ற சமஸ்கிருதப் புலவர்களை விடவும் உயர்ந்துள்ளேன்"[87]

என்று குறிப்பிடுவதன்மூலம் அவரது உணர்வினை அறியமுடிகின்றது. இது அக்காலத்தில் கன்னடக் கவிஞர்களிடையே இருந்த வடமொழி ஆதிக்கத்தைக் காட்டும். வடமொழிக் கவிஞர்களைப் போலத் தம்மையும் தம் நூலையும் சிறப்பித்துக் கூறும் வழக்கை இவரும் பின்பற்றியுள்ளார்.

7.2.2.4. ரன்னா: ரன்னா கி.பி.10ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பம்பா, பொன்னா ஆகியோரின் வரிசையில் இடம்பெறும் மற்றொரு கன்னடக் கவிஞர். ஜைனரான இவர் அஜிதபுராணம், கதாயுத்தம் என்ற இரு நூல்களை எழுதியுள்ளார்[88].

இதில் கதாயுத்தம் அல்லது சாகசபீமவிஜயம் என்ற நூலில் அவையடக்கம் இடம்பெற்றுள்ளது.

> "நல்ல எண்ணமுடைய செல்வந்தர்கள் அருள் கிடைத்தால் புலவனின் புகழ் உயரும். இது பீமன் கதை என்றாலும் இதில் மகாபாரதக் கதை முழுதும் அடங்கியுள்ளது. இக்காலத்தில் நல்ல கவிஞர்களேயில்லை எனல் கூடாது. இன்றும் நல்ல கவிஞர்கள் உளர். பாடற்பொருளைக் கொண்டு இந்நூலை அறிந்துகொள்ள வேண்டும்"[89]

என்று ஆசிரியர் அவையடக்கத்துடன் கூறிக்கொள்கிறார். இதில் தம் புரவலரின் சிறப்பு உரைக்கப்பட்டுள்ளது. பொன்னாவைப் போன்று பெருமிதம் தோன்ற இவர் பாடியுள்ளார் எனினும் பம்பாவின் அடக்கப் பண்பும் காணப்படுகின்றது.

7.2.2.5. துர்க்கசிம்மன்: சாளுக்கிய மன்னர் ஒருவரின் படைத் தலைவரான துர்க்கசிம்மன் கி.பி.11ஆம் நூற்றாண்டினர். வடமொழிப் பஞ்சதந்திரத்தைக் 'கர்நாடக பஞ்சதந்திரம்' எனத் தந்துள்ளார்[90].

கன்னட அவையடக்க வளர்ச்சியில் இவரது பாடல்கள் குறிப்பிடத்தக்க இடத்தினைப் பெறுகின்றன. இந்நூலில்,

"வால்மீகி, வியாசர் போன்றோர்க்குத் தெரியாததை நான் ஒன்றும் சொல்லிவிடப் போவதில்லை. இந்த நீதிக்கதையின் மூலம் மக்களிடம் உள்ள அறியாமை எனும் இருளைப் போக்க முயற்சிக்கின்றேன்"[91]

என்ற பொருளில் பாடல்கள் அமைந்துள்ளன. நூல் வழிநூல் என்பதைக் குறிப்பால் உணர்த்தியுள்ளார். ஆனால் மூலநூலாசிரியன் தொடர்பாக ஏதும் குறிப்பிடவில்லை. அவையடக்கப் பண்புடன் நூற்பயனும் சுட்டியுள்ளார்.

வடமொழி பஞ்சதந்திரத்தைத் தமிழில் தந்தவர் பிற்காலத்தைச் சேர்ந்த வீரமார்த்தாண்ட தேவராவர். இவரும் இரண்டு பாடல்களில் அவை அடக்கம் தந்துள்ளார். அதில்,

"மழைநீர் கங்கையைச் சேர்ந்தால் புனித நீராவதுபோல்
எனது சொல்லும் பெரியவர்பால் சென்று சேர்வதால்
தண்டமிழ்க் கவியாக விளங்கும்.
நான் நூல் உரைப்பது சூரியச் சுடர் முன் மின்மினி
ஒளிசெய்வதை ஒக்கும்"[92]

என்ற பொருளில் பாடல்கள் அமைந்துள்ளன. தர்க்கசிம்மன் பொதுநிலையில் அவையடக்கம் பேச, வீரமார்த்தாண்டதேவர் அவற்றை உவமைவழி மிகுதிபடுத்திக் காட்டியுள்ளார்.

7.2.2.6. நயசேனா: 'தர்மாமிர்தம்' என்பது இவர் எழுதிய நூலாகும். பதினான்கு கதைகளின் தொகுப்பாக உள்ள இந்நூல் ஜைன புராணத்தின் விளக்கமாக அமைந்துள்ளது. நூலாசிரியர் நயசேனா கி.பி.12ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தவர்[93].

"அசகா, பம்பா, பொன்னா, கஜாங்குசா, குணவர்மா
ஆகியோரின் பாடலிலுள்ள குணங்கள் என் பாடலிலுமுண்டு.

> தூய கன்னடத்தையும் பிறமொழியையும் கலந்துபாடுவது தேனுடன் எண்ணெய் கலப்பதற்கொப்பாகும். கெட்ட புலவர்கள் எலி, மரங்கொத்தி ஆகியவற்றின் தன்மையை ஒத்தவர்கள். அவர்கள் குறைகூறிக் கொண்டேதான் இருப்பர்"[94]

என்ற நயசேனாவின் கூற்றால் முன்னோடிகளின் அடிச்சுவட்டைப் பின்பற்றிச் செல்லும் அவர்தம் போக்கை உணரமுடிகின்றது. மொழிக் கலப்பால் ஏற்படும் தீமையை ஆசிரியர் உவமைவழிச் சுட்டியுள்ளார். பிற கவிஞர்களைக் குறைத்துப் பேசுவோரின் தன்மையை எலி மற்றும் மரங்கொத்திக்கு ஒப்பிட்டுள்ளது சுவையுடையது. தம் நூலைக் குறைகூறுவோரைக் குறைத்து மதிப்பிடும் போக்கு வடமொழி, தமிழ் ஆகிய மொழிகளின் அவையடக்கத்தில் பரவலாகப் பேசப்படுவதாகும்.

7.2.2.7. ராகவாங்க: கி.பி.12ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 13ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்த வீரசைவக் கவிஞர்களுள் ராகவாங்க குறிப்பிடத்தக்கவராவர். சோமநாத சரிதை, வீரேசசரிதை, சித்தராம சரித்திரம், ஹரிச்சந்திர காவியம் ஆகியவை இவரது படைப்புகளாகும்[95].

சோமநாத சரிதத்தில் பல அழகிய உவமைகளைப் பயன்படுத்தி அவையடக்கம் கூறப்பட்டுள்ளது.

> "நடப்பவர்கள்தான் தவறிவிழுவர். உட்கார்ந்து கொண்டேயிருப்பவர்களுக்கு அதைப்பற்றித் தெரியாது. எனவே என் நூலிலுள்ள குறையை மிகைப்படுத்தாது அதில் உள்ள நல்ல குணத்தை மட்டும் எடுத்துக் கொள்ளுங்கள்"[96]

என்ற பொருளில் ஒரு பாடல் அமைந்துள்ளது. மேலும் தாம் காளிதாசனின் அடிச்சுவட்டைப் பின்பற்றிச் செல்வதாகவும், மற்றவர்கள் உத்தியைத் திருடி

எழுதவில்லை என்பதையும், நல்ல பாடல்கள் படிப்போரின்றி எவ்வாறு பாழாகின்றன என்பதையும் உவமைகள்வழி உணர்த்தியுள்ளார்[97].

சித்தராமசரிதத்தின் அவையடக்கத்தில்,

"தேவ அமிர்தம், சூரியஒளி, பரிசமணி ஆகியவையும் பிற பொருட்கள் இணையாகா. அதுபோல் உள்ளது எந்நாளும் புகழ்வாய்ந்தவர்கள் முன் நான் பாடுவது"[98]

என்ற பொருளில் பாடப்பட்டுள்ளது. இதுபோல் ஹரிச்சந்திர காவியத்திலும் அவையடக்கமாகப் பாடல்கள் அமைந்துள்ளன[99].

தமிழில் அவையடக்கத்தை மிகுத்துக் காட்ட உவமைகளைப் பயன்படுத்துதல் பெருவழக்காக உள்ளது. கம்பர், சேக்கிழார், வில்லிபுத்தூரார் போன்றோரின் அவையடக்கம் உவமைமணம் கமழ அமைந்துள்ளது. ராகவாங்க, 'நூலில் உள்ள குறையைவிட்டு நல்லதை மட்டும் எடுத்துக்கொள்ளுங்கள்' என்பதை 'நீர்பிரித் தன்ன முன்னும், தூயதீம் பால்போற் கொள்க'[100] என்ற பரஞ்சோதியின் அவையடக்கத்துடன் இணைத்துக் காணலாம்.

உயர்ந்த பொருட்களை அவையோர்க்கும் தாழ்ந்த பொருட்களை நூலாசிரியனுக்கும் உவமையாகக் கூறி அவையடக்கம் பாடுதல் தமிழில் பெரிதும் போற்றப்பட்டுள்ளது. இதனைச் சித்தராம சரிதத்தின் அவையடக்கத்தில் ராகவாங்க சிறப்பாக அமைத்துள்ளதைக் காணலாம்.

<u>7.2.2.8. ஜன்னா முதலியோர்:</u> கன்னட இலக்கியத்தில் கி.பி.12, 13ஆம் நூற்றாண்டுகளில் அவையடக்கம் போற்றிப் பின்பற்றப்பெற்றது. இதனை, ராகவாங்கவைத் தொடர்ந்து வரலாற்றில் இடம்பெறும் ஜன்னா[101], ஆண்டய்யா[102] ஆகியோரின் அவையடக்கப் பாடல்கள் வழி அறியமுடிகின்றது. மேலும் குமுதேந்து[103],

மல்லா[104] போன்றோர் நூற்சிறப்பு, ஆசிரியர் பெயர் ஆகியவற்றை அவையடக்கத்துடன் வெளிப்படுத்தியுள்ளனர். தற்பொருமையின்றி அவையோர் உயர்வும் நூலாசிரியன் தாழ்வும் சுட்டும்போக்கு இவர்களின் அவையடக்கப் பாடல்களில் காணப்படுவது.

7.2.2.9. பார்ஈநவகவி: பார்ஈநவகவி உவமைகள்வழி அவையடக்கம் கூறும்போக்கைப் பின்பற்றியுள்ளார். இவரது 'கொல்லாபுர நிம்ப சாமந்த சரிதை' என்ற நூலில் இடம்பெற்றுள்ள அவையடக்கப் பாடற்பொருள் பின்வருவது:

> "சந்திரனிடமிருந்து ஒளியைப்பெற்று நட்சத்திரங்கள் மின்னுவதைப் போலப் பெரும் கவிகளுள் ஏழைக்கவியாகிய நான் நிற்கிறேன். ஆதலால் பிறர் குறைகூறுவதை அவையோர் பொருட்படுத்தக் கூடாது. சேற்றில் முளைக்கிறது தாமரை, அதன் மணம் பரவக் காற்று வேண்டும். அதுபோல் என்நூலின் மணத்தை அவையோரே பரப்ப வேண்டும். இல்லையெனில் இதற்கு மதிப்பில்லாமல் போய்விடும்"[105]

'நூலில் உள்ள குறையைக் களைந்து மதிப்புடையதாக்குதல் அவையோர் கடமை' என்பது இரண்டாவது பாடலின் உட்கிடை. இது,

> "கல்லின் பகுதியி ஈன்ற மணியைக் கழுவாது விட்டால் அதன் தன்மை கெடும். இதுபோல் சொல்லின் பகுதி ஈன்ற வழுவினை நீக்கி நன்மைகெடாது காப்பது புலமையுடையோர் கடனாகும்"[106]

என்ற சீவகசிந்தாமணியின் அவையடக்கத்தை ஒத்துள்ளது. பார்ஈநவகவி தம் நூலின் புகழைப் பரப்புமாறு அவையோரை வேண்டிக்கொள்கிறார். திருத்தக்கத்தேவர் தம் நூலிலுள்ள குறையைக் களைந்து நல்லதாக்குமாறு வேண்டிக்கொண்டார்.

பார்சுவ கவியின் முதற்பாடலை, 'சுடரோனால் வெண்பிறைதான் உற்றமதி யாவதனை போன்று'[107] என்றும், 'பாலுவின் கதிரையுண்ட பளிங்கொளி செய்தல்போலும்'[108] என்றும், 'சந்திரன் தாரகை விலங்கல் போலுமால்'[109] என்னும் தமிழ்க் கவிஞர்கள் அவையடக்கத்தில் பயன்படுத்தியுள்ள உவமைகளுடன் ஒப்பிடமுடிகின்றது.

பார்சுவகவியின் காலம் கி.பி.12ஆம் நூற்றாண்டின் இறுதி எனக் கூறப்படுகின்றது[110].

7.2.2.6. கேசவகவி: கன்னட மொழியில் மிக்க பயிற்சி உடையது 'சப்தமணிதர்ப்பணம்' என்னும் இலக்கணமாகும். இதனை இயற்றியவர் கி.பி. 1260ஐ ஒட்டி வாழ்ந்த கேசிராஜன் எனும் கேசவகவி என்பர்[111].

> "கேசவகவி 'தாம் நடந்ததே மார்க்கம்; தாம் பதங்களைச் சேர்ப்பதுவே அழகு; உலகத்தில் தாம் ஒருவரே இலக்கணி. இத்தகைய கேசவனுக்கு எதிர் உண்டோ' என்று தம்மைக் குறித்துக் கூறியிருக்கின்றார்"[112]

என்று சப்தமணிதர்ப்பணத்திலிருந்து மேற்கோள் காட்டப்பெற்றுள்ளது. வடமொழிக் கவிஞர்களைப் போல ஆசிரியர் தற்புகழ்ச்சியாகப் பேசும் போக்குடையராகக் காணப்படுகின்றார்.

7.2.2.11. சௌண்டராசா: தசகுமார சரிதை, நளசம்பு ஆகிய நூல்களைக் கன்னடமொழியில் தந்தவர். பிராமணரான இவர் கி.பி.12 அல்லது 13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் எனக் கருதுவர்[113].

தசகுமார சரிதத்தில் ஆசிரியர் தம்மைக் குக்கவி எனத் தாழ்த்திக் கொள்வதைக் காணமுடிகின்றது.

> "குக்கவியிடம் (கெட்டகவி) அறிஞர்கள் நல்ல பாடல்களைத் தேடுவதில்லை. அவ்வாறு தேடுவது சேற்றில் முத்தைத் தேடுவதை ஒக்கும். அதனால் என் பாடலிலும் நல்லதைத் தேடுதல் கூடாது"[114]

என்ற பொருளில் பாடியிருப்பது அவரது அவையடக்கப் பண்பைக் காட்டும்.

தமிழில் இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் வெளிவந்த 'தசகுமார சரித்திரம்' என்ற நூலில் அவையடக்கமாக ஒரு பாடல் இடம் பெற்றுள்ளது. அதில் 'வடமொழியில் தண்டி கூறிய சரிதையைக் கூற எனக்கெழுந்த ஆசையைக் கண்டு என்னுள்ளம் நாணுமாறு கடிவரே கற்றோர்'[115] என்ற பொருளில் அப்பாடல் அமைந்துள்ளது. பாடற்பொருள் வேறாக அமையினும் இருமொழிக் கவிஞர்களும் அவையோர்க்கு அடங்கிப் பேசும் கொள்கையில் ஒன்றுபட்டுள்ளனர்.

நளசம்பு என்ற நூலின் அவையடக்கத்தில் பிறர் நூலைக் குறை கூறுபவர்களைப் பன்றிக்கு ஒப்பிட்டுக் காட்டியுள்ளார்.

> "பன்றியைச் சந்தனத்தால் குளிப்பாட்டினாலும் அதற்குச் சாக்கடை நீர்தான் பிடிக்கும். அதுபோல எப்போதும் குறையே பேசித்திரிபவர்கள் எந்நூலையும் குறைகூறிக் கொண்டுதான் இருப்பர்"[116]

என்பது நளசம்புவின் அவையடக்கப் பாடற்பொருளாகும். புலவன் தன்னைத் தாழ்த்திக் கொள்ளும் போக்குடன் நூலைக் குறைகூறுபவர்களை விமர்சிக்கும் போக்கும் இவரது பாடல்களில் காணப்படுகின்றது. இந்நூல் தோன்றிய காலத்தை ஒட்டித் தமிழில் இயற்றப்பெற்ற நளவெண்பாவின் அவையடக்கத்தில் புலவன் தன்னைத் தாழ்த்திக் கொள்ளும் போக்குமட்டும் காணப்பெறுவதாகும்.

7.2.2.12. குமாரவியாசர்: இவரது இயற்பெயர் நாரணப்பா என்பதாகும். இவர் எழுதிய கன்னடப்பாரதம் 'குமாரவியாச பாரதம்' என அழைக்கப்பெறுகின்றது. இவரது காலம் தெளிவாகக் குறிக்கப்பெறவில்லை. எனினும் கி.பி.15ஆம் நூற்றாண்டை ஒட்டி வாழ்ந்தவர் எனக் கருதுகின்றனர்[117].

குமாரவியாசர் பெருமிதம் தோன்றப் பாடினாலும் தன்னடக்கம் உடையவராகக் காணப்படுகின்றார்.

> "பாரதத்தை வியாசர் சொல்ல, ரிஷிகள் மற்றும் முனிவர்கள் கேட்குமாறு விநாயகர் எழுதினார். அதுபோல் கதுவினநாரணன் கூற சாதாரண மக்களாகிய நீங்கள் கேட்குமாறு நான் எழுதுகிறேன்.
>
> பிறரைப்போலத் தழுவி எழுதவோ எழுதிஎழுதி அழிப்பதோ (சிலேட்டில்) எழுதிப்பார்த்துவிட்டு எழுதுவதோ எழுதுகோலை மாற்றுவதோ செய்யேன். ஏனெனில் நான் வீரசைவனின் பணியாள்"[118]

இதில் ஆசிரியர் நூல் வந்த வழியையும், தாம் வீரசைவர் என்பதையும் அவையடக்கத்துடன் கூறிக்கொண்டார். தம்மை வீரசைவரின் பணியாள் என்று கூறிக்கொள்வது அவரது சமயப் பற்றினையும் தன்னடக்கத்தினையும் காட்டும்.

7.2.2.13. சாமரச: சாமரச குமாரவியாசரின் சமகாலப் புலவராவர். அல்லமபிரபுவின் வாழ்வை மையமாகக் கொண்டு 'பிரபுலிங்கலீலை' என்ற நூலை எழுதியுள்ளார்[119].

> "இது இறைவன் பணியேயன்றி என்னுடையதன்று. எப்படி மணியோசை கேட்டவுடன் அது கோயிலிலிருந்து வந்ததெனக் கருதுகிறோமோ அதுபோல இதை நான் சொல்கிறேன் என்றால், அது இறைவன் எனக்குள்ளிருந்து சொல்கிறான் என்றே பொருள்.
>
> இது செல்வந்தர்களின் முற்பிறவிப் பொழுதுபோக்குக் கதையன்று; சிவனடியார்க்குரிய கதை.

ஆடு கரும்பின் இலையை மட்டும் உண்டுவிட்டுத் திருப்திப்படுவதைப் போன்றதல்ல. கரும்புச் சாறை உண்பதால் கிட்டும் இன்பத்தைப் போன்றது. ஆதலால் என் நூலைக் கரும்பின் ரசத்தைப்போல் கொள்ள வேண்டும்"[120]

என்ற பொருளில் பாடல்கள் அமைந்துள்ளன. இதில் நூற்சிறப்பு, இறைப்பற்று ஆகியனவும் சுட்டப்பெற்றன.

இந்நூலைத் தமிழில் எழுதிய சிவப்பிரகாச சுவாமிகள்,

"அடலறு மல்லம வரிய சீரோடு
படுதலி லையந்தபா ராட்டும் பன்முறை
மடவிகு மூலகமென் மொழியை வந்தவர்க்
கடலிலு மூழ்குவர் கால மொன்றிலே"[121]

என்று அவையடக்கம் பாடியுள்ளார்.

இவரது காலத்தைச் சேர்ந்தவரான நித்யாத்ம சுகயோகி எழுதிய 'கன்னட பாகவதம்'[122] என்ற நூலில் இரண்டு பாடல்கள் அவையடக்கப் பொருண்மையுடன் காணப்படுகின்றன.

7.2.2.14. பாஸ்கரகவி: 'ஜீவந்தரசரிதை' என்ற நூலின் ஆசிரியர் பாஸ்கரகவி (கி.பி.1424) என்பவராவர். நூல் எழுதுவது மிகக் கடினமான செயல் என்றும் அந்நூலில் குறைகண்டால் அதனை அறிஞர்கள் எவ்வாறு அணுகுவர் என்பதையும் அவையடக்கத்தில் பாஸ்கரகவி சுட்டியுள்ளார். இதனை,

"மலடி, குரங்கு, பாவிகள் முறையே பிரசவவேதனை, ரத்னபரிக்ஷம், மோட்சம் ஆகியவற்றை அறியார்.

> அதுபோல் மூடர்களும் என் காப்பியத்தை அறியமாட்டார்கள். நல்லவர்கள் அன்னம்போல் நூலிலுள்ள நல்லதைமட்டும் எடுத்துப்போற்றுவர்"[123]

என்ற பாஸ்கரகவியின் கூற்றால் அறியலாகின்றது.

நீரைப் பிரித்தெடுத்துப் பாலை மட்டும் உண்ணும் அன்னம் போல் அவையோர் தம் நூலில் உள்ள குறைகளை நீக்கிவிட்டு நல்லதை மட்டும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று பாஸ்கரகவி கூறுவதுபோல், திருவிளையாடற் புராணம்[124], வசுசரித்திரம்[125], காமதகனமென்னும் போட்டாபோட்டி இறந்தகட்சி சவால்லாவணி[126], தமிழ்நாதிக்கதை[127] ஆகிய நூல்களின் ஆசிரியர்களும் அவையடக்கம் பாடியுள்ளனர்.

<u>7.2.2.15. கனகதாசன்:</u> விஜயநகர கிருஷ்ணதேவராயரின் (கி.பி.1600) ஆட்சிக் காலத்தில் பக்தி இலக்கியத்திற்குப் புத்துயிர் அளித்தவர் கனகதாசன்[128].

> "சூரியனின் ஒளிக்கதிர் வீசும் நாடுகளில் உள்ள நல்ல புலவர்களின் அருளினால்தான் நான் இந்நூலை எழுதுகிறேன்"[129]

என்று கனகதாசன் 'மோகனதரங்கிணி' என்ற நூலில் அடக்கமாகக் குறிப்பிட்டுள்ளார்.

<u>7.2.2.16. சேரமாங்க:</u> சேரமாங்க (கி.பி.1526) 'சேரமகாவியம்' எழுதியவர். சிறந்த உவமைவழி அவையடக்கப் பண்பை விளக்கியுள்ளார். நூலின் முன்பகுதியில்,

> "தங்கத்தைப் புடம்போட்டுப் பார்க்க பாதரசத்தைப் பயன்படுத்த வேண்டும். தண்ணீர் விட்டுக் கழுவக் கூடாது. அதுபோல் என் பாடலையும் கொள்ளவேண்டும்"[130]

என்ற பொருள்படும்படி அவையடக்கம் அமைந்துள்ளது.

தங்கத்தைப் புடம்போட்டுப் பார்க்க நெருப்பில் இடவேண்டும் என்ற காளிதாசனின் அவையடக்க உவமையை அடியொற்றி இவரது உவமை அமைந்துள்ளதைக் காணமுடிகின்றது. நூற்சிறப்புச் சுட்டுதல் இதன் உட்கிடை.

7.2.2.17. சாந்த நிரஞ்சனா: 'அப்பயாரு சரிதெ' என்னும் நூலை இயற்றிய சாந்த நிரஞ்சனா (கி.பி.1650)வின் பாடல்களில் புதிய உவமையுடன் கூடிய அவையடக்கம் இடம்பெற்றுள்ளது.

> "சந்திரனின் ஒளியைப் பெற்றவுடன் சந்திரகாந்தச் சிலையின் கண்ணிலிருந்து நீர்வருவதுபோல், நல்ல குருவை நினைத்தவுடன் எனக்குப் பாடல் வரும். எனக்குத் தெரிந்தளவு இலக்கண உத்திகளைக் கையாண்டுள்ளேன். இதில் ஏதாவது தவறு இருந்தால் அதைப் பொருட்படுத்தாது ஏற்றுக் கொள்வீராக. நாகவர்மா, சந்தோம்பொதி ஆகியோரின் திறமையுடன் என்னை ஒப்பிடும்போது நான் எம்மாத்திரம்"[131]

இதில் குருவணக்கம், முன்னோர் சிறப்பு ஆகியவற்றுடன் உவமைவழி அவையடக்கப் பண்பை வெளிக்காட்டும் போக்குக் காணப்படுகின்றது.

7.2.2.18. ருத்ரகவி: சமசுகிருதத்தின் செல்வாக்குத் தென்னிந்தியாவில் உச்சநிலையை அடைந்திருந்த காலத்திலும் சுயமாகத் தாய்மொழியில் நூல் எழுத வேண்டும் என்ற ஆர்வம் பலருக்கும் இருந்தது என்பதை ருத்ரகவியின் பாடல்வழி அறியமுடிகின்றது.

> "சமசுகிருதப் பாடல்களில் எனக்குப் புலமையில்லை. மேலும், இது சமசுகிருதக் கதையன்று. தூய கன்னடத்தில் சிவனின் சரிதத்தைக் கூறுகிறேன்"[132]

என்று குறிப்பிடுவதிலிருந்து, இப்பாடல் இடம்பெறும் 'கரந்தல நாகலிங்கன சரித்திரம்' என்ற இவரது நூல் ஒரு சுயபடைப்பு என்பதை அறியலாம். மற்றொரு பாடலில்,

> "மரத்தின் விதை என்று அலட்சியமாகப் பார்க்கக் கூடாது.
> சமுத்திரத்திலிருந்து ஆவியாகி மழைவருவதுபோன்று என் நூலும்
> சேருமிடம் பொறுத்து அமையும்"[133]

என்ற பொருளில் அவையடக்கம் அமைந்துள்ளது.

கடல்நீர் ஆவியாகி வானமடைந்து தூயநீராக மாறும் தன்மையை உவமையாக்கி நேமிநாதம், பழநித்தலபுராணம் போன்ற நூல்களில் அவையடக்கம் பாடப்பெற்றுள்ளது இங்கு நினைக்கத்தக்கது.

முத்ரகவி கி.பி.17ஆம் நூற்றாண்டின் இடைப்பட்ட பகுதியில் வாழ்ந்தவர். இக்காலத்தைச் சேர்ந்த மாதண்ணா என்ற கன்னடக்கவிஞரும் 'பொருட் சிறப்புக் கருதித் தம் நூலை ஏற்குமாறு'[134] நன்னய சரித்திரத்தில் வேண்டுகின்றார்.

7.2.2.19. சடக்சரதேவ: கி.பி.18ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த, சம்புவடிவத்திற்குப் புத்துயிர் தந்த வீரசைவக் கவிஞராவர்[135].

இவர் எழுதிய 'ராஜசேகரவிலாசம்' என்ற நூலில்,

> "மானிடர்களைப் பாடிவிட்டுக் கெட்டுப்போகும் கவியல்ல நான்.
> இறைவன் புகழ்பாடும் கவிஞன் நான். பிறர் எழுதியுள்ளதை
> எடுத்துச் சிலர் எழுதுவர். நான் அப்படிப்பட்டவனல்ல"[136]

என்று பெருமிதம் தோன்றப் பாடியிருப்பது, இவர் ஒரு சமயம் சார்ந்த கவிஞர் என்பதை உணர்த்துகின்றது. இவரது மற்றொரு நூலான 'சபரசங்கர விலாசத்திலும்' இப்போக்குக் காணப்படுகின்றது.

கன்னட மொழியில் கிட்டும் 'கவிராஜமார்க்கம்' என்ற பழமையான இலக்கண நூலில் அவையடக்க இலக்கணம் சுட்டப்பெறவில்லை. கி.பி.10ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பம்பாவின் 'பம்பபாரதம்' கன்னட நூற்பரப்பில் அவையடக்கம் கூறும் முதல் நூலாகத் திகழ்கின்றது. இவரைப் பின்பற்றிப் பின்வந்தோர் அவையடக்கம் பாடியுள்ளனர்.

வடமொழி அவையடக்கப் பண்பையும் கன்னட அவையடக்கப் பண்பையும் ஒப்பிட்டு நோக்கினால் கன்னடத்தில் தமிழில் உள்ளதுபோல் முறையான அவையடக்கம் காணப்படுகின்றது. தமிழுடன் மிக நெருங்கிய உறவுகொண்ட மொழி என்பதும் இதற்குக் காரணமாக அமையும். சில கவிஞர்கள் பெருமிதம் தோன்றப் பாடியுள்ளனரெனினும் வடமொழிக் கவிஞர்களைப் போன்று உணர்வுடன் பேசுவது மிகக் குறைவாகவுள்ளது.

நூற்சிறப்பு, முன்னோரைப் போற்றுதல், குருவணக்கம், நூல் வந்த வழி, நூற்பெயர் ஆகியவையும் சுட்டப்பெற்று உவமைகள் வழி அவையடக்கப் பண்புகள் வெளிப்படுத்தப்பட்டன. இவை ஏறத்தாழத் தமிழ் அவையடக்கப் பாடல்களை ஒத்துள்ளதைக் காணமுடிகின்றது.

7.2.3. தெலுங்கு: தெலுங்கில் கி.பி.6ஆம் நூற்றாண்டிலிருந்தே இலக்கியங்கள் தோன்றத் தொடங்கிவிட்டன. எனினும் வழக்கில் உள்ள நூல்கள் நன்னய்யாவின் காலத்திலிருந்து எழுதப்பெற்றவை. நன்னய்யாவின் காலம் கி.பி. 1000-1150 என்று குறிப்பிடப்படுகின்றது[137].

7.2.3.1. நன்னய்யா: நன்னய்யா எழுதிய 'ஆந்திர மகாபாரதம்' என்ற நூலே தெலுங்கில் கிட்டும் முதல் நூலாகும். வியாசபாரதத்தின் முழுமையான மொழிபெயர்ப்பாக இது விளங்குகின்றது.

நூலின் முற்பகுதியில் மகாபாரதத்தின் சிறப்பும், உவமைவழி அவையடக்கமும் வெளிப்படுமாறு பாடல்கள் அமைந்துள்ளன.

"நட்சத்திரங்களை எண்ணிவிடலாம். கடலை நீந்திக் கடக்க முடியும். ஆனால் இந்த ஆகமத்தை (பாரதத்தை) எழுதுதல் என்பது அந்தப் பிரமாவுக்கே முடியாத செயலாகும். எனினும் நீங்கள் எல்லாம் சொல்கிறீர்கள் என்பதற்காக எனக்குத் தெரிந்தளவு சொல்கிறேன்"[138]

என்ற பொருளில் நன்னய்யா அவையடக்கம் பாடியுள்ளார். தெலுங்கு இலக்கிய நூற்பரப்பில் நன்னய்யாவின் அவையடக்கமே முதலில் கிடைக்கப்பெற்றது.

7.2.3.2. பால்குறிக்கி சோமநாதா: தெலுங்கு சைவக் கவிஞர்களில் குறிப்பிடத்தக்கவர். கி.பி.1200-1240இல் வாழ்ந்தவர் என்ப[139]. இவர் எழுதிய 'பண்டிதராஜ சரித்திரம்' என்ற நூலில்,

"உண்மையான பக்தர்களை வயட்சி இதனை எழுதுகிறேன். பக்தர்களுடைய வரலாற்றைக் கூற எனக்குத் தகுதியில்லை. எனவே இந்த நல்ல வாய்ப்புக் கிட்டியது என்னுடைய புண்ணியம் என்றே கருதுகிறேன்.

பக்தர்களுடைய வரலாற்றைக் கூற என் வாய்க்கு ஓர் அதிர்ஷ்டம் கிட்டியுள்ளது. எனது ஜன்மமும் பூர்த்தியானது. சிவபக்தர்களுடைய ஆணையைத் தலைமீது வைத்துச் செல்வதை நான் பெருமையாக எண்ணுகிறேன்"[140]

என்னும் பொருள்பட பாடல்கள் இடம்பெற்றுள்ளன. அவையடக்கப் பண்புடன் பாடுபொருள் சுட்டப்படும் போக்குப் பின்பற்றப்பெற்றுள்ளது.

இவரது கூற்று சேக்கிழாரின் அவையடக்கத்துடன் ஒப்புநோக்கத் தக்கதாக உள்ளது.

"அளவி லாத பெருமைய ராகிய
அளவி லாஅடி யார்புகழ் கூறுகேன்
அளவு கூட உரைப்பரி தாயினும்
அளவி லாசை துரப்ப அறைகுவேன்"[141]

என்பர் சேக்கிழார். இருவரும் சிவனடியார்களின் வரலாற்றைக் கூறப்போவதை அவையடக்கவழி உணர்த்தினர். மேலும் அடியார்களின் சிறப்பு உரைக்கப் பெற்றுள்ளதும் நோக்கத்தக்கது.

7.2.3.3. எர்ரா பிரகடா: கி.பி.14ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இவர் 'நரசிம்ம புராணம்' என்ற நூலை இயற்றினர்[142]. அவையடக்கப் பண்பை விளக்கிக்காட்ட உவமைகளைத் துணைகொள்ளும் போக்கு இவரிடமும் காணப்படுகின்றது.

"கேட்பதற்கு இனிமையாகவும் அமுதத்துடன் ஒப்பிடக் கூடியதுமான
இந்நூலை எனக்கு முன் பிறந்த மகாகவிகள் எத்தகைய
சொற்களைப் பயன்படுத்திக் காப்பியங்கள் எழுதினரோ
அதைப்போல் நானும் எழுதுதற்கு முயற்சிசெய்கிறேன்.
அன்னம் அமுதத்தை எவ்வாறு உண்ணுமோ, கிரௌஞ்சபக்ஷி
எப்படி வெண்ணிலவைக் குடிக்குமோ அதுபோல் இந்நூலையும்
கொள்ளவேண்டும்"[143]

என்பன நரசிம்மபுராணத்தில் இடம்பெறும் பாடற் பொருள்களாகும்.

அன்னத்தின் தன்மையைப் பயன்படுத்தி அவையடக்கம் கூறிய தமிழ் அவையடக்கப் பாடல்கள் முன்னர்க் கூறப்பெற்றன. அத்துடன் ஆசிரியர் வெண்ணிலவின் குளிர்ச்சியை மட்டும் விரும்பி உண்ணும் கிரௌஞ்சப் பறவையையும் புதிதாகத் தந்துள்ளார்.

<u>7.2.3.4. ஸ்ரீநாதர்:</u> சிருங்கார நைஷதம், காசிகண்டம் ஆகியன இவர் இயற்றிய நூல்கள். இவரது காலம் தெளிவாகத் தெரியவில்லை எனினும் கி.பி.14ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 15ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்தவர் என 'ஆந்திரகவி தரங்கிணியில்' குறிப்பிடப்பட்டுள்ளது[144].

சிருங்கார நைஷதம் நூலின் அவையடக்கம் இது -

> "பட்ட ஹர்ஷனின் கவிதைகளையெடுத்து எழுதுகிறான் என்று சில சோம்பேறிப் பெரியவர்கள் குறிப்பிடுவர். ஏனெனில் நரிகேலபாகத்தில் எழுதிவிட்டானே என்ற பொறாமை.
>
> இளமையான பெண்ணின் கன்னத்தை மிகச்சிறு பாலகன் வருடுவதால் என்ன இன்பத்தை அடையப்போகிறான்? ஒன்றுமில்லை. அதுபோல் என் நூலைக் குறைகூறுபவர்கள் எந்தப் பயனையும் அடையப்போவதில்லை"[145]

தம் நூலைக் குறைகூறுபவர்கள் எத்தகையோர் என்பதைக் காளிதாசன், பவபூதி ஆகியோரைப் போன்று நேரடியாகச் சுட்டாமல் உவமைவழிக் குறிப்பிட்டுள்ளார். நூலாசிரியர் தாம் நரிகேலபாகத்தில் சிறந்த புலமை உடையவன் என்பதை வெளிப்படுத்தும் முறை நோக்கத்தக்கது. நூல் காமச் சுவையுடையது என்பதை அவரது உவமைவழி உணரமுடிகின்றது. சிறுபாலகன் வருடுவதால் பெண்ணின் நிலையில் மாற்றம் ஏற்படுவதில்லை. அதுபோல் குறை கூறுவதால் தம் நூலில் எந்த மாற்றமும் நிகழப்போவதில்லை என்பதை ஆசிரியர் காட்டியுள்ளார். தமிழில் அதிவீரராமபாண்டியர் எழுதிய நைடதத்தில் அவையடக்கம் இடம்பெறாமல் மாறாக, 'தாம் மன்னர் என்பதால் அவை அடக்கம் வேண்டப்படுவதில்லை'[146] என்று அதிவீரராமர் குறிப்பிட்டதாகப் பதிப்பாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

வடமொழிக் கவிஞர்களைப் போல் இராதாவும் இளமைக்கால வேகத்தில் பேசியிருப்பதாகத் தெரிகின்றது. இவரது அடுத்த நூலில் தன்னடக்கம் மிக்கவராகக் காட்டியிருப்பதால் அந்நூல் இவரது முதுமைக் காலத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டும். அடுத்த நூலான காசிகண்டத்தில்,

> "நன்னய்யா (இருமொழித்திறன்), திக்கன்னா ([illegible]ரக்கம்), எர்ரன்னா (பிரபந்த வ[illegible]வம்) போன்ற ஆதிகவிகளின் இலக்கியத்திறனில் சிலவற்றைப் பயன்படுத்தி நானும் இந்நூலை எழுத முயற்சிக்கிறேன்"[147]

என்று குறிப்பிடுவது அவரது அவையடக்கப் பண்பைக் காட்டும். முன்னோடிகளின் இலக்கியத் திறன்களில் சிலவற்றை எடுத்து ஒரே நூலில் தரும் வழக்கைத் தெலுங்கு இலக்கியத்தில் 'இராதா தான் முதன்முதலாகத் தொடங்கிவைத்தார்'[148] எனக் கருத்துத் தெரிவிக்கப்படுகின்றது.

<u>7.2.3.5. போதனா:</u> மகாபாகவதம் என்ற நூலினைப் போதனா கி.பி.16ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுதியிருக்க வேண்டும்[149].

மோட்சம் கிட்டும் என்ற நம்பிக்கையில் தாம் பாகவதம் பாடுவதாக அடக்கத்துடன் கூறிக்கொள்கிறார்.

> "இராமன் கதையைப் பாடினால் மோட்சம் கிட்டும் என்பதே இந்நூலை எழுத எனக்குத் தூண்டுகோலாய் அமைந்தது. இந்நூலில் நான் பேசுவதும் என்னைப் பேசச் செய்வதும் இராமனே.
>
> சிலருக்குச் சமசுகிருதம் பிடிக்கும். சிலருக்குத் தெலுங்குப் பிடிக்கும். இவ்விருசாராரையும் மனநிறைவுப் படுத்த நான் செய்யும் முயற்சியே இந்நூல்"[150]

என்ற போதனாவின் கூற்றால், அவையில் பன்மொழிப் பயின்றோர் இருந்தனர் என்பதும், நூலாசிரியன் அவர்களின் மனத்தை நிறைவுசெய்யும் வகையில் பாடுதல் வேண்டும் என்பதும் பெறப்பட்டன. இறைவன் சிறப்புரைத்தல் தெலுங்கு அவையடக்கப் பாடல்களில் பரவலாகக் காணப்படுகின்றது என்பதை இவரது பாடல்களும் காட்டுகின்றன.

வடமொழிக் கவிஞர்கள் அவையோரைக் கருத்திற்கொண்டு பாடிய பாடல்களைப் போதனாவின் கூற்றுடன் ஒப்புநோக்கலாம்.

7.2.3.6. தூர்ஜடி: கிருஷ்ணதேவராயரின் (கி.பி.1503-1530) அவைக்களப் புலவருள் ஒருவர்[151]. இவர் எழுதிய 'காளஹஸ்தி மகாத்யமு' என்ற நூலில் போதனாவைப் பின்பற்றி அவையடக்கமாகச் சில கூறியுள்ளார்.

> "நான் செய்வது என்னவோ காலகஸ்திதான். ஆனால் அதனை
> எழுதச் சொல்லிக் கட்டளையிடுபவன் அந்த இறைவனாவன்.
> 'நீ முக்தி அடைவதற்குப் புதியமுறையில் எழுது' என்று
> ஆணையிட்டவன் அவனே"[152]

என்று தூர்ஜடி உரைத்துள்ளார். இறைவன் பெருமையைச் சுட்டும் போக்கில் அமைந்த இக்கருத்து, தமிழில் சமயம் சார்ந்த நூல்களின் அவையடக்கத்தில் பரவலாகப் பேசப்படுவதாகும்.

7.2.3.7. குமரிமொல்லா: கி.பி.16ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கிருஷ்ணதேவராயரின் மகன் காலத்தில் வாழ்ந்த பெண்பாற் புலவர் எனக் குறிப்பிடப்படுகின்றார்[153].

இவர் எழுதிய இராமாயணம் என்ற நூலின் முற்பகுதியில்,

> "சொல் என்று ஸ்ரீராமச்சந்திரன் சொன்ன பேச்சின்படி செப்புகின்றேன். இது எப்போதும் இல்வாழ்க்கைக்கும் பரலோக வாழ்க்கைக்கும் ஒரு ஏணியாக இருக்கிறது. எனவே தவறுகளை எண்ணாதீர் கவிஞர்களே!"[154]

என்னும் பொருளில் அவையடக்கம் பாடியுள்ளார். போதனா, தூர்ஜடி ஆகியோரின் வழியில் குமரிமொல்லாவும் அவையடக்கம் கூறியுள்ளார் என்பதை அறியமுடிகின்றது. இறைவன் ஆணையால் தாம் நூல் செய்ததாக இவர் கூறுவதை ஆதாரமாகக் கொள்ளலாம். அத்துடன் நூற்பயன் சுட்டுவதில் மூவரும் ஒன்றுபட்டிருப்பதைக் காணமுடிகின்றது.

தமிழில் ஔவைக்குறள், அட்டாங்கயோகக் குறள் ஆகியவை ஔவையார் என்ற பெண்பாற் புலவர் இயற்றியவை. ஆனால் இந்த ஔவையார் எக்காலத்தவர் என்பதை உறுதிசெய்யப் போதிய சான்றுகள் கிட்டவில்லை. ஔவையார், குமரிமொல்லா ஆகியோரைத் தவிர அவையடக்கம்பாடிய பிற பெண்பாற் புலவர்கள் அறியப்பெறவில்லை. இருபதாம் நூற்றாண்டில் அசலாம்பிகை அம்மையாரைப் போன்றோர் தமிழில் அவையடக்கம் பாடியிருப்பது குறிப்பிடத்தக்கது.

<u>7.2.3.8. பட்டுமூர்த்தி:</u> தெலுங்கில் பிரபந்த இலக்கியங்கள் செல்வாக்குடன் விளங்கிய காலத்தில் வாழ்ந்த இராமராசபூஷன் என்பவரே பட்டுமூர்த்தி என அறியப்படுகின்றார். இவர் எழுதியது 'வசுசரித்திரம்' என்ற நூலாகும்[155].

வசு சரித்திரத்தில் இறைவன் ஆசிரியரை நோக்கிக் கூறியதாகப் பாடல் அமைந்துள்ளது. போதனாவைப் போன்றோர் இறைவன் கட்டளையால் தாம் எழுதுவதாக அடங்கிக் கூறினர். இவரோ இறைவன் தன்னைப் புகழ்ந்து கூறியதால் எழுதுவதாகக் குறிப்பிடுகின்றார்.

> "வடமொழி பாணனின் வேகம், பவபூதியின் மென்மை, மாகனின்
> விசித்திரத்தன்மை, தண்டியின் பாவம், மயூரனின் வர்ணனை,
> நாகசோமனின் நடை, திக்கன்னா, பாஸ்கரனின் ஆகியோரின்
> நடைத்திறன், ஸ்ரீநாதனுடைய தொடர்கலவை வாக்கியம், ஈசனுடைய
> உயிருருவப் பார்வை ஆகியன உனக்கு உண்டு. மேலும் பலதரப்
> பட்டோரின் கருத்துக்களை ஒன்றுதிரட்டியதுபோல் கலைமகள் உன்
> நாவில் வந்து அமர்ந்திருக்கிறாள். உனக்கு ஈடு யார் உளர்?
> என்று இறைவன் குறிப்பிடுவதாய் நான் இந்நூலை எழுத
> முயற்சிக்கிறேன்"[156]

என்பது பட்டுமூர்த்தியின் பாடற்பொருளாகும்.

முன்னோடிகளின் பெயர், புலமைத்திறன், இறைப்பற்று ஆகியவற்றை அவையடக்கத்துடன் தந்துள்ளார். தம்மையும் தம் நூலையும் சிறப்பித்துக் கூறும் வடமொழிக் கவிஞர்களின் போக்கு இவரிடம் உண்டு. எனினும் அதனை அவையடக்கத்துடன் இணைத்துத் தந்துள்ள திறன் நோக்கத்தக்கது. ஸ்ரீநாதர் தொடங்கிவைத்த வழக்கத்தை இவர் பின்பற்றியிருப்பதும் அறியப்பட்டது.

தமிழில் 'வசுசரித்திரம்' என்ற பெயரில் ஒரு நூல் வெளிவந்துள்ளது. அதில் 'தம் நூலில் உள்ள குறையை நீக்கிக் குணத்தை மட்டும் கொள்ள வேண்டும் என்பதற்கு,

> "இலகுசீ ருடைய வன்னமென்னவே புனலை மாற்றி
> யுலவுறு மிரண்டும் பாலை யுண்ணிய கருதல் போலாம்"[157]

என்ற உவமை காரணமாகக் காட்டப்பெற்றுள்ளது. தெலுங்கு வசுசரித்திரத்தின் அவையடக்கத்திற்கும் தமிழ் வசுசரித்திரத்தின் அவையடக்கத்திற்கும் பொருளில் வேறுபாடுள எனினும் அவையடக்கம் பாடவேண்டும் என்ற சிந்தனை இரு நூலாசிரியருக்கும் உண்டு என்பதைப் பாடல்கள் காட்டுகின்றன.

7.2.3.9. காசி விசுவநாத நாயக ஸேனாபதி: விசுவநாத நாயக்கரின் (1529-64) அவைக்களப் புலவர்களுள் ஒருவர். இவர் எழுதிய 'இராயவாசகம்' என்ற நூலைத் தெலுங்கின் முதல் உரைநடைநூல் எனக் கருதுவர்[158].

இந்நூலை இவர் எழுதக் காரணம் 'சிறுவர்கள் இதனைப் படித்து உரைநடையில் சிறந்த நிபுணர்களாக வேண்டும் என்பதாலாகும்'[159] என்று அவரே குறிப்பிட்டுள்ளார். இதனைச் செய்யுள்நடையில் அடக்கத்துடன் கூறியிருப்பது நோக்கத்தக்கது.

7.2.3.10. சமயவரவு வேங்கடகவி: திருமலை நாயக்கரின் பேரனான முத்தலகிரி என்பவரால் ஆதரிக்கப் பெற்றவர். 'பிரபந்தராஜ வெங்கடேஸ்வர விஜய விலாசமு' என்ற நூலை எழுதியது இவருக்குத் தெலுங்கு இலக்கிய வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடத்தினைப் பெற்றுத்தந்தது என்பர்[160].

இந்நூலில் இலக்கியச் சுவையுடன் கூடிய உவமைவழி அவையடக்கம் கூறப் பெற்றுள்ளது.

> "சந்திரனில் கிரகணம் ஏற்படுவதால் அதனை யாரும்
> வெறுப்பதில்லை. அதுபோல என் நூலில் குறையிருந்தாலும்
> அறிஞர்கள் வெறுக்கமாட்டார்கள். அந்த வெங்கடேசனின்
> பெயரைக் கொண்டு எனக்குத் தோன்றியதை எழுதுகிறேன்"[161]

தம் நூலைச் சந்திரனுக்கும் நூலில் உள்ள குறையைச் சந்திரகிரகணத்திற்கும் ஆசிரியர் ஒப்பிட்டுள்ளார். அத்துடன் நூற்பெயரும் குறிப்பால் உணர்த்தப் பட்டுள்ளது.

இவருக்குப்பின் ஐரோப்பியர் வருகையால் ஏற்பட்ட உரைநடை வளர்ச்சி செய்யுள் வடிவில் அவையடக்கம் கூறும் போக்கைக் குறைத்தது. 'நூலில் உள்ள பிழைகளைப் பொறுத்துக் கொள்ள வேண்டும்' என்று அவையோரை வாசகர் நிலையில் வைத்து அவையடக்கம் கூறும் நிலையை முன்னைய தெலுங்கு நூல்களிலும் காணமுடிகின்றது. உரைநடை வளர்ச்சிக்குப் பின்னர்த் தமிழ் உள்ளிட்ட இந்தியமொழிகளில் அவையடக்கம் செய்யுள் வடிவிலிருந்து உரைநடை வடிவத்தில் அமைதல் பெருவழக்காயுள்ளது.

நன்னையாவால் தொடங்கிவைக்கப்பெற்ற அவையடக்க மரபு பல கவிஞர்களால் பின்பற்றப்பட்டிருப்பதைச் சான்றுகள் காட்டின. ஒருசில கவிஞர்களைத் தவிர பலரின் பாடல்களிலும் அவையடக்கம் தமிழில் உள்ளதைப் போன்று அமைக்கப்பட்டுள்ளது. உவமைவழி அவையடக்கம் கூறும் புலவர்கள், நூற்சிறப்பு, முன்னோர் உயர்வு, மறைப்பற்று ஆகியவற்றையும் சுட்டியுள்ளனர்.

7.2.4. பிற இந்தியமொழிகள்: தென்னிந்திய மொழிகளில் தமிழ், கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளில் அவையடக்கம் காணப்படுவதுபோல் மலையாள மொழி நூல்களிலும் உண்டு.

மலையாளத்தில் இதுகாறும் கிடைத்திருக்கும் பாட்டிலக்கியத்தில் இராமசரிதம்தான் மிகவும் தொன்மையானது. இது கி.பி.12ஆம் நூற்றாண்டில் தோன்றியதென்று இந்நூலை வெளியிட்ட உள்ளூர் எஸ். பரமேசுவர ஐயர் கருதுகின்றார். நூலின் அகச்சான்றுகளைக் கொண்டு கி.பி.1195 முதல் 1208 வரை, திருவிதாங்கூரை ஆண்டுவந்த ஸ்ரீ வீரராமவர்மா அதை இயற்றியிருக்கக்கூடும் என்பது அவரது ஊகம்[162]. இந்நூலில்,

"நல்லவர் 'இவன் அகதி' என்றறிந்து துணைசெய்வர்; நொய்யவர் 'இவனுக்கு இது பெரும்பணி' என்றிருப்பர்; என்னோடொப்பவர் பகைவராதற்கு முற்படார். ஆகலின், நூல் முழுவதிலும் பிழை இருப்பினும் பிணங்குபவரிலர் என்று இதனைக் கூறலானேன்"[163]

என்று அவையடக்கம் கூறப்பெற்றுள்ளது.

ராமப்பணிக்கர் எழுதிய 'கண்ணசராமாயணத்திலும் இதே பொருளில் அவையடக்கம் இடம்பெற்றுள்ளது[163அ]. இவற்றை,

"நல்லார் பிறர்குற்றம் நாடார் நலந்தெரிந்து
கல்லார் பிறர்குற்றங் காண்பரோ-அல்லாத
என்போல்வார் என்னை இகழ்வரோ என்கவிக்குப்
பின்பாரே சொல்வார் பிழை"[164]

என்னும் ஒளவைக்குறளில் இடம்பெறும் பாடலோடு ஒப்பிடல் தகும்.

இவையன்றி மாதவப்பணிக்கரின் 'பகவத்கீதை' என்ற நூலிலும் சிறப்பான முறையில் அவையடக்கம் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகின்றது[165].

வடஇந்திய மொழிகளுள் இந்திமொழியில் துளசிதாஸர் இயற்றிய 'இராமாயணம்' மிகநீண்ட அவையடக்கத்தைப் பெற்றுள்ளது[166]. நூற்சிறப்பு, பொருட்சிறப்பு, குறை கூறுவோரின் தன்மை; முன்னோர் புகழ் போன்ற பல்வேறு செய்திகளை உள்ளடக்கியதாக அவையடக்கம் காணப்படுகின்றது.

"நான் ரகுபதி குலப்புகழ்க் கதையை இயற்ற ஆசைப்படுகிறேன். ஆனால் என் புத்தி சிறியது. அந்த சரிதமோ ஆழம் காண முடியாதது"[167]

என்ற பொருளில் இவரது அவையடக்கம் தொடங்கி, உவமைகள் வழி அவையடக்கப் பண்பை மிகுத்துக் காட்டும் உத்தி பின்பற்றப்பட்டுள்ளது.

7.3. தொகுப்புரை:

இந்திய இலக்கியங்களிலும் மேலை நாட்டு இலக்கியங்களிலும் அவையடக்கப் பாடல்களின் நிலைகள் ஆராயப்பெற்றுள்ளன.

மேலை இலக்கிய உலகில் முறையான அவையடக்க மரபு காணப்பெறவில்லை. எனினும் 'அவையோரைக் கருத்திற்கொண்டு பாடவேண்டும்' என்ற சிந்தனை உண்டு.

இந்தியமொழிகளுள் தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் அவையடக்க இலக்கணம் சுட்டப்பெற்றுள்ளது. வடமொழியில் காளிதாசனின் இரகுவம்சமும், தமிழில் திருத்தக்கத் தேவரின் சீவகசிந்தாமணியும், கன்னடத்தில் பம்பபாரதமும், தெலுங்கில் நன்னய்யாவின் ஆந்திர மகாபாரதமும், மலையாளத்தில் வீரராமவர்மாவின் இராமசரிதமும் அவையடக்கப் பாடல்களைக் கொண்ட முதல் நூல்களாகும்.

வடமொழிக் கவிஞர்கள் ஆணவம், பெருமிதம், அவையடக்கம் ஆகிய மூன்று நிலைகளில் அவையோர்முன் பேசும் போக்கைக் கொண்டுள்ளனர். தமிழ்க் கவிஞர்கள் பெருமிதம் தோன்றப் பாடினாலும், அதனை அவையடக்கத்துடன் இணைத்துத் தரும் வழக்கை மேற்கொண்டுள்ளனர்.

வடமொழியில் காளிதாசன் காலத்தில் தொடங்கிய அவையடக்க மரபு பவபூதி, விசாகதத்தர் போன்றோரின் காலங்களில் வளர்ச்சி பெற்றது. நேரடியாகவோ மறைமுகமாகவோ தம்மையும் தம் நூலையும் சிறப்பித்துக் கூறும் போக்குக் காணப்படுகின்றது. எனினும் அவையோரை மனநிறைவுப்படுத்தும் வகையில் பாடுதல் பெரிதும் போற்றப்பட்டுள்ளது.

கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளில் தமிழிலுள்ளதுபோன்ற முறையான அவையடக்கமரபு காணப்படுகின்றது. வடமொழி உறவால் சில கவிஞர்கள் பெருமிதத்துடன் பேசினாலும் அதனை அவையடக்கத்துடன் வெளிப்படுத்தும் நிலையினைக் காணமுடிகின்றது.

நூற்பெயர், நூல் வந்த வழி போன்ற செய்திகளை உள்ளடக்கி, உவமைவழி அவையடக்கத்தை வெளிப்படுத்தும் திறன் கன்னடம், தெலுங்கு ஆகிய கவிஞர்களிடமும் உண்டு.

இந்தி முதலான பிறமொழிகளிலும் அவையடக்கம் போற்றப் பட்டிருப்பதால், இந்திய இலக்கியங்களின் தனிச்சிறப்பாக அவையடக்கம் விளங்குகின்றது.

நாடு, இனம், மொழி கடந்து அறிஞர்கள் ஒன்றாகவே சிந்திக்கிறார்கள் என்பதற்கு அவையடக்கப் பாடல்கள் சான்றாக அமைகின்றன. இன்று நினைவில் நிற்கும் பெரும்பான்மை நூல்கள் அவையடக்கப் பாடல்களைப் பெற்றவை. கட்டாயம் பாடவேண்டும் என்ற விதியின்றியே இத்தகைய இடத்தினை அவையடக்கம் பெற்றிருப்பது அதன் தனிச் சிறப்பைக் காட்டும்.

ஒரு மொழியிலுள்ள கவிஞர்களையும் அவர்களின் நூல்களையும் மற்றொரு மொழிக் கவிஞர்கள் அவையடக்கத்தில் சுட்டிக்காட்டியிருப்பது அவர்களின் பன்மொழி அறிவையும் மொழிக் காழ்ப்பின்மையையும் வெளிப்படுத்தும்.

சான்றென் விளக்கங்கள்

1. அ.அ. மணவாளன், 'காப்பிய மரபும் பாயிரப் பாங்கும்', ச.வே. சுப்பிரமணியன் (பதி.), திறனாய்வுக் கட்டுரைகள், ப.129.

2. மேலது, பக்.129-130.

3. மேலது, ப.130.

4. மேலது, ப.130.

5. மேலது, ப.120.

6. மேலது, ப.120.

7. வை. சச்சிதானந்தன், மேலை இலக்கியச் சொல்லகராதி, (மேக்மில்லன் இந்தியா லிமிடெட், மெட்ராஸ், 1983, முதற்பதிப்பு), ப.11.

8. 1) எல். இராமக்கிருஷ்ணன், கம்பனும் மில்டனும் - ஒரு புதிய பார்வை, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1978), பக். 95-102.

   2) அ.அ. மணவாளன், முன்னூல், ப.129.

9. நவாலியூர் நடராஜன், வடமொழி இலக்கிய வரலாறு, (சங்கீதா பதிப்பகம், சென்னை-17, 1979, முதற் பதிப்பு), பக்.17-18.

10. ஆய்வாளர் சமசுகிருதப் பேராசிரியர் முனைவர் கோ. சுந்தரமூர்த்தி அவர்களுடன் வடமொழியில் அவையடக்கப் பாடல்கள் தொடர்பாகக் கலந்துரையாடியபோது பெற்ற கருத்து (5.7.90).

11. நவாலியூர் நடராஜன், முன்னூல், ப.144.

12. பேராசிரியர் கோ. சுந்தரமூர்த்தி மேற்கண்ட கலந்துரையாடலின்போது கூறிய கருத்து.

13. பி.எஸ். சுப்பிரமண்ய சாஸ்திரி, வடமொழி நூல் வரலாறு, (அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1946), ப.222.

14. தொல்., பொருள்., செய்., (இளம்.), நூ.109.

15. பேராசிரியர் கோ. சுந்தரமூர்த்தி மேற்கண்ட உரையாடலின்போது கூறிய கருத்து.

16. பி.எஸ். சுப்பிரமண்ய சாஸ்திரி, முன்னூல், ப.514.

17. 1) பேராசிரியர் கோ. சுந்தரமூர்த்தி மேற்கண்ட உரையாடலின்போது கூறிய கருத்து.

17. 2) C. Sankara Ram Sastri (Tr.), Kavyadarsa of Dandin S. Viswanathan (Ed.), Sri Balamanorama Press, Mylapore, Madras, 1963, Third Edition - என்ற நூலிலும் அவையடக்கக் குறிப்புகள் காணப்பெறவில்லை.

18. பி.எஸ். சுப்பிரமண்ய சாஸ்திரி, முன்நூல், ப.671.

19. தண்டியலங்காரம், சுப்பிரமணிய தேசிகர் உரை, (கழக வெளியீடு, 1966), ப.9.

20. அமிர்தசாகரர் யாப்பருங்கலம் (பழைய விருத்தியுரையுடன்), மே.வீ. வேணுகோபாலப் பிள்ளை (பதி.), ப.170.

21. திருக்குருகைப் பெருமாள் கவிராயர், மாறனலங்காரம், வெண்பா 72.

22. வைத்தியநாத தேசிகர், இலக்கண விளக்கம், பொருள்., பாட்டியல், நூ.128.

23. நவாலியூர் நடராஜன், முன்நூல், பக்.277-278.

24. ஆய்வாளர், சமஸ்கிருத விரிவுரையாளர் முனைவர் எல். வீரராகவனுடன் வடமொழி அவையடக்கப் பாடல்கள் குறித்து நிகழ்த்திய கலந்துரையாடலின் போது பெற்ற கருத்து (10.7.90).

25. பி.எஸ். சுப்பிரமண்ய சாஸ்திரி, முன்நூல், ப.371.

26. 'மாளவிகாக்னிமித்திரம்' என்ற வடமொழி நூலின் தொடக்கத்தில் சூத்திரதாரன் கூற்றாக வரும் பகுதியை முனைவர். எல். வீரராகவன் மேற்கண்ட உரையாடலின்போது மொழிபெயர்த்துக் கூறியதன் சுருக்கம் (நூல் பதிப்பு விபரங்கள் தரவில்லை).

27. உமாபதி சிவாசாரியார், சிவப்பிரகாசம், பாடல் 12.

28. கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள், கந்தபுராணம், அவை.5.

29. மெய்கண்ட சாத்திரம் என வழங்கும் சித்தாந்த சாத்திரம் பதினான்கு மூலமும் உரையும், (சைவ சித்தாந்த மகா சமாஜம், சென்னை, 1940, இரண்டாம் பதிப்பு), ப.7.

30. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, பட்டீச்சுரப் புராணம், அவை.7.

31. புலவர் குழந்தை, இராவண காவியம், அவை.1.

32. Horace Hayman Wilson, Select Specimens of the Theatre of the Hindus, Vol.I., (Asian Educational Services, New Delhi, 1984, Third edition). p.xxxiv.

33. 1) மறைமலையடிகள் (மொ.ஆ.), காளிதாசனின் சாகுந்தல நாடகம், (கழக வெளியீடு, 1957, நான்காம் பதிப்பு), பக்.2-3.
2) Kedarnath Das Gupta (Tr.), *Kalidasa's Sakundala*, (Macmillan and Co. Ltd., Madras, 1956, Seventh edition), Prologue.

34. பி.எஸ். சுப்பிரமண்ய சாஸ்திரி, முன்நூல், ப.379.

35. க.ரா. ஜமதக்னி (மொ.ஆ.), காளிதாசரின் இரகுவம்சம், அங்கம் ஒன்று, பாடல் 2.

36. மேலது, பாடல் 3.

37. மேலது, பாடல் 4.

38. மேலது, பாடல் 9.

39. மேலது, பாடல் 10.

40. கம்பராமாயணம், அவை.1.

41. பெரும்பற்றப்புலியூர் நம்பி, திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம், அவை.3.

42. சேக்கிழார், பெரியபுராணம், அவை.2.

43. வீரமாமுனிவர், தேம்பாவணி, அவை.1.

44. பெரும்பற்றப்புலியூர் நம்பி, முன்நூல், அவை.2.

45. வரதுங்கராம பாண்டியன், பிரமோத்ரகாண்டம், அவை.2.

46. அரசகேசரி, இரகுவம்சம், பாயி.4 (அவை.1).

47. மேலது, பாயி.5. (அவை.2).

48. பி.எஸ். சுப்பிரமண்ய சாஸ்திரி, முன்நூல், ப.419.

49. மேற்கோள்: பி.எஸ். சுப்பிரமண்ய சாஸ்திரி, முன்நூல், ப.510.

50. மேலது, ப.510.

51. முனைவர் எல். வீரராகவன் 'நீதி சதகம்' என்ற வடமொழி நூலிலிருந்து, மேற்கண்ட கலந்துரையாடலின்போது மொழிபெயர்த்துக் கூறியது (நூல் பதிப்பு விவரங்கள் தரப்பெறவில்லை).

52. மேற்கோள்: பி.எல். சுப்பிரமண்ய சாஸ்திரி, முன்நூல், ப.412.

53. மேலது, ப.412.

54. மேலது, ப.424.

55. மேலது, ப.420.

56. மேலது, ப.439.

57. மேலது, ப.432.

58. மேலது, ப.582.

59. மேலது, ப.583.

60. மேலது, பக்.345, 583.

61. மேலது, பக்.585, 588.

62. மேலது, ப.585.

63. G.K. Bhat, Bhavabhuti, (Sahitya Akademi, New Delhi, 1984, Second printing), pp.62-63.

64. கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள், முன்நூல், அவை.6.

65. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, மண்ணிப்படிக்கரைப் புராணம், அவை.1.

66. திருக்கூடலையாற்றூர்ப் புராணம், அவை.2.

67. வே. ஸ்ரீநிவாச சாஸ்திரி சிரோமணி, தே. ஸ்ரீநிவாசாச்சாரியார் சிரோமணி (மொழி. ஆ.), விசாகதத்தரின் முத்ரா ராக்ஷஸம், (சக்தி காரியாலயம், சென்னை-1948, முதற்பதிப்பு), ப.8.

68. அமிர்தசாகரர், யாப்பருங்கலக்காரிகை, அவை.2.

69. குணவீரபண்டிதர், நேமிநாதம், பாயி.2.

70. சுந்தரலிங்க முனிவர், திருப்பெருந்துறைப் புராணம், அவை.5.

71. அனந்தவிசயர், அப்பாண்டைநாதர் உலா, கண்ணிகள் 36-40.

72. பு.வ. முத்துச் சுப்பையர், ஜானகி பரிணய நாடகம், அவை. அநுபல்லவி-3.

73. பி.எல். சுப்பிரமண்ய சாஸ்திரி, முன்நூல், பக்.572-573.

74. மேலது, ப.522.

75. மேற்கோள்: பி.எல். சுப்பிரமண்ய சாஸ்திரி, முந்நூல், ப.522.

76. வரதுங்கராம பாண்டியன், முந்நூல், அவை.3.

77. பி.எஸ். சுப்பிரமண்ய சாஸ்திரி, முந்நூல், ப.489.

78. வடமொழி 'யாதவாப்புதயம்' என்ற நூலின் தொடக்கத்தில் அமைந்துள்ளதாக முனைவர் எல். வீரராகவன் மேற்கண்ட கலந்துரையாடலின் போது கூறியது.

78. அ) எல். சௌந்தரபாண்டியன், தமிழில் அவையடக்கப் பாடல்கள், (ஸ்டார் பிரசுரம், சென்னை, 1988), ப.7.

79. வே. வேங்கடராஜுலு ரெட்டியார், தென்மொழிகள் (முதற்பகுதி), (எஸ். வாசன் கம்பெனி, மதராஸ், 1960, முதற்பதிப்பு), ப.1.

80. R.S. Mugali, <u>History of Kannada Literature</u>, (Sahitya Akademi, New Delhi, 1975, First Published), p.12.

81. மேற்கோள்: வே. வேங்கடராஜுலு ரெட்டியார், முந்நூல், ப.7.

82. R.S. Mugali, Op.Cit., p.13.

83. பம்ப, விக்ரமார்ஜுனவிஜய (பம்பபாரதம்), பாக்கள் 8-13.

84. வில்லிபாரதம், அவை.2.

85. பம்ப, ஆதிபுராண, பாக்கள் 25-37.

86. R.S. Mugali, Op.Cit., p.30.

87. பொன்ன, சாந்திபுராண, பாக்கள் 9, 11.

88. R.S. Mugali, Op.Cit., p.30.

89. ரன்ன, கதாயுத அல்லது சாகசபீமவிஜய, பாக்கள், 45, 49.

90. R.S. Mugali, Op.Cit., p.35.

91. துர்கசிம்க, கர்நாடக பஞ்சதந்திர, பாக்கள், 10, 11.

92. வீரமார்த்தாண்டத் தேவர், பஞ்சதந்திரப் பாடல்கள், அவை.1, 2.

93. R.S. Mugali, Op.Cit., p.40.

94. நயசேன, தர்மாமிர்த, பாக்கள், 39, 42, 46.

95. R.S. Mugali, Op.Cit.,pp.58-59.

96. ராகவாங்க, சோமநாத சரித, பாடல் 14.

97. மேலது, பாக்கள் 11, 15, 19.

98. ராகவாங்க, சித்தராம சரித்ர, பாக்கள் 4-7.

99. ராகவாங்க, உறரிசந்திர காவ்ய, பாக்கள் 13, 16.

100. பரஞ்சோதி திருவிளையாடற் புராணம், அவை.1.

101. ஐக்கா, ஜகந்நாத புராண, பாடல் 49.

102. ருண்டய்ய, கப்பிகரகாவ, பாடல் 4.

103. குமுதேந்து, ராமாயண, பாடல் 46.

104. மல்லிகார்ஜுன (மல்லா), ருக்த சுதர்வை, பாக்கள் 25, 26.

105. பார்ஃவகவி, கொல்லாபுர நம்ப சாமந்த சரிதெ, பாடல் 9.

106. திருத்தக்கத் தேவர், சீவகசிந்தாமணி, அவை.1.

107. பிறைசை சாந்தக் கவிராயர், ரங்கேச வெண்பா என்னும் நீதிசூடாமணி, (கழக வெளியீடு, 1966), ப.3.

108. வேதநாயகம் பிள்ளை, நீதிநூல், அவை.2.

109. பெருமாள்பட்டி வைத்தியலிங்கம் பிள்ளை, புதுவைத்தல புராணம், அவை.2.

110. கன்னட பேராசிரியர் முனைவர் பி.வி. குல்கர்ணியின் உதவியுடன் ஆய்வாளர் பார்ஃவகவியின் நூலிலுள்ள அவையடக்கப் பாடல்களை மொழிபெயர்த்துக்கொண்டு எழுந்தபோது குறிப்பிட்டது.

111. வே. வேங்கடராஜுலு ரெட்டியார், முன்நூல், ப.9.

112. மேலது, ப.10.

113. R.S. Mugali, Op.Cit., p.64.

114. சௌண்டராச, நளசம்பு, பாடல் 6.

115. ந. பலராம ஐயர், தசகுமார சரித்ரம், அவையடக்கம் (பாரதி அச்சுக் கூடம், மன்னார்குடி, 1923), பக்கம் இல்லை.

116. சௌண்டராச, நளசம்பு, பாடல் 6.

117. R.S. Mugali, Op.Cit., p.68.

118. குமார வியாச, பாரதம், பாக்கள் 4-5.

119. R.S. Mugali, Op.Cit., p.68.

120. சாமரச, பிரபுலிங்க லீல, பாக்கள் 9, 13, 14.

121. சிவப்பிரகாச சுவாமிகள், பிரபுலிங்க லீலை, நதிகதி 12.

122. நித்யாத்ம சுகயோகி, கன்னட பாகவத, தொகுதி - , பாக்கள் 8-9.

123. பாஸ்கரகவி, ஜீவந்தர சரிதெ, பாடல் 18.

124. பரஞ்சோதி, முன்னூல், அவை.1.

125. வீ.ஆர். கல்யாண சுந்தரம் முதலியோர் (பதி.ஆ.), வசு சரித்திரம், அவையடக்கம்.

126. வி.ஏ. தியாகராஜ செட்டியார், காமதகனமென்னும் போட்டாபோட்டி இறந்தகட்சி சவால்லாவணி, கே.ஏ. மதுரை முதலியார் (பதி.), ப.7.

127. கோ. அண்ணாமலை கல்வித்தேவர், தமிழாதிக் கதை, அம்மானைவரி 25.

128. R.S. Mugali, Op.Cit., p.81.

129. கனகதாச, மோகனதரங்கிணி, பாடல் 18.

130. சேரமாங்க, சேரமகாவ்ய, பாடல் 22.

131. சாந்தநிரஞ்ஜன, ஆப்பளூரு சரிதெ, பாக்கள் 11-15.

132. ருத்ரகவி, கரஸ்தல நாகலிங்கன சரித்ர, பாடல் 10.

133. மேலது, 8.

134. மாதங்கா, நன்னய்ய சரிதம், பாக்கள் 22, 26.

135. முனைவர் பி.வி. குல்கர்னி சடக்சரதேவா எழுதிய 'ராஜசேகர விலாசம்' என்ற நூலின் முகவுரைப் பகுதியில் சுட்டப்பெற்றுள்ளதாகக் குறிப்பிட்டது.

136. சடக்ரதேவ, ராஜசேகரவிலாச, பாக்கள் 19, 23.

137. G.V. Sitapati, History of Telugu Literature, (Sahitya Akademi, 1968), p.5.

138. நன்னய்ய, ஸ்ரீமத் ஆந்த்ரமகாபாரதம், ஆதிபருவ, முதல் அத்தியாயம், பாக்கள், 19-20.

139. G.V. Sitapati, Op.Cit., p.12.

140. பால்குறிக்கி சோமநாத, பண்டித ராஜ சரித்ர, முதல் அத்தியாயம், பாக்கள் 12-13.

141. சேக்கிழார், முன்நூல், அவை.1.

142. G.V. Sitapati, Op.Cit., p.9.

143. எர்ரா பிரகட, சிம்மபுராண, (ஆந்திர பிரதேச சாகித்ய அகாதெமி, ஹைதராபாத், 1967), ப.3.

144. G.V. Sitapati, Op.Cit., p.18.

145. ஸ்ரீநாத, சிருங்கார நைஷத, முதல் அத்தியாயம், பாடல் 17.

146. அதிவீரராம பாண்டியனார், நைடதம், நா. கதிரைவேற்பிள்ளை விருத்தியுரை, நூலாசிரியர் வரலாறு, பக்.16.

147. ஸ்ரீநாத, காசிகண்ட, ப.60.

148. தெலுங்கு பேராசிரியர் முனைவர் டி.எஸ். கிரிப்பிரகாஷ் தெலுங்கு அவையடக்கப் பாடல்களை மொழிபெயர்க்க உதவியபோது குறிப்பிட்ட கருத்து.

149. G.V. Sitapati, Op.Cit., p.18.

150. போதன, ஸ்ரீமகாபாரத, பாக்கள் 16, 18.

151. G.V. Sitapati, Op.Cit., p.31.

152. தூர்ஜடி, ஸ்ரீகாளகஸ்தி மகாத்மியமு, முதல் அத்தியாயம், பாடல் 8.

153. G.V. Sitapati, Op.Cit., p.48.

154. குமரிமொல்ல, ராமாயணம், முதல் அத்தியாயம், பாடல் 13.

155. G.V. Sitapati, Op.Cit., p.34.

156. பட்டுமூர்த்தி, வசுசரித்ர, முதல் அத்தியாயம், (வெங்கடராம & கோ பதிப்பு), பக்.4-5.

157. வி.ஆர். கல்யாண சுந்தரம் முதலியோர் (பதி.ஆ.), முன்நூல், அவையடக்கம்.

158. முனைவர் டி.எஸ். கிரிப்பிரகாஷ் தெலுங்கு அவையடக்கப் பாடல்களை மொழிபெயர்கக உதவியபோது குறிப்பிட்டது.

159. காசிவிசுவநாத நாயக ஜ்ஞானபதி, ஞானவாசகம், அவதாரிக 4.

160. G.V. Sitapati, Op.Cit., pp.44-45.

161. கூபவரபு வெங்கடகவி, பிரபந்தராஜ வெங்கடேஸ்வர விஜயவிலாசமு (ஆந்திரப்பிரதேச சாகித்ய அகாதெமி, 1982), பக்.6-7.

162. P.K. Parameswaran Nair, History of Malayalam Literature, E.M.J. Venniyoor (Tr.), Sahitya Akademi, New Delhi, 1977, Second edition, pp.19-20.

163. மேற்கோள்: வே. வேங்கடராஜுலு ரெட்டியார், முன்நூல், ப.161.

163. அ) மேலது, ப.165.

164. அவ்வையார், அவ்வைக் குறள், த. கோவிந்தன் (பதி.), சித்தர் பாடல்கள், ப.70.

165. மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மலையாளத் துறை, இணைப் பேராசிரியர் டேவிட் சிவதாசன் அவர்களும் ஆய்வாளரும் கலந்துரையாடியபோது பெற்ற கருத்து.

166. துளசிதாஸ், ஸ்ரீராமசரிதமானஸ், சிவராமக் கிருஷ்ணன் (மொ.ஆ.), (ஸாதனா நிகேதன், 1983), பக்.12-17.

167. மேலது, ப.12.

****

இயல் எட்டு

****

****

முடிவுரை

****

8. முடிவுரை

நூலில் கண்ட முடிவுகள் ஒவ்வொரு இயலின் இறுதியிலும் தொகுப்புரையாக வழங்கப்பட்டுள்ளன எனினும் இன்றியமையாதன சிலவும் அவற்றில் கூறப் பெறாதனவும் இங்கு எடுத்துரைக்கப்படுகின்றன.

1. அவையடக்கம் கூறுதல் தமிழ் நூற்பரப்பில் தொன்றுதொட்டு வரும் மரபாகும்.

2. தொல்காப்பியத்தில்தான் முதன்முதலாக அவையடக்கத்திற்கு இலக்கணம் கூறப்பட்டுள்ளது. எனினும் நூலுக்குரிய அவையடக்கப் பாடல் கிடைக்கப்பெறவில்லை. கி.பி.9ஆம் நூற்றாண்டையொட்டி எழுதப்பெற்ற சீவகசிந்தாமணி முதல், தமிழ் அவையடக்கப் பாடல்கள் கிடைக்கப் பெறுகின்றன.

3. நூலாசிரியன் தாழ்வும் அவையோர் உயர்வும் அமையப்பாடுதல் அவையடக்கத்தின் பொதுப் பண்பு. அதனை உவமைவழி உணர்த்தும் பொது நெறியைக் காலந்தோறும் காணமுடிகின்றது.

4. அவையடக்கப் பொதுநெறியுடன் ஆசிரியர் பெயர், நூற்பெயர், நூல்வந்த வழி, பாடுபொருள், முன்னோர் சிறப்பு, காரணம் போன்றவற்றைச் சுட்டிச் செல்லும் வளர்ச்சி நிலையைக் காணமுடிகின்றது. பாயிர உறுப்புகள் பெரும்பாலானவற்றை அவையடக்கத்துள் பேசும் நிலையைக் கந்தபுராணத்தில் காண்கிறோம்.

5. நூன்முகத்துப் பாடவேண்டிய அவையடக்கத்தை நூல் இடை வைத்துக் கம்பரும், நூல் இறுதியில் சுப்பிரமணியரும் பாடிப் புதுமை செய்துள்ளனர்.

6. அவையோரை முன்னிலைப்படுத்திப் பாடவேண்டிய அவையடக்கத்தில், அவையோர் முன் இறைவனையும் பெண்ணையும் முன்னிலைப்படுத்தும் வளர்ச்சியைப் பிற்கால நூல்களில் காணமுடிகின்றது. இதன் விளைவாக, நெஞ்சையும் பாரதமாதா, தமிழ்த்தாய் போன்றவர்களையும் முன்னிலைப்படுத்திப் பாடும் வளர்ச்சியை இக்கால நூல்கள் பெற்றுள்ளன.

7. அவையடக்கவழி சமயத்தத்துவக் கருத்துகளைச் சிவஞானபோதம் முதலிய நூல்கள் பரப்பின. குற்றம் காண்போரைக் குறைத்து மதிப்பிடும் நிலையிலிருந்து வெளிப்படையாக விமர்சிக்கும் போக்கைச் சிவப்பிரகாசம் போன்ற சமயநூல்களின் அவையடக்கப் பாடல்கள் கொண்டுள்ளன.

8. சமகாலச் சமுதாயத்தைப் பிரதிபலிக்கும் நிலையும், தன்னம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு பாடுவதாகக் காட்டும் போக்கும் இக்கால நூல்களில் போற்றப்பட்டுள்ளன. இவை அறிவியல் வளர்ச்சியின் விளைவு எனக் கொள்ளப்படும்.

9. புதுக்கவிதை நூல்களும் அவையடக்கப் பொருண்மை பேசியுள்ளன. உரைநடை வளர்ச்சியால் அவையடக்கம் உரைநடை வடிவில் தரப்பெற்று வருகின்றது.

10. நூலாசிரியன் தாழ்வு, நூல் தாழ்வு, அவையோர் உயர்வு, பாடுபொருள் சிறப்பு போன்ற கருத்தலகுகள் இணைந்து அவையடக்கப் பாடல்களின் அகஅமைப்பை உருவாக்குகின்றன.

11. பாவகைகளும் பாவினங்களும் அவையடக்கப் பாடல்களின் புறவடிவங்களாகக் கொள்ளப்படுகின்றன. பாவகைகளுள் வெண்பாவும் பாவினங்களுள் விருத்தப்பாவும் மிகுதியான பாடல்களில் பயின்றுவருவன. கலிவிருத்தம், கலித்துறை, வஞ்சித்துறை, கீர்த்தனை, சிந்து போன்றவற்றிலும் அவையடக்கம் பயின்றுவருதல் யாப்பில் ஏற்பட்ட வளர்ச்சியைக் காட்டும்.

12. நூலில் அமைந்துவரும் யாப்பிலேயே அவையடக்கம் யாக்கப் பெறுதல் பொதுநெறி. இதில் ஒரோவழி வேறுபாடும் உண்டு.

13. காப்பு அல்லது கடவுள் வாழ்த்து வரிகளில் அவையடக்கம் பேசுதல் கதைப்பாடல்களின் தனிச்சிறப்பு. இம்முறையைப் பின்பற்றி ஒரே பாடலில் கடவுள் வாழ்த்தியுரை அவையடக்கம் பாடும் நிலையைப் பல சிற்றிலக்கிய நூல்கள் பின்பற்றியுள்ளன.

14. பாடல் எண்ணிக்கையில் வரையறையில்லை. எனினும் ஓரிரு பாடல்களில் அவையடக்கம் பாடுதல் பெருவழக்கு. பாடல் அளவுகள் புலவனின் அவையடக்கத்தை மதிப்பிடுவதில்லை. தமிழின் அதிகமான அவையடக்கப் பாடல்களைத் தந்தவருள் மீனாட்சி சுந்தரம் பிள்ளை முதலிடம் பெறுகின்றார்.

15. விருத்தப்பா முதலான யாப்புகள் பயன்படுத்தப் பெற்றாலும் கருத்திற்கு முதன்மை தந்து அவையடக்கம் பாடுவதால் கவிஞர்களின் திறன் வெளிப்படுத்தப்பட்டது. அவையடக்கப் பண்புடன் அச்சம், பெருமிதம் போன்ற உணர்ச்சிகளை வெளிக்காட்டும் சொற்கள் பயன்படுத்தப்பட்டன.

16. அவையடக்கப் பாடல்களில் உவமையின் செல்வாக்கு மிகுதி. பிற அணிகள் அருகிய நிலையில் அமைந்துள்ளன.

17. நீண்ட அடைத்தொடர்களைப் பயன்படுத்துதல் அவையடக்கத்தின் தனிச்சிறப்பாக உள்ளது.

18. தமிழ்ப் பெருமையை உலகிற்கு எடுத்தியம்பும் வண்ணம் அவையோர் சிறப்பு உரைக்கப்பட்டுள்ளது. அது பன்மொழிப் புலமையுடையோரின் மதிப்பீடாக அமைகின்றது.

19. நூற்பெயர் முதலான செய்திகளை நூலாசிரியனே நேரடியாகச் சுட்டுவதால், அவற்றில் உண்மைத் தன்மை வெளிப்படும். இவை வரலாற்று நூல் எழுதுவோர்க்கு உதவும்.

20. சமுதாயம் முதலான செய்திகள் பரவலாகக் காணப்படுகின்றன. எனினும் பாடல்கள் தோன்றிய காலச் சமுதாயமும் முழுமையாகப் பிரதிபலிக்கப் படவில்லை. பாடல்களில் இடம்பெறும் மன்னர்களின் பெயர்கள் நூல்களின் காலத்தைக் குறிப்பால் உணர்த்துகின்றன.

21. கடவுளர், திருத்தலங்கள், குருபரம்பரை, புராணம் ஆகியவற்றின்வழி சமயச் செய்திகள் பேசப்பட்டுள்ளன. புராண நிகழ்ச்சிகளை இலக்கிய விளக்க உத்தியாய்ப் பயன்படுத்தும் போக்கை அவையடக்கப் பாடல்கள் கொண்டுள்ளன. சிவன், திருமால், முருகன் போன்றோர் தொடர்பான புராணச் செய்திகளே மிகுதியாக இடம்பெற்றுள்ளன.

22. மேலைநாட்டு இலக்கிய உலகில் தமிழில் உள்ளதுபோல் முறையான அவையடக்க மரபு காணப்பெறவில்லை.

23. வடமொழியில் இரகுவம்சம், தமிழில் சீவகசிந்தாமணி, கன்னடத்தில் பம்பபாரதம், தெலுங்கில் ஆந்திரமகாபாரதம், மலையாளத்தில் இராமசரிதம் ஆகியன அவையடக்கம் கூறும் முதல் நூல்களாகும்.

24. அவையோர் முன் நாணம், பெருமிதம், அவையடக்கம் ஆகிய மூன்று நிலைகளில் வடமொழிக் கவிஞர்கள் பேசியுள்ளனர். தமிழில் பெருமிதம் தோன்றப் பாடப்பெறினும் அதனை அவையடக்கத்துடன் இணைத்துத் தரும் வழக்கைக் காணலாம்.

25. தொல்காப்பியருக்குப் பின் தேக்கநிலையிலிருந்தத் தமிழ் அவையடக்க மரபு திருத்தக்கத் தேவர் காலத்தில் மறுமலர்ச்சிப் பெற்றுத் தொடர்ந்து பின்பற்றப்பெற்று வருகின்றது. இதனால் அவையடக்கம் தமிழ் நூல்களில் நிலைபெற்றுவிட்டு ஒர் உறுப்பு என்பது பெறப்படும். தமிழ் அவையடக்க மறுமலர்ச்சிக்கு வடமொழி உறவும் துணைசெய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

<u>பின்வைய ஆய்வுகள்:</u>

ஒருமொழியைச் சேர்ந்த நூலும் ஆசிரியரும் பிறமொழி அவையடக்கப் பாடல்களில் சுட்டப்பெறுவதால், அவையடக்கப் பாடல்கள் தோன்றிய காலத்திலிருந்தே இந்திய மொழிகளில் ஒப்பீட்டுத் தன்மை உருவாகிவிட்டது என்பது பெறப்படும். எனவே இந்திய ஒப்பியல் ஆய்வு வரலாற்றில் அவையடக்கப் பாடல்களையும் கருத்திற்கொள்ள வேண்டும்.

அவையடக்கப் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு நூல்களின் காலத்தைக் கணிக்கும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

கால அடிப்படையிலும் இலக்கியவகை அடிப்படையிலும் அவையடக்க உவமைகளை ஆராய்கின்ற அளவிற்கு உவமைகளின் ஆட்சி மிகுதியாகவுள்ளது.

இந்திய மொழிகளில் உள்ள அவையடக்கப் பாடல்களை முறைப்படித் தொகுத்து ஆராய்ந்தால் இந்திய இலக்கியத்தின் பொதுக் கூறுகளுள் சில வெளிப்படும்.

அவையடக்கம் போன்ற தமிழிலுள்ள பழம்மரபுகளை ஆராயவும், அவற்றைப் பிறமொழி மரபுகளுடன் ஒப்பிடவும் இவ்வாய்வுத் துணைசெய்யும்.

****

பின்னிணைப்புகள்

****

பின்னிணைப்பு - 1

அவையடக்க ஆய்வுகள் (காலமுறைப்படி)

வரிசை எண்	ஆசிரியர்	கட்டுரை / நூற்பெயர்	காலம் நூற்றாண்டு	பதிப்பு/வெளியீடு	ஆண்டு
1.	இளம்பூரணர்	தொல்காப்பியம் - பொருளதிகாரம் செய்யுளியல் உரை	12	கழக வெளியீடு, சென்னை	1967
2.	பேராசிரியர்	,,	12	,,	1972
3.	நச்சினார்க்கினியர்	,,	14	,,	1965
4.	வைத்தியநாததேசிகர்	இலக்கண விளக்கம், பொருளதிகாரம் பாட்டியல் உரை	17	தி.வே. கோபாலையர் (பதி.) சரசுவதி மகால், தஞ்சை.	1974
5.	சிவஞானசுவாமிகள்	சிவஞான போதமாபாடியமும் சிற்றுரையும்	18	சுவாமிநாதபண்டிதர் (பதி.) சைவ வித்தியா நுபாலன யந்திரசாலை, சென்னை	பராபவ ஆண்டு
6.	க. வச்சிரவேலு முதலியார்	சிவஞானபோத அவையடக்கம்	20	வானொலிப் பேச்சு	
7.	வ.சுப. மாணிக்கம்	இலக்கிய முத்திறன்	20	பேராசிரியர் டாக்டர் ரா.பி.சேதுப்பிள்ளை வெள்ளிவிழா மலர், ஆசியன் பிரிண்டர்ஸ், சென்னை-5	1961
8.	மயிலை சீனி வேங்கடசாமி	அவையடக்கச் செய்யுட்கள்	20	மன்னர் துரைசிங்கம் கலைக் கல்லூரி ஆண்டு மலர், சிவகங்கை	1972-73

வரிசை எண்	ஆசிரியர்	கட்டுரை/நூற்பெயர்	காலம் நூற்றாண்டு	பதிப்பு/வெளியீடு	ஆண்டு
9.	நெல்லை ந. சொக்கலிங்கம்	அவையடக்கம்	20	இ.ப.த.ம. நான்காவது கருத்தரங்க மலர், அண்ணாமலை நகர்.	197
10.	மு. குருசாமி	சைவ எல்லப்ப நாவலர் புராணங்களில் அவையடக்கப் பாடல்கள்	20	இ.ப.த.ம., 21ஆவது கருத்தரங்க ஆய்வுக்கோவை தொகுதி-1, அண்ணாமலை நகர்.	198
11.	இ.இ. இராமசாமி	தமிழில் பாயிரங்கள்	20	பதிப்புத்துறை, மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை.	198.
12.	எஸ். சௌந்தரபாண்டியன்	தமிழில் அவையடக்கப் பாடல்கள்	20	ஸ்டார் பிரசுரம், சென்னை.	198
13.	வே. பால்ராஜ்	அவையடக்கப் பாடல்கள்	20	இ.ப.த.ம., 22ஆவது கருத்தரங்க ஆய்வுக்கோவை, தொகுதி-1, அண்ணாமலை நகர்.	198
14.	சா. அலிமேபி கிரேசு	காப்பியங்களில் அவையடக்கம்	20	மதுரை காமராசர் பல்கலைக் கழக எம்.பில்.பட்ட ஆய்வேடு தமிழ் ஆய்வு மையம், யாதவர் கல்லூரி, மதுரை.	1989

1=1

பின்னிணைப்பு - 2

உரைநடையில் அவையடக்க மரபு

இக்கால நூல்களில் அவையடக்க மரபு உரைநடையாகவும் எழுதப் பட்டு வருகின்றது. கால மாற்றத்தால் அதன் அமைப்பிலும் பொருளிலும் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. எனினும் அவை பண்டைய அவையடக்க மரபைப் பின்பற்றியனவே. படைப்பிலக்கிய ஆசிரியர்கள், பதிப்பாசிரியர்கள், தொகுப்பாசிரியர்கள், உரையாசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள் என அனைத்துத் துறையைச் சேர்ந்தவர்களும் நூன்முகத்தில் அவையடக்கப் பொருண்மையுடன் பேசுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

பாரதியார்:

பாரதியாரின் உரைநடை நூன்முகங்களில் அவையடக்கப் பொருண்மையுடன் கூடிய கருத்துகள் காணப்படுகின்றன. 'பாஞ்சாலி சபதம் (1912)' என்ற நூலின் உரைநடை நூன்முகத்தில்,

> "காரியம் மிகப்பெரிது, எனது திறமை சிறிது,
> 'ஆசையால்' இதனை எழுதி வெளியிடுகிறேன்"[1]

என்ற கூற்று அமைந்துள்ளது. இங்குப் பாடுபொருள் சிறப்பும் திறமைக் குறைவும் சுட்டப்படுவதனால் அவரது அவையடக்கப் பண்பு வெளிப்படுத்தப்பட்டது.

மற்றொரு நூலில் 'தாம் நூல் எழுதுவது இறைவன் செயலாதலால் நூலில் ஏற்படும் குற்றங்குறைகளுக்குத் தாம் பொறுப்பாளியல்ல'[2] எனப்

பேசியுள்ளார். தவற்றிலிருந்து தம்மைக் காத்துக் கொள்ளும் போக்கு பாரதியாரிடம் உண்டு என்பதைக் காட்டுவதாக இஃது அமைந்துள்ளது.

அலர்மேல்மங்கை அம்மாள்:

'திராவிட மதம்(1914)' என்ற இவரது சொற்பொழிவு நூல் பல செய்திகளை உள்ளடக்கிய நீண்ட அவையடக்கத்துடன் தொடங்குகின்றது. அந்நூலில் 'அவையடக்கம்' என்ற தலைப்பின்கீழ் அவையடக்க விளக்கம், களம், காரணம், திராவிட மதத்தின் சிறப்பு, ஆரிய மதத்திலுள்ள குறைபாடுகள், நூல் குறை சுட்டுவோரின் தன்மைகள், நூல் எழுதத் தமக்கு ஏற்பட்ட சிக்கல்கள், தம்முடைய திறமையின்மை ஆகியவற்றை எடுத்துக் காட்டியுள்ளார். இறுதியில் நீரைப் பிரித்தெடுத்துவிட்டுப் பாலை மட்டும் உண்ணும் அன்னம் போல் தம் நூலில் உள்ள குறைகளை நீக்கிவிட்டுக் குணத்தை மட்டும் எடுத்துக் கொள்க' என வேண்டிக்கொள்கிறார்[3]. அவையடக்கத்தை உவமையால் வெளிப்படுத்தும் பண்டைய நெறி உரைநடையிலும் போற்றப்பட்டு வருவதை இச்சான்று காட்டுகின்றது

இவரைப் போல வாசுதேவ ஐயர்,

"...... ஆதலால் சொற்குற்றம், வாக்கிய வழூஉ
முதலியவைக ளுளவாயின் அடியேமை மன்னித்து
நீர்ப்பிரித் தன்னமுண்ணுந் தூ யதீம்பால்போற்
குணத்தைமாத்திரம் கொள்க"[4]

என்று 'மெல்லியலார் சுதந்திரம் (1918)' என்ற நூலில் அவையடக்கத்தை வெளிப்படுத்தியுள்ளார். நூலில் என்னென்ன குறைபாடுகள் உண்டு என்பதை நூலாசிரியரே சுட்டிச் செல்லும் போக்கு இதில் காணப்படுகின்றது.

அ. சுப்ரமண்யபாரதி:

'பாடுபொருள் சிறப்புக் கருதித் தம் நூலின்கண் குறைகளை அறிஞர்கள் பொறுத்துக் கொள்வர்' என்ற பண்டைய நெறியைப் பின்பற்றிப் பலர் இக்கால நூன்முகங்களை அமைத்துள்ளனர்.

அ. சுப்ரமண்ய பாரதி, 'ஔவை அருந்தமிழ்(1921)' என்ற நூலில்,

"இது சிறியேன் செய்த நூல். ஆயினும் ஔவையின் தமிழ்
என்கிற ஓர் ஏற்றமுண்டு இதற்கு. அந்த ஏற்றத்தை
மறவாமல் மனத்திற் கொண்டால் அடியேன் பிழை
தோன்றா தென்பதே யான் கொள்ளும் துணிபு"[5]

என்று கூறுவது மேற்கண்ட கருத்திற்குச் சான்றாகும்.

தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்:

அவையடக்கப் பண்புடன் முன்னூலாசிரியர் சிறப்பைக் காட்டும் போக்கைத் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் பின்பற்றியுள்ளார். இதனை,

"அன்பு வென்றதோ அவா வென்றதோ யானறியேன்.
வள்ளுவரின் மறுபிறப்பு என் பிறப்பல்ல, ஆகையால்
இந்நூல்தான் முடிந்தமுடிபென மனப்பால் குடிக்கவில்லை.
என் நெஞ்சு அறிந்ததனைப் பொய்யாது எழுதியுள்ளேன்.
நான் கடவுளும் அல்லன். ஆதலினால், குற்றம் குறை
இந்நூலில் நிறைந்தே கிடக்கும். உலகம் பொறுக்க"[6]

என்று 'வள்ளுவரும் மகளிரும்(1930)' என்ற நூலில் உரைத்துள்ளதன் வழி அறியப்பெறுகிறது.

வ.உ. சிதம்பரம் பிள்ளை:

திருக்குறளுக்கு வ.உ. சிதம்பரம் பிள்ளை எழுதிய உரை(1935)யில்,

> "அவையடக்கம் கூறுதல் பேரறிவுடையார் வழக்காதலின்,
> அஃதில்லாத யான் அதனைக் கூறாது விடுகின்றேன்"[7]

என்று அவையடக்கம் பேசப்பட்டுள்ளது. இவரைப் பின்பற்றி, ந.மு. வேங்கடசாமி நாட்டார்[8], வா. மகாதேவ முதலியார்[9], நாகை. சொ. தண்டபாணிப் பிள்ளை[10], எஸ். நடராசன்[11] போன்றோர் எழுதிய உரை நூல்களில் அவையடக்கப் பொருண்மையுடன் கூடிய நூன்முகங்கள் காணப்படுகின்றன.

மு. இராகவையங்கார் முதலியோர்:

தொகுப்பு நூல்களுக்கும் அவையடக்கம் இன்றியமையாதது என்பதைப் புறத்திரட்டு முதலான பண்டைய நூல்களின் நூன்முகங்கள் வழிப் பெறப்பட்டது. அதனை இக்கால அறிஞர்களான மு. இராகவையங்காரைப் போன்றோர் பின்பற்றியுள்ளனர்.

> "இந்நூலில் எத்தனையோ குற்றங் குறைகள் உள்ளன. அவை என்னொருவனையே பின்பற்றியவையல்ல. நல்லறிஞர் அவற்றைப் பெரிதும் பாராட்டாது அமைத்துக் கொள்வார்களென்றே நம்புகின்றேன்"[12]

என்று 'பெருந்தொகை(1935)' என்ற தொகுப்பு நூலில் மு. இராகவையங்கார் கூறியுள்ளார். பண்டைய நூல்களில் பிற ஆசிரியர்களின் பாடல்கள் அவையடக்கப் பகுதியின்கீழ்த் திரட்டித் தரப்பெற்றன. ஆனால் தொகுப்பாசிரியரே அவையடக்கப் பொருண்மையுடன் பேசுவது இக்கால நூன்முகங்களில் மட்டும் காணப்படுவதாகும்.

தொகுப்பாசிரியரைப் போன்றே பதிப்பாசிரியர்களும் அவையடக்கமாகச் சில கருத்துகளைப் பதிப்புரையில் வழங்கியுள்ளனர்.

"உரைகளிலும் மூலத்திலும் எமது அறிவின்
முதிர்ச்சி குறைவால் வழுக்கள் இருக்கக் கூடும்.
அன்பர்கள் இது ஒரு சிறிய முயற்சியென்று கருதி
அவைகளைப் பொருட்படுத்தாமலிருக்க வேண்டுகிறோம்"[13]

என்று 'ஸ்ரீஸுப்ரமண்ய ஸஹஸ்ரநாமம்' என்ற நூலின் பதிப்பாசிரியர் அவையடக்கக் கருத்தை வெளிப்படுத்தியுள்ளார். இதுபோல் கவிதா ராஜ்யம்[14], பிறவிப் பெருங்கடல்[15], குசலவன் கதை[16] போன்ற நூல்களின் பதிப்பாசிரியர்களும் அவையடக்கம் தோன்றப் பேசியுள்ளனர்.

வ.சுப. மாணிக்கம்:

நூல் கற்போர்க்கு இருக்க வேண்டிய தன்மைகளை எடுத்துக்கூறி அவையடக்கப் பண்பு வெளிப்பட உரைக்கும் போக்கு வ.சுப. மாணிக்கத்திடம் காணப்படுகிறது.

"பன்முறை கற்றலோடு, நுணுக்கத்தினைக் காணவல்ல அடிப்படை
அறிவும், நன்றுதீது துணியவல்ல நேர்மையும் கற்பார்க்கு
இன்றியமையாதன. ஆதலின், என் உழைப்பின் முதல்
உருவகங்களாகிய இந்நாடகங்களின் இழிவு சிறப்பு உயர்வு
சிறப்புக்களைச் சீர்தூக்கிக் காணும் பொறுப்பு கற்பார்
பாலதாகும் என்பது என் பணிவுடைக் கொள்கை"[17]

என்று 'மனைவியின் உரிமை(1947)'யில் பேசப்பட்டுள்ளது. இவரது 'வள்ளுவம்[18] என்ற நூலின் நூன்முகத்தும் அவையடக்கப் பொருண்மை காணப் படுகின்றது.

மு. வரதராசன்:

இவர் 'திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம் (1948)' என்ற நூலில்,

"...... ஆதலின், இம்முயற்சியில் காணும் கருத்துவேறுபாடுகளுக்கு இடந்தருமாறும் பிழைகளைப் பொறுத்தருளுமாறும் வேண்டுகிறேன்"[19]

என்று சுட்டியிருப்பதை அவையடக்கப் பொருண்மையாகக் கொள்ளவேண்டும்.

சரவண ஆறுமுக முதலியார்:

நூலில் உள்ள குறைகளை அடுத்தடுத்த பதிப்புகளில் திருத்திக்கொள்ள உதவும் வகையில் பிழைகளைத் தமக்கு அறிவிக்குமாறு வேண்டுகின்ற நிலையை இக்கால நூலாசிரியர்கள் வழக்காகக் கொண்டுள்ளனர். சரவண ஆறுமுக முதலியார் (1951),

"அறிந்தும் அறியாமலும் இந்நூலில் கருத்துப் பிழைகளோ, பிற பிழைகளோ நேர்ந்திருக்குமாயின், இதைப் படிக்கும் அன்பர்கள் எனக்கு அன்புகூர்ந்து அறிவுறுத்துவார்களாயின், நான் நன்றியறிதலோடு அவற்றை ஏற்றுக் கொண்டு மேல்வரும் பதிப்பில் திருத்திக்கொள்வேன்"[20]

என வேண்டிக் கொள்கிறார்.

கி.ஆ.பெ. விசுவநாதம்:

திருவள்ளுவர் படிப்பகத்தின் ஆண்டுவிழாவின்போது கி.ஆ.பெ. விசுவநாதம் நிகழ்த்திய சொற்பொழிவு 'வள்ளுவரும் குறளும் (1953)' என்ற நூலாக வெளிவந்துள்ளது. அதில்,

> "நான் அறிந்தமட்டில் சில நூல்கள் ஆராய்ந்து கண்டுபிடித்த சில செய்திகளைக் கொண்டு எனது கருத்தை உங்கள் முன்பு கொட்டிக் குவிக்கலாம் என்று எண்ணுகிறேன்"[21]

என்று அவையோர் முன் அடக்கமுடன் பேசியுள்ளார்.

<u>பாரதிதாசன்:</u>

தம் படைப்புகளில் குறைகள் இருந்தாலும் அதனைப் பொறுத்துக் கொண்டு தொடர்ந்து ஆதரவு தருமாறு வேண்டுகின்ற போக்கைப் பாரதிதாசன் முதலியோர் கடைபிடித்துள்ளனர்.

> "பிழை இருக்கலாம், அழகு குறையலாம். பொறுத்து - ஆதரவு தரத் தமிழர்களை வேண்டுகிறேன்"[22]

என்பது 'குறிஞ்சித்திட்டு (1958)' என்ற நூலில் இடம்பெறும் பாரதிதாசனின் கூற்றாகும். இம்முறையைப் பின்பற்றிக் கு. ராஜவேலு[23] போன்றோர் அவையடக்கப் பொருண்மை தோன்றப் பேசியுள்ளனர்.

<u>காவிரி நாடன் முதலியோர்:</u>

காவிரி நாடன், எழில் முதல்வன் போன்றோர் தன்னம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு பெருமிதம் தோன்றும் வண்ணம் நூன்முகங்களை அமைத்துள்ளனர்.

> "கற்பனைகள் தனித்தன்மையுடன் பெருஞ்சுவை பயக்கும் என்று நான் கூறினால் அச்செயல் செருக்கின்பாற்படும். பிழைகளைப் பொறுத்தருள்க என்று கூறும் அவையடக்கம் கவிஞர் பரம்பரைக்குப் பிழையாகும்"[24]

என்று காவிரி நாடனும்,

> "நீங்கள் எல்லாம் இதைப் படிக்க வேண்டும், பாராட்ட வேண்டும், என்பதற்காக நான் எழுதவில்லை. ..... என் கவிதைகள் வாழுமா வாழாதா என்பதைக் காலம்தான் கணிக்க வேண்டும். தகுதி இருந்தால் வாழட்டும்; இன்றேல் மடியட்டும். இதைப் பற்றியெல்லாம் நான் கவலைப்படவில்லை"[25]

என்று எழிலுதல்வனும் தன்னம்பிக்கையுடன் நூன்முகத்தில் பேசியுள்ளார். அறிவியல் வளர்ச்சியும் வேறு துணையுமின்றி நூல் வெளியிட முடியும் என்ற நிலையும் இவர்களை இவ்வாறு பேசச் செய்துள்ளன.

ஆனால் இதே சூழலில், 'எழுத்தாளர்களை ஊக்குவிப்பது அறிஞர்களின் கையில்தான் உள்ளது'[26] என்றும் 'குழந்தையின் மழலையை ஏற்பது போல் தம் நூலையும் சுவைத்து மகிழவேண்டும்'[27] என்றும் வாசகர்களை வேண்டிக் கொள்ளும் ஆசிரியர்களும் இருக்கிறார்கள். அறிஞர்களையோ வாசகர்களையோ குறைகூறியதாகக் காவிரி நாடன் போன்றோரின் கூற்று அமையவில்லை என்பதும் நோக்கத்தக்கது.

<u>கண்ணதாசன்:</u>

பாரதியார் தம் திறமைக் குறைவைச் சுட்டிக் காட்டியதுபோல் கண்ணதாசன் தன் அறிவுக்குறைவைக் காட்டுவது அவையடக்கத்தின் பாற்படும்.

> "..... அத்தகைய இந்து மதத்தைப் பற்றி என்னுடைய குறைவான அறிவில் தோன்றிய குறைபாடான கருத்துகளைத் தொடர்ந்து எழுதப்போகிறேன்"[28]

என்பது 'அர்த்தமுள்ள இந்துமதம்' என்ற நூலில் இடம்பெறும் கண்ணதாசனின் கூற்றாகும்.

ஜெயகாந்தன் :

அவையடக்கச் சிந்தனை புனைவு படைப்பிலக்கிய ஆசிரியர்களிடம் உண்டு என்பதற்கு ஜெயகாந்தனின் கூற்றுகள் சான்றாக அமைகின்றன. 'யாருக்காக அழுதான்' என்ற நாவலின் முன்னுரையில்,

> "...... இப்படி நான் சொல்வது அவையடக்கம் என்று நண்பர்கள் நினைக்க வேண்டாம். எனக்கு 'அடக்கமோ' 'அடங்காமையோ' தெரியாது"[29]

என்று கூறுவதிலேயே அவரது அவையடக்கம் வெளிப்படுத்தப்பட்டது. அதே முன்னுரையில்,

> "தன் குறை தெரியாத 'மேதாவி'களுக்கெல்லாமே தன் பலம் தெரிந்திருக்கும்போது - என்குறை தெரிந்த எனக்கு என்பலம் தெரியாதா என்ன....!"[30]

என்று பெருமிதத்துடன் பேசும் ஜெயகாந்தன்,

> "இதில் ஏதும் குறைகாணும் என் நண்பர்கள் எனது அனுபவமின்மைக்காக மன்னிக்க வேண்டுகிறேன்"[31]

என்று 'கைவிலங்கு' என்ற நாவலின் முன்னுரையில் கூறியிருப்பதும் நோக்கத்தக்கது. இது இவரின் தன்னடக்கத்தை வெளிப்படுத்துவதாகவே அமைந்துள்ளது.

வைரமுத்து :

பிழைகளைத் தமக்கு அறிவிக்குமாறு வேண்டுகின்ற நிலையில் வைரமுத்து பேசினாலும் தம் குறையைக் கடுமையாகச் சுட்டிக்காட்டுமாறு வேண்டுவது மாறுபட்ட அமைப்பாக உள்ளது.

"இதில் பிழையிருப்பின் யாரும் பொறுத்தருள வேண்டாம்.
சூறாவளிபோல் கிளர்ந்து சுட்டிக்காட்ட வேண்டுகிறேன்.
திருத்திக்கொள்ளச் சம்மதம்"[32]

என்ற வைரமுத்துவின் கூற்று கடுமையான விமர்சனத்தை ஏற்றுக்கொள்ளும் பக்குவம் இன்றைய எழுத்தாளர்களுக்குத் தேவை என்பதை உணர்த்துகின்றது.

முடிவுரை:

உரை நடையில் இடம்பெறும் அவையடக்கக் கருத்துகள் பல்வேறு தலைப்புகளில் இடம்பெறும் நூன்முகங்களின் இறுதியில் அமைவது பொது வழக்காக உள்ளது. நூல்களில் ஏற்படுகின்ற தவறுகளிலிருந்து நூலாசிரியர்கள் தம்மைத் தற்காத்துக் கொள்ள உதவும் களனாக இப்பகுதி அமைவதையே சான்றுகள் விளக்கின.

'அவையடக்கம்' என்ற பண்டைய மரபை மனத்திற்கொண்டே இவை பேசப்பட்டுள்ளன. வாசகர்கள், அறிஞர்கள், உலகோர், தமிழர்கள் எனப் பல்வேறு பெயர்களில் அவையோர் சுட்டப்படுகின்றனர். பாடுபொருள், முன்னூலாசிரியர் போன்ற செய்திகளை அவையடக்கத்துடன் தருவதும், அவையடக்கத்தை உவமையால் மிகுத்துக் காட்டுவதும் இக்காலத்து அறிஞர்களிடமும் உண்டு.

எழுத்துப்பிழை, சொற்பிழை, வாக்கியப்பிழை, கருத்துப்பிழை போன்றவை நூற்குறைகளாகக் கருதப்பட்டன. பிழையை அறிவிக்கக் கூறித் திருத்தம் செய்து கொள்ளும் வழக்குக் காணப்படுகின்றது.

பெருமிதம் தோன்றப் பேசினாலும் பிற அறிஞர்களைக் குறைத்து மதிப்பிடும் நிலை போற்றப்படவில்லை. நூல் இயற்றுவோர்க்குத் தன்னம்பிக்கை இருந்தாலும் அடக்கம் இன்றியமையாதது என்பதை இக்கால நூலாசிரியர்களின் கூற்றுகள் உணர்த்துகின்றன.

இக்காலப் பட்டி மன்றங்கள், வழக்காடு மன்றங்கள் போன்றவற்றில் அவையோர் முன் அடக்கமுடன் பேசும் போக்கைக் காணமுடிகின்றது. இது பண்டைய மரபின் தொடர்ச்சி இன்றும் தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறது என்பதைக் காட்டும்.

சான்றெண் விளக்கங்கள்

1. சி. சுப்பிரமணிய பாரதி, பாஞ்சாலி சபதம், (வித்யாவர்த்தினி பிரஸ், பாண்டிச்சேரி, 1912), முகவுரை, ப.1.
2. சி. சுப்பிரமணிய பாரதி, பாரதி நூல்கள் (வசனங்கள்), (பாரதி பிரசுராலயம், சென்னை, 1932, இரண்டாம் பதிப்பு), முகவுரை.
3. ஸ்ரீமதி. கா. அலர்மேல் மங்கை அம்மாள், திராவிட மதம், 3வது சைவ மஹாசங்கத்தில் வாசிக்கப்பெற்றது (பெத்தாச்சிப்ரெஸ், பாளையங்கோட்டை, 1914), பக்.1-3.
4. காஞ்சிபுரம் வாசுதேவ ஐயர், மெல்லியலார் சுதந்திரம், (சச்சிதானந்த அச்சியந்திர சாலை, சென்னை, 1918), நூன்முகம்.
5. அ. சுப்ரமண்ய பாரதி, ஔவை அருந்தமிழ், (கே. பழனியாண்டிப் பிள்ளை, கம்பெனி, சென்னை, 1921), முகவுரை.
6. மீனாட்சி சுந்தரன், வள்ளுவரும் மகளிரும், (ஸ்டார் பிரசுரம், சென்னை, 1930), தந்துரை.
7. தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் திருக்குறளும் தேசாபிமானி வ.உ. சிதம்பரம் பிள்ளை விருத்தி உரையும், (வேலாயுதம் பிரிண்டிங் பிரஸ், தூத்துக்குடி, 1935), உரைப்பாயிரம்.
8. ந.மு. வேங்கடசாமி நாட்டார் (உ.ஆ.), சிலப்பதிகாரம், (கழக வெளியீடு, சென்னை, 1963, 7ஆம் பதிப்பு), ப.24.
9. வா. மகாதேவ முதலியார், (உ.ஆ.) சோமேசர் முதுமொழி வெண்பா உரை, (கழக வெளியீடு, திருநெல்வேலி, 1921), உரையாசிரியர் வேண்டுகோள்.
10. நாகை. சொ. தண்டபாணிப் பிள்ளை (உ.ஆ.), திருக்குருகைப் பதிற்றுப் பத்தந்தாதி உரை, (கழக வெளியீடு, திருநெல்வேலி, ரௌத்திரி ஆண்டு), ப.8.
11. எஸ். நடராசன், (உ.ஆ.) நானாற்பது மூலமும் உரையும், (மீனாட்சி பதிப்பகம், புதுக்கோட்டை, 1961, முதற்பதிப்பு), நூலுரை.
12. மு. ராகவையங்கார் (தொகு.), பெருந்தொகை (மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை, 1935), முகவுரை, ப.5.
13. ஸ்ரீஸுப்ரஹ்மண்ய ஸஹஸ்ரநாமம், (திருப்புகழமிர்தம் காரியாலயர், சென்னை 2, 1966), பதிப்புரை.
14. வேலவன், கவிதா ராஜ்யம், (மூர்த்தி பப்ளிகேஷன்ஸ், மதராஸ்-18, 1960), பதிப்பாசிரியர் பி.கே. மூர்த்தியின் முன்னுரை.

15. கோவி. மணிசேகரன், பிறவிப் பெருங்கடல், (முத்துக்குமரன் பதிப்பகம், சென்னை-84, 1976, இரண்டாம் பதிப்பு), பதிப்புரை.

16. ச. திலகம் (பதி.), குசலவன் கதை, (தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு, தஞ்சாவூர், 1983), முன்னுரை.

17. வ.சுப. மாணிக்கம், மனைவியின் உரிமை (1947), (பாரி நிலையம், சென்னை, 1964, நான்காம் பதிப்பு), முகவுரை.1.

18. வ.சுப.மாணிக்கம், வள்ளுவம், (சாது அச்சகம், பாரிநிலையம், சென்னை, 1953), முகவுரை. iv.

19. மு. வரதராசன், திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம் (பாரிநிலையம், சென்னை, 1967 ஏழாம் பதிப்பு), முன்னுரை, ப.23.

20. சரவண ஆறுமுக முதலியார், திருக்குறளும் பொது நோக்கமும், (பழநியப்பா பிரதர்ஸ், சென்னை-5, 1955, மறுபதிப்பு), ஆக்கியோன் முன்னுரை. vi.

21. கி.ஆ.பெ.விசுவநாதம், வள்ளுவரும் குறளும், திருவள்ளுவர் படிப்பகத்தின் ஆண்டுவிழா சொற்பொழிவு நூல், (பாரி நிலையம், சென்னை, 1957, நான்காம் பதிப்பு), ப.10.

22. பாரதிதாசன், குறிஞ்சித்திட்டு, (பாரிநிலையம், சென்னை, 1985, ஐந்தாம் பதிப்பு), ஆசிரியர் முன்னுரை, ப.3.

23. கு. ராஜவேலு, அணைகடந்த வெள்ளம், (பாரிநிலையம், சென்னை, 1959), ப.7.

24. காவிரி நாடன், தேன் நிலவு, (பசுந்தளிர்ப் பதிப்பகம், சீனிவாச நல்லூர், முசிறி, 1962), முன்னுரை.

25. எழில் முதல்வன், இனிக்கும் நினைவுகள், (கற்பனை நூற்பதிப்பகம், சென்னை-13, 1966), முன்னுரை.

26. ஆ.வே. இராமசாமி, திருக்குறள் தரும் உவமையின்பம், (செல்வி பதிப்பகம், காரைக்குடி 1967, முதற்பதிப்பு), முன்னுரை.

27. கவிஞர் குமணன், கலைஞர் உலா, (அல்லயன்ஸ், சென்னை, 1970), முன்னுரை.

28. கண்ணதாசன், அர்த்தமுள்ள இந்து மதம், முதற்பகுதி (1972), (வானதி பதிப்பகம், சென்னை, 1973, மூன்றாம் பதிப்பு), ப.6.

29. (ஜெயகாந்தன்), ஜெயகாந்தனின் முன்னுரைகள், (மீனாட்சி புத்தக நிலையம், 1984, இரண்டாம் பதிப்பு), ப.36.

30. மேலது, ப.36.

31. மேலது, ப.14.

32. வைரமுத்து, கவிராஜன் கதை (1982), (திருமகள் நிலையம், தி.நகர், சென்னை-17, 1987, மூன்றாம் பதிப்பு), ப.6.

****

துணைநூற்பட்டியல்

****

துணைநூற்பட்டியல்

தமிழ் நூல்கள்:

1. அசலாம்பிகை அம்மாள், *இராமலிங்க சுவாமிகள் சரிதம்,* மு. கந்தையா பிள்ளை, மு. அப்பா சுவாமி பிள்ளை, மு. சங்கரன் பிள்ளை (பதி.ஆ.), பாரி அச்சகம், சென்னை, மறுபதிப்பு, 1974.

2. ......, *காந்தி புராணம்,* எட்டுக் காண்டங்கள், எடுகேஷனல் பப்ளிஷிங் கம்பெனி, சென்னை-6, 1925.

3. அண்ணாமலை கல்வித் தேவர், கோ., *தமிழாதிக்கதை,* கல்வித் தேவர், புத்தக சாலை, இரங்கூன், 1954.

4. அண்ணாமலை செட்டியார், *சிவபோகமாலை,* மதுரை ஜில்லா சிவகங்கைச் சீமை அமராபதி தாலுகா, சண்முகநாதபுரம், மாத்தூர் கோவில் அரும்பாக்கூடையான் இராமநாதன் செட்டியார் குமாரர் அண்ணாமலை செட்டியார் பதிப்பு, பிரஜோற்பத்தி ஆண்டு (ஆங்கில ஆண்டு இல்லை)

5. அதிவீரராம பாண்டியனார், *நைடதம்,* நா. கதிரைவேற்பிள்ளை விருத்தியுரை, வித்யாரத்நாகர அச்சுக் கூடம், சென்னை, நான்காம் பதிப்பு, 1914.

6. அப்பாத்துரை, கா., *தமிழக வரலாறு - முன்னுரை,* கழக வெளியீடு, சென்னை, 1962.

7. ......, *தென்னாட்டுப் போர்க்களங்கள்,* அலமேலு நிலையம், கா. அப்பாத்துரையார் தெரு, சென்னை-18, மூன்றாம் பதிப்பு, 1971.

8. அமிர்தசாகரர், *யாப்பருங்கலம்* (பழைய விருத்தியுரையுடன்), மே.வீ. வேணுகோபாலப்பிள்ளை (பதி.), அரசு சுவடிகள் நூலகம், சென்னை, 1960.

9. ......, *யாப்பருங்கலக்காரிகை,* குணசாகரர் உரை, கழக வெளியீடு, சென்னை, ஏழாம் பதிப்பு, 1962.

10. அமிர்தலிங்கத் தம்பிரான், திருமயிலைத் தலபுராணம், தி நோபில் பிரஸ், சென்னை, 1924.

11. அரங்கநாதக் கவிராயர், தெ.ர., ஸ்ரீ மகாபாரதம் அருச்சுனன் தீர்த்தயாத்திரை, கணேச அச்சுக் கூடம், சென்னை, சித்தார்த்தி ஆண்டு, (ஆங்கில ஆண்டு இல்லை).

12. அரங்கநாதச் செட்டியார், சா.கி., அரியக்குடி இராமாநுஜதாசர் சரிதை, சா.கி.ரெ. இலக்குமணச் செட்டியார் (பதி.), விவேகபாநு அச்சியந்திர சாலை, மதுரை, 1910.

13. ....., ஸ்ரீவான்மீகிராமாயண சருக்கார்த்த சங்கிரகம், சா.கி.ரெ. இலக்குமணச் செட்டியார் (பதி.), விவேகபாநு அச்சியந்திரசாலை, மதுரை, 1911.

14. அரங்கநாத முதலியார், பூண்டி, கச்சிக்கலம்பகம், மோசூர் கந்தசாமி முதலியார் உரை, கழக வெளியீடு, சென்னை, மறுபதிப்பு, 1964.

15. அரங்கநாதனார், கு.ஆ., சேலம் பேர்லாண்ட்ஸ் (அழகாபுரி) ஞானசுப்பிரமணிய சுவாமி பிள்ளைத் தமிழ், சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் வெளியீடு, பேர்லாண்ட்ஸ் (அழகாபுரி), சேலம்-4, 1977.

16. அரசகேசரி, யாழ்ப்பாணத்து நல்லூர், இரகுவம்சம், பொன்னம்பலம் பிள்ளை (பதி.), வித்தியாநுபாலன யந்திரசாலை, சென்னை, 1887.

17. அரசஞ்சண்முகனார், சோழவந்தான், திருக்குறட் சண்முக விருத்தியுள் முதற்குறள் விருத்தி, ம. சுந்தரபாண்டிய தேவர் (பதி.), மீனலோசனி அச்சியந்திரசாலை, மதுரை, 1921.

18. அரவிந்தன், மு.வை., உரையாசிரியர்கள், மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1963.

19. அரிமதி தென்னகன், ஆநந்தரங்கன் பிள்ளைத் தமிழ், சி. ஆனந்தரங்க கிருஷ்ணசாமிப் பிள்ளை (பதி.), ஆனந்தரங்கப் பிள்ளை மாளிகை, புதுச்சேரி-1, 1976.

20. அருணந்தி சிவாசாரியார், சிவஞான சித்தியார் பரபக்கம் சுபக்கம், சைவசித்தாந்த மகாசமாஜம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1940.

21. ....., சிவஞானசித்தியார் (பரபக்கம் சுபக்கம்), சிவஞானபோத யந்திரசாலை, சித்தாதிரிப் பேட்டை, சென்னை, சாதாரண ஆண்டு (ஆங்கில ஆண்டு இல்லை).

22. அருணாசலக் கவிராயர், சீர்காழி, இராம நாடகக் கீர்த்தனை, பூமகள் விலாச அச்சுக் கூடம், சென்னை, 1911.

23. அருணாசலக் கவிராயர், மு.ரா.(பதி.), திருச்செந்தூர்ப் பிரபந்தத் திரட்டு, ஸ்ரீராமச்சந்திரவிலாச அச்சியந்திரசாலை, மதுரை, 1911.

24. அருணாசலம், மு. (பதி.), அம்பிகாபதிக் கோவை, தமிழ் நூலகம், நூலகம், சென்னை, முதற்பதிப்பு, 1944.

25. அருணாசலம், மு.., தமிழ் இலக்கிய வரலாறு, கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு, முதல் பாகம், காந்தி வித்தியாலயம், திருச்சிற்றம்பலம், தஞ்சை ஜில்லா, 1975.

26. ....., தமிழ் இலக்கிய வரலாறு, கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டு, காந்தி வித்தியாலயம், திருச்சிற்றம்பலம், தஞ்சை ஜில்லா, 1969.

27. ....., தமிழ் இலக்கிய வரலாறு, கி.பி. பதினாறாம் நூற்றாண்டு, முதல் பாகம், காந்தி வித்தியாலயம், திருச்சிற்றம்பலம், தஞ்சை ஜில்லா, 1977.

28. ....., தமிழ் இலக்கிய வரலாறு, கி.பி. பதினாறாம் நூற்றாண்டு, இரண்டாம் பாகம், காந்தி வித்தியாலயம், திருச்சிற்றம்பலம், தஞ்சை ஜில்லா, 1975.

29. ....., தமிழ் இலக்கிய வரலாறு, கி.பி. பதினாறாம் நூற்றாண்டு, மூன்றாம் பாகம், காந்தி வித்தியாலயம், திருச்சிற்றம்பலம், தஞ்சை ஜில்லா, 1976.

30. அலர்மேல் மங்கை, ஸ்ரீமதி. கா.., திராவிட மதம், பாளையங்கோட்டை, 3-வது சைவமஉறா சங்கத்தில் வாசிக்கப் பெற்றது, பெத்தாச்சிப் ரெஸ், பாளையங்கோட்டை, 1914.

31. அவ்வையார், அவ்வைக்குறள், த. கோவேந்தன் (பதி.), சித்தர் பாடல்கள், பூம்புகார் பிரசுரம், சென்னை-13, 1976.

32. அழகிய சொக்கநாதபிள்ளை, வ., காந்திமதியம்மை பிள்ளைத் தமிழ், சுவாமி நெல்லையப்பர் ஸ்ரீ காந்திமதியம்பாள் திருக்கோயில் வெளியீடு, திருநெல்வேலி, 1972.

33. அழகிய நம்பிதாசர், குருபரம்பரை, கே. பாலசுந்தர நாயகர் (பதி.), திருமலை திருப்பதி தேவஸ்தான வெளியீடு, திருப்பதி, 1963.

34. அழகு கிருட்டிணன், பொ., சிலப்பதிகாரம் காட்டும் பண்பாடும் சமுதாய வரலாறும், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை-5, 1988.

35. அறவாணன், க.ப., கவிதையின் உயிர் உள்ளம் உடல், பாரி நிலையம், சென்னை-1, 1976.

36. அறிவனார், பஞ்சமரபு, வெ.ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் (பதி.), சக்தி அறநிலையம், கோவை, இரண்டாம் பதிப்பு, 1975.

37. அறிவுநம்பி, அ., தமிழகத்தில் தெருக்கூத்து, அமுதன் நூலகம், காரைக்குடி, 1986.

38. அறிவுமதி, கே., என் பிரிய வசந்தமே!, அமராவதி பதிப்பகம், கடலூர்த் துறைமுகம், 1977.

39. அனந்தவிசயர், அப்பாண்டைநாதர் உலா, மு. சண்முகம்பிள்ளை (பதி.), சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை, 1972.

40. அன்புநிலவன், கலைநிலவு, கலைச்செல்வி பதிப்பகம், பாகூர், புதுவை, 1968.

41. ஆசுகவிராசர், நெல்லூர் வீரனென்னும் அரிச்சந்திரபுராணம், வித்தியாரத் நாகர அச்சுக் கூடம், சென்னை, 1913.

42. ....,அரிச்சந்திரபுராணம், வி.கோவிந்தப்பிள்ளை (பொழிப்புரை), ஈக்காடு இரத்தினவேலு முதலியார் (பதி.), பி. இரத்தின நாயக்கர் ஸன்ஸ், திருமகள் விலாசம் அச்சியந்திரசாலை, சென்னை, 1932.

43. ஆண்டிப்புலவர், ஆசிரிய நிகண்டு, வீ. சொக்கலிங்கம் (பதி.), தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையம், தஞ்சாவூர், 1975.

44. ஆதிமூலப் பெருமாள் ஆரியர், எஸ்., முத்துக்குமார ஞானியர் சதகம், ஞானியர் திருப்பணிக் கழக வெளியீடு, கோட்டாறு, 1947.

45. ஆதினக்கச்சாலையர், ஆளவந்தார், காஞ்சிப்புராணம் (கம்பர் புராணம்), எஸ்.கே. இராமராஜன் (பதி.) உ.வே. சாமிநாதையர் நூல் நிலைய்ம், சென்னை, 1983.

46. ஆரியப்பப் புலவர், ஸ்ரீமத் பாகவத புராணம், இட்டா பார்த்தசாரதி நாயுடு (பதி.), ஸ்ரீபத்மநாப விலாச அச்சுக் கூடம், காஞ்சிபுரம், 1908.

47. ஆளவந்தார், விரை., ஞானவாசிட்டம், பிறைசை அருணாசல சுவாமிகள் உரை, பேறை-தசாவதானம் செகநாதப் பிள்ளை (பதி.), பிரின்ஸ் ஆப் வேல்ஸ் அச்சியந்திரசாலை (பதிப்பித்த இடம் இல்லை), 1890.

48. ஆறுமுகப் பெருமாள் நாடார், கு., (பதி.), வள்ளியம்மை கதை (விற்பாட்டு), கு. ஆறுமுகப்பெருமாள் நாடார் பதிப்பு, நாகர்கோவில், ஆண்டு இல்லை.

49. ஆறுமுகம் (சிதாசன்), தி.சு., குறுக்குத்துறை குமரன் பிள்ளைத் தமிழ், அமிர்தலால் கேசவலால் ஜோஷி (பொருளுதவி), உமா அச்சகம், திருநெல்வேலி, 1971.

50. ஆறுமுகம் சேர்வை, வீ. (பதி.), தண்டியலங்காரம், சுப்பிரமணிய தேசிகர் உரை, மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை, சென்னை, 1920.

51. ஆறுமுகமுதலியார், பி. (பதி.), ஸ்ரீகுமாரதேவர் சாஸ்திரக் கோவை, பூமகள் விலாச வெளியீடு, சென்னை, 1927.

52. ஆறுமுகனார், க.அ., தமிழகத்தின் கலைமணிகள், ராமன் பதிப்பகம், சென்னை-17, 1959.

53. ஆனந்தக் கூத்தர், திருக்காளத்திப் புராணம், உ.வே. சாமிநாதய்யர் பதிப்பு, சென்னை, 1912.

54. இரத்தின சபாபதி முதலியார், தொ.மு.ஆ.வே., கனகரத்ன தீபமணி, கந்தப்பசுவாமி, ரா. நாகரத்தினம் பிள்ளை (பதி.ஆ.), நந்தி பப்ளிஷிங் ஹௌஸ், புதச்சேரி, 1922.

55. இராகவையங்கார், மு., சாஸனத் தமிழ்க்கவி சரிதம், ஸ்ரீ ராஜேஸ்வரி பிரஸ், சிவகங்கை, இரண்டாம் பதிப்பு, 1958.

56. ...., (தொகு.), பெருந்தொகை, மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை, 1935.

57. இராசப்ப உபாத்தியாயர், மநுநீதி சதகம், அ. மஹாதேவ செட்டியார் (பதி.), ஸ்ரீ சாது இரத்தின சற்குரு புத்தகசாலை, பார்க்டவுன் போஸ்ட், சென்னை, 1928.

58. இராசமாணிக்கனார், மா., *தமிழ் இலக்கண இலக்கிய கால ஆராய்ச்சி*, ஔவை நூலகம், சென்னை-1, 1957.

59. இராஜமாணிக்கம், எம்.(பதி.), *வேதாளக்கதை*, அரசு சுவடிகள் நூலகம், சென்னை, 1961.

60. இராஜரத்தினம், மு., *ஜெர்மன் மூன்று*, பாரதி புக் ஸ்டால், புதுவை, 1935.

60. அ) இராதாகிருஷ்ணய்யர், *மயிலைச் சிலேடை வெண்பா*, பெரி.பெரி.சுப. பெரியகருப்பன் செட்டியார் (பதி.), உறநிலைய திவாகரம் பிரஸ், மதுரை, 1957.

61. இராமகிருஷ்ணன், எல்., *கம்பனும் மில்டனும்-ஒரு புதிய பார்வை*, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1978.

62. இராமச்சந்திரஞ் செட்டியார் சி.எம். (பதி.), *இராமய்யன் அம்மானை* (இராமப்பையன்), சரசுவதி மகால் நூல் நிலையம், தஞ்சாவூர், இரண்டாம் பதிப்பு, 1978.

63. இராமசாமி, ஆ.வே., *திருக்குறள் தரும் உவமையின்பம்*, செல்வி பதிப்பகம், காரைக்குடி, 1967.

64. இராமசாமி, இ.கி., *தமிழில் பாயிரங்கள்*, பதிப்புத்துறை, மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை, 1988.

65. இராமசாமி, மு., *தோற்பாவை நிழற்கூத்து*, பதிப்புத்துறை, மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை, 1983.

66. இராமசாமிப் புலவர், சு.அ. *மேற்கோள் விளக்கக்கதை* (இரண்டு பகுதிகள்), கழக வெளியீடு, சென்னை, 1963.

67. இராமசாமிக் கவிராயர், *வேலாபுரி கறுப்பண்ணசாமி சதகம்*, (பதிப்பகம் இல்லை), சென்னை, 1897.

68. இராமசுவாமிப் பிள்ளை (ஞானசம்பந்தப் பிள்ளை), *சிவாலய தரிசனவிதி*, குமாரசுவாமி ஐயர்(பதி.), வித்யாவர்த்தினி அச்சுக்கூடம், சென்னபட்டணம், வெகுதானிய ஆண்டு, (ஆங்கில ஆண்டு இல்லை).

69. இராமநாதப்பிள்ளை, சாணாங்குப்பம் கிராமக்கணக்கு, *ஸ்ரீமத் கைலாசகிரி என்று வழங்கிவரும் ஸ்ரீதிருத்துருவமலை முருகன் பிள்ளைத் தமிழ்*, மு. சுந்தரமுதலியார் (பதி.), சுந்தரவிநாயகர் அச்சுக்கூடம், வேலூர், 1920.

70. இராமராசன் (கம்பராமன்), எஸ்.கே., *பிரமேந்திர கீதம்*, ஸ்ரீநாராயண பிரம்மேந்திர மடாலய வெளியீடு, காட்டுப்புத்தூர், திருச்சி, மூன்றாம் பதிப்பு, 1961.

71. இராமலிங்க சுவாமிகள், சிதம்பரம் ஈசான்ய மடம், *முருகேசர் முதுநெறி வெண்பா*, கருப்பக் கிளார் சு.அ. இராமசாமிப் புலவர் உரை, கழக வெளியீடு, சென்னை, 1965.

72. இராமலிங்கம் பிள்ளை, நாமக்கல் வெ., *சங்கொலி*, தமிழ்ப்பண்ணை, சென்னை, இரண்டாம் பதிப்பு, 1945.

73. இராமனுசக் கவிராயர், *மகாத்மா காந்தி காவியம்* அல்லது மகாகாவியம், சிற்றி அச்சகம், திருநெல்வேலி, இரண்டாம் பதிப்பு, 1975.

74. இரேவண சித்தர், *சிவஞானதீபம்*, அடிகளாசிரியர் பொழிப்புரை, தஞ்சை சரசுவதி மகால், தஞ்சாவூர், 1970.

75. இலக்குமிரதன் பாரதி, சொ., *நமது சமூகம்*, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1969.

76. இலக்குவனார், சி., *தொல்காப்பிய ஆராய்ச்சி*, வள்ளுவர் பதிப்பகம், வடக்கு இராச வீதி, புதுக்கோட்டை, இரண்டாம் பதிப்பு, 1971.

77. இளங்கண்ணன், மு., *தேன்மலர்*, சுரதா பதிப்பகம், சென்னை-78, 1981.

78. இளங்குமரன், இரா. (உ.ஆ.), *தகடூர்யாத்திரை*, கழகவெளியீடு, சென்னை, 1976.

79. ....,(பதி.), *புறத்திரட்டு*, கழக வெளியீடு, சென்னை-1, 1972.

80. இளங்கோவடிகள், *சிலப்பதிகாரம்*, அடியார்க்கு நல்லார் உரை, உ.வே. சாமிநாதையர் (பதி.), கபீர் அச்சுக் கூடம், சென்னை, ஆறாம் பதிப்பு, 1955.

81. இளங்கோவன், சுப., *செட்டிநாட்டரசர் மெய்க்கீர்த்திமாலை*, வானதி பதிப்பகம், சென்னை, 1980.

82. இளந்திரையன், சாலை, *அன்னை நீ ஆடவேண்டும்*, பாரி நிலையம், சென்னை, 1964.

83. இளையபெருமாள், மா. (குறிப்புரை), *லீலா திலகம்* (மணிப்பிரவாள இலக்கணம்), தமிழ்ப் புத்தகாலயம், சென்னை-5, 1971.

84. (இறையனார்), *களவியல் என்ற இறையனார் அகப் பொருள்*, நக்கீரர் உரை, கழக வெளியீடு, சென்னை, 1964.

85. உமறுப்புலவர், *சீறாப்புராணம்,* கவிஞர் நாச்சிகுளத்தார் முகமது யூசுப் (பதி.), நாச்சிகுளத்தார் பதிப்பகம், உதயமார்த்தாண்டபுரம், தஞ்சை மாவட்டம், 1974.

86. உமாபதி சிவாசாரியார், *கோயிற் புராணம்,* ஆறுமுகநாவலர் புத்துரை, விசுவநாதப்பிள்ளை (பதி.), வித்தியாநு பாலன யந்திரசாலை, சென்னை, மூன்றாம் பதிப்பு, நந்தன ஆண்டு (ஆங்கில ஆண்டு இல்லை).

87. ....,*கோயிற்புராணம்,* திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, 1965.

88. ....,*சிவப்பிரகாசம்,* கொ. சண்முகசுந்தர முதலியார் (பதி.), சிவஞானபோத யந்தர சாலை, சித்தாதிரிப்பேட்டை, சென்னை, இரண்டாம் பதிப்பு, கலி 4996, ஜய ஆண்டு (ஆங்கில ஆண்டு இல்லை).

89. ....,*சிவப்பிரகாசம்,* கு. சுந்தரமூர்த்தி (பதி.), ஸ்ரீகாசிமடத்து வெளியீடு, திருப்பனந்தாள், 1983.

90. ...., *சங்கற்ப நிராகரணம்,* சொ. சண்முகசுந்தர முதலியார் (பதி.), சிவஞானபோத யந்திரசாலை, சித்தாதிரிப் பேட்டை, கலி 4996, ஜய ஆண்டு, (ஆங்கில ஆண்டு இல்லை).

91. எல்லப்ப நாவலர், சைவ, *அருணாசல புராணம்,* பி.வே. நமசிவாய முதலியார் நிரஞ்சன விலாச அச்சகப் பதிப்பு, 1912.

92. ....,*திருவாரூர்க்கோவை,* உ.வே. சாமிநாதய்யர் பதிப்பு, சென்னை, 1914.

93. ....,*திருவிரிஞ்சைப்புராணம்,* டி. கோவிந்த ராஜுலு நாயுடு (பதி.), ஸ்ரீமார்கபந்து சுவாமியார் தேவஸ்தான பதிப்பு, டால்டன் அச்சுக் கூடம், வேப்பேரி, சென்னை, 1950.

94. எழில் முதல்வன், *இனிக்கும் நினைவுகள்,* கற்பனை நூற்பதிப்பகம், சென்னை-13, 1966.

95. ஐயம்பெருமாள் பிள்ளை, *பாண்டிமண்டல சதகம்,* செந்தமிழ்ச் செல்வி, தொகுதி-19, பகுதி-8, ஜுன்-ஜுலை, 1921.

96. ஔவையார், *வாக்குண்டாம் என்னும் மூதுரை,* தமிழ்ச் சங்க வெளியீடு, காரைக்குடி, ஆறாம் பதிப்பு, 1988.

97. கச்சாலையர், *மகாபாரதச் சுருக்கம்,* உ.வே. சாமிநாதய்யர் நூலகம், சென்னை, 1984.

98. கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள், கந்தபுராணம், இராமசாமி நாயுடு வசனம், கோ. வடிவேலு செட்டியார் பார்வை, தெய்வநாயக முதலியார் (பதி.), பிரஸிடென்சி அச்சியந்திரசாலை, சென்னை, 1908.

99. .....கந்தபுராணம், முதற்பகுதி, தி. பட்டுச்சாமி ஓதுவார் (பதி.), ஸ்ரீகாசிமடத்து வெளியீடு, திருப்பனந்தாள், 1952.

100. கச்சியப்ப முனிவர், திருவாவடுதுறை ஆதீனத்து, பார்க்கவ புராணமென்னும் விநாயக புராணம், ம.தி. பானுகவி, நே. முனிசாமி முதலியார் (பதி.ஆ.), கணேச அச்சியந்திரசாலை, புரசை, சென்னை, 1910.

101. கடவுண்மாமுனிவர், திருவாதவூரர் புராணம், கழக வெளியீடு, சென்னை, 1923.

102. ....,மாணிக்கவாசகமென்னும் திருவாதவூரர் புராணம், காஞ்சிபுரம் குமாரசுவாமி தேசிகர் பொழிப்புரை, வாணிவிலாச அச்சுக் கூடம், மயிலை, 1926.

103. கண்ணதாசன், அர்த்தமுள்ள இந்துமதம், முதற்பகுதி, வானதி பதிப்பகம், சென்னை, மூன்றாம் பதிப்பு, 1973.

104. ....,இயேசு காவியம், கலைக்காவிரி, திருச்சிராப்பள்ளி-1, இரண்டாம் பதிப்பு, 1985.

105. ....,கண்ணதாசன் கவிதைகள், மூன்றாம் தொகுதி, வானதி பதிப்பகம், சென்னை, 1973.

106. கண்ணமுருகனார், பாரத்வாஜி முகவை, சிவபோக சிந்தாமணி என்னும் ஸ்ரீரமணானுபூதி, ஸ்ரீரமணபாதானந்தர் வெளியீடு, சென்னை, முதற்பதிப்பு, 1960.

107. கண்ணன், மதுக்கூர், சிவப்பு மேகங்கள், பாரதி பதிப்பகம், சென்னை, 1984.

108. கதிரேசச் செட்டியார், மு. (மொ.ஆ.) சுக்கிரநீதி, சன்மார்க்க சபை, மேலைச்சிவபுரி, இரண்டாம் பதிப்பு, 1982.

109. கந்தசாமி, சு., குமரகுருபரர் கற்பனை, எழில் முருகன் பதிப்பகம், சென்னை-1, 1985.

110. கந்தசாமிக் கவிராயர், மு.ரா. கண்ணிவெண்பா, பார்வதி பதிப்பகம், அம்பாசமுத்திரம், திருநெல்வேலி, 1972.

111. கந்தசாமி சுவாமிகள், சிரவணபுரம் கௌமார மடாலயம், இராமானந்த சுவாமிகள் பிள்ளைத் தமிழ் நூல், விளாங்குறிச்சி ஸ்ரீ மொட்டைய நஞ்சப்ப ஐயா பொருளுதவி, கேசரி அச்சுக் கூடம், சென்னை, சீமுக ஆண்டு, (ஆங்கில ஆண்டு இல்லை).

112. கந்தசாமி சுவாமிகள், தவத்திரு, தவத்திரு சாந்தலிங்க சுவாமிகள் பிள்ளைத் தமிழ், பேரூராதீனம் அருள்மிகு சாந்தலிங்க அடிகளார் திருமடம், பேரூர், கோவை, 1975.

113. கந்தசாமி பிள்ளை, ச.மு., ஸ்ரீராமலிங்க சுவாமிகள் திவ்ய சரித்திரக் கீர்த்தனை, தி.நா. முத்தையா செட்டியார் (பதி.), ச.மு. கந்தசாமி பிள்ளை இயற்றிய பிரபந்தத் திரட்டு, ரூளை-லன் ஆப் இந்தியா அச்சுக் கூடம், சென்னை, 1923.

114. கந்தசாமிப் புலவர், திருச்செந்தூர் நொண்டி நாடகம், திருச்செந்தூர் ஸ்ரீ சுப்பிரமணிய தேவஸ்தான வெளியீடு, கோபால் எலக்ட்ரிக் அச்சியந்திரசாலை, உடுமலை, 1948.

115. கந்தசாமி முதலியார், வே., கனகராய முதலியார், மு. (பதி.ஆ.), பதார்த்தருசிகர சிந்தாமணி என்னும் நளவீமபாக சாஸ்திரம், பூமாது விளக்க அச்சுக் கூடம், வேலப்பாக்கம், தாரண ஆண்டு, (ஆங்கில ஆண்டு இல்லை).

116. (கம்பர்), கம்பராமாயணம், சு. கிருஷ்ணசாமி முதலியார் உரை, முத்தமிழ் விளக்க அச்சுக் கூடம், சேலம், 1861.

117. ...., கம்பராமாயணம் - பாலகாண்டம், வை.மு. கோபால கிருஷ்ணமாசாரியர் உரை, வித்யாரத் நாகர அச்சுக் கூடம், சென்னை, 1911.

118. ...., ஸ்ரீகம்பராமாயணம் முதலாவது பாலகாண்டம், வை.மு. கோபாலகிருஷ்ணமாசாரியர் உரை, குலை பப்ளிகேஷன்ஸ், சென்னை-5, ஒன்பதாம் பதிப்பு, 1976.

119. ...., கம்பராமாயணம்-பாலகாண்டம், உ.வே. சாமிநாதய்யர் நூலகம், சென்னை.

120. ...., ஸ்ரீமத் கம்பராமாயணம் பாலகாண்டம், எஸ். கல்யாணசுந்தர ஐயர் (பதி.), ஸ்ரீரங்கா அச்சுக் கூடம், சென்னை, 1949.

121. கம்பராமன், மேகநாதம், நம்பெருமாள் மன்றம், வரகூர், நாமக்கல் வட்டம், சேலம் மாவட்டம், 1956.

122. கயாதரர், கயாதரம், எஸ். வையாபுரிப்பிள்ளை (பதி.), சென்னை சர்வகலா சாலை, சென்னை, 1939.

123. கல்யாண சுந்தரம், வீ.ஆர்., கிருஷ்ணன் வி.எஸ்., அம்பலத்தாடும் ஐயன் (பதி.ஆ.), வசுசரித்திரம், அரசு சுவடிகள் நூலகம், சென்னை.

124. கருணைப் பிரகாச சுவாமிகள், வேலைய சுவாமிகள், கச்சியப்ப சுவாமிகள், சீகாளத்திப் புராணம், சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் (பதி.), மிமோரியல் அச்சுக் கூடம், சென்னை, சர்வதாரி ஆண்டு (ஆங்கில ஆண்டு இல்லை).

125. கல்லாடனார், கல்லாடம், எஸ். இராஜம் வெளியீடு, சென்னை-1, 1957.

126. கலைவாணன், உதயம், பட்டிணாமிற் பதிப்பகம், திருச்சிராப்பள்ளி, ஆண்டு இல்லை.

127. ...., உதயம், அரங்க சீனிவாசன் (பதி.), கலைவாணன் பதிப்பக வெளியீடு, திருச்சி, 1969.

128. கவிக்குஞ்சரபாரதி, அழகர் குறவஞ்சி, கோ. நாகமணி (பதி.), சங்கீத நாடக சங்கம் வெளியீடு, சென்னை, ஆண்டு இல்லை.

129. கனகசுந்தரம் பிள்ளை, த. (பதி.), தமிழ் நாவலர் சரிதை, வி. குமாரசாமி நாயுடு சன்ஸ், சென்னை, 1921.

130. கனகராசையர், நா., திருவள்ளுவர் பிள்ளைத் தமிழ், பிற குறிப்புகள் இல்லை, 1941.

131. ...., கம்பன் பிள்ளைத் தமிழ், கம்பன் கழக வெளியீடு, காரைக்குடி, ஆண்டு இல்லை.

132. ...., திருக்கோகர்ணம் பெரியநாயகி பிள்ளைத் தமிழ், ராம.குமா.சு. குமரப்ப செட்டியார் (பதி.), கமலா பதிப்பகம், புதுக்கோட்டை, 1942.

133. கன்னியப்ப நாயக்கர் (நல்லோர்க்கடியன்), ஆர்., மாறிய நல்லூர் பொன்னியம்மன் பிள்ளைத் தமிழ், இலவச வெளியீடு, விநோதன் அச்சகம், பிராட்வே, சென்னை, 1959.

134. காசிராசன், இரா., உலகக் காப்பியங்கள், தமிழ்ப் பதிப்பகம், சென்னை-96, 1980.

135. காந்திதாசன், மு.க., வேள்பாரி, நவீனகதா அச்சுக் கூடம், இரங்கூன், 1932.

136. காமாட்சி நாதன், மா.க., வள்ளலார் பிள்ளைத் தமிழ், ஞான நற்பதிப்புக் கழகம், சென்னை-17, 1982.

137. ...., வள்ளலார் பிள்ளைத் தமிழ், கிருஷ்ணநாயகர் (பதி.), மாடக்குளம், மதுரை-3, 1970.

138. கார்மேகக் கவிஞர், கொங்குமண்டல சதகம், தி.அ. முத்துசாமிக் கோனார் (பதி.), சாது அச்சுக் கூடம், சென்னை, 1923.

139. காரிநாயனார், கொறுக்கையூர், கணக்கதிகாரம், வடிவேலு முதலியார், சிதம்பர முதலியார் (பதி.ஆ.), பொரித்தாங்கல், சென்னை, 1902.

140. ...., கணக்கதிகாரம், கழக வெளியீடு, சென்னை, 1958.

141. காளியப்பப் புலவர், பூந்துறைப் புராணம், செ. இராசு, கா. அரங்கசாமி (பதி.ஆ.), பூந்துறைப் புட்பவனநாதர் கோயில் குடமுழுக்கு மண்டலாபிடேக நிறைவுநாள் வெளியீடு, பூந்துறை, இரண்டாம் பதிப்பு, 16.8.1970.

142. காவிரி நாடன், தேன் நிலவு, பசுந்தளிர்ப் பதிப்பகம், சீனிவாச நல்லூர், முசிறி, 1962.

143. கிருஷ்ணசாமி, வே. தமிழில் தலபுராண இலக்கியம், அ. வேலுக் கோனார் வெளியீடு, கிருஷ்ணா அச்சகம், நாகர்கோவில், 1974.

144. கிருஷ்ணசாமி நாயுடு, அ. திருவள்ளுவர் காவியம், முப்பால் நிலையம், பூளைமேடு, கோவை, ஆர்.என். பிரஸ், கோவை, 1958.

145. கிருஷ்ணய்யங்கார் ஸ்வாமி, ஐம்புலிபுத்தூர், சோலைமலைக் குறவஞ்சி, ஸ்ரீ. உ.வே. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் (பதி.), ஸ்ரீநிவாஸம் பிரஸ், திருச்சி-17, 1975.

146. குணவீர பண்டிதர், நேமிநாதம், இரா. ராகவையங்கார் (பதி.), தமிழ்ச்சங்க முத்திரா சாலை, மதுரை, 1903.

147. ...., நேமிநாதம், கா.ரா. கோவிந்தராச முதலியார் (பதி.), கழக வெளியீடு, சென்னை, 1945.

148. குமணன், கலைஞர் உலா, அல்லயன்ஸ் கம்பெனி, சென்னை-4, 1970.

149. குமரபாரதியார், திருத்தொண்டர் வெண்பா, குறள் வெண்பா நூற்கோவை, கழக வெளியீடு, சென்னை, 1967.

150. குமரபாரதி, பெரியபுராணச் சரித்திர வெண்பா மாலை, டி.வி. கல்யாண சுந்தரம் பிள்ளை, ஆறுமுக முதலியார், சொ. சோமசுந்தர முதலியார் (பதி.ஆ.), லெக்ஷ்மி விலாஸ பிரஸ், கும்பகோணம், 1916.

151. குமரவேலன், இரா. கவிதை நாடகம் - ஒரு கண்ணோட்டம், அரசு பதிப்பகம், சென்னை-92, 1979.

152. குமாரசாமி பிள்ளை, த., முத்துவிநாயகரந்தாதி, ஸ்ரீ வே. தம்பு, சுப. மு. ஆறுமுகம் செட்டியார் (பதி.ஆ.), சண்முக நாதபுரம், 1928.

153. குருநமச்சிவாய சுவாமிகள், சிதம்பரம், அண்ணாமலை வெண்பா, ஏ.கே. ரங்கசாமி நாயகர் (பதி.), பெரியமெட்டு, சென்னை, 1948.

154. குருபாததாசர், குமரேச சதகம், ஆர்.ஜி.பதி. கம்பெனி, சென்னை-1, 1980.

155. ...., குமரேசசதகம், பி. இரத்தின நாயகர் அண்ட் சன்ஸ், சென்னை-1, 1980.

156. குழந்தை, புலவர், இராவணகாவியம், வேலா பதிப்பகம், ஈரோடு-1, இரண்டாம் பதிப்பு, 1971.

157. குழந்தைவேற்பிள்ளை, சி., வெண்ணெய்மலைத் தலபுராணம், தேவகோட்டை தி.சு.பழ.சு. திண்ணப்ப செட்டியார் (பதி.), சக்தி அச்சகம், கும்பகோணம், 1957.

158. குற்றாலம், இ., ஏகநாதர் பிள்ளைத் தமிழ், கவிமணி இல்லம் வெளியீடு, புத்தேரி, நாகர்கோவில், இரண்டாம் பதிப்பு, 1967.

159. கேசவராமசாமித் தேவர், எல்., வேள்பாரி (வில்லுப்பாட்டு) செல்வி பதிப்பகம், காரைக்குடி, மூன்றாம் பதிப்பு, 1989.

160. கைலாசபதி, க., அடியும் முடியும், பாரி நிலையம், சென்னை, 1970.

161. ...., முருகையன், இ., கவிதைநயம், பாட்டாளிகள் வெளியீடு, சென்னை, இரண்டாம் பதிப்பு, 1976.

162. கோ., கவிஞர், சோழமாகாவியம் தை நூலகம், நாச்சியார் கோவில், தஞ்சை மாவட்டம், 1975.

163. கோதண்டபாணி, சி. (பதி.), கஞ்சனம்மானை, தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையம், தஞ்சாவூர், 1976.

164. கோபாலகிருஷ்ண பாரதியார், திருநாளைப் போவாரென்னும் நந்தனார் சரித்திரக் கீர்த்தனை, இட்டா-பார்த்தசாரதி நாயுடு & சன்ஸ், சக்கரவர்த்தி அச்சுக் கூடம், சென்னை, 1930.

165. ...., திருநாளைப் போவாரென்னும் நந்தனார் சரித்திரக் கீர்த்தனை, ஆர்.ஜி.பதி கம்பெனி, சென்னை-1, 1967.

166. கோமதிநாயகம், தி.சி., தமிழ் வில்லுப் பாட்டுகள், தமிழ்ப் பதிப்பகம், சென்னை-20, 1979.

167. கோவிந்தசாமி, மு., இலக்கியத் தோற்றம் (தமிழ் இலக்கிய வரலாறு), பாரி நிலையம், சென்னை-1, இரண்டாம் பதிப்பு, 1969.

168. கோவிந்தசாமி பிள்ளை, இராம. (பதி), ஞானசாரம், தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையம், தஞ்சாவூர், 1962.

169. கோவிந்தராச முதலியார், கா.ர. (உ.ஆ.), பன்னிருபாட்டியலுரை, கழக வெளியீடு, சென்னை, 1970.

170. சச்சிதானந்தன், வை., ஒப்பிலக்கியம் (அறிமுகம்), ஆக்ஸ்போர்டு யுனிவர்சிடி பிரஸ், சென்னை, 1985.

170. அ) சண்முக முதலியார், கா.அ., நளாயனி வெண்பா, இலட்சுமி எந்திர சாலை, குடியேற்றம், 1967.

171. சண்முகம் பிள்ளை, மு. (பதி.), நாககுமார காவியம், தமிழ்த்துறை வெளியீடு, சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை, 1973.

172. சண்முகம் பிள்ளை, மு., சிற்றிலக்கிய வளர்ச்சி, மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1981.

173. சண்முகனார், பழ., பிலிக்கா ஸ்ரீ அங்காளேஸ்வரியம்மன் அந்தாதி, பகுதி-II, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர், இரண்டாம் பதிப்பு, 1957.

175. சந்திரசேகர நாயகர், பி., திருக்கூடலை யாற்றூர்ப் புராணம், சுவாமிநாத தம்பிரான் சுவாமிகள் (பதி.), (1 முதல் 72 பக்கங்கள்) ஸ்ரீ குஞ்சித சரண அச்சியந்திர சாலை, சிதம்பரம்; (மற்ற பக்கங்கள்) ஜுபிடர் பிரஸ், சென்னை, 1934.

176. சந்திரசேகரன், டி. (பதி.), திருமயிலைப் பிரபந்தங்கள், அரசு சுவடிகள் நூலகம், சென்னை, 1953.

177. ...., பிள்ளைத்தமிழ்க் கொத்து, அரசு சுவடிகள் நூலகம், சென்னை, 1956.

178. சந்திரமாமுனிவர், வா.தி., பாண்டவபுராணம், ஆதிபகவன் அறநூல் பதிப்பகம், சென்னை, 1959.

179. சபாபதி முதலியார், காஞ்சிபுரம், திருக்கழுக்குன்றச் சிலேடைவெண்பா, தி. சங்குப் புலவர் உரை, சிலேடை வெண்பா நூற்கொத்து, கழக வெளியீடு, சென்னை, 1964.

180. சரவண ஆறுமுக முதலியார், திருக்குறளும் பொருநோக்கும், பழநியப்பா பிரதர்ஸ், சென்னை-5, மறுபதிப்பு, 1955.

181. சர்மா, ச.வே., தடாதகை பிராட்டியார் திருமணவெண்பா மாலை, சந்திரசேகர முதலியார் (பதி.), சாது அச்சுக்கூடம், சென்னை, 1922.

182. சாந்தக் கவிராயர், பிறைசை, இரங்கேச வெண்பா என்னும் நீதி சூடாமணி, இராமசாமிப் புலவர் உரை, கழக வெளியீடு, சென்னை, 1966.

183. சாந்தலிங்க சுவாமிகள், தவத்திரு, வைராக்கிய தீபம், சிதம்பர சுவாமிகள் உரை, பேரூர் சாந்தலிங்க அடிகளார் திருமடம், சத்வித்யா சன்மார்க்க சங்கப் பொன்விழா வெளியீடு, பேரூர், கோவை, 1960.

184. சாந்தலிங்க சுவாமிகள், திருத்துறையூர், கொலைமறுத்தல், ஆறுமுக நாவலர் (பதி.), வித்தியாநுபாலனயந்திரசாலை, சென்னை பட்டணம், ஆறாம் பதிப்பு, இரௌத்திரி ஆண்டு (ஆங்கில ஆண்டு இல்லை).

185. சாமிநாதய்யர், உ.வே. (பதி.), ஸ்ரீமீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத்திரட்டு, கமர்சியல் அச்சுக்கூடம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1926.

186. சாமிநாதன், கொ.சி., கருணாநிதி நாமமாலை, கொ.சி.சாமிநாதன் வெளியீடு, கோழிகுத்தி, சோழன்பேட்டை அஞ்சல், மாயூரம் வட்டம், 1972.

187. சிங்கார வடிவேலன், அர., சங்க இலக்கிய உவமைகள், பழநியப்பன் பதிப்பகம், தேவகோட்டை, 1986.

188. சிதம்பர பாரதிகளென்ற சின்னபாரதி, அஷ்டாவதனம் சுந்தரமய்யர், சுப்பராமய்யரென்ற இராமசாமி அய்யர், பெரியபுராணக் கீர்த்தனை, சுப்பராமய்யரென்ற இராமசாமி அய்யர் (பதி.), ஜுபிலி அச்சுக் கூடம், காரைக்குடி 1929.

189\. சிதம்பரம் பிள்ளை, வ.உ., *அகமே புறம்*, புரோகிரஸிவ் பிரஸ், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1916.

190\. ...., *மனம்போல் வாழ்வு*, இந்தியா ப்ரிண்டிங் வொர்க்ஸ், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1916.

191\. ...., (உ.ஆ.), *தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார் திருக்குறளும் தேசாபிமானி வ.உ. சிதம்பரம் பிள்ளை விருத்தியுரையும்*, வேலாயுதம் பிரிண்டிங் பிரஸ், தூத்துக்குடி, 1935.

192\. சிந்நயச் செட்டியார் (உலக்குடையச் செட்டியார்), *திருவொற்றியூர்ப் புராணம்*, அள.சித.பெ. சிதம்பரஞ் செட்டியார் (பதி.), ஸ்டார் ஆப் இந்தியா அச்சியந்திரசாலை, சென்னபட்டணம், பிலவ ஆண்டு.

193\. சிவஞான சுவாமிகள், *காஞ்சிப் புராணம்*, காஞ்சி நாகலிங்க முதலியார் (பதி.), கலாரத்நாகர அச்சுக்கூடம், சென்னை, 1910.

194\. ...., *காஞ்சிப் புராணம்*, சி. அருணை வடிவேலு முதலியார் உரை, மெய்கண்டார் கழக வெளியீடு, குமரன் அச்சகம், காஞ்சிபுரம், 1939.

195\. ...., *காஞ்சிப் புராணம்*, பொன் சண்முகனார் உரை, முத்தமிழ் அச்சகம், காஞ்சிபுரம், 1964.

196\. ...., ஸ்ரீமாதவ, *குளத்தூர் அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ்*, பிள்ளைத் தமிழ்க் கொத்து-2, கழக வெளியீடு, சென்னை, இரண்டாம் பதிப்பு, 1939.

197\. ...., *சிவதத்துவ விவேகம்*, கழக வெளியீடு, சென்னை, புதியபதிப்பு, 1923.

198\. சிவப்பிரகாச சுவாமிகள், பிரபுலிங்க லீலை, கலாரத்நாகர அச்சுக் கூடம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1905.

199\. ...., *பிரபுலிங்க லீலை*, கழக வெளியீடு, சென்னை, 1954.

200\. சிவப்பிரகாசன், *மெய்ந்நெறி என்னும் குட்டிக்குறள்*, செந்தமிழ்ச் செல்வி, இரண்டாஞ் சிலம்பு, 1924-25.

201\. சின்னத்தம்பி நாவலர், *ஊதாளர் குறவஞ்சி என்னும் அலகுமலைக் குறவஞ்சி* க. பழனிச்சாமிப் புலவர் (பதி.), தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித்துறை நிதியுதவி, காந்திதாசன் அச்சகம், கோவை, 1969.

202. சின்னத்தம்பி புலவர், *மறைசையந்தாதி*, அ. சிவசம்புப் புலவர் உரை, வித்தியாநுபாலன யந்திரசாலை, யாழ்ப்பாணம், 1883.

203. சீராளன், ம. (பதி.), *காஞ்சி மன்னனம்மானை*, தஞ்சை சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர், ஸ்ரீவாணிவிலாச அச்சகம், ஸ்ரீரங்கம், 1970.

204. சீனிச்சாமி, து., *தமிழில் காப்பியக் கொள்கை* முதற்பகுதி, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1985.

205. சீனிவாசன், அரங்க, *மனித தெய்வம் காந்தி காதை* (பெருங்காப்பியம்), திருவள்ளுவர் பதிப்பகம், திருச்சி, 1980.

206. சீனிவாசன், ரா., *சங்க இலக்கிய உவமைகள்*, அணியகம், சென்னை-30, 1973.

207. சுத்தானந்த பாரதியார், *பாரத சக்தி மகாகாவியம்*, பாரதசக்தி நிலையம், புதுவை, 1933.

208. ...., *பாரதசக்தி மகாகாவியம்*, அன்பு நிலையம், இராமச்சந்திரபுரம், திருச்சி ஜில்லா, 1945.

209. ...., *மஹாகவி காளிதாஸன்*, அன்பு நிலையம், இராமச்சந்திரபுரம், திருச்சி ஜில்லா, 1939.

210. சுந்தரலிங்க முனிவர், *திருப்பெருந்துறைப் புராணம்*, ச. பாலசுந்தரம் (பதி.), தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையம், தஞ்சாவூர், 1976.

211. சுந்தரம்பிள்ளை, பெ., *மனோன்மணீயம்*, கழக வெளியீடு, சென்னை, ஆறாம் பதிப்பு, 1948.

212. ...., *மனோன்மணீயம்*, ஜெ. ஸ்ரீசந்திரன் (பதி.), வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 1965.

213. சுப்பராய ஐயர், சே., *திருக்கோட்டியூர்ச் சௌமிய நாராயணமூர்த்தி பிள்ளைத் தமிழ்*, மீ. சுப்பையர் (பதி.), ஸ்ரீபத்மநாப விலாச அச்சியந்திரசாலை, சென்னை, 1904.

214. ...., *புராணரத்தினமென்னும் ஸ்ரீவிஷ்ணு புராணம்*, ஸ்ரீபத்மநாப விலாச அச்சுக்கூடம், சென்னை, 1904.

215. சுப்பிரதீபக் கவிராயர், *கூளப்பநாயக்கன் காதல்*, மு. அருணாசலம் (பதி.), சக்தி காரியாலயம், சென்னை-மதுரை, 1943.

216. சுப்பிரமணிய அய்யர், ஏ.வி., *தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி* அமுத நிலையம் பிரைவேட் லிமிடெட், சென்னை-18, 1959.

217. சுப்பிரமணிய ஐயர், அஷ்டாவதானம், *தேவைப் பிள்ளைத் தமிழ்,* உ.மு.சுப.லெ.மெ. மெய்யப்ப செட்டியார் பொருளுதவி, கந்தர்சஷ்டி விழாக் கழக வெளியீடு, தேவகோட்டை, குரோதி ஆண்டு (ஆங்கில ஆண்டு இல்லை).

218. சுப்பிரமணிய சுவாமிகள், *பெண்ணைநதிப் புராணம்,* மதராஸ் டைமண்டு பிரஸ், சென்னை, 1889.

219. சுப்பிரமணிய தீக்ஷிதர், குருகூர், *பிரயோக விவேகம்,* ஆறுமுக நாவலர் (பதி.), வித்தியாநுபாலன யந்திரசாலை, சென்னபட்டணம், இரண்டாம் பதிப்பு, விசுவாச ஆண்டு (ஆங்கில ஆண்டு இல்லை).

220. சுப்பிரமணிய பாரதி, சி., *பாஞ்சாலி சபதம்,* வித்யாவர்த்தினி பிரஸ், பாண்டிச்சேரி, 1912.

221. சுப்பிரமணிய பாரதி, *பாரதி நூல்கள் (வசனங்கள்),* பாரதி பிரசுராலயம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1932.

222. ...., *பாரதியார் கட்டுரைகள்,* பூம்புகார் பிரசுரம், சென்னை, 1977.

223. சுப்பிரமணிய பாரதியார் (திருவிளையாடற் கீர்த்தனை செய்தவர்), *திருமெய்யம் பெருமாள் கோவில் ஸ்தல புராணக் கீர்த்தனை,* தஞ்சாவூர் சுப்பிரமணிய ஐயர் (பதி.), வித்தியா வர்த்தினி அச்சுக் கூடம், சென்னபட்டணம், விஷு ஆண்டு, (ஆங்கில ஆண்டு இல்லை).

224. சுப்பிரமணிய பிள்ளை, கா., *இலக்கிய வரலாறு* இரண்டாம் பாகம், ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், சென்னை-1, ஏழாம் பதிப்பு, 1973.

225. ...., *பழந்தமிழர் நாகரிகம் அல்லது தொல்காப்பியப் பொருளதிகாரக் கருத்து,* தமிழ் நெறி விளக்கப் பதிப்பகம், சேலம், 1939.

226. ...., *மெய்கண்டாரும் சிவஞான போதமும்,* கழக வெளியீடு, நெல்லை மறுபதிப்பு, 1966.

227. சுப்பிரமணிய முதலியார், வெ.ப., *அகலிகை வெண்பா,* கழக வெளியீடு, சென்னை, 1914.

228. ...., *நெல்லைச் சிலேடை வெண்பா,* சிலேடை வெண்பா நூற்கொத்து, கழக வெளியீடு, சென்னை, மறுபதிப்பு, 1964.

229. சுப்பிரமண்ய சாஸ்திரி, பி.எஸ்., _வடமொழிநூல் வரலாறு_, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைநகர், 1946.

230. சுப்பிரமணியன், ச.வே., _கம்பன் கற்பனை_, தமிழ்ப் பதிப்பகம், சென்னை-20, 1978.

231. ...., _காப்பியப் புனைதிறன்_, தமிழ்ப் பதிப்பகம், சென்னை, 1979.

232. ...., _கம்பன் இலக்கிய உத்திகள்_, மெய்யப்பன் பதிப்பகம், காரைக்குடி-1, 1982.

233. ...., (தொகு.), _இலக்கணத்தொகை-யாப்பு-பாட்டியல்_, தமிழ்ப் பதிப்பகம், சென்னை-20, 1978.

234. சுப்பிரமணியன், நெல்லை க., _சாங்கிய காரிகை_, உமா நூலகம், திருநெல்வேலி-6, 1980.

235. சுப்புரெட்டியார், ந., பாட்டுத்திறன், _ஸ்டார்பிரசுரம்_, சென்னை, 1988.

236. சுப்பையா, _பூவேந்திர காவியம்_, தமிழ்ச்சங்கம், மதுரை, 1975.

237. சுப்ரமண்ய ஐயர், மீ., _இராமாயண வெண்பா_, ஸ்ரீ வெங்கட்ராம ஐயர், (பதி.)உறிந்தி பிரச்சார அச்சுக்கூடம், சென்னை, 1930.

238. சுப்ரமண்ய பாரதி, அ., _ஔவை அருந்தமிழ்_, கே. பழநியாண்டிப் பிள்ளை கம்பெனி, சென்னை, 1921.

239. சுவாமிநாத தேசிகர், _இலக்கணக் கொத்து_, ஆறுமுக நாவலர்(பதி.), வித்தியாநுபாலன யந்திர சாலை, சென்னபட்டணம், மூன்றாம் பதிப்பு, விரோதிகிருது ஆண்டு (ஆங்கில ஆண்டு இல்லை).

239. அ) சுவாமிநாத தேசிகர், சு., _சந்தான சாரிய புராண சங்கிரகம்_, பொன்னையா தேசிகர் (பதி.), சைவவித்யாநுபாலன யந்திரசாலை, யாழ்ப்பாணம், இரண்டாம் பதிப்பு, விசுவாசு ஆண்டு (ஆங்கில ஆண்டு இல்லை.

240. சுவாமிநாத பண்டிதர்(பதி.), _சிவஞானபோதமும் சிவஞான சுவாமிகளின் (திராவிட) மாபாடியமும் சிற்றுரையும்_, சைவவித்தியாநுபாலன யந்திரசாலை, சென்னை, பராபவ.

241. சூரிய நாராயண சாஸ்திரி, வி.கோ., _தமிழ் மொழியின் வரலாறு_, தமிழ்ச் சங்கம் பிரஸ், மதுரை, 1922.

242. ...., _நாடகவியல்_, பரிதிமால் பதிப்பகம், மதுரை, நான்காம் பதிப்பு, 1956.

243. ...., _மானவிஜயம்_, பரிதிமால் பதிப்பகம், மதுரை, ஆறாம் பதிப்பு, 1960.

244. செந்தமிழ்க்கிழார், அருப்புக்கோட்டை, மறைமலையடிகள் பிள்ளைத்தமிழ், செந்தமிழ்க் கழகம், அருப்புக்கோட்டை, 1987.

245. செந்தமிழ்ச் செல்வன், அண்ணா வைப்பியம் என்னும் அண்ணா காவியம், பாவலர் வெளியீடு, பாப்பா பதிப்பகம், சென்னை - 34, 1968.

246. செய்கு அப்துல்காதிர் நயினார் லெப்பை ஆலிம், புலவர் நாயகம், குத்பு புராணம் (முகியித்தீன் புராணம்), ஆயிஷா பதிப்பகம், அதிராம்பட்டினம், 1982.

247. செல்லப்பன், புதுவயல், வாலம் பிள்ளைத் தமிழ், மறை.ச. விமலானந்தம் (பதி.), மோகனப் பதிப்பகம், சென்னை, 1980.

248. சென்னமல்லையர், சிதம்பரம், சிவசிவவெண்பா, குறள் வெண்பா நூற்கோவை (முதற் பகுதி), கழக வெளியீடு, சென்னை, 1967.

249. சேக்கிழார், திருத்தொண்டர் புராணம் - திருமூலநாயனார் புராணம், டி.எம். குமரகுருபரன் பிள்ளை (பதி.), பன்னிருதிருமுறைப் பதிப்பு வெளியீடு, மூன்றாம் பதிப்பு, 1964.

250. ...., பெரியபுராணம் என்னும் திருத்தொண்டர் புராணம், சைவசித்தாந்த மகாசமாஜம், சாது அச்சுக்கூடம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1937.

251. சொ., ராம., காந்திக்கவிதை, அழகப்பா கல்லூரி வெளியீடு, திருமகள் அச்சகம், காரைக்குடி, 1969.

252. சொக்கலிங்கம், ராம., காந்தி பிள்ளைத் தமிழ், தனவைசிய ஊழியன் அச்சுக் கூடம், காரைக்குடி, 1924.

253. சொக்கலிங்கச் செட்டியார், ராம.சொ., குதவன புராணம், ராம. சித. சிதம்பரச் செட்டியார் (பதி.), குமரன் அச்சுக்கூடம், காரைக்குடி, 1927.

254. ...., சோழபுராணம், சி.கரு.சி.கரு. அதப்ப செட்டியார் (பதி.), ஸ்ரீ குஞ்சிதசரண அச்சுக் கூடம், சிதம்பரம். சுக்கில ஆண்டு, (ஆங்கில ஆண்டு இல்லை).

255. ...., பெருந்தோட்டத்து அத்தீச்சர புராணம், ராம.உ.ராமசாமி செட்டியார் (பதி.), ஞானாம்பிகா ப்ரிண்டிங் வொர்க்ஸ், காரைக்குடி, 1917.

256. சொக்கலிங்கச் செட்டியார், ராம.சொ., திருப்புத்தூர்ப் புராணம், மெ.பெரி.ராம.மெ. ஞானசம்பந்த செட்டியார் (பதி.), குமரன் அச்சியந்திரசாலை, காரைக்குடி, இரண்டாம் பதிப்பு, 1923.

257. சொக்கலிங்கப் புலவர், திருவெள்ளூர்ப் புராணம், சென்னை நோபிள் அச்சியந்திரசாலை, சென்னை, 1927.

258. சோமசுந்தர பாரதியார், ச., மாரிவாயில், பாரதி புத்தக நிலையம், மதுரை, 1954.

259. சோமசுந்தரன், பாண்டிமாதேவி, பொன்னுப் பதிப்பகம், காரைக்குடி, 1974.

260. சோமசுந்தரனார், பொ.வே. (உ.ஆ.), உதயணகுமார காவியம், கழக வெளியீடு, சென்னை, 1964.

261. ...., (விளக்கவுரை) வளையாபதி, குண்டலகேசி, உதயணகுமார காவியம், கழக வெளியீடு, சென்னை, 1970.

262. சௌந்தரபாண்டியன், எஸ்., தமிழில் அவையடக்கப் பாடல்கள், ஸ்டார் பிரசுரம், சென்னை-5, 1988.

263. ஞானக்கூத்தர், விருத்தாசல புராணம், திருவேங்கட உபாத்தியாயர் (பதி.), நற்றமிழ் விலாச அச்சியந்திரசாலை, புரசை, சென்னை, 1908.

264. ஞானசம்பந்தன், அ.சா., கம்பன் - புதிய பார்வை, கம்பன் கழகம், சென்னை, 1984.

265. ஞானசம்பந்தன், திரு. குமார., அருள்மிகு பண்ணாரி மாரியம்மை பிள்ளைத் தமிழ், பெ. நஞ்சையன் (பதி.), மகாலட்சுமி வணிக நிலையம், பவானிசாகர், 1976.

266. ஞானப்பிரகாசர், கமலை, சிவானந்தபோதம் - மூன்றாம் பாகம், பி. ரத்தின நாயகர் ஸன்ஸ், சென்னை, சுத்தப்பதிப்பு, 1949.

267. ஞானமூர்த்தி, தா.ஏ., இலக்கியத் திறனாய்வியல், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை-5, இரண்டாம் பதிப்பு, 1986.

268. தண்டபாணிப் பிள்ளை, நாகை சொ. (உ.ஆ.), திருக்குருவைப் பதிற்றுப் பத்தந்தாதி உரை, கழக வெளியீடு, திருநெல்வேலி, ரௌத்திரி ஆண்டு (ஆங்கில ஆண்டு இல்லை).

269. (தண்டி), *தண்டியலங்காரம்*, சுப்பிரமணிய தேசிகர் உரை, கழக வெளியீடு, சென்னை, மறுபதிப்பு, 1966.

270. ....., *தண்டியலங்காரம்*, வி. ஆறுமுகம் சேர்வை (பதி.) மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை, சென்னை, 1920.

271. தத்துவராயசுவாமிகள், *அமிர்தசாரம்*, ஸ்ரீ தத்துவராய ஸ்வாமிகள் இயற்றியருளிய அடங்கன் முறைப் பிரபந்தம், ஸ்ரீபொன்னம்பலம் ஸ்வாமிகள் மடவெளியீடு, சிதம்பரம், அக்ஷய ஆண்டு (ஆங்கில ஆண்டு இல்லை).

272. தமிழண்ணல் (இராம. பெரியகருப்பன்), *சங்க இலக்கிய ஒப்பீடு* - இலக்கியக் கொள்கைகள், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1980.

273. ....., *புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு*, சோலை நூலகம், மதுரை, 1980.

274. ....., இலக்குமணன், எம்.எஸ்., *ஆய்வியல் அறிமுகம்*, ஏரக வெளியீடு, ஏரகம், சதாசிவ நகர், மதுரை-20, இரண்டாம் பதிப்பு, 1979.

275. தமிழவன், *ஸ்ட்ரச்சுரலிசம்*, பாரிவேள் பதிப்பகம், திருநெல்வேலி-7, 1982.

276. தமிழன்பன் (ந. செகதீசன்), *தனிப்பாடல் திரட்டு ஓர் ஆய்வு*, பாப்லோ பாரதி பதிப்பகம், சென்னை-14, 1987.

277. தம்புரான் தோழப்பிள்ளை, எஸ்., *கன்னிமரிபிள்ளைத் தமிழ்*, மறைதிரு வி.எம். ஜார்ஜ் (பதி.) பாங்குரு, சிலுவைபுரம், களியிக்காவிளை (வழி), குமரி மாவட்டம், 1972.

278. தாண்டவ சேதுராயர், *திருவரசு நாடகம்*, மனோன்மணி விலாச அச்சுக்கூடம், சென்னை, 1897.

279. தாண்டவராய ஸ்வாமிகள், *கைவல்ய நவநீதம்*, பொன்னம்பல சுவாமிகள் தத்துவார்த்த தீபமென்னும் உரை, ஸ்ரீசிதம்பரஸ்வாமி (பதி.), அமெரிக்கன் டைமண்ட் பிரஸ், சென்னை, ஐந்தாம் பதிப்பு, 1922.

280. தியாகராச செட்டியார், திரிசிரபுரம் சி., *சாக்கையென்று வழங்குகின்ற அளகாபுரி உமையம்பிகை பிள்ளைத்தமிழ்*, அ.ராம.அ.லெ.அ. முத்துவீரப்ப செட்டியார், அ.ராம.அ.லெ.அ. அருணாசலம் செட்டியார் (பதி.ஆ.), வசந்தா பிரஸ், தேவகோட்டை, இரண்டாம் பதிப்பு, 1981.

281. தியாகராஜ கவிராஜ தேசிகர், திருவாரூர், திருப்புவனவாயிற்புராணம், ஸ்ரீமாந். அழ.சுப.பழ. சுப்பிரமணியச் செட்டியார் (பதி.), வைசியமித்திரக் அச்சுக்கூடம், தேவகோட்டை, 1928.

282. தியாகராஜ செட்டியார், வி.ஏ., காமதகனமென்னும் போட்டா போட்டி நூதநக்கட்சி சவால் லாவணி, கே.ஏ. மதுரை முதலியார் (பதி.). உதயசூரியானந்தா புத்தகசாலை, சென்னை-3.

283. திரிகூடராசப்பன் கவிராச மூர்த்திகள், திருக்குற்றாலத் தலபுராணம், மு.ரா. அருணாசலக் கவிராயர் (பதி.), விவேகபாநு அச்சியந்திரசாலை, மதுரை, சாதாரண ஆண்டு (ஆங்கில ஆண்டு இல்லை).

284. ....., திருக்குற்றாலக் குறவஞ்சி, விவேகபாநு அச்சியந்திரசாலை, மதுரை, 1912.

285. ....., திருக்குற்றாலக் குறவஞ்சி, திருக்குற்றாலநாத சுவாமி தேவஸ்தான வெளியீடு, லோகாப்பிகை பிரஸ், தென்காசி, 1938.

286. ....., திருக்குற்றாலக் குறவஞ்சி, கழக வெளியீடு, சென்னை, மூன்றாம் பதிப்பு, 1962.

287. ....., திருக்குற்றாலச் சிலேடை வெண்பா, குற்றாலநாத சுவாமி தேவஸ்தான வெளியீடு, லோகாப்பிகை பிரஸ், தென்காசி, 1939.

288. திருக்குருகைப் பெருமாள் கவிராயர், மாறனலங்காரம், நாராயணயங்கார் (பதி.), தமிழ்ச் சங்க முத்திரா சாலை, மதுரை, 1915.

289. திருச்சிற்றம்பல நாவலர், அண்ணாமலைச் சதகம், ரத்தினம் பிரஸ் பிராஞ்ச், 65, திருப்பள்ளித் தெரு, சென்னை-1, 1952.

290. திருத்தக்கத் தேவர், சீவகசிந்தாமணி, நச்சினார்க்கினியர் உரை, உ.வே. சாமிநாதையர் (பதி.), கபீர் அச்சுக்கூடம், சென்னை, ஆறாம் பதிப்பு, 1957.

291. ....., சீவகசிந்தாமணி, புலவர் அரசு, பொ.வே. சோமசுந்தரனார் (உரை.ஆ.), கழக வெளியீடு, சென்னை, மறுபதிப்பு, 1967.

292. திருநள்ளாறு தேவஸ்தான கமிட்டி மெம்பர்கள் (பதி.ஆ.), திருநள்ளாற்றுப் புராணம், யதார்த்த வசனிபிரஸ், கும்பகோணம், ஐந்தாம் பதிப்பு, 1955.

293. திருநாவுக்கரசர், தேவாரம், கழக வெளியீடு, சென்னை, 1973.

294. திருமூலர், *திருமந்திரம்,* மா.வே. விசுவநாதபிள்ளை பதிப்பு, பதிப்பக விபரம் இல்லை, 1912.

295. ...., *திருமந்திரம் (மூவாயிரம்),* அ. சிதம்பரனார் உரை, கழக வெளியீடு, சென்னை, 1942.

296. ...., *திருமந்திரம், ஸ்ரீ பஞ்சாக்ஷரதீபம் என்னும் உரையுடன்,* திருவாவடுதுறை ஆதீன வெளியீடு, திருவாவடுதுறை, இரண்டாம் பதிப்பு, 1987.

297. ...., *திருமந்திரம்,* திருப்பனந்தாள் மட வெளியீடு, திருப்பனந்தாள், 19

298. (திருவள்ளுவர்), *திருக்குறள்,* பரிமேலழகர் உரை, கழக வெளியீடு, சென்னை, மறுபதிப்பு, 1961.

298. அ) திலகம், ச. (பதி.), *குசலவன் கதை,* தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையம், தஞ்சாவூர், 1983.

299. திவாகரவாமன முனிவர் (உ.ஆ.), *நீலகேசி உரை,* அ.சக்கரவர்த்தி நயினார் பதிப்பு, சென்னை, 1936.

300. துரைசாமிப்பிள்ளை, ஔவை சு. (உ.ஆ.), *யசோதர காவியம்,* கழக வெளியீடு, சென்னை, 1944.

301. துளசிதாஸ், *ஸ்ரீராமசரிதமானஸ்,* சிவராமக் கிருஷ்ணன் (மொ.ஆ.), ஸாதனா நிகேதன், 1983.

302. துளஜ மஹாராஜா, *சிவகாமசுந்தரி பரிணய நாடகம்,* எஸ். ஸீதா (பதி.), தஞ்சை சரசுவதி மஹால் நூலகம், தஞ்சாவூர், 1971.

303. தெட்சிணாமூர்த்தி, பி., *வடமொழி இலக்கிய வரலாறு ஓர் அறிமுகம்,* இலட்சியர் பதிப்பகம், 5. வ.உ.சி. தெரு, திருநெல்வேலி-6, நான்காம் பதிப்பு, 1985.

304. தெள்ளீரயம் பதியார், *மூவர் அம்மானை,* அ. விநாயகமூர்த்தி(பதி.), பாலமுருகன் பதிப்பகம், ஜெய்ஹிந்த்புரம், மதுரை, 1981.

305. தேசிகவிநாயகம் பிள்ளை, சி., *மருமக்கள் வழி மான்மியம்,* பாரி நிலையம், சென்னை, மூன்றாம் பதிப்பு, 1965.

306. (தேரையர்), தேரையர் மகாகரிசல், இரண்டாம் சிலம்பு, செந்தமிழ்ச் செல்வி, கழக வெளியீடு, மதுரை, ருத்ரோத்காரி (ஆங்கில ஆண்டு இல்லை).

307. தேரையர் முதலிய முனிவர்கள், அற்புத சிந்தாமணியென்னும் பதார்த்த குண சிந்தாமணி, காஞ்சிபுரம் தி. அரங்கசாமி நாயுடு (பதி.) சூளை பாரதி அச்சுக் கூடம், சென்னை, 1922.

308. ....., அற்புத சிந்தாமணியென்னும் பதார்த்த குண சிந்தாமணி, காசி-முகைதீன் ராவுத்தரவர்கள் பதிப்பு, சென்னை, 1922.

309. தேவநேயன், ஞா., வடமொழி வரலாறு, நேசமணி பதிப்பகம், காட்பாடி விரிவு, வடஆர்க்காடு மாவட்டம், 1967.

310. தேவராசபாரதி, சடகோபதிவ்விய சரித்திரம், பதிப்பகக் குறிப்பு இல்லை, பாளையங்கோட்டை, 1929.

311. தேவராஜபிள்ளை, வல்லூர், குசேலோபாக்கியானம், வி. உலகநாத முதலியார் உரை, முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை, சென்னை, 1938.

312. ....., குசேலோபாக்கியானம், மதறாஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை, சென்னை, (ஆண்டு இல்லை).

313. ....., சூதசங்கிதை, மீனாட்சி சுந்தரம் பிள்ளை (பார்வை), ரிப்பன் அச்சியந்திரசாலை, மதராசு, இரண்டாம் பதிப்பு, மன்மத ஆண்டு (ஆங்கில ஆண்டு இல்லை).

314. தேவராயன், சொ., காரைக்குடி கொப்புடையம்மன் பிள்ளைத் தமிழ், இராம.பெரி. பெரியகருப்பன் செட்டியார் இல்லத் திருமண வெளியீடு, மெய்யம்மை பதிப்பகம், காரைக்குடி, 1985.

315. (தொல்காப்பியர்), தொல்காப்பியம்-எழுத்ததிகாரம், இளம்பூரணர் உரை, திரு. அடிகளாசிரியன் (பதி.), காவேரி கலர் அச்சகம், கும்பகோணம், 1969.

316. ....., தொல்காப்பியம்-எழுத்ததிகாரம், இளம்பூரணர் உரை, கழக வெளியீடு, சென்னை, 1969.

317. ....., தொல்காப்பியம்-எழுத்ததிகாரம், நச்சினார்க்கினியர் உரை, தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையம், தஞ்சாவூர், 1967.

318. (தொல்காப்பியர்), *தொல்காப்பியம்-சொல்லதிகாரம்,* இளம்பூரணர் உரை, கழக வெளியீடு, சென்னை, மறுபதிப்பு, 1967.

319. ...., *தொல்காப்பியம்-பொருளதிகாரம்,* இளம்பூரணர் உரை, கழக வெளியீடு, சென்னை, நான்காம் பதிப்பு, 1967.

320. ...., *தொல்காப்பியம்-பொருளதிகாரம்-செய்யுளியல்,* இளம்பூரணர் உரை, தி.. அடிகளாசிரியர் (பதி.), தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1985.

321. ...., *தொல்காப்பியம்-பொருளதிகாரம், (மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியல்),* பேராசிரியர் உரை, கழக வெளியீடு, சென்னை, மறுபதிப்பு, 1972.

322. ...., *தொல்காப்பியம்-பொருளதிகாரம்,* நச்சினார்க்கினியர் உரை, கு. சுந்தரமூர்த்தி (பதி.), கழக வெளியீடு, சென்னை, 1965.

323. தோலாமொழித் தேவர், *சூளாமணி,* சி.வை. தாமோதரம் பிள்ளை (பதி.), வித்தியாநுபாலனயந்திரசாலை, சென்னபட்டணம், 1889.

324. ...., *சூளாமணி,* கழக வெளியீடு, சென்னை, 1962.

325. நக்கீரன், அ., *அண்ணா அறுபது,* நன்னன் நிலையம், சென்னை-5, 1968.

326. நடராசக்கவிராயர், வி., *வயிரவன் கோயிற் புராணம்,* வீர.லெ. சிந்நயச் செட்டியார் (பதி.), கலாரத்நாகரம் என்னும் அச்சுக்கூடம், சென்னை, மன்மத ஆண்டு, (ஆங்கில ஆண்டு இல்லை).

327. நடராசன், தி. (பதி.), *உடையார்கதை,* கூடல் பப்ளிஷர்ஸ், மதுரை-1, 1980,

328. ...., *உலகுடைய பெருமாள் கதை,* மதுரை தமிழாலஜி பப்ளிஷர்ஸ், மதுரை-1, 1981.

329. ...., *கட்டபொம்மு கும்மிப் பாடல்,* ஈஸ்வரி வெளியீடு, வைத்தியநாதபுரம், கோட்டார், நாகர்கோவில்-2, ஆண்டு இல்லை.

330. ...., *ஞானசவுந்தரி அம்மானை,* தமிழ் இலக்கியக் கழகம், திருச்சிராப்பள்ளி, 1979.

331. நடராசன், எல். (உ.ஆ.), நானாற்பது மூலமும் உரையும், மீனாட்சி பதிப்பகம், புதுக்கோட்டை, 1961.

332. நடராஜன், இவைரசன் நா., வங்கமண்டல சதகம், செட்டிமார் கழக வெளியீடு, மன்னவன் வெளியீடு, கீழச்சிவல்பட்டி, 1955.

333. நடராஜன், நவாலியூர், வடமொழி இலக்கிய வரலாறு, சங்கீதா பதிப்பகம், சென்னை-17, 1979.

334. நடேசபிள்ளை, சு., சகுந்தலை வெண்பா, இராமநாதன் கழகம், சுன்னாகம், இலங்கை, 1963.

335. நமச்சிவாய நாவலர், திருவரங்கச் சந்நிதிமுறை, சிதம்பர முதலியார் (பதி.), வித்யாரத்நாகர அச்சுக்கூடம், சென்னை, 1913.

336. நம்பி, பெரும்பற்றப்புலியூர், திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம், உ.வே. சாமிநாதய்யர் (பதி.), கபீர் அச்சுக்கூடம், சென்னை, மூன்றாம் பதிப்பு, 1972.

337. நல்லதம்பிப் பிள்ளை, பொ., தேவிமான்மியம், வே.ரா. தெய்வ சிகாமணிக்கவுண்டர் உரை, தமிழன் அச்சகம், ஈரோடு, 1955.

338. நல்லாப்பிள்ளை, மகாபாரதம், அ. சுந்தரநாத பிள்ளை பரிசோதித்து முத்துராமலிங்கத் தேவர் பதிப்பித்தது, வித்யாரத்நாகர அச்சுக்கூடம், சென்னை, 1911.

339. நவநீதநாடன், கலித்துறைப் பாட்டியல் என்னும் நவநீதப்பாட்டியல், உ.வே. சாமிநாதய்யர் நூல் நிலையம், சென்னை, 1961.

340. நாரணக்குடைமன்னர், வடமலை, திருநீடூர்த்தல புராணம், ராமநிலைய விவேகாநந்த அச்சுக் கூடம், சென்னை, 1908.

341. நாராயணசுவாமி நாயுடு, பி.பி., நெட்டூர்ப் புராணம், வித்தியாநுபாலன யந்திரசாலை, சென்னை, 1914.

342. நாராயண பாரதியார், வெண்மணி, திருவேங்கட சதகம், ரிப்பன் அச்சியந்திரசாலை, சென்னை, மறுபதிப்பு, 1926.

343. நாராயணய்யங்கார் (பதி.), திருமாலிருஞ் சோலைமலை அழகர் பிள்ளைத் தமிழ், தமிழ்ச்சங்க முத்திராசாலை, மதுரை, 1919.

344. நாராயணன், பா., பெரியார் காவியம் (இளமைக் காண்டம்), நாவல் பிரிண்டர்ஸ், சென்னை-14, 1981.

345. நிரம்பவழகிய தேசிகர், சேதுபுராணம், யாழ்ப்பாணத்து நல்லூர் சதாசிவப்பிள்ளை (பதி.), வித்தியாநுபாலன யந்திரசாலை, சென்னபட்டணம், இரண்டாம் பதிப்பு, ஏவிளம்பி ஆண்டு (ஆங்கில ஆண்டு இல்லை).

346. ....., திருப்பரங்கிரிப்புராணம், அ. நாராயணசரணர் (பதி.), காரைக்கால்யந்திரசாலை, திருப்பரங்குன்றம், பிரமாதி ஆண்டு (ஆங்கில ஆண்டு இல்லை).

347. நீதிவாணன், ஜெ., நடையியல், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1983.

348. நீலகண்ட சாஸ்திரி, கே.ஏ., தென்னிந்திய வரலாறு, இரண்டாம் பகுதி, மு.ரா. பெருமாள் முதலியார் (மொ.ஆ.), தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1973.

349. பகழிக்கூத்தர், திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ், திருச்செந்தூர்ப் பிரபந்தத் திரட்டு, மு.ரா. அருணாசலக் கவிராயர் உரையும் பதிப்பும், பதிப்பகக் குறிப்புகள் இல்லை, 1911.

350. ....., திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ், கழக வெளியீடு, சென்னை, மறுபதிப்பு, 1969.

351. பசுபதி, மு. (பதி.), எட்டெட்டந்தாதி, தொகுதி-7, பகுதி-2, அரசு சுவடிகள் நூலகப் பருவ இதழ், சென்னை, 1954.

352. படிக்காசுப் புலவர், பழமொழி விளக்கம் என்னும் தண்டலையார் சதகம், புலவர் அரசு உரை, கழக வெளியீடு, சென்னை, மறுபதிப்பு, 1966.

353. ....., தண்டலையார் சதகம், ரிப்பன் அச்சியந்திரசாலை, மதராஸ், 1924.

354. ....., தொண்டைமண்டல சதகம், அ.க. அமிர்தம்பிள்ளை (பதி.), விக்டோரியா அச்சியந்திரசாலை, வேலூர், 1887.

355. பண்டாரத்தையா, செங்கோட்டை கவிராஜ, திருமலைமுருகன் பிள்ளைத் தமிழ், பு.சி. புன்னைவனநாத முதலியார் உரை, பிள்ளைத் தமிழ்க் கொத்து, கழக வெளியீடு, சென்னை, மறுபதிப்பு, 1957.

356. பண்டிதராசர், தக்ஷிணகைலாசபுராணம், கலாநிதியந்திரசாலை, தம்பை நகர், பருத்தித்துறை, 1916.

357. பரஞ்சோதி, திருவிளையாடற்புராணம், ஈக்காடு இரத்தினவேலு முதலியார் உரை, முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை.

358. ....., திருவிளையாடற்புராணம், நா. கதிரைவேற்பிள்ளை (பதி.), வித்யாரத்நாகர அச்சுக்கூடம், சென்னை, 1912.

359. பரஞ்சோதி முனிவர், சைவ., சிதம்பரபுராணம், அருணாசல முதலியார் (பார்வை), மனோன்மணி விலாச அச்சுக் கூடம், கொன்னூர், பவ ஆண்டு (ஆங்கில ஆண்டு இல்லை).

360. பரஞ்சோதியார், சிதம்பரப்பாட்டியல், மு. இராகவையங்கார் (பதி.), தமிழ்ச் சங்கமுத்திராசாலை, மதுரை, 1911.

361. பலராமையர், கடலூர் ந., தசரதன் தவறு, கணேஷ் கம்பெனி, சென்னை, இரண்டாம் பதிப்பு, 1918.

362. பலராமஐயர், காரைக்குடி ந., தசகுமார சரித்திரம், பாரதி அச்சுக் கூடம், மன்னார்குடி, 1923.

363. பவணந்தி முனிவர், நன்னூல், ஆறுமுக நாவலர் (பதி.), ஆறுமுகநாவலர் வி. அச்சகம், சென்னை, ஆறாம் பதிப்பு, 1966.

364. பவானந்தம் பிள்ளை, ச., அரிச்சந்திரன், வித்யாரத் நாகர அச்சுக் கூடம், சென்னை, 1913.

365. பழநிச்சாமியாசாரி, மார்க்கயன்கோட்டை (தொகு.), மாம்பழக் கவிச் சிங்க நாவலர் பிரபந்தத் திரட்டு, விவேகபாநு அச்சியந்திரசாலை, மதுரை, 1908.

366. பாண்டியன், இரா., பூங்கொடி (காவியம்) செந்தமிழ்க் கலா நிலையம், பினாங்கு, மலேசியா, 1978.

367. பாரதிதாசன், குறிஞ்சித்திட்டு, பாரிநிலையம், சென்னை-1, ஐந்தாம் பதிப்பு, 1985.

368. பாலசுப்பிரமணியக் கவிராயர், பழநித் தலபுராணம், நா. கதிரைவேற் பிள்ளை (பொழிப்புரை), பி.நா. சிதம்பர முதலியார் பதிப்பு, சென்னை, மூன்றாம் பதிப்பு, 1914.

369. பாலசுப்பிரமணியன், சி., தமிழ் இலக்கிய வரலாறு, நறுமலர்ப் பதிப்பகம், சென்னை-29, ஒன்பதாம் பதிப்பு, 1970.

370. பிள்ளைப் பெருமாள், திவ்விய கவி, திருவேங்கட மாலை, மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை, சென்னை, இரண்டாம் பதிப்பு, 1919.

371. புகழேந்தி, நளவெண்பா, இராஜகோபாலப் பிள்ளை உரை, கா.ர. கோவிந்தராஜ முதலியார் (பதி.), மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை, சென்னை, 1914.

372. ...., நளவெண்பா, மே.வீ. வேணுகோபாலப் பிள்ளை (பதி.), புக்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட், சென்னை, 1958.

373. புகழேந்திப் புலவர், அல்லியரசாணிமாலை, பி. இரத்தின நாயகர் அண்ட் சன்ஸ், சென்னை-1, ஆண்டு இல்லை.

374. ...., சூரவல்லி பூரவல்லி, ஆர்.ஜி.பதி. கம்பெனி, சென்னை-1, 1973.

375. ...., ஏணியேற்றம், ஸ்ரீமகள் கம்பெனி, சென்னை, ஆண்டு இல்லை.

376. ...., காத்தவராய சுவாமி கதைப்பாடல், ஆர்.ஜி.பதி. கம்பெனி, சென்னை, 1972.

377. ...., துரோபதை குறம், இரங்கசாமி முதலியார் சன்ஸ், பூமகள் விலாச அச்சியந்திரசாலை, சென்னை, 1929.

378. ...., நல்லதங்காள் கதை, ஸ்ரீமகள் கம்பெனி, சென்னை-1, ஆண்டு இல்லை.

379. ...., பவளக்கொடி மாலை, பி.இரத்தின நாயகர் அண்ட் சன்ஸ், சென்னை, 1912.

380. ...., பொன்னுருவி மசக்கை, பி. இரத்தின நாயகர் அண்ட் சன்ஸ், சென்னை, 1936.

381. புஷ்பா, செல்வி பி., தமிழில் கீர்த்தனை நாடகங்கள், முத்துப் பதிப்பகம், மதுரை-19, 1980.

382. புத்தமித்திரனார், வீரசோழியம், சி.வை. தாமோதரம் பிள்ளை (பதி.), சின்னைய நாயகர் அச்சுக்கூடம், சென்னை, 1895.

383. புலானந்தக் கவிராயர், சின்னமனூர் என்னும் அரிகேசரி நல்லூர் தலபுராணம், ரஹீம் அச்சியந்திரசாலை, தேனி, மதுரை மாவட்டம், 1954.

384. பெரியவன் கவிராயர், திருமலை முருகன் பள்ளு, மு. அருணாசலம் (பதி.), சக்தி காரியாலயம், சென்னை, 1944.

385. பெருமாள், அ.நா., தமிழில் கதைப்பாடல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை, 1987.

386. பெருமாள், எல்.என்., நெஞ்சப்புயல், எல். நாராயணப் பெருமாள் பதிப்பு, நாகர்கோவில்-4, 1986.

387. பெருமாள் சுவாமிகள், ஸ்ரீ பாரதசார வெண்பா (நூல் சிதைந்த நிலையில் உள்ளதால் பிற குறிப்புகள் காணப்பெறவில்லை).

388. பொய்கையார், இன்னிலை, வ.உ. சிதம்பரம் பிள்ளை விருத்தியுரை, த. வேதியப்பிள்ளை (பதி.), இந்தியா அச்சுக் கூடம், சென்னை, பிங்கள (ஆங்கில ஆண்டு இல்லை).

389. பொன்னுச் செல்லைய பாரதி, செங்கோட்டுப் பள்ளு, ந. கந்தசாமி (பதி.), பழந் தமிழ்ப் பதிப்பகம், மல்லசமுத்திரம், சேலம் மாவட்டம், 1967.

390. போசராச பண்டிதர், சரசோதிமாலை, யாழ்ப்பாணம், பிற குறிப்புகள் இல்லை.

391. மகாதேவ முதலியார், வா. (உ.ஆ.), சோமேசர் முதுமொழி வெண்பா உரை, கழக வெளியீடு, திருநெல்வேலி, 1921.

392. மகாதேவன், கதிர், தொன்மம் (இந்தியப் புராண வகைகள் ஒப்பாய்வு), கதிரகம் இலட்சுமி வெளியீடு, மதுரை 20, 1984.

393. மஹ்மூத முகமது உவைஸ், நம்பிக்கையும் நடைமுறையும், பீ.மு.அஜ்மல்கான் (பதி.), இஸ்லாமியத் தமிழ் இலக்கியத் துறை, மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை, 1983.

394. மணிசேகரன், கோவி., பிறவிப் பெருங்கடல், முத்துக்குமரன் பதிப்பகம், சென்னை-84, இரண்டாம் பதிப்பு, 1976.

395. மலைக்கொழுந்து நாவலர், கச்சி, திருத்தொண்டர் சதகம், திருவாவடுதுறை ஆதீன வெளியீடு, திருவாவடுதுறை, 1968.

396. மறைஞான சம்பந்தர், சங்கற்ப நிராகரணம், கோவிந்தசாமி பிள்ளை (பதி.), தஞ்சை சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர், 1964.

397. ...., சிவதருமோத்தரம், மதராஸ் ரிப்பன் யச்சியந்திரசாலை, சென்னை, 1919.

398. ...., சைவசமயநெறி, ஆறுமுக நாவலர் உரை, பொன்னம்பல பிள்ளை (பதி.) வித்தியாநுபால யந்திரசாலை, சென்னபட்டணம், ஆறாம் பதிப்பு, ஆனந்த ஆண்டு (ஆங்கில ஆண்டு இல்லை).

399. மறைஞான சம்பந்தர், சைவசமய நெறி, வித்தியாநுபாலன யந்திரசாலை, சென்னை, எட்டாம் பதிப்பு, 1955.

400. மறைமலையடிகள் (மொ.ஆ.), காளிதாசரின் சாகுந்தல நாடகம், கழக வெளியீடு, சென்னை, நான்காம் பதிப்பு, 1957.

401. மருமயன், சிற்பநூற் பொக்கிஷம், எஸ். கடலிங்கம் பிள்ளை (பதி.), எஸ். கடலிங்கம் புத்தகசாலை, மதுரை, 1924.

402. மாணிக்கம், வ.சுப., இலக்கிய விளக்கம், மணிவாசகர் நூலகம், சிதம்பரம், மூன்றாம் பதிப்பு, 1978.

403. ...., சிந்தனைக் களங்கள், பழ. சண்முகனார் மணிவிழா வெளியீடு, மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1975.

404. ...., மனைவியின் உரிமை, பாரி நிலையம், சென்னை, நான்காம் பதிப்பு, 1964.

405. ...., வள்ளுவம், சாது அச்சகம், பாரி நிலையம், சென்னை-1, 1953.

406. மாணிக்க முதலியார், எஸ்.ஆர். (பதி.), திருவெண்காட்டடிகள் புராணம் என்னும் பட்டினத்துப் பிள்ளையார் புராணம், தி. வடிவேலு முதலியார் பொழிப்புரை, கோல்டன் பிரஸ், டைமண்ட் பிரஸ், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1915.

407. மாணிக்கவாசகம், இரா., திருமந்திர ஆராய்ச்சி, அன்னை அபிராமி அருள், 9, செல்லம்மாள் தெரு, சென்னை-30, 1982.

408, மாணிக்கவாசகர், திருவாசகம், திருவாவடுதுறை ஆதீன வெளியீடு, திருவாவடுதுறை, 1964.

409. மாம்பழக் கவிச் சிங்க நாவலர், சிங்கார நாயகிகள், புலியூர்க் கேசிகன் உரை, அருணா பப்ளிகேஷன்ஸ், சென்னை, 1959.

410. மாரைய்ய ஆச்சாரியார், இரவிச மரபினர் காதை, (முதல் பகுதி), ஆ. இராமசாமி அய்யா உரை, சடையப்பன் பண்ணை, வேலூர், சேலம், 1964.

411. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, சேக்கிழார் பிள்ளைத் தமிழ், பாலூர் கண்ணப்ப முதலியார் உரை, ஸ்ரீகந்தப் பெருமான் தேவத்தான வெளியீடு, திருப்போரூர், 1964.

412. ...., சேக்கிழார் பிள்ளைத் தமிழ், சதாசிவ செட்டியார் குறிப்புரை, கழக வெளியீடு, சென்னை, மறுபதிப்பு, 1967.

413. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, சூரைமாநகர்ப் புராணம், உ.வே. சாமிநாதய்யர் (பதி.), பிரஸிடென்ஸி அச்சுக் கூடம், சென்னை, 1904.

414. ...., தனியூர்ப் புராணம், பிரஸிடென்ஸி அச்சுக் கூடம், சென்னை, 1907.

415. ...., திரு அம்பர் புராணம், உ.வே.சா. நூல் நிலையம், சென்னை, 1965.

416. ...., திருநாகைக் காரோணப் புராணம், திருவாவடுதுறை ஆதீன வெளியீடு, திருவாவடுதுறை, 1970.

417. ...., மண்ணிப்படிக்கரைப் புராணம், உ.வே. சாமிநாதய்யர் (பதி.), பிரஸிடென்ஸி அச்சுக் கூடம், சென்னை, 1907.

418. ...., மண்ணிப்படிக்கரைப் புராணம், திருவாவடுதுறை ஆதீனத்துச் சொந்தமான இருப்பைப்பட்டு தேவஸ்தான வெளியீடு, 1956.

419. ...., மாயூரப் புராணம், சோடசாவதனம் சுப்பராயச் செட்டியார் (பதி.), அத்தீநியம் அண்ட் டேலிநியூஸ் பிராஞ்ச் அச்சுக் கூடம், சென்னை, (ஆண்டு இல்லை).

420. ...., வீரவனப் புராணம், உ.வே. சாமிநாதய்யர் (பதி.), வைஜயந்தி அச்சுக் கூடம், சென்னை, 1903.

421. ...., திருவாரூர்த்தியாகராசர் லீலை, உ.வே. சாமிநாதய்யர் (பதி.), பிரஸிடென்ஸி அச்சுக் கூடம், சென்னை, 1905.

422. மீனாட்சி சுந்தரன், தெ.பொ. வள்ளுவரும் மகளிரும், சாது அச்சுக் கூடம், சென்னை, (ஸ்டார் பிரசுரம், சென்னை), 1930.

423. முக்களாலிங்க முனிவர், பாவநாசத் தலபுராணம், அல்பீனியன் அச்சியந்திர சாலை, சென்னை (ஆண்டு இல்லை).

424. முத்தப்பச் செட்டியார், ஜெயங்கொண்டார் சதகம், ராம.சு. ராமசாமி செட்டியார் (பதி.), ஸ்ரீமீனாம்பிகைப் பிரஸ், மதுரை, 1925.

425. ...., ஜெயங்கொண்டார் சதகம், நாராயணஞ் செட்டியார் (பதி.), மதராஸ் ரிப்பன் அச்சு யந்திரசாலை, சென்னை, 1913.

426. ...., ஜெயங்கொண்டார் வழக்கம், தி. சந்திரசேகரன் (பதி.), அரசு சுவடிகள் நூலகம், சென்னை, 1955.

427. முத்தப்பன், பழ. (பதி.), சிற்றூல் இலக்கியம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை, 1983.

428. முத்தூச் சண்முகன், அசோகன், வி., நொண்டி நாடகங்கள், முத்தூப் பதிப்பகம், மதுரை, 1981.

429. முத்துசுப்பையர், பு.வ., ஜானகி பரிணய நாடகம், புனல்வேலி ஸ்ரீ இராமசுவாமி பாரதி முதலியோர் (பதி.ஆ.), ரெயில்வேஸ்டேஷன், ஆரியப்பிரகாசினி அச்சியந்திரசாலை, திருநெல்வேலி, 1901.

430. முத்துசுவாமிப் பிள்ளை, சி., வள்ளியம்மை சரித்திரம், வ.உ. சிதம்பரனார் அரும்பதவுரை, இந்தியா பிரிண்டிங் வொர்க்ஸ், சென்னை, 1915.

431. முத்துவீரக் கவிஞர், வள்ளியம்மை நாடகம், இ.தொ.வி. மார்க்கண்ட முநிசாமி (பதி.), தீன்விளக்க அச்சுக் கூடம், இராமநாதபுரம், 1871.

432. முத்தையாபிள்ளை, தூத்துக்குடி, பொ., திருப்புவன வாயிற் புராண வசனம், ஸ்ரீமாந். அழ.சுப.பழ. சுப்பிரமணியச் செட்டியார் (பதி.), வைசியமித்திரன் அச்சுக் கூடம், தேவகோட்டை, 1928.

433. முருகதாச சுவாமிகள், தவத்திரு, வய்யச்சரபம் அருள்மிகு தண்டபாணி சுவாமிகள் பிள்ளைத் தமிழ், தி.மு. சங்கரலிங்கம் (பதி.), கௌமார மடலாயம் வெளியீடு, திருவாமாத்தூர், விழுப்புரம், 1977.

434. முருகேசன், புரிசை, சு., பார்த்தனை வளர்த்த பாட்டன், தமிழ்ச் செல்வி அச்சகம், 1765 பிராட்வே, சென்னை, 1963.

435. முனிசாமி முதலியார், சூளை, வாலிமோட்ச நாடகம், பி. இரத்தின நாயகர் அண்ட் ஸன்ஸ், சென்னை-1, 1974.

436. மெய்கண்ட தேவநாயனார், சிவஞான போதம், சிவஞானசுவாமிகள் சிற்றுரை, ஔவை சு. துரைசாமிப் பிள்ளை (பதி.), அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணமலை நகர், 1953.

437. மேல்நாட்டுலிங்கர், சோதிட ஹோரா சாஸ்திரம், இட்டா-சக்கரபாணி நாயுடு பதிப்பு, சென்னை, 1952.

438. மௌனசுவாமிகள், கொலைமறுத்தல், சிவகங்கை ஜமீன் பெ.குப. குப்பய்யா (பதி.), இம்பீரியல் அச்சுக்கூடம், இரங்கோன், 1929.

439. ராஜவேலு, கு., அணைகடந்த வெள்ளம், பாரி நிலையம், சென்னை-1, 1959.

440. ராமன், முத்து கோ., ஸ்ரீ குருவாயூரப்பன் பிள்ளைத் தமிழ், நண்பர்கள் அச்சகம், சென்னை-18, 1972.

441. வடமலையப்ப பிள்ளை, மச்சபுராணம், மினர்வா அச்சியந்திரசாலை, சென்னை, 1900.

442. வடிவழகிய நம்பிதாசர், ஆழ்வார்கள் வைபவம், ஸ்ரீவில்லிபுத்தூர் ஆர். கண்ணன் சுவாமி (உரையும் பதிப்பும்), 91, தம்புலிங்க முதலி தெரு, பெரம்பூர், சென்னை-11, 1987.

443. வடிவேலுசெட்டியார், கோ., சண்முக முதலியார் (பதி.ஆ.), சிவப்பிரகாசப் பெருந்திரட்டு (குறுந்திரட்டுடன்), சச்சிதானந்த அச்சியந்திரசாலை, கோமளேசுவரன் பேட்டை, சென்னை, 1912.

444. வண்ணக்களஞ்சியப் புலவர், குத்பு புராணம் என்னும் முகியத்தீன் புராணம், மு. அப்துல் கரீம் (பதி.), ஏவி.எம். ஜாபர்தீன் வெளியீடு, சென்னை, 1986.

445. வயித்தியலிங்கம் பிள்ளை, பெருமாள்பட்டி, மடவார் வளாகம் என்னும் புதுவைத் தலபுராணம், மு.ரா. அருணாசலக் கவிராயர் (பதி.), அல்பியன் அச்சியந்திரசாலை, சென்னை, 1902.

446. வரதராச கவிராயர், பிரமஸ்ரீ, சிவராத்திரிப் புராணம், கலாநதி யந்திரசாலை, தம்பை நகர், (ஆண்டு இல்லை).

447. வரதபண்டிதர், யாழ்ப்பாணம், குருநாதசுவாமி கிள்ளைவிடுதூது, வ.மு. இரத்நேசுவரையர், ச.இ. சிவராமலிங்கையர் (பதி.ஆ.), சோதிடப் பிரகாசயந்திரசாலை, கொக்குவில், இரண்டாம் பதிப்பு, 1921.

448. வரதராசன், மு., இலக்கியத்திறன், பாரி நிலையம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1965.

449. ...., இலக்கிய மரபு, பாரி நிலையம், சென்னை-1, இரண்டாம் பதிப்பு, 1968.

450. ...., தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்திய அக்காதெமி, புதுதில்லி, இரண்டாம் பதிப்பு, 1977.

451. ...., திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம், பாரி நிலையம், சென்னை-1, ஐந்தாம் பதிப்பு, 1959.

452. வரதராஜுலு நாயுடு, நா. (பதி.), ஸ்ரீ ஆண்டாள் பிள்ளைத் தமிழ், ஏசியன் பிரிண்டர்ஸ், சென்னை-14 (ஆண்டு இல்லை).

453. வரதாசாரியர், சருக்கை, ஜோதிமாலை வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார் (பதி.), தாம்சன் அண்டு கம்பெனி, சென்னை, 1902.

454. வரதுங்கராம பாண்டியன், பிரமோத்ரகாண்டம், ஸ்ரீபத்மநாப விலாச அச்சியந்திரசாலை, சென்னை, 1907.

455. ....., பிரமோத்ரகாண்டம், பட்டாபார்த்தசாரதி (பதி.), அமெரிக்கன் டைமண்ட் பிரஸ், சென்னை, 1913.

456. ....., பிரமோத்ரகாண்டம், திருவாவடுதுறை ஆதீனம், ஸ்ரீ மகாலிங்க சுவாமி தேவஸ்தானம், திருவிடைமருதூர், 1974.

457. வாகீச முனிவர், ஞானாமிர்தம், ஔவை சு. துரைசாமிப்பிள்ளை (பதி.), அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர், 1954.

458. வாசுதேவ ஐயர், காஞ்சிபுரம், மெல்லியலார் சுதந்திரம், சச்சிதானந்த அச்சியந்திரசாலை, சென்னை, 1918.

459. வாமன முனிவர், மேருமந்திரபுராணம், வீடூர் அப்பாசாமி சாஸ்திரி உரை, அ. சக்கரவர்த்தி நயினார் பதிப்பு, பிற குறிப்புகள் இல்லை.

460. வானமாமலை, நா., (பதி.), ஐவர் ராசாக்கள் கதை, மதுரைப் பல்கலைக் கழகம், மதுரை, 1974.

461. விசாகதத்தர், முத்ராராக்ஷஸம், வே. ஸ்ரீநிவாச சாஸ்திரி சிரோமணி, தே. ஸ்ரீநிவாசாசாரியார் சிரோமணி (மொழி.ஆ.), சக்தி காரியாலயம், சென்னை-14, 1948.

462. விசுவநாதம், கி.ஆ.பெ., வள்ளுவரும் குறளும், திருவள்ளுவர் படிப்பகத்தின் ஆண்டுவிழா சொற்பொழிவு நூல், பாரி நிலையம், சென்னை, நான்காம் பதிப்பு, 1957.

463. விசுவநாதன், அ., தமிழ்ச் சிந்தனைகள், மங்கைப் பதிப்பகம், காரைக்குடி, 1989.

464. விசுவநாதன், சீனி, (தொகு.), மகாகவி பாரதி நூற்பெயர்க் கோவை, வானவில் பிரசுரம், சென்னை-35, 1981.

465. விபுலானந்த சுவாமிகள், யாழ்நூல், கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை, 1974.

466. விமலானந்தம், மது.ச., தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம், (தொகுதி 1, 2), ஐந்திணைப் பதிப்பகம், சென்னை-5, 1987.

467. வில்லிபுத்தூரார், மகாபாரதம், ஆறுமுகநாவலர், விசுவநாதபிள்ளை (பதி.ஆ.), வித்தியாநுபாலன யந்திரசாலை, சென்னபட்டணம், பதினோராம் பதிப்பு, துந்துபி ஆண்டு, (ஆங்கில ஆண்டு இல்லை).

468. ....., மகாபாரதம், நா. கதிரைவேற்பிள்ளை (பதி.), வித்தியாரத்நாகர அச்சுக் கூடம், சென்னை, 1922.

469. ....., மகாபாரதம்-ஆதிபருவம், வை.மு. கோபாலகிருஷ்ணமாசாரியார் உரை, வை.மு.கோ. பதிப்பு, சென்னை, 1963.

470. விளம்பிநாகனார், நான்மணிக்கடிகை, ச. வையாபுரிப்பிள்ளை (பதி.), தமிழ்ப் பதிப்பகம், சக்தி காரியாலயம், மதுரை, சென்னை, 1944.

471. விளாதிமிர் மயாகோவ்ஸ்கி, கவிதை இயற்றுவது எப்படி?, டி.எஸ். நடராசன் (மொ.ஆ.) நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-98, 1980.

472. வீமநாதபண்டிதர், கடம்பவன புராணம், முருகபட்டாரகர் (பதி.), வித்தியாவர்த்தினி அச்சுக்கூடம், சென்னை, விக்கிரம ஆண்டு, (ஆங்கில ஆண்டு இல்லை).

473. வீரபத்திரக் கவிராயர், திருச்செங்கோடு, பழையகோட்டை நல்லதம்பிச் சர்க்கரை மன்றாடியார்க் காதல், கு. அருணாசலக் கவுண்டர் (பதி.), எஸ்.ஆர். சுப்பிரமணிய பிள்ளை பப்ளிஷர்ஸ், திருநெல்வேலி, 1965.

474. வீரபத்திர முதலியார், தி., விருத்தப்பாவியல் (விருத்தப்பா யாப்பியல்), ஈ.என். தணிகாச முதலியார் (பதி.), கழக வெளியீடு, சென்னை, 1984.

475. வீரபத்திரன், நாகபுராண அம்மானை, அரசு கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை, 1956.

476. வீரப்பபிள்ளை, கி., *வன்னியர் புராணம்*, (பதிப்பகக் குறிப்பு இல்லை), திருப்பதி, 1928.

477. வீரமாமுனிவர், *கித்தேரியம்மாள் அம்மானை*, கழக வெளியீடு, சென்னை, 1977.

478. ...., *தேம்பாவணி*, வி. மரிய அந்தோணி உரை, வீரமாமுனிவர் ஆய்வுக் கழகம், தூய சவேரியர் கல்லூரி, பாளையங்கோட்டை, 1982.

479. வீரமார்த்தாண்டத் தேவர், *பஞ்சதந்திரப் பாடல்கள்*, மே.வீ. வேணுகோபாலப் பிள்ளை (பதி.), புக்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட், சென்னை, 1958.

480. வீரராகவகவி, *வில்லைப் புராணம்*, கேஸரி அச்சுக் கூடம், சென்னை, 1940.

481. வெள்ளைவாரணன், க., *தமிழ் இலக்கிய வரலாறு-தொல்காப்பியம்*, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர், 1957.

482. வேங்கடகிருஷ்ணய்யங்கார், த., *இராகவகாவியம்*, திருவரங்கப் பதிப்பகம், விருதுநகர், இரண்டாம் பதிப்பு, 1977.

483. வேங்கடசாமி, மயிலை சீனி., *கிறிஸ்தவமும் தமிழும்*, கா.ஏ. வள்ளிநாதன் பதிப்பு, சென்னை, 1958.

484. ...., *பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம்*, சாந்தி நூலகம், சென்னை, 1962.

485. வேங்கடசாமி நாட்டார், ந.மு. (உ.ஆ.) *சிலப்பதிகாரம் மூலமும் உரையும்*, கழக வெளியீடு, சென்னை, ஏழாம் பதிப்பு, 1963.

486. வேங்கடசாமி ரெட்டியார், கி., *மகாத்மா காந்தி அடிகளின் மீது நெஞ்சுவிடுதூது*, சென்னை நா. சுப்புரெட்டியார் (பதி.), திருவேங்கடத்தான் திருமன்றம் வெளியீடு, பாரி நிலையம், சென்னை, 1934.

487. ...., *மகாத்மா காந்தி அடிகளின் மீது நெஞ்சுவிடுதூது*, வனஜாம்பிகா பிரஸ், மதுரை, 1934.

488. ...., *கலைமகள் பிள்ளைத் தமிழ்*, திருவேங்கடத்தான் திருமன்றம், சென்னை-14, 1981.

489. வேங்கடசப்புப் பிள்ளை, குச்சிக்குமரகோட்டக் கடவுள் பிள்ளைத் தமிழ், இந்து யூனியன் அச்சயந்திரசாலை, சென்னை, 1895.

490. வேங்கடராஜுலு ரெட்டியார், வே., தென்மொழிகள், முதற்பகுதி, எல். வானன் கம்பெனி, மதராஸ்-4, 1960.

491. வேங்கடாசலம் பிள்ளை, திருவேட்டீசுவரர் புராணம், இராவ் சாயிப் நல்லுருகச முதலியார் பதிப்பு, (பதிப்பகக் குறிப்புகள் இல்லை), இரண்டாம் பதிப்பு, 1976.

492. வேதநாயக சாஸ்திரியார், பெத்தலேம் குறவஞ்சி, கிருஸ்தவ இலக்கிய சங்கம், சென்னை-3, இரண்டாம் பதிப்பு, 1964.

493. வேதநாயகம் பிள்ளை, நீதிநூல், ப. இராமநாதபிள்ளை உரை, கழக வெளியீடு, சென்னை, 1950.

494. வேதாந்த சுப்பிரமணியபிள்ளை, மயூரகிரிப் புராணம், சைவப்பிரகாச யந்திரசாலை, யாழ்ப்பாணம், 1934.

495. வேப்பத்தூர்ச் சங்கப் புலவர், திருமாலிருஞ் சோலைக் கலம்பகம் என்கிற அழகர் கலம்பகம், சேற்றூர் ரா. சுப்பிரமணியக் கவிராயர் (பதி.), தமிழ்ச் சங்க முத்திராசாலை, மதுரை, 1827.

496. ....., திருமாலிருஞ்சோலைக் கலம்பகம் என்கிற அழகர் கலம்பகம், சே. கிருஷ்ணமாசாரியார், வை.மு. கோபாலகிருஷ்ண மாசாரியார் (உரை.ஆ.), வை.மு.கோ. கம்பெனி, சென்னை-5, (ஆண்டு இல்லை).

497. வேலவன், கவிதா ராஜ்யம், பூர்த்தி பப்ளிகேஷன்ஸ், மதராஸ்-18, 1960.

498. வைத்தியநாத தேசிகர், இலக்கண விளக்கம்-பொருளியல்-பாட்டியல், தி.வே. கோபாலையர் (பதி.), தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையம், 1974.

499. ....., கமலை., திருநல்லூர்ப் புராணம், ச. பாலசுந்தரம் (பதி.), தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையம், தஞ்சாவூர், 1979.

500. வைத்தியநாதபிள்ளை, த., திருக்கச்சிக் குமரகோட்டத்து முருகப் பெருமான் பிள்ளைத் தமிழ், வானதி பதிப்பகம், சென்னை, 1981.

501. வைத்தியநாதய்யர், ஆர். (மொ.ஆ.), விசுவாமித்ர மஹரிஷி அருளிச் செய்த அத்யாத்ம ராமாயணம், ஸ்ரீ வாணீபூஷணம் அச்சுக்கூடம், திருவல்லிக்கேணி, சென்னை.

502. வையாபுரிப் பிள்ளை, எஸ்., காவியகாலம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை-5, 1957.

503. ....., (பதி.), புறத்திரட்டு, சென்னை ஸர்வகலாசாலை, சென்னை, 1938.

504. வைரமுத்து, கவிராஜன் கதை, திருமகள் நிலையம், சென்னை-17, மூன்றாம் பதிப்பு, 1987.

505. வைரவையர், நெற்குப்பை, திருமாலிருஞ்சோலைப் பிள்ளைத்தமிழ், பி.பி. சுப்பராமய்யர் (பதி.), மனோன்மணி விலாசம் அச்சியந்திரசாலை, மதுரை, 1923.

506. ஜகந்நாதன், கி.வ., தமிழ்க் காப்பியங்கள், அமுத நிலையம் லிமிடெட், சென்னை-18, 1955.

507. ஜமதக்னி, க.ரா. (மொ.ஆ.), காளிதாசரின் இரகுவம்சம், மெர்க்குரி புத்தகக் கம்பெனி, கோயமுத்தூர்-1, 1969.

508. ஜயராம சுவாமிகள், புராணோத்காச தத்துவார்த்த தீபிகை, நித்யானந்தம் பிரஸ், குன்னத்தூர், 1915.

509. ஜெகவீர பாண்டியனார், வீரபாண்டியம் (முதல் பாகம்), மதராஸ் சி. வரதராஜுலு நாயுடு பிரஸ், மதுரை, மன்மத ஆண்டு (ஆங்கில ஆண்டு இல்லை).

510. (ஜெயகாந்தன்), ஜெயகாந்தனின் முன்னுரைகள், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, இரண்டாம் பதிப்பு, 1984.

511. ஸ்ரீ ஆநந்தபாரதி சுவாமிகள், காரைக்குடி, ஆநந்தாநுபவமஞ்சரி, சாமிவேல் பிரஸ், இரங்கோன், 1919.

512. ஸ்ரீ ஆராவமுதாசாரியார், திருச்சுழியல் புராணம், சென்னை குக.ஸ்ரீ. ரஸபதி உரை, இராமநாதபுர ஸம்ஸ்தான தேவஸ்தான வெளியீடு, இராமநாதபுரம், 1967.

513. ஸ்ரீசம்பந்த சரணாலய சுவாமிகள், கந்தபுராணச் சுருக்கம், ஆறுமுக நாவலர் (பதி.), வித்தியாநுபாலன யந்திரசாலை, சென்னபட்டணம், மூன்றாம் பதிப்பு, ஆங்கீரச ஆண்டு, (ஆங்கில ஆண்டு இல்லை).

514. ஸ்ரீ நாராயணசாமி, நாகப்பிள்ளை, பரிதியப்பர் ஸ்தல புராணம், நீலலோசனி அச்சியந்திரசாலை, நாகை, 1929.

515. ஸ்ரீநிவாஸய்யங்கார், பி.தி., பல்லவர் சரித்திரம் தென்னிந்திய வரலாற்றின் இடைப்பகுதி, முதற்பாகம், தி.அரோரா பிரஸ், மெட்ராஸ், நான்காம் பதிப்பு, 1930.

516. ஸ்ரீநிவாஸய்யங்கார், வை.நா. (பதி.), திருக்குருகூர் மகிழ்மாறன் பவனிக்குறம், ஸ்ரீகாம வித்யா பிரஸ், ஸ்ரீவைகுண்டம், 1932.

517. ஸ்ரீனிவாஸராகவாசார்ய சிரோமணி, ஆர்., யாப்பொளி, செ. அண்ணாராவ் (பதி.), திருவேங்கடவன் கீழ்த்திசைக் கலை ஆராய்ச்சிக் கழகம், திருச்சி, 1957.

518. ஸுப்ரம்மண்ய அய்யர், வ.வே., கம்பராமாயணம், சுருக்கம்- பாலகாண்டம், வ.வே.ஸு.(பதி.), சின்னையா அச்சுக் கூடம், புதவை, 1917.

ஆசிரியர் அல்லது பதிப்பாசிரியர் பெயர் குறிப்பிடப்பெறாத நூல்கள்:

519. அர்ச்சுனன் அல்லியை மாலையிட்ட அல்லி நாடகம், பி.இரத்தினநாயகர் அன் ஸன்ஸ், சென்னை-1, (ஆண்டு இல்லை).

520. சங்க இலக்கியம் (எட்டுத் தொகையும் பத்துப்பாட்டும்), சென்னை சைவசித்தாந்த மகா சமாஜம் வெளியீடு, சாது அச்சுக் கூடம், சென்னை, 1940.

521. சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள் (முதலாவது மாநாடு), கழக வெளியீடு, சென்னை, 1958.

522. திருக்கடலையாற்றூர்ப் புராணம், (பிற குறிப்புகள் இல்லை).

523. திருப்புல்லாணி மாலை, குறள் வெண்பா நூற்கோவை (இரண்டாம் பகுதி), கழக வெளியீடு; 1967.

524. திருமுல்லைவாயிற் புராணம், (பிற குறிப்புகள் இல்லை)

525. திருவேங்கட உலா, (பிற குறிப்புகள் இல்லை).

526. தினகரமாலை என்னும் தினகர வெண்பா, குறள் வெண்பா நூற்கோவை, கழக வெளியீடு, சென்னை, 1967.

527. பகவத்கீதா மூலம், [illegible] அச்சியந்திரசாலை, திருச்சி, விரோதிகிருது ஆண்டு (ஆங்கில ஆண்டு இல்லை).

527. பன்னிரு சதகத்திரட்டு, பி. இரத்தினநாயகர் & சன்ஸ், சென்னை, 1948.

528. புறத்திரட்டு, திருவாரூர்த் தமிழ்ச் சங்கம், திருவாரூர், 1918.

529. பெரியஞானக்கோவை (மூன்று பாகங்கள்), பி. இரத்தினநாயகர் ஸன்ஸ், சென்னை, 1949.

530. மெய்கண்ட சாத்திரம் என வழங்கும் சித்தாந்த சாத்திரம் பதினான்கு மூலமும் உரையும், சைவசித்தாந்த மகாசமாஜம், மயிலாப்பூர் சென்னை, இரண்டாம் பதிப்பு, 1940.

531. வச்சணந்திமாலை என்னும் வெண்பாப் பாட்டியலும் வரையறுத்தப்பாட்டியலும் சம்பந்தப் பாட்டியலும், கழக வெளியீடு, சென்னை, மறுபதிப்பு, 1964.

532. வளையாபதி குண்டலகேசி உதயணகுமார காவியம், கழக வெளியீடு, சென்னை, 1970.

533. விராலிமலை வேலவர் காதல், தொகுதி-16, பகுதி-2, அரசினர் சுவடி நூலகப் பருவ இதழ், சென்னை, 1964.

534. ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய ஸஹஸ்ரநாமம், திருப்புகழமிர்தம் காரியாலயம் பதிப்பு, சென்னை-2, 1966.

அச்சிடப் பெறாத நூல்கள்:

535. அலமேலு, வ., தோட்டுக்காரிகதை, சுவடியியல் பட்ட மேற்படிப்புப் பட்டயச் சான்றிதழ்த் தேர்விற்காக அளிக்கப்பெற்ற பதிப்பாய்வேடு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1988.

536. அனிமேபின் கிரேசு., சா., காப்பியங்களில் அவையடக்கம், மதுரை காமராசர் பல்கலைக் கழக எம்.பில். பட்ட ஆய்வேடு, தமிழ் ஆய்வு மையம், யாதவர் கல்லூரி, மதுரை, 1989.

537. ஆய்வுக் கட்டுரைகள், தமிழ் உயர் ஆராய்ச்சி மையம், அழகப்பா கல்லூரி, காரைக்குடி-3, 1979-80.

538. தசரதன் (பதி.), வலங்கைமாலை, ஆசிய சுவடியியல் நிறுவனம், சென்னை, 1989.

539. ஜெயஉஷீலா, க., ஸ்ரீலசுவாமி கதை - மலைவளப்பம் (பதிப்பும் குறிப்புரையும்), மதுரை காமராசர் பல்கலைக் கழக எம்.பில். பட்ட ஆய்வேடு, ஆய்வகம், தமிழ்க் கலை, தெ.தி. இந்துக் கல்லூரி, நாகர்கோவில், 1988-89.

கன்னட நூல்கள்:

1. ஆண்டய்ய, கப்பிகர காவ, கன்னட சாகித்ய பரிஷத், பெங்களூர், 1977.

2. கனகதாச, மோகனதரங்கிணி, கன்னட சாகித்ய பரிஷத், பெங்களூர், 1984.

3. குமாரவியாச, பாரத, டி.எஸ். சாமராவ் (பதி.), சாகித்ய அகாதெமி, நியூடெல்லி, 1972.

4. குமுதேந்து, ராமாயணா, கன்னட சாகித்ய பரிஷத், பெங்களூர், 1981.

5. சடக்சர தேவ, சபரசங்கர விலாச, கன்னட சாகித்ய பரிஷத், பெங்களூர், 1979.

6. ...., ராஜசேகர விலாச, ஆர்.சி. உறிரேமத் (பதி.), கர்நாடக யுனிவர்சிட்டி, தார்வார், 1968.

7. சாந்தநிரஞ்சன, அப்பவூரு சரிதெ, எச். பசவரத்தய்ய (பதி.), சென்டர் ஆப் கன்னட ஸ்டடீஸ், மைசூர் யுனிவர்சிட்டி, மைசூர், 1973.

8. சாமரச, பிரபுலிங்க லீல, கன்னட சாகித்ய பரிஷத், பெங்களூர், 1976.

9. சேரமாங்க, சேரமகாவ்ய, எச். பசவரத்தய்ய (பதி.), கன்னட சாகித்ய பரிஷத், பெங்களூர், 1955.

10. சௌண்டராச, நளசம்பு, கன்னடசாகித்ய பரிஷத், பெங்களூர், 1980.

11. ...., அபிநவ தசகுமார சரிதெ, கன்னட சாகித்ய பரிஷத், கன்னட சாகித்ய பரிஷத், பெங்களூர், 1977.

12. துர்க சிம்க, கர்நாடக பஞ்சதந்த்ர, எச். அனந்த ரங்காச்சாரி(பதி.), சாரதா மந்திர், மைசூர், 1973.

13. நயசேன, தர்மாமிர்த, கன்னட சாகித்ய பரிஷத், பெங்களூர், 1977.

14. நித்யாத்ம சுகயோகி, கன்னட பாகவத (முதற்பாகம்), கே. வெங்கட்ராமப்ப (பதி.), சாரதா மந்திர், மைசூர், 1973.

15. பம்ப, _ஆதிபுராண,_ எல். பசவராஜு (பதி.), கீதா புக் உறவுஸ், மைசூர், 1976.

16. ...., _விக்ரமர்ஜுன விஜய_ (பம்பபாரதம்), என். அனந்தரங்காசாரியர் (பதி.), கன்னட சாகித்ய பரிஷத், பெங்களூர், 1977.

17. பார்ஶ்வ கவி, _கொல்லாபுர நிம்ப சாமந்த சரிதெ,_ எம்.எம். கல்புர்கி (பதி.), கன்னட சாகித்ய பரிஷத், பெங்களூர், 1981.

18. பாஸ்கரகவி, _ஜீவந்தர சரிதெ,_ ஆர்.சி. உறிரேமத் (பதி.), கர்நாடக யுனிவர்சிட்டி, தார்வார், 1970.

19. பொன்ன, _சாந்திபுராண,_ கம்பநகர் ராஜய்ய (பதி.), கன்னட சாகித்ய பரிஷத், பெங்களூர், 1982.

20. மல்லிகார்ஜுன (மல்லா), _சூக்தி சுதர்னவ,_ என். அனந்த ரங்காச்சாரி (பதி.), சென்டர் ஆப் கன்னட ஸ்டடீஸ், மைசூர் யுனிவர்சிட்டி, 1972.

21. மாதம்ம, _நன்னய்ய சரித்ர,_ சென்டர் ஆப் கன்னட ஸ்டடீஸ், மைசூர் யுனிவர்சிட்டி, மைசூர், 1978.

22. ரன்ன, _கதாயுத (அல்லது) சாகஸபீமவிஜய,_ கன்னட சாகித்ய பரிஷத், பெங்களூர், 1985.

23. ராகவாங்க, _சித்தராம சரித்ர,_ கர்நாடக யுனிவர்சிட்டி, தார்வார், 1977.

24. ...., _சோமநாத சிரிதெ,_ ஆர்.சி. உறிரேமத் (பதி.), கர்நாடக யுனிவர்சிட்டி, தார்வார், 1967.

25. ...., _உறரிசந்த்ர காவ்ய,_ என். பசவராத்தய்யா (பதி.), சாரதா மந்திர், மைசூர், ஆண்டு இல்லை.

26. ருத்ரகவி, _கரஸ்தல நாகலிங்கன சரிதெ,_ கே.ஆர். சேஷகிரி (பதி.), சென்டர் ஆப் கன்னடா ஸ்டடீஸ், மைசூர் யுனிவர்சிட்டி, மைசூர், 1972.

27. ஜன்ன, _அனந்தநாத புராண,_ றெச். தேவீரப்ப (பதி.), சென்டர் ஆப் கன்னட பரிஷத், மைசூர் யுனிவர்சிட்டி, மைசூர், 1972.

தெலுங்கு நூல்கள்:

1. எர்ர பிரகட, சிம்மபுராணம், ஆந்திர பிரதேச சாகித்ய அகாதெமி, கலாபவன், ஹைதராபாத், 1967.

2. சோமநாத, பால்குறிக்கி, பண்டிதாராத்ய சரித்ரு, சிலுக்கூரி நாராயணராவ் (பதி.), ஆந்த்ர க்ரந்த மால பப்ளிகேஷன்ஸ், மெட்ராஸ், 1939.

3. தூர்ஜடி, ஸ்ரீகாளகஸ்தி மகாத்மியமு, வேங்கடராம அண்ட் கோ, மெட்ராஸ், 1961.

4. நன்னய்ய, ஸ்ரீமத் ஆந்த்ரமகாபாரதம் - ஆதிபர்வ, டிபார்ட்மெண்ட் ஆப் தெலுங்கு, உசுமானியா யுனிவர்சிட்டி, 1968.

5. பட்டுமூர்த்தி, வசுசரித்ர, வெங்கட்ராம அண்ட்கோ, மெட்ராஸ் (ஆண்டு இல்லை).

6. போதன, ஸ்ரீமகாபாகவதம், ஆந்திர பிரதேச சாகித்ய அகாதெமி, கலாபவன், ஹைதராபத், 1968.

7. மொல்ல, குமரி, ராமாயணம், என்.எஸ். & கோ., மெட்ராஸ், 1971.

8. வேங்கடகவி, கனபவரபு, பிரபந்தராஜ விலாசமு, ஆந்த்ர பிரதேச சாகித்ய அகாதெமி, கலாபவன், ஹைதராபாத், 1977.

9. ஸ்ரீநாத, காசிகண்டம், (பிற குறிப்புகள் இல்லை).

10. ...., சிருங்கார நைஷத, ஜோதிமதி பிரிண்டர்ஸ், மெட்ராஸ், 1913.

11. ஸ்தானாபதி, காசிவிசுவநாத நாயக, ராயவாசகம், ஆந்த்ரபிரதேச சாகித்ய அகாதெமி, கலாபவன், ஹைதராபாத், 1982.

துணை நூல்கள்:

1. (Bhartrukari), Bhartrahari's Niti Satakam, Saraswati Mahal Library, Thanjavur, Second Edition, 1980.

2. Bhat, G.K., Bhavabuti, Makers of Indian Literature, Sahitya Akademi, New Delhi, Second Edition, 1984.

3. Burrow, T., Collected Papers on Dravidian Linguistics, Annamalai University, Annamalainagar, 1968.

4. Burton, S.H., The Criticism of Poetry, Longman Group Limited, England, Ninth impression, 1985.

5. Damian Grant, Realism, The Critical Idioms, Methuen & Co. Ltd., New York, Reprinted, 1982.

6. Das, B.B., Mohanty, J.M., Literary Criticism - A Reading, Oxford University Press, Calcutta, 1985.

7. George Guillen, Language and Poetry - Some Poets of Spain, Harward University Press, Cambridge Massachusetts, 1961.

8. Hooper, A.G., An Introduction to the Study of Language and Literature, Longmans Green and Co. Ltd., London, 1961.

9. Horace Hayman Wilson, Select Specimens of the theatre of the Hindus, Vol.I, Assian Educational Services, New Delhi, Third Edition, 1984.

10. Jonathan Culler, Structuralist Poetics, Rout ledge and Kegan Paul Ltd., London, 1975.

11. Kedarnath Das Gupta (Tr.), Kalidasa's Sakuntala, Macmillan and Co. Ltd., Madras, Seventh Edition, 1956.

12. Lubomir Dolezel, Toward on Structural theory of Contant in Prose Fiction, Literary Style: A Symposium, Seymour Chatman (Ed.), Oxford University Press, London and New York, 1971.

13. Meenakshi Sundaran, T.P, A. History of Tamil Literature, Annamalai University, Annamalai nagar, 1965.

14. Mugali, R.S., History of Kannada Literature, Sahitya Akademi, New Delhi, 1975.

15. Parameswaran Nair, P.K. History of Malayalam Literature, E.M.J. Venniyoor (Tr.), Sahitya Akademi, New Delhi, Second Edition, 1977.

16. Pertor Dixon, Rhetoric, The Critical Idioms, John P. Jump (Ed.), Methuen, London and New York, Reprinted, 1984.

17. Richards, I.A., Principles of Literary Criticism, Routledge & Kegan Paul Ltd., London, Reprinted, 1963.

18. Sankara Rama Sastri, C. (Tr.), Kavyadarsa of Dandin, S. Viswanathan (Ed.), Sri Bala Manorama Press, Mylapore, Madras, Third Edition, 1963.

19. Sitapati, G.V., History of Telugu Literature, Sahitya Akademi, New Delhi, 1968.

20. Stunly Peterson, R., Designs in Poetry, The Macmillan Company, New York, 1962.

21. Terence Hawkes, Metaphor, The Critical Idiom, Methuen & Co. Ltd., New York, Reprinted, 1984.

22. Winchester, C.T., Some Principles of Literary Criticism, The Macmillan Company, New York, Fourth Edition, 1950.

கவியரங்கக் கவிதைகள் :

1. சாம்பசிவன், ச., 'பொருள்', (மதுரைத் திருவள்ளுவர் கழகத்தில் 18.10.1961 புதனன்று நிகழ்ந்த கலைமகள் விழா 2ஆம் நாளின்போது சித்தாந்த சைவப் பேராசிரியர் வித்துவான் திரு. ஔவை சு. துரைசாமிப் பிள்ளையவர்கள், தலைமையிற் கூடிய கவியரங்கிற் பாடியது), செந்தமிழ், தொகுதி-58, பகுதி-(2)3.

2. பம்மரசன், 'தமிழியக்கத் தளபதி', பாவலர் பார்வையில் பாவேந்தர், (புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் பிறந்த நாள் விழா கவியரங்கம், 18.5.1975), செய்தி விளம்பரம் மற்றும் சுற்றுலா இயக்க வெளியீடு, புதுவை அரசு, 1975.

கட்டுரைகள் :

1. அருள்மொழி, 'அதமன் ஊது: தெருக்கூத்துக்கு ஒரு தனி விழா', தினமணிக் கதிர் இணைப்பு, 13.5.1990.

2. அழகப்பராசு, த., 'காதல் இலக்கியங்கள்', ச.வே. சுப்பிரமணியன், கே. பகவதி (பதி.ஆ.), தமிழ் இலக்கியக் கொள்கை-8, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1983.

3. குருசாமி, மு., 'சைவ எல்லப்ப நாவலர் புராணங்களில் அவையடக்கப் பாடல்கள்' 21ஆவது கருத்தரங்க ஆய்வுக் கோவை, தொகுதி-1, இ.ப.த.ம., அண்ணாமலை நகர், 1989.

4. சிங்காரவேலன், சொ., 'தமிழில் பாயிரம்' தமிழ்ப்பொழில், துணர்-38, கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

5. சுப்பிரமணியம், பூ., 'கலம்பக இலக்கியம்', ச.வே. சுப்பிரமணியன், கே. பகவதி (பதி.ஆ.), தமிழ் இலக்கியக் கொள்கை-8, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1983.

6. சொக்கலிங்கம், நெல்லை ந., 'அவையடக்கம்', 4ஆவது கருத்தரங்க ஆய்வுக்கோவை, இ.ப.த.ம., அண்ணாமலை நகர், 1972.

7. சௌந்தரம், பா., 'பாயிரமும் கடவுள் வாழ்த்தும்', 7ஆவது கருத்தரங்க ஆய்வுக் கோவை, இ.ப.த.ம., அண்ணாமலை நகர், 1975.

8. பரமசிவம், தொ., 'சீறாவின் கடவுள் வாழ்த்துப் பகுதி ஓர் ஆய்வு', *சீறா ஆய்வுத் திரட்டு*, டாக்டர் சாகிர் உசேன் கல்லூரி, இளையான்குடி, திருத்திய பதிப்பு, 1975.

9. பால்ராஜ், வே., 'அவையடக்கப் பாடல்கள்' 22ஆவது கருத்தரங்க ஆய்வுக் கோவை, தொகுதி-1, அண்ணாமலை நகர், 1989.

10. மணவாளன், அ.அ., 'காப்பிய மரபும் பாயிரப் பாங்கும் (கம்பனும் மில்டனும் ஒப்பாய்வு)', ச.வே. சுப்பிரமணியன் (பதி.), *திறனாய்வுக் கட்டுரைகள்*, அணியகம், சென்னை-30, 1977.

11. மாணிக்கம், வ.சுப., 'இலக்கிய முத்திறன்' பேராசிரியர் டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை, வெள்ளிவிழா மலர், ஆசிரியர் பிரிண்டர்ஸ், சென்னை, 1961.

12. முத்தையா, சொ., 'தமிழிலக்கியத்தில் 'அவை' - கி.பி.1200ஆம் ஆண்டுவரை' 15ஆவது கருத்தரங்க ஆய்வுக் கோவை, தொகுதி-1, இ.ப.த.ம., அண்ணாமலை நகர், 1983.

13. வெங்கடசாமி, மயிலை சீனி., 'அவையடக்கச் செய்யுட்கள்', மன்னர் துரைசிங்கம் கலைக்கல்லூரி ஆண்டுமலர், சிவகங்கை, 1972-73.

14. Govindarajan, S., The Age of Sekkilar: Based on Sculptures and Inscription', 15ஆவது கருத்தரங்க ஆய்வுக் கோவை, தொகுதி-3, இ.ப.த.ம., அண்ணாமலை நகர், 1983.

அகராதி முதலியன:

1. கண்ணப்ப முதலியார், பாலூர், தமிழ் இலக்கிய அகராதி, செண்ட்ரல் புக் டிப்போ, சென்னை-5, 1957.

2. கதிரைவேற்பிள்ளை, நா., தமிழ்ச் சொல்லகராதி முதற்பாகம், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை, 1910.

3. கந்தையாபிள்ளை, ந.சி., தமிழ்ப் புலவர் அகராதி, ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், சென்னை-1, 1952.

4. சச்சிதானந்தன், வை., மேலை இலக்கியச் சொல்லகராதி, மேக்மில்லன் இந்தியா லிமிடெட், மெட்ராஸ், 1983.

5. சாரங்கபாணி, இரா. (பதி.), சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம், (அ.ஔ.), தொகுதி-1, தமிழ்ப் பதிப்பகம், தஞ்சாவூர், 1986.

6. சிங்காரவேலு முதலியார், ஆ., அபிதான சிந்தாமணி, திருமாரசாமி நாயுடு சன்ஸ், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1934.

7. தண்டபாணி தேசிகர், ச. (தொகு.), சங்க இலக்கியச் சொற்களஞ்சியம் (உயிரெழுத்துகள்), திருவாவடுதுறை ஆதின வெளியீடு, திருவாவடுதுறை, 1965.

8. பவானந்தம்பிள்ளை, ச., தற்காலத் தமிழ்ச் சொல்லகராதி, மாக்மில்லன் அன்டு கம்பெனி லிமிடெட், மதராஸ், மறுபதிப்பு, 1952.

9. தமிழ் அகராதி, பகுதி-I, அ-ஃ., சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை, 1938.

10. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி ஒன்று (அ-அளபெடை), தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1986.

11. Alex Preminger (Ed.), Princeton Encyclopedia of Poetry and Poetics, Princeton University Press, New Jarcey, Reprinted, 1974.

12. A Descriptive Catalogue of the Tamil Manuscripts in the Tanjore Maharaja Sarafoji's Saraswathi Mahal Library, Thanjavoor, Vol.I, Second Edition, 1964.

13. Bulletin of the Govt. Manuscripts Library, Madras, Vol.XVII & XVIII, 1965.